
சிவ  மஞ்சரி



சிவமஞ்சரி 10 தொகுதி

பூசை. ச. அருணவசந்தன்

உ
சிவமயம்

சிவமஞ்சரி

— பத்தாம் தொகுதி —

(பக்கங்கள் – 1441 முதல் 1600 வரை)

ஆசிரியர் :
"சிவமஞ்சரி செம்மல்", "அருட்பணி அரசு"

பூசை. ச. அருணவசந்தன்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
குரு மகா சந்நிதானம்

சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

அவர்களின் அருட்கொடை கொண்டு
ஸ்வஸ்தி ஸ்ரீ சர்வஜித்து ஆண்டு கார்த்திகை தீப நன்னாள்
(24.11.2007) சனிக்கிழமை வெளியிடப்பெற்றது.

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமன்ன முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை – 18.

நூலின் விவரம்

நூலின் பெயர்	சிவமஞ்சரி (பத்தாம் தொகுதி) (10)
நூலின் ஆசிரியர்	பூசை. ச. அருணவசந்தன்
பதிப்பு ஆண்டு	முதற் பதிப்பு- 2007
உரிமை	ஆசிரியருக்கு
பதிப்பாளர் / ஆசிரியர்	பூசை. ச. அருணவசந்தன்
முகவரி	ப. எண். 29, பீமண்ண முதலி கார்டன் தெரு ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018.
பக்கங்கள்	8+160 ஆக 168பக்கங்கள்
நூல் அளவு	கிரௌன் 1.4 - 24 c.m. x 18,2 c.m.
அச்சிட்டுள்ள பரப்பளவு	21.5 செ.மி X 15.2 செ.மி
பயன்படுத்தப்பட்டுள்ள தாள்	பலாபூர் எச்.பி டபுள் கிரௌன் 11.6 கி.கி.
பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்	10.5 புள்ளிகள்
மின் அச்சுக் கோர்வை	தனம், லேசர் பிரிண்டர்ஸ், சென்னை 41.
மறுதோன்றி அச்சகம்	ஸ்ரீ ஆப்செட் பிரிண்டர்ஸ் 3, பழைய ஜெயில்ரோடு,தங்கசாலை , சென்னை 1.போன் 25283554
நூலின் பொருள்	சிவபெருமானைப்பற்றி, புராணங்கள், வடமொழி, தமிழ்வேதங்கள்,தலவரலாறுகள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள், தனித்தனி தலைப்புகளில்
விலை	ரூபாய் 80/-
நூலகக் குறியீட்டு எண்	

அட்டையில் - அருணவசந்தரான அண்ணாமலையார். திருவண்ணாமலை.

747



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்





முகவுரை

அருள்நிதி தரவரும் ஆனந்தமலையாக விளங்கும் அண்ணாமலை எம் அண்ணலின் அருளினால் சிவமஞ்சரியின் பத்தாவது தொகுதி மலர்ந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இந்நூலில் சிவபூசைக்குரிய மலர்கள், சிவமங்கையாக விளங்கும் சிவகங்கை இறைவன் தன்எளிவந்த கருணையால் மண்மீ துவந்து அன்பர்களுக்கு விருந்திட்டு அருந்தி மகிழ்ந்தது, சிவாலயத் திருவிழாக்கள் முத லிய அனேக செய்திகள் இயன்ற வரை எடுத் துக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் மலரும் இந்த நல்வேளையில் இம்மலர் மலர்ந்து மணம் பரப்பத் துணைநின்ற அனைவரையும் நன்றியுடன் போற்றி வணங்குகிறோம்.

சிவமஞ்சரியின் முதல் இதழைக் கண்ணுற்று நேரில் அழைத்துக் குருவருளையும் திருவருளையும்வழங்கிஅருளியதுடன் தொடர் ந்து ஆதரித்து வரும் **திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் குருமகா சந்நிதானம் சீர்-வளர்-சீர் சிவப் பிரகாச பண்டார சந்நிதி** சுவாமிகள் அவர்களின் திருவருளைப் போற்றி வணங்கு கின்றேன்.

இப்பணியில் அருள் உதவி செய்துவரும் எனது வணக்கத்திற்குரிய **குருநாதர் குருஜி ஆர்.துரைராஜன் (எ) பத்மநாபன்** அவர்களைப் போற்றி வணங்குகிறேன். அவர் பல்வேறு திருப்பணிகளைச் செய்து வரும் நிறைதவச் செல்வர். தினந்தோறும் பூஜைகளுக்கு உதவுவதுடன், பெருமளவு மலர்களைக் கொண்டு நுங்கம்பாக்கம், அருள்மிகு அகத்தீசுவரர் ஆலயத்தில் பணி செய்து வருபவர். அவரைப் போற்றி வணங் கு கிறோம்.

அவரை அடியொற்றி அவரது அன்பரும், நுங்கம்பாக்கம் எல்.வி.ஜே. பில்டர்ஸ் உரிமையாளரும் சிவசுந்தரி அறக்கட்டளையின் நிறுவனருமான திருப் பணிச் செல்வர் **எல்.வி.ஜெய்சங்கர்** அவர் கள் நல்லாதரவை வழங்கி வருகின்றார்கள். மாபெரும் திருப்பணியாளரான அவரையும் அவரது குடும்பத்தினரையும் வாழ்த்தி மகிழ்கிறோம்.

எனது சிவப்பணிகளுக்கும் தெய்வீக் பணிகள் அனைத்திற்கும் துணைநின்று வரும் எனது அன்பிற்கினிய சகோதரி **திருமதி.அனந்த லட்சுமி** அவரது கணவர் கயிலைப் புனிதர் சிவத்திரு **வரத.வீரரா கவன்** தம்பதி யருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஐந்து மலர்களும் முதலில் தனித் தனி மலர்களாக வெளிவந்தனஅவ் வேளை

யில் **திரு.ராஜம கேந்திரன்** அவரது தந்தையார் **மோகனசம்பத்,** திரு.கே.கே. **கோபால சர்மா,** திரு.டி.ஆர். ரமேஷ் சகோதரர்கள் பெரிதும் உதவிபுரிந்தனர். திரு.ராஜமகேந்திரனின் அருட்கொடையால் பல படங்கள் வரையப்பட்டன.

சிவாலயத் திருவிழாக்கள் என்ற நூலுக்குத் தேவையான படங்க ளைத் திரட் டித் தந்து சென்னை கோடம் பாக்கம் புலியூர் பாரத்வாஜேஸ்வர ஆலய அர்ச்சகர் கள் **சிவஸ்ரீ சதீஷ் (எ) பாலச்சந்திர சிவாச் சாரியார்,** அவரது இளவல் சிவஸ்ரீ **காமேஷ் (எ) விசுவநாத குருக்கள்** ஆகியோர் உதவி புரிந்தனர். ஸ்ரீ கங்காதீஸ் வரர் மலருக்குப் பல்வேறு உதவிகளைப் புரிந்த துடன் காசிக்குத் துணை வந்தவர் திரு. **கே.கே.கோபால சர்மா** அவர்களாவர். திரு வல்லிக்கேணி **கார்த்திகேயன் சிவஸ்ரீ. B. சுந்தரேசன்**ஆல் இந்தியா ரேடியோ, **டாக்டர் VPR.வரதராஜன் M.B.B.S, Dr.V.P.**ராமபா ண்டிய ராஜ் கிளினிக், சென்னை பல்வேறு உதவி களைப் புரிந்தார்.

இந்நூல் பணிக்காகப் பல்வேறு திருத்தலங்களுக்குப் பயணம் சென்றபோது, **திரு. பாஸ்கர்** (மேனாள் நூலகர் உ.வே.சா. நூலகம்) **திரு.ராஜா** (மேனாள் ரிசர்வ் வங்கி அதிகாரி) சாந்தி புக் ஹவுஸ் **ஏகாம்பர வேதகிரி** ஆகியோர் பயணச் செலவை ஏற்றுக் கொண்டனர்.

சிவமஞ்சரியின் அச்சுப் பிரதிகளைப் படித்து செம்மைப்படுத்தி உபகரித்து வருபவர் அடையாறு கற்பகம் கார்டன்ஸ் பிரம்மஸ்ரீ **ஜி.எஸ்.நடராஜன்** அவர் களா வர். இவருடைய குமாரர் என்.**பாலு (எ) பால சுப்பிரமணியன்** (ஸ்பீகள் பிரிண்ட் டர்ஸ்) அவர்களும் அனேக உதவிகளைச் செய்து வருகின் றார். மேலும் படிகளைத்ருத்தி உதவி வரும் அன்பர்கள் சிவஸ்ரீ. **த.பூமி நாகநாதன்** (உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தரமணி) **சிதம் பரம் ரமணன்** ஆகியோருக் கும் எமது நன்றி உரித்தாகுக.

இந்நூலுக்குத் தேவையான ஓவியங்களை வரைந் தளித்த , மயிலை **காசி ஸ்தபதி யார்கோவி(எ)கோவிந்தராஜன்)** ஆகியோ ருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

மேலும் தேவையான படங்கள் தமிழ்நாடு தொல்லி யல்(ம)அருங் காட்சியத் துறையினரிடமிருந்தும் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்தும்பெற பட்டன. இந்திய மத்திய தொல்லியல்துறை மேனாள் அதிகாரி திரு **.தியாக சத்திய மூர்த்தி** அவர்களும் திருவான்மியூர் பாம்பனடிமை வே.ந **சௌந்தரராஜன் பிரகதா** தம்பதியரும் இன்னும் பல அன்பர்களும் அளித்தார்கள். இவர்கள் யாவருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

இந்நூலினைப்பலருக்கும் அறிமுகப் படுத்தி நல்லாதரவினைத் தேடித்தந்து வரும் சிதம்பரம் பிரம்மஸ்ரீ **ஜி.பரமேஸ்வர தீக்ஷிதர்** அன்பர்கள் புதுவை சைவ சித்தாந்த ரத்தினம் திரு. **ம. சேகர்,** பரமக்குடி **திரு(ம) திருமதி.ஹரிவாசுதேவ்** தம்பதியினர் அவர்களுக்கும் எனது நன்றி யைத் தெரிவித் துக் கொள் ளு கின்றேன்.

நமது பணிக்கு வேண்டிய நூல் ஆதாரங்களைத் திரட்ட உதவியாக இருந்த **டாக்டர் உ.வே.சாமி நாதைய்யர்** நூலகத்தினர்க்கு எங்கள் நன்றி.



நன்றி மலர்கள்

இறைவனின் திருவருளாலும் அன்பர்களின் நல்லாதரவினாலும் சிவமஞ்சரி பத்தாம் தொகுதியின் முதல்பதிப்பு வெளிவந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இந்நூல் விரைவாக வெளிவர வேண்டும் என்பதற்காகக் கீழ்க்காணும் அன்பர்கள் முன்தொகை வெளியீட்டுத் தொகை அளித்து உதவி புரிந்துள்ளார்கள். இவர்களுக்கு எமது பணிவார்ந்த அன்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவருக்கும் உண்ணாமுலை அம்பிகை உடனாய அண்ணாமலை எம்மண்ணல் சகல செல்வ சௌபாக்கியங்களையும்அளித்துஅருள்பாலிக்கவேண்டுமென்றுபிரார்த்திக்கின்றேன்.

வாழி நலம் சூழ அன்பர் பூசை. ச. அருணவசந்தன்.

நல்லாதரவு தந்துவரும் வணக்கத்திற்குரிய கோயிலூர் மடாலயம்
சீர்–வளர்–சீர்– **நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள்** அவர்கள்

கயிலைப்புனிதர்,
சிவஸ்ரீ Prof.Dr.சோ,முருகன்
தெற்கு ரத வீதி, சிதம்பரம்

சிவஸ்ரீ .T.R. ரமேஷ்
டி சில்வா சாலை, ஆழ்வார்பேட்டை,சென்னை18

குகஸ்ரீ S.குமார் (ஸ்டேட் பேங்க்),
துரைசாமிபுரம், 2வது தெரு, திருப்பூர்

'**சிவஸ்ரீ Prof.Dr.M.V. சத்தியநாராயணா IIT**
தண்டீஸ்வரம், வேளச்சேரி, சென்னை–42

சிவஸ்ரீ . எஸ் .ரவீந்திரன்
தனலட்சுமி வங்கி, மதுரை

சிவஸ்ரீ V.L. நடராஜன்
ஸ்டேட் பேங்க், திருவான்மியூர், சென்னை–41'

சிவஸ்ரீ .தங்க.சொர்ணகுமார்
டிவிஎஸ் சுந்தரம் பிரேக்ஸ் லைனிங் லிமிடெட்

சிவஸ்ரீ .S. மோகன சம்பத்
சிவஸ்ரீ.M. இராஜ மகேந்திரன்
பெருமாளகரம், திருவேற்காடு

சிவஸ்ரீ சீனு. அருணாசலம்
16, சின்ன கடைத் தெரு, சிதம்பரம்

சிவஸ்ரீ P.B. வெங்கட்ராமன்
ஆஷியானா, ஆழ்வார்பேட்டை, சென்னை–18

சிவஸ்ரீ ம. சேகர்– பத்மாவதி
55, வெண்ணிசாமி நகர், புதுச்சேரி

சிவஸ்ரீ கே. ரத்தினசபாபதி
திருவேங்கட முதலி தெரு, புதுப்பேட்டை, செ–2

திருமதி சுமதி சுப்ரமணியன், நவி மும்பை

தேனுபுரீஸ்வரதாசன், சிவஸ்ரீ **திரு ,இல , சங்கர்**
மாடம்பாக்கம் சென்னை –77

சிவஸ்ரீ .Dr..T.R. சுரேஷ்
மேற்கு மாம்பலம், சென்னை–33

சிவஸ்ரீ என். லட்சுமணன்
வெங்கடேஸ்வரா நகர், மல்கஜ்கிரி,ஹைதராபாத்47

சிவஸ்ரீ A . வெங்கடேசன்
கோரல் மினார், ராஜா அண்ணாமலைபுரம்,செ 28

சிவஸ்ரீ Dr.C.ரவிசங்கர். B.D.S.,
ஜெய்சற்குரு பல் மருத்துவமனை, புதுச்சேரி

சிவஸ்ரீ கே.கே. கோபாலசர்மா
பரமேஸ்வரி நகர், அடையாறு, சென்னை–20

சிவஸ்ரீ சாமி சுப்பையா ஸ்தபதியார்குமாரர்
சிவஸ்ரீ . சிவா (எ) சுவாமிநாத ஸ்தபதியார்
ஏகாம்பரநாதர் மேற்கு மாடவீதி, காஞ்சிபுரம்.

சிவஸ்ரீ Prof.Dr.R. இராதாகிருஷ்ணன்
துணை வேந்தர்,அண்ணா பல்கலைக்கழகம், கோவை

சிவஸ்ரீ எஸ். நாராயணசாமி
திரிவேணி அப்பார்ட், கஸ்தூரிபாய் நகர், சென்னை–20

சிவஸ்ரீ V.M.G. ராமன்
கேசவப்பெருமாள் புரம், சென்னை–28

சிவஸ்ரீ Dr. தேவராஜன்திருமழிசை,சென்னை

சிவஸ்ரீ. T.K.நீலகண்டன்
அமைந்தகரை, சென்னை

சிவஸ்ரீ Prof.Dr.A.M. சீனிவாசன்
அடையாறு, சென்னை–20

சிவஸ்ரீ திரு.வரதராஜன்
மந்தைவெளி, சென்னை 28

இந்நூல் அச்சிடுவதற்கு உதவியாக நிழற்பிரதிகளைச் செய்துதந்த சத்தியாபிராஸஸ் **திரு.ராதாகிருஷ்ணன்** அவர்களுக்கும், நன்முறையில் அச்சிட்டளித்த **ஸ்ரீ ஆப்செட்** பிரிண்டர்ஸ் உரிமையாளர்கள் **திரு.சுந்தரமூர்த்தி, திரு.** செல்வராஜ் ஆகியோருக்கும் என்து நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வாழ்க்கைத் துணைவி திருமதி. **கே.வசந்தா** எனது அனைத்து சிவப் பணி களும் நன்கு நடைபெற இல்லப் பொறுப்புகள் அனைத்தையும் தானே ஏற்றுக் கொண்டு உதவியாக இருக்கிறாள். அவளுக்கு இந்த வேளையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்பர்கள்அனைவருக்கும் **உண்ணாமுலை** அம்பிகை உடனாகிய **அண்ணா மலை யெம்மண்ணல்** சகல செல்வ யோக மிக்கப் பெருவாழ்வை அளித்தருளி அருள்பாலிக்க வேண்டு மென்று அவருடைய பொன்னார் திரு வடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டு கின்றேன்.

இங்ஙனம்,
சிவப்பணியில் மீளாஅடிமை,

கார்த்திகை தீப நன்னாளில்
(24.11.2007) சனிக்கிழமை

பூசை ச. அருணவசந்தன் (எ) பூசைச.ஆட்சிலிங்கம்



" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

உ

ஸ்ரீ பச்சையம்மன் துணை




இந்நூலின் உள்ளே....

உ



பூமிசை பொலியும் புண்ணியா போற்றி! பூங்கொடி உமையவள் பங்கா போற்றி!!





கைப்போது "மலர்தூவி" க் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்து தொழநின்ற முதல்வனை
அப்போது "மலர்தூவி" ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என் மனத்து வைத்தேனே - திருநாவுக்கரசர்

ஸ்ரீ புஷ்பரதீசுவரர்

மனத்திற்கு மகிழ்ச்சியுடன் இதத்தைத் தருவன மலர்களாகும். இறைவனுக்கு மலர்களைச் சூட்டி வழிபாடு செய்வது உலகெங்கும் நடைமுறையில் உள்ளது. குறிப்பாகத் தென்னிந்தியாவில் மலர்களைக் கொண்டு வழிபடுவது தனிச்சிறப்புடன் போற்றப்படு கிறது. இறைவன் தானே மலர்களாக இருக்கின்றான். மலர்களை விரும்புவதால் அவனுக்குப் புஷ்பரதீசு வரன் என்றும்; புஷ்பவனத்திடையில் வீற்றிருப்பதால் புஷ்பவனேசுவரர் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. அவனுடைய தேவியான பராசக்தி மலர்களாகவும் மலர்க்கொடியாகவும் விளங்குகின்றாள்.

இறைவனை மலரிட்டு வழிபடுவதால் பண்டை வினைகள்நீங்கிப் புண்ணியம் வளருமென்று புராணங் களும்தோத்திர நூல்களும் கூறுகின்றன. நாட்பூசையில் மலர்கள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. மலர் களின் வகைகள், இன்னமலரை இட்டுவழிபடுவதால் இன்ன பயன் கிடைக்கும் என்பன போன்ற செய்தி களைக் கூறும் நூல்களும் உள்ளன. பூக்களைப் பெற நந்தவனங்களை அமைத்தல்,அவற்றைப் பேணிக்காத் தல் முதலியனவும் சிவபுண்ணியங்களாகவே போற்றப் படுகின்றன.

சிவமஞ்சரியின் இந்த நாற்பத்தியாறாவது மலர் சிவவழிபாட்டில் இடம் பெற்றுள்ள பூக்களின் சிறப்புக் களைப் பேசும் மலராக மிளிர்கிறது. இதனுள் சிவபெரு மான் பூக்களோடு கொண்டுள்ள தொடர்பு, மலர் தூவி வழிபாடு செய்து பேறு பெற்ற அடியார்களின் வரலாறு கள் நந்தவனம் தொடர்பான செய்திகள் முதலியவை இடம் பெற்றுள்ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

மாமலர்க்கண்ணி உடனாய புஷ்பரதீசுவரப் பெரு மான் அருளால் அன்பர்கள் சகல செல்வயோக மிக்க பெருவாழ்வைப் பெற்று இன்பமுடன் வாழ இறைய ருளைப் பிரார்த்திக்கின்றோம்.

- சிவசுந்தரி

மலர் வழிபாடு... (சிந்தனைத் துளிகள்)

❁ பூக்களால் இறைவழிபாடு செய்யப்படுவதால் அதற்கு பூசெய், பூசனை என்ற பெயர்கள் வழங்கு வதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

❁ பூக்களை ஆய்ந்து தூய்மைப்படுத்தி தூயநீரில் நனைத்த பின்னரே இறைவனுக்குச் சூட்ட வேண்டும். பன்னீரில் நனைத்துச் சூட்டுவது இன்னும் சிறப்பாகும். வாசனைப் புகையில் காட்டிச் சூட்டும் வழக்கமும் உள்ளது.

❁ பூக்களை எண்ணிச் சார்த்தும் வழக்கமில்லை. நிறுத்து அல்லது அளந்தே அர்ச்சிப்பது வழக்கம். புராணங்கள் பூக்களை அளந்து அல்லது நிறுத்துப் பூசிக்க வேண்டுமென்று கூறுகின்றன. திருக்கழிப் பாலையிலுள்ள கல்வெட்டு தினமும் இரண்டு நாழிகை அளவு தும்பைப் பூவினை வழிபாட்டிற்கு அளந்து அளித்த செய்தியைக் கூறுகிறது.

❁ இறைவனின் பெயருடன் "போற்றி" என்பதைச் சேர்த்து சொல்லி அவன் மீது மலரிட்டு வழிபடுவதே மலர்வழிபாடு ஆகும். வடமொழிச் சொல்லான "நம" என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றனர். திருமூலர் நம: என்ற நாமத்தை அடிக்கடி பயன்படுத்துகிறார்.

❁ மனிதர்கள் மட்டுமின்றி விலங்குகளும் பறவைகளும் இறைவனுக்கு மலர்சூட்டி வழிபட்ட தைப் புராணங்கள் கூறுகின்றன. குரங்கணில் முட் டத்தில் பாரிஜாத மரத்தின் கீழ் இருந்த சிவலிங்கத்தின் மீது காக்கை கிளைகளை அசைத்துப் பூக்களை விழச் செய்து வழிபட்டதென்று தலபுராணம் கூறுகிறது.

ஆனைக்காவில் யானை மலர்களைப் பறித்து வந்து சிவபூசை செய்தது. திருந்துதேவன் குடியிலும், நீடூரிலும் நண்டு தாமரை மலர் கொண்டு வழிபட் டதைத் தலபுராணங்கள் குறிக்கின்றன. வடநாட்டுப் புராணங்களில் தவளை மலர்களைப் பறித்து வந்து சிவவழிபாடு செய்தது குறிக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சிப் பாட்டு

தமிழ் இலக்கியத்தில் நிலத்தின் அமைப்பையொட்டி அதை ஐவகையாகப் பிரித்துள்ளனர். இவை (மலையும் மலையைச் சார்ந்த இடமுமான) குறிஞ்சி; (காடும் காட்டைச் சார்ந்த இடமுமான) முல்லை; (வயலும் வயலைச் சார்ந்த இடமுமான) மருதம்; (கடலும் கடலைச் சார்ந்த இடமுமான) நெய்தல்; (எல்லையற்ற வரட்சி மிகுந்த மணற்பரப்பான) பாலை என்பனவாகும். இவற்றில் குறிஞ்சி நிலத்தில் அதிக அளவில் மழையும், பனியும், பொழிவதால் இந்நிலத்தில் வகைவகையான பூக்கள் ஏராளமாகப் பூக்கின்றன. பூக்கள் மிகுந்த காலத்தில் குன்றுகள், மலர்க் குன்றுகளாகவே காட்சியளிக்கும். இதையொட்டி இம்மலைகள் பூங்குன்றம் பூமலை எனப்பலவாறு அழைக்கப்பட்டன. இம்மலைகளையொட்டி அமைந்த ஊர்கள் பூங்குணம், பூங்குன்றம், பூமலையூர் முதலிய பெயர்களைப் பெற்றன.

குறிஞ்சி நிலமான மலைச்சாரலில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் அபூர்வ மலர். இந்நிலத்தில் பெயரால் குறிஞ்சிமலர் என்று அழைக்கப்படுகிறது. இது கோடைக்கானலில் இப்பொழுதும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிறைய பூத்துக் குலுங்குவதைக் காணலாம். இம்மலையில் வீற்றிருக்கும் முருகப் பெருமான் இம்மலரின் பெயரால் "குறிஞ்சியாண்டவர்" என்றழைக்கப்படுகின்றார்.

சங்கத் தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான பத்துப் பாட்டில் ஒன்று குறிஞ்சிப் பாட்டு. இதனைப் பாடியவர் பெரும் புலவரான கபிலர் ஆவார். ஒரு பெண்ணும் அவளுடைய தோழிகளும் தினைப்புனம் காக்கச் செல்கின்றனர். அங்கு அவர்கள் அருவிகளில் நீராடி மலர்களைப் பறித்துப் பாறைகளில் குவித்து விளையாடு கின்றனர். அப்படி அவர்கள் சுனை, மரம், செடி, கொடிகளிலிருந்து பறித்துக் குவித்துள்ள மலர்களின் பெயர் களைக் கபிலர் வரிசையாகக் கூறுகின்றார். இந்த வரிசையில் தொண்ணூற்று ஒன்பது மலர்களின் பெயர்கள் வரிசையாகக் குறிக்கப்பட்டுள்ளன. இப்படி மலர்களின் பெயர்களை நீண்ட வரிசையாகத் தொடுத்துக் கூறப்பட்டுள்ளதை வேறெந்த இலக்கியத்திலும் காண முடியவில்லை. இது தமிழர்களுக்கு மலர்களின் மீதிருந்த ஈடுபாட்டையும் இயற்கையின் மீதிருந்த அன்பையும் வெளிப்படுத்துகின்றது.

பூவனத்தில் மேவும் பூவண்ணன்

இறைவன் பூக்களை விரும்பிச் சூடுகிறான். பூவால் செய்யப்படும் பூசையால் மகிழ்கின்றான். எனவே அன்பர்கள் சிவபூசையில் மலர்களைச் சூட்டியும், தூவியும் வழிபடுகின்றனர். பூசைக்கு வேண்டிய மலர்களைப் பெற நந்தவனங்களையும், மலர்ச் சோலைகளையும், பூம்பொழில்களையும் உண்டாக்கித் தூய்மையுடன் பராமரிக்கின்றனர். அம்பிகை மலர்வனம் அமைத்துப் போற்றியதைக் காஞ்சிப்புராணம் கூறுகிறது. இவளைப் போன்றே தேவர்களும், முனிவர்களும், மாமன்னர்களும், புஷ்பவனங்களை வைத்துப் போற்றியுள்ளனர். இதனிடையே சிவாலயம் அமைக்கப்பட்டது. இவை பூவனேச்சரம், புஷ்பவனேச்சரம், பூம்பொழிலீச்சரம் எனப்பலவாறு அழைக்கப்படுகின்றன. அத்தகைய பூவனத் தலங்கள் சிலவற்றை இங்கே அறிந்து மகிழலாம்.

புஷ்ப வனமாகிய திருப்பூவணம்

பாண்டிய நாட்டுப் பழம்பதிகளில் ஒன்றான திருப்பூவணம் மதுரையிலிருந்து 15 கி.மீ தொலைவில் வைகை ஆற்றின் தென் கரையில் அமைந்துள்ளது. மூவராலும் பாடப்பெற்ற இத்திருத்தலத்தில் பொன்னனையாள் என்னும் பெண்ணுக்காகச் சிவபெருமான் ரசவாதம் செய்து திருவிளையாடல் புரிந்துள்ளார். இறைவன் பூவின் வண்ணமாக (மலர்போன்று) இருப்பதால் பூவணநாதர் என்றழைக்கப்படுகிறார். அம்பிகை மின்னம்மை, திருப்பூவணம், பூம்பொழிலின் நடுவே இருந்ததைத் திருஞானசம்பந்தர் பாடல்கள் குறிக்கின்றன. அவர் இங்கு பூத்திருந்த குருந்தம், மாதவி, கோங்கு, மல்லிகை, புன்னை, ஞாழல், முதலிய மலர்ப் பொழில்களின் சிறப்பையும் பூவணத்தானை மலர் புனைந்து ஏத்துதலே இன்பம் என்றும் கூறிமகிழ்கிறார்.

திருமுறையில் பல இடங்களில் இறைவன் பூவணன், பூவணத்தவன், பூவண்ணன் என்ற பெயர்களில் குறிக்கப்பட்டுள்ளார்.

திருப்பூவணம், தலபுராணத்தில் புஷ்பவனம், புஷ்பவனகாசி, புஷ்பவனபுரம், பூவை முதலிய பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

கடந்தைத் தூங்கானைமடம்

பெண்ணாடம் என வழங்கும் திருப்பெண்ணாகடம் தலபுராணத்தில் புஷ்பவனம், புஷ்பாராண்யம் என்று குறிக்கப்பட்டுள்ளது. ஒரு சமயம், தெய்வ உலகில்பூக்கள் இல்லாது போயிற்று.இந்திரன் அரம்பையர்களிடம் பூவுலகம் சென்று சிவபூசைக்கு வேண்டிய மலர்களைப்பறித்து வருமாறு ஆணையிட்டான். அவர்கள் பூவுலகில் பல இடங்களில் தேடித்திரிந்த பின் இங்கு வந்தனர். பொலிவுடன் இங்கிருந்த நந்தவனத்தைக்கண்டுமகிழ்ந்துஅதிலிருந்து வேண்டுமளவிற்கு பூக்களைப் பறித்தனர். அந்த சோலையின் நடுவில் இருந்த சுடர்க்கொழுந்து நாதராகிய சிவலிங்கத்தைக் கண்டு மகிழ்ந்து அவரைப் பூசித்துக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டனர்.

தெய்வப்பணிப் பெண்கள் உரிய காலத்தில் திரும்பிவராததால், இந்திரன் பூக்களைக் கொண்டு வர காமதேனுவை அனுப்பினான். அதுவும் இங்கே வந்து நந்தவனத்தைக் கண்டு மகிழ்ந்தது. வந்த வேலையை மறந்து அரம்பையர்களுடன் சேர்ந்து சிவபூசையில் ஒன்றிவிட்டது.

காமதேனுவும் திரும்பி வராததால் இந்திரன் தன் பட்டத்து யானையாகிய ஐராவதத்தை அனுப்பினான். அந்த யானையும் பூவுலகிற்கு வந்து இந்த சோலையைக் கண்டு மகிழ்ந்து இங்கேயே தங்கி சிவபூசை செய்யத் தொடங்கிவிட்டது.

தான் அனுப்பிய யாவரும் திரும்பி வராமல் போகவே, இந்திரன் தானே புறப்பட்டு இவ்வூருக்கு வந்தான். இத்தலத்தின் அருள் திறத்தால் கவரப்பட்டு இங்கேயே தங்கி நெடுநாள் வழிபட்டு மகிழ்ந்திருந்தான். அவனுடைய பூசையால் மகிழ்ந்த சிவபெருமான் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவனுக்கும் அவனுடைய பணியாளர்களாகிய யானை, காமதேனு, அரம்பையர்கள் ஆகியவர்களுக்கும் காட்சி தந்து வரமளித்தார்.

பெண்(அரம்பையர்கள்)+ஆ(காமதேனு)+கடம்(யானை) ஆகியோர் பூசித்துப் பேறு பெற்றதால் இந்த இடம் பெண்ணாகடம் என்று அழைக்கப்படுகிறது. இங்குள்ள ஆலயத்தைச் சுற்றிலும் பெரிய நந்தவனம் இப்போதும் சிறந்தமுறையில் பராமரிக்கப்பட்டு வருவது மகிழ்வுடன் குறிப்பிடத்தக்கதாகும்.

பூந்துருத்தி

ஆற்றங்கரையில் சேரும் மணல் திட்டுக்கள் உறுதிப்பட்டு ஆற்றுக்குள் துருத்திக் கொண்டு இருக்கும் நிலப்பரப்பு துருத்தி என்று அழைக்கப்பட்டது. தேவாரத்துள் காவிரியாற்றிலுள்ள திருப்பூந்துருத்தி, துருத்தி (குத்தாலம்) முதலிய தலங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவை ஆற்று நீர்ச் செழிப்பால் இயற்கை

அழகு கொஞ்சும் தலங்களாக உள்ளன. ஏராளமான மரம், செடி, கொடிகள் பூத்துக் குலுங்குவதால் இந்த இடங்கள் பூந்துருத்தி என்றும் அழைக்கப்பட்டன.

தஞ்சாவூர் திருவையாறு சாலையிலுள்ள கண்டியூருக்கு மேற்கே 4 கி.மீ. தொலைவில் காவிரியின் கரையில் பூந்துருத்தி எனும் தலம் உள்ளது. இறைவன் புஷ்பவனநாதர் அம்பிகை அழகார்ந்த நாயகி, தேவேந்திரன் புஷ்பவனம், அமைத்து வழிபட்ட தலம் என்று கூறுகின்றனர்.

மேலைப் பூந்துருத்தி எனும் தலத்திலும் சுவாமி அம்பிகை புஷ்பவனேசுவரர், அழகால் அமர்ந்த நாயகி என்று அழைக்கப்படுகின்றனர். பூண்டியிலும் இறைவன் புஷ்பவனேசுவரர் எனும் பெயரில் அருள் பாலிக்கின்றார்.

பூந்துறை

ஆற்றங்கரையிலுள்ள துறைகள் பூக்களால் பொலிந்து தோன்றும் போது பூந்துறைகள் என்று அழைக்கப்பட்டன. திருநெல்வேலியில் தாமிரபரணி ஆற்றங்கரையிலுள்ள "சிந்துபூந்துறை" தேவாரத்துள் குறிக்கப்பட்டுள்ளது. இத்துறையில் பொன் போன்ற கொன்றை, செருந்தி முதலிய மலர்கள் பூத்துக் குலுங்குவதும் குரங்குகள் கிளைகளில் பாய்வதால் பூக்களிலிருந்து தேன்துளிகள் சிந்தும் பூந்துறையாக விளங்கியதும் குறிக்கப்பட்டுள்ளன.

சித்திராபௌர்ணமி, ஐப்பசி முதல் தேதி, தைப் பூசம் முதலிய நாட்களில் நெல்லையப்பர் இங்கு எழுந்தருளி தீர்த்தம் அளிப்பார். இங்குள்ள மண்டபம் தைப் பூசமண்டபம் என்று அழைக்கப்படுகிறது. நெல்லையப்பர் "சிந்துபூந்துறைச் செல்வர்" என்று தேவாரத்துள் அழைக்கப்படுகிறார்.

கொங்குநாட்டு பூந்துறை

ஈரோடு மாவட்டத்திலுள்ள நகரம் பூந்துறை, இங்கு பாகம்பிரியாள் அம்பிகை உடனாய புஷ்பவனேசுவரர் ஆலயம் உள்ளது. இதுஇந்திரன் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். சண்பக மரங்கள் சூழ்ந்த ஷெண்பக தீர்த்தம்,ஷெண்பகநதி இந்திரன் உருவாக்கிய பொற்றாமரைத் தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் உள்ளன. இந்திரன் நால்வகைப் பூக்களைப் பெற நந்தவனங்களையும் ஓடைப்புறங்களையும் அமைத்து வழிபட்ட இடமாதலால் பூந்துறை எனப்பட்டது. காளியண்ணப்புலவர் இவ்வூரின் பெருமைகளை விளக்கி 228 பாடல்களைக் கொண்ட பூந்துறைப் புராணத்தைப் பாடியுள்ளார்.

பூவனூர்

மன்னார்குடிக்கு வடக்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பூவனூர் திருநாவுக்கரசரின் பாடல் பெற்றத் தலமாகும். இறைவி கற்பகவல்லி. அம்பிகை நந்தவனம் அமைத்து சிவபெருமானை அர்ச்சித்த தலம் என்பர். அப்பர் தனது பதிகத்தில் கோடி அருச்சனை செய்தது பற்றிக் குறித்துள்ளார். சுகமுனிவர் இங்கு புஷ்பவனம் வைத்து வழிபட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. தலபுராணத்தில் இறைவன் புஷ்பவன நாதர் என்று அழைக்கப்படுகிறார்.

காவிரி "பூம்" பட்டினம்

காவிரியாறு கடலோடு சங்கமமாகும் இடத்தில் அமைந்திருந்த பெரிய நகரம் புகார் ஆகும். இதனை இலக்கியங்கள் பூம்புகார் என்று குறிக்கின்றன. இந்நாளில் இது சிற்றூராகக் காட்சியளிக்கிறது. திருவெண்காடு, பல்லவனீச்சரம், தலைச்செங்காடு, சாய்க்காடு, முதலிய தலங்கள் முன்னாளில் பூம்புகாரின் அங்கங்களாக விளங்கின. இந்நகரத்தைச் சுற்றிலும் அனேக மலர்வனங்கள் இருந்தன. அதனால் இந்நகர் காவிரிப் பூம்பட்டினம் என்று அழைக்கப்பட்டது.

இராவணன், சீதையை அபகரித்துச் சென்ற போது அவனைத் தடுத்துப் போரிட்டு மாண்ட பறவையரசன் சடாயு ஆவான். அவனுடைய தம்பியின் பெயர் சம்பாதி. போரில் மாண்ட சடாயுவுக்கு இராமபிரான் தகனக்கிரியைச் செய்த இடம் வைத்தீஸ்வரன் கோயில் எனப்படும் புள்ளிருக்கு வேளூர் ஆகும்.

இத்தலத்தில் சம்பாதியும் சடாயுவும் நெடுநாட்கள் சிவவழிபாடுசெய்துவந்தனர்.இவர்கள்சிவபூசைக்காக ஒரு யோசனை தூரம் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் பெரிய மலர்வனத்தை வைத்து வளர்த்தனர். அது சம்பாதியின் பெயரால் சம்பாதிவனம் என்று அழைக்கப்பட்டது. இதன் காவல் தேவதையாக சம்பாதி எனும் பெண் தெய்வம் இருந்தது. வைத்தீசுவரன் கோயிலில் இருந்து சம்பாதி தினமும் காவிரிப்பூம்பட்டினத்திற்குப் போய் மலர் பறித்து வந்து பெருமானைப் பூசித்து வந்தான். இதனை,

"வாசநலம் செய்து இமையோர் நாள்தோரும் பூதுவ
ஈசன் எம்பெருமானார் இனிதாக உறைமிடம் யோசனை
போய்ப் பூக்கொணர்ந்து அங்கொரு நாளும் ஒழியாமே
பூசனை செய்தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே"

என்று திருஞானசம்பந்தர் அருளியுள்ளார்.

பூவின் பெயரால் பொலிந்த பிரான்

இறைவன் பூக்களை விரும்பிச் சூடுவதைப் போலவே பூவின் பெயரால் அழைக்கப்படுவதையும் விரும்புகின்றான். அவனை அன்பர்கள் புஷ்பரதீசன், புஷ்பநாதன் என்ற பொதுப் பெயர்களாலும் செவ்வந்திநாதர், செங்கழுநீர்வரையன், ஷண்பகேசுவரன், பிச்சாலீசன், முதலிய சிறப்புப் பெயர்களாலும் அழைக்கின்றனர். பூவின் பெயரால் பொலிந்த பிரான் வீற்றிருக்கும் சில தலங்களைப் பற்றி அறிந்து மகிழலாம்.

ஞாயிறு புஷ்பரதீசுவரர்

ஞாயிறு சென்னைக்கு அருகில் அமைந்துள்ள தலமாகும். சூரியன் இங்கு வழிபட்டுப் பேறுபெற்றான் என்று புராணங்கள் கூறுகின்றன. சூரியன் பூசை செய்த போது சிவபெருமான் இங்குள்ள சூரிய தீர்த்தத்தின் மத்தியில் பெரிய தாமரை மலர்மீது சிவலிங்கமாகக் காட்சியளித்தார். அவன் அந்த லிங்கத்தை நிலைப் படுத்திக் கோயில் அமைத்துள்ளான்.

ஞாயிறாகிய சூரியன் அமைத்தால் இந்த ஆலயம் ஞாயிறு காணி எனப்பட்டது. புஷ்பத்தின் நடுவில் தோன்றியதால் சுவாமி புஷ்பரதீசுவரர் என்று அழைக் கப்படுகிறார். (புஷ்பம்-பூ:ரதிகரம்-விரும்புதல்) அம்பி கையின் பெயர் சுவர்ணாம்பிகை என்பதாகும்.

இறைவன் பூக்களை விரும்பும் புஷ்ப ரதீசனாக இருக்க இறைவி வாடா மலர்களான பொன்மலர் களைப் பூக்கும் பொற்கொடியாக (சுவர்ணலதா) இருக் கிறாள். அந்தப் பெயரே சுவர்ணாம்பிகை என வழங்கு கிறது.

ஆண்டிற்கு ஒருமுறை சூரியனின் கிரணங்கள் கருவறையில் லிங்கத்தின்மேல் படிக்கின்றன. இதனை சூரியபூசை என்பர். இப்பகுதியில் பலர் "புஷ்பரதம்" என்ற பெயரைச் சூட்டி கொள்கின்றனர்.

காஞ்சி செவ்வந்தீசர்

காஞ்சிபுரத்தில் செவ்வந்தீசுவரர் எனும் பெயரில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். வாயுதேவன் இவரைச் செவ்வந்தி மலர்களால் வழிபட்டு வாசனை களைச்சுமந்து செல்லும் பேறுபெற்றான்.அதையொட்டி அவன் "கந்தவாகனன்" என்று அழைக்கப்படுகிறான்.

ஆரணி ஷெண்பக பிச்சாலீசர்

சென்னைக்கு வடமேற்கில், பெரியபாளையத் துக்குஅருகில்ஆரணியாற்றங்கரையில் அமைந்துள்ள திருத்தலம் ஆரணி ஆகும். இங்குள்ள இறைவனின் பெயர் ஷெண்பகபிச்சாலீசுவரர். இது நடைமுறையில் சம்பங்கி பிச்சாலீசுவரர் என வழங்குகிறது. இது வைரவத் தலமாகும்.

திருப்புடைமருதூர் நாறும்பூநாதர்

திருநெல்வேலி மாவட்டத்தில் வீரவநல்லூரில் இருந்து 7 கி.மீ. தொலைவில் தாமிரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள திருத்தலம் திருப்புடை மருதூராகும். இங்கு பெருமான் நாறும்பூநாதர் எனும் பெயரில் வீற்றிருக்கிறார். இத்தலத்தின் தலமரம் அர்ச் சுனம் எனப்படும் மருத மரமாதலின் இது புடைமரு தூர் என்று அழைக்கப்படுகிறது. புடார்ச்சுனம் என்று வடமொழிப் பெயரால் புராணங்களில் சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது.

"நறும்" என்ற சொல்லுக்குப் புத்தம்புதிய நிறை வான, எண்ணிக்கையற்ற, தேன்சிந்தும், எனப்பல பொருள் உள்ளன. திருப்புடைமருதூர் சிவபெருமான் புத்தம்புதியதும் மனநிறைவளிப்பதும் இனிய வாச முடையதும் தேன்சிந்துவதும் ஆன எண்ணற்ற மலர் களைச் சூடி மகிழ்ந்திருப்பதால் நறும்பூநாதர் என்றும் அழைக்கப்படுகிறார். இதுவே நாறும்பூநாதர் என்று வழங்குகிறது. நாறும்பூ என்பதற்கு வாசனை வீசும் மலர்கள் என்பதும் பொருள். இப்பகுதியில் அனேகர் "நாறும்பூ" என்ற பெயரைச் சூடியுள்ளனர். இங்கு வீற்றிருக்கும் அம்பிகையின் பெயர் கோமதி ஆகும்.

திருமலர் உடையார்

திருவாகிய இலக்குமி, விரும்பி உறையும் மலரா தலின் தாமரை திருமலர் என்று அழைக்கப்படுகிறது. சிவபெருமான் சிவாகமங்களை அருளிச்செய்யும் போது பொன்தாமரை மலரில் வீற்றிருப்பதுடன் கரங் களில் செந்தாமரை நீலத்தாமரை ஆகியவற்றை ஏந்து கிறார். இதனால் தாமரைச் சைவன் என்று அழைக்கப் படுகிறார். காஞ்சீபுரம் மாவட்டத்திலுள்ள ஆலஞ்சேரி, எரவான்சேரி, கல்பாக்கம் முதலிய ஊர்களில் இறை வன் திருமலர் உடையார் என்ற பெயரில் அருள் பாலித்து வருகிறார். தேவாரத்துள் கொன்றை மலர் களும் திருமலர்கள் என்றே குறிக்கப்பட்டுள்ளன.

கரவீரநாதர் (பொன்னலரியப்பர்)

இந்நாளில் கரையாபுரம் என்றழைக்கப்படும் கரவீரம் சோழநாட்டுத் தலங்களில் ஒன்றாகும்.

திருவாரூருக்கு அருகில் உள்ளது. கரவீரம் என்பது மஞ்சள் அலரி மரம் ஆகும். அலரி வனத்தில் எழுந்தருளியிருப்பதால் இறைவன் கரவீர நாதர் என்றழைக்கப்படுகிறார். அம்பிகை பிரத்யக்ஷ மின்னம்மை.

பரமேசுவரமங்கலத்து ஷெண்பகேசுவரர்

செங்கை மாவட்டத்தில் பாலாறு கடலோடு கலக்குமிடத்தில் பல்லவ மன்னர்கள் பரமேசுவர மங்கலம் எனும் ஊரை நிறுவினர். அங்கிருந்த ஷெண்பக கேசுவரர் எனும் சிவாலயத்தைப்புதுப்பித்து திருப்பணிகள் செய்துள்ளனர். சிவபெருமான் ஷெண்பகேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

மூலமூர்த்தியான சிவலிங்கங்கள் பூவின் பெயரால் பொலிவதைப் போலவே உலாத்திருமேனிகளும் பூவின் பெயரால் சிறப்புப் பெற்றுள்ளன.

எடுத்துக்காட்டாக திருவாரூர்ப் பெருமானுக்கு செங்கழுநீர் தாமத்தார், செவ்வந்தித் தோடழகர், தண் தாமரையான் எனும் பெயர்கள் வழங்குகின்றன. திருமலைராயன்பட்டினத்தில் உள்ள தியாகராஜரான சோமாஸ்கந்தர் ஷெண்பகத் தியாகர் என்று அழைக்கப்படுகிறார்.

மலரின் பெயர்களில் அம்பிகை

சிவபெருமான் பூக்களை விரும்புவதால் புஷ்ப ரதீசுவரர் என்று அழைக்கப்படுகிறார். கொடி, செடிகளில் பூக்கும் மலர்களைவிட அவனால் மிகவும் விரும்பப்படும் வாடாமலர், பராசக்தியே ஆவாள். அவள் பொன்மலர்களைப் பூக்கும் பூங்கொடியாக விளங்குவதால் பொற்கொடி (சுவர்ணலதா) என்றும் மலர்க்கொடி (புஷ்பலதா) என்றும் அழைக்கப்படுகிறாள். இதைப் போன்றே மரகதக்கொடி, வைரக் கொடி, கற்பகவல்லி, எனும் பெயர்களும் அவளுக்கு வழங்குகின்றன.

திருவாரூரில் அவள் நீலோற்பலாம்பிகை,கமலாம்பிகை எனும் பெயர்களில் இரண்டு தனிக்கோயில்களில் எழுந்தருளியிருக்கிறாள்.

ஆவூர் எனும் தலத்திலுள்ள அம்பிகை பங்கஜ வல்லி (தாமரைக் கொடி) என்றழைக்கப்படுகிறாள். ஓமாம்புலியூர் தலத்திலுள்ள அம்பிகைக்குப் பூங்கொடி (புஷ்பலதா) என்ற பெயர் வழங்குகிறது.

அவள் பூங்கொடியாக விளங்குவதால் அவளுடைய அங்கங்களும், பூக்களாகவே கூறப்பட்டுள்ளன. சீயாத்த மங்கையில் உள்ள அம்பிகை நீலமலர் போன்ற கண்களைக் கொண்டிருப்பதால் நீலமலர்க் கண்ணி என்று அழைக்கப்படுகிறாள். நாகப்பட்டினத்தில் நீலயதயாக்ஷி எனப் பெயர் பெற்றிருக்கிறாள்.

அம்பிகை பல்வகை மலர்களைச் சூடியிருப்பதால் **மலர்க்குழலி**, (எதிர்கொள்பாடி), என்றும்;கொத்து கொத்தான மலர்களைச் சூடுவதால் (இன்னம்பர்) **கொந்தார் பூங்குழலி** என்றும்; வண்டுகள் ஆர்ப்பரிக்கும் மலர்களைச் சூடியிருப்பதால் **வண்டார்குழலி** (கோளிலி, வடதிருஆலங்காடு) என்றும்; பூக்களைச் சூடுவதால் **பூங்குழலி** (மருகல்) என்றும் குராமலர் களைச் சூடுவதால் **குரவம் கமழ்குழலி** (ஆப்பனூர்) என்றும் பலவாறு அழைக்கப்படுகிறாள்.

அல்லிக் கொடிபோன்றவள் எனும் பொருளில் அல்லியங்கோதை என்றழைக்கப்படுகின்றாள். பூவின் மொட்டுக்களுக்கு, குறிப்பாக தாமரை மொட்டுக்கு முகிழ் என்பது பெயர். குவிந்த பெரிய சரியாத முகிழ் போன்ற முலைகளை உடையவளாக இருப்பதால் அம்பிகை முகிழாம்பிகை (குத்தாலம்) என்றழைக்கப்படுகிறாள். அபிராமி பட்டர் முகையே முகிழ்முலை மானே என்று கூறுவது இங்கு எண்ணத்தக்கதாகும்.

சிவாலயங்களில் உள்ள அம்பிகைக்கு மட்டுமின்றி அவளுடைய அம்சமாகக் கிராமங்கள் தோறும் காவல் தெய்வங்களாக விளங்கும் பெண் தெய்வங்களும் மலர்ப் பெயர்களைச் சூடியுள்ளனர். ஷெண்பகாதேவி,(குற்றாலம்) பூங்கொடி, பூங்கோதை, பூங்காவனத்தாள், போன்ற பெயர்களில் அனேக கிராம தெய்வங்களைக் காண்கிறோம்.

ஷெண்பகமும் - பிச்சியும்



அபிராமி அந்தாதியில் பட்டர்பிரான் தாரமர் கொன்றையும் **ஷெண்பகமாலையும்** சாத்தும் தில்லை ஊரர் என்று சிவபெருமானையும், பிச்சி **மொய்த்த கன்னிங்கரிய...குழலி** என்று பார்வதியையும் குறிக்கின்றார். திருவள்ளுவர் மாவட்டத்திலுள்ள ஆரணியில் பெருமான் உமையொருபாகராக வீற்றிருப்பதால் **ஷெண்பக பிச்சாலீசுவரர்** என்று அழைக்கப்படுகிறார். ஷெண்பக மரமும் அதைச் சுற்றிப் படர்ந்துள்ள பிச்சிக்கொடியும் சிவபெருமானும் உமாதேவியும் இணைந்திருப்பதை நினைவூட்டுகிறது.

மலர்களும் மகாதேவனும்

சிவபெருமான் விருப்பு வெறுப்பு அற்றவர். அவர் உயர்ந்த நந்தவனங்களில் பூக்கும் நறுமண மலர்களை விரும்புவதைப் போலவே, சுடுகாட்டு மேடுகளில் பூக்கும் காசித்தும்பை, வெள்ளெருக்கு, முதலிய கடுமணமிக்க மலர்களையும் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறார். உலகிலுள்ள எந்த விதமான மலர்களைக் கொண்டு பூசித்தாலும் மகிழ்ந்து அருள்புரிகின்றார். அவர் சூடும் ஒவ்வொரு மலருக்கும் தனிச்சிறப்பு இருக்கிறது. இம்மலர்கள் பற்றியும் அவை சிவவழிபாட்டில் பெற்றுள்ள சிறப்புக்களையும் கண்டு மகிழலாம்.

தேவாரத்திலும் அதைத் தொடர்ந்தெழுந்த திருமுறை நூல்களிலும் அகத்தி, அலர், அலரி, ஆர் (ஆத்தி) இதழி (கொன்றை) எருக்கு, கமலம் (தாமரை) கரந்தை, கனகி(ஊமத்தை) (மத்தம்), குரா, கூவிளம், கைதை (தாழை) கோங்கு, கொன்றை, கோடல் (காந்தள்), செண்பகம், செருந்தி, ஞாழல், திலகம், தும்பை, நெய்தல், நொச்சி, பூளை, மகிழ், மா, மல்லிகை, மௌவல் முடப்புன்னை, முருக்கு, முல்லை, வன்னி, விளவு முதலிய மலர்கள் சிறப்புடன் பேசப்பட்டுள்ளன. இவ்வரிசையில் அதிக அளவு கூறப்பட்டுள்ள மலர் கொன்றையேயாகும். இதற்கு பொன்மலர், பொன்செறி கொன்றை, என நூற்றுக்கும் மேற்பட்ட அடைமொழிகள் அளித்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.


இவ்வரிசையில் ஊமத்தை, ஆத்தி, சிவகரந்தை, முதலியவை சடையில் சூடும் மலர்களாகக் கூறப்பட்டுள்ளன. சிலவகை மலர்கள் மாலையாகவும், சிலவகை மலர்கள் தொடையல்களாகவும், கூறப்பட்டுள்ளன.

கொன்றை, ஊமத்தை, வெள்ளெருக்கு, செங்கழுநீர், தும்பை, பவழமல்லிகை, ஷெண்பகம், முல்லை முதலான பன்னிரண்டு மலர்களைப் பற்றிய சிறு குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

"கொன்றை" வார் சடையன்

சிவபெருமான் விரும்பிச் சூடும் உன்னத மலரான கொன்றை பிரணவாகார புஷ்பம்(ஓங்கார மலர்) பொன்னங் கடுக்கை, பொன்னிதழ் எனப் பலவாறு அழைக்கப்படுகிறது.

பூத்துக் குலுங்கி நின்ற, கொன்றை, மரத்தைச் சிவபெருமானாகவே எண்ணி வழிபட்ட ஆனாயநாயனருக்குச் சிவபெருமான் முத்தியளித்ததைப் பெரியபுராணம் சிறப்புடன் பேசுகிறது. சிவபக்தியில் நிறைந்த சண்டேசுவரநாயனாருக்குச் சிவபெருமான் தனது சடையிலிருந்த கொன்றைமலர் மாலையை எடுத்து அவருடைய திருமுடியில் சூட்டிச் சண்டேசுவரபதம் அளித்ததையும் அந்த நூல் கூறுகிறது.



தேவாரத்திலும், அதைத் தொடர்ந்தெழுந்த திருமுறை நூல்களிலும் பக்தி இலக்கியங்களிலும் சிவபெருமான் கொன்றை வேணியன்,கொன்றைச் சடையான்,பொன்னங்கடுக்கைப்புரிசடையோன், இதழி வேணியன் எனப்பல இடங்களில் போற்றப்படுகிறார். தேவாரத்துள் அதிகமாகக் குறிக்கப்படும் சிவனுக்குரிய மலர் கொன்றையேயாகும்.

திருவதிகை, ஆக்கூர், திருத்துறையூர் பந்தணை நல்லூர் அச்சிறுபாக்கம், முதலான தலங்களில் கொன்றைமரம் தலமரமாக உள்ளது. இவை வசந்த காலத்தில் பொன்போன்ற பூக்களைச் சொரிந்து பேரழகுடன் திகழ்வது கண்கொள்ளக்காட்சியாகும். சிவபெருமான் கொன்றையை விரும்பிச் சூடுவதை, இழை வளர் நறுங்கொன்றை தயங்கு தொங்கலும், தாமமும் கண்ணியும்தாம் மகிழ்ந்தவர் என்றும், கடிகொள் கொன்றை



ஊமத்தம் பூ சூடிய சடையுடைய பெருமான்
நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

கூவிளமாலை காதல் செய்அடிகள் என்றும், கொன்றை யந்தண்ணலங்கல் உகந்த தலைவனார் என்றும் திரு முறைகளில் ஞானசம்பந்தர் குறிக்கின்றார். கொன்றை யில் புலிநகக் கொன்றை, மயிற்கொன்றை, சரக்கொன் றை, முதலிய பலவகைகள் உள்ளன. (விரிவைச் சிவ மஞ்சரி பக். 19-ல் காண்க)

கொன்றைமலரின் மகரந்தக் கேசரங்கள் "**ஓம்**"வடி வாக வளைந்து காட்சியளிக்கின்றன. இதையொட்டி இது ஓங்கார புஷ்பம் என்றழைக்கப்படுகிறது. வேதத் திற்கும், உலகிற்கும், ஆதாரமான ஓங்காரமாகத் தான் இருப்பதை உணர்த்தவே சிவபெருமான் ஓங்கார மல ரான கொன்றையைச் சூடுகின்றான் என்று உரையாசி ரியர்கள் கூறுகின்றனர்.

சிவபெருமானின் திருவுருவங்களை அமைக்கும் போது அவருடைய சடாமகுடத்தின் உச்சியிலிருந்து இரண்டு புறமும் கொன்றை மலர்ச்சரங்கள் தொங்கு வது போல் அமைக்க வேண்டுமென்று சிற்ப நூல்கள் கூறுகின்றன. சடையிலிருந்து தொங்கும் கொன்றை மலர்களைப் பள்ளித் தொங்கல் என்று அழைத்தனர். பொன், வெள்ளி, ஆகியவற்றால் சடாமகுடங்களை அமைத்த போதும் இப்பள்ளித் தொங்கல்களும் சேர்த்தே அமைக்கப்பட்டன. இராஜராஜசோழன் கட் டிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் இறைவ னுக்கு இருபதுக்கும் மேற்பட்ட ஜடாமகுடங்கள் செய் தளிக்கப்பட்டதைக் கல்வெட்டுக்கள் மூலம் அறிகி றோம். இம்மகுடங்களில் பள்ளித்தொங்கல்களும் சேர்த்தே அமைக்கப்பட்டிருந்ததைக் கல்வெட்டுக்கள் விரிவாகக் கூறுகின்றன.

ஊமத்தை - மதமத்தஞ் சடைமுடியான்

சிவபெருமானின்செஞ்சடையில் கொன்றைச் சரத் தைப் போல் நீங்காது பொருந்தியிருக்கும் மற்றொரு பூ **ஊமத்தம் பூ**வாகும். பல்லவர்கள் அமைத்துள்ள அனேக சிவவடிவங்களின் தலையில் பெரிய ஊமத் தம் பூவைக் காணலாம். இது மத்தம்,மதமத்தம் எனப் பலவாறு குறிக்கப்படுகிறது. வாசனையற்றது. நெடியு டன் கூடியது.

புண்ணியர்களின் எலும்புகள் புனித ஆற்றில் விழுந்து ஊமத்தம் பூக்களாகப் பூக்கும் என்று நம்பப் படுகிறது.

தென்னாட்டில் பெருமானுக்கு ஊமத்தம் பூக் களைச் சூட்டும் வழக்கமில்லை. வடநாட்டில் ஊமத்த மலர்களை மாலையாகக் கட்டிப் போடுவதுடன் அதன் காய்களைக் கோர்த்து வடமாக்கியும் அணிவிக்கின் றனர். தேவாரத்துள் அனேக இடங்களில் பெருமான் ஊமத்தை மலர்சூடி மகிழ்ந்தாடுவது குறிக்கப்பட் டுள்ளது. ஊமத்தையில் வெண்ஊமத்தை, கருஊமத் தை பொன் ஊமத்தை எனப்பலவகைகள் உள்ளன.

வெள்ளெருக்கஞ் சடையான்

சிவபெருமான் சூடும் மலர்களில் எருக்கும் ஒன் றாகும். எருக்கங் கண்ணிகளைப் பெருமான் சூடியிருப் பதால்வெள்ளெருக்கஞ்சடைமுடியான் என்று அழைக் கப்படுகிறான். தேவாரத்துள் வெள்ளெருக்கு சூடுவது பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. மங்கலக்குடி, சூரியனார் கோயில், ஓமாம்புலியூர் முதலிய தலங் களில் வெள்ளெருக்கு தலமரமாக உள்ளது.

எருக்கில் வெள்ளெருக்கு, நீலஎருக்கு,பொன் எருக்கு, எனப்பலவகைகள் உள்ளன. கம்பராமாயணத் தில் வெள்ளெருக்கஞ் சடைமுடியான் என்றும் திருப் புகழில் **"எருக்குமதி படைத்த சடை... இறைவன்"** என்றும் சிவபெருமான் புகழப்படுகிறார்.

ஊமத்தை, எருக்கு முதலியன காட்டில் வளர்வது போலவே பெருமானின் சடைக்காட்டிலும் வளர்ந்து மலர்ந்துள்ளன என்று இலக்கியங்கள் குறிக்கின்றன.

தாமரைச் சைவன்

பூவினுக்கு அருங்கலம் பொங்குதாமரை என்பது அப்பர் திருவாக்கு. பாரத தேசக் கலை வரலாற்றில் தாமரைமலர் தனியிடத்தைப் பெற்றுள்ளது. பாரதநாட்டில் வணங்கப்படும் அனைத்துத் தெய்வங்களும் தாமரை மலர்களோடு தொடர்பு கொண்டுள்ளன.

செல்வத்திற்கு அதிபதியான மகாலட்சுமி தாமரையில் வாசம் புரிவதால் கமலை என்றழைக்கப்படுகிறாள். கமலை பூசித்ததால் திருவாரூருக்குக் கமலை, கமலாலயம் என்னும் பெயர்கள் வழங்குகின்றன.

திருமால் தாமரையை ஏந்துகிறார். அவருடைய கொப்பூழிலிருந்து உண்டான தாமரையில் தோன்றியதால் பிரம்மதேவன் கமலயோனி என்றழைக்கப்படுகிறான். கல்விக் கடவுளான சரஸ்வதி வெண்தாமரை மலரில் வீற்றிருக்கின்றாள்.

சனாதனதர்மத்தில் கூறப்படும் தெய்வங்களைத் தவிர சமண தெய்வங்களான தீர்த்தங்கரர்களும், தண் தாமரையான், தாமரைச் சேவடியான், மலர்மேலான் எனப்பலவாறு அழைக்கப்படுகின்றனர்.

ஜைன புராணங்கள் ஆயிரம் இதழ் கொண்ட பொன் தாமரைமலர் மீது நான்கு விரற்கிடை உயரத்தில் தீர்த்தங்கரர்கள் வீற்றிருப்பதாகக் கூறுகின்றன. பௌத்த நூல்களும் ததாதகரான புத்தபிரான் தாமரையில் வீற்றிருப்பதாகக் கூறுகின்றன.

சிவபெருமான் சதாசிவமூர்த்தியாகக் கோலம் கொண்டு ஆகமங்களையும், வேதங்களையும், அருளும்போது பொன்தாமரை மலரில் வீற்றிருப்பதுடன் கரங்களில் செந்தாமரையையும் நீலத்தாமரையையும் ஏந்துகின்றார். இதையொட்டி அவர் தண் தாமரைச் சைவன் தாமரையான் என்றழைக்கப்படுகின்றார்.

தேவாரத்துள் அனேக இடங்களில் அவர் தாமரைச் சென்னியன், தாமரைச் சேவடியான், தாமரை மலர்க்கரத்தான் என்று குறிக்கப்பட்டுள்ளார்.

திருமால் தினமும் ஓராயிரம் தாமரைமலர்களைக் கொண்டு சிவபெருமானை அர்ச்சித்து அவர் அருளால் வலிய சக்ராயுதம் பெற்றார் என்பதைச் சிவ மகா புராணத்தாலும், திருமால்பேறு, திருவீழிமிழலை முதலிய தல வரலாறுகளாலும் அறிகிறோம். திருமால் சிவ பூசைக்குரிய மலர்களைப் பெறத் திருவீழிமிழலையில் பெரிய குளத்தை உருவாக்கினார் என்று திருவீழிமிழலைத் தலபுராணம் கூறுகிறது. திருவிழாவின் போது திருமால் அக்குளத்திற்குச் சென்று வருகிறார். இது



தடம் (குளம்) காணுதல் எனும் ஐதீக விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

❀ நண்டாங்கோயில் என்று அழைக்கப்படும் திருந்து தேவன் குடியில் இந்திரன் தினமும் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு பூசித்து வந்தான். சில நாட்களுக்குப்பிறகு தினமும்பூசைவேளையில் ஒரு பூ குறையத் தொடங்கியது. சோதித்துப் பார்த்தபோது ஒரு நண்டு பூவைக் கவர்ந்து சென்று சிவனை வழிபட்டு வருவது தெரிந்தது. அந்த நண்டைத் தண்டிக்க முயன்றபோது பெருமான் வெளிப்பட்டு இந்திரனுக்கும் நண்டுக்கும் அருள்புரிந்தான். நண்டு தாமரையால் பூசிப்பது இக்கோயிலில் சிற்பமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

தாமரையில் வெண்தாமரை, பொன்தாமரை, (மஞ்சள் தாமரை), நீலத் தாமரை என்ற பலவகைகள் உள்ளன. செந்தாமரையைக் கொண்டு திருமாலும் திருமகளும் பூசிக்கின்றனர். பிரமன் கலைமகள் முதலியோர் வெண்தாமரை மலராலும், இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் பொன் தாமரை மலர்களாலும், இராட்சதர்கள் நீலத்தாமரை மலர்களாலும் சிவபிரானைப் போற்றி வழிபடுகின்றனர்.

இந்திரன் தாமரை மலர்களைப் பெற பொற்றாமரைக் குளங்களை உருவாக்கினான். மதுரை திருநெல்வேலி, குடந்தை, பூந்துறை, திருச்செங்கோடு, முதலிய அனேக தலங்களில் இந்திரன் அமைத்த பொற்றாமரைக் குளங்கள் உள்ளன. மதுரை பொற்றாமரைக் குளத்தில் இப்போது உலோகத்தால் செய்யப்பட்டு பொன் முலாமிடப்பட்ட தாமரை மலர் மிதக்க விடப்பட்டுள்ளது.

தங்கத்தால் தாமரை மலர்களைச் செய்து சிவாலயங்களில் பெருமானை அர்ச்சனை புரியும் வழக்கம் இருந்தது. தஞ்சைப் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருவுடையருக்கு இராஜராஜசோழன் தங்கத் தாமரைப் பூக்களைச் செய்து அளித்ததைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

தங்கத்தால்செய்ததாமரை மலர்களை மாலையாகக் கோர்த்து இறைவனுக்குச் சூட்டும் வழக்கமும் இருந்தது. கழுகு மலையில் வீற்றிருக்கும் முருகனுக்கு ஜெகவீரராமகுமார எட்டப்பநாயக்கர் தங்கத்தால் செய்த தாமரைப் பூமாலை அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திண்டுக்கல் நகரையொட்டி அமைந்துள்ள மலை பத்மகிரி ஆகும். உலகப் படைப்பின் தொடக்கத்தில் இங்கு பத்ம குண்டமும் (தாமரைக்குளம்) அதன்மத்தியில் பெரிய தாமரைமொட்டும் தோன்றின. அகத்தியரின் வேண்டுகோளின்படிச் சிவபெருமான் அந்த மொட்டை ஆயிரம் இதழுள்ள மலராக மலரச் செய்து அதன்மீது வீற்றிருந்துக் காட்சியளித்தார். பிறகு மலரும் லிங்கமும் மலையாகி விட்டன. அன்று முதல் இம்மலை பத்மகிரி என்றழைக்கப்படுகிறது.

தாமரை மலர் திருவாகிய லட்சுமி விரும்பி உறையும் மலராதலின் திருமலர் என்று அழைக்கப்படுகிறது. காஞ்சீபுரம் மாவட்டத்திலுள்ள நடுவக்கரை முதலிய தலங்களில் சிவபெருமான் திருமலருடையார் எனும் பெயரில் வீற்றிருக்கின்றார்.

பார்வதிதேவி, தாமரை மலரைப் போன்றிருப்பதால் பங்கஜவல்லி, என்றும் அவளுடைய கண்கள் தாமரை போன்றிப்பதால் அம்புஜாட்சி என்றும் அழைக்கப்படுகிறாள். திருவாரூரில் அவள் கமலாம்பிகை எனும் பெயரில் வீற்றிருக்கின்றாள்.

சோமாஸ்கந்த மூர்த்தத்தில் சிவபார்வதியருக்கு இடையே முருகப்பெருமான் இரண்டு கரத்திலும் தாமரை மலர்களை ஏந்தியவாறு காட்சியளிக்கிறார்.

செங்கழுநீர்த் தாமத்தான்

தமிழகத்திற்கே உரிய மலர்களில் ஒன்று செங்கழுநீர்ப்பூ ஆகும். இது சுனைகளிலும் ஓடைகளிலும் மிகுதியாகப் பூக்கும். இம்மலர் மலரும் சுனைகள் அதிகமாக இருந்ததால் திருத்தணிகை மலைக்குச் செங்கழுநீர்வரை என்பது பெயராயிற்று. இம்மலையில் எழுந்தருளியிருக்கும் முருகனைச் செங்கழுநீர்வரையன் என்று அழைத்தனர். (இதுவே திரிந்து இந்நாளில் செங்கல்வராயன் என்று வழங்குகிறது) வட மொழியில் இம்மலரைக் கல்ஹாரபுஷ்பம், நீலோற்பலம், எனப்பலவாறு அழைக்கின்றனர். மருத நிலத்தில் ஆழம் குறைந்த ஓடைகளிலும் இம்மலர்கள் மிகுதியாக மலரும்.

சிவபெருமான் விரும்பிச் சூடும் மலர்களில் இதுவும் ஒன்று. திருவாரூர் தியாகராஜர் செங்கழுநீர்ப் பூக்களால் ஆன மாலைகளை அணிந்திருப்பதால் செங்கழுநீர்த் தாமத்தார் என்று அழைக்கப்படுகிறார். திருவாரூரில் செங்கழுநீர்ப் பூக்களை விளைவிப்பதற்காகப் பெரிய ஓடை இருக்கின்றது. திருவாரூரிலுள்ள கோயிலையும், குளத்தையும் போலவே இதுவும் ஐந்து வேலி பரப்புடையது. (ஏறத்தாழ 33 ஏக்கர் 30 சென்ட் பரப்புடையது).

காஞ்சீபுரம் ஏகாம்பரநாதருக்குச் செங்கழுநீர்ப் பூக்களால் சிறப்பு வழிபாடு செய்யப்பட்டதைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். காஞ்சீபுரத்தில் செங்கழுநீரோடை இருந்திருக்கிறது. அதையொட்டி அமைந்திருந்த வீதி, இந்நாளில் செங்கழுநீரோடை வீதி என்றழைக்கப்படுகிறது.

நீலமலர், நீலோற்பலம் எனப்படும் செங்கழுநீர் பூக்கள் சுகத்தையும், உலகஇன்பங்களையும் குறிக்கும் மலர் என்று திருமூலர் குறிக்கின்றார். திருவாரூரில் எழுந்தருளியுள்ள அம்பிகை நீலோற்பலாம்பிகை என்று அழைக்கப்படுகிறாள்.

செங்கழுநீர்ப்பூ உலக வாழ்வில் போகத்தைக் கொடுக்கும் மலராதலின் பள்ளியறை பூசைக்குரியதாக உள்ளது. குறுக்கை வீரட்டேசுவரர் ஆலயத்தில் இராஜாதிராஜசோழனின் (கி.பி.1150-1178) ஆறாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு அர்த்தசாம பூசையின் போது செங்கழு நீர்ப்பூக்கள் சாத்தியருள நிலமளிக்கப்பட்ட செய்திகளைக் கூறுகிறது.

திருநீடூர், நெல்வாயில், அரத்துறை, திருத்தணி முதலிய தலங்களில், செங்கழுநீர்ப் பொய்கைகள் (நீல மலர்ப் பொய்கை) தலதீர்த்தங்களாக உள்ளன. திருவெண்ணை (நெய்வெண்ணை) தலத்திலுள்ள அம்பிகைக்கு நீலமலர்க்கண்ணி என்பது பெயராகும்.

சிதம்பரத்திலுள்ள கல்வெட்டுக்கள், செங்கழுநீர்ப் பூக்களைப் பயிராக்க ஓடைகள் அளிக்கப்பெற்ற செய்திகளைக் குறிக்கின்றன. இவை ஓடைப்புறங்கள் என்று அழைக்கப்பட்டன.

❀ பொன்னால் செங்கழுநீர் பூக்களின் உருவங்களைச் செய்து கோர்த்த மாலைகளைப் பெருமானுக்கு

அணிவித்திருக்கின்றனர்.

❁ செங்கழுநீர்ப் பூக்கள் மலரும் ஓடைக் கரையில் இருந்த விநாயகர் செங்கழுநீர்ப் பிள்ளையார் என்று அழைக்கப்படுகிறார். மயிலாப்பூர், காஞ்சீபுரம், திருநெல்வேலி முதலிய தலங்களில் செங்கழுநீர்ப் பிள்ளையார் கோவில்கள் உள்ளன.

தும்பைக் கண்ணியான்

வெண்மையான தும்பைப் பூ, சிறுசெடி வகைப் பூவாகும். சிவபூசைக்குரிய பூக்களில் சிறந்ததான தும்பை மிகச் சிறிய பூவாக இருப்பதால் மற்ற பூக்களைப் போல் தொடுக்க முடியாது. நீண்ட நாரில் அடுக்கி மாலை போல் ஆக்குகின்றனர். தும்பைப் பூவைச் சூடுவதால் சிவபெருமான் தும்பைசூடி என்று அழைக்கப்படுகின்றார். திருக்கழிப்பாலையில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு வடுகன் நல்லூரடிகள் என்னும் விக்கிரம சோழப் பிரமராயன் கோயிலுக்கு தினமும் ஒரு நாழிகை அளவு தும்பை மலர் அளித்துவர ஐந்து காசுகள் கொடுத்த செய்தியைக் கூறுகிறது.

❁ காளஹஸ்த்தியில், தும்பை மலர்களைச் சரங்களாக்கித் தினமும் பெருமானுக்கு அணிவிக்கின்றனர்.

❁ பங்குனி உத்திரத்தில் நடைபெறும் காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர்-ஏலவார்பூங்குழலி திருமணத்திற்குப் பிறகு பெரிய அளவில் தும்பை மலர்களைக் கொண்டு புஷ்பாஞ்சலி செலுத்தப்படுகிறது.

காஞ்சீபுரத்தில் சிவவழிபாட்டிற்குத் தேவையான தும்பை மலர்களைப் பெற பெரிய நந்தவனம் இருந்தது. இதனைத் தும்பைவனம் என்றழைத்தனர். இதன் காவல் தெய்வமாக தும்பைவனத்தாள் எனும் மகாளியம்மன் வீற்றிருக்கின்றாள். இப்போது தும்பை வனம் அழிந்து விட்டது. அப்பெயரால் தும்பைவனத் தெருவும் காளிகோயிலும் எஞ்சியுள்ளன.

❁ தேவாரத்திலும் தொடர்ந்தெழுந்த திருமுறை நூல்களிலும் இறைவன் தும்பை மலர்களைச் சூடி மகிழ்வது சிறப்புடன் குறிக்கப்பட்டுள்ளது.

முல்லைவன நாதன்

தமிழர் வாழ்வோடு இணைந்த மலர்களில் முதன்மை பெற்றது முல்லை. இது மகிழ்ச்சியின் அடையாளமாக் விளங்குவது. இம்மலர் மலர்ந்தால் மகிழ்ச்சியான செயல்கள் நடைபெறும் என்று நம்பினர். இந்த நாளில் துளசியை வீட்டு முற்றத்தில் வளர்த்து வணங்குவதைப் போல அந்நாளில் மணமான பெண்கள் முல்லைக் கொடியை வீட்டு முற்றத்தில் வளர்ப்பதை நோன்பாகப் போற்றினர்.இலக்கியங்களில் இது காதல் முல்லை, மூதின் முல்லை, கற்பின் முல்லை, எனப் பலவாறு சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது. பராசக்தி தனது அந்தப்புர முற்றத்தில் காதல் முல்லை கொடியை வளர்த்ததையும், அது வளர்ந்து விண்ணளவு தழைத்து நின்றதையும், சந்திரனில் வசிக்கும் மான் அதன் துளிர்களைக் கண்டு மேயலாமா? வேண்டாமா? என்று தயங்கி நிற்பதையும் தக்கயாகப் பரணியிலுள்ள ஒருபாடல் காட்சியால் அறிகிறோம்.

பெண்கள் தாம் வளர்க்கும் முல்லைக் கொடி பூத்துக்குலுங்கி நின்றால் போர் அல்லது பொருள் தேடலுக்காகத் தம்மைவிட்டுப் பிரிந்து சென்ற தமது கணவர்(அல்லது காதலர்) நன்றாக இருக்கின்றார் என்றும் கொடிவாடி பூக்காமல் போனால் அவருக்குத் துன்பம் நேரிட்டுள்ளது என்றும் நம்பினர். அத்துன்பம் நீங்கி நன்மை அடைய இல்லுறை தெய்வங்களையும், மனம் விரும்பிய (இஷ்ட) தெய்வங்களையும் போற்றி வழிபட்டனர்.

சிவபெருமான் தன் காதலியான பராசக்தியுடன் இன்பமாக வாழும் திருப்பாசூர் முழுவதும் அம்பிகை வைத்த முல்லையைக் கொடி படர்ந்து அரும்பெடுத்து மலர்ந்திருப்பதைத் தேவாரத்துள் **" தம்காதலியும் தாமும் வாழும் ஊர்போலும் பைங்கால் முல்லை பல்லரும்பீனும் பாசூர் அடிகளே"** என்று பாடிப் பரவுகின்றனர். திருப்பாசூரில் உள்ள பெருமான் பாசூர் நாதர் என்றும் அம்பிகை தம்காதலி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இவ்வூரில் காதல் தெய்வமான சந்திரன் வழிபட்டு சந்திர தீர்த்ததை அமைத்ததுடன் மல்லிகை மலர்ப் பந்தல் இட்டு பெருமானை வழிபட்டான் என்றும் கூறப்படுகிறது.

வடதிருமுல்லைவாயில் தென்திருமுல்லைவாயில் என்ற இரண்டு பாடல் பெற்ற தலங்கள் உள்ளன.

திருக்கருகாவூரில் பெருமான் முல்லை வனநாதர் எனும் பெயரில் வீற்றிருக்கின்றார். இங்குள்ள லிங்கத் திருமேனியில் முல்லைக் கொடி படர்ந்த அடையாளத்தை இன்றும் காணலாம்.

பவழமல்லிகை

தேவலோகத்திலுள்ள மரங்களில் மிக உயர்ந்ததாகப் போற்றப்படும் பாரிஜாதமரம் பூவுலகிற்கு வந்து பவழமல்லிகை எனப்பெயர் பெற்றது.சிவந்த சிறு காம்பையும் தட்டையான ஐந்து வெள்ளை இதழ்

களையும் கொண்ட மென்மையான மலர். பின்னிரவில் மிகுந்த மணத்துடன் பூத்து அதிகாலையில் செடியிலிருந்து உதிர்ந்து விடும்.கிளைகளிலிருந்து பறிக்காமல் பெறப்படுவதால் கொய்யாமலர் என்றும் அழைக்கப்படுகிறது.

பாரிஜாத மரத்தின் கீழ் வீற்றிருப்பதால் குரங்கணில் முட்டத்துப் பெருமான் தேவாரத்தில் கொய்யா மலர் சூடி என்று அழைக்கப்படுகிறார். திருக்களர் எனும் தலத்திலுள்ள பெருமான் பாரிஜாதவனேசுவரர் என்றும் அம்பிகை இளங்கொம்பனாள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

மன்னார்குடிக்குத் தெற்கேயுள்ள திருமக்கோட்டை, நறையூர் சித்தீச்சரம் முதலிய தலங்களும் பாரிஜாத வனங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

செவ்வந்தித் தோடழகன்

ஜெவந்தி, சாமந்தி என்றழைக்கப்படும் செவ்வந்தி மலர்கள் சிவவழிபாட்டில் முக்கிய இடம் பெற்றுள்ளன.

செவ்வந்தீசுவரர் எனும் பெயரில் பல தலங்களில் பெருமான் வீற்றிருக்கின்றார். திருச்சி மலைக்கோட்டையில் வீற்றிருக்கும் தாயுமானவசுவாமிக்கு செவ்வந்தீசுவரர் என்ற பெயர் புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூர்த் தலபுராணம் செவ்வந்திப்புராணம் என்று அழைக்கப்படுகிறது. இவர் ஆதியில் கிழக்கு நோக்கி இருந்ததாகவும் பின்னாளில் உறையூர் மண் மாரிபொழிந்து அழிவதைக்காண விரும்பாமல் மேற்கு நோக்கித் திரும்பிக் கொண்டார் என்று கூறப்படுகிறது. இது செவ்வந்திப் பூவால் நிகழ்ந்தது என்று புராணம் கூறுகிறது.

ஒரு காலத்தில் சாரமா முனிவர் என்பவர் இந்தத் தலத்தில் ஒரு நந்தவனத்தை அமைத்து அதில் பலவகையான பூச்செடி கொடிகளை வளர்த்துவந்தார். அவர் ஒருசமயம் நாகலோகம் சென்று செவ்வந்தி மலர்ச் செடிகளைக் கொண்டு வந்து வளர்த்தார். அதில் பூத்த மலர்களால் பெருமானை அலங்கரித்து வழிபட்டு மகிழ்ந்திருந்தார். அப்பூவால் மகிழ்ந்ததால் பெருமானும் "செவ்வந்தி நாதர்" என்று அழைக்கப்பட்டார்.

அந்நாளில் உறையூரில் பராந்தக சோழன் என்பான் ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்கு இரண்டு மனைவியர். ஒரு நாள் பூவாணிகன் ஒருவன் முனிவரின் தோட்டத்திலிருந்து மலர்களைக் களவாடிப் பறித்துச் சென்று முதல் மனைவியிடம் கொடுத்தான். அவற்றைக் கண்டு மகிழ்ந்த அவள் தினமும் அது போன்று பூக்களைக் கொண்டு வந்து தருமாறு கூறினாள்: பூவணிகன் தினமும் பூக்களைக் களவாடிக் கொண்டு வந்து அவளிடம் அளித்தான். செய்தியை அறிந்த இளையவள் சிவபூசைக்கு உரிய மலர்களைக் களவாடுதல் குற்றமென்று கூறினாள். முத்தவளும் அரசனும் அவளுடைய சொற்களை அலட்சியம் செய்தனர்.

தினமும் பூக்கள் குறைவதைக் கண்ட முனிவர் மறைந்திருந்து, திருடவந்த பூவணிகனைக் கையும் களவுமாக பிடித்துஅரசனிடம் ஒப்படைத்து நீதி வழங்குமாறு முறையிட்டார். அரசன் சிவபூசைக்குரிய மலர்களை அரசி எடுத்துக் கொள்வது தவறல்ல என்று கூறி, கள்வனான பூவணிகனுக்கு ஆதரவாகப் பேசி, முனிவரை அலட்சியம் செய்தான்.

கோபம் கொண்ட முனிவர் இறைவனிடம் முறையிட்டு நீதியற்ற அரசன் ஆளும் உறையூரை மண் மழை பொழிவித்து அழிக்கும்படிக் கூறினார். முனிவனின் சாபத்தால் பெருங்காற்று வீசி மணல் திரண்டு உறையூரின் மீது பொழிந்து அதை அழித்தது. அரசனின் இரண்டாவது மனைவி சிவசிந்தனையுடன் இருந்ததால் காற்று அவளைத் தூக்கிச் சென்று காவிரியில் இட்டது. அவள் அந்நாளில் கருவுற்றிருந்தாள். அவள் பெற்றெடுத்த மகனே பின்னாளில் கரிகால்சோழன் என்று புகழ்பெற்றான். இத்தலத்திலுள்ள விநாயகரும் செவ்வந்திப்பிள்ளையார்என்றுஅழைக்கப்படுகிறார்.

"சாமந்தி" என்ற கிரேக்கச் சொல்லுக்குப் பொன் மலர் என்பது பொருளாகும். பெரும்பான்மையாக இப்பூமஞ்சள் நிறத்தில் பூக்கிறது. வெள்ளை சாமந்தி, நீல சாமந்தி, ரோஜா வண்ண சாமந்தி, என்ற பல வண்ண சாமந்திப் பூக்களும் உள்ளன. முன்னூறு வகையான பூக்கள் உள்ளன என்று தாவரநூலார் கூறுகின்றனர்.

திருவான்மியூர் தியாகராசப் பெருமானுக்குச் சாமந்திப் பட்டை எனப்படும் அணிகலன் உள்ளது. பொன்னால் சிறுசிறு சாமந்திப் பூக்கள் செய்யப்பட்டு வெல்வெட் துணியில் அடுக்கடுக்காக வைத்து தைக்கப்பட்டுள்ளது.


திருவாரூர்ப் பெருமானுக்குத் தோடும் பணிமாலையும் சாமந்தியால் தொடுத்து அணிவிக்கும் வழக்கம் இருக்கிறது. இதனால் பெருமான் செவ்வந்தித் தோடழகர் என்று அழைக்கப்படுகிறார். பின்னாளில் சோழமண்டலத்திலுள்ள அனைத்து தெய்வங்களுக்

குமே பணி மாலையும் செவ்வந்தித் தோடும் சூட்டும் வழக்கம் வந்து விட்டது.

ஷெண்பக அலங்காரர்

ஷெண்பகம் மிகுந்த வாசனை கொண்ட மலராகும். சிவபெருமான் ஷெண்பக மாலையைச் சூடுவதுடன் ஷெண்பக வனங்களில் மகிழ்வுடன் வீற்றிருக்கின்றான்.

பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான சிவபுரம் திருமுறைகளில் ஷெண்பக மலர்ப் பொழில் சிவபுரம் என்றும் கல்வெட்டுக்களில் ஷெண்பகராண்யம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் ஷெண்பகநாதராக வீற்றிருப்பதால் அம்பிகை ஷெண்பகவல்லி என்றும் விநாயகர் ஷெண்பகவிநாயகர் என்றும் பெயர் பெற்றுள்ளனர். வடதிருமுல்லை வாயில் ஷெண்பகப் பொழிலின் நடுவே இருந்ததால் ஷெண்பக ஆரண்யம், என்று அழைக்கப்படுகிறது.



சாரமா முனிவர் நந்தவனம் அமைத்துப் பராமரித்தல்-செவ்வந்தி மலர்களை பெருமானுக்கு சூட்டி மகிழ்தல்-பூவணிகன் நந்தவனத்திலிருந்து மலர்களைத் திருடுதல்-திருச்சி ஓவியம் படம் - உதவி சிவஸ்ரீ ஸ்ரீதரன், சென்னை

தென்தமிழ் நாட்டிலுள்ள அனேக தலங்களில் சுவாமி அம்பிகைக்கு ஷெண்பகநாதர், ஷெண்பக வல்லி எனும் பெயர்கள் வழங்குகின்றன. குற்றாலத்திற்கு ஷெண்பகாரண்யம் எனும் பெயரும் உண்டு. இதையொட்டி அத்தலத்தை ஷெண்பகக் குற்றாலம் என்றழைக்கின்றனர். இங்குள்ள வனத்திற்கும் அருவிக்கும் காவல் தேவியாக விளங்கும் காளி ஷெண்பகாதேவி என்று அழைக்கப்படுகிறாள்.

சிவாலயங்களில் பூசைக்கு வேண்டிய பூக்களைப் பெற ஷெண்பகத் தோட்டங்கள் பராமரிக்கப்பட்டு வந்தன. திருவிடைமருதூரில் மகாலிங்க சுவாமிக்கு நாள்தோறும் ஷெண்பகப்பூ சாத்தியருள திருவெண்காட்டுப்பிச்சன் என்பன் நிலமளித்த செய்தியை இக்கோயில் கல்வெட்டால் அறியலாம்.

பாண்டியமன்னர்கள் ஷெண்பகபாண்டியன் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டனர். இம்மண்டலத்தில் பார்வதி பெண்ணாக அவதாரம் செய்தபோது **ஷெண்பகவல்லி** என்ற பெயரைச் சூட்டினர்.

திருமலையராயன் பட்டினத்திலிருக்கும் தியாகேசருக்குச் ஷெண்பகத் தியாகர் என்ற பெயர் வழங்குகிறது.

தென்பாண்டி நாட்டில் வீற்றிருக்கும் கிராமிய குலதெய்வங்களில்**ஷெண்பகநாச்சியார்**தனிச் சிறப்பை பெற்றுள்ளாள். இவள் சிவன் ஆணைப்படி பூமிக்கு வந்துபழனியில் வீற்றிருந்தாள். பின்னர் மானவள நாட்டிற்குச் சென்று கோயில் கொண்டாளென்று நாட்டுப் புறப்பாடல் கூறுகிறது.

திருநெல்வேலியின் காவல் தெய்வமான பிட்டாபுரத்திக்கும் ஷெண்பகவல்லி எனும் பெயர் வழங்குகிறது.

ஷெண்பகப் பூவைப் போன்று பொற்பூக்களைச் செய்து பெருமானுக்கு அணிவிக்கும் வழக்கம் உள்ளது.

இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் நீரில் ஏலம், பச்சை, கற்பூரம், லவங்கம், ஆகியவற்றுடன் ஷெண்பக மொட்டுக்களையும் சேர்த்து அபிஷேகம் செய்ய வேண்டும் என்று பூஜாபத்தி நூல்கள் கூறுகின்றன. தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயக் கல்வெட்டு இதனை உறுதிப்படுத்துகிறது.

கொப்பூ

இறைவனின் அருள் வடிவமாக அளிக்கப்படும் பூக்களைக் காது மடல்களின் மீது வைத்துக் கொள்வது வழக்கம். மனித உடலில் வலதுகாது கங்கையின் இருப்பிடமாகும். எனவே புனிதமான பூக்களை காதில் வைத்துக் கொள்கின்றனர். பின்னாளில் காது மடலின் மேற்புறம் தங்கத்தால் சிறியமலர் வடிவத்தைச் செய்து அணிந்து கொள்ளும் வழக்கம் வந்தது. இதனைக் கொப்பூ, செவிப்பூ, எனப்பலவாறு அழைக்கின்றனர்.

இந்நாளில் தஞ்சை கலைக் கூடத்திலுள்ள அச்சிறுபாக்கம் இளங்கிளை அம்பிகை சிலையின் செவிமடலில் கொப்பு அணிவிப்பதற்குரிய சிறு துளை இடப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஷெண்பகப் பூ உற்சவம்



சிவபெருமான் உத்திரா பதியாராக (பைரவ கோலத்தில்) வலம் வரும் போது ஷெண்பக மாலையை விரும்பிச் சூடுகின்றார். அவர் பவனிவரும் வேளையில் எங்கும் ஷெண்பக மலரின் மணம் வீசுகிறது. இதை அவருடைய அருள் பெற்றவர்களால் மட்டுமே உணர முடியும். இதை உணர்த்தும் வரலாறு ஒன்று திருச்செங்காட்டங்குடியில் வழங்குகிறது.

பல்லவமன்னனிடம்படைத்தலைவனாகப் பொறுப்பேற்று வாதாபியை வென்று அதை தீக்கிரையாக்கிப் பெரும் வெற்றிவீரராக விளங்கியவர் பரஞ்சோதி ஆவார். பின்னாளில் இவர் சிவப்பணியில் ஈடுபட்டு சிறுத்தொண்டர் எனப்பெயர் பூண்டு அடியவர்களுக்கு அமுதூட்டும் பணியைச் செய்து வந்தார்.

ஒருசமயம் சிவபெருமான் ஒரு அடியாராக இவருடைய இல்லத்திற்கு எழுந்தருளினார். இவரிடம் இவரது ஒரே மகனைத் தமக்கு உணவாக்கித் தருமாறு கேட்டார். சிறுத்தொண்டரும் அவருடைய மனைவியும் அடியவர் விரும்பியபடியே தம்மகனான சீராளனை வெட்டிச் சமைத்து உணவு பரிமாறினர். அவர்களுடைய அன்பின் திறத்தைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான், உமாதேவி, கந்தன் உடனாய சோமாஸ்கந்தராகக் காட்சியளித்தார். அவர்களுக்கு ஆசிபுரிந்ததுடன் சீராளனை உயிர்ப்பித்துத் தந்தார். பின்னர் யாவரும் காண அவர்களைச் சிவலோகத்திற்கு அழைத்துச் சென்றார். அக்காட்சியைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர்.

காஞ்சீபுரத்திலிருந்த பல்லவ மன்னன் இச்செய்தியை அறிந்தான். பரிவாரங்களுடன் திருச்செங்காட்டாங்குடிக்கு வந்தான். சிவபெருமானை வணங்கித் தம் படைத் தலைவனுக்குக் காட்சியளித்ததைப் போலவே தமக்கும் காட்சியளித்து அருள்புரியமாறு மன்றாடி வேண்டினான்.

சிவபெருமான் விண்ணொலியாக அன்பனே! எம்மைக்காணும் பேறு உமக்கிலை. சிறுத்தொண்டன் சிவப்பேறு பெற்றதிலிருந்து இருபத்தியோராம் நாள் நாம் மீண்டும் திருச்செங்காட்டாங்குடி வீதிகளில் பவனி வருவோம். அவ்வேளையில் நாம்செல்லும் வழியெங்கும் ஷெண்பகப்பூ வாசனை மிகுதியாக வீசும். அவ்வேளையில் உமக்கு எமது கழல் ஒலியும் கேட்கும் என்றார். மன்னன் பக்தியுடன் திருச்செங்காட்டாங்குடியில் தங்கி வழிபட்டுச் செண்பகப் பூவின் மணத்தை நுகர்ந்ததுடன் கழல் ஒலியையும் கேட்டான் பெருமான் தமக்கு அருள்புரிந்ததை உணர்ந்து மகிழ்ந்தான். இதை நினைவூட்டும் வகையில் சித்திரைப்பரணி கழிந்த 21 ஆம் நாளில் திருச்செங்காட்டாங்குடியில் "ஷெண்பகப் பூ உற்சவம்" கொண்டாடப்படுகிறது.

சம்பங்கி

வாசனை மிக்க மலர்களில் சம்பங்கியும் ஒன்றாகும். இதில் செடி, கொடி,மரம் என பலவகைகள் உள்ளன. செடி சம்பங்கிப்பூ வெள்ளை நிறத்துடன் நீண்ட வடிவில் இருக்கும் பெரிய மாலைகளைக் கட்ட இந்தப் பூவே அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. கொடி சம்பங்கி பசுமைகலந்த மஞ்சள் நிறத்துடன் சிறிய பூரணகும்பத்தைப் போன்றிருக்கும். இதைக் குடசம்பங்கி என அழைக்கின்றனர். மிகுந்த வாசனையுடன் மாலையில் பூக்கும். இம்மலர்க் கொடிகளில் பாம்புகள் வசிக்கின்றன. கன்னிப் பெண்கள் அம்பிகைக்கு குடசம்பங்கி மலர்களைக் கோர்த்து மாலையாக அணிவித்து வந்தால் விரைவில் நல்ல கணவனை அடைவார்கள் என்பது நம்பிக்கை ஆகும்.

நந்தியாவட்டம்

வெண்ணிறத்தில் தட்டையான ஐந்து இதழ்களையும் நீண்ட காம்பையும் கொண்ட மலர் நந்தியாவர்த்தம், நந்தியாகிய சிவனுக்குரிய பூவாதலின் இப்பெயர் பெற்றது. தேவாரத்துள் இம்மலர் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அடுக்கு நந்தியாவட்டை என்ற மலர்வகையும் உள்ளது. சிவபூசையில் இதனை பயன்படுத்துகின்றனர். திருவையாற்றுத் தேவாரத்தில் பெருமான் நந்தியாவட்டை மலர்சூடுவது குறிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சிதம்பரத்தில் நந்தியாவர்த்த மலர்களைப் பெற நந்தவனம் வைத்து பராமரிக்கப்பட்டதைக் கல்வெட்டால் அறிகிறோம். பிரதோஷ காலத்தில் நந்தியம் பெருமானுக்கு இம்மலர்களை அணிவிப்பதால் கலைமகள் அருள் உண்டாகும்.

சிவவழிபாட்டில் மலர்கள், தளிர்கள், இலைகள்

சிவபெருமானை மலர்களாலும், தளிர்களாலும், இலைகளாலும் பூசிக்கின்றனர். மகாபுராணங்களிலும் பூஜாபத்தி நூல்களிலும் வழிபாட்டிற்குரிய மலர்கள், தளிர்கள், இலைகளைப் பற்றிய செய்திகள் உள்ளன. புஷ்பவிதி எனும் நூலில் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதர்ப்பூ, என்று நான்கு வகையாக மலர்களும் தளிர்களும் வகைப் படுத்தப் பட்டிருப்பதுடன் அவற்றுள் சிறந்தவற்றின் பெயர்களும் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து கீழே காணலாம்.

கோட்டுப்பூக்கள் (கிளைப்பூக்கள்)

மரம், செடிகள் ஆகியவற்றின் கிளைகளில் பூப்பவை கோட்டுப் பூக்களாகும். இவற்றில் நாற்பது வகையான மலர்கள் சிவ பூசைக்குரிய தென்று கூறப் பட்டுள்ளது. அவற்றின் பெயர்கள்.

1.வன்னி, 2.பலா, 3.எலுமிச்சை, 4.நாரத்தை, 5.கோங்கு, 6.மந்தாரை, 7.ஊமத்தை, 8.மாவிலங்கை, 9.நொச்சி, 10.அகில், 11.சந்தனம், 12.மகிழ், 13.மாதுளம், 14.மா, 15.அசோகு, 16.பாதிரி, 17.வெள்ளெருக்கு, 18.இலந்தை, 19பலாசு, 20.நுணா, 21.நறவம், 22.புன்னை, 23.விளா, 24.மருது, 25.கொன்றை, 26.நெல்லி, 27.குரவம், 28.செருந்தி, 29.பொன்னாவாரம், 30.கிளுவை, 31.குருந்தம், 32.வில்வம், 33.நாவல், 34.தாதகி(ஆத்தி), 35.கொளுஞ்சி (கிச்சிலி), 36.அலரி, 37.வெட்சி, 38.பவழமல்லிகை, 39.ஷெண்பகம், 40.ஞாழல் (புலிநகக் கொன்றை) ஆகியனவாகும்.

இவ்வரிசையிலுள்ள வன்னி, பலா, எலுமிச்சை, நொச்சி, விளா முதலியவற்றில் பூக்கள் இருந்தாலும் அவற்றின் இலைகளே பூசைக்குப் பயன்படுத்தப் படுகின்றன. புஷ்பவிதி நூல்களில் இலைகளும் மலர் களாகவே குறிக்கப்பட்டுள்ளன.

கொடிவகைப் பூக்கள்

படர்ந்து வளரும் கொடிகளில் மலரும் பூக்கள் கொடிப்பூக்கள் எனப்படுகின்றன. புஷ்பவிதி பன்னி ரண்டு வகையான கொடிமலர்களைச் சிறப்புடன் குறிக் கின்றது.

இவை. 1.காந்தள், 2.காட்டுமல்லி, 3.முல்லை, 4.மௌவல் (மல்லிகை), 5.வெற்றிலை, 6.தாளி(கூதாளி), 7.கருங்காக்கணம், 8.வெண்காக்கணம், 9.குருக்கத்தி, 10.இருவாட்சி, 11.கொகுடி, 12.பிச்சி (இவ்வரிசையில் உள்ள வெற்றிலை பூவைக் குறிக்காது இலையைக் குறிக்கும்.)

நீர்ப்பூக்கள்

நீரில் வளர்ந்துள்ள கொடிகளில் பூக்கும் மலர்கள் நீர்ப்பூக்கள் எனப்படுகின்றன. சிவபூசையில் பயன்படு த்தப்படும் ஏழுவகை நீர்ப்பூக்கள் :

1.செந்தாமரை, 2.பொற்றாமரை, 3.வெண்தாமரை, 4.நீலோற்பலம், 5.செவ்வோற்பலம், 6.வெள்ளாம்பல், 7.செவ்வாம்பல் என்பனவாகும்.

நிலப்பூக்கள் (புதர்ப்பூக்கள்)

நிலத்தில் குட்டையாக நெருக்கமாக வளரும் செடிகள் புதர்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற் றில் மலரும் பூக்கள் புதர்ப்பூக்கள், அல்லது நிலப்பூக் கள் எனப்படுகின்றன. புஷ்பவிதி பதினெட்டு வகை யான நிலப்பூக்களைக் குறிக்கிறது.

இவை 1.பட்டி (சுவர்ணபட்டி), 2.நாயுருவி, 3.பூளை, 4.பச்சை, 5.செவ்வந்தி, 6.தும்பை, 7.வெட்டிவேர், 8.மருக்கொழுந்து, 9.சிவகரந்தை, 10.விஷ்ணுகிரந்தி, 11.துளசி, 12.செங்கீரை (திருநீற்றுப்பச்சை), 13.ஊமத்தை, 14.செம்பரத்தை, 15.கண்டங்கத்திரி, 16.கொக்கு மந்தாரை, 17.அனிச்சம், 18.நந்தியாவர்த்தம் என்பனவாகும்.

புஷ்பவிதி மேலும், வாரநாட்களுக்குரிய பூக்கள், மாதந்தோறும் இட்டு வழிபட வேண்டிய சிறப்புமலர்கள், சிறப்புமிக்க கேதாரீசுவர விரத்தில் பயன்படுத்த வேண்டிய மலர்கள் ஆகியவற்றின் பெயர்களையும் குறித்துள்ளது. அவற்றைத் தொடர்ந்து காணலாம்

வாரப்பூக்கள்

ஞாயிறு முதல் சனிவரையுள்ள ஏழு நாட்களிலும் சிவபெருமானை அர்ச்சிப்பதற்கென்றே சிறப்புப்பெற்ற மலர்களும் தளிர்களும் உள்ளன. இவை வாரப்பூக்கள் என்றழைக்கப்படுகின்றன.

கிழமை	மலர்	இலை
ஞாயிறு	தாமரை	வில்வம்
திங்கள்	வெள்ளாம்பல்	துளசி
செவ்வாய்	செங்கழுநீர்	விளா

புதன்	- கயலாந்தகரை	- மாதுளை
வியாழன்	- குவளை	- நாயுருவி
வெள்ளி	- வெண்தாமரை	- நாவல்
சனி	- நீலோற்பலம்	- விஷ்ணுகிரந்தி

மாதபுஷ்பங்கள்

ஆண்டின் பன்னிரண்டு மாதங்களிலும் பன்னிரண்டு வகையான பூக்களைக் கொண்டு சிறப்பு வழிபாடு செய்கின்றனர். குறிப்பாக பௌர்ணமியன்று அம்மாதத்திற்குரிய மலர்களால் அர்ச்சித்து வழிபட ஆயிரம் மடங்கு நன்மைகிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதன்படி

சித்திரை	- முருக்கன்	ஐப்பசி	- தும்பை
வைகாசி	- புன்னை	கார்த்திகை	- கத்தரி
ஆனி	- வெள்ளெருக்கு	மார்கழி	- பட்டி
ஆடி	- அலரி	தை	- தாமரை
ஆவணி	- ஷெண்பகம்	மாசி	- நீலோற்பலம்
புரட்டாசி	- கொன்றை	பங்குனி	- மல்லிகை

ஆகியவற்றால் வழிபட வேண்டும்.

❀ **கிளைகளில் பூப்பதில் கொன்றையும், நீர்ப்பூக்களில் நீலோற்பலமும், நிலப்பூக்களில் தும்பையும், கொடிப்பூக்களில், தாளியும்** மிக உயர்ந்தவைகளாகப் போற்றப்படுகின்றன.

கேதாரீஸ்வர விரதத்தில் மலர் வழிபாடு

சிவவிரதங்களில் உயர்ந்தது கேதாரீஸ்வர விரதமாகும். தென்னகத்தில் இவ்விரதம் சிறப்பாக நோற்கப்பட்டு வருகிறது பலவகையான மலர்களைக் கொண்டு தினந்தோறும் அர்ச்சிக்கமுடியாதவர்கள் புரட்டாசி மாதம் வரும் கேதாரீசுவர விரதநாளில் இருபத்தியொரு வகையான இலைகள், தளிர்கள், மலர்களைக் கொண்டு, பூசிப்பர். இது ஆண்டு முழுவதும் ஆயிரக்கணக்கான மலர்களால் அர்ச்சித்த பலனைத் தருவதாகும். புஷ்பவிதியில் கேதாரீசுவரரை அர்ச்சிப்பதற்குரிய 21 வகையான மலர்கள் தளிர்கள், ஆகியவற்றின் பெயர்களைக் காணலாம். இவை

1. வில்வம்,	5. மாதுளை,	9. வன்னி,	13. மல்லி,	17. அலரி
2. மரு,	6. நொச்சி,	10. கத்திரி,	14. தும்பை,	18. விஷ்ணுகிரந்தி,
3. ஊமத்தை,	7. இலந்தை,	11. நெல்லி,	15. மருதம்	19. தேவதாரு,
4. மாவிலை,	8. கரந்தை,	12. ஷண்பகம்	16. மந்தாரம்,	20. அருகு,

21. எருக்கு என்பனவாகும்.

குற்றங்களை நீக்கிக் குணங்களை அருளும் மலர் வழிபாடு

சிவபெருமானுடைய பூஜைக்கு அனைத்து மலர்களுமே உரியதென்றாலும் குறிப்பிட்ட சில மலர்களைச் சாத்தி வழிபட்டால் அந்தச் சிவபூசை வியக்கத்தக்க பலன்களை அளிக்கிறது என்று பூஜாபத்தி நூல்கள் கூறுகின்றன. இதன்படி.

எள்ளுப்பூவால் செய்யும் பூசை பிரம்மகத்திதோஷத்தையும்; **கொன்றை** - தாய்தந்தையரைக் கொன்ற பாவத்தையும்; **வெள்ளெருக்கு** - பிறன் மனைவியை விழைந்த குற்றத்தையும்; **வில்வம்** - பொய்சொன்னதால்வந்த பழியையும்; **கோங்கம்** - கள்ளுண்டு மயங்கிச் செய்தபாவங்களையும்; **கத்திரி** - குஷ்டநோயையும்; **துளசி** - வறுமையால் செய்த பாவத்தையும்; **தும்பை** - பசுவைக் கொன்ற பாவத்தையும்; **பலாசு** - திருட்டால் விளைந்த பழி பாவத்தையும்; **அறுகம்புல்** - உடன் பிறந்தாரை வஞ்சித்ததால் உண்டான பழியையும்; **அசோகம்** - சிவலிங்கங்களை உடைத்ததால் உண்டான பாவத்தையும்; **நெல்லி** - கொடும் நோய்களால் விளையும் துன்பத்தையும்; **நீலோற்பலம்** - வாக்கினால் வந்த குற்றங்களையும் நீக்கும்.

மலர் வழிபாட்டால் வரும் பயன்

அருகம்புல் சூட்டி வழிபட மரணபயம் நீங்கி ஆயுள் விருத்தியாகும். சிவவழிபாட்டில் பயன்படுத்தும் போது **கருவூமத்தை** பிள்ளைப் பேற்றையும், **அகத்திப்பூ** புகழையும், **துளசி** எண்ணியதை எண்ணியப்படி நிறைவேற்றியும் **வெள்ளை ஊமத்தை** பகைவரை அழித்து சதா வெற்றியையும், **அலரி** நோய்களை நீக்கி வலிமையான உடலையும், **அதசி** திருமகள் திருமால் அருளையும் **மல்லிகை** அழகான மனைவியையும், **கோங்கு** ஆடை ஆபரணங்களையும், **மலைமல்லி** குறைவற்ற தான்ய சம்பத்தையும் கொடுக்கும் என்று பூஜாபத்தி நூல்கள் கூறுகின்றன.

பூக்களால் செய்யப்படும் வழிபாடு

பூக்களால் செய்யப்படுவதால் வழிபாட்டிற்கே பூசனை என்பது பெயராயிற்று. ஆலயங்களில் பூக்களைத் தூவி அர்ச்சனை புரிவது மட்டுமின்றி பூக்களைக்கட்டித் தோரணங்களாகவும், பந்தல்களாகவும், அமைக்கின்றனர். ஆலயங்களில் பூக்களைக் கொண்டு செய்யப்படும் புஷ்பஅலங்காரம், புஷ்பாஞ்சலி புஷ்போதகம் முதலிய பலவிதமான வழிபாட்டுச் செய்திகள் இப்பகுதியில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

புஷ்பாஞ்சலி

இரண்டு கைகளிலும் மலர்களை எடுத்துக் கொண்டு பிரார்த்தனைகளைக் கூறி இறைவன் மீது அவற்றைத் தூவிப் போற்றி வழிபடுவதே புஷ்பாஞ்சலியாகும். அன்பர்கள் இப்படி மலர்களைத் தூவி வழிபடுவதை நீண்டகாலமாகப் போற்றி வருகின்றனர். இதனைப் பூச்சொரியல் எனவும் அழைப்பர். இதற்கென கூடைகூடையாக வண்ண வண்ண மலர்களைப் பயன்படுத்துகின்றனர்.

பூக்கள் அதிக அளவில் மலரும் காலமான வசந்த காலத்தில் பூச்சொரித்தல் விழா அனேக திருத்தலங்களில் கொண்டாடப்படுகிறது.

திருவாரூரில் தியாகராசப் பெருமானுக்குச் செய்யப்படும் முசுகுந்தார்ச்சனை பெரிய புஷ்பாஞ்சலியாகும். இதில் பலவகையான மலர்கள் கூடைகூடையாக அர்ச்சனை செய்யப்படுகின்றன.

ஆடிப் பூரத்தன்று திருக்கடவூரில் அன்னை அபிராமி சந்நிதியில் மலர்ப்பந்தலிட்டு புஷ்பாஞ்சலி சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. அபிராமி அந்தாதியில் **"விரவும் புதுமலர்களை"** இட்டு அன்னையை வழிபடுவர்கள் இந்திரபோகம் பெற்றுச் சிறப்புடன் வாழ்வார்கள் என்று பட்டர்பிரான் குறித்துள்ளார்.

கிராமிய தெய்வங்களான மாரியம்மன், காளி, முதலிய தெய்வங்களுக்கும் பூச்சொரியல் விழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

புஷ்பப் பந்தல் (மலர்ப்பந்தல்)

பல வண்ண மலர்களால் தொடுத்துக் கட்டிய பூச் சரங்களைக் கொண்டு வேயப்பட்ட விதானம் புஷ்பப் பந்தல் அல்லது பூப்பந்தல் ஆகும்.


சோழமண்டலத்தில் சட்டங்களில் நீண்ட கயிறுகளை அரைவட்டக் கூரைப்போல் கட்டி அதன் மீது பூச்சரங்களைப் பரப்பி புஷ்பப் பந்தல் அமைக்கின்றனர். சிறப்பு நாட்களில் சுவாமி அம்பிகை சந்நிதிகளின் முன்னுள்ள மண்டபத்தில் புஷ்பப்பந்தல் அமைக்கப்படுகிறது. இதன் பக்கவாட்டில் மலர்ச் சரங்களையும் மாலைகளையும் கட்டித் தொங்கவிட்டு மேலும் அழகுபடுத்துகின்றனர்.

திருவாரூரில் தியாகராசப் பெருமானுக்கு நடத்தப்படும் முசுகுந்தார்ச்சனையின் போதும் திருக்கடையூரில் அபிராமி சந்நிதியில் ஆடிப்பூரப் புஷ்பாஞ்சலி விழாவின் போதும் மகாமண்டடத்தில் அழகிய புஷ்பப்பந்தல்கள் அமைக்கப்படுகின்றன.

பூவட்டக்குடை

சிவபெருமானுக்கு நிழல் அளிக்க அன்பர்கள் குடைபிடிக்கின்றனர். இவை பட்டுக் குடை, முத்துக் குடை, பூச் சக்கரக் குடை எனப்பலவகைப்படுகின்றன. ஆதியில் பூக்களைத் தொடுத்து வட்டமாக அடுக்கி குடையாக்கினர். இதுவே பூச்சக்கரக் குடையாகும். இந்நாளில் குடைகள் வெள்ளியாலும் தங்கத்தாலும் செய்யப்பட்டப் போதிலும் அதில் கண்ணைக் கவரும் வகையில் பூவேலைப்பாடுகள் அமைக்கப்படுகின்றன.

பழங்காலத்தில் அரசன் சிறந்தவர்களுக்கு அளித்த விருதுகளில் பூச்சக்கரக்குடையும் ஒன்றாகும்.



புஷ்பநாக ஊஞ்சலில் அருள்மிகு பரத்வாஜேசுவரர்
புலியூர், கோடம்பாக்கம், சென்னை
படம் உதவி : சிவஸ்ரீ. பாலச்சந்திர சிவாசாரியார் (சதீஷ்)

மலர் விமானம், புஷ்பக விமானம்

சிவபெருமான் வீதியுலா செல்வதற்குப் பல வகை யான ஊர்திகள் உள்ளன. இவற்றில் இந்திர விமானம், பவழக்கால், சப்பரம், கந்தர்வ விமானம், முதலியன குறிப்பிடத்தக்கனவாகும். இந்த வரிசையில் புஷ்பக விமானம் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இது பல வகையான மலர்களால் ஆக்கப்பட்டதாகும்.

புஷ்பப் பல்லக்கு

நீண்ட பல்லக்கின் மீது வாழை மட்டைகளைக் கட்டி அதில் பூக்களை அடுக்கடுக்காகக் குத்தி அமைப்பது புஷ்பப் பல்லக்காகும். இதில் அழகுக் காக ஆப்பிள், திராட்சை, முதலிய பழங்களையும் சரஞ்சரமாகக் கோர்த்து தொங்க விடுவர். இதில் சுவாமி யும் அம்பிகையும் எதிர்எதிராக அமர்ந்தவாறு உலா வருகின்றனர். பெருந்திருவிழாவின் இறுதிநாளில் புஷ்பப்பல்லக்கில் சுவாமியை அம்பிகையுடன் வைத்து ஊர்வலம் நடத்துகின்றனர்.

புஷ்ப வாகனம்

பூக்களில் சிறந்தது தாமரைப் பூவாகும். சிவபெரு மான் வீற்றிருக்கும் பஞ்சாசனத்தில் ஐந்தாவதாக கமலாசனம் அமைந்துள்ளது. இதையொட்டி ஆலயங் களில் கமலவாகனம் செய்யப்பட்டுள்ளது. இதைச் சுற்றிலும் அஷ்டநாகங்கள், அஷ்டபூதங்கள் ஆகிய வற்றை அமைத்துள்ளனர். இதனைப் புஷ்பவாகனம் என்றும் கூறுவர்.

திருச்செங்காட்டங்குடியில்உத்திராபதியார் பவனி வர வெள்ளியால் செய்யப்பட்ட பெரிய கமலவாகனம் உள்ளது. பல ஆலயங்களில் மரத்தால் செய்து வண் ணம் தீட்டப்பட்டு பொலிவுடன் விளங்கும் கமலவாக னத்தைக் காணலாம்.

குடமுழுக்கு முதலான சிறப்பு வழிபாட்டுக்குரிய வேள்விச் சாலைகளில் அம்பிகைக்குரிய மேடையை கமல வடிவில் அமைக்கின்றனர். இதில் மேடையின் மீது மேருப்பிரதஸ்தாரமாக ஸ்ரீ சக்கரத்தை அமைத்து அதன் பிந்துவிலிருந்து ஒரு தாமரைமலர் மலர்ந்து இருப்பது போல் அமைக்கப்படுகிறது.

புஷ்பநாக ஊஞ்சல் மலர்ப்பாம்பு ஊசல்

வாசமுள்ள மலர்களை நாகங்கள் விரும்புகின் றன. தாழை,சம்பங்கி,முதலியமலர்ச் செடி, கொடிகளின் கீழ் நாகங்கள் உறைகின்றன. இயற்கையில் ஒரு பூவே நாகலிங்கவடிவில் இருக்கிறது. ஆலயங்களில் புஷ் பங்களைக் கொண்டு நாகவாகனம் போல்செய்து அதன் மத்தியில் பெருமானை அமர்த்துகின்றனர். நாகங்கள் மூச்சுவிடுவதால் அதன் உடல் விம்மித் தணிகிறது. இந்தத் தொடர் விம்மித்தணியும் நிகழ்ச்சி ஊஞ்சலாடுவது போல் இருக்கின்றது.

இதையொட்டிபெருமானை புஷ்பநாக ஊஞ்சலில் வைத்து முன்னும் பின்னும் ஆட்டி மகிழ்கின்றனர். இதனை புஷ்ப ஊஞ்சல் என்றும் அழைக்கின்றனர். பெருந்திருவிழாவின் இறுதிநாளில் புஷ்பநாக ஊஞ் சலில் பெருமானை அமர்த்திச் சிறப்புக்களைச் செய்து விழா கொண்டாடுகின்றனர்.

புஷ்பப்பாவடை - பூவாடை

சிவாலயங்களில் அம்பிகைக்குப் பூக்களைக் கொண்டு தைக்கப்பட்ட பாவாடையை அணிவிக்கின் றனர். பலவண்ண பூக்களை கண்ணைக் கவரும் விதத் தில் தொடுத்தும் தைத்தும் உருவாக்கப்படும் இந்த புஷ்பப் பாவாடை மிகுந்த நறுமணத்துடன் கண்ணைக்

மந்திரபுஷ்பம்

ஆலயங்களில் நடைபெறும் தீபாராதனையின் முடிவில் வேதோக்த மந்திரபுஷ்பம் எனப்படும் மந்திரம் ஓதப்படு கிறது. யோபாம் புஷ்பம் என்று தொடங்கும் இம்மந்திரம் யஜுர் வேதத்தின் ஒரு பகுதியான தைத்ரீய ஆரண்யகத்தில் இடம் பெற்றுள்ளது. இதிலுள்ள முதல் மந்திரத்தின் முன் பகுதி தண்ணீரின் புஷ்பத்தை யார் அறிந்துள்ளாரோ அவர் மலர்களை உடையவராகவும், பசு முதலான மிருகங்களை உடையவராகவும், நல்ல சந்நிதிகளை உடையவராகவும் ஆகிறார் என்றும் பின்பகுதி சந்திரனே தண்ணீரின் புஷ்பமாக இருக்கிறான் என்றும் அவனை அறிந்தவர் மேலே குறித்த அனைத்தையும் அடைகிறார் என்றும் கூறுகிறது. தொடர்ந்து அக்னி, காற்று, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மேகம், மழைக்காலம் ஆகியவற்றுக்குத் தண்ணீரே, ஆதாரமாக இருக்கிறதென்றும் இவை ஒவ்வொன்றும் தண்ணீருக்கு ஆதாரமாக இருக்கிறதென்றும் ஏழுமந்திரங்களால் கூறப்பட்டு இதை யார் அறிகிறானோ அவன் தன்னில் நிலைபெற்றிருக்கிறான் என்று திரும்பத்திரும்பக் கூறப்பட்டுள்ளது. ஒன்பதாவது மந்திரத்தில் தண்ணீரில் உள்ள ஓடத்தை யார் அறிகிறானோ அவன் நிலைபெற்றிருக்கிறான் என்று கூறப்பட்டுள்ளது. பத்தாவது மந்திரம் ராஜாதிராஜனான குபேரனைப் போற்றுகிறது. ராஜாதிராஜ என்று தொடங்கும் இந்த மந்திரத்தைக் கூறி தீபாராதனை செய்யப்படுகிறது. இது அனைத்து பூஜைகளிலும் இறுதியில் கூறப்படும் முதன்மை மந்திரமாக உள்ளது.

★ சிதம்பரத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு தினமும் மந்திரபுஷ்பம் ஓதுவதற்கு அளிக்கப்பட்ட நிபந்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

கவர்வதாகவும் உள்ளது. புஷ்பப் பாவாடையின் போது மலர்களால் தொடுக்கப்பட்டக் கிரீடத்தை அணிவிப் பதும் வழக்கமாகும்.

புஷ்பபலி

இறைவன் சந்நிதிக்கு முன்பாக பலவண்ண பூக்களைக் கொண்டு வட்டத்துக்குள் வட்டமான அடுக்குகளாகக் கலைநயத்துடன் அமைக்கப்படும் பூக்கோலங்கள் புஷ்ப பலி என்று அழைக்கப்படுகின் றன. ஐப்பசி மாத ஓண நாளில் சிவாலயங்களில் புஷ்ப பலியாக பூக்கோலங்களைப் போட்டு அழகுபடுத்து வது மிகுந்த புண்ணியத்தைத் தருவதாகும்

கேரள மாநிலத்தில் கொண்டாடப்படும் ஓணம் பண்டிகையில் வீடுகளில் அமைக்கப்படும் பூக்கோலங் கள் யாவும் புஷ்ப பலிகளே ஆகும். இதன் நடுவில் தெய்வம் எழுந்தருளி அருள்பாலிப்பதைக் குறிக்கும் வகையில் பெரிய நிலை விளக்குகளை ஏற்றி வைக்கின்றனர்.

பண்டைய நாளில் புஷ்பபலி எனப்படும் பூப்பலி செய்தல் தனிச்சிறப்புடன் விளங்கியதைச் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன.

புஷ்போதகம்

பூக்களைத் தண்ணீரில் இட்டு நீரும் மலரும் இறைவன் திருமுடியில் விழுமாறு திருமுழுக்காட்டு வது புஷ்போதகம் ஆகும். (புஷ்பம்-பூ; உதகம்-தண்ணீர்) இறைவன் முன்பாக சுழற்றிக் காட்டப்படும் தீபவரிசைகள் தூப வரிசைகள் ஆகியவற்றின் மீதும் நீரில் தோய்த்த மலர்களை இட்டு மந்திரம் ஓதிய பின் னரே ஆராதனை செய்கின்றனர்.

பூவல்லி நோன்பு

திருவிழா நாட்களில் இறைவனுக்குப் பூமாலை களைச் சூட்டி அலங்கரித்து வணங்குகின்றோம். தவிர பூக்களோடு தொடர்புடைய பல விழாக்களையும் கொண்டாடுகிறோம்.

நந்தவனத்தின் நடுவில் பெருமானை எழுந்தருளி வைத்துப் பூவணி விழாக்கள் கொண்டாடப்படுகின் றன. இந்நாளில் அன்பர்கள் பூக்களைப் பறித்து மாலை யாக்கி இறைவனுக்குச் சூட்டி மகிழ்கின்றனர்.

காணும்பொங்கலன்று பெண்கள் கூட்டமாக ஆற்றங்கரைகளிலும், மலைச்சாரல்களிலும் அமைந் துள்ள பூஞ்சோலைகளுக்குச் சென்று பூக்களைப் பறித்துப் பூசை செய்வதுடன் தாங்களும் சூடிமகிழ்கின் றனர். இதனைக் கொங்கு மாவட்டத்தில் பூ நோன்பி என்று அழைக்கின்றனர். இது மனத்திற்கு இதத்தையும் புத்துணர்ச்சியையும் கொடுக்கும் விழாவாகக் கொண் டாடப்படுகிறது.

பெண்கள் பாடல்களைப் பாடிக் கொண்டே பூப் பறித்து மகிழ்வதைக்கண்டு மாணிக்கவாசகர் பாடிய பாடலே திருப்பூவல்லி என்பதாகும். இதில் பெண்கள் சிவபெருமானின் வீரச்செயல்களையும், அவர் அன்பர் களுக்கு அருளும் திறத்தையும் வியந்துபாடி தமது தோழிகளைப் பூப்பறிக்க வருமாறு அழைக்கின்றனர். இது தில்லையம்பதியில் அருளப்பட்ட நூலாகும். இதில் மதுரை காஞ்சி, உத்தர கோசமங்கை முதலிய பல தலங்களும் குறிக்கப்பட்டுள்ளன.



பல்வகை மாலைகள்

வண்ணவண்ணப் பூக்களைக் கண்ணைக் கவரும் வகையில் பல்வேறு முறைகளில் கோர்த்தும் கட்டியும் தொடுத்தும் இறைவனுக்குச் சூட்டுகின்றனர். பூக்களைக் கோர்த்து அமைப்பது கோவை என்றும் தொடுத்து அமைப்பது தொடையல் என்றும் வண்ணங்கள் மாறிமாறி வரும்படித் தெரிந்தமைப்பது தெரியல் என்றும் அழைக்கப்பட்டன. தலையில் அணியும் மாலைச் சரங்கள் இண்டைகளாகும். மார்பில் அணிவன மாலைகளாகும். தோளிலும் மணிக்கட்டிலும் அணிவன கண்ணிகளாகும். கால்களில் அணிவன பிணையல்களாகும். இவை தவிர தாழ்வடங்கள் கண்ணி, சுருள், அலங்கல், அடுக்கல் எனப் பலவகையாகப் பூக்களைத் தொடுத்துப் பயன்படுத்தினர்.

கண்மலர்கள்

தெய்வங்களின் கரங்கள், திருவடிகள் முதலிய வற்றைத் தாமரை மலர்களாகப் போற்றுவதைப் போல வே திருக்கண்களையும் தாமரை, குவளை முதலிய மலர்களாகக் கூறுவர். அம்பிகையைக் குவளைக் கண்ணி என்று திருவாசகம் கூறுகிறது. திருமால் பத் மாட்சன், தாமரைக்கண்ணன் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகிறார். ஒரு சமயம் வலிய சக்ரயுதத் தைப் பெறவேண்டித் திருமால் தினமும் ஓராயிரம் தாமரை மலர்களைக் கொண்டு சிவார்ச்சனை புரிந்து வந்தார். ஒருநாள் திருவிளையாடல் புரியக் கருதிய சிவபெருமான் அதில் ஒரு மலரை மறைத்தார்.

திருமால் பூசையின் முடிவில் ஒரு மலர் குறையக் கண்டார். உடனே தனது மலர்போன்ற கண்ணை இடந்து ஆயிரமாவது மலராக இறைவன் திருவடியில் இட்டு வழிபட்டார். சிவபெருமான் அவர்முன்னே தோன்றி சக்ராயுத்தை அளித்து அருள்புரிந்தார்.

வேடன் கண்ணப்பனும் இறைவன் கண்ணில் இரத்தம் வழியக் கண்டு தன் மலர்போன்ற கண்ணைப் பெயர்த்து அவருக்கு அளித்து மகிழ்ந்தான். லிங்கத்தி லிருந்து வெளிப்பட்டு பெருமான் அவனுக்கு அருள் புரிந்தார்.

தேவாரத்தில், திருமால் மலர்போன்ற கண்ணைப் பறித்து, சிவபூசை செய்ததை (திரு) மாலாயிரம் கொண்டு **மலர்க் கண்ணிட ஆழி... ஈந்தான்.** என்றும் கண்ணப்பர் மலரொத்த கண்ணை இடந்து சிவனுக்கு அளித்ததை **மலர் ஆகு நயனம் காய் கணையினால் இடந்து ஈச னடி கூடுகாளத்தி மலையே** என்றும் குறிக்கப்பட்டுள் ளது.

இந்த ஒப்பற்ற செய்கையால் திருமாலுக்குத் **தாமரைக் கண்ணன்** (பத்மாட்சன்) என்ற பெயரையும் வேடனான திண்ணனுக்குக் **கண்ணப்பன்** என்று பெயரையும் சிவபெருமான் சூட்டினார்.

இறையுருவங்களின் திருமுகத்தில் வெள்ளியால் கண்களைச் செய்து பொருத்தும் வழக்கம் உள்ளது. கண்ணோயால் வருந்துபவர்கள் பொன், வெள்ளி முதலிய உலோகத் தகடுகளில் கண்போன்ற வடிவங் களைச் செய்து காணிக்கையாகச் செலுத்துகின்றனர். இவை "**கண்மலர்கள்**" என்று அழைக்கப்படுகின்றன.

நாகலிங்கப்பூ



நாகலிங்கப் பூ இயற்கையின் அதிசயங்களில் ஒன்றாகும். இதில் விரிந்த கிண்ணம் போன்ற ஐந்து இதழ்கள் உள்ளன. அதன் நடுவில் வட்டமான தட்டு போன்ற அமைப்பில் ஏராளமான மகரந்தக் கேசரங்கள் மலர்ப்படுக்கை போல் அமைந்துள்ளன. நடுவிலுள்ள விதை உச்சியில் முடியுடன் கூடிய அழகிய சிவலிங்கம் போல் உள்ளது ஒரு பக்கமாக உள்ள மகரந்தக் கேசரங்கள் திரண்டு ஆயிரம் தலைகளைக் கொண்ட ஆதிசேடனுடையப் படம் போல் வளைந்து விதையாகிய சிவலிங்கத்தை மூடியுள்ளன. நன்கு மலர்ந்த மலர்கள் நாகாபரணத்துடன் கூடிய சிவலிங்க மூர்த்தியாகவே காட்சியளிகின்றன. அதனால் அம்மலரை நாகலிங்கப்பூ என்று அழைக்கின்றனர். பல தலங்களில் நாகலிங்கமரம் தலமரமாக உள்ளது. இம்மலரையே சிவலிங்கமாக வைத்தும் அன்பர்கள் வழிபடுகின்றனர். பொன் வண்ணமஞ்சள், செந்தீ, இளம்சிவப்பு ஆகிய பல வண்ணங்களின் கலவையாக விளங்கும் இம்மலர் அன்பர்களால் சிறப்புடன் போற்றப்படுகிறது.

பூக்குடலைகள்

பூக்கள் மென்மையானவை, அவை வாடாதிருக்க ஈரப்பதமும், காற்றும் அவசியம் எனவே அவற்றை உலோகப்பாத்திரங்களிலோ மட்பாண்டங்களிலோ சேகரித்து வைக்க முடியாது. இவற்றைச் சேகரிப்பதற்கென தென்னை ஒலையால் முடையப்பட்ட நீள்வடிவமான கூடைகளை வைத்துள்ளனர். இவை தோளில் மாட்டிக் கொண்டு செல்ல வசதியாக இருக்கின்றன. காற்று புகுந்து செல்லும் வகையில் இடைவெளிகளைக் கொண்டுள்ளதால் ஈரப்பதத்தைக் காப்பதாகவும் உள்ளது. இவற்றைப் பூக்குடலைகள் என்று அழைக்கின்றனர். பனை ஓலைகளைக் கொண்டும் பூக்குடலைகளைச் செய்கின்றனர். வடமொழியில் இது பிடகம் என்று அழைக்கப்படும், ஊர்களுக்கு அருகில் இருந்த பெரிய மலர்சோலைகளை மலர்நிறைந்த கூடைகள் எனப் பொருள்படும் வகையில் பூம்பிடாகைகள் என்று அழைத்தனர். இவ்வகையில் தென்னகம் எங்கும் பிடாகை என்னும் பெயர்களில் பல ஊர்கள் இருக்கின்றன.

புஷ்ப கந்தர்வர்கள்





வானவர்களில் ஒரு சாரர் கந்தர்வர்கள் ஆவர். நீண்ட சிறகுகளைக் கொண்ட இவர்கள் விண்ணில் பறந்து செல்பவர்கள். கற்பக மலர்கள் நிரம்பிய கூடைகளை ஏந்தியுள்ள இவர்கள் உலகில் அதிசயம் நடக்குமிடங்களுக்குச் சென்று அங்கே மலர் மழைபொழிந்து தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர். அவ்வேளையில் கின்னரர்கள் தேவ வாத்யங்களை முழக்குகின்றனர்.

இதையொட்டி சுவாமி படங்களில் சுவாமிக்கு மேலாக பூமாலை ஏந்தியவாறோ பூக்கூடைகளிலிருந்து மலர்களைக்கொட்டும் வகையிலோ உள்ள கந்தர்வர்களை அமைக்கின்றனர். திருமணம் சுபமான நிகழ்ச்சியாதலின் திருமண அழைப்பிதழ்களில் மாலையேந்தி விண்ணில் பறக்கும் கந்தர்வர்களின் உருவங்களை முகப்பில், இரு பக்கங்களிலும் அச்சிடுகின்றனர்.

சென்னையிலுள்ள பெரிய ஆலயங்களில் நடைபெறும் திருவிழாவின்போது வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள பந்தல்களில் சுவாமி எழுந்தருள்வார். பந்தலில் கட்டப்பட்டுள்ள கந்தர்வர்ப் பொம்மைகளை நீண்ட கயிற்றால் முன்னும் பின்னும் பறப்பது போல் ஆட்டுவதுடன். அது ஆடிக் கொண்டே வந்து கையிலிருக்கும் பூக்கூடையிலுள்ள மலர்களை இறைவன் மீது தூவும்படிச் செய்வர். கந்தர்வர்ப் பொம்மைகள் பறந்து வந்து மலர்களைக் கொட்டுவது பார்ப்பதற்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்குவதால், இதைப் பார்த்து ரசிப்பதற்கென்றே திரளான மக்கள் சுவாமியைச் சுற்றிக் கூடிநிற்பர்.

திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் ஆலயத்தில் ஆமை மண்டபம் என்னும் சிறு மண்டபம் உள்ளது. இதில் மேலே பூப்பெட்டி ஒன்றை அமைத்துள்ளனர். உற்சவமூர்த்தி இங்கு எழுந்தருளும்போது இதில் மலர்களை நிரப்பி (ஒரு கயிற்றை இழுப்பதன் மூலம்) ஒவ்வொரு மலராக அவர்மீது விழும்படிச் செய்வார். (இந்தப் பெட்டி பழுதுபட்டுள்ளதால் இந்நிகழ்ச்சி இப்பொழுது நடத்தப்படுவதில்லை)

புஷ்பலிங்கம்

சிவலிங்கங்களை கல், உலோகம், இரத்தினங்கள், முதலியவற்றால் செய்து வழிபடுவதைப் போலவே பூக்களால் அமைத்தும் வழிபடுகின்றனர். இத்தகைய லிங்கங்களைப் புஷ்பலிங்கங்கள் என்று அழைக்கின்றனர். காசி விசுவநாதர் கோயிலிலுள்ள அமுதவாவி என்னும் கிணற்றில் பூவால் செய்யப்பட்ட லிங்கம் தினமும் வைக்கப்படுகிறது. (கிணற்றின் மீது அதை மூடும் வகையில் துணிகட்டப்பட்டு மையத்தில் புஷ்ப லிங்கம் வைக்கப்படுகிறது.

தென்னாட்டில் புஷ்பலிங்களை வைத்து வழிபடும் வழக்கம் இக்காலத்தில் இல்லை. சிவமகாபுராணத்தில் ஆறுபருவங்களிலும் பூக்களால் சிவலிங்கங்களைச் செய்து வழிபட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளதுடன் புஷ்பலிங்கங்களை வழிபடுவதால் கிடைக்கும் பலன்களும் சொல்லப்பட்டுள்ளது.

வசந்த ருதுவாகிய இளவேனிற் பருவத்தில் (சித்திரை-வைகாசி) குங்குமப் பூவால் செய்தலிங்கத்தை வழிபட்டால் ஒளிமிக்க உடல் கிடைக்கும். கிரீஷ்ம ருதுவாகிய முதுவேனில் (ஆனி-ஆடி) காலத்தில் மல்லிகைப் பூவால் ஆன லிங்கத்தை வழிபட்டால் பயிர்த்தொழில் மேன்மையடையும், அதிக லாபமும், மன அமைதியும் உண்டாகும். வர்ஷ ருது எனப்படும் மழை பொழியும் (ஆவணி-புரட்டாசி) கார்காலத்தில் ஊமத்தம் பூவினால் செய்யப்பட்ட லிங்கத்தை வழிபட பூவுலக வாழ்வில் மேன்மையையும் சிறப்பையும் அடைவதுடன் மோட்சமும் கிடைக்கும். சரத் காலமான மிதமான மழையும் குளிரும் கொண்ட (ஐப்பசி-கார்த்திகை) மாதங்களில் நீலோற்பல மலர்களால் அமைக்கப்பட்ட லிங்கத்தை வழிபட்டால் அனேக சித்திகளை பெற்று எண்ணியதை எண்ணியவாறு பெறலாம். முன்பனிக் காலமாகிய (மார்கழி-தை) ஹேமந்த ருதுவில் ஜாதிப்பூக்களால் செய்யப்பட்ட லிங்கத்தை வழிபட்டால் சிவனோடு கலந்து இருக்கலாம். சிசிர ருதுவான (மாசி-பங்குனி) பின்பனிக் காலத்தில் பலவிதமான பூக்களைக் கொண்டு, பெரியதாகச் செய்யப்பட்ட லிங்கத்தினை வழிபட்டால் சகல பாவங்களும் அழிவதுடன் சிறப்புக்களும் உண்டாகும்.

காரண ஆகமத்தில்தினமும் புஷ்பலிங்கங்களைச் செய்து பல்லக்கில் வைத்து ஸ்ரீபலி எனும் நித்யோற்சவத்தைச்செய்தபின்னர் அந்தலிங்கத்தை தீர்த்தக்குளம் அல்லது கிணற்றில் சேர்த்து விட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

நந்தவனங்கள்

சிவாலயங்களுக்குத் தேவையான நல்ல மலர்களையும் தளிர்களையும் தூய்மையான இடத்திலிருந்து பெற விரும்பிய அன்பர்கள் தூய்மையான இடத்தில் பூச்செடிகளையும், கொடிகளையும் வளர்த்தனர். அந்த இடத்திற்கு நந்தவனம் என்பது பெயராகும். இதற்கு அழியாத காடு என்பது பொருள். இதற்கென அளிக்கப்பட்ட நிலங்களைக் கல்வெட்டுகள் நந்தவனப்புறம் என்று அழைக்கின்றன. இங்குள்ள செடி, கொடிகளுக்கு நீர்பாய்ச்சவும், களையெடுக்கவும், பாதுகாக்கவும் ஆட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இங்கிருந்து எடுக்கப்படும் பூக்கள், தளிர்கள், இலைகள் (பத்திரங்கள்) ஆகியன பள்ளித்தாமம் என்றும் இவற்றைப் பறிப்பவர்கள் பள்ளித்தாமம் எடுப்பவர் அல்லது பறிப்பவர் என்றும், தொடுத்து, மாலையாக்குவோர் பள்ளித்தாமம் இடுவோர் என்றும் அழைக்கப்பட்டனர்.

நந்தவனத்தைப் பாதுகாக்கும் பணியில் இருந்தவர்க்கு உணவிட கோயிலில் நிவந்தங்கள் ஏற்படுத்தப் பட்டிருந்தன. நந்தவனங்களுக்குப் பல்வேறு பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன. சிதம்பரத்தில் திருத் தொண்டர்சீர் பரவுவார் நந்தவனம், பொன் வேய்ந்த பெருமாள் திருநந்தவனம், மகா நந்தவனம், அகளங்கன் திருநந்தவனம், திருநிலை அழகியார் நந்தவனம், உலக முழுதுடையாள் நந்தவனம் என்று பல நந்தவனங்கள் இருந்ததைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

காளத்தியில் வீரநரசிங்கதேவன் நந்தவனம், ஆலால சுந்தரன் நந்தவனம் முதலான நந்தவனங்கள் இருந்ததைக் கல்வெட்டுக்களால் அறியமுடிகிறது. இதில் வீரசிங்கதேவன் நந்தவனத்தைப் பராமரிக்க பாடிகாவல் கடமை, பொன்ஆயம், நெல்ஆயம் முதலியவற்றிலிருந்து கிடைத்த வருமானம் பயன்படுத்தப்பட்டதையும் அறிகிறோம். இதுபோன்று அனேக ஆலயங்களிலுள்ள கல்வெட்டுகள் மூலம் நந்தவனங்களையும் அதன் பணியாளர்கள் பற்றிய செய்திகளையும் அறிய முடிகிறது.

சிவதீட்சை பெற்றவர்கள் அதிகாலையில் நீராடித் தூய்மையுடன் திருநீறணிந்து பள்ளித்தாமம் எடுக்கச் செல்வர். தென்னங்கீற்றுகளால் முடையப் பெற்ற குடலைகளில் பூக்கள், இலைகள், தளிர்கள், அரும்புகள், ஆகியவற்றைத் தனித்தனியே சேகரிப்பர். பின்னர் அவற்றை ஆலயங்களிலுள்ள மாலை கட்டும் மண்டபத்திற்கு எடுத்து வந்து வகைப்படுத்திப்பிரிப்பர். அவற்றைத் தொடுத்தும், கட்டியும் கோர்த்தும், தொடையல் இண்டை, மாலை, பிணையல் எனப்பலவாறு அமைப்பர். பின்னர் உரிய காலங்களில் இறைவனுக்கும் இறைவிக்கும் பிற தெய்வங்களுக்கும் சூட்டுவர்.

நந்தவனத்தின் நடுவில் அமைக்கப்பட்ட சிவாலயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் நந்தவனேசுவரர், புஷ்பவனேசுவரர், மலர்வனநாதர், எனப்பலவாறு அழைக்கப்படுகிறார். திருவண்ணாமலை, சிதம்பரம், திருவதிகை முதலிய பலதலங்களில் இப்போதும் நந்தவனங்கள் சிறப்புடன் போற்றப்படுகின்றன. அவற்றின் நடுவில் சிவாலயங்கள் உள்ளன.

மேலும்நந்தவனங்களுக்கு நடுவில் அடியவர்கள், திருமகள், சரஸ்வதி, அரம்பை, காளி, முதலியோர்களுக்கும் ஆலயங்கள் இருந்தன. சிதம்பரத்தில் செங்கனிவாயன் திருநந்தவனம் எனும் நந்தவனத்தின் நடுவில் திருஞானசம்பந்தர் ஆலயம் இருந்ததைக் கல்வெட்டால் அறியமுடிகிறது. திருக்கொள்ளம்பூதூர் ஆலய நந்தவனத்தில் மகாலட்சுமி ஆலயம் உள்ளது.

பொதுவாக, நந்தவனத்தில் எல்லா விதமான செடி,கொடி, மரங்களும், வளர்க்கப்பட்டன. சில இடங்களில் சில குறிப்பிட்ட பூக்களைப் பெற நந்தவனம் அமைக்கப்பட்டிருந்தது. எடுத்துக்காட்டாக மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சிதம்பரத்தில் இருவாட்சி, நந்தியாவர்த்தம், மல்லிகை ஆகிய மூன்றுக்கும் மட்டுமே தனிநந்தவனம் அமைக்கப்பட்டு அதற்கு எட்டு காவலர்கள் நியமிக்கப்பட்டு நால்வர் மாற்றி நால்வர் பணி செய்ய வேண்டுமென்றும் இவர்களுக்கு உணவிட வேண்டும் என்று பல ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்ததைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

நந்தவனங்களில் கிணறுகள் அமைத்து அவற்றிலிருந்த நீர் இறைத்து செடி, கொடிகளுக்குப் பாய்ச்சப் பட்டது.இலவானாசூரில் உள்ள கல்வெட்டு சிந்தாமணி நந்தவனத்தையும் அதனுள் இருந்த கிணறுகளையும் குறிக்கிறது. ஆறுகளுக்கு அருகிலுள்ள இடங்களில் ஆற்றிலிருந்து கால்வாய்கள் வெட்டப்பட்டு நீர் பாய்ச்சப்பட்டது.

சிதம்பரம், திருவண்ணாமலை, திருவாரூர், பெண்ணடகம் முதலிய அனேக தலங்களில் இன்றும் நந்தவனங்கள் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நந்தவனங்களைப் பராமரிப்பது சிவாலயங்களைப் பராமரிப்பதற்கு இணையானதாகும்.

திருவாவடுதுறை ஆதீனத்தால் திருவதிகையில் திலகவதியார் பெயரால் நந்தவனம் அமைத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அம்பிகை அமைத்த நந்தவனம்

ஆகமங்கள் பூக்களைக்கொண்டு சிவபெருமானை வழிபட வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகின்றன. உமா தேவியார் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளபடி சிவபூசை செய்ய விரும்பி பூவுலகின் மையப் பகுதியான காஞ்சீபுரத்தை அடைந்தாள். முதற்கட்டமாக அங்கு சிவபூசைக்கு வேண்டிய பூக்களைப் பெற நந்தவனத்தை அமைத்தாள். அதில் மணம் நிறைந்த பூக்களைத் தரும் மரம், செடி, கொடிகளை நட்டுப் பராமரித்தாள். சிவபூசை செய்யும் அன்பர்கள் தாமே தூய்மையுடன் மலர்வனம் சென்று பூக்களைப் பறிக்க வேண்டும் என்பதால் அவள் நீராடி விபூதி அணிந்து அரம்பையர்கள் பூக்குடலைகளை ஏந்திவர மலர்வனம் சென்று பூக்களைப் பறித்தாள். இதனைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில்



உம்பர் நாயகர் பூசனைக்கு அவர்தம்
உரைத்த ஆகமத்து உண்மையே தலைநின்று
எம்பிராட்டியார் அருச்சனை புரிவதற்கு
இயல் வாழ் திருச்சேடியரான
கொம்பனார்கள் பூம்பிடாகை கைக்கொண்டு அணைய
குலவுமென் தளிர் அடியினை ஒதுக்கி
அம்பிகா வனமாம் திருவனத்தில்
ஆன தூநறும் புதுமலர் கொய்தாள்.

என்று கூறுகின்றார். இதன் பொருள் : தேவர்பிரானான சிவபெருமானுடைய பூசையை அவர் கூறிய ஆகமங்களின் வழிப்படியே நின்று செய்ய விரும்பிய உமாதேவியார் சிவார்ச்சனை புரிவதற்கு உடன் உறையும் பூம் கொம்பைப் போன்ற தெய்வப் பெண்கள் பூக்கூடைகளை ஏந்தி உடன்வரத் தன்னால் போற்றி வளர்க்கப்பட்ட அம்பிகாவனம் எனும் திருநந்தவனத்திற்குச் சென்று தூயநறுமணம் மிக்க புதிய மலர்களைக் கொய்தாள் என்பதாகும். இதன் மூலம் பூவால் செய்யப்படும் வழிபாட்டின் பெருமையையும் நந்தவனத்தின் சிறப்பையும் அறியமுடிகிறது.

திருப்பூவணம் எனும் தலத்தில் அம்பிகை மலர்வனம் வைத்து வழிபாடு செய்தாள் என்று தலபுராணம் கூறுகிறது.

ஓடைப்புறங்கள்

நிலத்தில் மலரும் மலர்களைப் பெற நந்தவனங்கள் அமைக்கப்பட்டதைப் போலவே நீரில் பூக்கும் பூக்களைப் பெற ஓடைகள் அமைக்கப்பட்டதுடன் அவற்றைப் பராமரிக்க நிபந்தங்களும் அளிக்கப்பட்டிருந்தன. ஓடைகளும் அதன் கரைகளும், ஓடைப்புறங்கள் என்று குறிக்கப்பட்டன. ஓடைகளில் தாமரை, செங்கழுநீர், அல்லி, முதலியவை நீர்ச் செடிகள் வளர்க்கப்பட்டன. பெரும்பாலும் செங்கழுநீர்ப்பூக்களே பயிறாக்கப்பட்டன.

சிதம்பரம், திருவாரூர், காஞ்சிபுரம், திருவானைக்கா முதலிய தலங்களில் செங்கழுநீரோடைகள் சிறப்புடன் விளங்கின. காஞ்சீயில் இந்த ஓடை இப்போது இல்லாவிட்டாலும் இதனை ஒட்டியிருந்த வீதி செங்கழுநீரோடை வீதி என்று அழைக்கப்படுகிறது. திருவாரூரில் கோயிலும், குளமும் அமைந்துள்ள அதே பரப்பளவில் செங்கழுநீர் ஓடையும் இருந்திருக்கின்றது. (இதன் பரப்பு 30 ஏக்கருக்கும் அதிகமானது ஆகும்.)

சிதம்பரத்திலுள்ள பல கல்வெட்டுக்கள் வழிபாட்டிற்கான பூக்களைப் பெற நீரோடைகளையும் அதனைப் பராமரிக்க அளிக்கப்பட்ட நிபந்தங்களையும் பற்றி விரிவாகக் கூறுகின்றன. இத்தலத்தில் செங்கழுநீர் ஓடை, பெருமாள் திருவோடை, கோப்பெருஞ்சிங்கன் தன் திருநாமத்தால் எடுத்த திருவோடை தாய்க்கோரம் போகாதான் திருவோடை என்று பல திருவோடைகள் இருந்திருக்கின்றன.

இரண்டாம் ராஜராஜன் காலத்தில் சிதம்பரத்தில் செந்தாமரை ஓடை ஒன்று இருந்ததையும் நாள்தோறும் அதிலிருந்து பறிக்கப்பட்ட மலர்களைக் கொண்டு மாலைகள் கட்டி அளிக்கப்பட்டதையும் அறியமுடிகிறது. இவ்வகையில் தினந்தோறும் நூற்றுமுப்பதும் இருநூறும் ஆகிய எண்ணிக்கைகளைக் கொண்ட மலர்களால் தொடுத்த இரண்டு மாலைகள் இறைவனுக்கு அளிக்கப்பட்டன என்பதையும் அறியமுடிகிறது.

பொற்பூக்கள்

மரம்,செடி, கொடிகளில் மலரும் இயற்கையான வாசனை மிகுந்த மலர்களைச் சூட்டி வழிபடுவதே எளிமையானதும் சிறப்புடையதும் ஆகும் என்றாலும் மாமன்னர்களும் கனதனவான்களும் என்றும் வாடா மலர்களைச் சூட்ட வேண்டும் என்ற விருப்பத்தால் பொன்னாலும் வெள்ளியாலும் பூக்களைச் செய்து இறைவனுக்குச் சூட்டி மகிழ்ந்தனர். இவை பொற் பூக்கள்(சுவர்ணபுஷ்பங்கள்) என்று அழைக்கப்பட்டன.

பொன்வண்ணமான மஞ்சள் நிறத்துடன் பூக்கும் சாமந்தி(ஜவந்தி) எனப்படும் செவ்வந்திப் பூக்களையே அதிகஅளவில் தங்கத்தால் செய்து இறைவனுக்கு அணிவித்தனர். சில இடங்களில் தாமரை ஷெண்பகம் முதலிய பூக்களின் வடிவிலும் தங்கப் பூக்கள் செய்த ளிக்கப்பட்டன. இவற்றை மாலையாகக் கோர்த்து அணிவிக்கப்பட்டபோது பொன்னரி மாலைகள் என்று அழைக்கப்பட்டன.

திருவாவடுதுறை கோமுத்தீசுவரப் பெருமானுக்கு சோழர் குலப்பெண்ணொருத்தி 27 பொற்பூக்களோடு செங்கழுநீர்ப் பூக்கள் 36ஐயும் மாந்தளிர் ஒன்றையும் செய்தளித்ததாகக் கல்வெட்டு குறிக்கிறது.

இளந்தளிருக்கு குழை என்பது பெயராகும். பெருமான்தோட்டைஒருகாதிலும்குழையைஒருகாதிலும்அணிந்துள்ளான். இதையொட்டி இறைவனின் திருச்செவிகளில் அணிவிக்க மாந்தளிர், அசோகந்தளிர், ஆகியவற்றின்உருவங்களையும் பொன்னால் செய்தளித்தனர்.

வில்வ இலையைப் போன்று பொன்னால் செய்து வரிசையாகக் கோர்த்து அணிவித்தனர். இம்மாலை வில்வதளமாலை என்றழைக்கப்பட்டது. அனேக ஆலயங்களில் வில்வமாலைகள் நுண்ணிய வேலைப்பாடுடன் அமைக்கப்பட்டுள்ளன.

பொற்பூக்கள் மாலைகளாகச் சூட்டப்பட்டது மட்டுமின்றி தனியாகச் செய்து, அர்ச்சனை செய்யவும்பயன் படுத்தப்பட்டன. இதனை சுவர்ண புஷ்பார்ச்சனை என்று அழைக்கின்றனர். மடாதிபதிகள் பூசைக்கு எழுந்தருளும் போது சுவர்ண புஷ்பமாக ரூபாய் நாணயங்களை வழங்குவது இப்போதும் நடைமுறையில் உள்ளது.

அரசர்கள் வெற்றி பெற்ற படைத்தலைவர்களுக்குப் பொன்வாளும், பொற்பூக்களும், அளித்துக் கவுரவிப்பது வழக்கம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாகைக்காரோணத்து இறைவனிடம் தனக்கு அரச இலச்சினைபொறித்தபொன்வாளையும் பொற்பூக்களையும் தந்து அருள வேண்டி "பொற்சுரிகை மேலோர் பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்" என்று பாடுகின்றார்.

சோழமன்னர்களும் மகாராணிகளும் அரசியல் அதிகாரிகளும் பொற்பூக்களைச் செய்து இறைவனுக்கு அளித்ததை அனேக ஆலயங்களிலுள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இராஜராஜசோழனின் பட்டத்தரசியான ஒலோகமாதேவி எனப்படும் தந்தி சக்தி விடங்கியார் தஞ்சைப்பெரிய கோயிலில் பிட்சாடன மூர்த்தியை எழுந்தருளி வைத்ததுடன் அவருக்குச் சாத்தியருள பொற்பூ ஒன்றையும் செய்து கொடுத்துள்ளாள். மேலும் இவள் திருவையாற்று பஞ்ச நதீசுவரர் ஆலயத்தினுள் ஒரு சிவாலயத்தை எழுப்பியதுடன் அக்கோயிலில் தான் எழுந்தருளிவித்த சோமாஸ் கந்த மூர்த்திக்கு பொன்னாலாகிய தாமரைப்பூ ஒன்றையும் அளித்துள்ளாள். மேலும் திருவலஞ்சுழியிலுள்ள வைரவ மூர்த்திக்கு இரண்டு பொன்மலர்களை அளித்துள்ளாள்.

சேர, பாண்டியர்களை வென்ற பின்னும், மேலைச் சாளுக்கியனான சத்யாச்ரயனை வென்ற பின்னும் மாமன்னன் இராஜராஜசோழன் தஞ்சைப் பெருவுடையாருக்கு ஸ்ரீபாத புஷ்பமாக இருபது பொற் பூக்களையும் பொன்னாலான தாமரைப் பூவையும் செய்து அளித்துள்ளான்.

இராஜராஜனின் அரசியல் அதிகாரியான ஸ்ரீ கிருஷ்ணராமன் எனும் அதிகாரி பெரிய கோயிலில் தான் எழுந்தருளிவித்த அர்த்தநாரீச்சுவரருக்கு முப்பது பொற்பூக்கள் அளித்துள்ளான்.

இறைவனுக்கு மட்டுமின்றி அடியவர் திருவுருவங்களுக்கும் பொன்மலர்கள் செய்தளிக்கப்பட்டன. தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள கல்வெட்டுக்களின் மூலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார் திருமேனிகளுக்கும் பொற்பூ, அளிக்கப்பட்ட செய்திகளை அறியமுடிகிறது.

வரலாற்றில் இப்படி அனேகர் இறைவனுக்குப் பொற்பூக்களைச் செய்தளித்துப் பேறுபெற்றுள்ளதைக் காண்கிறோம்.

★ சமண சமயத்தில் போற்றப்படும் யக்ஷி எனும் பெண் தெய்வங்களுக்கும் பொற்பூக்கள் செய்து அளிக்கப்பட்டதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. குமரி மாவட்டத்திலுள்ள திருச்சாரணத்து மலையில் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ள யக்ஷிகளுக்கு பெண் துறவிகள் பொற்பூக்கள் அளித்ததாக அங்குள்ள கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

தேவாரத்துள் மலர் வழிபாடு

தமிழ் வேதமாகிய பன்னிரு திருமுறைகள் இறைவனை மலர் கொண்டு வழிபடுவதன் சிறப்பைத் திரும்பத் திரும்ப கூறுகின்றன. **புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு அண்ணல் அது கண்டு அருள்புரியா நிற்கும்** என்பது திருமந்திர மொழியாகும். முன்செய்த புண்ணியத்தினாலேயே இப்பிறவியில் இறைவனை பூக்களைத் தூவிப் பூசிக்கும் ஆசை உண்டாகும் என்று திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது. தேவாரத்துள் பூக்களைக் கொண்டு வழிபடும் முறையும் அதனால் கிடைக்கும் பயனும் எடுத்துக் கூறப்பட்டுள் என அவற்றைத் தொகுத்துக் காணலாம்.

கைகளைப் பெற்றிருப்பதன் பயன் இறைவனை பூத்தூவி வழிபடுவதற்கேயாகும். **கைகாள் கூப்பித் தொழீர் கடிமா மலர்தூவி நின்று** என்று அப்பரடிகள் கைகளை நோக்கி வேண்டுவதை நினைவு கூறலாம்.

தொழுது தூமலர் தூவித் துதிக்கின்ற அன்பர்களின் பெயர்களை இன்னம்பர் ஈசன் தனது கீழ்க் கணக்கில் குறித்துக் கொண்டு அவர்களுக்கு அருள் புரிகின்றான் என்கிறார் அப்பரடிகள்.

பூக்களைத் தூவி வழிபடுவதற்கு அதிகாலை (வைகல்) சிறந்தது. வானவர்களும் தானவர்களும் வைகல் நேரத்தில் கண்டியூர்ப் பெருமானை வழிபடுகின்றனர் என்று அப்பர் குறித்துள்ளார்.

உள்ளன்பு இன்றி போலியாக நடிப்பவர்கள் தன் மீது பறித்து இட்ட இலைகள் முகைகள், (மொட்டுக்கள்) ஆகியவற்றைக் கூட அழகிய மலர்கள் எனக் கொண்டு அவர்களுக்குப் பெருமான் உரிய பலனைக் கொடுக்கிறான் என்பதை **"என்போலிகள் பறித்து இட்ட இலையும் முகையும் எல்லாம் அம்போதெனக் கொள்ளும் ஐயாறன்"** என்று குறித்துள்ளனர்.

அனைத்து மலர்களுமே சிவவழிபாட்டிற்கு உரியன என்றாலும் உயர்ந்தோர்கள் சில மலர்களைச் சூட்டிவழிபடுதல் உண்டாகும். பயனைக் குறித்துள்ளனர். பூக்களைத் தேர்ந்து அவற்றின் சிறப்புக்களை உணர்ந்து இடவேண்டும். என்பதைப் **"பூத்தேர்ந்து ஆயனகொண்டு என்றும்; பரந்து பல் ஆய்மலர் இட்டு"** என்றும் மேலோர் சொன்ன நூல்களில் கூறப்பட்டுள்ள படி வழிபட வேண்டுமென்பதை **"உரைசெய் நூல்வழி ஒண்மலர் இட்டிட"** என்றும் குறித்துள்ளனர்.

மகரந்தம் மிகுந்த பூக்களையிட்டு சிவபெருமானின் பாதத்தை வணங்கிப் பிறவித் துயரைத் தீர்க்க



வேண்டுமென்று கேட்ட அளவிலேயே பெருமான் அருள்புரிகிறான்.

கைகளால் தொழுதுதூய மலர்களைத்தூவி அன்பு மிகுதியால் மனம் குழைந்து அழும் அன்பர்களுக்குச் சிவபெருமான் நண்பனாகி விடுகிறான் என்று திருவானைக்காவல் தேவாரத்தில் அப்பரடிகளும், திருக்கழிப்பாலை தேவாரத்தில் சுந்தரரும் குறிக்கின்றனர். மதியில்லாதவர்களே பூப்பறித்து இட்டு வழிபடாத மூடர்களாக இருக்கின்றனர்.

பூக்களைக் கொண்டு அவன் பொன்னடி போற்றினால் அவன் காத்து அருள்புரிகின்றான். சிவபெருமானது புராணப்பெருமைகளைப் பாடித்தூய மலர்களைத் தூவியும், இண்டைகட்டி அவன் இணையடிகளைப் போற்றியும் வழிபடுவதனால் அவன் முக்தி இன்பத்தை அருள்வான்.

கருப்பறியலூர் அந்தணர்கள் மூன்று சந்நிதிகளிலும் தவறாமல் நீரில் முழ்கி மலர்களைப் பறித்து பெருமானுக்கு இண்டை கட்டி (தலை மாலை) சாத்துகின்றனர். அவர்களின் அன்பைக் கண்டு தானும் சிவபெருமான் அடியைப் போற்றுவதாகச் சுந்தரர் குறிக்கின்றார்.

வாசனைமிக்க மாலைகளைச் சூடுவதைப் பெருமான் விரும்புகிறான். அவனுடைய விரித்த சடையில் நாறும்மல்லிகை, கூவிளம், கொன்றை, ஷெண்பகம், குரவம் முதலிய பல்வேறு மலர்களும் பூவணி மாலைகளும் விளங்குகின்றன. கந்தமாமலர் சூடும் கருத்தனாக இருக்கும் பெருமான் வண்டுலவு மாமலர்களைக்கொண்டு இண்டைமாலை கட்டி இரவும்

பகலும் தொண்டராகித் தொடர்ந்து விடாதவர்க்கு அண்டத்தை ஆளும் வரத்தை அருள்கின்றான்.

அன்பர்கள் இட்டு உகந்த மலர்ப்பூசையை இச்சிகும் இறைவர் அவர்களுடைய வினைகளை மாற்றி, பேரின்ப வாழ்வை வழங்குகிறான்.

வேதங்களும் பழைய நூல்களும் சொன்னபடி மாமுனிவர்களும், தேவர்களும், அசுரர்களும் கூடிப் பூக்களைத் தூவி வழிபடுகின்றனர்.

திருமாலும் பிரமனும் வழிபட்ட மலர்கள் நிறைந்திருந்ததால் திருக்கழுக்குன்றமே மலர்க் குன்றமாகி வாசனை வீசுகின்றது. மலர்தூவி தொழுவாரைத் தனது திருவடியின் கீழ் இருக்குமாறு பெருமான் செய்கிறான்.

தேவாரத்துள் அனேக இடங்களில் மலர்வழிபாட்டின் சிறப்பும் பெருமான் இதனை உவந்து ஏற்று அருள் புரியும் தன்மையும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

★ திருஞானசம்பந்தர் திருஆடானையில் அருளிச் செய்த பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் மலர்தூவி வழிபடுவதால் வரும் பயனைக் குறித்துள்ளார்.

சொல் மலர்மாலை

பூக்களை அடுக்கடுக்காகத் தொகுத்து மாலையாக் குகிறோம். அதுபோன்றே பூக்களின் பெயர்களை வரிசைப்படுத்தித் தொடுத்துப் பாடும் வழக்கமும் உள்ளது. சங்க இலக்கியமான குறிஞ்சிப்பாட்டில் தொண்ணூற்றொன்பது மலர்களின் பெயர்கள் வரிசையாகக் கூறப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தர், கொன்றையந்தாரும் கூவிள மலரும் நாறுமல்லிகையும் எருக்கொரு முருக்கும் மகிழ்இளவன்னியும் என்று அச்சிறுபாக்கத் தேவாரத்தில் மலர்கள் தளிர்களின் பெயர்களை வரிசைப்படுத்திக் கூறுகின்றார். அப்பரும் சுந்தரரும் அனேக இடங்களில் மலர்ப் பெயர்களை வரிசையாக பாடியுள்ளனர்.

பத்தாம் திருமுறையான திருமந்திரத்தில் திருமூலர் அனேக இடங்களில் மலர்களின் பெயர்களை வரிசைப்படுத்திக் கூறுவதுடன் அவற்றால் செய்யப்பட வேண்டிய பூசைகளையும் விவரித்துக் கூறுகிறார். எடுத்துக்காட்டாக பதினான்கு மலர்களை வரிசைப் படுத்தி,

அம்புயம் நீலம் கழுநீர் அணிநெய்தல்
வம்பவழ் பூகமும் மாதவி மந்தாரம்
தும்பை வகுளம், சுரபுன்னை மல்லிகை
ஷெண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்தியே
.................................அர்ச்சியும் அன்புடனே

என்று பாடுவதைக் காண்கிறோம். இவை தமிழ்ப் புலவர்களுக்கு மலர்களின் மீதிருந்த பெரிய ஈடு பாட்டைக் குறிக்கின்றது.

தேவார திருவாசகப்பாடல்களைச் சொல் மலர்மாலை என்றே குறிக்கின்றனர். சேக்கிழார் மூவர் முதலிகளான அப்பர் சம்பந்தர், சுந்தரர், ஆகியோர் தேவாரப்பதிகங்கள் அருளிச் செய்ததைச் சொல் மாலை சாத்தினார். சொல் மாலை சூட்டினார் என்று பலவாறு சிறப்பித்துக் கூறுவதைக் காண்கிறோம்.

பூம்பொழிலும் புகலியும்

நாற்புறமும் நீரால் சூழப்பட்ட இடத்திற்குப் பொழில் என்பது பெயர். இதனைத் தீவு எனவும் அழைப்பர். அன்பர்கள் நந்தவனங்களில் ஆடு, மாடுகள் புகுந்து பாழ்படுத்தாமல் இருக்க அவற்றை சுற்றி நாற்புறமும் அகழி போன்று நீர் நிரம்பிய பள்ளத்தை அமைத்தனர். இவ்வாறு அகழியுடன் கூடிய நந்தவனங்களே பொழில்கள் என்றும் பூம்பொழில்கள் என்றும் இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளன. இந்த நந்தவனங்களில் பூக்களைத் தரும் செடி, கொடி, மரங்களும் அகழிகளில் அல்லி, ஆம்பல், தாமரை முதலிய மலர்க் கொடிகளும் வளர்க்கப்பட்டன. அகழிகளில் நெருக்கமாக மலர்ந்துள்ள மலர்கள் நந்தவனத்திற்கு மலர்களால் இட்ட வேலிபோல் காட்சியளித்தன. இதனை ஏடுடைகமலவேலி திருவாரூர் புனல் வேலிகள்ளில்;புண்டரீக மலர்ப்பொய்கை சூழ்ந்த புகலி என வரும் திருமுறைத் தொடர்களால் அறியலாம்.

பொழிகளின் நடுவே சிவாலயங்கள் அமைக்கப்பட்டன. இவை பூம்பொழில் ஈச்சரங்கள் என்று அழைக்கப்பட்டன. செண்பகப்பொழில் : சிவபுரம்; பொழில் திகழும் பூவனம்; தண்பொழில் சூழ்ந்த பைஞ்ஞீலி விரியும் பொழில் மங்கலக்குடி வண்டுசேர் பொழில் வான்மியூர்; என வரும் தேவாரத் தொடர்கள் திருத்தலங்கள் தோறும் இருந்த பொழில்களின் சிறப்பைக் குறிக்கின்றன. பொழில்கள் புகலி எனவும் அழைக்கப்பட்டன. ஒரு காலத்தில் ஊழி வெள்ளத்தால் சூழப்பட்டிருந்தால் சீர்காழிக்கு புகலி என்பது பெயராயிற்று. மேலும் அது பூவால் பொலிந்திருந்ததால் பூந்தராய் என்றும் புகழப்பட்டது. இதனை திருஞானசம்பந்தர், பூம்புகலி, திருபுகலி, பொழில்புகலி, எனப்பலவாறு சிறப்பித்துள்ளார். திருநாவுக்கரசர் வீடுபேறு பெற்றதும் முருக நாயனார் மலர்ப்பணி செய்து மேன்மை பெற்றதுமான திருத்தலம் திருப்புகலூர் ஆகும். இந்நாளிலும் இதனை சுற்றி அகழி அமைந்திருப்பதைக் காண்கிறோம். இதனை அப்பர் பூம்புகலூர் என்றழைக்கின்றார்.

பெரியபுராணத்தில் மலர் வழிபாடு செய்தோர்

பெரிய புராணம் வீரம் விளைத்தும், அன்பைப் பொழிந்தும், அடியவர்களுக்கு அமுதூட்டியும், ஆலயங்களில் விளக்கெரித்தும் மலர்ப்பணி செய்தும், நீர்சுமந்தும் பலவழிகளில் சிவபெருமானை வழி பட்டுப் பேறுபெற்ற அடியவர்களின் வரலாறுகளைக் கூறுகிறது. இவர்கள் அனைவருமே பொது நிலை வழிபாடான மலர் வழிபாட்டைச் செய்திருப்பார்கள். இறைவனுக்கு மலர்களைச் சூட்டி மகிழ்ந்திருப்பார்கள். என்றாலும் சிலர் செய்த மலர்வழிபாடு தனிச் சிறப்பு டன் இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

பெரியபுராணத்தின் காவிய நாயகனான சுந்தர மூர்த்தி சுவாமிகளே திருக்கயிலையில் பெருமானுக்கு மலர் மாலைகளைத் தொடுத்துத் தருதல், விபூதி சேகரித்து தருதல் ஆகிய பணிகளைச் செய்து வந்த வராவார். இவர் பெருமானுக்கு மாலைகட்ட மலர் பறிக்கச்சென்ற இடத்தில் தேவிக்கு மலர்ப்பணி செய்து வந்த கமலினி. அநிந்திதை ஆகியோரைக் கண்டு காதல் கொண்டார். அதனால் மண்மீது அவர்களுடன் வந்து பிறந்து மேன்மை பெற்றார். திருஒற்றியூரில் அநிந்திதை சங்கிலி நாச்சியார் எனும் பெயரில் பிறந்து வளர்ந்து மலர்பணிசெய்து சுந்தரரை மணந்து பேறு பெற்றார். கமலினி பூங்கோயிலான திருவாரூரில் பரவையாராகப் பிறந்து வளர்ந்து சுந்தரரோடு வாழ்ந்து மகிழ்ந்தார்.

திருப்புகலூரில் வாழ்ந்த முருகநாயனார் பூமாலை தொடுத்து வழிபட்டு பேறு பெற்றுள்ளார். இவருடைய பூப்பணியை அப்பரும் சம்பந்தரும் தேவாரத்துள் குறித்துள்ளனர்.

அன்பால் நிறைந்த, அடியவர்களான கண்ணப் பரும், சண்டீசரும் செய்த மலர்வழிபாடு பெருஞ் சிறப்புடன் பேசப்பட்டுள்ளது. சண்டேசுவர் குராமர நிழலில் மணலால் லிங்கம் அமைத்தபின், ஆத்திமலர், செழுந்தளிர்கள், அருகு, வேலியில் பூத்த மலர்கள் யாவற்றையும் பள்ளித்தாமமாகப் பரித்து வந்து பெருமானுக்குச் சார்த்தி வழிபட்டார் என்று சேக்கிழார் பெருமான் பாடுகின்றார்.

வேடன் கண்ணப்பன் காட்டுமலர்களைத் தன் தலையில் சூடிவந்து பெருமானுக்குச் சூட்டி மகிழ் கின்றான். சிவபெருமான் அந்த காட்டு மலர்களைத் தேவர்கள் சூட்டும் மலர்களை விடமேலானதென்று கூறி மகிழ்கிறார்.

சிவபுஷ்பம் எனப்படும் கொன்றை மலர்கள் பூத்துக் குலுங்குவதைக் கண்ட ஆனாய நாயனார் அவற்றைச் சிவபெருமானாகவே எண்ணி வேய்ங் குழல் இசைத்தார். அந்த இசை வெள்ளத்தால் மகிழ்ந்த இறைவன் நெகிழ்ந்து அவருக்குக் காட்சியளித்தான்.

திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றில் காஞ்சியின் பெருமையை சேக்கிழார் விரிவாகப் பாடுகின்றார். அதில் அம்பிகை சிவபூசைக்கென மலர்வனம் வைத்துப் போற்றியதையும் மலர்தூவி சிவ வழிபாடு செய்ததையும் புகழ்ந்துள்ளார்.

மலர்வனங்களை வைத்துப் பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும், அங்கு பூக்கும் மலர்களைப் பறித்து மாலையாக்கி அளிப்பதற்கும் உரிய பயிற்சிகளைத் தரும் பயிற்சிக் கூடத்தை நடத்தி வந்தவர் கணநாதர் சீர்காழியில் வசித்து வந்த அவர் சிவப் பணிபுரிவதற்கு உரிய பல்வேறு பயிற்சிகளை அன்பர்களுக்கு அளித்து வந்ததைப் பெரியபுராணம் கூறுகிறது.

மலர்ப்பணி செய்தவர்களைப் போற்றியதை போலவே மலர்ப்பணிக்கு இடையூறு செய்பவர்களை தண்டித்தவர்களும் சிறப்பிக்கப் பெற்றுள்ளனர். இவ் வகையில் பேறு பெற்றவர் எறிபத்த நாயனார். இவர்



ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் கயிலை மலையிலுள்ள நந்தவனத்தில் கமலினி, அநிந்திதை ஆகியோரைக் கண்டு காதல் கொள்ளுதல்
திருமயிலை கபாலீச்சரம் ராஜகோபுரத்திலுள்ள சுதைச் சிற்பத்தை அடியோக்கி வரைந்தது.

கருவூரில் வாழ்ந்தவர். ஒரு சமயம் சிவகாமி ஆண்டார் எனும் அன்பர் பூக்களைப் பறித்துக் கொண்டு ஆலயத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது அவ்வழியாக வந்த சோழமன்னனின் பட்டத்து யானை அவருடைய பூக்குடலைகளை பற்றியிழுத்துக் கீழே சிந்தியது. பாகர்கள் அச்செயலைத் தடுக்கவில்லை. கீழே விழுந்து ஓலமிட்ட அடியவரைக் கண்டு வருந்திய நாயனார் கோபம் கொண்டார். மலர்ப்பணிக்கு இடையூறு செய்த பட்டத்து யானையையும் அதன் பாகர்களையும் வெட்டிக் கொன்று தண்டித்தார் என்று அவருடைய வரலாறு கூறுகிறது.

செருத்துணையார் திருவாரூரில் வாழ்ந்தவர். ஒரு சமயம் திருப்பூமண்டபத்தில் இருந்த பூவை எடுத்து முகர்ந்ததற்காக அந்நாட்டு அரசியின் மூக்கை இவர் அரிந்துவிட்டார் என்று வரலாறு கூறுகிறது.

தேவர்கள் பூமழை பொழிவது அனேக இடங்களில் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். சேக்கிழார் பூம்பொழில்களின் அழகையும் பூக்களின் இயற்கை வனப்பையும் பலநூறு இடங்களில் விரிவாகப் பாடியுள்ளார்.

மலர்களைச் சூட்டி மகிழ்ந்த முருகநாயனார்



திருநாவுக்கரசர் முத்தி பெற்ற திருத்தலம் திருப்புகலூர். இவ்வூரில் கோணப்பிரான் எனும் அக்னீசுவரர் ஆலயம் உள்ளது. இதன் அங்கமாக விளங்குவது வர்த்தமானீச்சுவரர் ஆலயமாகும். இவ்வாலயத்தில் சிவபெருமானுக்குப் பூக்களைச் சூட்டி மலர்ப்பணி செய்து சிவப்பேறு பெற்றவர் முருகநாயனார்.

இவர் அந்தணர் குடியில் தோன்றியவர். நாள்தோறும் அதிகாலையில் புனிதநீரில் மூழ்கி எழுவார். நந்தவனங்களுக்குச் சென்று மலரும் நிலையில் உள்ள பூக்களைப் பறிப்பார். கொடிகளில், செடிகளில், நீரில், புதர்களில் என்ற நால்வகை இடங்களிலும் பூக்கும் பூக்களைப் பறித்து, வகைப்படுத்தி மாலையாக்கி, தொகுத்து அமைப்பார். சிவாகமங்களில் சொல்லப்பட்டுள்ளபடி அபிஷேகம் அலங்காரம் செய்து பூசனை புரிவார். இவ்வாறு நெடுநாட்கள் மகிழ்வுடன் மலர்ப்பணி செய்துவந்தார். இவருடைய மலர்ப் பணியால் இவருடைய புகழ் எங்கும் பரவியிருந்தது.

திருஞானசம்பந்தர் இவருடைய மலர்ப்பணியைத் தமது தேவாரத்துள் பாராட்டிச் சிறப்பித்துள்ளார். திருஞானசம்பந்தரின் நண்பரான முருகநாயனார் ஆச்சாள்புரத்தில் நடைபெற்ற அவருடைய திருமணத்திற்குச் சென்று அவருடனேயே சிவசோதியில் சேர்ந்தார். பெரியபுராணத்தில் முருகநாயனாரின் வரலாறு பதினான்கு பாடல்களில் கூறப்பட்டுள்ளது. சிவசோதியில் கலந்தது வைகாசி மூல நாளிலாகும்.

அறுபத்துமூவர் வரிசையில் அமையும் முருக நாயனார் திருவுருவத்தில் அவர் பூக்குடலையுடன் தோளில் மலர்பறிக்க உதவும் துறட்டியுடன் அமைக்கப்பட்டுள்ளார். இவர் பெயரால் திருப்புகலூரில் நந்தவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மலர்ப்பணிக்குப் பயிற்சி அளித்த கணநாத நாயனார்

பூக்களைப் பறிப்பதும் அவற்றைக் கட்டி மாலையாக்குவதும் எளிதான செயல்கள் அல்ல. பூக்களைப் பறிக்கும்போது கிளைகளை ஒடித்துவிடுதல், மலராத அரும்புகளைப் பறித்து விடுதல், காம்புகளை ஒடித்துவிடுதல் முதலியவை செய்யும் பணியைப் பயனற்றதாக்கிவிடும். ஆதலின் இந்தப் பூப்பணியைச் செய்வதற்கு அன்பும் ஆர்வமும் மட்டும் போதாது. பயிற்சியும் வேண்டும்.

அன்பர்களுக்கு நல்ல நந்தவனப்பணி செய்யவும், நறுந்துணர் மலர்களைக் கொய்யவும் அவற்றைத் தொடுத்து மாலையாக்கவும் உரிய பயிற்சிகளை அளித்துத் திருப்பணிகளுக்கு அனுப்பியவர் சீர்காழியில் வாழ்ந்து வந்த கணநாதர் ஆவார். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான இவர் சிவபெருமானையும் ஞானசம்பந்தரையும் போற்றி வணங்கிச் சிவப்பேறு பெற்றவர் ஆவார்.

பெரிய புராணத்தில் வம்பறாவரிவண்டுச் சருக்கத்தில் ஆறு பாடல்களில் இவருடைய பெருமைகளைச் சேக்கிழார் போற்றிப் பாடியுள்ளார்.

திரு பூ மண்டபம்

நந்தவனங்கள் ஓடைகள், குளங்கள், முதலியவற்றிலிருந்து பறித்துக் கொண்டு வரப்பட்ட மலர்கள் இலைகள் தளிர்கள் ஆகியவற்றை ஆய்ந்து இறைவனுக்குச் சூட்டும் வகையில் இண்டை, மாலை, தாழ்வடம், எனப் பலவகையாகக் கட்டுமிடம் பூமண்டபம் என்றழைக்கப்பட்டது. பெரியபுராணம் இதனை திருப்பூமண்டபம் என்று குறிக்கின்றது. வடமொழியில் புஷ்ப மண்டபம் என்றழைக்கின்றனர்.

முன்னாளில் ஒவ்வொரு ஆலயத்திலும் மகாமண்டபத்தை ஒட்டி புஷ்ப மண்டபம் இருந்தது. இதில் மாலைகட்டிகள் எனும் பணியாளர்கள் இருந்தனர். கல்வெட்டுக்களில் பூமாலைமிடைவோர் என்று இவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

இம்மண்டபங்களில் அகன்ற உயரமான மேடை அமைக்கப்பட்டிருக்கும் இவற்றில் பூக்களைப் பரப்பி வைப்பர். இதன் ஓரத்தில் கல்லால் செய்யப்பட்ட சிறு தொட்டி இருக்கும். இதில் சுத்தமான நீரை நிறைத்து வைப்பர். பூக்களைக் கட்டும்போது நார்களை நனைக்கவும் கைகளை ஈரமாக்கிக் கொள்ளவும் இந்நீர் பயன்படுகிறது. இந்த மேடைக்கு அருகில் சற்று உயரம் குறைவான மேடை அமைக்கப்பட்டிருக்கும் பூமாலை தொடுப்போர் இதில் அமர்ந்து தமது பணியைச் செய்வர். பூக்களை பரப்பும் மேடைக்கும் மாலைத் தொடுப்போர் அமரும் மேடைக்கும் நடுவில் சிறு இடைவெளி இருக்கும். பூக்களை கட்டக்கட்ட நீண்டு வரும் சரங்களை இதில் விடுவர். இதன் மூலம் தொடுக்கப்படும் மாலைகள் கசங்காமல் இருக்கும்.

இத்தகைய மாலைக்கட்டும் பணிக்கான மேடை வடகாடு கோயிலூர் (திருஉசாத்தனம்) மந்திரபுரீசுவரர் ஆலயத்தில் இருக்கிறது. தனிமண்டபமாக இல்லாவிட்டாலும் மகா மண்டபத்தின் தென்கிழக்கு மூலையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தப் பூமேடை கருத்தைக் கவர்வதுடன் பழைய நாட்களை நினைவூட்டுகிறது.

பெரிய புராணத்தில் பூமாலை மண்டபத்தோடு தொடர்புடைய ஒரு வரலாற்றைக் காண்கிறோம்.

கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான் என்று சுந்தர மூர்த்திகளால் போற்றப்பட்ட அடியவர் பல்லவ மன்னனான கழற்சிங்கர் இவர் தம்தேவியோடும் பரிசனத்தோடும் பல ஆலயங்களை வணங்கித் திருவாரூரை அடைந்தார்.



பூ மேடையும் மலர்த்தொடுக்கும் அன்பரும்
படம் உதவி ஸ்ரீ. ஸ்ரீதரன், சென்னை

அங்கு அவர் பெருமானை வணங்கி ஆலயத்தை வலம் வந்து கொண்டிருந்தார். அவருடைய தேவி பள்ளித்தாமம் தொடுக்கும் திருப்பூ மண்டபத்தினை அடைந்து அம்மண்டபத்தின் அருகில் வீழ்ந்து கிடந்த புதிய மலரொன்றை எடுத்து முகர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

அங்குவந்த செருத்துணை எனும் அடியவர் அக்காட்சியைக் கண்டார். சிவஅபசாரமான அவளுடையசெய்கையைக்கண்டு கோபித்து வாளையெடுத்து பூவை முகர்ந்த அவளுடைய மூக்கை அரிந்தார். இரத்தம் பொங்க தேவி அலறிக் கீழே வீழ்ந்தாள். அவ்வேளையில் அரசர் அங்கு சேர்ந்தார். இச்செய்கையைச் செய்தது யார்? என்றார்.

செருத்துணையார் முன்வந்து அரசே நான்தான் அரசியின் மூக்கை அரிந்தேன் என்றதுடன் நடந்ததை உள்ளவாறு கூறினார்.

மன்னர் அடியவரை வணங்கி, அன்பரே! உமது செய்கை நன்று இருப்பினும் பூவை முகர்ந்த மூக்கை விட முகர எடுத்துக் கொடுத்த கையே குற்றவாளி அதுவே முதலில் தண்டிக்கத்தக்கது என்று கூறி தனது உடைவாளல் அரசமாதேவியின் கரத்தை வெட்டினார்.

அந்த அளவில் விண்ணவர்கள் இசை முழங்கி பூமழை பொழிந்தனர். சிவபெருமான் அருளால் (அவளுடைய மூக்கும் கையும்முன் போலாயின) அவர்கள் நெடுநாள் பணி செய்து வீடு பேறுபெற்றனர்.

கல்லை மலராக இட்ட சாக்கியர்



மென்மைக்கு உதாரணம் மலர்களாகும். வலிமைக்கு உதாரணம் கல்லாகும். மலர்கள் நம்மேல் விழும் போது உள்ளத்தில் மகிழ்ச்சி உண்டாகிறது. கல்விழும் போது வலியும் துன்பமும் உண்டாகின்றன.

நாம் எல்லோரும் மலரை பெருமான்மீது இட்டு அவரை மகிழ்வித்துநாமும் மகிழ்கிறோம் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான சாக்கிய நாயனார் கற்களையே மலர்களாகச் சிவன்மீது இட்டுப் பேறு பெற்றதைப் பெரிய புராணம் கூறுகிறது.

திருச்சங்கமங்கை எனும் தலத்தில் வேளாளர் குலத்தில் தோன்றியவர் சாக்கியர். இளமையில் சாக்கிய(பௌத்த) சமயத்தின் மீது பற்றுக் கொண்டு அதன் தத்துவங்களை உணர்ந்து பேரறிஞராக விளங்கினார். இவருடைய இயற்பெயர் மறைந்து சாக்கியர் எனும் பெயரே நிலைத்து விட்டது.

அவர் காஞ்சி நகருக்கு வந்து அங்கிருந்த பௌத்தக் குருமார்களுடன் கலந்து ஒழுகி, பலநூல்களைப் பயின்றார். இறுதியில் தாம்பயின்றதெல்லாம் பொய்யே என்று உணர்ந்தார். அவருக்குள் தேர்ந்த மெய்ப்பொருள் சிவமே என்ற உணர்வும் சிவனை வழிபட வேண்டும் என்ற எண்ணமும் மிகுந்தன.

எந்நிலையில் இருப்பினும் மனத்தால் சிவனை மறவாமல் இருப்பதே மெய்ப்பொருள் என்று தமது சாக்கியத் துறவி வேடத்துடனேயே இருந்துவந்தார்.

சிவபெருமானது திருவடிவாக விளங்கும் சிவலிங்கத்தைக் கண்டு மகிழ்ந்த பின்னரே உணவருந்துவது என்ற நியமத்தை மேற்கொண்டார். ஒரு நாள்ஒரு திடலின் வழியாகச் சென்று கொண்டிருக்கும் போது அங்கு சிவலிங்கம் ஒன்று இருக்கக்கண்டார். உடனே பூசை செய்யும் உணர்வுடன் ஒரு கல்லை எடுத்து அந்த லிங்கத்தின் மீது எறிந்தார்.

அவருள்ளத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. மறுநாள் அவ்வழியே செல்லும் போதும் சிவபெருமான் அருளினால் கல்லெறிந்து வழிபட வேண்டும் என்ற எண்ணம் மீண்டும் உண்டாயிற்று. இனி இதனை ஒரு தொண்டாகவே செய்ய வேண்டும் எனும் எண்ணம் மேலோங்கியது.

அதுமுதல் அத்திடலில் உள்ள சிவலிங்கத்தின் மீது தினமும் ஒருகல்லை எறிந்து மனதால் வணங்கிய பின்னரே உண்பது என்ற வழக்கத்தை மேற்கொண்டார். இவருடைய மனத்திண்மையை அறிந்து இவர் எறியும் கற்களைச் சிவபெருமான் மலர்களாகவே பாவித்து அவருடைய பூசையை அன்புடன் ஏற்றுக் கொண்டார்.

ஒரு நாள் சாக்கிய நாயனார் உணவுண்ண அமர்ந்தார். அவருக்கு அன்று தாம் சிவலிங்கத்தின் மீது கல்லெறியாதது நினைவுக்கு வந்தது. உடனே விரைந்துச் சென்று ஒரு கல்லையெடுத்து சிவபெருமான் மீது எறிந்தார்.

அந்நிலையில் சிவபெருமான் உமாதேவியோடு அவர்முன்னே தோன்றினார். சாக்கிய நாயனாரை அன்புடன் நோக்கித் தம்முடன் வருக என்று அழைத்துக் கொண்டு கயிலை மலைக்கு எழுந்தருளினார்.

சாக்கிய நாயனார் மறவாது நாள்தோறும் கல்லெறிந்து வழிபட்ட சிவமூர்த்திக்கு வீரட்டகாசர் என்பது பெயராகும். திறந்த வெளித்திடலில் இருந்த இம்மூர்த்திக்குப் பல்லவ மன்னர்கள் பெரிய ஆலயத்தை அமைத்தனர்.

இக்கோயில் காஞ்சீபுரம் பூக்கடை சத்திரத்திற்கு வடக்கே உள்ளது. முழுவதும் சிதைந்து போன இக்கோயிலை மீண்டும் புதியதாகப் பொலிவுடன் அமைத்துள்ளனர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையில் "வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே மறாவது கல்லெறிந்த சாக்கியர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று இவரைச் சிறப்பித்துள்ளார். இவர் வீடு பேறு பெற்ற நாள் மார்கழிப் பூராடம் ஆகும்.

சிவவழிபாட்டில் இலைகளும் தளிர்களும்

சிவபெருமானை மலர்களைக் கொண்டு அர்ச்சிப்பதைப் போலவே இலைகளாலும் தளிர்களாலும் பூசிக்கின்றனர். மகாபுராணங்களிலும் பூஜாபத்தி நூல்களிலும் வழிபாட்டிற்குரிய அனேக தளிர்கள், இலைகளைப் பற்றிய செய்திகள் உள்ளன. பூக்களால் பெருமானைப் பூசிக்க வேண்டும் என்பதைப் **"புண்ணியம் செய்தார்க்கு பூவுண்டு நீருண்டு அண்ணல் அது கண்டு அருள்புரியா நிற்கும்"** என்று அருளிச் செய்த திருமூலர் **"யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை"** என்று கூறுகிறார். புஷ்பவிதிகளைக் கூறும் நூல்களில் இலைகளும் தளிர்களும் மலருக்கு இணையானதாகவே குறிக்கப்பட்டுள்ளன.

புஷ்பவிதியில் வில்வம், வன்னி, பலா, எலுமிச்சை, நாரத்தை, கோங்கு, மாவிலங்கை, நொச்சி, நுணா, நெல்லி, கிளுவை, ஆகிய மலர்களைக் கொண்டு பூசிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தாலும். இவற்றின் மலர்கள் எளிதில் கிடைப்பதில்லை. எனவே இந்த மரம், செடி, கொடிகளிலுள்ள இலைகளைக் கொண்டே பூசிக்கின்றனர்.

கொடி வகையில் வெற்றிலைப் பூவைக் கொண்டு பூசிக்கலாம் என்று கூறப்பட்டிருந்தாலும் அப்பூவையோ இலைகளையோ கொண்டு பூசிக்கும் வழக்கம் இல்லை. வெற்றிலையை நிவேதனம் செய்கின்றனர். புதர் பூக்களாகக் குறிக்கப்பட்டுள்ள சுவர்ணபட்டி, சிவகரந்தை, விஷ்ணுகிரந்தி, திருநீற்றுப் பச்சை ஆகியவற்றின் பூக்களும் குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே மலர்வதால் அச்செடிகளின் இலைகளைக் கொண்டு பூசிக்கும் வழக்கம் அதிகமாக உள்ளது.

துளிர்த்து வரும் கொழுந்து இலைகளை இலக்கியங்கள் தளிர்கள், துளிர், குழை, பல்லவம், முதலிய பெயர்களால் அழைக்கின்றன. சிவபெருமான் தளிர்களைக் காதில் தோடாக அணிந்திருப்பதால் குழை கொள் காதினர் என்று அழைக்கப்படுகிறார். மேலும் சிவந்த கொழுந்து இலைகளை போன்றிருப் பதால் அவரைக் கொழுந்தீசர், சிவக்கொழுந்தீசுவரர் என்றும் பல்லவேசர் என்றும் அழைக்கின்றனர்.

மலர்களை நீரில் இட்டு பூசித்துச் சிவபெருமானுக்கு நீராட்டுவதைப் போலவே இலைகளையும் தளிர்களையும், நீரில் இட்டுப் பூசித்து முழுக்காட்டுகின்றனர். மலரிட்ட நீர் புஷ்போதகம் என்று அழைக்கப்படுவதைப் போலவே இவை தளோதகம், பல்லவோதகம் என்று அழைக்கப்படுகின்றன. நடைமுறையில் மாந்தளிர் அசோகந்தளிர், முதலியவற்றை நீரில் இட்டு திருமுழுக்காட்டுகின்றனர்.

இப்பகுதியில் மிக உயர்ந்ததாகப் போற்றப்படும் வில்வம், துளசி, வன்னி ஆகிய மூன்று இலைகளைப் பற்றியும், மா, அசோகம் ஆகிய தளிர்கள் இரண்டைப் பற்றியும் உள்ள செய்திகள் இடம் பெறுகின்றன.

வில்வம்

சிவவழிபாட்டிற்குரிய இலைகளில் முதன்மை பெற்றது வில்வமாகும். வில்வமரத்தடியில் வீற்றிருப்பதால் சிவபெருமானை வில்வேசர், வில்வனேசர், வில்வபதி எனப் பலவாறு அழைக்கின்றனர்.

ஒரு காம்பில் மூன்று இலைகளைக் கொண்டதாக வில்வம் உள்ளது. இலைகளைத் தனியாகப் பிய்க்காமல் மூன்றையும் காம்புடன் சேர்த்தே சிவமூர்த்தியின் பேரில் இட்டு அர்ச்சிக்க வேண்டும். இதனை சிவனின் மூன்று கண்களாகவும், முத்தலைச் சூலமாகவும், முப்பெருஞ் சக்தியாகவும், கருதிப் பூசிக்கின்றனர்.

ஐந்து இலைகளைக் கொண்ட வில்வம் பஞ்சவில்வம் எனப்படுகிறது. பதினோரு இலைகளைக் கொண்ட வில்வமும் உள்ளது. இவை ஏகாதசருத்ரவில்வம் என்றும் மகாவில்வம் என்றும் அழைக்கப்படுகிறன. பஞ்ச வில்வமரங்கள் சென்னையை அடுத்த கோவூர் ஆலயத்திலும், மகாவில்வமரங்கள் பர்வத மலையிலும் உள்ளன.

★ **காசி**யில் விசுவநாதருக்கு நடைபெறும் சப்தரிஷி பூசையின் போது வில்வ இலையில் சந்தனத்தால் இராமா என்று எழுதி அந்த இலைகளைப் பெருமானுக்குச் சாத்துக்கின்றனர்.

★ **வில்வ** தளங்கள் பொன்மலர்களுக்குச் சமமானதாகும். இவற்றை தண்ணீரில் அலசி மீண்டும் மீண்டும் சாத்தலாம். இது நிர்மால்யம் ஆகாது.

★ **வில்வத்தின்** பெருமைகளை வில்வமகாத்மியம் முதலிய நூல்களாலும் தலபுராணங்கள் மகாபுராணங்களில் உள்ள துணைச் செய்திகளாலும் அறிகிறோம்.

பொன், வெள்ளி, ஆகிய உலோகங்களால் வில்வ இலைகளைச் செய்தும் பெருமானுக்கு அணிவிக்கின்றனர். பொன்னரிமாலை, மாங்காய்மாலை, காசுமாலை போன்று இந்த வில்வ இலைகளைக் கோர்த்து வில்வ தள மாலைகளாகச் செய்து பல ஆலயங்களில் அணிவித்துள்ளனர்.

புற்றடிமண், போலவே, வில்வ மரத்தடி மண்ணும் தெய்வீகச் சக்தியும் மருத்துவ குணமும் கொண்டதாகப் போற்றப்படுகின்றது.

தன்னையறியாமலும், பக்தி இல்லாமலும் வில்வதளங்களைச் சிவலிங்கத்தின் மீது இட்டாலும் சிவபெருமான் அப்படி இடும் உயிருக்குச் சிவபூசையின் பலனைத் தந்து அருள்பாலிக்கின்றான். இதனை சிவராத்திரி கதைகள் பலவற்றால் அறியலாம்.

திருமுறைகளில் பல இடங்களில் கூவிளமலர் என்று வில்வமலர் குறிக்கப்பட்டாலும் அதைக் கொண்டு பூசிக்கும் வழக்கம் இக்காலத்தில் இல்லை.

பஞ்சவில்வம்

நொச்சி,கிளுவை, மாவிலிங்கம், விளா ஆகிய நான்கையும் கூவிளத்துடன் சேர்த்து பஞ்சவில்வம் என்று அழைக்கின்றனர். சிவனுக்குச் செய்யப்படும் பஞ்சமுகார்ச்சனையின் போது ஒவ்வொரு முகத்துக்கும் தனித்தனியாக இந்த ஐந்து வில்வபத்திரங்களால் அர்ச்சனை செய்கின்றனர்.

துளசி

துளசியைத் துளவம், துளசி பிருந்தா, என்ற பலபெயர்களால் அழைக்கின்றனர். இது திருமாலுக்கு உரியது என்றே அனைவரும் எண்ணுகின்றனர். சிவபெருமானைத் திங்கட்கிழமைகளில் துளசி இலைகளால் பூசிப்பவர் சகல ஐஸ்வர்யங் களையும் பெறுவர் என்று சிவமகாபுராணம் கூறுகின்றது.

இதில் வெண்துளசி, கருத்துளசி, நாய்த்துளசி, எனப்பலவகைகள் உள்ளன. அஷ்ட வீரட்டத்தலங்களில் ஒன்றான திருவிற்குடிக்கு பிருந்தை மயானம் என்பது பெயராகும். இங்குள்ள வீரட்டேசுவரர் ஆலயத்தைச் சுற்றிலும் ஏராளமான துளசிச் செடிகள் வளர்ந்து மணம் பரப்புகின்றன.

வன்னி

அக்னியிலிருந்து தோன்றிய மரம் வன்னியாகும். புளியமரத்தின் இலைகளைப் போன்ற சிறு இலைகளைக் கொண்ட இம்மரம் பஞ்சவில்வங்களில் ஒன்று. பல ஆலயங்களில் இது தலமரமாக உள்ளது. சிவபெருமானை வன்னி இலைகளால் அர்ச்சிப்பவரை சனி பகவான் அணுகாது தூரநின்று தொழுவான் என்றுப் புராணங்கள் கூறுகின்றன.

மாந்தளிர்

மாந்தளிர் மங்கலச் சின்னமாகும். இதனைக் கொண்டு அர்ச்சிக்கும் வழக்கம் முன்னாளில் இருந்தது. சிவபெருமான் மாந்தளிர்களை தோடாக அணிந்துள்ளார். திருவாவடுதுறையில் ஒரு பெண்மணி சிவபெருமானுக்குப் பொன்னாலான மாந்தளிர் ஒன்றைச் செய்தளித்தாள் என்று கல்வெட்டு கூறுகின்றது.

அசோகந்தளிர்

அசோகம் சோகங்களை மாற்றும் தன்மை உடையது. இதன் தளிர்களை நீரில் இட்டு அபிஷேகம் செய்கின்றனர். அப்போது அசோகாஷ்டகம் என்னும் துதி ஓதப்படுகிறது.

அஷ்டபுஷ்பம்

சிவபெருமானுக்கு அஷ்டபுஷ்பங்களைச் சாத்துதல் வழிபாட்டின் ஒரு அங்கமாகும். இறைவனுடைய அஷ்டமூர்த்தங்களின் பெயர்களான சர்வன், பவன் முதலான எட்டு பெயர்களைக் கூறி முறையே எட்டு மலர்களை எடுத்து இறைவன் திருமேனியில் சூட்டுவர். இதற்குரிய எட்டு மலர்களின் பெயர்களை பூஜாபத்தி நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. தேவாரத்துள் எண் மலரிட்டு வழிபாடு செய்வது அனேக இடங்களில் கூறப்பட்டுள்ளது.

சிவயோகிகள் சிவபக்தியின் முதிர்வில் தானே சிவமாகி விடுகிறார்கள் சித்தம் சிவமான நிலையில் யோக சாதகனின் மனத்தில் தோன்றும் அகிம்சை, இந்திரிய அடக்கம், சாந்தி, தயை, ஞானம் சத்தியம், தவம் பாவனை, என்ற எட்டையும் எண்மலர்கள் குறிப்பிடுகின்றனர். இவற்றை எல்லா இடத்திலும் எல்லா உயிர்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்திருக்கிறான் என்ற எண்ணத்துடன் மனதால் மௌனமாய் எண்ணிப் பூசிப்பதே அஷ்டபுஷ்பம் சாத்துதல் என்று சித்தர்கள் குறித்துள்ளனர். (விரிவைச் சிவமஞ்சரி பக்கம் 1519-20 காண்க).

மாமலர்க்கண்ணி உடனாய புஷ்பரதீஸ்வரப் பெருமான் அருளினால்
அன்பர்கள் மகிழ்ச்சியுடன் இனிது வாழ்க!!



உ
சிவமயம்
சடையிடை கங்கை தரித்தாய் போற்றி! சந்திர சேகரனே போற்றி ! போற்றி!!





ஸ்ரீ கங்காதரேஸ்வரர்

உயிர்கள் வாழ்வதற்கு அடிப்படைத் தேவையாக இருப்பது தண்ணீராகும். நீர் இல்லையென்றால் உலகில் உயிர்கள் வாழ முடியாது. இறைவனின் அருள்,மழையாகப் பொழிந்து மண்ணைச் செழிக்க வைக்கிறது. மனிதன் அதைத் தன் தேவைக்கேற்ப குட்டை, குளம், ஏரி, ஆகியவற்றில் சேமித்து வைத்துப் பயன்படுத்திக் கொள்கிறான், மழையற்ற காலங்களில் பூமிக்கடியிலுள்ள நீர் ஊற்றாகப்பெருகி பூமியைச் செழிக்கச் செய்கிறது,

நீர் நிலைகளை நாம் தெய்வமாகப் போற்றுகின்றோம். நதிகள் யாவும் பெண் தேவதைகளாகப் போற்றப்படுகின்றன. அவர்களில் மிக உயர்ந்தவளாக கங்கை விளங்குகிறாள். அனைத்து நீர் நிலைகளையும் கங்கையாகப் போற்றும் வழக்கம் நெடுங்காலமாக உள்ளது.

சிவபெருமானின் சடையில் கங்கை வாழ்கிறாள். அவள் பெயரால் அவர் கங்காதரர்,கங்காதீசுவரர் என்று பலவாறு அழைக்கப்படுகிறார். கங்கைக் கரையிலுள்ள காசி நகரில் அவர் பரிவாரங்களுடன் வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். தண்ணீரில் கங்கையும் தலங்களில் காசியுமே என்றும் அழியாத சிறப்பைப் பெற்றுள்ளன. வாழ்வில் மேன்மைபெற ஒரு முறையாவது கங்கையில் மூழ்கி, காசி விசுவநாதரைத் தரிசித்து, உளுந்தளவாவது கங்கை நீரைப் பருக வேண்டும் என்று புராணங்கள் கூறுகின்றன.பைரவர், முருகன், விநாயகர், வீரபத்திரர், கௌரி முதலான அனைத்து தெய்வங்களும் காசியில் விரும்பி வசித்துக் கொண்டிருக்கின்றனர்.

சிவமஞ்சரியின் இந்த நாற்பத்து ஏழாவது மலர் சிறப்பு மிக்க கங்கையையும் காசி விசுவநாதரையும் போற்றும் வகையில் அரிய செய்திகளைத் தாங்கி மலர்கிறது. கங்காதேவியின் தோற்றம் அவள் பூமிக்கு வந்த வரலாறு, சிறப்புமிக்க தென்னகத்துக் கங்கா தீர்த்தங்கள், ஆகமங்கள் கூறும் கங்கையோடு தொடர்புடைய சிவமூர்த்தங்கள் முதலான செய்திகள் இம்மலரின் முதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியில் காசி நகரின் பெருமைகளும் தென்னகத்துக் காசி விசுவநாதர் ஆலயங்கள் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

ஸ்ரீகங்காதேவி, விசாலாட்சி தேவி, மகா மங்கள கௌரியான அன்னபூரணி ஆகியோரும் காசி விசுவநாதப் பெருமானும் அன்பர்கள் அனைவருக்கும் சகல செல்வயோக மிக்க பெருவாழ்வை அளித்து அருள் பாலிக்க வேண்டுமென்று அவர்களின் பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்குகிறோம்.– சிவசுந்தரி

கங்கா தேவி சிந்தனைத் துளிகள்

உலகம் படைக்கப்பட்டபோது உயிர்கள் வாழ இறைவன் தண்ணீரைப் படைத்தான். அவை குளம். குட்டை, ஆறுகளாக இருந்தன, நெடுங்காலத்திற்குப் பின்னரே பகீரதன் தவம் செய்து கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தான் என்றாலும் உலகிலுள்ள நீர்நிலைகள் யாவும் கங்கையின் வடிவமாகவே போற்றப் படுகின்றன. நீர்க் கரைகளில் கங்கையைப் பூசிக்கின்றனர்.

கங்கையின் பல்வேறு பெயர்கள்

புராணங்களில் கங்கை பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறாள். நிகண்டுகள் அவள் பெயரைப் பட்டியலிட்டுக் கூறுகின்றன. அவற்றில் சிலவற்றையும் அதற்கான காரணத்தையும் காணலாம்.

பகீரதனால் பூமிக்கு அழைத்து வரப்பட்டதால் பாகீரதி; ஜான்ஹவி முனிவர் ஆசமனம் செய்து காதின் வழியாக வெளிவிட்டதால் ஜான்ஹவி, உக்ரமான தவத்தின் பலத்தால் பூமிக்கு வந்ததுடன் பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை அளிப்பதால் வரநதி , தேவர்கள் உலகில் வாழ்வதால் சுரநதி,. மூன்று உலகங்களிலும் ஓடுவதால் திரிபதகாமினி, மந்தாதாவின் புதல்வியாதலின் மந்தாகினி. சிவபெருமானின் ஜடையில் இருப்பதால் ஜடாமங்கை என்று பலவாறு அழைக் கப்படுகிறாள்.

கங்கைக் கரையும் – காராம்பசுவும்

உலகில் புனிதமான இடங்களில் முதன்மை பெற்றது கங்கைக் கரையாகும். அதன் கரையில் செய்யும் புண்ணியம் கோடியாகப் பெருகும்.அதுபோலவே செய்யும் பாவம் கோடி மடங்காகும்.பாவச் செயல்களில் மிகக் கொடிய பாவம் பசுக்களை வதைப்பதாகும். முன்னாளில் தருமசாசனம் எழுதிவைத்தவர்கள் அதன் முடிவில் இந்த தர்மத்திற்கு இடையூறு செய்பவர்கள், கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவம்கொள்வராக என்று எழுதும் வழக்கம் இருந்தது. இதன் மூலம் கங்கைக் கரையின் சிறப்பை உணர முடிகிறது.

காங்கி அம்மனும் – கங்கையம்மனும்

கங்கு என்பது பிழம்பற்ற தீ ஆகும். பெருந்தீ மூட்டி அதில் வீழ்ந்து தெய்வநிலை பெற்ற பெண்கள் காங்கியம்மன் என்றழைக்கப்பட்டனர்.திருப்பதியில் இருக்கும் காங்கியம்மன் தனிப் புகழ் பெற்றதாகும்.இவளுடைய சேடி மாதங்கி என்று அழைக்கப்படுகிறாள்.

இத்தெய்வ வழிபாடு வடாற்காடு மாவட்டங்களிலும், செங்கை, காஞ்சிபுரம் மாவட்டங்களிலும் ஆங்காங்கு வசித்துவரும் தெலுங்கு மொழி பேசும் மக்களிடையேயும் சிறந்திருந்தது. காலப்போக்கில் இவை திருப்பதி கங்கை யம்மன் என்று அழைக்கப்பட்டன. சென்னையில் திருப்பதி கங்கையம்மனுக்குப் பல இடங்களில் ஆலயங்கள் உள்ளன. குடியாத்தத்தில் நடைபெறும் கங்கையம்மன் ஜாத்திரா (விழா) தனிச்சிறப்புப் பெற்ற தாகும்.

இந்த அம்மனுக்கும் பெருந்தெய்வமான கங்காதேவிக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்றாலும் காலப் போக்கில் காங்கியம்மன் கோயில்கள் யாவும் கங்கையம்மன் கோயில்களாகிவிட்டன.அவற்றின் முகப்பில் சுதைச் சிற்பங்களாக கங்கையின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளன.

கங்கையின் ஆயிரம் பெயர்கள்

கங்கைக்கு ஆயிரம் முகங்களும் ஆயிரமாயிரம் கைகளும் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. திருமுறைகளில் அனேக இடங்களில் கங்கை ஆயிரம் முகங்களுடன் சித்தரிக்கப்பட்டுள்ளாள்.

மையறு மனத்தனாய பகீரதன் வரங்கள் வேண்ட ஐயமில் அமரர் ஏத்த
ஆயிரம் முகமதாகி வையகம் நெளியப் பாய்வான் வந்திழி கங்கை

என்று குறிக்கப்பட்டுள்ளது. காசிக் கண்டத்தில் கங்கையின் ஆயிரம் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றை கூறி கங்கையை வழிபடுகின்றனர். கங்கைக்குச் செல்ல முடியாதவர்கள் இதனைப் பாராயணம் செய்யும் போதெல்லாம் கங்கை யில் மூழ்குகின்ற பயனை அடைகின்றனர் என்று கூறப்படுகிறது.

கங்கையைப் போற்றும் துதிநூல்களில் ஶ்ரீதர ஐயாவாள் இயற்றிய,"கங்காஷ்டகம்" சிறப்புப் பெற்ற தாகும்இந்த துதியின் பயனாக கங்கை அவர் வீட்டில் பொங்கி வந்தாள்.

கங்கை பூமிக்கு வந்த கதை

சிவபெருமானின் அருளானது அழகிய பெண் வடிவம் தாங்கி அவரிடமிருந்து வெளிப்பட்டது. அவள் ஒரு சமயம் இமய மன்னனுக்கு இரட்டைக் குழந்தைகளாகத் தோன்றினாள். அவன் மூத்தவளுக்கு கங்கை என்றும் இளையவளுக்கு பார்வதி (உமா) என்றும் பெயர் சூட்டி வளர்த்தான். மூத்தவளான கங்கை பெண் வடிவாகவும் நதியின் வடிவாகவும் விளங்கினாள்.

ஒரு சமயம் பிரம்மா இமய மன்னனிடம் நதி வடிவு கொண்ட கங்கையைத் தனது உலகிற்குத் தரும்படி வேண்டினார். மன்னன் சம்மதிக்கப் பிரமன் அவளை சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்று தேவகங்கை என்று பெயர் சூட்டி வழிபட்டு வந்தான். அவளிடத்தில் நீராடி தேவர்கள் புண்ணியமடைந்தனர்.

பூமண்டலத்தில் இட்சுவாகு வம்சம் தலை சிறந்த பெருமை பெற்றதாகும். அது சூரியனின் வழி வந்ததால் இரவிகுலம் எனப்பட்டது. ராமபிரான் இந்தக்குலத்தில் தோன்றியவராவார்.

இந்த வம்சத்தில் சகரன் என்ற மாமன்னன் தோன்றினான். அவன் சிறந்த நீதிமான் உயர்ந்த குணங்களைக் கொண்டவன். அவன் காசிபமுனிவரின் மகளான கேசினி என்பவளையும், பிறகு சுமதி என்பவளையும் மணந்தான். அந்த இரண்டு மனைவியரோடு சுகமாக வாழ்ந்தான். நீண்ட காலமாகியும் அவனுக்குப் புத்திரப்பேறு வாய்க்கவில்லை. அதனால் இமயமலைச்சாரலுக்குச் சென்று நூறு ஆண்டுகள் தவம் செய்தான். அவனுடைய குணங்களின் சிறப்பால் மகிழ்ந்த பிருகு முனிவர் அவனுக்கு அருள்புரிய எண்ணினார்.

அரசனிடம், அன்பனே ஞானியும், சிறந்த வீரனுமான ஒரு புதல்வன் வேண்டுமா? அல்லது கோபமும், ஆத்திரமும், அவசர புத்தியும் படைத்த அறுபதாயிரம் புதல்வர்கள் வேண்டுமா? என்று கேட்டார்.

கேசினி தனக்கு ஒரு புதல்வன் போதுமென்றாள். சுமதி 60,000 புத்திரர் வேண்டுமென்றாள். முனிவர் அப்படியே ஆகட்டும் என்று கூறி அருள்புரிந்தார். உரிய வேளையில் கேசினிக்கு ஓர் அழகிய புதல்வன் பிறந்தான். அவனுக்கு அஸமஞ்சன் என்று பெயர் சூட்டினார்.

சுமதிக்கு வட்டமான மாமிசப் பிண்டம் பிறந்தது. அதைப் பிளந்தபோது அளவால் சிறிய அறுபதாயிரம் பிண்டங்கள் உயிர்த்துடிப்புடன் இருந்தன. தாதியர் அந்த சிறு பிண்டங்களை நெய்க்குடங்களில் இட்டு வளர்த்தனர். சில நாட்களில் அவை வளர்ந்து பாலகர்களாயின.



அவர்கள் குடங்களை உடைத்துக் கொண்டு வெளியே வந்தனர். அவர்கள் ஆற்றல் உள்ள வீரர்களாக விளங்கினர்.

அஸமஞ்சன் இயற்கையிலேயே பரமஞானியாக விளங்கினான். அவனுக்கு உலகப்பற்றில் விருப்பமில்லை. எனவே கொடியவன் போல் நடிக்கத் தொடங்கினான். சக பாலகர்களை அழைத்துச் சென்று குளத்தில் மூழ்கடித்துக் கொன்றான்.(பின்னாளில் அந்தக் குழந்தைகளை மீண்டும் உயிர்ப்பித்துப் பொற்றோர்களிடம் அளித்தான் என்று புராணம் கூறுகிறது.) அதனால் எல்லோரும் அவனை வெறுத்தனர். அரசன் அவனை நாடு கடத்தினான். அவனுக்கு ஒரு குமாரன் இருந்தான். அவனுடைய பெயர் அம்சுமான். அவன் சிறந்த இளவரசனாக விளங்கினான்.

ஒரு சமயம் சகரன் பெரிய அசுவமேத யாகத்தைச் செய்ய விரும்பி அதற்கான பெரிய ஏற்பாடுகளைச் செய்தான். உலகத்திலுள்ள எல்லோருக்கும் உரியவாறு அழைப்பு அனுப்பினான். குறித்த நல்ல வேளையில் யாகம் தொடங்கப்பட்டது. யாகக் குதிரைக்குக் காவலனாக அம்சுமானை நியமித்தனர்.

யாகத்தைக் கெடுக்க விரும்பிய இந்திரன் அந்த யாகத்தின் இறுதிநாளில் குதிரையை கவர்ந்து சென்று

பாதாளத்தில் கபில முனிவர் ஆசிரமத்தருகில் கட்டிவிட்டுச் சென்றான். குதிரையைக் காணாமல் அம்சுமான் திகைத்தான். அவனுக்குக் காப்பு கட்டப்பட்டிருந்ததால் எல்லை தாண்டிச் சென்று அதைத் தேடமுடியாத நிலையிருந்தது.

சகரன் தன் அறுபதாயிரம் புதல்வர்களிடம், குமாரர்களே! இந்தப் பூமண்டலத்தில் நமக்கு யாரும் எதிரிகளில்லை. வானுலகத்திலும் இல்லை. என்றாலும், எல்லா இடங்களிலும் தேடுங்கள். பாதாளத்திலும் தேடுங்கள் என்றான்.

அவர்கள் பூமண்டலம் முழுவதும் தேடியலைந்தனர். குதிரை கிடைக்காததால் பாதாளத்தை அடைய பூமியைப் பிளந்தனர். எதிர்ப்பட்ட நாகர்கள், யட்சர்கள் முதலிய பாதாளவாசிகளைக் கொன்று குவித்தனர். இறுதியில் பாதாளத்தில் விஷ்ணுவின் அம்சமான கபில முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்று அட்டகாசம் புரிந்தனர். அங்கு தவம் செய்து கொண்டிருந்த கபிலமுனி கோபம் கொண்டு நீங்கள் எரிந்து சாம்பலாகுக என்று சபித்தார்.கண நேரத்தில் அவ்வளவு பேரும் எரிந்து சாம்பலாயினர்.

நெடுநாட்களாகியும் அவர்கள் திரும்பி வராததால் சகரன் அம்சுமானின் காப்பை அவிழ்த்து அவர்களைக் கண்டுபிடித்துக் கொண்டுவருமாறு அனுப்பினான். அவன் எதிர்ப்பட்டவர்களை விசாரித்துக் கொண்டு அவர்கள் சென்ற வழியே சென்றான். பாதாளத்திற்குச் சென்று திசையானை களையும் அஷ்ட நாகங்களையும் வணங்கி ஆசிபெற் றான். இறுதியில் கபிலமுனியின் ஆசிரமத்தை அடைந்து, அவரைக் கண்டு வணங்கினான். அவர் மூலம் சாம்பல் குவியலாகி விட்ட தனது சிற்றப்பன் மார்களின் நிலையைக் கண்டு வருந்தினான். கபிலமுனியின் அருள் பெற்று குதிரையை ஓட்டிக் கொண்டு யாகசாலைக்கு மீண்டு வந்தான்.

சகரன் தன் புதல்வர்கள் அடைந்த கதியைக் கேட்டு வருந்தினான் என்றாலும் யாகத்தை நிறைவு செய்தான். சில காலத்திற்குப்பிறகு அம்சுமானை அரசனாக்கி விட்டு இமய மலைக்குச் சென்று தவம் மேற்கொண்டான். தனது புதல்வர்களின் ஆன்மா மேன்மை பெறக் கடுந்தவம் புரிந்தான். அது பயன்தரவில்லை. இறுதியில் புண்ணிய பலத்தால் சொர்க்கம் புகுந்தான்.

அம்சுமான் பல ஆண்டுகள் ஆண்டபின் தன் மகனான திலீபனை அரசனாக்கினான். தனது சிற்றப் பன்மார் நற்கதி அடைய ஓராயிரம் ஆண்டுகள் தவம் செய்தான். பயன் ஏதுமின்றித் தான்மட்டும் சுவர்க்கம் புகுந்தான்.

திலீபன் நிறைவாக அரசாண்டு காலம் கழிந்தபின் தன் மகன் பகீரதனுக்கு முடிசூட்டிவிட்டு வானப்பிரஸ்தம் முயற்சியை மேற்கொண்டான். தனது சிறிய பாட்டன்மார் அறுபதாயிரவரும் நற்கதி அடைய ஓராயிரம் ஆண்டுகள் தவம் செய்தான். பயன் ஏதும் விளையவில்லை. அவன் மனம் சோர்ந்தான் என்றாலும் புண்ணிய பலத்தால் சுவர்க்கம் புகுந்தான்.

பகீரதன் தனது முன்னோர்களை நற்கதி அடையச் செய்ய விரும்பி அதற்கான முயற்சி மேற்கொண்டான். கோகர்ணம் சென்று கடுந்தவம் மேற்கொண்டான். அவனு டைய தவத்தால் மகிழ்ந்த பிரம்மதேவன் அவனுக்குக் காட்சியளித்தார். அவரிடம் பகீரதன் தமது முன்னோர் களை நற்கதி அடையச் செய்யும் வழியைக் கூறுமாறு வேண்டினான்.

பிரம்மதேவன், பகீரதா, உனது பாட்டனும் தந்தையும் பலவாறு முயன்றும் வெற்றிபெறமுடியாது போய் விட்டனர், என்றாலும் நீ விடாது முயற்சியுடன் இருக்கி றாய். அதற்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். வானு லகத்திலிருக்கும் கங்கையை பாதாளத்திற்கு அழைத்துச் சென்று அந்த நீரால் அவர்களுடைய சாம்பல் எலும்பு களை நனைத்தால், அவர்கள் நற்கதி பெறுவார்கள் என்றார். அவன் வழி தெரிந்ததால், மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். அவனுக்கு ஆசிகளைக் கூறி பிரமன் மறைந்தார்.

பகீரதன் வானுலகம் சென்றான். கங்கையைக் கண்டு தன்னுடன் பாதாளத்திற்கு வந்து தனது முன் னோர்களின் எலும்பையும் சாம்பலையும் நனைத்து அவர்களை நற்கதி அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டான். அவள் அரசே! அப்படியே செய்யலாம். ஆனால் நான் வானுலகத் திலிருந்து பாய்ந்து பூமியில் விழுந்தால், அது தாங்காது சுக்கு நூறாகிவிடும். என்னை தாங்கிப் பிடித்து பூமியில் விட வேண்டும். அதற்கு ஏற்ற ஏற்பாடுகளைச் செய்தால் உன்னுடன் வருகிறேன் என்றாள்.

அவன் மகாபராக்கிரமசாலிகளும், தவ ஆற்றல் உள்ளவர்களுமான பலரிடம் சென்று கங்கையைத் தாங்கி பூமியில் விட உதவும்படி கேட்டான். எல்லோருமே கங்கை யின் ஆற்றலைத் தாங்கமுடியாது என்று கூறிவிட்டனர். திருமால், பகீரதனிடம் சிவபெருமான் ஒருவரே அவளு டைய ஆற்றலைத் தாங்க வல்லவர், அவரிடம் செல்க என்றார்.

பகீரதன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தான். அவனுடைய ஒப்பற்ற தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவன் முன்னே தோன்றினார். பகீரதனிடம், அன்பனே உனது மன உறுதியையும் முன்னோர்களுக்குக் நற்கதி கிடைக்க நீ மேற்கொள்ளும் முயற்சிகளையும் நன்கு

அறிவேன். கங்கையை அழைத்து வர நான் உனக்கு உதவுகிறேன். என் சடையை விரித்துப் பிடிக்கிறேன். அதில் குதித்துப் பின்னர் அவளைக் கீழே பாயச் சொல். அவளை பத்திரமாகவும், பூமிக்குச் சேதமில்லாமலும் தவழ விடுகி றேன் என்று கூறி ஆசிகள் மொழிந்தார்.

அவரிடம் விடைபெற்றுக் கொண்ட பகீரதன் கங்கை யிடம் சென்றான். தாயே! நீங்கள் பூமிக்கு வரும் போது தங்களை தனது சடையில் ஏற்று பூமியில் விடுவதாகச் சிவபெருமான் வாக்களித்துள்ளார். தாங்கள் என்னுடன் வந்தருள் புரியவேண்டு மென்றான்.

கங்கை பெருத்த ஓசையுடன் பூமியை நோக்கிப் பாய்ந்தாள். பெருமான் வைரவ வேடத்துடன் சூலத்தால் சடையை விரித்துப் பிடித்தார். அதில் அவள் பாய்ந்தாள். அவள் மனதில் இந்த சிவன் எனது ஆற்றலைத் தாங்க வல்லவனா? சடையுடன் இவனையும் சேர்த்து உருட்டித் தள்ளிக் கொண்டு செல்வேன் என்று அகங்காரத்துடன் எண்ணினாள். அவளுடைய எண்ணத்தை உணர்ந்த சிவபெருமான் அவளைச் சடையுடன் சுருட்டிக் கட்டிக் கொண்டார். அவள் திணறி, வெளியேற வழியின்றித் திகைத்தாள்.

அவள், விழுந்து நெடுங்காலமாகியும் சடையை விட்டு வெளியே வராததால், பகீரதன் கவலை அடைந் தான். மீண்டும் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந் தான். பெருமான் அவனிடம் கங்கையின் கர்வத்தை அடக்கவே இவ்வாறு செய்தேன், அவளை இப்போது வெளியே விடுகிறேன், நீ அழைத்துச் செல்க என்றார்.

தன் சடையிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறாக கங்கையை வெளிப்படுத்தினார். அவளை நந்தி தாங்கி இமயத்தில் வெளிவிட்டார். அவள் இமயத்தின் மீதிருந்து பயணத்தைத் தொடங்கினாள். பகீரதன் வழிகாட்டிக் கொண்டே வந்தான். கங்கையும் தொடர்ந்து வந்தாள். அவளிடத்தில் மீன்கள், சிம்சுமாரம், முதலைகள் ஆகியன துள்ளின.அவள் சென்ற வழியில் ஜான்ஹவி முனிவரின் ஆசிரமம் இருந்தது. அந்த ஆசிரமத்தை அலைக் கரங் களால் உருட்டித் தள்ளியதுடன் ஆசிரமப் பொருட்களை யும் அடித்துச் சென்றாள். கோபம் கொண்ட முனிவர் அவளைச் சுருக்கி (குடித்து) ஆசமனம் செய்து விட்டார்.

பகீரதன் மனம் கலங்கினான். அவரைப் பணிந்து கங்கையை வெளியிடும்படி வேண்டினான். கங்கை யின் கர்வமும் அடங்கியது. முனிவர் அவளைத் தனது வலது செவி வழியாக வெளியே விட்டார். அவரி டமிருந்து வெளிப்பட்டதால் அவளுக்குச் ஜான்ஹவி என்ற பெயரும் உண்டாயிற்று.

கங்கை பூமிக்கு வந்த நாள்

கங்காதேவி பூமிக்கு வந்த நாள் வைகாசி மாதம் சுக்லபட்சம் திருதியை திதி - செவ்வாய்க் கிழமைஅஸ்தநட்சத்திரம் கூடிய நன்னாளாகும் நடைமுறையில் ஆனி மாதத்து வளர்பிறை தசமி யை கங்கை பூமிக்கு வந்த தினமாகப் போற்றி கங்கா தசமி, கங்கா தசஸரா என்று கொண்டா டுகின்றனர்.

பகீரதன் அவளைப் பாதாளத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றான். அங்கே திசை யானைகளை வணங்கிய பின் அவர்கள் கபில முனிவரின் ஆசிரமத் தை அடைந்தனர் கபில முனிவரின் அருளுடன் அங்கே இருந்த எலும்பு சாம்பற் குவியல்களை கங்கை நனைத்துப் புனிதப்படுத்தினாள். அந்தக் கணத்திலேயே சகர புத்திரர்களும், பகீரதனின் பாட்டானார்களான அறுபதாயிரவரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் மேன்மை பெற்றுச் சுவர்க்கம் அடைந்தனர். பகீரதனை அவர்கள் ஆசீர்வதித்தனர்.

அன்றுமுதல் கங்கை முன்று உலகங்களிலும் ஓடி அவற்றைச் செழிப்பாக்கி வருகிறாள். மக்களுக்குப் புனிதம் அளிக்கிறாள்.கங்கை முன்று உலகங்களில் தவழ்ந்து ஓடுவதால் திரிபதா, ஸீசாக்ஷீஸ், திரிபத காமினி, திரைலோக்கி, என்று பல பெயர்களால் அழைக் கப்படுகிறாள்.

அவள் ஏழு கிளைகளாகப் பிரிந்து பயணத்தைத் தொடங்கினாள். கிழக்கு நோக்கியவாறு ஓடிய கிளைகள் ஹ்லாதினி, பாவனி, நளினி என்று அழைக்கப்பட்டன. மேற்கு நோக்கிப் பாய்ந்தவை ஸுசக்ஷுஸ் , ஸுபைதா, ஸிந்து என்று அழைக்கப்பட்டன. ஏழாவது பிரவாகம் கங்கை எனும் பெயருடன் பொங்கி ஓடத் தொடங்கியது.

கங்கை உற்பத்தியாகும் இடமான காங்கோத்திரியில் கங்கைக்கு ஆலயம் உள்ளது. இந்த பள்ளத்திற்கு முழுவதும் ருத்ரஹிமாலயம் எனப்படுகிறது. இங்கு பகீரதன் தவமிருந்த பாறை உள்ளது.

ஹரித்துவார் காசி முதலிய புனிதத் தலங்களில் கங்கைக்கு அதன் கரையில் சிறப்பு வழிபாடு கள் நடைபெறுகின்றது. சங்கு சேகண்டி, உடுக்கை முதலியவற்றை முழக்கி கங்கையைப் போற்றிப் பாடுகின்றனர்.ஆரத்தி தூபதீபம் முதலியவற்றைக் காட்டி, ஆலவட்டம் வீசுதல் கவரி வீசுதல் முதலிய உபசாரங்களையும் செய்வர். இலைகளில் செய்த கிண்ணங்களில் மஞ்சள், குங்குமம், மலர்களை வைத்து சிறிய அகல்களை ஏற்றி நீரில் மிதக்க விடுகின்றனர். கங்கை நீரில் இவை மிதந்து செல் வது கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது.

திருமுறைகளில் கங்கை

தெய்வத் திருமுறை நூல்களில் பகீரதன் தவமிருந்து கங்கையை பூமிக்குக் கொண்டுவந்தது, சிவன் அவளை அடக்கித் தனது சடையில் ஏற்று பின்னர் வெளிவிட்டது. முதலிய செய்திகள் விரிவாகக் கூறப் பட்டுள்ளன.

பகீரதன் வேண்டுகோளை ஏற்று அவர் ஆயிரம் முகத்துடன் பாய்ந்து வரும் கங்கையைத் தனது சடையில் ஏற்றதைச் சாய்க்காடு பதிகத்தில்,

மையறு மனத்தனாய பகீரதன்
வரங்கள் வேண்ட
ஐயமில் அமரர் ஏத்த
ஆயிரம் முகமதாகி
வையகம் நெளியப் பாய்வான்
வந்திழி கங்கையென்னும்
தையலைச் சடையில் ஏற்றார்

என்றுதிருஞானசம்பந்தர்அருளிச்செய்துள்ளார்.மேலும்

அஞ்சையும் அடக்கி ஆற்றல்
உடையோனாய் அனேககாலம்
வஞ்சமில் தவத்துள் நின்று
மன்னிய பகீரதற்கு
வெஞ்சினமுகங்களாகி
விசையொடு பாயும்
கங்கைசெஞ்சடை ஏற்றவர்

என்றும், வேறொரு பதிகத்தில் பகீரதன் செய்த அருந்தவத்தைக் கண்டு அருள்புரிய எண்ணி கங்கையைச் சடையில் ஏற்று அருள் செய்தார் என்பதை,

பாரகம் விளங்கிய பகீரதன்
அருந்தவம்
முயன்ற பணிகண்டு ஆர்
அருள் புரிதலை
கொள் கங்கை சடையேற்ற அரன்

என்றும் குறித்துள்ளார். அப்படியேற்று அவளை ஒற்றைச் சடையில் கட்டிவைத்ததை,

கடுத்துவரும் கங்கை தன்னைக் கமழ்சடை
யொன்றோடாமே தடுத்தவர்

என்றும் அவளை மறைத்ததை

கங்கையோர் வார்சடைமேறி கரந்தான்
கங்கையாளை கமழ்சடைமேற் கரந்தான்

எனவரும் தொடர்களாலும் போற்றுகின்றார்.

ஆற்றல்மிக்க அவளைத் தமது ஒற்றைச் சடையில் கட்டினார் என்பதை,

தாழ்தரு புன்சடை ஒன்றினை வாங்கித்
தன்மதியம் அயலே ததும்ப
வீழ்தருகங்கைகரந்தார்வேட்கள நன்நக ராரே

என்ற வரிகளால் குறித்துள்ளார்.

சடையில் மறைத்து வைத்திருந்த கங்கையைப் பகீரதன் மகிழ வெளிவிட்டதைக் கண்டு பார்வதி கோபித்தாள். அந்தக் கோபத்தை நீக்க வேண்டிப் பெருமான் சாமவேதம் பாடினார். அதனைக் கேட்டும் அவள் கோபம் தணியவில்லை. பெருமான் நடன மாடினான். அதைக் கண்டு அவள் கோபம் நீங்கி னாள். இதனை திருநாவுக்கரசர்,

சூடினார் கங்கையாளை சூடிய
துழனி கேட்டாங்கு
ஊடினாள் நங்கையாளும்
ஊடலை ஒழிக்க வேண்டி
பாடினார் சாமவேதம் பாடிய
பாணியாலே
ஆடினார் கெடிலவேலி அதிகை
வீரட்டனாரே

என்று பாடியுள்ளார்.

தன்னில் மூழ்குபவர்களுக்குப் புனிதம் தருவது, மேன்மை தருவது என்று பல பாடல்களில் கங்கை போற்றப்படுகிறாள். பூங்கங்கை, பொலிகங்கை, சுர கங்கை என்று பலநூறு அடைமொழிகளால் சிறப்பிக் கப்படுகிறாள்.

அப்பரடிகள் கங்கை மணாளனாகச் சிவபெரு மானை பல இடங்களில் துதிக்கிறார். அனேக இடங் களில் பகீரதன் தவம் செய்தது, கங்கை வந்தது சிவ பெருமான் அவளைச் சடையில் ஏற்றது. பின்னர் அவளை வெளி விட்டது. அதைக் கண்டு உமாதேவி கோபித்தது முதலான நிகழ்ச்சிகள்தனிச்சிறப்புடன்கூறப்பட்டுள்ளன.

கங்கை மணவாளன்

கங்கையைச் சிவபெருமானின் மனைவியாகக் கொள்ளும் வழக்கம் இல்லை என்றாலும், நெடும்பரம் சிவாலயம், சிறுவாபுரி அகத்தீசுவரர் ஆலயம் முதலியவற்றில் அவரை கங்கை கௌரியுடன் காண்கிறோம். இவை அழகிய உலா திருமேனிகளாகும். பச்சையம்மன் ஆலயங்கள் சிலவற்றில் கங்கை கௌரி உடனாய சிவபெருமானை அமைத்துள்ளனர்.காஞ்சிபுரம் அம்பி பச்சையம்மன் ஆலயத்தில் கங்கை கௌரி உடனாய பரமேசுவரன் சுதைச் சிற்பமாகக் காட்சியளிக்கிறார்.

கங்கை – யமுனை – சரஸ்வதி



உலகைப் படைத்து, காத்து, அழித்து முத்தொழில் நடத்தும் மும்மூர்த்திகளைப் போலவே சமய வாழ்வில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய நதிகளும் சிறப்பு பெற்றுள்ளன.

கங்கை நதியும் யமுனை நதியும் உத்தர பிரதே சத்தி லுள்ள அலகாபாத்திற்கு அருகில் ஒன்று கூடுகின்றன. அங்கு சரஸ்வதி நதி கண்ணுக்குப் புலனாகாமல் பூமிக்கு அடியிலிருந்து வந்து கலப்பதாகப் புராணங்கள் கூறுகின் றன. இந்த இடமே திரிவேணி சங்கமம் என்று அழைக்கப் படுகிறது. கங்கையின் புனிதமான இடங்களில் இதுவே முதன்மை பெற்றதாகும்.

திரிவேணி சங்கமத்தில் சிவபெருமான் முத்தீசுவர ராக எழுந்தருளியுள்ளார். இங்கு கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூவரும் எழுந்தருளியுள்ள தனி ஆலயம் உள்ளது. இதனைத் திரிவேணி ஆலயம் என்றழைக்கின்றனர்.

கங்கை சிவபெருமானின் தேவியாவாள். யமுனை மகாலட்சுமியின் அம்சமாகத் தோன்றியவள். கங்கைக் கரையில் சிவபெருமான் விரும்பி உறைவதைப் போலவே திருமால் யமுனைக் கரைகளில் விரும்பி வசிக்கிறார். அவருக்கு யமுனைத்துறைவன் என்பது பெயர். கண்ணன் லீலைகள் புரிந்து மகிழ்ந்த பிருந்தாவனம் யமுனையின் கரையில்தான் உள்ளது.

சரஸ்வதி பிரம்மனின் தேவியாகத் திகழ்கிறாள். சரஸ்வதி நதியை வேதங்கள் புகழ்கின்றன. அதன் கரையில் அனேக கல்விச் சாலைகள் அமைந்தி ருந்ததைப் புராணங்களின் மூலம் அறிகிறோம்.


காஞ்சிபுரம் காசிவிசுவநாதர் ஆலயத்திற்கு முன் னுள்ள முத்தி மண்டபத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூவரின் திருவுருவங்களும் புடைப்புச் சிற்பங் களாக உள்ளன.

மூன்று ஆறுகள் கூடுமிடங்களை வடமொழியில் திரிவேணி சங்கமம் என்றும், தமிழில் முக்கூடல் எனவும் அழைக்கின்றனர்.

காஞ்சிபுரத்திற்குக் கிழக்கில் திருமுக்கூடல் என்ற ஊர் உள்ளது. இது தட்சிணப்பிரயாகை என்றும் தென் திரிவேணிசங்கமம் என்றும் போற்றப்படுகிறது. நந்தி மலையில் சிவனருளால் கங்கையின் கூறாகத் தோன்றிய நதி பாலாறு. செய்யவனாகிய முருகன் கை வேலால் உண்டான ஆறு செய்யாறு (இது திருமகளின் கூறாகும்). சரஸ்வதி பெருகி நதியாக ஓடி வந்த ஆறு வேகவதியாறு. இப்படி மூன்று தேவியரின் அம்சமாகத் தோன்றிய மூன்று நதிகளும் கூடுமிடமே திருமுக்கூடல் ஆகும். இவை கங்கை, யமுனை,சரஸ்வதியை நினை வூட்டிக் கொண்டிருக்கின்றன.

இதன் கரையில் மும்மூர்த்திகளையும் தம்முள் இணைத்துக் கொண்டுள்ள திருமால் கோயில் கொண்டு ள்ளார். அப்பன் வெங்கடேசப் பெருமாள் என்ற அப் பெருமான் நதிகளின் சங்கமத்தை நோக்கியவாறு நின்றுள்ளார். சற்று தொலைவில் ஆனந்தவல்லி உடனாய ஆதிபுரீசுவர் ஆலயம் உள்ளது. இதுபோன்று தென்னகமெங்கும் மூன்று ஆறுகள் கூடுமிடங்களான முக்கூடல் தீர்த்தங்கள் அனேகம் உள்ளன.

கங்கையம்மன் சந்நிதிகள்



கங்காதேவி – திருவிடை மருதூர்

கங்கையைப் புனித நதியாகப் போற்றி வழிபடுவதால் அவளுக்கெனத் தனி ஆலயங்களை அமைக்கும் வழக்கமில்லை. தென்னகத்தில் சில சிவாலயங்களில் மட்டுமே அவளுடைய திருவுருவத்தைத் தனிச் சந்நிதியில் வைத்து வழிபடுகின்றனர்.

குடந்தை காசி விசுவநாதர் ஆலயத்தில் நவ தீர்த்த தேவியர் சந்நிதியுள்ளது. இதில் கங்கை,காவிரி, நர்மதை, சிந்து முதலாகிய ஒன்பது நதிப் பெண்களின் திருவுருவச் சிலைகள் ஒரே வரிசையில் இடம் பெற்றுள்ளன. நெடிய உருவில் திகழும் இவை கண்ணையும் கருத்தையும் கவர்வதாகும். மகாமகதீர்த்தத்தை நோக்கியவாறு அமைந்துள்ள இத்தேவியர் மகாமகக் குளத்துக்குள் தனித்தனியே கிணறு வடிவிலான தீர்த்தங்களாகவும் உள்ளனர்.

ஒரு சமயம் கங்கையும் அனைத்து புண்ணிய நதிகளும் ஒன்று கூடித் திருக்கயிலை மலைக்குச் சென்றன. அங்கு சிவபெருமானை வணங்கி, மக்கள் அனைவரும் எங்களிடத்தில் மூழ்கி பாவங்கள் தொலைந்து புண்ணியம் பெறுகின்றனர், அவர்கள் கழித்த பாவங்கள் எங்களிடம் கணக்கின்றிச் சேர்ந்து எங்களை ஒளியிழக்கச் செய்துவிட்டன, ஐயனே நாங்கள் புத்தொளிர்வுடன் விளங்கிப் புனிதம் பெற அருள் செய்யுங்கள் என்றன.

சிவபெருமான் நதிகளே குருபகவான் சிம்மராசியில் பிரவேசிக்கும் மகாமக வேளையில் தென் பாரதத்தில் குடந்தை நகரின் மத்தியில் விளங்கும் மகாமக தீர்த்தத்தில் நாம் தீர்த்தமாக விளங்குவோம்.

நம்முடன் அறுபது கோடி கன்னியர் தீர்த்தமும் தோன்றும். அவ்வேளையில் எம்முள் நீங்கள் மூழ்கிப் புனிதம் பெறுங்கள் என்றார். அதன்படியே நதிப்பெண்கள் ஒரு மண்டலத்திற்கு முன்பாகவே குடந்தைக்கு வந்து தங்கி பல ஆலயங்களைத் தரிசித்தனர். சிவபெருமான் குறித்த வேளையில் அங்கு தீர்த்தமாகப் பெருகினார். அவர்கள் அவ்விடத்தில் மூழ்கிப் பாவம் தொலைந்து புனிதம் பெற்றனர். நெடுநாட்கள் இங்குதங்கி வழிபட்டபின் தமது ஒரு கூறைத் தெய்வ வடிவிலும் தீர்த்த வடிவிலும் இங்கே விட்டுச் சென்றனர் என்று புராணம் கூறுகிறது.

மயிலாடுதுறையிலும் இது போன்ற புராண வரலாற்றைக் காண்கிறோம். இது வேறு ஒரு யுகத்தில் நடைபெற்றதாகும். ஒரு சமயம் கங்கை முதலிய நதிப் பெண்கள் இறைவனிடம் சென்று தம்மிடம் சேர்ந்துள்ள பாவங்களைத் தொலைக்க வழிகேட்டன. பெருமான் துலா மாதத்தில் காவிரியில் மூழ்குவதால் புண்ணியம் பெறலாம். நான் காவிரியில்நீராட அம்மாதம் முழுவதிலும் அங்கே இருப்பேன் நீங்களும் வருக என்றார்.

அதன்படியே ஆண்டுதோறும் நதிகள் யாவும் அவருடன் வந்து காவேரியில் துலாஸ்தானம் (ஐப்பசி நீராடல்) புரிகின்றன என்று புராணம் கூறுகிறது. இதைக் குறிக்கும் வகையில் துலாஸ்தானத்தின் போது கங்கையம்மன் முதலை வாகனத்தில் பெருமானுடன் வந்து தீர்த்தம் அளிக்கிறாள். குடந்தை வள்ளலார் ஆலயத்தில் மூலவராகவும் உலாத் திருமேனியாகவும் கங்கை வீற்றிருக்கிறாள்.

திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி ஆலயப் பிராகாரத்தில் கங்கா கூபம் என்ற கிணறு உள்ளது. அதன் அருகில் சுவரில் அமைந்த மாடத்தில் கங்கையின் திருவுருவம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இங்கு கங்காதேவியின் சிறிய உற்சவத்திருமேனி உள்ளது. இதை ஆடிப்பெருக்கன்று சிறிய பல்லக்கில் வைத்து காவிரிக்கரைக்கு எடுத்துச் சென்று சிறப்பு பூஜைகள் செய்கின்றனர். அப்போது காதோலை, கருகமணி, புடவை முதலான மங்கலப் பொருட்கள் ஆற்றில் விடப்பட்டு கங்கைக்கு பூஜை நடைபெறுகிறது.

ஏழு மோட்சபுரிகளில் ஒன்றான மாயாபுரி இந்நாளில் ஹரித்துவார் என்றழைக்கப்படுகிறது. இங்குதான் கங்கைநீரை வழிபட எடுத்துக் கொள்கின்றனர். இங்கு தட்சன் யாகம் புரிந்த இடம் உள்ளது. அதுவரை கங்கையிலிருந்து கால்வாய் வெட்டி ஒரு மடுவை உண்டாக்கியுள்ளனர். அதன் நடுவில் கங்கை தேவி ஆலயம் உள்ளது. தினமும் மாலையில் கங்கா பூஜை சிறப்புடன் நடைபெறுகிறது. அப்போது பக்தர்கள் ஏராளமான தீபங்களைத் தொன்னைகளில் ஏற்றி ஆற்றில் மிதக்க விடுகின்றனர். அவை அலைகளில் ஆடியாடி மிதந்து வருவது கண்கொள்ளாக் காட்சி யாகும்.

குடந்தைக்கு அருகிலுள்ள தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்தின் முகமண் டபத்தி நெடிய உருவில் கங்கையின் அற்புதமான கலையழகு மிக்க திருவுருவம் அமைந்துள்ளது. இதில் அவள் தலையில் கிரீடமணிந்துள்ளாள். வலதுகையில் தாமரையும் இடது கரத்தில் பூரண கும்பத்தையும் ஏந்தியுள்ளாள். கங்கையின் பெரிய அழகிய திருவுருவமாக இது விளங்குகிறது. இதனை அன்னபூரணி என்று குறித்துள் ளனர். அன்னபூரணி அன்னபாத்திரத்தையும் சட்டுவதையும் (கரண்டி) ஏந்தியிருப்பவள். அப்படி இல்லாமல் இவ்வடிவம் கங்கைக்குரிய தியான சுலோகங்கள் மற்றும் புராணங்கள் கூறும் வர்ணனைகளின் அடிப்படையில் தாமரை, பூரணகும்பம் ஏந்தியிருப்பது நோக்கத்தக்கதாகும்.

சிதம்பரம் மேற்கு ராஜகோபுரத்தில் புராணங்களில் குறிக்கப்பட்டுள்ளபடி பிரமன், வைரவர் முதலான மகேஸ்வர வடிவங்கள் கல்காரத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றுடன் கங்கையின் உருவமும் இடம் பெற்றுள்ளது. அதன்மீது பெயரும் பொறிக்கப் பட்டுள்ளது.

தென்னகத்தில் ஒருசில இடங்களில் மட்டுமே கங்கா தேவியின் வடிவங்கள் அமைக்கப் பட்டிருந்தாலும், அவை புராணச் சிறப்புடன் கலையழகு மிக்க தாகத் திகழ்கின்றன.




கங்கை தேவி தாராசுரம் ஐராவதேசுவரர்ஆலயம்

சிவாலயங்களில் உள்ள அம்பிகை சந்நிதியின் வாயில்களில் கங்கையும் யமுனையும் துவார பாலகியர்களாக உள்ளனர். கங்கை தாமரை மலருடன் பூரண கலசத்தை ஏந்தி மகரவாகனத்துடன் விளங்குகிறாள். யமுனை நீலோற் பல மலர் பூரணகும்பம் ஏந்தி ஆமைவாகத்தில் எழுந்தருளியுள்ளாள். சிவ சந்நிதியிலுள்ள தீர்த்தம் கங்கையாகவும், அம்பிகை சந்நிதியிலுள்ள தீர்த்தம் யமுனையாகவும், முருகன் சந்நிதியிலுள்ள தீர்த்தம் சரஸ்வதியாகவும் போற்றப்படுகின்றன.

சடைக்காட்டில் கங்கை

சிவபெருமானின் சடைக்காட்டில் கங்கை வசிக்கிறாள். அதனைக் குறிக்கும் வகையில் சிவபெருமானின் திருவுரு வங்களை அமைக்கும்போது அவருடைய சடையில் கங்கை யையும் அமைக்கின்றனர். பெரும்பாலான வடிவங்களில் அவளுடைய முகம் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. நடராசர், பிட்சாடனர் முதலிய வடிவங்களில் இடுப்பிற்கு மேல் கைகூப்பிக் கொண்டிருக்கும் பெண்ணாகவும், இடுப்பின்கீழ் மீன் அல்லது முதலையின் உடற்பகுதி கொண்டவளாகவும் அமைத்துள்ளனர்.



நடராசரின் விரிந்த சடையில் வலப்புறம் கைகூப்பி வணங்கிக் கொண்டிருப்பவளாகச் சடைக்கு நடுவே அவள் காட்சியளிக்கிறாள்.

திருவாரூர் தியாகராஜர் திருவுருவத்தில் அவருடைய நீண்ட திருமுடி அலங்காரத்தில் வலப்பக்கம் ஒன்றும், இடப்பக்கம் ஒன்றுமாக இரண்டு பிறை வடிவங்கள் உள்ளன. வலப்பக்கம் உள்ளது பிறை வடிவில் அமைந்த கங்கை யாகும். இடப்புறம் இருப்பது நிலவின் மூன்றாம் பிறையாகும். இரண்டையும் சேர்த்து கங்கை வெண்பிறை என அழைப்பர்.

கங்கா தீர்த்தங்கள்

சிவபெருமானின் திருமுடியை இருப்பிடமாகக் கொண் டுள்ள காரணத்தால் தீர்த்தங்களின் தலைவியான கங்கை தனிச் சிறப்பைப் பெறுகிறாள். அவள் பெயரால் பாரத மெங்கும் அனேக தீர்த்தங்கள் அமைக்கப்பட்டுள் ளன. அவற்றில் அவள் விரும்பி வசித்து சிவபூசை செய்வதுடன் அன்பர்களின் பாவத்தைப் போக்கி புண்ணி யத்தை அருள்கிறாள்.

காஞ்சீபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், திரு நெல்வேலி முதலிய தலங்களில் உள்ள பெரிய திருக் குளங்கள் சிவகங்கை என்று அழைக்கப்படுகின்றன. சோழ நாட்டுத் தலமான சாக்கோட்டை வீரசேகரர் ஆலயத்தில் உள்ள தீர்த்தம் சிவகங்கையாகும். இங்கு திருப்பணி செய்த சோழமன்னனின் விருப்பப்படிச் சிவபெருமானே இதை அமைத்தார் என்று புராணம் கூறுகிறது.

வன்பார்த்தான் பனங்காட்டூர் என்று தேவாரத்துள் போற்றப்படும் திருப்பனங்காட்டில் ஆலயத்திற்கு முன்னே அமைந்துள்ள தீர்த்தத்திற்கு ஜடாகங்கை என்பது பெயர்.

குப்த என்ற சொல்லுக்குச் செல்வத்தால் நிறையப் பெற்றது என்றும், ரகசியமானது என்றும் பொருள் கூறப் படுகிறது. இந்த இரண்டு நிலையிலும் இருப்பதால் ஸ்ரீ வாஞ்சியத் திருக்குளத்திற்கு குப்தகங்கை என்ற பெயர் வழங்குகிறது.

திருக்காளத்தி மலையைச் சூழ்ந்து ஓடும் சுவர்ணமுகி ஆற்றுக்குச் சுவர்ணகங்கை என்பது பெயர். இம்மலையில் பிறந்து சுவர்ணமுகியில் கலக்கும் அருவி மணிகங்கை என்ற பெயர் பெற்றிருக்கிறது. இதன் கரையில் இருக்கும் பெருமான் மணிகங்கேசுவரர் என்றழைக் கப்படுகிறார். (இக் கோயில் இப்போது மணிகண்டேசர் ஆலயம் என்றழைக்கப் படுகிறது). இராம நந்தீச்சுரத்தில் உள்ள தீர்த்தத்திற்கும் மணி கங்கை என்ற பெயர் வழங்குகிறது.

அழகர்மலை என்று வைணவர்களாலும் சோலை மலை என்று முருகடினயார்களாலும் கொண்டாடப்படும். பழமுதிர் சோலைமலையில் பிறந்து தவழும் நதிக்கு நூபுர கங்கை என்பது பெயர். திருமலையிலுள்ள தீர்த்தம் ஆகாசகங்கை என்றழைக்கப்படுகிறது.

கயிலையில் விளங்கும் சிவபெருமானின் ஐந்து சிரங்களின் ஐந்து சடைகளிலிருந்தும் ஐந்து நதிகள் பிறந்து ஓடுகின்றன. இவற்றைப் பஞ்ச கங்கை என்ற ழைக்கின்றனர். (பார்க்க சிவ மஞ்சரி பக் 247)

ஈழ நாட்டுத் திருத்தலம் திரிகோண மலையாகும். இங்கு மாவலிகங்கை என்ற ஆறு உள்ளது. இதற்கு மகாவலிமை மிக்க கங்கை என்பது பொருள். இவ்வட்டா ரத்தில் இராவணனின் தாய் தினமும் ஓராயிரம் லிங்கங் களை மாவினால் செய்து பூசித்த பின் இந்த கங்கையில் விட்டால் மாவலி கங்கை எனப்பெயர் பெற்றதாகக் கூறுகின்றனர். இங்கு விசுவநாதர் விசாலாட்சி ஆலயம் உள்ளது. ஈழநாட்டு முருகன் தலமான கதிர்காமத்தில் ஓடும் ஆற்றுக்கு மாணிக்க கங்கை என்பது பெயர்.

தெலுங்குதேசத்தில் ஓடும் கிருஷ்ணா நதியை தெலுங்கு கங்கை என்றழைக்கின்றனர். ஸ்ரீசைலத்திற்கு அருகில் ஓடும் இந்த கிருஷ்ணா நதியைப் பாதாள கங்கை என்று கூறுகின்றனர்.

வேலூர் ஜலகண்டசுவரர் ஆலயத்திலுள்ள தீர்த்தக் கிணறு கங்காகௌரி தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது. ஜ்ஜ

மணிகர்ணிகை

காசிமாநகரில் கங்கையின் துறையில் சிவபெருமானின் காதிலிருந்த மணியொன்று விழுந்தது. அங்கு கரையில் சிவலிங்கமும் தீர்த்தமும் தோன்றின. மணிவிழுந்த துறை மணிகர்ணிகா காட் என்று அழைக்கப்படுகிறது. இங்கு தான் இறந்தோரின் இறுதிச் சடங்குகள் நடத்தப்படுகின்றன. இங்கு கரையில் உள்ள தீர்த்தம் மணிகர்ணிகை என்றும் சிவலிங்கம் மணிகர்ணிகேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றன. திருமறைக்காடு (வேதாரண்யம்) கோடிக்கரை இராமேசுவரம் முதலிய தலங்களிலும் மணிகர்ணிகா தீர்த்தம் உள்ளது. ஜ்ஜ

மணிகர்ணிகை கங்கையின் இதயமாகவும், சிவனின் முகமாகவும் இருக்கிறது. அதில் மூழ்குபவன் சிவமாகவே ஆகிறான். மணிகர்ணிகா தேவி நதி வடிவிலும் தேவ வடிவிலும் காட்சியளிக்கிறாள். நீலோற்பல மாலை அணிந்துள்ள அவள் முன்னிரு கரங்களைக் கூப்பிக்கொண்டும் பின்னிரு கரங்களில் நீலோற்பலமலர் கலசம் ஏந்தியும் உள்ளாள்.

தஞ்சாவூர் கீழைராஜ வீதியில் மணிகர்ணிகேசுவரர் ஆலயம் உள்ளது. மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோஜி 1820ல் 3000 பேர்களுடன் காசி யாத்திரை மேற்கொண்டார். அப்பயணத்திற்கு இரண்டு ஆண்டுகள் ஆயின. திரும்பிவந்த அரசர் காசியில் முதன்மை பெற்ற மணிகர்ணிகை தீர்த்தத்தின் பெயரால் மணிகர்ணிகேசுவரர் ஆலயத்தை அமைத்தார். 1827ல் ஆலயம் நிறைவடைந்து குடமுழுக்கு விழா நடைபெற்றது. ஜ்ஜ.

பொங்கிவரும் கங்கை

அன்பர்களின் மீதுள்ள அன்பால் அவர்கள் இருக்குமிடத்திற்கே கங்கை பொங்கி வந்து அருள் பாலித்ததையும் பல வரலாறுகள் கூறுகின்றன. மதுரையில் வைகை நதியாக அவள் பெருகி ஓடி வந்ததையும், திருவிசலூரில் வெங்கடேச ஸ்ரீதர ஐயாவாளுக்காகக் கிணற்றில் பொங்கி வந்ததையும் தொடர்ந்து நாம் காணலாம்.

மதுர கங்கையான வைகை

பாண்டியன் மகளாகத் தோன்றிய மீனாட்சியைச் சிவபெருமான் மணந்து கொண்டார்.அந்தத் திருமண விழாவில் மலை மலையாக சோறும் கறிகளும் மீதமாகி விட்டன. மீனாட்சி அதைப் பெருமானிடம் கூறி உணவு உண்ண ஆளில்லை என்றாள்.அவள் குரலில் அலட்சியம் இருந்தது. அதை மாற்ற எண்ணிய சிவபெருமான் குண்டோதரனை அனுப்பினார்.

அவற்றை ஒரு நொடியில் உண்டு தீர்த்த குண்டோதரன் தாகத்தால் தவித்தான். பெருமான் கங்கையிடம் ஆறாகப் பெருகி வந்து அவனுடைய தாகத்தைத் தணிவிப்பாய் என்றார். அவள் ஆறாகத் தோன்றி மதுரையின் அருகில் ஓடினாள். குண்டோதரன் தன் கைகளை மடை போல் மடக்கி வைத்து நீரைப் பருகித் தாகம் நீங்கினான். அவன் கையை வைத்துத் தடுத்ததால் அவள் வைகை எனப்பட்டாள்

வைகைக்குச் சிவகங்கை, சிவஞான தீர்த்தம் ,வேகவதி கிருதமாலா தீர்த்தம் என்ற பெயர்களும் வழங்குகின்றன

திருவிசலூர் கங்கை

திருவிடைமருதூருக்கு நேர் வடக்கில் 5 கி.மீ தொலைவிலுள்ள திருவிசலூர் என்ற தலத்தில் ஸ்ரீதரஐயாவாள் என்ற மகான் வாழ்ந்து வந்தார். ஒரு சமயம் அவர் தம் தந்தையின் சிரார்த்தத்தைச் செய்து வைக்கச் சில பிராமணர்களை வீட்டிற்கு அழைத்திருந்தார். அதற்கு வேண்டிய உணவும்தயாரிக்கப்பட்டிருந்தது.அவ்வேளையில் ஒருவன் அவரிடம் வந்தான். தான் மிகுந்த பசியுடன் இருப்பதாகக் கூறினான்.அதைக்கேட்டுகருணை கொண்ட மகான் அவனுக்கு உணவு படைத்தார்.

அதைக் கண்டு சிரார்த்தம் செய்து வைக்க வந்த பிராமணர்கள் கோபித்தனர். சிரார்த்தத்தின்போது முடியுமுன் பிறருக்கு உணவிடுதல் வழக்கமில்லை. அதை மீறியதாகக் கூறி அவர்கள் அவரை இழித்துப் பேசிவிட்டுச் சென்று விட்டனர். ஐயாவாள் சிரார்த்தம் தடைப் பட்டதே என வருந்தி நின்றபோது வேறு மூன்று பிராம ணர்கள் அங்கு வந்து நாங்கள் செய்து வைக்கிறோம் என்று கூறி முறைப்படி அவர் வீட்டில் சிரார்த்தம் செய்து விட்டுச் சென்றனர்.

சிரார்த்த உணவைத் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவருக்கு இட்டது மட்டுமல்லாமல், முன்பின் தெரியாத பிராமணரைக் கொண்டு சிரார்த்தம் செய்ததைக் கண்டு அவ்வூர்ப் பிராமணர்கள் கோபித்தனர். ஸ்ரீதர ஐயாவாளைச் சாதி விலக்கு செய்வதாகக் கூறினர். அவர் காசி சென்று கங்கையில் மூழ்கி வந்தால் மீண்டும் ஏற்றுக் கொள்வோம் என்று கூறினர்.

ஸ்ரீதர ஐயாவாள் கங்கையைப் போற்றி கங்காஷ் டகம் என்று நூலைப் பாடினார். அன்றிரவு கங்கை அவருடைய கனவில் தோன்றி, நான் கார்த்திகை அமாவாசையன்று உமது இல்லத்திலுள்ள கிணற்றில் பொங்கி வருவேன் நீங்களும் உமது மனைவியும் நீராடி என்னைப் பூசிக்கத் தயாராக இருங்கள் என்றாள்.

அதன்படியே கங்கை பொங்கினாள். ஊர் முழுவதும் வெள்ளக்காடானது. மக்கள் அஞ்சினர். அவர்கள் ஒன்று கூடி அவரிடம் வந்து மன்னிப்பு கேட்டனர். கங்கை நீர் தேங்கிய இடம் கங்கை கொண்டான் திடல் என்ற பெயரில் இப்போதும் உள்ளது.

மீண்டும் கங்கை ஐயாவாளின் கனவில் தோன்றி இனி ஆண்டுதோறும் கார்த்திகை அமாவாசை அன்று பொங்கி வருவேன் என்று கூறினாள். அதன்படியே இப்போதும் அந்நாளில் பொங்கி வந்து கொண்டே இருக்கிறாள். அந்நாளில் ஏராளமான மக்கள் அக்கிணற்றில் நீராடி மகிழ்கின்றனர்.

கௌதம கங்கை

ஒரு சமயம் கடும் பஞ்சம் தோன்றியது. உலகெங் கும் வறட்சி நிலவியது. கௌதம ரிஷி வருணனை உபாசித்து அருள் பெற்றார். அதனால் அவர் ஆசிரமத்தில் மட்டும் பசுமை நிறைந்திருந்தது.அதைக் கண்ட மற்றைய போலித் தவசிகள் அவர் மீது பொறாமை கொண்டனர்.

அவரைத் துன்புறுத்த மாயப் பசுங்கன்றுக் குட்டியைத் தோற்றுவித்து அவர் நிலத்தில் மேயவிட்டனர். அதை விரட்ட அவர் ஒருகல்லெறிந்தார். முனிவர்களின் சூட்சியால் அது இறந்தது. அனைவரும் கூடி கௌதமர் பசுங்கன்றை அடித்துக் கொன்று விட்டார். அதனால் அவரும் அவருடைய மனைவி அகல்யையும் விலக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் பாபிகள் என்று ஏசினர்.

உயர்ந்த மனம் படைத்த முனிவர்கள் கௌதமர் வேண்டுமென்று அப்படிச் செய்யவில்லை. எதிர்பாராது அக்கன்று இறந்து விட்டது. அதற்குப் பிராயசித்தம் செய்தால் போதும் என்றனர். கபடம் மிகுந்த ரிஷிகள் பிரம்ம கிரியை ஆயிரம் முறை வலம் வர வேண்டும் அல்லது

கங்கைக்குச் சென்று நீராடி வர வேண்டும். அதுவே பிராயச்சித்தம் என்றனர். அவர் ஆசிரமத்தை விட்டு வெளியேறியதும் அதைக் கைக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் திட்டமிட்டனர்.

கௌதமர் சிவபெருமானைத் தியானித்தார். அவர் கங்கையிடம், " உனது ஒரு பகுதியை அவரிடம் அனுப்பு" என்றார். கங்கை பிரம்மகிரிக்கு வந்து நெல்லி மரத்தடியில் தங்கினாள். சிவனை தியானித்து விட்டு ஆறாகப் பெருகி ஓடி கௌதமர் ஆசிரமத்திற்கு வந்து அதைப் புனிதப் படுத்தி விட்டு கடலை நோக்கி ஓடினாள்.

கௌதமருக்காகக் கங்கை பெருகி வருவதைக் கண்ட முனிவர்கள் அச்சமடைந்தனர். அவரடியில் வீழ்ந்து மன்னிக்கும்படி வேண்டினர். கங்கை அங்கு தோன்றி அனைவ ரையும் ஆசீர்வதித்தாள்.

அப்படிப் பெருகி வந்த கங்கையாறே இந்நாளில் கோதாவரி என்றழைக்கப்படுகிறது. அவள் கௌதமரின் வேண்டுகோளை ஏற்றுவந்ததால் கௌதமி என்றும், கௌதம கங்கை என்றும் அழைக்கப்படுகின்றாள். அதன் கரையில் பஞ்சவடியும், ஓங்காரேசுவரர் என்னும் ஜோதிர் லிங்கமும் உள்ளன. (விரிவான வரலாற்றைச் சிவமகா புராணத்தில் காண்க)

திருவாரூரில் தேவதீர்த்தம் என்னும் திருக்குளம் உள்ளது. இதனை இந்நாளில் கமலாலயத் தீர்த்தம் என்றழைக்கின்றனர்.பாதாளத்திற்கும் ஆடகேசரான சிவபெருமான் திருவாரூருக்கு எழுந்தருளியபோது அவர் தோன்றிய பிலத்தின் வழியாக பாதாள கங்கையும் வெளிவந்து திருக்குளமாக நிலைபெற்றாள்.அவளுக்குள் உலகிலுள்ள அனைத்து நதிகளின் கூறுகளும் அடங்கியிருந்தன. ஒருமுறை இந்த தீர்த்தம் மறைந்தது. மீண்டும் இந்திரனால் வெளிப்பட்டது. ஒருசமயம் துருவாச முனிவருக்காகக் கங்கை பொங்கி மேலேழுந்து காட்சி யளித்ததாகக் கூறப்படுகிறது

ஆலயத்தில் கங்கையை அழைத்தல்

தினமும் ஆலயத்தில் அர்த்த சாமம் முடிந்ததும் பள்ளியறைக்குச் செல்லச் சிவபெருமான் பல்லக்கில் ஏறியதும் அவருடைய சடாமுடியில் விளங்கும் கங்கை அவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு உலகிலுள்ள நீர்நிலைகளில் பரவி, சிவத்தியானத்தில் விளங்குவாள்.

காலையில் பூஜை தொடங்கும் முன் அருச்சகர் பரிசனங்களுடன் ஆறு, குளம் ஆகிய இடத்திற்குச் சென்று கங்கையைப் பூசித்து வரவேற்பார். அவளைக் குடத் திற்குள் பிரவேசிக்கச் செய்து அந்தக் குடத்தை யானையின் முதுகிலாவது பரிசாரகன் தலையிலாவது வைத்து மேள தாளத்துடன் ஆலயத்திற்குக் கொண்டு வருவர்.

நந்திதேவர் சிரசில் அந்த நீரைச் சிறிது அபிஷேகம் செய்யவேண்டும். பிறகு பலிபீடம், துவஜஸ்தபம், துவார பாலகர்கள், பிறகு சிவலிங்கம் ஆகியவற்றிற்கு அபிஷேகம் செய்ய வேண்டும் .இப்படிச் செய்தால் கிராமத் திற்கும் அரசனுக்கும் மேன்மை உண்டாகும். நதியிலிருந்து தீர்த் தம் எடுப்பது உத்தமம். குளத்திலிருந்து எடுப்பது மத்தி மம், கிணற்று நீர் அதமம் என்றும்,பூஜா நூல்களில் குறிக்கப்பட்டுள்ளன. இது திருமஞ்சன தீர்த்தம் என்றும் அழைக்கப்படும்.

சிவாலயங்களில் மட்டுமன்றி கிராமதேவதை ஆலயங்களிலும் விழாவின் போது நீ திரட்டுதல் கங்கை அழைத்தல்முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறு கின்றன. ஜ்

கங்கையும் தெய்வங்களும்

கங்கை நதியோடு அனைத்துதெய்வங்களும் தொடர்பு கொண்டுள்ளன. விநாயகர், கங்கை விநாயகர் என்று அழைக்கப்படுகிறார். அப்பெயருடன் திருவையாற்றில் எழுந்தருளியுள்ளார். பஞ்சரத காசியான திருவையாற்றில் ஐயாறப்பர் சந்நிதியில் அரிய கலைப்படைப்பான கங்கை விநாயகரைக் காண்கிறோம். காசியில் கங்கைக் கரையில் ஏழு ஆவரணங்களுடன் 57 பெயர்களில் விநாயகர் வீற்றிருக்கின்றார். ✹முருகன் கங்கையின் மடியில் தோன்றியதால், காங்கேயன் என்று அழைக்கப்படுகின்றான். அவனை " கங்காநதி பாலக் கிருபாகரன்" என்று அருணகிரிநாதர் துதிக்கிறார்.

✹வீரபத்திரர் கங்கையின் காவலனாகத் திகழ்கிறார். கங்கை மகாமகத்தில் நீராட மற்றைய நதிகளுடன் குடந்தைக்கு வந்தபோது அவர் காவலராக உடன் வந்தார். தனிக் கோயிலில் வீற்றிருக்கும் அவரை கங்கை வீரபத்திரர் என்று அழைக்கின்றனர்.✹கௌரிதேவியான உமாதேவி கங்கையின் சகோதரி ஆவாள். இருவரையும். இணைத்து கங்கா கௌரி என்று அழைக்கின்றனர். ✹வைரவர் வடிவுடன் பெருமான் கங்கையின் மடியில் குழந்தையாகத் திகழ்ந்தார். அவரை பால பைரவர் என்று அழைப்பர். கங்கைக் கரையில் தீர்த்த பாலகனாக அவர் வீற்றிருக்கின்றார். கங்கையின் 64 கட்டங்களிலும் அவர் அறுபத்து நான்கு பெயர்களுடன் வீற்றிருக்கின்றார். ஜ்

சிவகங்கை நகரங்கள்

ஆறுகளுக்கேயன்றி ஊர்களுக்கும் கங்கை என்ற பெயர் வழங்கிவருகிறது. நாகை மாவட்டம் பூந்தோட்டத்திற்கு அருகில் உருத்திரகங்கை என்ற ஊரும் புதுக்கோட்டை மாவட்டத்தில் சிவகங்கை என்ற நகரமும் உள்ளன. மேலும் கெங்கைபுரி,கெங்காவரம் முதலான கங்கைப் பெயர்களில் அமைந்த அனேக ஊர்களைக் காண்கிறோம். தொடர்ந்து சிவகங்கையின் சிறப்புக்களைக் காணலாம்.

தென்தமிழ்நாட்டிலுள்ள சிவகங்கை வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாகும். இப்பகுதியிலுள்ள நாலு கோட்டை என்னும் பகுதியை ஆண்டுவந்த தேவர் மரபில் தோன்றியவர் சசிவர்ணதேவர். அவர் ஒரு சமயம் வனாந்திரமாக இருந்த இப்பகுதிக்கு வேட்டையாட வந்தார். அவர் முன்னே ஒரு சித்தர் தோன்றி அன்பனே இங்கே சிவன் பெயரால் ஒரு குளம் வெட்டி ஆலயம் அமைத்தால் நீ பெரிய மன்னனாக வருவாய் என்றார்.பிறகு அவருக்கு விபூதி பூசி உத்திராட்சம் அணிவித்து பொற்பிரம்பை அளித்தார்.

அவராணைப்படியே சசிவர்ணதேவர் தீர்த்தக் குளம் வெட்டி, அதற்குச் சிவகங்கை என்று பெயரிட்டார். குளத்தை வெட்டியபோது கிடைத்த சிவலிங்கத்தை அக்குளத்தின் அக்கினி திக்கில் நிலைப்படுத்தி அதற்கு ஆலயம் அமைத் தார். அதுவே பெரியநாயகி உடனாகிய சசிவர்ணேசுவரர் ஆலயமாகத் திகழ்கிறது.

அக்குளத்தின் கன்னி மூலையில் பெரிய அரண்மனை கட்டி கௌரிமஹால் என்று பெயரிட்டார். பின்னர் ஊரை உருவாக்கி மக்களைக் குடியேற்றி தனிசமஸ்தானம் கண்டு ஆண்டு வந்தார். இதுவே சிவகங்கை சமஸ்தானமாகும். இங்கு கங்கையின் பெயரால் குளமும் கௌரியின் பெயரால் அரண்மனையும் இருப்பது சிந்தித்து மகிழத்தக்கதாகும்.

பின்னாளில் இங்கு முருகன் ஆலயம் அமைக்கப்பட்டது. அதில் லட்சுமி அம்மாள் என்பவர் காசியிலிருந்து கொண்டு வந்து விசுவநாதரையும் விசாலாட்சியையும் எழுந்தருளிவைத்தார். அக்கோயில் விரிவாக்கம் பெற்று பெரிய கோயிலாகத் திகழ்கிறது. சிவகங்கை சமஸ்தானம் பல கோயில்களைச் சிறப்புடன் நிர்வாகம் செய்து வருகிறது. இது மருது பாண்டியர்கள் ஆண்ட பூமியாகும். இப்பகுதியைச் சிவகங்கைச்சீமை என்று இலக்கியங்கள் போற்றுகின்றன.

கர்நாடக மாநிலத்தில் பெங்களூருக்கு வடமேற்கில் சிவகங்கை என்ற ஊர் உள்ளது. அதையொட்டி கருத்தகிரி எனப்படும் சிவகங்கை மலை உள்ளது. மலை மீது கங்காதரேசுவரர் ஆலயமும் அதனருகில் புகழ்பெற்ற கொன்னம்மா ஆலயமும் உள்ளன. இந்த மலையை நான்கு பக்கங்களிலிருந்து பார்க்கும் போது லிங்கம், யானை, பாம்பு, நந்தி போல் காட்சி தருவதாகக் கூறுகின்றனர். மலையைச் சுற்றிலும் எட்டு தீர்த்தங்கள் உள்ளன. இதில் ஒன்றின் பெயர் பாதாள கங்கையாகும். மலையின் உச்சியில் இரண்டு தூண்கள் உள்ளன. உத்திராயணத்தின் தொடக்கத்தில் இந்தத் தூண் ஒன்றின் அடியிலிருந்து தண்ணீர் சுரக்கிறது. அதை தெய்வீக கங்கையாகப் போற்றுகின்றனர்

.(நன்றி செய்திமூலம் -கலைக் களஞ்சியம்)

பாணலிங்கங்கள்

பாரதமெங்கும் காசி விசுவநாதர் என்ற பெயரில் உள்ள லிங்கங்களில் பெரும்பாலானவை பாண லிங்கங்களாகும். இவை நர்மதை நதியில் கிடைக்கும் சிறப்பான கற்களால் ஆனவை. பலவகையான நிறங்களைக் கொண்டவை. பொன் ரேகை படிந்தவைகளும் உண்டு. இவற்றைக் காசியில் கங்கைக் கரையில் வைத்துப் பூசித்து ஊருக்கு எடுத்துவந்து நிலைப்படுத்துகின்றனர்.

ஆவுடையார் எனப்படும்அடிப்பகுதியைக் கருங்கல்லால் செய்து அதன் மீது பாண லிங்கத்தை நிறுவி அஷ்டபந்தனம் சார்த்தி வழிபடுகின்றனர். பாண லிங்கங்களில் சிவபெருமான் நீங்காது வாசம் செய்கிறார் என்று புராணங்கள் கூறுகின்றன.

பாணாசுரன் தினமும் ஓராயிரம் லிங்கங்களை வைத்து பூசித்த பின் நர்மதையில் விட்டான் என்றும், அவைகளே இப்போது நமக்குக் கிடைக்கின்றன என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. பாணலிங்கங்கள் தம்மை வழிபடுபவர்களுக்கு மேலான பலன்களைத் தருமென்று புராணங்கள் கூறுகின்றன.

காசி விசுவநாதப் பெருமானே அழகிய பாணலிங்கமாக விளங்குகிறார். காசியிலுள்ள சிவலிங்கங்களில் அனேகமானவை பாணலிங்கங்களேயாகும். பரதேசுவரர், கேதாரீசுவரர் முதலிய சிவலிங்கங்கள் மட்டுமே செதுக்கப்படாத பாறை வடிவிலான சுயம்புலிங்கங்கள் ஆகும். ஜ்ஜ

கங்காதரர் ஆலயங்கள்

பகீரதனின் வேண்டுகோளை ஏற்றுத், தனது சடைக் கற்றையில் கங்கையைத் தாங்கியுள்ள சிவபெருமான் கங்காதரன் என்று அழைக்கப்படுகிறார். இப்பெயரில் பல சிவாலயங்களில் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். இவை கங்கா தரேச்சுவரங்கள் என்று போற்றப்படுகின்றன. இவற்றுள் சில இங்கே விவரிக்கப்பட்டிருக்கின்றன.



காசிநகர் கங்காதரேச்சுவரம்

காசியில் கங்கையும் பகீரதனும் அமைத்து வழிபட்ட கங்காதீசுவரர் ஆலயம் விசுவநாதர் கோயிலுக்குள், அரச மரத்தடியில் (முகமதியர் வழிபாட்டுத் தலமான மசூதிக்கு முன்புறம்) உள்ளது. ஆனிமாதம் வளர்பிறை தசமியில் இங்கு சிறப்புடன் வழிபாடு செய்கின்றனர்.

சென்னை கங்காதரேச்சுவரம்

சென்னையின் மையப்பகுதியான மத்திய ரயில் நிலையம், மாநகராட்சி அலுவலகம் ஆகியவற்றிற்கு அருகில் புரசைவாக்கம் உள்ளது. இங்கு கங்காதீசுவரர் ஆலயம் சிறப்புடன் திகழ்கிறது. தனது வேண்டுகோளை ஏற்று கங்கையைத் தலையில் தாங்கி அருளியதைப் போற்றும் வகையில் பகீரதன் முருக்கவனத்தில் (புரச வனம்) சந்தனத்தால் லிங்கம் செய்து வழிபட்டதாகவும், அதுவே இக்கோயிலாக உருவாகியுள்ளதென்று கூறுகின்றனர். இறைவன் கங்காதரேசுவரர். அம்பிகை பங்கஜாட்சி

இங்கு கங்கா தீர்த்தம் உள்ளது. பகீரதன் 1008 லிங்கங்களை அமைத்து வழிபட விரும்பினான். இமயம் முதல் குமரிவரை 1007 லிங்கங்களை அமைத்து வழிபட்ட பின் 1008வது லிங்கமாக இந்தக் கங்காதீசுவரரை அமைத்து வழிபட்டான் என்று தலவரலாறு கூறுகிறது.

இக்கோயிலில் பகீரதனின் திருவுருவம் உள்ளது. அதற்கு நாள்தோறும் வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

காஞ்சி நகர் கங்காதரேச்சுரம்

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்திற்குச் சற்று தென் மேற்கில் சர்வதீர்த்தம் என்ற பெயரில் திருக்குளம் உள்ளது. இதனைச் சுற்றிலும் ஏறத்தாழ பதினாறு சிவாலயங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றாக கங்காதீசுவர் ஆலயம் உள்ளது. இதனுள் சிவபெருமான் கங்காதீசுவரர் எனும் பெயரில் உள்ளார். விநாயகர், முருகர், நந்தி ஆகியோர் பரிவாரங்களாக உள்ளனர். காஞ்சிப் புராணத்தில் இக்கோயிலின் சிறப்பு விளக்கப் பட்டுள்ளது.

கங்கையுடன் வருணன் இங்கு வந்து வழிபட்டுப் பேறுபெற்றான் என்று அது கூறுகிறது. இக்கோயில் இராஜ கோபுரத்துடன் திகழ்கிறது.

தக்கோலம் கங்காதீசுவரர்

தக்கோலம் (எ) கங்காதீசுவரர் திருவூறல் காஞ்சீ புரத்திற்கு அருகில் உள்ளது. இங்கு கங்காதீசுவரர் ஆலயம் மிகவும் சிதிலமான நிலையில் உள்ளது. கண்ணுக்குப் புலனாகாத வகையில் உற்பத்தியான ஒரு நீரூற்றை (நந்தியின் வழியாக வெளியேறி) கருவறையைச் சுற்றி ஓடி (மற்றோர் நந்தியின் வாய் வழியாக வெளிப்பட்டு) குளத்தில் விழும் வகையில் அமைத்திருக் கின்றனர், இப்போது நீரூற்று வற்றிவிட்டதால் நீர்வரத்து இல்லை. நீர் வழிந்தோடிய அமைப்பு அப்படியே உள்ளது. இது அற்புத அமைப்பாகும்.

கோவந்தபுத்தூர் கங்காஜடேசுவரர்

கொள்ளிடக் கரையிலுள்ள தலம் கோவந்த புத்தூர். காம தேனு பசுக்கூட்டத்துடன் வந்து வழிபட்டதால் இப்பெயர் பெற்றது. இறைவர் கங்காஜடேசுவரர், அம்பிகை மங்களாம்பிகை (ஆராய்ச்சியாளர்கள் தேவாரம் குறிப்பிடும் விஜயமங்கை இதுவே என்று கூறுகின்றனர். நடைமுறையில் திருவைகாவூருக்கு அருகிலுள்ள விஜய மங்கையைப் பாடல்பெற்ற தலமாகக் கொண்டுள்ளனர்.) .தீர்த்தம் ஜடாகங்கை என்ற கிணறு.

ஆத்தூர் கங்கா சுந்தரர்

சேலம் மாவட்டம் ஆத்தூரை அடுத்த விரகனூரில் கங்கா சுந்தரேசுவர் ஆலயம் உள்ளது. ஜ்ஜ

சிற்பங்களில் கங்காதரர்

ஆகமங்களும், புராணங்களும் கூறும் கங்கா தரரின் திருவுருவத்தைச் சிற்பிகள் கலையழகுமிக்க சிற்பங்களாக வடித்து மகிழ்ந்துள்ளனர். பல்லவ மன்னர்களுக்குக் கங்காதரர் மீது தனி ஈடுபாடு இருந்தது.அவர்கள் அமைத்த அனேக ஆலயங்களில் கங்காதரரைப் பெரிய சிற்பமாக வடித்துப் போற்றியுள்ளனர்.

திருச்சி மலைக்கோட்டையில் அமைந்துள்ள தாயுமா னவசுவாமி ஆலயத்திற்கு அருகில் பல்லவர் கால குடை வரைக் கோயில் உள்ளது. இதில் மிகப் பெரிய புடைப்புச் சிற்பமாக கங்காதரர் அமைக்கப்பட்டுள்ளார்.

இதில் சிவபெருமான் நான்கு கரங்களுடன் திகழ்கிறார். சுற்றிலும் அறுவர் உள்ளனர். அவர்கள் ஆச்சர்ய முத்தி ரையில் ஒரு கையை வைத்துக் கொண்டு மற்ற கையை இடுப்பில் ஊன்றியுள்ளனர். இவர்களில் இருவர் கீழே மண்டியிட்டு பெருமானின் இருபுறமும் அமர்ந்துள்ளனர். இருவர் விண்வெளியில் பறந்து கொண்டிருக்கின்றனர். அமர்ந்திருப்பவர்களுக்குப் பின்புறம் மேலும் இருவர் காட்டப்பட்டுள்ளனர். பெருமான் இடது காலை பூமியில் ஊன்றி வலது காலைச் சற்று மடித்து முயலகன் மீது ஊன்றியுள்ளார். பெருமானின் வலது கால் விரல்களும் முன்பாதமும் அவன் தலை மேல் உள்ளன. அவன் இடது கையால் அவரது குதிகாலைத் தாங்குகிறான். பெருமான் இடது முன் கையை இடையில் ஊன்றி மேல் கையை மேலே நீட்டியுள்ளார். அக்கரத்திற்கு மேலே தலையைத் தூக்கி வானைப் பார்க்கும் நாய் படுத்துள்ளது. பெருமா னின் வலது முன் கரத்தில் பாம்பு உள்ளது. மேல் வலது கரம் சடைக் கற்றை ஒன்றை விரிக்கிறது. அதில் பெண் வடிவில்அவரை வணங்கியவாறு கங்கைவீழ்ந்து கொண்டி ருக்கிறாள். இது உலகப் புகழ் பெற்ற பெரிய சிற்பமாகும்.

இது அம்பிகையின்றி அமைந்த வடிவமாகும். காஞ்சி கயிலாசநாதர் ஆலயத்தில் உமையுடன் கூடிய கங்காதரரைக் காண்கிறோம். இதில் பெருமான் ஆறு கரங்களுடன் திகழ்கிறார். அந்த சிற்பத்தை அடியொற்றி வரையப்பட்ட கோட்டோவியத்தை எதிரே காணலாம்.

மாமல்லபுரம் குகைக் கோயிலிலும் காஞ்சி கயிலா யநாதர், மதங்கேசுவரர் முதலிய கட்டுமானக் கோயில் களிலும் பல்லவ மன்னர்கள் கங்காதரரைச் சுதைச் சிற்பமாக அமைத்து வழிபட்டுள்ளனர்.

அண்மைக் காலத்திலும் அனேக கோயில் கோபுரங் களில் சுதைச் சிற்பமாக கங்காதரரை அமைத்துள்ளனர். மயிலை கபாலீசுவரர், மயிலாடுதுறை, மயூரநாதர் முதலிய ஆலயங்களின் கோபுரங்களில் இத்தகைய சுதைச் சிற்பங்கள் உள்ளன.இவை ராஜாரவிவர்மாவின் ஓவியத்தை மூலமாகக் கொண்டதென்று கூறுகின்றனர்.



காஞ்சி கயிலாசநாதர் கோயில் கங்காதரர் சிற்பத்தை அடியொட்டி வரைந்தது.

(ரவிவர்மாவுக்கு இந்த ஓவியத்தை வரைய மூலமாக இருந்தது கேரளநாட்டு கோயில்களில் வரையப் பட்டிருக்கும் ஓவியங்கள் என்று ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றனர்.)

இவற்றில் மையத்தில் பெருமான் விரித்த சடையுடன் கால்களை அகட்டியபடி நிற்பார். மேலிரு கரங்கள் விரிந்து தாழ்ந்துள்ள சடையின் அடியில் சூலத்தைகுறுக்கு வாட் டில் ஏந்திப் பிடித்தவாறுள்ளன. முன் கரங்களை இடுப்பில் ஊன்றியுள்ளார். வானத்திலிருந்து சடையில் கங்கை விழுந்து கொண்டிக்கிறாள். பகீரதனும், இடபத்தின் முது கின் மீது சாய்ந்து கொண்டிருக்கும் அம்பிகையும் சிவபெரு மானின் ஜடையில் கங்கை விழுவதை ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

திருவதிகை வீரட்டானேசுவர் ஆலயத்தில் கோபுரத்



திற்கு முன்னுள்ள 16 கால் மண்டபத்தில் மேலே குறித்த வகையில் மிகப்பெரிய அளவிலான கங்காதரர் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.

புதுக்கோடையின் ஒரு பகுதியாகத் திகழ்வது திருக் கோகர்ணம் ஆகும். காமதேனு தன் காதுகளில் நீரை நிரப்பி எடுத்து வந்து இங்குள்ள பெருமானை நீராட்டி வழிபட்டுப் பேறு பெற்றதென்று தலபுராணம் கூறுகிறது. இங்கு மலையில் அமைக்கப்பட்டுள்ள குடைவரைக் கோயிலில் லிங்க வடிவில் கோகர்ணேசுவரர் எழுந்தருளியுள்ளார். முக மண்டபத்தில் வடக்கு நோக்கி கங்கை விநாயகரும் அவருக்கு எதிரில் தெற்கு நோக்கியவாறு பெரிய கங்காதரரும் புடைப்புச் சிற்பங்களாக அமைக் கப்பட்டுள்ளனர். பெருமான் மேல் இடது கரத்தால் சடையை விரித்துப் பிடிக்க அதில் கங்கை பெண் வடிவில் வீழ்கிறாள். சிவபெருமான் வலது கை அபயம் காட்ட இடது கையைத் தொடை மேல் வைத்துள்ளார். இது வழிபாட்டில் உள்ள அழகிய பெரிய சிற்பமாகும்

கங்கா விசர்சனர்

பகீதரனின் வேண்டுகோளை ஏற்றுச் சிவபெருமான் சடைக் கற்றையிலிருந்து கங்கையை வெளிவிடும் கோலமே கங்கா விசர்ச்சனம் என்று போற்றப்படுகிறது. பெருமானின் சடையிலிருந்து புறப்பட்டு விழத் தொடங்கிய கங்கையை நந்தியம் பெருமான் வாயில் ஏற்று மீண்டும் வெளிப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இதையொட்டி கங்கா விசர்ச்சனர் சிற்பங்களில் நந்தி யையும் அவர் வாயின் மூலம் கங்கை வெளிப்படுவதா கவும் அமைத்துள்ளனர். இதைக் குறிக்கும் வகையில் மலையில் இருந்து வழியும் நீரை நந்தியின் வாயிலிருந்து விழுவது போல் வழக்கம் தோன்றியுள்ளது.

சோழர்கள் கங்காவிசர்ச்சனரைத் திருக்கடவூர், மயிலாடுதுறை, திருப்பனந்தாள், திருமீயச்சூர் முதலிய இடங்க ளில் கோட்ட தெய்வமாக அமைத்து உள்ளனர். இச்சிற்பங் களில் புராணக் கதை ஒன்றும் இணைந் துள்ளது. கங்கையைப் பெருமான் தலையில் ஏற்று வெளியிடுவதைக் கண்டு அம்பிகை கோபம் கொள்ளுகிறாள்.

அவளுடைய கோபத்தை மாற்ற வேண்டி அன்புடன் அவளை அணைத்து ஊடலை மாற்றுகிறார். அதை விளக் குவதாக இச்சிற்பங்கள் உள்ளன.

இதில் சுவாமியின் அருகில் நிற்கும் தேவி, சினத்தால் தனதுமுகத்தைச் சற்று தாழ்த்தியுள்ளார். பெருமானின் வலது கரம் கங்கையைச் சடையிலிருந்து விடுவிக்கிறது. சடையிலிருந்து விடுபட்ட கங்கை கரங்களைக் குவித்து வணங்கிக் கொண்டே வெளிப்படுகிறாள். பெருமானின் இடது முன்கையால் அம்பிகையின் தோளைத் தொட்டு அணைத்துக் கொண்டு வலது முன்கையால் அவள் முகத் தைத் தூக்கி ஊடலைத் தீர்க்க முயல்கிறார். பின் இடக் கரத்தில் உள்ள மான் இக்காட்சியைக் கண்டு மகிழ்ந்து துள்ளுகிறது. சுவாமியின் வலதுபுறம் பகீரதன் நிற்கிறான்.

திருமீயச்சூரில் உள்ள இத்தகைய கங்கா விசர்ச்சன சிற்பம் க்ஷேத்ர புராணேசுவரர் என்றழைக்கப்படுகிறது. இத்திருமேனிக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயில் வைத்திய நாதர் ஆலயத்தில் கங்கா விசர்ச்சன மூர்த்தியின் அழகிய உலாத்திருமேனி உள்ளது. பெருந்திருவிழாவில் இம்மூர்த்தியும் ஒருநாள் உலாவந்து அருள்பாலிக் கின்றார்

பகீரதேசுவரர்

பகீரதன் வழிபட்ட சிவலிங்கம் பகீரதேசுவரர் என்று அழைக்கப்படுகிறது. காசியில் விசுவநாதர் கோயிலுக்கு அருகில் அரச மரத்தடியில் பகீரதேசுவரர் எழுந்தருளியுள்ளார். இவரை கங்கை வழிபட்டுப் பேறுபெற்றாள் என்று காசிக் காண்டம் கூறுகிறது. சென்னை புரசைவாக்கம் கங்காதீசுவரர்ஆலயத்தில் பகீரதன் திருவுருவம் நிலைப்படுத்தப்பட்டு நாள் வழிபாடு செய்யப்பட்டுள்ளது.

நவரசம் பொங்கும் கங்கை வரும் காட்சி

எல்லா உயிர்களும் தமது மனதில் தோன்றும் உணர்ச்சியை உடலாலும் செயலாலும் வெளிப்படுத்துகின்றன. அந்த உணர்ச்சி வெளிப்பட்டு கோபம், பயம், வீரம், காதல் என்று பலவகைப்படும். இது வடமொழியில் ரசம் என்றும், தமிழ் நூலில் மெய்ப்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. வடமொழியில் இவற்றை ச்ருங்காரம் (காதல்), ஹாஸ்யம் (சிரிப்பு) கருணாம், ரௌத்திரம், வீரம், பயனா சம், பீபுத்சம் (அருவருப்பு) அற்புதம், சாந்தம் என ஒன்பது வகையாகக் கூறியுள்ளனர். இலக்கியங்கள் இதனை நவரசம் என்று போற்றுகின்றன.

மனதில் தோன்றும் உணர்ச்சி காரணமாக உடல் அங்கங்களில் ஏற்படும் மாறுபாடுகள் தமிழில் மெய்ப்பாடு என்று கூறப்படுகிறது. இது நகை(சிரிப்பு) ; அவலம் (அழுகை) இளிவரல்(இழிவு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம் (வீரம்), வெகுளி (கோபம்) என எட்டு வகைப்படும் என்று தமிழ் இலக்கண நூல்கள் கூறுகின்றன. தமிழில் சாந்தம் என்பது இரண்டு உணர்ச்சிகளுக்கிடையே தோன்றும் அமைதி என்பர். நாடகத்தில் சாந்தம் கூறப்படுகிறது.

சிவபெருமானின் திருமேனிகளில் பலவிதமான உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதைக் காண்கிறோம். சோமாஸ்கந்தரில் நளினம் வெளிப்படுகிறது. நடராச வடிவத்தில் ஆனந்தம் பொங்குகிறது. தட்சிணாமூர்த்தி வடிவத்தில் சாந்தம் தவழ்கிறது. பைரவர், வீரபத்திரர், முதலான மூர்த்தங்களில் வீரம் கொப்பளிப்பதைக் காணலாம். இப்படி ஒவ்வொரு மூர்த்தத்திலும் ஒவ்வொரு சுவை வெளிப்படுவதைக் காண்கிறோம்.

ஒன்பது சுவைகளையும் வெளிப்படுத்தும் சிவமூர்த்தமாக இருப்பது கங்காதரர் வடிவமாகும். இதில் பெருமான் ஒற்றைச் சடையை விரித்து அதில் கங்கையை ஏற்கிறார். அவருடைய முகத்தில் வீர தீர பராக்கிரமத்தை வெளிப்படுத்தும் வீரம் வெளிப்படுகிறது. இந்தச் சடையா என்னைத் தடுத்து விடும். இந்தச் சடையுடன் இவனைச் சேர்த்து உருட்டித் தள்ளிச் செல்வேன் என்று ஆர்ப்பரிப்புடன் கங்கை குதிக்கிறாள்.அவள் சினத்துடன் வருவதை " வெஞ் சின முகங்களாகி' என்று தேவாரம் குறிக்கிறது.அதைக் கண்டு அம்பிகை ஊடல் கொள்கிறாள். அவள் முகத்தில் வாட்டம் தெரிகிறது. இதுவரை தலையில் குடியிருந்த பாம்பு அதில் பெருத்த ஓசையுடன் தண்ணீர் விழுவதைக் கண்டு அலறி அடித்துக் கொண்டு அச்சத் துடன் ஓடுகிறது. அதன் கண்களில் பயம் மின்னுகிறது.அதைப் பெருமான் பற்றுகிறார்.

தம்மேல் பாம்புகள் விழுவதைக் கண்டு பூத கணங்கள் அருவருத்து ஒதுங்குகின்றன.வானில் தேவர்கள், கந்தர்வர்கள், முனிவர்கள் கூடியுள்ளனர்.பெருத்த கங்கை வெள்ளத்தைச் சிவபெருமான் ஒற்றைச் சடையில் அடக்குவதைக் கண்டு ஆச்சர்யம் அடைகின்றனர். ஆவலுடன் விழிகளைத் திறந்து வியப்புடன் நோக்குகின்றனர். தனது தவம் வெற்றி பெற்றதால் பகீரதன் எல்லையற்ற ஆனந்தத்துடன் திகழ்கிறான். அவன் முகத்தில் பெருத்த முயற்சியால் கிடைத்த வெற்றிக் களிப்பால் சாந்தம் தவழ்கிறது.

கங்கையை ஏற்ற பின் சிவபெருமான் அம்பிகையின் ஊடலைத் தீர்க்க முயல்கிறார். அவள் கோபம் அதிகமாகிறது.அதை மாற்ற வேண்டி சாமகானம் பாடுகிறார். அதற்கும் அவள் இரங் காததால் பாடுவதுடன் ஆடுகிறார். அவருடைய ஆட்டத்தால் அவள் இதழோரம் புன்னகை அரும்புகிறது.

மாபெரும் பராக்கிரமசாலியான சிவபெருமான் இளமயில் அனைய தேவியை மகிழ்விக்க மேற்கொள்ளும் ஆடல் பாடல் முயற்சிகளைக் கண்டு பூதகணங்கள் சில வாய்பொத்தி மென்மை யாகவும், சில வாய்விட்டு அட்டகாசமாகவும் சிரிக்கின்றன. அந்தச் சிரிப் பில் இறைவனும் கலந்து கொள்கிறார்.

நாயும் கங்கையும்

பல்லவர் கால கங்காதரர் சிற்பங்களில் நாய் ஒன்று இடம் பெற்றுள்ளது. காஞ்சிபுரம், திருச்சி, மாமல்லபுரம் முதலிய ஊர்களிலுள்ள சிற்பங்களில் இக்காட்சியைக் காணலாம். மாமல்லபுரத்துச் சிற்பத்திலுள்ள நாய் மனித உடலும் நாய் முகமும் கொண்ட வீரனாகச் சித்தரிக்கப் பட்டுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்ல் நாய் மனிதர்களுக்குவழிகாட்டியாகவும் துணையாகவும் இருப்ப தாக நம்புகின்றனர். காட்டில் வேட்டையாடச் செல்பவர்கள் நாயை அழைத்துச் செல்வர். அது சென்ற வழியைச் சரியாக நினைவில் வைத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பி விடும். அதனால் காட்டில் சிக்கித் திசை தெரியாமல் திகைத்து அல்லாட வேண்டியதில்லை. அத்துடன் அது எதிர்வரும் ஆபத்தையும் உணர்ந்து அறிவிக்கும் ஆற்றல் பெற்றது. கடற்பயணம் மேற்கொள்பவர்கள் திசைமாறி ஆபத்தில் அகப்பட்டுக் கொள்ளாதிருக்க வைரவரையும் அவருடைய நாயையும் வழிபடும் வழக்கம் இன்று வரை உள்ளது. மகாபாரதத்தில் சுவர்க்கத்திற்குச் செல்லும் தருமருடன் இறுதிவரை ஒரு நாய் உடன் செல்வது இங்கே சிந்தித்தற்குரியதாகும். கங்கை பூமியில் பாயும் போது அவளுக்கு வழிகாட் டவும் தடை நேராதிருக்கவும் அவளுடைய வேகத்தால் உலக உயிர்களுக்குத் துன்பம் நேரா திருக்கவும் சிவபெருமானால் உண்டாக்கப்பட்ட நாய் முன்னே சென்றதென்று நம்புகின்றனர்.ல் கங்கைக் கரையில் அனேக வைரவர் ஆலயங்கள் உள்ளன.காசியிலுள்ள64 கங்கா கட்டங்களிலும் அறுபத்து நான்கு பெயர்களுடன் வைரவர் உள்ளார்.

சிவபராக்கிரமத்துள் கங்காதரரும், கங்காவிசர்ச்சனரும்

சிவபெருமானின் அற்புதத் திருவுருவங்கள் அறுபத்துநான்கினை வரிசைப்படுத்திப் புராணச் சான்றுடன் விளக்கும் நூல் சிவபராக்கிரமம் ஆகும். இதில் கங்காதரர், கங்கா விசர்ச்சனர் ஆகிய திருமேனிகள் குறிக்கப்பட்டுள்ளன. இவை அந்நாளைய சிற்ப நூல்களை அடியொற்றி அமைந்தவை.

கங்காதரர் உருவத்தில் சிவபெருமான் யோக பட்டயம் தரித்து அர்த்த சுவஸ்திகாசனத்தில் தட்சிணாமூர்த்தியாக அமர்ந்திருக்கிறார். மேற்கரங்களில் மானும் மழுவும் உள்ளன. வலது முன்கை சின் முத்திரை காட்ட இடது கை வரம் தருகிறது. விரிந்து பரந்திருக்கும் சடையில் கங்கை வெள்ளம் பாய்ந்து வருகிறது. அதில் ஆமை, மீன், முதலை முதலான நீர்வாழ் இனங்கள் காட்டப்பட்டுள்ளன.

கங்கையின் வெள்ளத்தைச் சடையில் தரித்து அவளுடைய ஆற்றலை அடக்கி அருளிய கோலமாதலின் இது தட்சிணாமூர்த்தி கோலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

கங்கா விசர்ச்சனர் வடிவில் பெருமான் உயர்ந்த ஆசனத்தின் மீது அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றார். இடது கைகளில் மானும் சூலமும் உள்ளன. வலது மேல்கை சடையிலிருந்து கங்கையை எடுத்து வெளிவிடுகிறது. கீழ்க்கை அகன்ற குடையைப் பிடித்துக் கொண்டுள்ளது. கங்கை வெளிப்படுவதைக் கண்ட உமாதேவி ஊடல் கொண்டு நிற்கிறாள்.

சிவபெருமானின் பீடத்தில் நிற்கும் நந்தியும் பெருமான் கங்கையை வாயில் ஏந்தி அதில் ஆயிரத்திலொருபங்கை வெளிவிடுகிறார். அருகில்பகீரதன் நிற்கிறான். இதுபோன்ற ஓவியங்கள் பல ஆலயங்களில் வரையப்பட்டுள்ளன.






ஸ்ரீ பல்லவ மன்னர்களுக்குச் சிவபெருமானின் வீரம் பிடித்திருந்தது. பொங்கிவரும் கங்கையை அடக்கி ஆளும் அவருடைய பராக்கிரம கோலத்தில் கவரப்பட்டவர்கள், அக்கதையை ஆலயங்களில் பெரிய சிற்பங்களாக அமைத்து மகிழ்ந்தனர்.

ஸ்ரீ சோழமன்னர்களின் நிலம் பொன் விளையும் பூமி அவர்களுக்கு நீரைக் கட்டி வைப்பதால் பயனில்லை. நிலத்தில் தவழவிட்டு பயிர்களைச் செழிக்க வைப்பதே பயன்தரும். எனவே கங்கையைச் சடைக்கட்டிலிருந்து வெளிவிடும் கோலமே அவர்களுக்கு மகிழ்ச்சி தந்தது. அதை அவர்கள் அமைத்து மகிழ்ந்தனர். அதிலும் இல்வாழ்வில் நிகழும் ஊடலையும், கூடலையும் சேர்த்து அமைத்தனர்.

மாமல்லபுரத்து கங்கா அவதரண சிற்பம்



உலகப் புகழ்பெற்ற சுற்றலாத் தலம் மாமல்லபுரம். வைணவம் பரப்பிய முதலாழ்வார்கள் மூவரில் ஒருவரான பேயாழ்வார் அவதாரம் செய்தருளிய திருத்தலம். இங்கு உள்ள தலசயனப் பெருமாள் கோயிலுக்குப் பின்புறம் மலையில் செதுக்கப்பட்ட பாறைச் சிற்பமாக பகீரதன் தவம் திகழ்கிறது. கடும் தவத்தால் எலும்பும் தோலு மாக வற்றிய உடலுடன் பகீரதன் ஒற்றைக் காலில் நின்று தவம்புரிகிறான். அவனுக்குச் சிவபெருமான் அருள்புரிந்து கங்கையை பூமியில் ஓட விடுகிறார். அவருக்குப் பக்கத்தில் வயிற்றில் சிங்க முகம் கொண்ட பூதம் உள்ளது. மேலி ருந்து வீழ்ந்த கங்கை பாதாளத்தை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்க நாகர்கள் (அவளையே வழியாகக் கொண்டு) மேலே வந்து பெருமானை தரிசிக்கின்றனர். பெரிய யானைக் கூட்டம் ஆற்றின் பெருக்கைக் காண வருகிறது. கங்கைக் கரையில் விஷ்ணு ஆலயமும் அங்கு சீடர்களுடன் வழிபடும் ஜான்ஹவி முனிவரின் ஆசிரமும் உள்ளன. சிங்கம், புலி, மான் கூட்டம், குரங்குகள் ஆகிய னவும் செதுக்கப்பட்டு உள்ளன. மேலே கந்தர்வர்கள், தேவர்கள் சூரிய சந்திரர்கள் இந்த காட்சியைக் காண் கிறார்கள். இதற்கிடையே சிற்பி தவம் செய்யும் பூனையை யும் அதைச் சுற்றி பயமில்லாது கும்மாளமிடும் எலிக் கூட்டத்தையும் அமைத்துள்ளான்.

வானத்திலிருந்து இறங்கிய கங்கையை இறைவன் சடையில் ஏற்று அவளுடைய கர்வத்தை அடக்கி சடை யிலேயே இருத்தி விட்டார். பகீரதன் சிவனைக் குறித்து மீண்டும் தவம் செய்தான். இரண்டாவதாக தவம் புரிந்த கோலத்தையே இந்த சிற்பம் விளக்குகிறது. இயற்கையாக நீர் விழுந்து கொண்டிருக்கும் பாறையாக இருந்த இந்த இடத்தில் இக்காட்சியை அமைத்துள்ளார்கள். பின்னாளில் இதில் தண்ணீர் விழுவது நின்றுவிட்டது.

கங்கையோடு யானைகள் மிகுந்த தொடர்பு கொண் டுள்ளன. தனது சிற்றப்பன்மார்களைத் தேடிச் சென்ற அம்சுமான் மன்னனும் தொடர்ந்து சென்ற பகீரதனும் பாதாளத்தில் திசையானைகளைக் கண்டு தொழுததாகப் புராணம் கூறுகிறது. ஐராவதம் தன் கொம்புகளால் கீறிய வழியிலேயே கங்கை பெருகி வந்தாள் என்றும், சில நூல்கள் கூறுகின்றன. அதையொட்டி இதில் மிகப்பெரிய வடிவில் யானைக் கூட்டம் அமைக்கப் பட்டிருக்கிறதென்று கூறுகின்றனர்' ❀

கங்கை கொண்ட சோழபுரம்



வடநாட்டின்மீது படை நடத்தி பல அரசர்களை வென்று இமயத்தின் மீது வெற்றிச் சின்னத்தைப் பொறித்தான் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன். தமிழரை இகழ்ந்த வடபுல மன்னர்களான கனக விஜயரை வென்று இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி அதில் கண்ணகியின் சிலையைச் செதுக்கி அதற்குக் கோயில் கட்டி வழிபட்டான் சேரன் செங்குட்டுவன் என்று சிலப்பதி காரம் கூறுகிறது.

சோழமன்னர்களும் பலமுறை வடநாட்டின் மீது படை நடத்தி கங்கைக் கரை மன்னர்களை வென்று வாகை சூடினர். முதலாம் இராஜேந்திர சோழன் தனது கங்கை வரையிலான படையெடுப்பின் வெற்றியைக் கொண்டா டும் வகையில் **சோழகங்கம்** என்ற பேரேரியை உருவாக்கினான். அதை ஜலமயமான **ஜெயஸ்தம்பம்** (நீர்வடிவான வெற்றித்தூண்) என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.பகீரதன் தன் தவ பலத்தால் கங்கையைக் கொண்டு வந்தது போல இராஜேந்திர சோழன் தன் புஜ பலத்தால் இதனை உருவாக்கினான் என்று அவனுடைய மெய்க்கீர்த்திகள் கூறுகின்றன.

அந்த ஏரியில் அவன் கங்கை நீரைக் கொண்டு வந்து நிரப்பினான் என்று கூறுகின்றனர். அந்த சோழகங்கப் பேரேரி இந்நாளில் பொன்னேரி என்ற பெயரில் வழங்குகிறது. மேலும் அதனருகில் அவன் கங்கை கொண்ட சோழபுரம் என்ற ஊரை நிர்மாணித்து அதில் கங்கை கொண்ட சோழீச்சரம் என்ற ஆலயத் தையும் கட்டினான். அது உலகப் புகழ்பெற்ற கலைக் கோயிலாக திகழ்கிறது.

பிரம்மாண்டமான அமைப்புடன் திகழும் அக்கோயி லின் மீது கருவூர் தேவர் திருவிசைப்பா பாடியுள்ளார். இதன் மகுடத்தில் “ கங்கை கொண்ட சோளேச் சரத்தானே“ என்ற பெருமானை துதிக்கிறார்.இறைவன் கங்கை கொண்ட சோழீச்சுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

விக்ரம தேவாங்க சரிதம், கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களில் இவ்வூர் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இவ்வூர் கங்காபுரி, கங்கா குண்டம், கங்கை மாநகர் எனப் பலவாறு குறிக்கப்பட்டுள்ளது.


இக்கோயிலிலுள்ள சண்டேச அனுக்கிரகர், மகா சரஸ்வதி, மகாலட்சுமி, நந்தி ஆகிய சிற்பங்கள் உலகப் புகழ்பெற்றவையாகும். இவை கலையுலகின் அதிஉன்னத படைப்புகளாகப் போற்றப்படுகின்றன. இக்கோயிலில் சிங்கமுகக் கிணறு ஒன்று உள்ளது. இதுவே கங்கா தீர்த்தமாகும்.

கூழமந்தல் கங்கைகொண்ட சோழீச்சரம்

காஞ்சீபுரம், வந்தவாசி சாலையில் கூழம்பந்தல் என்று சிற்றூர் உள்ளது. இங்கு இராஜேந்திர சோழன் தன் குருவாக விளங்கிய ஈசான பண்டிதரின் வேண்டுகோ ளின்படி அமைத்த சிவாலயம் உள்ளது. முன்னாளில் இவ்வூர் கங்கை கொண்ட சோழபுரம் என்று அழைக்கப் பட்டு வந்துள்ளது. இங்குள்ள இறைவர் கங்கை கொண்ட சோழீச்சுவரர் என்று அழைக்கப்படுகிறார். இந்த ஆலயம் மேலே குறிக்கப்பட்டுள்ள கங்கை கொண்ட சோழ புரத்திற்கு முன்னதாகவே கட்டப்பட்டதென்று கூறுகின் றனர். சோழன் ஏந்தல் என்ற பெயரே கூழமந்தல் என்று மருவி வழங்குவதாகக் கூறுகின்றனர்.

கங்கை கொண்டான் மண்டபம்

திருமால் வீற்றிருக்கும் திருப்பதிகளில் மாடவீதி யின் ஏதாவது ஓர் முனையில் கங்கை கொண்டான் மண்டபம் என்ற பெயரில் பெரிய மண்டபம் உள்ளது. கருடசேவை யன்று பெருமாள் இதில் இறங்குவார் அப்போது அவருக்குச் சிறப்புப் பூஜைகள் செய்யப் படுகிறது.



தென்னகத்துக் காசி விசுவநாதர்கள்

பாரத தேசத்தின் தொன்மையான தெய்வீக நகரம் காசி என்றழைக்கப்படும் வாரணாசி. வாருணா, அசி என்ற இரண்டு நதிகள் கங்கையில் கலக்கின்றன. அவற்றின் இடையில் இருப்பதால் இத்தலம் வாரணாசி என்றழைக் கப்படுகிறது. என்றும் அழிவற்றது என்பதால் அவிமுக்தம் என்று போற்றப்படுகிறது. சிவபெருமானின் திரிசூலம் அதை தாங்கிக் கொண்டிருக்கிறதென்று புராணங்கள் கூறுகின்றன.

காசி நகரில் ஒரு முகூர்த்த காலமாவது வசிக்க வேண்டும். ஒரு முறையாவது கங்கையில் மூழ்கி உள்ளங் கை அளவாவது கங்கை நீரைப் பருக வேண்டும். காசியில் கங்கை நதிக்கரையில் ஒரு இலந்தைக் கொட்டை அளவி லான சிவலிங்கத்தையாவது பிரதிஷ்டை செய்ய வேண் டும். இந்த நான்கையும் செய்தால் மோட்சம் உறுதி என்று கூறப்பட்டுள்ளது. அதனால் அனேகர் காசி யாத்திரை மேற் கொண்டு காசி விசுவநாதப் பெருமானை வணங்கு கின்றனர்.

முன்நாளில் பயணவசதிகள் மிகவும் குறைவு. காசி சென்று திரும்புவது எளிதான செயல் அல்ல. நடைப் பயணமாகக் காசிக்குச் சென்று திரும்ப ஒரு வருஷத்துக்கு மேலாகும். எனவே காசி யாத்திரையைச் சிலரால் மட்டுமே மேற்கொள்ள முடிந்தது.

காசி யாத்திரை மேற்கொள்பவர்கள் நடுவில் வரும் நர்மதையாற்றில் கிடைக்கும் பாணலிங்கங்களை எடுத்துச் சென்று கங்கைக் கரையில் வைத்து முறைப்படி பூசித்துத் தம் ஊருக்குக் எடுத்து வந்தனர். சில அன்பர்கள் மற்றவர் களும் வழிபட்டுப் பேறுபெற அந்த லிங்கங்களை நிலைப் படுத்தி ஆலயங்கள் அமைத்தனர். அவை விசுவநாதர் ஆலயங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றை வணங்கினால் காசிக்குச் சென்று விசுவநாதரை வழிபட்ட பயன் பூரணமாகக் கிடைக்கும் என்று நம்புகின்றனர்.

தனி ஆலயங்களை அமைக்க முடியாதபோது பெரிய ஆலயங்களில் தனிச் சந்நிதி அமைத்து விசுவநாதர் விசா லாட்சியை எழுந்தருளி வைத்துள்ளனர். அல்லது பிரகா ரங்களில் திருமாளிகைப் பத்தியில் விசுவநாதர் விசாலாட்சி நந்தியை அமைத்துப் போற்றி வருகின்றனர். இவ்வகை யில் ஆயிரக்கணக்கான விசுவநாதலிங்கங்கள் தென்ன கத்தில் நிறுவப்பட்டு அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றன.

மேலும் காசி யாத்திரை மேற்கொள்ள முடியாத பக்தர்களின் அன்பர்களின் அன்பினில் கட்டுண்ட விசுவ நாதர் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுத் தன் பரிவா ரங்களுடன் தென்னகத்துத் தலங்கள் பலவற்றில் எழுந்த ருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு பல்வேறு சிறப்புகளைக் கொண்ட காசி விசுவநாதர் வழிபாட்டையும், தென்னகத்திலுள்ள காசிக்கு இணையாகக் கொண்டாடப்படும் தலங்களையும், காசி யின் பெயரால் தென்னகத்தில் அமைந்துள்ள தலங்களை யும் பற்றிய செய்திகளை கங்காதீசுவரரின் தொடர்ச்சி யாக அறிந்து மகிழலாம்.

– சிவசுந்தரி

காசி மாநகர் சிந்தனைத் துளிகள்

ஸ்ரீ சமய வாழ்வின் குறிக்கோள் பிறவித்தளையிலி ருந்து விடுபட்டு இறைவனின் திருவடியாகிய மோட்சத்தை அடைவதே. பாரததேசத்தில் ஏழுதலங்கள் மோட்ச புரிகளாகச் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. இவை காசி, காஞ்சி, மாயா, மதுரா, அவந்தி, அயோத்தியா, துவாரகை என்பனவாகும். இதில் மாயாபுரி (எ) ஹரித்துவாரும், காசியும் கங்கைக் கரையில் அமைந்துள்ளன. இந்த இரண்டு தலங்களிலும் மாலை வேளையில் கங்கைக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

ஸ்ரீ காசியில் முதன்மை பெற்ற ஆலயம் விசுவநாதர் ஆலயம். அடுத்தது அன்னபூரணி ஆலயம். இவை இரண் டும் அருகில் உள்ளன. சற்று தொலைவில் விசாலாட்சி ஆலயம் உள்ளது. காசியிலுள்ள தேவியர் ஆலயங்கள் கௌரிஆலயங்கள் என்றுஅழைக்கப் படுகின்றன. அன்ன பூரணி மகா மங்கள கௌரி என்ற ழைக்கப் படுகிறாள்.

ஸ்ரீ காசி மாபெரும் சிவஸ்தலமாக இருந்தாலும் விநாயகர், வைரவர், கௌரி, அனுமன் விஷ்ணு ஆலயங் களும் அனேகம் உள்ளன. திருமால் பத்து அவதாரங் களிலும் நிறுவிப்பூசித்த மச்சேசர், கூர்மேசர், வராகேசர், நரசிம்மேசர், வாமனேசர் முதலான சிவலிங்கங்கள் உள்ளன.

ஸ்ரீ காசியில் பூமிக்கடியில் அனேக சிவலிங்கங்கள் மறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இங்கு எண்ணிலாத சிவாலயங்கள் உள்ளன.

ஸ்ரீ காசியில் ஏழு ஆவரணங்களில் 57 விநாய கர்கள் சூழ உடுண்டி கணபதி வீற்றிருக்கின்றார். இவரே காசியின் பிரதான கணபதியாவார். இவர் அருகில் சாட்சி கணபதி ஆலயம் உள்ளது.

ஸ்ரீ காசியில் அனேக தீர்த்தங்கள் உள்ளன. கங்கைக் கரையில் ஒவ்வொரு துறைக்கும் தனிப்பெயர் உண்டு. இவற்றைகாட்(கட்டம்) என்றழைக்கின்றனர். மணிகர்ணிகாகாட், தசாஸ்வமேத காட், பஞ்ச கங்கா காட், அரிச்சந்திரா காட் முதலியவை சிறப்பானவைகளாகும்.

ஸ்ரீ காசியில் ராம நாமம் ஒலித்துக் கொண்டே இருக் கிறது. விசுவநாதரை ராமர் பூசித்துக் கொண்டிருப்பதாக ஐதீகம். சப்தரிஷி பூஜையின் போது வில்வதளங்களில் சந்தனத்தால் இராமா என்று எழுதி அதைக் கொண்டு அர்ச்சிக்கின்றனர். அரிச்சந்திரா காட்டில் இராமன், இலக்குவன், பரதன், சத்ருக்னன், சீதை ஆகியோர் பூசித்த லிங்கங்கள் அவரவர் பேரிலேயே சிறு சிறு ஆலயங்களில் உள்ளன. இதில் பரதன் பூசித்த லிங்கம் சுயம்புலிங்க மாகும்.

ஸ்ரீ காசி நகரில் காலபைரவர் தண்டபாணி, லாட்டு பைரவர், உன்மத்தபைரவர் முதலிய அனேக பைரவர் ஆலயங்கள் உள்ளன. இவர்களின் மகாகால பைரவர் முதன்மை பெற்றவராவார். இவர் ஆலயத்தில் பைரவ தீர்த்தம் உள்ளது. இங்கு கருப்பு, சிவப்பு நிறமுள்ள கயிறுகளை மந்திரித்து அளிக்கின்றனர். அன்பர்கள் அவற்றைக் காசிக்கயிறு என்ற பெயரில் கங்கணங்களாக அணிகின்றனர்.

ஸ்ரீ காசி நகரில் ஆதித்தர்கள், வசுக்கள், நவக்கிர கங்கள் துர்க்கைகள், பூதர்கள், வேதாளர்கள், கந்தர்வர் கள் முதலான அனேகர் பூசித்துப் பேறு பெற்ற எண்ணி லாத ஆலயங்கள் அவரவர் பெயராலேயே உள்ளன. இந்த லிங்கங்களுக்கு அருகில் அவர்களின் திருவுருவங் களும் அவர்கள் அமைத்த தீர்த்தங்களும் உள்ளன.

ஸ்ரீகாசியில் குறைந்த பட்சம் பதினான்கு லிங்கங் களை யாவது தினமும் தரிசிக்க மோட்சம் கிடைப்பது உறுதியாகும்.

ஸ்ரீகாசியில் கருடன் பறப்பதில்லை. பல்லி பலன் சொல்வதில்லை. மாடு முட்டுவதில்லை. பூக்கள் மணப் பதில்லை. எரிக்கப்படும் பிணங்கள் நாறுவதில்லை. இவை ஐந்தும் காசியின் அதியங்களாகும்.

ஆறுகள் தெற்கிலிருந்து, வடக்கு நோக்கித் திரும்பி யோடும் தலங்கள் உத்திரவாகினித் தலங்கள் என்று சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. அவ்விடங்கள் கங்கையிற் புனிதம் மிகுந்தவைகளாகப் போற்றப்படு கின்றன. கங்கை (உத்திரவாகினியாக) வடக்கு நோக்கித் திரும்பி ஓடும் இடத்தில் விசுவநாதர் எழுந்தருளியுள்ள காசி மாநகரம் உள்ளது.காசிக்கு ஆனந்தவனம், மகா மயானம் என்ற பெயர்களும் உண்டு

ஸ்ரீ.காசிசியின் பெருமைகளை விளக்கும் நூல் களில் முதன்மை பெற்றது காசிக் காண்டமாகும். இது பதினெண் புராணங்களில் ஒன்றான ஸ்காந்த புராணத் துள் சங்கர சம்ஹிதையுள் உள்ளது. இது பூர்வ காண்டம், உத்திர காண்டம் என்ற இரண்டு பகுதிகளை உடையது. இதனைத் தென்பாண்டி நாட்டு அரசரான அதிவீரராம பாண்டியர் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இது 100 அத்தியாயங்களையும் 2526 விருத்தங்களையும் கொண்டது

ஸ்ரீ.காசி ரகசியம், நந்திபுராணம், லிங்கபுராணம் முதலிய அனேக நூல்களில் காசியின் பெருமைகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

காசி விஸ்வநாதர்

காசி நகரில் விசுவநாதர் ஆலயம் கங்கைக் கரையில் நெருக்கடி மிகுந்த குறுகிய சந்திற்குள் உள்ளது, பெருமான் தெற்கு நோக்கிஎழுந்தருளியுள்ளார். தலை வாசல் கிழக்கு நோக்கியுள்ளது. இதன் வழியாக உட்சென்றால் பெரிய மண்டபத்தை அடையலாம். இதன் நடுவில் அழகிய சிவலிங்கம் உள்ளது. இவருடைய பெயர் வைகுண்டேசுவரர் என்பதாகும்.

இவருக்கு வடக்கேயுள்ள கருவறையின் வாயில் வெள்ளியால் பொதியப்பட்டுள்ளது. இதன்வழியாக கருவறையை அடையலாம். கருவறையில் நிருதி மூலையில் ஒரு அடி ஆழமுள்ள தொட்டியுள் விசுவநாதர் அழகிய சுயம்புலிங்கமாக எழுந்தருளியுள்ளார். இந்தத் தொட்டிக்கும் வெள்ளிக் கவசம் அணிவித்துள்ளனர்.

இக்கருவறைக்கு நான்குபுறமும் வாயில்கள் உள்ளன. பிரதான வாயில் தெற்கு நோக்கியுள்ளது. கருவறையைச் சுற்றி மகாலட்சுமி, லட்சுமிநாராயணர், விநாயகர், பார்வதி, உமா சந்நிதிகள் உள்ளன. ஆங்காங்கு சிறிய சிவலிங்கங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு நோக்கிய வாயிலுக்கு நேராக நந்தியம் பெருமாள் சிறிய மண்டபத்தில் எழுந்தருளியுள்ளார்.

கருவறையைச் சுற்றியுள்ள கஜஉமாகாந்தர் (விக்னேச அனுக்கிரகர்) அர்த்தநாரி, தண்டபாணி முதலி யோருடன் அகல்யாபாய் காசிராஜாக்கள் ஆகியோரின் புடைப்புச் சிற்பங்களும் சலவைக் கற்களில் செதுக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன.

பிரகாரத்தில் தரையில் சலவைக் கற்கள் பதிக்கப்பட்டு ஆங்காங்கு வெள்ளிக் காசுகள் பொருத்தப்பட்டுள்ளன. கருவறை மீது நெடிய விமானம் உள்ளது. அதற்குத் தங்க முலாம் பூசியுள்ளனர்.

இப்போதிருக்கும் கோயிலுக்கு வடக்கில் விசுவநாதர் ஆலயம் அமைந்திருந்தது. அதை முசுலீம் அரசர்கள் அழித்துவிட்டு பெரிய மசூதியைக் கட்டினர். ஆயினும் அங்கு இருந்த பெரிய நந்தி, ஞானவாபி முதலியவை அப்படியே இருக்கின்றன. ஞானவாபியின் அருகில் பெரிய மண்டபம் உள்ளது.

அன்பர்கள், கங்கையில் நீராடிய பின் கரையில் அமர்ந்து தியானம் செய்வர். பின்பு கங்கை நீரை பாத்திரங்களில் எடுத்து வந்து விசுவநாதருக்கு அபிஷேகம் செய்து வழிபடுவர். பூக்களைச் சூட்டி இனிப்புகளை நிவேதிக்கின்றனர். காலையில் விசுவரூப பூஜை நடைபெறுகிறது.

காலைசந்தி, உச்சிக் காலபூசை, மாலை சப்தரிஷி பூஜை, அர்த்தஜாம பூஜை ஆகியன சிறப்புடன் நடைபெறுகின்றன. இதில் மாலையில் நடைபெறும் சப்தரிஷிபூஜை தனிச்சிறப்பு கொண்டதாகும். ஏழு பேர் ஆர்த்தி, மணிகளை ஏந்தி பூஜை செய்கின்றனர். அவர்களுடன் பலர் அமர்ந்து சாமகானம் பாடுகின்றனர். விசுவநாதருக்கு மாலைகளால் சிறப்பான பூ அலங்காரம் செய்யப்படுகிறது. மேலேயிருந்து பூவாளியால் தொடர்ந்து அவர் மீது நீர் விழும்படிச் செய்கின்றனர். பெரிய உடுக்கையை அடிக்கின்றனர். ஏறத்தாழ ஒரு மணி நேரம் இந்த பூஜை தினமும் சிறப்புடன் நடைபெறுகிறது.

தொடர்ந்து அன்பர்கள் தாமே தொட்டு வழிபட்டு மகிழ்கின்றனர். இரவு 9 மணி அளவில் அர்த்தசாம பூஜை நடைபெறுகிறது. இதில் விசுவநாதருக்கு பெரிய அபிஷேகம் செய்து ஏராளமான மலர்மாலைகளைக் கொண்டு அலங்காரம் செய்கின்றனர். தென்கிழக்கு முனையில் ஒரு பள்ளிக்கட்டில் இடப்பட்டு அதில் ஐந்து முகக் கவசம் வைக்கப்படுகிறது. கவரி, விசிறி, பாதரட்சை, போர்வை ஆகியவற்றைக் கட்டிலில் வைத்துப் பூசிக்கின்றனர். அன்பர்கள் பாடல்களைப் பாடி மகிழ்கின்றனர். இரவு பதினொரு மணிவரை இது நீடிக்கிறது. பிறகு நடை சார்த்தப்படுகிறது.

காலை, நண்பகல், அர்த்தசாம பூஜை ஆகியவை தமிழ்நாட்டு நாட்டுக்கோட்டை நகரத்தாரால் செய்யப்படுகின்றன, பகலிலும், மாலையிலும் மேளம் நாதஸ்வரத்துடன் பூஜைப் பொருட்கள் நகரத்தார் திருமடத்திலிருந்து கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனை சம்போ என்றழைக்கின்றனர். இந்த ஊர்வலத்தில் சம்போ சங்கர மகாதேவ என்று மகுடம் கூறிச் செல்வதால் இப்பெயர் பெற்றது.

கார்த்திகை சோமவாரங்கள் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. மாசி மாதம் சிவராத்திரி வழிபாடு பெரிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது. தீபாவளியின் போது கங்கை நீராடலும், அன்னபூரணி விசுவநாதர் தரிசனமும் சிறப்புடன் நடைபெறுகின்றன. அப்போது லட்டுகளைக் கொண்டு பெரிய விமானம் போல் அலங்கரிக்கின்றனர். இதனை லட்டுத் தேர் என்கின்றனர்.

விசுவநாதர் ஆலயத்தில் முக்தி மண்டபம் உள்ளது. இதில் அமர்ந்து தியானம் செய்கின்றனர்.

காசியில் பிரதான கணபதியான சாட்சி விநாயகர் ஆலயம், டுண்டி விநாயகர் ஆலயம் , அன்னபூரணி ஆலயம் முதலியவை விசுவநாதர் கோயிலுக்கு அருகிலேயே உள்ளன.

விசுவநாதர் தரிசனம், கங்கை நீராடல், சிவராத்திரி வழிபாடு, பஞ்சாட்சர ஜபம் ஆகிய நான்கும் முக்திக்கான சாதனங்களாகும். ஶ்ரீ

இராணி அகல்யா பாய்

காசி இந்துக்களின் புண்ணிய பூமியாகும். பாரத தேசத்தின் புராதன நகரங்களில் ஒன்றாகவும், பக்தி நகர மாகவும் இருந்து வருவதால் அதற்கு ஏற்பட்ட சோதனை களும் ஏராளம். அந்நிய மதத்தினர் எண்ணற்ற முறை அதன் மீது படையெடுத்து அதிலிருந்த செல்வங்களைக் கொள்ளையிட்டனர்.ஆலயங்களை இடித்தனர்.பக்தர் களை வழிபடாதவாறு தடுத்தனர். அந்நகரம் அவ்வப் போது பெருஞ்சோதனைகளைச் சந்தித்தது.

16ம் நூற்றாண்டில் காசி விசுவநாதர் ஆலயத்தின் ஒரு பகுதியை இடித்து அங்கு மசூதி கட்டப்பட்டது. இப்போ தும் அந்த மசூதி உள்ளது. அதன் முற்றத்தில் திருநந்தி தேவர், ஞானவாவி முத்தி மண்டபம் ஆகியன பழைய படியே உள்ளன. மதவெறியர்கள் விசுவநாதரைப் பெயர்த்து கங்கையில் போட்டு விட்டனர். சிலகாலம் வரை மக்கள் ஞானவாவி நந்திகேசுவரர் முதலியோரை வழி பட்டு வந்தனர்.விசுவநாதர் இருக்குமிடம் தெரியாமல் பக்தர்கள் வருந்தினர்.

விசுவநாதர் ஓர் அன்பரின் கனவில் தோன்றி கங்கையில் தான் இருக்குமிடத்தை அறிவித்தார். அன்பர் கங்கையில் மூழ்கி அந்த விசுவநாதலிங்கத்தை வெளிக் கொண்டு வந்தார். இப்போதுள்ள இடத்தில் கோயிலைக் கட்டி அதில் விசுவநாதலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தனர். இக்கோயிலைக் கட்டியவர் நர்மதை நதிக் கரையிலுள்ள மாகிஷ்மதியை தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்த மேவார் ராணி அகல்யாபாய்.

சீலமும் சிவபக்தியும் மிகுந்த அவள் செய்த தான தருமங்கள் ஏராளம். தினமும் நர்மதை நதிக்கரையில் மணலைக் குவித்து அதையே கோடிலிங்கமாகப் பாவித்து அருச்சனை புரிய ஏற்பாடு செய்திருந்தாள். நவரத்தினங்களால் செய்யப்பட்ட லிங்கங்களைப் பெரிய தங்க ஊஞ்சலில் வைத்து ஆட்டியவாறே பூஜை செய்வது அவள் வழக்கம். காசி விசுவநாதர் மீது பக்தி கொண்ட அவள், காசியில் ஆலயம் அமைத்து விசுவநாதரைப் பிரதிஷ்டை செய்தாள். அவருக்கு தினசரி பூசைக்கு வேண்டிய நிபந்தங்களை ஏற்படுத்தினாள். விதிப்படி காசியில் விசுவநாதரை அமைத்து பூசை செய்தாள். அவளுடைய காலம் விசுவநாதர் ஆலயத் தின் பொற்காலமாகும். அவளுடைய திருவுருவம் விசுவநாதர் ஆலயத்தில் இருக்கிறது. அவள் அமைத்த ஆலயத்தை மன்னர் ராணா பிரதாப் சிங் விரிவுபடுத் தினார். தங்க ஸ்ரீவிமானத்தை அமைத்து அனேக திருப்பணிகளைச் செய்துள்ளார்.

மகாசிவபக்தையான இராணி அகல்யாபாய் ஒரு முற்பகல் வேளையில் காசியில் இறந்து விசுவநாதரின் திருவடிகளை அடைந்தாள். இவள் பெயரால் கங்கை யின் ஒரு துறைக்கு அகல்யாபாய் காட் என்றழைக்கப் படுகிறது அங்கு அவள் வசித்த அரண்மனை உள்ளது. ஃ

அநவித்தை – நாதசர்மா தம்பதியர்

வட நாட்டில் அந்தண குலத்தில் தோன்றியவர் நாதசன்மா. அவருடைய மனைவி அநவித்தை. இருவ ரும் கடும் தவம் புரிந்து திருக்கயிலை மலையை அடைந்து இறைவனுக்குப் பணிசெய்து வந்தனர்.நீண்ட காலத்திற் குப் பின் அவர்கள் இறைவனிடம் தமக்கு மோட்சமாகிய சாயுஜ்ய பதவிஅளிக்கும்படி வேண்டினர். அவர், ' நீங்கள் காசி சென்று வழிபடுங்கள்' என்றார். அவர்கள் விடை பெற்றுக் காசி நகருக்கு வந்து அனேக நாட்கள் தங்கியி ருந்து சிவபூசை செய்துவந்தனர். பின்னர், விருத்தகாசி யான விருத்தாசலத்தில் தங்கி சிவபூசை செய்துவந்தனர். அங்கிருந்து திருவையாறு சென்று அங்கு ஜபதபங்கள் செய்துவந்தனர். ஒருசமயம் ஐயாரப்பர் ஆதிகாசியான மயிலாடுதுறைக்கு அவர்களை அழைத்துவந்து நீங்கள் இங்கேயே தங்கி சிவபூசை செய்யுங்கள் உங்கள் விருப்பம் விரைவில் நிறைவேறும் என்று கூறினார். அவர்கள் இங்குத் தங்கி சிவலிங்கம் அமைத்து சிவவழிபாடு செய்து வந்தனர்.அவர்களை அழைத்துவந்த ஐயாறப்பரும் தனிக்கோயில் கொண்டார். சில காலம் கழித்து விசுவநாத ரான மயூரநாதர் அவர்களுக்குக் காட்சியளித்து மோட்சம ளித்தார். அவர்கள் நிறுவி வழிபட்ட லிங்கங்களிலேயே அவர்கள் கலந்தனர்.

மயிலாடுதுறை அபயாம்பிகை சந்நிதியை ஒட்டிய வாறு அநவர்த்தேசுவரர் எனும் ஆலயம் உள்ளது. இதில் பெரிய சிவலிங்கம் உள்ளது. இது அநவர்த்தை ஒடுங்கிய லிங்கமாதலின் இதற்குப் புடவை அணிவிக்கப்படுகிறது. விருத்த காசியான விருத்தாசலத்திலும் இவர்கள் நிறுவி வழிபட்ட லிங்கங்கள் உள்ளன.

காசிக்கண்டம், விருத்தாசல புராணம், மயிலாடு துறை புராணம் ஆகியவற்றில் இவர்களின் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன. ஃ

தென்னகத்து காசி நகரங்கள்

புண்ணியம் தரும் காசிநகரின் பெருமையையும் விசுவநாதர் அருளையும் நினைத்த மக்கள் தத்தம் பகுதிகளில் காசி எனும் பெயர் கொண்ட நகரங்களை அமைத்தனர். வடகாசியினின்றும் பிரித்துக் காட்ட அவற்றைச் சிறப்பு அடைமொழியுடன் தென்காசி, சிவகாசி எனப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

சிவகாசி

அச்சுத்தொழிலாலும், பட்டாசுத் தொழிலாலும் புகழ் பெற்ற நகரமாக விளங்குவது சிவகாசி. வடநாட்டுக் காசி நகரம் சிவனுக்கே உரியதாக இருந்தாலும் அங்கு விஷ்ணு துர்க்கை, கௌரி ஆலயங்களும் உள்ளன. அப்படியின்றி சிவபெருமானுக்கே உரிய காசிநகராக அமைக்கப்பட்ட நகரம் சிவகாசியாகும்.


அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்பவர் தென் காசியில் பிரதிஷ்டை செய்ய காசியிலிருந்து லிங்கம் கொண்டு வந்தான். அதனை ஒரு பசு சுமந்து வந்தது. மன்னனுடன் வந்தவர்கள் இளைப்பாற வழியில் இருந்த வில்வ வனத்தில் தங்கினர். மறுபடியும் புறப்பட்டபோது பசு எழுதிருக்கவில்லை. இறைவன் தான் அங்கேயே குடி கொள்ள விரும்புவதாக அறிவித்தார். மன்னன் தான் பிரதிஷ்டை செய்யக் குறித்த நாளான வைகாசி மாதம் ரோகிணி நட்சத்திரம் மறுநாளாக இருக்கக் கண்டான். உடனே தகுந்த ஏற்பாடுகளைச் செய்து பெருமானை அங்கேயே பிரதிஷ்டை செய்து விட்டான். இங்கு கங்கை ஒரு ஊற்றாகப் பொங்கினாள். அது சிவகங்கை தீர்த்தக் குளமானது.

இத்தலத்தை நடுகாசி, மத்யகாசி எனவும் அழைப்பர். பின்னாளில் பராக்கிரம முனிவர் என்பவர் இங்கு பெரிய ஆலயத்தை அமைத்தார். படிப்படியாக நகரம் விரிவடை ந்தது. சிவனார் விரும்பிய காசியாதலின் சிவகாசி எனப் பட்டது. இந்த ஆலயத்திலுள்ள உற்சவமூர்த்தி திருமலை மன்னனால் அளிக்கப்பட்டதென்று கூறுகின்றனர். (அது அவருக்கு திருச்சிக்கு அருகில் பூமியைத் தோண்டிய போது கிடைத்ததாக ஒருநூலில் குறிக்கப்பட்டுள்ளது).

தென்காசி

நெல்லை மாவட்டத்தில் குற்றாலத்திற்கு அருகில் அமைந்துள்ள தலம் தென்காசி. திரிகூட மலையில் உற்பத்தியாகி ஓடும் சித்திராநதி என்னும் சித்திர கங்கையாற்றின் கரையில் உள்ளது. காசிகண்ட பாண்டியன் என்பவன் இப்பகுதியை ஆண்டு வந்தான். அவன் முருகன் அருள் பெற்றவன். முருகன் அருளால் அவன் வான் வழியாகத் தினமும் காசிக்குப் பறந்து சென்று கங்கையில் நீராடி விசுவநாதரை வழிபட்டு மீண்ட தாகக் கூறுகின்றனர்.

ஒரு சமயம் அவனால் காசிக்குச் செல்ல முடியாமல் போய்விட, மிகவும் துன்ப மடைந்தான். அன்றிரவு கனவில்



தென்காசி.விசுவநாதர் ஆலயம்

தோன்றிய சிவபெருமான் அவனது நகரத்திற்கு அருகில் சித்ரா நதிக்கரையில் செண்பகப் பொழில் நடுவே குளத்தில் தான் இருப்பதாகவும் எறும்புகள் ஊர்ந்து செல்லும் வரிசை அவனுக்கு வழிகாட்டும் என்றும், குளத்திலிருக்கும் லிங்கத்தை எடுத்து வழிபட்டால் காசியில் வழிபட்ட பலனுக்கு மேல் கால்பங்கு அதிகபலன் கிடைக்கும் என்றார்.

துயிலெழுந்தமன்னன் இறைவன் கூறிய அடையாளங்களின் மூலம் லிங்கத்தைக் கண்டுபிடித்து கோயில் அமைத்தான் என்று தலபுராணம் கூறுகிறது. மன்னன் விருப்பப்படி கிணற்றிலிருந்து நீர் பொங்கி வந்தது. அது கங்கா கூபம் என்றழைக்கப்படுகிறது.

அன்னிய மதத்தார் வட நாட்டைச் சூறையாடிய போது காசி விசுவநாதர் ஆலயம் பாழ்பட்டது. அவ்வேளையில் விசுவநாதர் தனக்கு சித்ரா நதிக்கரையில் தமக்கு ஆலயம் அமைக்குமாறு கனவில் தோன்றி ஆணையிட்டார் என்றும், அதன்படி காசி கண்ட பாண்டியன் (ஏ) பராக்கிரம பாண்டியன் இக்கோயிலை அமைத்தான் என்றும் இக்கோயில் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளது. அம்பிகை உலகநாயகி, தலமரம் பலா, ஷெண்பகம், பராக்கிரம பாண்டியன் திருவுருவம் ஆலயத்தில் உள்ளது.

காசிக் கண்டத்தில் கூறப்பட்டுள்ளபடி மகா மண்டபத்தில் அழகான சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. தென்னகத்தின் மிகப்பெரிய கோபுரங்களில் தென்காசி விசுவநாதர் ஆலயக் கோபுரமும் ஒன்றாகும்.

தென்காசியின் விரிவான வரலாற்றைத் தென்காசித் தலபுராணத்தில் காணலாம். இதன் ஆசிரியர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்.

சிறப்புமிகு தென்னகத்துக் காசி நகரங்கள்

காசி என்ற பெயரால் நேரடியாக அழைக்கப் பெறாவிட்டாலும் புராணங்களில் சிறப்பு மிக்க காசிகளாகக் கொண்டாடப்படும் தலங்கள் சில உள்ளன. திருப்பூவணத்திற்கு புஷ்பவனகாசி என்றும் விருத்தாசலம் எனப்படும் திருமுதுகுன்றத்திற்கு விருத்தகாசி என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

விருத்தகாசி (விருத்தாசலம்)

காசியிலும் வீசம் அதிக மகிமை உடைய தலமாக இருப்பது விருத்தாசலம் என்றழைக்கப்படும் பழமலை. இது பாடல் பெற்ற திருத்தலம். கடலூர் மாவட்டத்தில் ஒரு வட்டத்தின் தலை நகரமாக உள்ளது. அருகில் மணிமுத்தாறு ஓடுகின்றது. இதில் கோயிலுக்கு அருகில் புண்ணிய மடு என்ற இடம் உள்ளது. இங்கு இடப்படும் எலும்புகள் பூக்கும் என்று நம்புகின்றனர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு பொன் கிழிகள் அளித்த தலம் அனேக அருளாளர்கள் வாழ்ந்த தலம் காசிக் கண்டம் கூறும் அநவித்தை நாதசன்மா தம்பதியர் நெடு நாள் தங்கி வழிபட்ட தலம். அவர்களுக்கு தனிச் சந்நிதி உள்ளது. காசியில் உள்ளது போல் வைரவர் சிறப்புடன் திகழ்கிறார்.

இறைவர் பழமலைநாதர் (விருத்தகிரீசுவரர்) இறைவிபெரியநாயகி (விருத்தாம்பிகை) கந்தபுராணத்தில் வரும் வழிநடைப் பயணத்தில் இத்தலம் காசியினும் சிறந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

புஷ்பவன காசி (திருப்பூவனம்)

மதுரைக்கு அருகிலுள்ள தலம் பூவணம்.மூவராலும் பாடப்பட்ட பதி. இறைவர் புஷ்பவனநாதர். இங்கு ஓடும் வைகை ஆறு கங்கையின் வடிவமாகும். இதனை புஷ்ப வன காசி என்கின்றனர். எலும்பு பூவாகும் தலம் கோயிலுக்கு எதிரில் ஓடும் வைகையாற்றின் மணலெல் லாம் சிவ லிங்கமாகக் கருதப்படுகிறது.

கடம்பன் காசி (கடம்பர் கோயில்)

காஞ்சீபுரத்திற்குத் தெற்கில் சேயாற்றின் கரையில் கடம்பர் கோயில் என்னும் தலம் உள்ளது. இதுவும் எலும்பு பூக்கும் தலமாகும். முருகன் பூசித்த தலமாதலின் கடம்பன் காசி என்று அழைக்கப்படுகிறது.

கங்கையில் இட்ட எலும்புகள் பூக்கும்

மனிதன் மாண்டபின்பு மண்ணில் மக்கிப் போகாமலும் சுட்டபின்னும் எஞ்சி நிற்பவை எலும்புகளாகும். அவை கங்கையின்புனித மடியில் விழும்போது பூக்களாக மாறி இறைவனைச் சென்றடையும் என்பது நம்பிக்கை. மாண்டவருடைய எலும்புகளையும் சாம்பலை யும் கங்கையில் கரைக்கும் வழக்கம் நெடுங்காலமாக உள்ளது. தம்மால் முடியாதபோது தகுந்தவர்கள் மூலம் கரைப்பது வழக்கம். இப்போது அஞ்சல் மூலம் அனுப்பினாலும் கரைத்துவிட்டு விசுவநாதருக்கு அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பும் நிறுவனங்கள் உள்ளன.

விருத்தகாசியான திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) புஷ்பவன காசியான திருபூவணம், செய்யாறு உத்திர வாகினியாகச் செல்லும் கடம்பர்கோயில் முதலிய தலங்கள் காசியை விட புனிதம் மிக்கவையாகவும் சுட்ட எலும்பு புஷ்பமாகும், அஸ்தி புஷ்பஸ்தலம் (எலும்பு பூக்கும் தலம்புண்ணியப்பதிகளாகவும் இன்று கொண்டாடப் படுகின்றன. இத்தலங்களில் கோயிலுக்கு அருகி லுள்ள ஆறு கங்கையாகப் போற்றப்படுகிறது. அதில் எலும்புகளை இட தனியான இடம் இருக்கிறது. விருத்தாசலத்தில் இத்தகைய இடம் புண்ணிய மடு என்ற பெயரில் மணிமுத்தாற்றில் உள்ளது.

முன்னாளில் மாண்டவருடைய எலும்புகளையும் சாம்பலையும் காசிக்கு எடுத்துச் சென்று கங்கைக் கரையில் மணிகர்ணிகையில் வைத்து பூசித்து கங்கையில் இட்டு விசுவநாதருக்கு பூசைகள் செய்து பிரசாதத்துடன் திரும்புவர். கங்கைக்கு அடிக்கடி சென்று வருபவர்கள் கங்கையாடிகள் எனப்பட்டனர்.

சம்புவரையர்கள் கல்வெட்டில் அகம்படி முதலிய கங்கையாடி மாதையன் என்பவர் குறிக்கப்பட்டுள்ளான். அவன் அரசாணையின்படி சம்புவராய அரசனான ஏகாம்பரநாதன் வென்றுமண்கொண்ட சம்புவரையன் இறந்தபின் அவனது சாம்பலை காசிக்குச் சென்று அங்கு எடுத்துக் கங்கையில் கரைத்தான்.

பிறகு சிரார்த்தம் செய்துவிட்டு திரும்பினான். அவனுடைய இந்த புண்ணியச் செயலுக்காக மன்ன னின் மகன் ராஜ நாராயணச் சம்புவரையன் குட்டியம் என்ற ஊரை வரிநீக்கி அளித்தான். மாதையன் குட்டியத் தில் காலஞ்சென்ற அரசனின் பெயரால் ஏகாம்பரநாதர் ஆலயம் என்னும் சிவாலயத்தை அமைத்தான். இவனது காலம் 13ம் நூற்றாண்டு ஆகும்.

இந்த நூலை எழுதிக் கொண்டிருந்த வேளையில் எனது தாய் திருமதி செயலட்சுமி சிவகதி அடைந்தார். அவருடைய அஸ்திகளை கங்கையில் விடுத்தோம். அது மும்முறை சுழன்று நீரில் ஆழ்ந்தது. –ஆசிரியர்

காசி நகரில் தாரக உபதேசமும் முக்திப்பேறும்

காசியில் சிவசிந்தனையோடு இறக்கும் எல்லா உயிர்களும் இறைவனுடன் கலந்து மோட்சம் அடைகின்றன. அவற்றின் உயிர் பிரியும் போது வலது செவி மேல் நோக்கி இருக்கும் சிவபெருமான் அந்த உயிர்களின் சூட்சமதேகத்தை மடிமீது கிடத்தி அவற்றிற்குத் தாரக மந்திர உபதேசம் செய்து தனது உருவை நல்கி முக்தியை வழங்குவார். அப்போது அம்பிகை முந்தானையால் விசிறி அவ்வுயிர்களுக்கு இளைப்பாற்றுவாள்.

இதேபோன்று பஞ்சாட்சர உபதேசத்தையும் உபசரிப்பையும் சிவபார்வதியர் விருத்த காசியான விருத்தாசலத்தில் (திருமுதுகுன்றத்தில்) இறக்கும் உயிர்களுக்கும் அளிக்கின்றனர். இதனைக் கந்தபுராணம் வழிநடைப் படலத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் விவரித்துள்ளார்.

தூசினால் அம்மை வீசத் தொடையின் மேற்கிடத்தித்
துஞ்சும் மாசிலா உயிர்கட்கெல்லாம் அஞ்செழுத்து இயல்பு கூறி
ஈசனே தனது கோலம் ஈந்திடும் இயல்பால் அந்தக்
காசியின் விழுமிதான முதுகுன்ற வரை(யும் கண்டான்)



இதனை விளக்கும் ஓவிய மொன்று கோபுர வாயிலில் தீட்டப்பட்டுள்ளது.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் இங்குள்ள மணிகர்ணிகா காட்டிற்குச் சென்றபோது சிதையில் அடுக்கப்பட்ட பிணங்களின் அருகில் நீண்ட ஜடையுடன் உடல் முழுவதும் திருநீறு பூசிய சிவபெருமான் சென்று மந்திரங்களை ஓதும் அபூர்வக் காட்சியைக் கண்டதாகக் கூறியுள்ளார். – பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சரிதம்

தென்னாட்டு விசுவநாதத் திருத்தலங்கள்

தமிழகத்திலுள்ள புகழ்பெற்ற திருத்தலங்கள் யாவற்றிலும் விசுவநாதர் காஞ்சி, மதுரை, திருநெல்வேலி, மயிலாடுதுறை, திருச்சி, குடந்தை முதலிய சைவசமயம் சார்ந்த நகரங்கள் அனைத்திலும் விசுவநாதர் ஆலயங்கள் உள்ளன. இவற்றில் சிலவற்றைக் காணலாம்.

சென்னைமாநகர் விசுவநாதர் ஆலயங்கள்

சென்னை நகரில் பெரியதும் சிறியதுமான பத்துக்கும் மேற்பட்ட விசுவநாதர் ஆலயங்கள் உள்ளன. இவற்றில் முதன்மை பெற்றது கிருஷ்ணாம்பேட்டையில் உள்ள விசுவநாதர் ஆலயமாகும். இதில் உரிய பரிவாரங் களுடன் விசுவநாதர் விசாலாட்சி வீற்றிருக்கின்றனர்.

மீனம்பாக்கம், அயனாவரம், அனகாபுத்தூர், இராயபுரம், பரங்கிமலை, மாம்பலம் முதலிய இடங்களில் விசுவநாதர் ஆலயங்கள் உள்ளன. சென்னை மேற்கு மாம்பலம் குப்புசெட்டித் தெருவிலுள்ள விசுவநாதர் ஆலயம்விரிவுபடுத்திப் பெரியதாகக் கட்டப்பட்டுவருகிறது. சுவாமிக்கும் அம்பிகைக்கும் தனித் தனியே நெடிய ராஜகோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாலாஜா விசுவநாதர் ஆலயம்

தமிழகத்தில் தென்காசி விசுவநாதருக்கு அடுத்த படியான பெரிய விசுவநாதர் ஆலயம் வாலாஜா பேட்டையில் உள்ளது. சென்னை, வேலூர் சாலையில் உள்ள இந்த ஆலயம் புராணச் சிறப்புடையதாகும். இது அகத்தியர் வழிபட்ட தலமாகும்.

ஆற்காடு விசுவநாதம்

வாலாஜாவைத் தாண்டிப் பயணம் செய்து ஆர்க்காட்டை அடையலாம். ஆர்க்காட்டில் பாலாற்றங் கரையில் பெரிய விசுவநாதர் ஆலயம் உள்ளது. இது சப்தமாதர் வழிபட்ட தலமாகும்.

குடந்தை விசுவநாதம்

குடந்தையில் சிறியதும் பெரியதுமாக ஐம்பதுக்கும் மேற் பட்ட விசுவநாதர் ஆலயங்கள் உள்ளன. இவற்றில் புகழ் பெற்றவை விசுவநாதர் கோயில், காசி விசுவநாதர் கோயில் முதலியன.

கும்பகோணம் மகாமகத் தீர்த்தத்தின் வடகரையில் காசிவிசுவநாதர் கோயில் உள்ளது. இறைவி விசாலாட்சி இதுவே குடந்தைக்காரோணம் என்று அழைக்கப் படுகிறது. இங்குள்ள பெரிய சந்நிதியில் நவதீர்த்தத் தேவியர்கள் எழுந்தருளியுள்ளனர். குடந்தைப் புராணம் இத்

திருத்தலத்தின் பெருமைகளைப் பேசுகிறது.

குமரி விசுவநாதர் ஆலயம்

தென் கோடியான குமரியில் காசிவிசுவநாதர் ஆலயம் சிறப்புடன் திகழ்கிறது. கங்கையாடுபவர்கள் குமரியாடுவதும்-தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கமாக இருந்தது.

மயிலாடுதுறை பஞ்ச விசுவநாதம்

காசியைவிட மும்மடங்கு சிறப்புப் பெற்ற மயிலாடுதுறையில் பல விசுவநாதர் ஆலயங்கள் உள்ளன. அவற்றில் ஐந்து ஆலயங்கள் சிறப்பு வாய்ந்தவைகளாகப் போற்றப்படுகின்றன. இவை பஞ்சவிசுவநாதங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

1. துலாகட்ட விசுவநாதர்

மயிலாடுதுறையில் காவிரியிலுள்ள இடபதீர்த்தக் கரையில் (துலாகட்டத்தில்) விசுவநாதர் ஆலயம் உள்ளது. துலாஸ்நானம் செய்து மகிழ காசிவிசுவநாதர் பரிவாரங்களுடன் இங்கு எழுந்தருளியுள்ளார் என்று புராணம் கூறுகிறது. அவரைத் தொடர்ந்து இத்தலத்தில் டுண்டி விநாயகர், தண்டபாணி, பைவரர், அன்னபூரணி ஆகியோரும் எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றனர். இதனை கடைத்தெரு விசுவநாதர் கோயில் என்று அழைப்பர். இங்கு விஷ்ணுபாதம், கயாதீர்த்தம், ஆலமரம், பிந்துமாதவர் ஆகியன உள்ளன.

2. பாலக்கரை விசுவநாதர்

காவேரிப் பாலத்தின் தென் கரையில் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

3. வள்ளலார் விசுவநாதர்

இக்கோயில் காவிரியின் வட கரையில் வள்ளலார் தீர்த்த மண்டபத்தின் கீழ்ப் பகுதியில் உள்ளது.

4. படித்துறை விசுவநாதர் கோயில்

காவிரியில் திம்மப்ப நாயகர் படித்துறைக்கு அருகில் உள்ளது.

5. உள்விசுவநாதர் கோயில்

மாயூரநாதர் கோயில் வடக்கு திருமதிலுக்கும் தெற்கு வீதிக்கும் நடுவில் அமைந்துள்ளது. கண்ணுவர், கௌத மர், அகத்தியர்,பரத்வாஜர், இந்திரன் ஆகியஐவரும் இக் கோயில்களை வழிபட்டனர் என்று கூறப்படுகிறது.

திருப்பரங்குன்றத்து விசுவநாதர்

முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்றான திருப்பரங்குன்றத்தில் மலைமீது காசிவிசுவநாதர் ஆலயம் உள்ளது. இவர் மலை உச்சியில் அமைந்துள்ள விசுவநாதர் என்ற தனிச் சிறப்பைப் பெறுகிறார். இவருடன் விசாலாட்சி, விநாயகர், பைரவர் முதலியோரும் உள்ளனர். இந்த ஆலயத்தின் அருகில் காசிச்சுனை என்னும் சுனை உள்ளது. இந்தச் சுனையை முருகன் தன் கை வேலால் தோற்றுவித்தார் என்றும், அதிலிருந்து கங்கை பொங்கி வந்தாள் என்றும் கூறுகின்றனர். இங்குள்ள முசுலீம் தர்க்காவினரும் இந்நீரைப் பயன்படுத்துகின்றனர்.

காஞ்சிநகர் விசுவநாதம்

காஞ்சி நகரில் பெரிய திருக்குளமாக விளங்கும் சர்வ தீர்த்தத்தின் மேற்குக் கரையில் இவ்வாலயம் அமைந்துள்ளது. உலகத்திலுள்ள திருத்தலங்கள் யாவும் சூட்சும வடிவில் இத்தலத்தில் உள்ளன என்ற கருத்தில், அவிமுத்தித் திருத்தலமான காசி விசுவநாதத்தின் பிரதியாக இக்கோயில் அமைந்துள்ளது. கருவறையில் விசுவநாதர் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். கருவறைச் சுவரில் புடைப்புச் சிற்பமாக சோமாஸ்கந்தர் திருவுருவம் உள்ளது. இங்கு விநாயகர், வள்ளி, தெய்வயானை உடனாய சுப்பிரமணியர், தட்சிணாமூர்த்தி ஆகிய தெய்வங்கள் உள்ளனர்.

கருவறைக்கு முன்னுள்ள மண்டபம் முக்தி மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. காசியில் விசுவநாதர் ஆலயத்திலுள்ளது போலவே இந்த மண்டபம் அமைக்கப் பட்டுள்ளது என்று கூறுகின்றனர்.

ஊழிக் காலத்தும் அழியாதிருக்கும் இந்த மண்டபத்தை அதிகாலையில் நீராடி வலம் வந்து வணங்குபவர்கள் பாசம் நீங்கி மோட்சமடைவர் என்று காஞ்சிப் புராணம் கூறுகிறது.

இம்மண்டபத்தில் 1.அன்னபூரணி, 2.மகாதேவர், 3.அப்சரஸ், 4.கங்கை, 5.யமுனை, 6.சரஸ்வதி, 7.பிரமன், 8.சாத்தன், 9. திருமால்,10. சரஸ்வதி நதி 11.தட்சிணாமூர்த்தி, 12.நான்கு கோழிகள், 13.சாவித்திரி, 14.வைரவன், 15.விநாயகர், 16. சுப்ரமணியர் ஆகிய திருவுருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன.

மேலும் காமாட்சியம்மன் ஆலயத்தின் காசி விசுவநாதருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. மூன்று தள ஸ்ரீவிமானத்துடன் கூடிய அது தனிக் கோயிலாகவே விளங்குகிறது. அவருடைய தேவியான அன்ன பூரணிக்கும் தனிச் சந்நிதி உள்ளது.


விருத்தகாசியைச் சூழ்ந்த விசுவநாதங்கள்

விருத்தாசலம் விருத்தகாசி என்று போற்றப்படுகிறது. அதைச் சுற்றியுள்ள வடக்குவேலூர் வலசை வில்வராயநத்தம், வாசப்புத்தூர் முதலிய இடங்களில் விசுவநாதப் பெருமான் வீற்றிருந்து அருள்புரிகிறார்.

ஈழநாட்டு விசுவநாதம்

ஈழ நாட்டு திரிகோண மலையில் கோணேசுவரர் கோயிலுக்கு அருகில் மற்றொரு சிவன் கோயில் உள்ளது. இங்குள்ள பெருமான் விசுவநாதர் அம்பிகை விசாலாட்சி, தீர்த்தம் மாவலி கங்கை என்ற சிற்றாறு ஆகும். இராவணன் விரும்பியபடி விசுவநாதர் இங்கு எழுந்தருளியுள்ளார் ※

இராமேசுவரம் இராமநாதர்



காசி, ராமேசுவரம் ஆகிய இரண்டு தலங்களும் ராமரோடு தொடர்புடைய தலங்கள். காசியில் ராமநாமம் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. ராமா என்று எழுதிய வில்வ தளங்களைக் கொண்டு விசுவநாதரை வழிபடுகின்றனர்.

இராமர், இலங்கைக்குச் சென்று இராவணனை அழித்த பின் தமிழ் நாட்டிற்கு வந்தார். கடற்கரையில் இராமர், சீதை, இலக்குவன், சுக்ரீவன், அனுமன், ஜாம்பவான் வானரசேனைகள் ஆகியோர் ஒன்று கூடினர். அப்போது சுப வேளையாக இருந்தால் மகா சிவபக்தரான இராவணனைக் கொன்ற பாவம் நீங்க இராமர் சிவபூசை செய்ய விரும்பினார்.

அனுமனிடம், காசிக்குச் சென்று சிவலிங்கம் கொண்டுவரும்படிக் கூறினார். அதன்படியே அனுமன் விண்ணில் பறந்தான். சுப வேளை நெருங்கிவிட்டது. அனுமன் இன்னும் வந்த பாடில்லை.

சீதை, கடற்கரையில் இருந்த வெண்மணலைத் திரட்டி சிவலிங்கம் அமைத்தாள். சுபவேளை வந்து விட்டதால் இராமர் சிறப்புடன் அந்த மணல் லிங்கத்தைப் பூசித்தார். அதைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர். இராமரைப் பற்றியிருந்த பாவம் விலகியது.

பூசை முடியும் வேளையில் அனுமன் காசி லிங்கத்துடன் வந்து சேர்ந்தான். இராமரிடம் காலதாமதத்திற்கு மன்னிக்கும்படி வேண்டினான். பெருமானே நாம் மிகுந்த சிரமப்பட்டு காசியிலிருந்து விசுவநாத லிங்கத்தை கொண்டு வந்துள்ளேன். நீங்கள் பூசித்த மணல் லிங்கத்தை எடுத்துவிட்டு நான் கொண்டு வந்த லிங்கத்தை அங்கு வைக்க வேண்டும் என்றார்.

இராமர் புன்சிரிப்புடன் அனுமனே நீயே அதைச் செய் நீ லிங்கத்தை வைத்ததும், நான் மீண்டும் பூசிக்கிறேன் என்றார். அனுமன் சீதை அமைத்த லிங்கத்தை அலட்சியமாகப் பற்றி பிடுங்க முயன்றான். அது முடியவில்லை. வாலினால் கட்டி உறுதியுடன் இழுத்தான். வாலறுந்து தூரத்தில் விழுந்தான். அவனுடைய நிலையைக் கண்டு வருந்திய இராமர். அனுமனே சீதையின் அன்பில் உருவான இந்த லிங்கப் பெருமானை எவராலும் பெயர்த்தெடுக்க முடியாது.நீ கொண்டு வந்த காசி விசுவநாதரை எமது லிங்கத்திற்கு அருகில் நிலைப்படுத்துகிறேன். தினமும் அவருக்கு பூஜைகள் நடந்த பிறகே நாங்கள் அமைத்த லிங்கத்திற்கு வழிபாடுகள் நடக்கும்படியாகச் செய்கிறேன் என்றார். அதன்படியே விசுவநாதருக்குப் பூசை செய்தபிறகே இராமநாதருக்குப் பூசை செய்கின்றனர்.

இராமர் சிவலிங்கம் அமைத்து வழிபட்டது ஐதீக விழாவாகக் கொண்டாடப்பெறுகிறது ❀

இராமநாதங்களும் விசுவநாதங்களும்

ராமேசுவரத்தில் காசி விசுவநாதர் வீற்றிருந்து முதற்பூசையைப் பெறுகிறார். காசியில் இராமரும் அவருடைய பரிவாரங்களும் வழிபட்ட லிங்கங்கள் உள்ளன. இந்த இரண்டு தலங்களையும் ஒரு சேர வணங்கும் வகையில் பெரிய தலங்களில் விசுவநாதர் ஆலயங்களும் ராமநாதர் ஆலயங்களும் அமைந்துள்ளன. மோட்ச புரிகளில் ஒன்றான காஞ்சீபுரத்தில் இராமநாதர், விசுவநாதர் ஆலயங்கள் பல உள்ளன. இதில் சர்வ தீர்த்தக் கரையிலுள்ள காசி விசுவநாதர் ஆலயம் முக்தி மண்டபத்துடன் உள்ளது.சென்னையில் இராமநாதர் விசுவநாதர் ஆலயங்கள் பல உள்ளன. ❀

இராசிபுரம் கயிலாயநாதர் ஆலயத்தின் வடமேற்கு முனையில் விசுவநாதர் சந்நிதியும் தென்மேற்கு முனையில் இராம நாதர் சந்நிதியும் உள்ளன. அன்பர்களுக்குக் கயிலாயநாதருடன் விசுவநாதரையும் இராமநாதரையும் வழிபடும் பேறு கிடைக்கிறது. ❀

காசி ராமேசுவர யாத்திரை

பாரத தேச மக்கள் மொழி, இனம் எனப் பலவகை யாகப் பிரிந்திருந்தாலும் பக்தி அவர்களை ஒன்றாகப் பின்னிப் பிணைத்து வைத்திருக்கிறது.வடதிசையி லுள்ள காசியில் கங்கையில் மூழ்கி விசுவநாதரை வழிபடு பவர்கள்தொடர்ந்து தென்திசையில் உள்ள இராமேஸ் வரத்திற்கு வந்து இராமநாதரை வழிபடுகின்றனர். தென் னக மக்கள் இராமநாதரை வழிபட்ட பின் காசிக்குச் சென்று விசுவநாதரை வழிபடுகின்றனர். காசி ராமேஸ்வர யாத்திரை பாரதத்தின் முதன்மை பெற்ற யாத்திரையாக போற்றப்படுகிறது.காசி, ராமேஸ்வரம் என்று தொடராகக் குறிக்கப்பட்டாலும் இரண்டுக்கும் இடையே யுள்ள தொலைவு சுமார் 2500 கி.மீ ஆகும். ராமேசுவரத்தி லிருந்து காசிக்குச் செல்ல விரைவு இருப்புப் பாதை தொடர் வண்டி கங்கா காவேரி எக்ஸ்பிரஸ் என்ற பெயரில் இயங்குகிறது.

இராமநாதருக்கு தினமும் கங்கையிலிருந்து கொண்டு வந்த நீரால் அபிஷேகம் செய்யப்படுகிறது. இதற்கென பக்தர்கள் தீர்த்தங்களைக் கொண்டு வந்து தருகின்றனர்.முன்னாளில் தென்னகத்திலிருந்து மக்கள் காசிக்குச் செல்லவும், அங்கிருக்கும் மக்கள் ராமேசுவரம் வரவும் ராஜபாட்டை இருந்தது இதற்குக் காசிபாட்டை என்பது பெயர். இவ்வழியில் பல சத்திரங்கள் கட்டப்பட்டிருந்தன. இவற்றில் பயணிகளுக்கு இருக்கை யும் உணவுமளிக்கப்பட்டது.இராமேசுவரத்தில் சிவபெரு மானை ஆராதித்த பின் அக்னி தீர்த்தமான கடலில் நீராடி அங்கிருந்து மணல் எடுத்துச் சிவலிங்கமாகச் செய்து வழிபடுகின்றனர். அந்தச் சிவலிங்கத்தை அலகாபாத் (பிரயாகையில்) கங்கையில் கரைப்பர். கங்கை யிலிருந்து தண்ணீர் முகந்து வந்து இராமநாதருக்கு அபிஷேகம் செய்வர்.

இனி நடைமுறையிலுள்ள காசி ராமேசுவர யாத்திரையைக் காணலாம்.மோட்சசாதனத்திற்கு முதன் மைப் பொருளான காசி இராமேசுவர யாத்திரையை அன்பர்கள் சிறப்புடன் மேற்கொள்ளுகின்றனர். அதன் அங்கமாக பித்ருக்களுக்கு கடனாற்றும் கயா யாத்திரை யும் செய்யப்படுகிறது.தென்னகத்தினர் முதலில் உள் ளூர்க் கோயில், குலதெய்வம் கிராமதேவதை முதலிய வற்றை வணங்கி இராமேசுவரம் செல்லவேண்டும். அங்கு அக்னி தீர்த்தத்தில் நீராடி அங்கு எடுத்த மணலால் லிங்கம் செய்து பூசிக்க வேண்டும். அதனை ஒரு துணியில் கட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். மற்றைய தீர்த்தங்களில் நீராடி இராமநாதர் பர்வதவர்த்தனியை வழிபட வேண்டும். தான தருமங்களை இயன்றவரை செய்ய வேண்டும்.

பிறகு ப்ரயாகைக்கு (அலகாபாத்) வந்து திரிவேணி சங்கமத்தில் துணியில் கட்டி வைத்துள்ள மணல் லிங்கத்தைப் பூசிக்க வேண்டும். பூசை முடிந்தவுடன் அதை கங்கை யமுனா சரஸ்வதி மூன்றும் கூடும் சங்கமத்தில் கங்கையில் கரைக்க வேண்டும்.

காசிக்குச் சென்று விசுவநாதருக்கு (பூசித்து எடுத்து வந்த) திரிவேணி சங்கம நீரில் கொஞ்சம் எடுத்து அபி ஷேகம் செய்ய வேண்டும்.காசி நகரிலுள்ள கோயில் களைத் தரிசித்து இறுதியாக கௌடிபாய் கால பைரவரிடம் விடைபெற்றுக் கொள்ள வேண்டும்.

அங்கிருந்து கயாவிற்குச் சென்று பல்குணி நதியில் நீராடி விஷ்ணுபாதத்திலும் அட்சயவடத்தின் அடியிலும் முன்னோர்களுக்குப்பிண்டங்கள் இட்டுச் சிரார்த்தங்களை செய்யவேண்டும்.

கயை

பாரத தேசத்தின் புனிதத் தலங்களில் கயா ஒன்றாகும். காசி யாத்திரை மேற்கொள்பவர்கள் அங்கிருந்து கயாவுக்குச் சென்று சிரார்த்தம் முதலியவற்றைச்செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. கயாவில் ஸ்ரீ விஷ்ணுவின் பாதம் அமைந்த ஆலயம் உள்ளது. இங்கு 56 பிண்டங்களை இட்டு முன்னோர்க் கடன் செலுத்துகின்றனர். இங்கிருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் பெரிய ஆலமரம் உள்ளது. இதனை அட்சய வடம் (அழிவில்லாத ஆலமரம்) என்பர். இதனடியிலும் முன்னோர்களுக்கான விரிவான தர்பண சிரார்த்த கடன்கள் நிறைவேற்றப்படுகின்றன. இந்த மரத்தடியில் கயா யாத்திரை மேற்கொண்டதன் நினைவாக தனக்குப் பிடித்த பழம், இலை ஆகியவற்றில் ஒன்றை சாப்பிடுவதை நிறுத்திவிடுவது வழக்கம். உள்ளது.

கயாவில் உத்தரவாகினியாக பல்குணி நதி ஓடுகிறது. இதன் கரையில் கயா தீர்த்தம் உள்ளது. கயா காசி யிலிருந்து 225 கிலோமீட்டர் தொலைவிலும், கொல்கத்தாவிலிருந்து 500 கிலோமீட்டர் தொலைவிலும் உள்ளது. இங்கு அனேக புத்த ஆலயங்களும் சிவ விஷ்ணு ஆலயங்களும் உள்ளன.

கயாவுக்கு அருகில் புத்த கயா உள்ளது. இது இங்குள்ள போதி மரத்தடியில் புத்தர் ஞானம் பெற்றார் இது பௌத்தர்களின் புனிதத் தலமாகும்.

மீண்டும் ராமேசுவரம் வந்து பிரயாகையில் திரட்டி வந்த கங்கை நீரால் ராமநாதருக்கு அபிஷேகம் செய்து வணங்க வேண்டும். பிறகு தீர்த்தங்களில் மூழ்கி இறுதியாக அக்னி தீர்த்தத்தில் மூழ்க வேண்டும். அதன் கரையில் தான தருமங்கள் செய்து ஊருக்கு மீண்டு யாத்திரை பிரசாதங்களை வைத்து வணங்க வேண்டும். அன்னதானம் செய்ய வேண்டும்.

வடநாட்டில் இருப்பவர்கள் கயாவுக்குச் சென்று பித்ரு கடன்களைச் செய்தல்காசி விசுவநாதர் தரிசனம் ப்ரயாகை (திரிவேணி) மூழ்குதல் கங்கை நீரெடுத்தல் இராமேசுவரம் வருதல் அக்னி (கடல்) முதலான தீர்த்தங்களில் மூழ்குதல் விசுவநாதரை வழிபடுதல் என்ற முறையில் இப்பயணத்தை மேற்கொள்கின்றனர்.

பஞ்ச கோகர்ணங்கள்

கங்கை நதி காதோடு தொடர்பு கொண் டுள்ளது அவள் சிவபெருமான் சடை யிலி ருந்து விடுபட்டு பூமியில் பாய்ந்தோடிய போது வழியிலிருந்த ஜான்ஹவி முனிவ ரின் ஆசிரமத்தை அடித்துச் சென்றாள். கோபம் கொண்ட அவர் அவளை எடுத்து ஆசமனம் (உட் கொள்ளுதல்) செய்து விட்டார்.

பகீரதன் வேண்டுதலை ஏற்று அவ ளைத் தனது வலது காதின் வழியாக வெளி விடுத்தார். அதனால் அவளுக்கு ஜான்ஹவி என்றபெயரும்உண்டாயிற்று.(பூசை வேளை களில்) கைகளைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வலது காதைத் தொடுவது கங்கை யில் கை அலம்பிக் கொள்வதை குறிக்கிறது.

கோபூசையில் பசுவின் உடலில் குடி கொண் டிருக்கும் தேவர்களைப் பசுவின் அந்தந்த அங்கங் களில் வழிபடுகிறோம். வலது காதில் கங்கையும், இடது காதில் யமுனையும் இருப்பதாகப் பூசா பத்தி நூல் கள் கூறுகின்றன. இப்படி பல விதங்களில் கங்கை காதோடு தொடர்பு கொண்டுள்ளது.

காமதேனு தன் காதில் கங்கை நீரை ஏந்திச் சென்று சிவபூசை செய்த தலமான கோகர்ணம் என்ற தலத்தைப் பற்றிய செய்திகளை அறிந்து மகிழலாம்.

பாரத தேசத்தின் நான்கு திசைகளில் நான்கும் நடுவில் ஒன்றுமாக ஐந்து கோகர் ணங்கள் உள்ளன. அவை ஐந்துமே கங்கை யோடும் காமதேனுவுடனும் தொடர்புடைய னவாகும்.

முதலாவது கோகர்ணம் ஒரிசாவில் மகேந்திர மலைத் தொடரில் உள்ளது. இங்குள்ள பெருமான் கங்க வம்சத்தினர் களின் குலதெய்வமாக விளங்குகிறார். (இவர்கள் கங்கையின் வழிவந்தவர்கள் என்று கூறப்படுகிறது). இது கீழைக் கோகர்ண மாகும்.

வடக்கே நேபாள நாட்டில் கிராதர் இன மக்களின் குலதெய்வமாக உத்ர கோகர்ணேசுவரர் உள்ளார். இது பற்றி சில கல்வெட்டுக்கள் உள்ளன.

மேற்கில் துளு நாட்டில் மேலைக் கடலோரத்தில் கோகர்ணம் அமைந்துள்ளது. சுவாமி மகாபலேசுவர், அம்பிகை பார்வதி திருஞானசம்பந்தரும் அப்பரும் பாடிய திருத்தலம் , இம் மலையில் தாம்பிர கங்கா சால்மலிகங்கா என்னும் தீர்த்தங்கள் உள்ளன. புராணம் இதை ராமேசுவரத்திற்கும் காசிக்கும் இணையானதென்று கூறி **இராமசேது காசி** என்று சிறப்புடன் போற்றுகிறது. ஒரு வடமொழி சுலோகம் மகாபலேசரே



இலங்கை யிலுள்ள திருக்கோணேச்சரம் (எ) திரிகோண மலை

விசுவநாதர் தாம்ர கௌரி தீர்த்தமே கங்கை என்று புகழ்கிறது.

தட்சிண கோகர்ணமாகத் திகழ்வது இலங்கையிலுள்ள திருக்கோணேச்சரம் (எ) திரிகோண மலையாகும். திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட ஈழநாட்டுத் திருத்தலம். இங்கு மாவலி கங்கை என்ற ஆறு ஓடுகிறது. கங்கைக் கரையில் இருப்பது போலவே ஏழு தப்த வெந்நீர் ஊற்றுக்கள் உள்ளன. இவை கௌரி குண்டங்களாகும். இதுவும் கடற்கரை ஓரம் ஏழு மலைத்தொடர்களின் மீதிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஐந்தாவதான கோகர்ணம் திருக்கோகர்ணமாகும். திருச்சியிலிருந்து புதுக்கோட்டை செல்லும்வழியில்உள்ளது. இறைவர் திருக் கோகர்ண நாதர், அம்பிகை ப்ரகதாம்பாள். இந்த ஆலயத்தில் கங்காதரர் திருவுருவம் வழிபாட்டில் உள்ளது.

இவை ஐந்தும் காசிக்கு இணையான தலங்களாகும். இவை ஐந்திலும் அம்பிகை கௌரியாக மூர்த்தி வடிவிலும், கங்கையாகத் தீர்த்தவடிவிலும் இருக்கிறாள்.

துளு நாட்டு கோகர்ணமும், ஈழநாட்டு திரிகோமலையான கோகர்ணமும் இராவணன் வழிபட்டுப் பேறு பெற்ற தலங்களாகும்.

காசிக்கு இணையான முப்பெரும் அர்ச்சுனத் திருத்தலங்கள்

அர்ச்சுனம் என்ற வடசொல் மருதமரத்தைக் குறிக்கிறது. மருதமரத்தைத் தலமரமாகக் கொண்ட மூன்று தலங்கள் திருபுடைமருதூர் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றைப் புராணங்கள் புடார்ச்சுனம், மத்தியார்ச்சுனம், மல்லிகார்ச்சுனம் என்றழைக்கின்றன.இந்த மூன்று அர்ச்சுனத் தலங்களிலும் கங்கை விரும்பி வசிக்கிறாள். (இவை கங்காதீரத்திற்குச் சமமானதாகும்.

நெல்லை மாவட்டத்தில் அமைந்துள்ள திருப்புடைமருதூர் தட்சிண காசி என்று போற்றப்படுகிறது. ஒரு சமயம் அகத்தியர் தமது கமண்டல நீரின் ஒரு பகுதியைப் பொதிய மலையில் விடுத்தார். அது பாண கங்கைத் தீர்த்தமாகத் திகழ்கிறது. அதிலிருந்து தாமிர பரணி பொங்கிப் பாய்ந்து ஓடினாள். அவளைத் தட்சிண கங்கை என்று அழைக்கின்றனர்.

அதன்கரையில் திருப்புடைமருதூர் அமைந்துள்ளது. இங்கு விசுவநாதர் "நாறும் பூநாதர்" என்ற பெயரில் வீற்றிருக்கின்றார். இங்கு மரிக்கும் உயிர்களுக்குத் தாரக மந்திரத்தை உபதேசித்து வீடுபேறு அளிப்பதைப் போலவே இங்கும் அளிக்கிறான் என்று தல புராணம் கூறுகிறது.

தமிழகத்தின் மத்தியில் உள்ள இடைமருதூரில் கங்கை ஒரு கிணறு வடிவில் (கங்கா கூபம்) இருக்கிறாள். அவளுக்கு காவலாக சூரியன், வைரவர், அர்த்தநாரீசுவரர், முனிவர் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். இந்தக் கூபத்தின் கரையில் செய்யும் தானதரும ஜெபங்கள் காசியில் செய்யப்படுவதைப் போலவே பலன்தரும் என்றும், மருத மரத்தடியில் செய்யும் பித்ரு கடன் கயாவில் செய்யும் கடனுக்கு இணையான பலன் தருமென்றும் தலபுராணம் கூறுகிறது.

சீபருப்பதம் என்று திருமுறைகள் போற்றும் தலமே இந்நாளைய ஸ்ரீசைலமாகும். இங்குப் பெருமான் மல்லிகை மலரால் வழிபடப் பட்டதால், மல்லிகார்ச்சுனர் என்று அழைக்கப்படுகிறார். இங்கு கங்கை தீர்த்தமாக விளங்குகிறாள். ஆலயத்திற்கு அருகில் ஓடும் கிருஷ்ணா நதியைப் பாதாள கங்கை என்றழைக்கின்றனர்.

மருதவனம் காசிக்கு இணையாக இருப்பதால் அன்பர்கள் மருதகாசி என்ற பெயர் சூட்டிக் கொள்ளுகின்றனர்.

மருத மரத்தடியில் கங்கை தவம் செய்ததால் மருத கங்கை என்றழைக்கப்படுகிறாள். நெய்யாடுபாக்கம் என்ற ஊரில் செய்யாற்றங்கரையில் மருதகங்கேசுவரர் என்ற பெயரில் பெருமான் கோயில் கொண்டுள்ளார்.இவர் கோயிலுக்கு அருகில் கடம்பன் காசி என்னும் கடம்பர் கோயில் உள்ளது.

அருள்மிகு அன்னபூரணி விசாலாட்சி அம்பிகை உடனாய
காசி விசுவநாதப் பெருமான் அருளினால்
எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!

உ

எண்தோள் முக்கண் ஈசா போற்றி! எண்குணம் மேவி இருந்தாய் போற்றி! போற்றி!!



எட்டுக்கொலாம் அவர் ஈரில்பெருங்குணம்
எட்டுக்கொலாம் அவர் சூடும் இனமலர்
எட்டுக்கொலாம் அவர் தோளிணையாவன
எட்டுக்கொலாம் திசைஆக்கினதாமே - திருநாவுக்கரசர்

எட்டும் சிவபெருமானும்

உலகம் முழுவதிலும் எண்களையொட்டி பலவிதமான நம்பிக்கைகள் வழங்கி வருகின்றன. ஒவ்வொரு எண்ணுக்கும் தனித்தனியான குணங்களும் சிறப்புக்களும் இருப்பதாக நமது புராணங்கள் கூறுகின்றன. குறிப்பாகச் சைவ சமய நூல்களில் ஒவ்வொரு எண்ணுக்கும் உரிய சிறப்பான குணங்களும் செயல்களும் விவரிக்கப்பட்டுள்ளன.

தென்னிந்திய சைவ சமயத்தில் எட்டு என்ற எண் சிறப்பாகப் போற்றப்படுகின்றது. சிவபெருமான் எண் பேர் உருவத்துடன் விளங்குகின்றான். அவனுடையப் பீடத்தில் எட்டு சக்திகள் உறைகின்றனர். அவன் எட்டு பைரவர்களையும் எட்டு உருத்திரர்களையும் படைத்து, அவர்கள்மூலம் உலகினைச்செயல்படுத்தி வருகின்றான். பக்தர்கள் அவனை எட்டு பெயர்களால் அர்ச்சித்து வழிபடுகின்றனர். அவன் உலக நலன் பொருட்டு ஆற்றிய செயல்கள் எட்டாகும். இவை அட்ட வீரட்டங்கள் எனப் போற்றப்படுகின்றன. அவனுடைய பேரருளைப் பெற பக்தர்கள் அவனுக்கு எட்டுவிதமான பூக்களைச் சூட்டி அர்ச்சித்து வழிபடுகின்றனர்.

அவன் ஏந்தும் ஆயுதங்கள் எட்டாகும். அவனை எப்போதும் எட்டு திக்பாலர்களும், எட்டு அரம்பையர்களும், எட்டு மாமுனிவர்களும் எட்டுவிதமான உபசாரங்களால் வழிபாடு செய்து கொண்டே இருக்கின்றனர். இவ்வாறு அனேக பொருட்கள் எட்டு வகையினதாக சிவ வழிபாட்டில் வகுக்கப்பட்டுள்ளன.

சிவபெருமானின் குமாரர்களான விநாயகர், முருகன் ஆகியோரும் எண் வடிவங்களைத் தாங்கி அருள்பாலிப்பதைச் சமய நூல்கள் கூறுகின்றன. சிவனருளால் தோன்றிய காளிதேவி துர்க்கைதேவி ஆகியோரும் எண்வகைத் திருமேனிகள் கொண்டு அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்.

எட்டு என்னும் எண்ணோடு தொடர்புடைய பல்வேறு சிவநெறிச்செய்திகளை விவரிப்பதாகச் சிவமஞ்சரியின் நாற்பத்தெட்டாவது மலர் மலர்கின்றது. இதில் சிவபெருமானின் எண்பேர் வடிவங்கள், அவனுடைய அட்டவீரட்டம், அவனுக்கு அணிவிக்கப்படும் எண் மலர்கள், அவன் வீற்றிருக்கும் அஷ்டாஷ்டவர்க்காசனம் முதலான செய்திகள் புராணங்கள், ஆகம நூல்கள், தல வரலாறுகள், திருமுறைகள் முதலியவற்றிலிருந்து தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

இவற்றை அறிந்து மகிழும்படித் தங்களை வேண்டுகிறோம். இமயவல்லி உடனாய எண்தோள் முக்கண் எம்மானாகிய சிவபெருமான் அருளினால் அன்பர்கள் அனைவரும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை பெற்றுவாழ பிரார்த்திக்கின்றோம்.

- சிவசுந்தரி

சமய வாழ்வில் எட்டு

எட்டு என்பது சமயவாழ்வில் தனியிடம் பெற்ற எண்ணாகும். வாழ்வின் சிகரத்தை எட்டுவதற்கு அடிப்ப டையான பல மந்திரங்கள் எட்டாகவே உள்ளன.

எட்டு தனித்து நிற்கும்போது மட்டுமின்றி மற்ற எண்களோடு சேரும்போதும் சிறப்பைப் பெறுகிறது. ஒன்றை அடுத்து எட்டு வரும்போது பதினெட்டாகிறது. பதினெட்டு வெற்றி எண்ணாகும். கீதையின் அத்தியா யங்கள், மகாபுராணங்கள், ஆடி வெள்ளப் பெருக்கு, மாபாரதயுத்தம், உபபுராணங்கள் முதலியன யாவும் பதினெட்டோடு தொடர்புடையனவாகும்.

அதையடுத்து இருபத்தெட்டைக் காணலாம். சிவபெருமான் உலக உயிர்கள் உய்ய அருளிச் செய் தவை இருபத்தெட்டு ஆகமங்களாகும்.


அதையடுத்து நாற்பத்தெட்டு எனும் எண் ஒரு மண்டலத்தைக் குறிக்கின்றது. மந்திர உச்சாடனங்கள் செய்தல் மருந்து உட்கொள்ளுதல் முதலியவை மண்டலக் கணக்கின் அடிப்படையில் செய்யப்படு கின்றன. ஆலயங்களில் கும்பாபிஷேகம் முடிந்ததும் நாற்பத்தெட்டு நாட்கள் மண்டலாபிஷேகம் நடப்பதைக் காண்கிறோம்.

ஆலயங்களில் அர்ச்சனை செய்யும்போது 108, 1008 என்னும் எண்ணிக்கையில் பெயர்களைத் தொகுத் துள்ளனர். இப்படி எண்ணிலாத வகையில் எட்டின் சிறப்புக்கள் சமய நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

பிறமதப் பழக்கவழக்கங்கள் இந்தியாவில் வேரூன்றியபோது எட்டு என்பது அஞ்சும் எண்ணாகி விட்டது. சமய வாழ்வை ஊன்றிக் கவனிக்கும்போது எட்டு என்பது அளவற்ற ஆற்றலைக் கொண்ட எண் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

❀ **யோக** சாதனங்கள் எட்டாகவும், நுண் கலைகள் எட்டின் எட்டு மடங்கான அறுபத்தி நான்காக வும், பேறுகள் எட்டின் இரண்டு மடங்கான பதினாறாக வும் விளங்குவதைக் காண்கிறோம்.

எண்பட்டை லிங்கம்



❀ அஷ்டதாராலிங்கம்
நன்றி: தமிழ்நாடு தொல்லியல் துறை

சிவபெருமானின் திவ்ய வடிவமான சிவலிங்கத்தின் வகைகளில் ஒன்று தாராலிங்கமாகும். இவற்றின் உருத்திர பாகமாகிய பாணப்பகுதி வட்டமாக இருப்பதற்குப் பதிலாக நெடுக்கு வசத்தில் பட்டைகள் கொண்டதாக உள்ளன. இந்தப் பட்டைகள் எட்டின் மடங்காக 8, 16, 24, 32, 64 என அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பல்லவ மன்னர்கள் எண்பட்டை லிங்கங்களை அனேக இடங்களில் அமைத்துள்ளனர். இவற்றை காஞ்சீபுரம், மாமல்லபுரம், பனைமலை, திருவதிகை முதலிய அனேக தலங்களில் காணலாம். இந்த எண்பட்டைகளும் சிவபெருமான் நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எண்பொருளாகப் பரந்து நிற்பதைக் குறிக்கிறதென்பர். மகாவீரர்களாக விளங்கி இருந்த மன்னர்கள் சிவபெருமானின் அட்ட வீரட்டச் செயல்களை உணர்த்தும் வகையில் எண்பட்டை லிங்கங்களை அமைத்தார்கள் என்றும் கூறுகின்றனர்.

சிறப்புமிக்க எட்டு வீணைகள்

சிவபெருமான் வீணையை மீட்டுவதில் வல்லவனாக இருப்பதைப் போலவே வீணையிசையைக் கேட்பதிலும் விருப்பமுள்ளவனாக இருக்கின்றான். இராவணேசுவரன் வீணை மீட்டிச்சாமவேதத்தைப் பாடிச் சிவனை மகிழ்வித்து அருள் பெற்றான் என்று சிவமகாபுராணம் கூறுகிறது. உலகில் அனேக வீணைகள் இருந்தாலும் அவற்றுள் எட்டு வீணைகள் முதன்மை பெறுகின்றன. இவை 1) கின்னரவீணை, 2) கிம்புருவீணை, 3) உருத்திரவீணை, 4) முகவீணை, 5) வாயுவீணை, 6) தும்புருவீணை, 7) நாரதவீணை, 8) கந்தர்வவீணை என்பனவாகும். ஆலயங்களில் நடைபெறும் திருவிழாவில் உருத்திர வீணை மீட்டிப் பாடிக் கொண்டிருக்கும் கோலத்தில் சிவபெருமானை அலங்கரித்து வழிபடுகின்றனர். விழாவின் பத்தாம் நாள் இரவில் கொடியிறங்கி சுவாமி பவனி வரும்போது முகவீணை மட்டும் தனியாக இசைக்கப்படுகிறது. (முகவீணை என்பது சிறிய நாதஸ்வரம் போன்றதாகும்.) சுவாமி நான்காம் நாள் காலையில் வீணைவாசித்துக் கொண்டிருக்கும் கந்தர்வ வாகனத்திலும் பத்தாம் நாள் இரவு வீணைவாசித்துக் கொண்டிருக்கும் இராவணன் வாகனத்திலும் பவனி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அஷ்டரத்தின லிங்கம்

உலகில் உயர்ந்த பொருட்களாக இருப்பவை ரத்தினங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அணிவதற் குரிய மணிகள் ஏராளமாக இருப்பினும் அவற்றுள் ஒன்பதை நவமணிகள் என்று போற்றுகின்றோம். வாழ்வி யல் சடங்குகளில் நவரத்தினங்கள் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. வீடுகளைக் கட்டும்போது கடைக்கால், நிலைப்படிகள், பூசைமாடம் இவற்றின் அடியில் நவரத்தி னங்களை மஞ்சள் காப்பிட்டு வைக்கின்றனர்.

ஆலயங்களில் கொத்தளம் அமைக்கும் போதும், நிலைப்படிகள் அமைக்கும் போதும், கருவறை, பிராகா ரங்களில் தெய்வத் திருவுருவை நிறுவும் போதும் பீடங் களுக்கு அடியில் நவரத்தினங்கள் இடப்படுகின்றன. நவரத்தினங்கள் என்பன மாணிக்கம், முத்து, பவளம், மரகதம், வைடூர்யம், வைரம், நீலம், கோமேதகம், புஷ்பராகம் என்பனவாகும்.

பூஜாநூல்களில் வைரம், மாணிக்கம், வைடூர்யம், பவளம், இந்திரநீலம், கோமேதகம், மரகதம் ஆகிய ஏழு ரத்தினங்களுடன் ஸ்படிகம் எட்டாவது ரத்தின மாகக் கூறப்பட்டுள்ளது.

இவற்றால் சிவலிங்கங்களைச்செய்து வழிபட்டால் அனேக நன்மைகளைப் பெறலாம் என்று சமயநூல்கள் கூறுகின்றன **"சிந்தியம், விசுவாகமம்"** எனும் நூல் களில் அஷ்ட ரத்தின லிங்கத்தினை வழிபடுவதால் உண்டாகும் பயன்கள் கூறப்பட்டுள்ளன.

இதன்படி, **வைரத்தால் செய்யப்பட்ட லிங் கத்தை** வழிபட்டால் எதிரிகள் தொலைவர். அவர்களை வெற்றிகொள்வது சுலபமாகும். இது இந்திரபோகத்தை நல்குவதாகும். **"மாணிக்க லிங்கத்தை"** வழிபடுவதால் அஷ்ட ஐஸ்வர்யங்களும் ஞானமும் உண்டாகும். **வைடூர்ய லிங்கத்தை** வழிபடுவதால் நல்ல குழந்தைப் பேறுண்டாகும் - **ஸ்படிகலிங்கபூஜையால்** சகல செல் வங்களும் விருத்தியாகும். **பவளலிங்கத்தை** வழிபடுவ தால் எல்லோரையும் வசியப்படுத்தலாம். **இந்திரநீல ரத்தினத்தாலான லிங்கத்தை** வழிபடுவதால் பெருத்த செல்வம் உண்டாகும். **கோமேதக லிங்க** வழிபாடு நிலைத்த அழகையும் புகழையும் தருவதாகும்.

திருவாரூர், திருநள்ளாறு முதலிய திருத்தலங் களில் மரகத லிங்கங்களும், சிதம்பரம், நாகபட்டினம் முதலிய தலங்களில் ஸ்படிக லிங்கங்களும், திருவாய் மூரில் நீலக்கல்லாலான லிங்கமும் வழிபாட்டில் உள்ளன.

திருவிடைச்சுரம் (திருவடிசூலம்) எனும் தலத்தில் உள்ள மூலலிங்கம், உத்தர கோசமங்கை எனும் தலத்தி லுள்ள மூலத்தான நடராசப் பெருமான், மதுரை மீனாட்சி யம்மன் ஆகிய திருமேனி கள் உயர்ந்தவகை மரகதக் கல்லால் ஆனதென்று கூறப் படுகிறது.



❁ மரகதலிங்கம்

திருவாடானை எனும் தலத்திலுள்ள இறைவனுக்கு ஆதிரத்தினேசுவரர் என்பது பெயராகும். மழபாடியில் உள்ள இறைவனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் **"வழித்துணையாம் மழபாடி வைரத்தூணே"** என்று பாடிப் பரவுகின்றார். வைரத் தூண் என்பது இந்நாளில் **"வஜ்ரஸ்தம்பேசுவரர்"** என்று அழைக்கப்படுகிறது.

மகாபுராணங்களில் ரத்தினலிங்கங்களைப் பற்றியும் அவற்றை வழிபடுவதால் உண்டாகும் பலனும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அஷ்டலோக லிங்கம்


அன்பர்கள் சிவபெருமானை, கல், உலோகம், மரம் முதலியவற்றால் சிவலிங்கமாகச் செய்து வழிபடுகின்றனர். அடிக்கடி வெளியூர்ப் பயணம் செய்பவர்கள் தன்னுடன் எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக உலோகத்தால் செய்த சிவலிங்கங்களை வைத்துள்ளனர். சிவலிங்கங்களை எட்டுவிதமான உலோகங்களால் செய்து பூசிக்கலாமென்று பூசாநூல்கள் கூறுகின்றன.

இந்த எட்டு உலோகங்கள் முறையே 1. பொன், 2. வெள்ளி, 3. செம்பு, 4. இரும்பு, 5. வெண்கலம், 6. ஈயம், 7. அரக்கு, 8. துத்தநாகம் என்பவையாகும். (சிலர் அரக்குக்குப் பதிலாகப் பாதரச லிங்கத்தைக் குறித்துள்ளனர்.)

❁ வெள்ளியால் செய்யப்பட்ட லிங்கம் காட் மண்டு பசுபதிநாதர் ஆலயத்தில் உள்ளது. சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்தில் வெள்ளித் தகடாலான கலையழகுமிக்க லிங்கம் உள்ளது.

❁ தஞ்சைப் பெரியகோயிலில் உலாத்திருமேனி யாக வெண்கல லிங்கம் உள்ளது.

அஷ்டதிக்பாலக லிங்கம்



❁ விதான சிற்பம்
மகரவாகனத்தில் வருணன்

சிவவழிபாட்டின் ஓர் அங்கமாகத் திகழ்வது (அஷ்ட திக்பாலகர்களான) திசைக்காவலர்களின் வழி பாடாகும். சிவபெருமானின் பஞ்சாவரண பூஜையில் நான்காவது ஆவரணத்தில் எட்டு திசைகளிலும் இவர்கள் பூசிக்கப்படுகின்றனர்.

இவர்கள் (கிழக்கிலிருந்து) வரிசையாக இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன் வாயு, குபேரன், ஈசா னன் ஆகிய எண்மராவர். இவர்கள் உலகினை எட்டு திக்கிலும் வீற்றிருந்து காப்பதுடன் சதாகாலமும் சிவ பூசை செய்து கொண்டிருக்கின்றனர். மகாசிவபூசா துரந்த ரர்களாகவும், திசைக்காவலர்களாகவும் இருப்பதால் இவர்களைச் சிவபூசையின்போது வழிபடுகின்றோம்.

இவர்களுக்கெனச் சிவாலயப் பிரகாரத்தில் எட்டு திசைகளிலும், எட்டு பலிபீடங்கள் அமைக்கப்பட்டிருப் பதைக் காணலாம். (பின்னாளில் இந்த எட்டுடன் மேல் நோக்கின திசையின் காவலனான பிரம்மனுக்கும், பாதாள மான கீழ்திசையைக் காவல்புரியும் திருமாலுக்கும் ஆக பத்து பலிபீடங்கள் அமைக்கப்பட்டன. பிரம்மனுக்குரிய பலிபீடம் தென்மேற்கிற்கும் மேற்கிற்கும் இடையிலும் திருமாலுக்குரிய பலிபீடம் வடகிழக்கிற்கும், கிழக்கிற்கும் நடுவிலும் அமைக் கப்பட்டன. இப்போது நடைமுறையில் பிரம்மபலிபீடம் நிருதிக் குரிய பலிபீடத்திற்கு அருகிலும், விஷ்ணுவுக்குரிய பலிபீடம் ஈசான பலிபீடத்திற்கு அருகிலும் அமைக்கப்படுகின்றன.)

தினமும் நடைபெறும் ஸ்ரீபலியின் போது இந்த பலிபீடங்களில் திசைக்காவலர்களுக்குரிய மந்திரங்க ளுடன் பலி அளித்துப் பூசை செய்யப்படுகிறது.

பெருந்திருவிழாவின் போது தினமும் இரண்டு வேளையிலும் மாடவீதியின் எட்டு திசையிலும் திக்பாலகர்கள் பூசிக்கப்படுகின்றனர். இதற்காகச் சூலதேவர் எழுந்தருளி மாடவீதியின் எட்டு திசை களிலும் அஷ்டபலி அளிக்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

மிகப்பெரிய சிவத்தலங்களில் இந்த எண்மரும் எட்டுதிக்கில் தத்தம் பெயரால் சிவலிங்கமும், அதற்கு ஆலயமும் தீர்த்தமும் அமைத்திருப்பதைக் காணலாம்.

திருவண்ணாமலையில் மலையைச் சுற்றிவரும் பாதையின் எட்டுதிக்கிலும் அஷ்டதிக்பாலகர்கள் அமைத்த சிவாலயங்களையும் தீர்த்தங்களையும் காண்கிறோம்.

இவை இந்திரலிங்கம், இந்திரதீர்த்தம்; அக்னி; லிங்கம், அக்னிதீர்த்தம்; யமலிங்கம், யமதீர்த்தம்; நிருதி லிங்கம், நிருதி தீர்த்தம்; வருணலிங்கம், வருணதீர்த் தம்; வாயுலிங்கம், வாயுதீர்த்தம்; குபேரலிங்கம் குபேர தீர்த்தம்; ஈசானலிங்கம், ஈசானதீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றன.

❁ சிதம்பரம், மதுரை முதலிய தலங்களிலும் அஷ்டதிக்பாலக லிங்கங்கள் இருந்துள்ளன. இவற் றின் பெயர்களும் இடமும் இப்போது மாறியுள்ளன.

❁ மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் அஷ்டதிக்பாலகர்களுக்கான அழகிய உலாத்திருமே னிகள் உள்ளன. இதுபோன்ற திருமேனிகள் வேறெங்கும் இல்லை.

❁ அனேக சிவாலயங்களில் மகாமண்டபத்தின் விதானத்தில் அஷ்டதிக்குப் பாலகர்கள் தத்தம் தேவி யுடன் வீற்றிருப்பது புடைப்புச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளது.

❁ சிவாலயத்தின் ஸ்ரீவிமானத்திலும் கோபுரங்களி லும் விமானதேவர்களாக அஷ்டதிக்பாலகர்கள், அவரவர் களுக்குரிய திசைகளில் நிறுவப்பட்டுள்ளனர்.

அஷ்ட சக்திகள்

சிவபெருமான் வீற்றிருக்கும் கமலாசனத்தில் சக்திபதம் என்னும் சக்தி மண்டலம் உள்ளது. இங்குள்ள எட்டிதழ்த் தாமரையில் எட்டு சக்திகள் வீற்றிருந்து சிவ சேவை செய்கின்றனர். இவர்களின் ஒன்றுசேர்ந்த சக்தி வடிவமே. மனோன்மணி என்றழைக்கப்படுகிறது. இந்தச் சக்திகள் (கிழக்கிலிருந்து) 1)வாமை. 2)சேட்டை. 3)ரௌத்திரி. 4) காளி. 5) கலவிகரணி. 6) பலவிகரணி. 7) பலப்பிரமதனி. 8) சர்வபூததமனி என்றழைக்கப்படுகின்றனர்.

சிவனுடைய பீடத்திலும். மகாமண்டபத்திலும் இவர்கள் நீங்காது வாசம்புரிகின்றனர். ஆலயங்களில் அம்பிகை சந்நிதியிலுள்ள மகாமண்டபத்தின் விதானத்தில் பெரிய எட்டிதழ்த் தாமரையை அமைத்து அதில் இந்த எட்டு சக்திகளையும் அமைக்கும் வழக்கமுள்ளது. சில இடங்களில் இவர்களுடன் அஷ்ட மாத்ருகா எனப் படும் அஷ்டமாதர்களும் அமைக்கப்பட்டுள்ளனர்.

சென்னையை அடுத்துள்ள பாடி வல்லீசுவரர் ஆலயம். திருவான்மியூர் மருந்தீசுவரர் ஆலயம் முதலான ஆலயங்களிலுள்ள அம்மன் சந்நிதி மகா மண்டப விதானத்தாமரையில் இவர்களைக் காணலாம். இந்தத் தாமரை வட்டத்தின் நான்கு முனைகளிலும் வீரபத்திரர். பைரவர். விநாயகர். முருகன் ஆகியோர் அமைக்கப்படுகின்றனர்.

❁ சில நூல்களில் சிவாசனத்தில் வீற்றிருக்கும் அஷ்ட சக்திகளாக 1) ஈசானி. 2) பூரணி. 3) ஆர்த்தி. 4) வாமை. 5) மூர்த்தி. 6) ஆரணி. 7) ரோதயித்தரி. 8) செனனி ஆகிய எண்மர் கூறப்பட்டுள்ளனர்.

சிவபெருமானைச் சுற்றிலும் சக்திமண்டலம் இருப்பது போலவே பராசக்தியின் பீடத்தைச் சுற்றியும் சக்தி மண்டலம் உள்ளது. இதில் எட்டு சக்திகள் வீற்றிருக் கின்றனர். இவர்கள் தாமரை. கண்ணாடி. சாமரம். கிளி ஆகியவற்றை ஏந்தியுள்ளனர். இவர்கள் பெயர் முறையே 1) ஜயை. 2)விஜயை. 3)ஜெயந்தி. 4)அபராஜிதா. 5)சித்தை. 6)ரக்தை. 7)அலம்புசை. 8)உற்பலா (உத்பலா) என்பனவாகும்.

நடைமுறை நூல்களில் அம்பிகையின் ஆசனத்தில். 1. இச்சாசக்தி. 2. ஞானசக்தி. 3. கிரியாசக்தி. 4. வாசேசக்தி. 5. வாகீஸ்வரி. 6. ஜ்வாலினி. 7. வாமை. 8. ஜேஷ்டா ஆகிய எண்மருடன் பீடசக்தியாக ரௌத்திரியும் வீற்றிருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

❁ திருப்பனந்தாள் காசி மடாலயத்தில் அஷ்ட சக்தி மண்டபம் என்ற மண்டபம் உள்ளது. இதில் எட்டுத் தூண்கள் உள்ளன. இந்த எட்டிலும் எட்டு சக்திகளின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன.

❁ சிவாசனத்தில் அஷ்ட சக்திகள் வீற்றிருப் பதைப் போல விநாயகப் பெருமானின் ஆசனத்திலும் அஷ்ட சக்திகள் வீற்றிருக்கின்றனர். இவர்களின் பெயர் கள் முறையே 1) வித்யா. 2) விதாத்திரீ. 3) போகதாயிநீ. 4) விக்னகாதிநீ. 5) நிதிப்பிரதீபா. 6) பாபாக்நீ. 7) புண்யா. 8) சசிப்பிரபா என்பனவாகும்.

நடைமுறை பூஜாபத்ததிகளில் விநாயகரின் ஆசனத்தில் வீற்றிருக்கும் சக்திகளாக 1. தீவ்ராயை. 2. ஜ்வாலின்யை. 3. நந்தா. 4. போகதாயி. 5. காமரூபிணி. 6. உக்ரா. 7. தேஜோவதி. 8. சத்தியகாமினி ஆகிய எண்மருடன் ஒன்பதாவது சக்தியாக விக்னநாசினியும் குறிக்கப்பட்டுள்ளனர்.

❁ முருகப்பெருமான் எழுந்தருளும் திவ்யாசனத் தில். வீற்றிருக்கும் அஷ்டசக்திகள் அளவிலா ஆற்றல் படைத்தவர்கள். இவர்கள் 1) சகுநீ. 2) ரேவதி. 3) பூதனா. 4) மகாபூதனா. 5) நிசீதிநீ. 6) மாலிநீ. 7) சீதளா. 8) சுத்தா ஆகிய எண்மராவர். இவர்களுடன் ஒன்பதாவதாக விசுவதோமுகி வீற்றிருக்கின்றாள்.

சிவசூரியனாகப் பெருமான் வீற்றிருக்கும் திவ்ய ஆசனத்தில் 1. தீப்தை. 2. சூக்ஷ்மா. 3. ஜெயா. 4. பத்ரை. 5. விபூதி. 6. விமலா. 7. அமோகை. 8. வித்யுதா ஆகிய எட்டு சக்திகளும் ஒன்பதாவது சக்தியாக சர்வதோமுகி யும் வீற்றிருக்கின்றனர்.

❁ தெய்வங்கள் வீற்றிருக்கும் ஆசனத்திலுள்ள சக்தி மண்டலத்தில் எட்டு இதழ் தாமரையே உள்ளது. இதில் எட்டு சக்திகள் நிலைப்படுத்தி வணங்கப்படுகின்றனர். இவர்களுடன் ஒன்பதாவதான சக்தி தாமரையின் நடுப்பொகுட்டில் பூசிக்கப்படுகின்றாள். சிவபெருமானுடைய ஆசனத்திலுள்ள ஒன்பதாவதான சக்தி மனோன்மணி என்றழைக்கப்படுகின் றாள். இவர்களை நவசக்தியர் எனவும் அழைக்கின்றனர். இக்கட்டுரையில் விநாயகர். முருகன். சூரியன் முதலியவர்களுக் குரிய அஷ்ட சக்திகளும் அவர்களைத் தொடர்ந்து ஒன்பதாவதான சக்தியின் பெயரும் குறிக்கப்பட்டுள்ளன. நடைமுறை யில் மண்டப விதானங்களில் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் அஷ்ட சக்திகள் மட்டுமே தாமரை வட்டத்தில் அமைக்கப்படுகின்றனர். ஒன்பதாவது சக்தி அமைக்கப்படுவதில்லை.

அஷ்ட வித்யேசுவரர்கள்

சிவபெருமானுடைய ஆசனத்திலுள்ள தாமரையில் எட்டு சக்திகள் வீற்றிருப்பதைப் போலவே அவரைச் சுற்றி எட்டுதிக்கிலும் எண்மர் வீற்றிருக்கின்றனர். இவர்கள் அஷ்ட வித்யேசுவரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களை மந்திரப்பூர்வமாகப் பூசிக்கின்றோம். இவர்களை உருவமாக அமைத்து வழிபடும் வழக்கம் இல்லை. என்றாலும், இவர்களுடைய உருவ வர்ணனை அனேக நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவற்றின்படி சிவ சாருபம் பெற்ற இவர்கள் தலையில் சடைமுடி தரித்துக் கொன்றைமாலையைச் சூடி இளம்பிறை அணிந்துள்ளனர். கரங்களில் சூலமும் கண்ணாடியும் ஏந்தியுள்ளனர்.

இவர்களின் பெயர்கள் முறையே 1)அநந்தர், 2)சூட்சுமர், 3)சிவோத்தமர், 4)ஏகநேத்திரர், 5)ஏகருத்திரர், 6)திரிமூர்த்தி, 7)ஸ்ரீ கண்டர், 8)சிகண்டி என்பதாகும். இவர்களின் தேவியர்கள் முறையே 1) பூமி, 2) ஸ்வாகா, 3) ஸ்வாதா, 4) க்ஷாந்தி, 5) புஷ்டி, 6) ஸ்ரீ, 7) கீர்த்தி, 8) மேதா என்பவர்களாவர். குடமுழுக்கு போன்ற மந்திரச் சடங்குகளில் இவர்களை கலசங்களில் எழுந்தருளி வைத்துப் பூசிக்கின்றனர். இந்தக் கலச நீர் சிவலிங்கத்தின் ஆவுடையாரிலும் பீடத்திலும் அபிஷேகம் செய்யப்பட்டு, அவற்றில் இவர்கள் மந்திரப் பூர்வமாக எழுந்தருளி வைக்கப்படுகின்றனர்.

❁ விநாயகருக்குரிய அஷ்ட வித்யேசுவரர்கள் 1. வரதன், 2. வீரன், 3. விக்னேசன், 4. கஜவக்திரன், 5. பக்ஷணப் பிரியன், 6. கஜகர்ணன், 7. லம்போதரன், 8. விநாயகன் ஆகிய எண்மராவர்.

❁ முருகப்பெருமானுக்குரிய அஷ்ட வித்யேசுவரர்கள் 1. ஜயந்தன், 2. அக்னிசிகன், 3. கிருத்திகாபுத்திரன், 4. பூபதி, 5. குகன், 6. சேனானி, 7. ஹேமசு... ஆகியோராவர்.

அஷ்ட வசுக்கள்

சனாதன சமயத்தின் வேத நூல்கள் கூறும் முக்கியமான தேவர்களின் கூட்டத்தில் வசுக்களின் கணமும் ஒன்றாகும். இவர்கள் எட்டு பேராக இருப்பதால் அஷ்டவசுக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தட்சனின் புதல்வியான "வசு" என்பவளுக்குப் பிறந்தவர்களாவர். ஒரு கற்பத்தில் பிரம்மதேவருக்கு மானச குமாரர்களாகத் தோன்றியவர்கள். இவர்களை விசுவத்தேவர்கள் என்றும் அழைக்கின்றனர். இவர்கள் எட்டு திசையிலிருந்தும் உலகைக் காப்பவர்கள். சிவபெருமானின் அஷ்டமூர்த்தங்களில் இருப்பவர்கள். இவர்கள் தம் மனைவியருடன் சிவபூஜை செய்து கொண்டு இருக்கின்றனர். பின்வரும் பட்டியலில், வசுக்கள், அவர்களின் தேவியர் அவர்கள் வீற்றிருக்கும் அஷ்டமூர்த்தம், அதன் திசை ஆகியவற்றைக் காணலாம்.

தரன்	- வசுரூபிணி	- பூமி	- கிழக்கு
த்ருவன்	- வசுமோகினி	- அக்னி	- தென்கிழக்கு
சோமன்	- வசுதாரிணி	- ஆன்மா	- தெற்கு
ஆபவத்ஸன்	- வசுகாரிணி	- சூரியன்	- தென்மேற்கு
அநலன்	- வசுவர்ஷினி	- நீர்	- மேற்கு
அநிலன்	- வசுதாயினி	- வாயு	- வடமேற்கு
ப்ரத்யூஷன்	- வசுமாயினி	- சந்திரன்	- வடக்கு
பிரபாசன்	- வசுமாலினி	- ஆகாயம்	- வடகிழக்கு

❁ பொதுவான நிலையில் இவர்கள் யாகசாலையின் நான்கு தோரண வாயில்களிலும் வாயிலுக்கு இருவர் வீதம் பூசிக்கப்படுகின்றனர். வசுக்கள் பூசித்த சிவாலயங்களில் உத்தம பட்சமாக 33 யாக குண்டங்களுடன் அமைக்கப்படும் வேள்விச் சாலையில் மூன்றாவது ஆவரணத்தில் இவர்கள் பூசிக்கப்படுகின்றனர். இவர்களை அக்னியின் எட்டு வடிவங்களாகப் புராணங்கள் கூறுகின்றன.

❁ இவர்கள் வழிபட்டதால் திருக்கழுக்குன்றத்திற்கு "வசுபுரம்" என்பது பெயராயிற்று. திருக்கடையூர், அமிர்தகடேசுவரர் ஆலயத்தில் மூன்றாம் பிரகாரமான திருமாளிகைப் பத்தியில் அஷ்டவசுக்களின் திருவுருவங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

❁ திருச்சாய்க்காடு தேவாரத்துள் எண்வகை வசுக்கள் சிவனை வழிபடுகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

அஷ்ட மாதர்கள்

சிவபெருமானின் பேராற்றலை விளக்கி நிற்பவை அவருடைய அஷ்ட குணங்களாகும். இவற்றிற்கு முரணானதும், உயிர்களைக் கீழ் நிலைப்படுத்துவதுமான எட்டு தீய குணங்களின் செயல்பாட்டினாலேயே உலகில் அனேக தீமைகள் மற்றும் சிக்கல்கள் உருவாகின்றன.

இவை,1)காமம்(ஆசை), 2)குரோதம், 3) மதம், 4) லோபம், 5) மோகம், 6) மாச்சரியம், 7) பிசுனம், 8) அசூயை (பொறாமை) என்ற எட்டாகும்.

இந்த எண்குணங்களின் அடிப்படையில் சிவபெருமான் எட்டு தேவியர்களைப் படைத்தார். காமத்திலிருந்து **''யோகேசுவரி''**யும்; குரோதத்திலிருந்து **"மகேஸ்வரி"**யும்; மதத்திலிருந்து **''பிராம்மி''**யும்; லோபத்திலிருந்து **"வைஷ்ணவி"**யும்; மோகத்திலிருந்து **"கௌமாரி"**யும்; மாச்சர்யத்திலிருந்து **"இந்திராணி"**யும், பிசுனத்திலிருந்து **"யமதண்டி"**யும்; அசூயையிலிருந்து **"வாராகி"**யும் உண்டாக்கப்பட்டனர்.

இவர்கள் அஷ்டமாத்ருகைகள் என்று அழைக்கப்படுகின்றனர். அந்தகாசுரனை அழிப்பதற்காக இந்த எட்டு தேவியர்களைச் சிவபெருமான் உண்டாக்கினார் என்று **"வராகபுராணம்"** கூறுகின்றது.



சப்தமாதர்கள் - கயிலாசநாதர் கோயில் காஞ்சிபுரம்
நன்றி - தமிழ்நாடு தொல்லியல் துறை

இவர்கள் எட்டு கீழ்மைக் குணங்களில் இருந்து தோற்றுவிக்கப்பட்டதால் மகாகோபம் உடையவர்களாகவும், எதற்கும் அஞ்சாதவர்களாகவும், வீரம் செறிந்தவர்களாகவும் இருந்தனர். இவர்கள் சிவசக்தியரின் ஆணைப்படி அந்தகாசுரனோடு பெரும்போர் செய்தனர். அவனுடைய வதத்திற்குப் பிறகு சிவபெருமானை வழிபட்டு நற்குணங்களைப் பெற்றுச் சாந்த வடிவாயினர். இவர்கள் அஷ்டபைரவர்களை மணந்து அவர்களுக்குத் தேவியராயினர். புராணங்கள் இவர்களைப் போர்க்கடவுளராகப் போற்றுகின்றன.


இவர்களில் யோகேசுவரி மற்றைய மாதர்களின் இதயத்தானத்தில் யோக சக்தியாக வீற்றிருப்பதால் அவளுடைய வடிவை விலக்கிவிட்டு மற்ற ஏழு மாதர்களின் வடிவை மட்டும் ஆலயங்களில் வைத்து வழிபடுகிறோம். (இதில் யமதண்டிக்குச் சாமுண்டி என்ற பெயர் வழங்குகிறது). ஏழுபேர் கொண்ட இத்தொகுதியினர் சப்தமாதர்களென்று அழைக்கப்படுகின்றனர். இவர்களைச் சிவனுடைய அஷ்ட பரிவாரங்களில் ஒன்றாகச் சிவமகாபுராணம் கூறுகிறது.

காஞ்சி அஷ்டபைரவேசம்

சிவபெருமானின் அம்சமாக அவரிடமிருந்து தோன்றியவர்கள் அஷ்டபைரவர்களாவர். தலையில், ஜ்வாலா முடியுடன் விளங்கும் இவர்கள் கங்கையுடன் பிறைச்சந்திரனைச் சூடியவர்கள் கபால மாலையையும் பாம்புகளையும் அணிந்து நிர்வாணமாகத் திரிபவர்கள். அனேக அசுரர்களைக் கொன்றவர்கள் : அப்பாவம் தீரக் காஞ்சீபுரத்தில் சிவாலயத்தை அமைத்து அதனுள் தம்பெயரால் எட்டு லிங்கங்களை நிறுவி வழிபாடு செய்தனர். அக்கோயில் அவர்கள் பெயரால் **"அஷ்ட வைரவேசம்"** என்று அழைக்கப்பட்டு இந்நாளில் சோழீச்சுவரர் கோயில் என்று வழங்குகிறது.

இந்த எட்டு பைரவர்க்ளின் பெயர்கள் முறையே 1) அசிதாங்கர், 2) ருரு, 3) சண்டர், 4) குரோதனர், 5) உன்மத்தர், 6) கபாலர், 7) பீஷணர், 8) சம்ஹாரபைரவர் என்பதாகும். இவர்கள் பெயராலேயே இங்குள்ள லிங்கங்கள் அழைக்கப்படுகின்றன. இவர்கள் (மேலே குறித்த) அஷ்ட மாதர்களைத் தேவியர்களாகக் கொண்டவர்கள்.

அஷ்ட மூர்த்தங்கள்



சிவபெருமான் மண் வடிவாக விளங்கும் திருக்கச்சிஏகம்பம்

உலகத்திற்கு மூலப்பொருள்களாக இருப்பவை எட்டாகும். அவை நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்பனவாகும். இவை சிவபெருமானின் திவ்ய மூர்த்திகளாகத் திகழ்கின்றன. இவற்றினுள் நீக்கமற நிறைந்து இவற்றைச் செயல் படுத்தும் சிவபெருமானின் திருக்கோலங்கள் சர்வன், பவன், உருத்திரன், உக்கிரன், பீமன், பசுபதி, மகாதேவன், ஈசானன் என்ற எட்டாகும். இவர்களை அஷ்ட மூர்த்திகள் என்பர்.

சிவபெருமான் எண்பேர் உருவங்களாகத் திகழ் வதைத் திருமுறைகள் அனேக இடங்களில் குறிக்கின் றன. இந்த எட்டு மூர்த்தங்களின் மீதும் மனிதர்கள் பக்தியுடனும், சிரத்தையுடனும் இருக்க வேண்டும். தீ, நீர், நிலத்தில் விளையும் பொருட்கள் முதலானவற்றை மாசுபடுத்தாமலும், அளவுக்கு அதிகமாக உபயோகிக்கா மலும், அழிக்காமலும் இருக்க வேண்டும். இவற்றில் சமநிலை மாறும்போது உலகில் தீமை விளையும். அஷ்ட மூர்த்தி வழிபாடென்பது இயற்கையின் வழி நடத்தலேயாகும்.

மரத்தின் வேரில் இறைத்த நீரால் அதன் கிளைகள் வளம் பெறுவதைப் போல, சிவபூசையால் இந்த அட்ட மூர்த்தங்களும் செழிப்படைகின்றன. முதலில் உள்ள ஏழு திருமேனிகளைவிட எட்டாவதான ஆன்மா முழு நிறைவு பெற்றதாகும். உலகம் சிவனின் வடிவாகும். உலகில் எதில் சேதம் உண்டாயினும் அது அஷ்டமூர்த்தி வழிபாட்டிற்குக் குறைபாடாகும். குறிப்பாக ஆன்மாக்க ளுக்குச் செய்யும் தீங்கு சிவனுக்கு இழைக்கும் தீங்கா கவே முடியும். ஆதலின் இயற்கையையும், ஆன்மாக் களையும் அன்புசெலுத்திப் போற்ற வேண்டும். இதே கருத்தைச் சிவமகாபுராணம் வாயுசங்கிதை இன்னும் விரிவாகக் கூறுகின்றது.

ஆவுடையார் கோயில் அஷ்டமூர்த்திகள்

ஆவுடையார் கோயில் என்றழைக்கப்படும் திருப்பெருந்துறை ஆத்மநாதசுவாமி ஆலயத்தில் உள்ள மகாமண்டப விதானத்தில், நடுவில் தாமரை மலரும் சுற்றி எண்திக்கிலும் அஷ்டமூர்த்தங்கள் தேவ உருவில் அமைக்கப்பட்டுள்ளனர்.

அஷ்டமூர்த்தித் தலங்கள்

சிவபெருமானின் எண்பேருருவினை விளக்கும் திருத்தலங்கள் எட்டாகும். அவை,

1) திருவாரூர்-மண்; 2) திருவண்ணாமலை-அக்னி; 3) திருவானைக்கா-நீர்; 4) சிதம்பரம்-ஆகாசம்; 5) காளத்தி -காற்று; 6) குடந்தை திருநாகேசுவரம்-சூரியன்; 7) மதுரை -சந்திரன்; 8) திருப்பெருந்துறை-ஆன்மா என்பனவா கும். இத்தலங்களில் சிவபெருமானை வழிபடுவது எண்மூர்த்தி வழிபாடாகும்.

காஞ்சியில் அஷ்டமூர்த்தி ஆலயம்

காஞ்சீபுரத்தில் சிவபெருமானின் அஷ்டமூர்த்திக ளுக்கான ஆலயங்கள் உள்ளன. புராணத்திலும் நடை முறையிலும் இவற்றிற்கு அனேக கதைகள் சொல்லப் பட்டாலும் இவை சிவனின் எண்வகைக் கோலங்க ளுக்கான கோயில் என்றே நாம் கருத வேண்டும். அவை :

1) **மண்**-ஏகாம்பரநாதர் (இது புகழ்பெற்றது பெரிய காஞ்சியில் உள்ளது) 2) **நீர்**-ஜம்புகேசுவரர்; 3) **தீ**-அக்னீசுவரர் (ஒக்கப்பிறந்தான் குளக்கரையிலுள்ளது); 4) **காற்று**-காளத்தீசுவரர்; 5) **ஆகாயம்**-சிதம்பரேசர்; 6) **சூரியன்**-பருதீசர் (பஞ்சுப் பேட்டையில் பருதி குளக்கரையில்); 7)**சந்திரன்**-சந்திரேசுவரர் (வெள்ளைக் குளத்தின் கரையில்); 8) **ஆன்மா**-யோகநாதர் (யோகாச்சாரியார் தளிகள்) என்பனவாகும்.

திருமுறைகளில் அஷ்டமூர்த்தங்கள்

தமிழ்வேதமாகிய திருமுறைகளில் அனேக இடங்களில் இறைவனின் எண்மூர்த்தங்கள் சிறப்புடன் போற்றப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றைத் திருமுறைத் தொடர்களால் அறிந்து மகிழலாம்.

திருஞானசம்பந்தப்பெருமான், சிவபெருமான் எண் உருக்கொண்டு திகழ்வதை முதுகுன்றப் பதிகத்தில்,

"பற்றுமாகி வான் உளோருக்குப்
பல்கதிரோன், மதி, பார்
எற்றுநீர், தீக் காலும் மேலை
விண் இயமானனொடு
மற்றுதோர் பல்லுயிராய் (ஆயினான்)"

என்று அருளிச் செய்துள்ளார். இதன் பொருள் பல கதிர்களை உடைய சூரியன், சந்திரன், பூமி, அலைவீசும் நீர், தீ, காற்று, மேலே விரிந்துள்ள வானம், யஜமானன் மற்றும் உயிர்க்கூட்டமாய்ப் பெருமான் விளங்குகின்றான் என்பதாகும். சீர்காழிப் பதிகத்தில்,

"பாரும் நீரொடு பல்கதிர் இரவியும்
பனிமதி ஆகாயம் ஓடும் வாயுவும்
ஒண்கனல் வேள்வியில் தலைவனுமாய்
(நின்றார்)"

என்று அருளிச்செய்கின்றார்.

இதுபோன்று, அஷ்டமூர்த்தங்களைப் போற்றும் எண்ணற்ற திருமொழிகள் அவருடைய தேவாரத்துள் அனேக இடங்களில் உள்ளன.

திருநாவுக்கரசர் வேதசாரமாக அருளிய நின்ற திருத்தாண்டகத்தில், எட்டு மூர்த்தங்களையும் மிகவும் விரிவாக,

"இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமானனாய் எறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்உருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே"

என்று குறித்துள்ளார். இதன் பொருள் பெரிய பூமியாகவும், தீயாகவும், நீராகவும், உயிர்களாகவும் வீசுகின்ற காற்றாகவும், அழிவற்ற சந்திரனாகவும், சூரியனாகவும், ஆகாயமாகவும் எண்பெரும் வடிவங்களில் விளங்குகின்றான். அவனே நன்மை, தீமை, பெண், ஆண் அனைத்து தேவர்களின் வடிவம், மூன்று காலங்கள் என்று பலவாக விளங்குகின்றான் என்பதாகும். இப்படிச் சிவபெருமான், எண்பொருளாக விளங்குவதை அவர் பல பதிகங்களில் குறித்துள்ளார். அப்படியானால் சிவ பெருமானுடைய இந்த எட்டு வடிவங்களும் அவனைப் போலவே அழிவற்ற பொருள்களா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு விடையாக வேறொரு பதிகத்தில் இவை அவனது இயல்பான வடிவமில்லை என்றும் உலக மக்களின் நலனை உத்தேசித்து அருள் மனத்தின் காரணமாக இப்படி எட்டு வடிவம் தாங்கி வருகிறான் என்றும் கூறுவதைக் காண்கிறோம். அப்பாடல்,

"விரிகதிர் ஞாயிறு அல்லர், மதியல்லர் வேத
விதிஅல்லர் விண்ணும் நிலனும்
திரிதருவாயு அல்லர் செறுதீயும் அல்லர்
தெளிநீரும் அல்லர் தெரியில்
அரிதரு கண்ணியாளை ஒருபாகமாக
அருள்காரணத்தில் வருவார்
எரிஅரவ ஆரமார்பர் இமையாரும்
அல்லர் இமைப்பாரும் அல்லர் இவரே."

என்பதாகும். எண்கோலச் சிறப்பைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அரிசிற்கரைப் புத்தூர் பதிகத்தில்,

"தரிக்கும் தரை நீர், தழல், காற்று அந்தரம்
சந்திரன் சவிதா இயமானன் ஆனீர்"

என்று அருளிச் செய்துள்ளார். இவருடைய தேவாரத் துள்ளும் அநேக இடங்களில் அஷ்டமூர்த்தங்கள் சிறப்புடன் பேசப்பட்டுள்ளன. மாணிக்கவாசக சுவாமிகள்,

"நிலம் நீர் நெருப்பு உயிர்
நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலன் ஆய மைந்தனொடு
எண்வகையாய்ப்புணர்ந்து நின்றான்"

என்று அருளிச் செய்துள்ளார். இதையொத்ததான அனேக திருமொழிகளால் தேவாரத்திலும் அதைத் தொடர்ந்தெழுந்த திருமுறைகளிலும், வழிபாட்டு நூல்களிலும் அட்டமூர்த்தங்களின் இயல்பு விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ஆகமங்களில் அஷ்ட மூர்த்தங்கள்

பெருந்திருவிழாவின்போது அமைக்கப்படும் யாகசாலையில் சிவபெருமானுக்கும், அம்பிகைக்கும் ஒன்பது குண்டங்கள் அமைக்கப்பட்டு, அவற்றில் தீவளர்த்து வேட்கின்றனர். யாகசாலையின் மையத்திலுள்ள யாகவேதிகையான மங்கல மேடையைச் சுற்றி எட்டு திக்கிலும் எட்டு குண்டங்களும் கிழக்கிற்கும் - வட கிழக்கிற்கும் நடுவில் ஒன்பதாவது குண்டமும் அமைக்கப்படும். எட்டு திக்கில் அமையும் எட்டு குண்டங்கள் இறைவனின் எண்பேர் வடிவங்களான அஷ்டமூர்த்தி வழிபாட்டிற்காகவும் ஒன்பதாவதான குண்டம் பரசிவத்திற்கும் உரியதாகும். இந்த வழிபாட்டில் எண் பெரும் மூர்த்தங்கள் தனித்தனியாகப் பூசிக்கப்பட்டு இறுதியில் ஒன்றாக்கி ஒன்பதாவது குண்டத்தில் சேர்த்துப் பூசித்த பின் கும்பத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

கீழ்வரும் பட்டியலில் எட்டு திசைகளில் அமையும் குண்டங்களின் வடிவம் அவற்றில் பூசிக்கப்படும் சிவமூர்த்தங்கள் ஆகியவற்றைக் காணலாம்.

எண்பொருள்	அஷ்டமூர்த்தம்	அஷ்ட சக்திகள்	அஷ்ட ருத்திரர்	திசைகள்	குண்டவடிவம்
பூமி (க்ஷிதி)	சர்வன் - தாரிகா	வாமை	வாமதேவன்	கிழக்கு	சதுரம்
நீர் (ஜலம்)	பவன் - சேதனா	ஜேஷ்டை	ஜேஷ்டன்	தெற்கு	அர்த்த சந்திரன்
தீ (தேஜோ)	பசுபதி - தீப்திமதி	ரௌத்திரி	உருத்திரன்	தென்மேற்கு	முக்கோணம்
வாயு	ஈசானர் - பலோத்கடா	காலி	காலன்	வடமேற்கு	அறுகோணம்
ஆகாயம்	பீமன் - விபவீ	கலவிகரணி	கலவிகரணன்	மேற்கு	பஞ்சகோணம்
யஜமானன்	உக்ரர் - உக்ரா	பலவிகரணி	பலவிகரணன்	தென்கிழக்கு	யோனி
சந்திரன்	மகாதேவன்-தாத்ரீ	பலப்பிரமதனி	பலப்பிரமதன்	வடகிழக்கு	எண்கோணம்
சூரியன்	ருத்திரர் - ஜ்யோத்சனா	சர்வபூததமனி	சர்வபூததமனன்	வடக்கு	பத்மம்

❀ சிவபெருமானுக்கு எட்டு பூக்களால் நாமார்ச்சனை செய்கின்றனர். இந்த அஷ்ட புஷ்பார்ச்சனையில் சொல்லப்படும் மந்திரத்தில் சிவபெருமானின் அஷ்டமூர்த்திகளின் பெயரும் இயற்கை வடிவங்களும் கூறப்பட்டுள்ளன. இந்த மந்திரம். 1. சர்வாய க்ஷிதிமூர்த்தயே நம: 2. பவாய ஜலமூர்த்தயே நம: 3. பசுபதே தேஜோ மூர்த்தயே நம: 4. ஈசானாய வாயுமூர்த்தயே நம: 5. பீமாய ஆகாசமூர்த்தயே நம: 6. உக்ராய யஜமானமூர்த்தயே நம: 7. ருத்ராய சூர்யமூர்த்தயே நம: 8. மஹாதேவாய சோமமூர்த்தயே நம: என்பதாகும்.

அஷ்டமூர்த்தி குடும்பம்

சிவபெருமான் எண்பேர் உருவில் அஷ்டமூர்த்தங்களாக விளங்குகின்றார். அவற்றை உள்ளிருந்து இயக்கும் போது பவன், சர்வன் முதலான பெயர்களைத் தாங்குகின்றார். ஒவ்வொரு மூர்த்தத்திலும் தன்னிடமிருந்து ஒரு சக்தியைத் தோற்றுவித்து அவளுடன் கூடியிருந்து அவற்றைச் செயல்படுத்துகின்றார். அஷ்டமூர்த்தங்களின் பெயர்களையும் அவருடைய தேவியர்களின் பெயர்களையும் ஆகமங்களும் புராணங்களும் கூறுகின்றன.

இயற்கைவடிவு	- மூர்த்தி	- தேவி	- குமாரன்
தண்ணீர்	- பவன்	- உமா	- சுக்கிரன்
பூமி	- சர்வன்	- விகோசி	- செவ்வாய்
வாயு	- ஈசானன்	- சிவை	- மனோஜவன்
அக்னி	- பசுபதி	- சுவாகா	-ஷண்முகன்
ஆகாயம்	- பீமன்	- திசை	- ஸர்க்கன்
ஆன்மா	- உக்ரன்	- தீட்சை	- சந்தானன்
சந்திரன்	- மகாதேவன்	-ரோகிணி	- புதன்
சூரியன்	- ருத்திரன்	- சுவர்ச்சலா	- சனைச்சரன்

ஆகம நூல்களில் கூறப்பட்டுள்ளபடி அஷ்டமூர்த்திகள் அவருடைய தேவியர்களின் பெயர்கள் முறையே 1) சர்வன்-தாரிகா, 2) பவன்-சேதனா, 3) உருத்திரன்-ஜோத்ஸனா, 4) உக்ரன்-உக்ரா, 5) பீமன்-விபவீ, 6) பசுபதி-தீப்திமதி, 7) ஈசான்ன்-பலோத்கடா, 8) மஹாதேவன்-தாத்ரீ என்பனவாகும்.

புராணங்களில் இந்த அமைப்புமுறைவேறாக உள்ளது. லிங்கபு7ராணத்தில் சிவபெருமானின் எட்டுமூர்த்தங்களின் இயற்கை வடிவங்கள் அதில் வீற்றிருக்கும் சிவமூர்த்தம் அவர் தேவி அவர்களுடைய சிறப்பு வாய்ந்த குமாரன் ஆகியோர் கூறப்பட்டுள்ளனர். இதனைப் பட்டியலில் காண்க . இதில் சுக்கிரன், செவ்வாய், புதன், சனி ஆகியோர் கிரக பதவியைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

அஷ்ட பரிவாரங்கள்

சிவபெருமானுக்கு எண்ணற்ற தேவர்கள் பரிவார மூர்த்தங்களாக எழுந்தருளியிருந்து பணி புரிகின்றனர். இவர்கள் அனைவரையும் ஒன்றாக எழுந்தருளவைத்து ஆலயங்களில் வழிபட இயலாது. எனவே, எண்மரை மட்டும் தேர்ந்தெடுத்து ஆலயங்களில் எழுந்தருள வைத்து வழிபடுகின்றோம்.

இவர்கள் சூரியன், சப்தமாதர், விநாயகர், முருகன், அம்பிகை, சண்டேசுவரர், பைரவர், நந்தி ஆகிய எண்மராவர். இவர்களுக்குச் சிவாலயத்தின் எட்டு திக்கிலும் சிற்றாலயங்களில் அமைத்து வழிபடுகிறோம். இவர்கள் **"அஷ்டபரிவாரங்கள்"** என்று அழைக்கப்படுகின்றனர்.

சோழர்கள் கட்டிய அனேக ஆலயங்களில் இந்த எண்மருக்கும் தனிச்சிற்றாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனைப் பல ஆலயக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

காலப்போக்கில் இவர்களுக்குத் தனி ஆலயங்களை அமைக்கும் வழக்கம் கைவிடப்பட்டது. பதிலாக, கருவறையைச் சுற்றி அமையும் திருமாளிகைப் பத்தி மண்டபத்திலேயே உரிய திசைகளில் இவர்கள் நிலைப்படுத்தப்பட்டனர்.

சிவபெருமானுடன் அஷ்ட பரிவாரங்களை வழிபடுவது அனைத்துத் தேவர்களையும் வழிபட்ட பலனைத் தருவதாகும்.

அஷ்ட பரிவாரங்களைப் பூஜாபத்ததி நூல்கள் பல வகையாகக் கூறுகின்றன. இதில் விநாயகர், சூரியன், அம்பிகை, சண்டேசர், பைரவர் ஆகிய ஐவர் மட்டும் நிலையாக மாறாது உள்ளனர். மற்ற மூவர் பெயர் மட்டும் இடத்திற்கு ஏற்ப மாற்றப்பட்டுள்ளது. அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்.

சோழமண்டலத்திலுள்ள அஷ்ட பரிவாரங்கள்

சோழ மண்டலத்திலுள்ள அனேக சிவாலயங்களில் சூரியன், சப்தமாதர், கணபதி, சுப்பிரமணியர், மகாலட்சுமி, சண்டீசர், பைரவர், சந்திரன் ஆகிய எண்மரும் அஷ்ட பரிவாரங்களாக அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

புராணங்கள் கூறும் அஷ்ட பரிவாரங்கள்

சிவபெருமானுக்குரிய அஷ்ட பரிவாரங்களாக நந்தி, பிருங்கி, மகாகாளர், சண்டேசுவரர், விநாயகர், முருகன், பார்வதிதேவி, இடபம் ஆகியோரைக் கூறுவர்.



நந்தியும் இடபரும் காளைமாட்டின் உருவம் கொண்டவர்கள். நந்தி கிழக்கிலும், ரிஷபர் மேற்கிலும் வீற்றிருப்பர். பிருங்கி அக்னி திக்கிலும், மகாகாளர் தெற்கிலும், நிருதியில் விநாயகரும், வடமேற்கில் முருகனும், வடக்கில் சண்டேசரும், வடகிழக்கில் அம்பிகையும் சிவனைச் சுற்றிலும் வீற்றிருந்து அருள்பாலிப்பர். இவர்களை அஷ்டகண நாயகர்கள் என்றும் கூறுவர்.

யோகிகள் கூறும் அஷ்ட பரிவாரங்கள்


சிவபெருமானின் ஐந்து முகங்களின் அருள் வெளிப்பாடாக இருக்கும் விநாயகர், உருத்திரர் (தட்சிணாமூர்த்தி) மகாவிஷ்ணு, பிரம்மா, (ஈசானசக்தியான) துர்க்கை ஆகிய ஐவருடன் சண்டீசர், சூரியன், பைரவர் ஆகிய மூவரையும் சேர்த்து அஷ்டபரிவாரங்களாக அமைக்கும் வழக்கமும் பல இடங்களில் இருந்துள்ளது.

ஆதியில் இவர்களுக்குத் தனித்தனி ஆலயங்கள் இருந்தன. காலப்போக்கில் விநாயகர், தட்சிணா மூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, துர்க்கை ஆகியோரைக் கருவறைக் கோட்ட மாடங்களில் அமைத்துவிட்டு, சண்டீசரைக் கோமுகிக்கு அருகிலும், பைரவரை வடகிழக்கிலும், சூரியனைத் தென்மேற்கு முனையிலும் ஆலயங்களில் அமைத்து வழிபடும் வழக்கம் வந்துள்ளது.

திருக்கட்டளை ஆலயத்திலுள்ள அஷ்டபரிவாரங்கள்

புதுக்கோட்டைக்குக் கிழக்கே திருக்கட்டளை என்ற சிற்றூர் உள்ளது. இவ்வூர் சுந்தரேசுவரர் கோயிலில் அமைந்துள்ள எட்டு பரிவாரக் கோயில்கள் சற்று மாறுபாடுடையதாகும். இங்கு சூரியன் சப்தமாதர், கணபதி, முருகன், ஜேஷ்டாதேவி, சந்திரன், சண்டேசுவரர், பைரவர் ஆகிய எண்மருக்குத் தனிச் சிறறாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அஷ்ட பரிவாரங்களின் வரிசையில் சந்திரனும் ஜேஷ்டாதேவியும் சொல்லப்பட்டிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

அஷ்டலிங்க தீட்சாமண்டலம்



விசேஷ லதாலிங்க பத்மதீட்சாமண்டலம் (அஷ்டலிங்க தீட்சாமண்டலம்)

சமய வழிபாட்டில் இறைவடிவங்களைக் கோலங்களாக எழுதி வண்ணப் பொடிகளால் பொலிவூட்டி தானியங்கள், பழங்களால் அலங்கரித்து வழிபடுவதும் ஒரு வகையாகும். இதற்குக் களம் எழுதுதல் என்பது பெயர். கேரளாவில் காளி, பூதன் ஆகிய தெய்வங்களைக் களமெழுதி வழிபடுகின்றனர்.

சிவவழிபாட்டிலும் இத்தகைய கோல வழிபாடு தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது. இந்தக் கோலங்கள் மண்டலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஆகம நூல்கள் பலவகையான மண்டல வழிபாடுகள் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.

பெருஞ்சாந்தி எனப்படும் கும்பாபிஷேக வேள்விச்சாலைகளின் ஓர் அங்கமாக மண்டலங்களை எழுதி வண்ணப் பொடிகளால் அழகுபடுத்திப் பூசிக்க வேண்டுமென்று பத்ததி நூல்கள் கூறுகின்றன.

சிவதீக்ஷை சடங்குகளில் மண்டலங்கள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. இந்த மண்டலங்களில் எட்டு லிங்கங்கள் வரையப்பட்டுப் பூசிக்கப்படுகின்றன. இது அஷ்டலிங்கலதா தீட்சாமண்டலம் என்று அழைக்கப்படுகிறது.

தமிழ் மறையான திருமந்திரத்துள் தீட்சாமண்டலம் பற்றிய விளக்கம் உள்ளது. இதில் எட்டின் இரண்டு மடங்கான பதினாறு லிங்கங்கள் கொண்ட சாம்பவி மண்டலம் எனும் தீக்ஷா மண்டலத்தின் அமைப்பும், சிறப்பும், வழிபாடும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இதையொத்ததாக எட்டின் மடங்கான 32 லிங்கங்கள் 64 லிங்கங்களைக் கொண்ட தீட்சா மண்டலங்களையும் பத்ததி நூல்களில் விவரித்துள்ளனர்.

அஷ்ட ம்ருத்பூஜை


சிவாலயங்களில் நடைபெறும் சிறப்பு விழாக்களின் தொடக்கப் பூசைகளில் ஒன்று மண் எடுத்தல் ஆகும். இது வடமொழியில் ம்ருத் சங்கிரகணம் என்று அழைக்கப்படும். எட்டுவிதமான இடங்களில் இருந்து மண் சேகரிக்க வேண்டுமென்று பூஜா நூல்கள் குறிக்கின்றன. இவை யானை மகிழ்ச்சியில் மண்ணைக் கிளறும்போது அதன் தந்தத்தில் ஒட்டிய மண், பசுக்களின் குளம்படிமண், புற்றுமண், வில்வமரத்தடி மண், புண்ணிய தீர்த்தங்களின் மண், கடல் மண், கொன்றையடி மண், உயர்ந்த சாதிக் குதிரையின் காலடி மண் அல்லது புரண்ட இடத்தில் எடுத்த மண் என்ற எட்டாகும். இவற்றை மந்திரங்களால் அர்ச்சித்துப் பாலிகைகளில் நிறைத்து அதில் முளையிடுகின்றனர்.

அஷ்ட ருத்திரர்கள்

சிவாசனத்தின் சக்தி மண்டலத்தில் வீற்றிருக்கும் அஷ்ட சக்திகளின் கணவர்கள் அஷ்ட ருத்திரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் வாமன், ஜேஷ்டன், உருத்திரன், காளன், கலவிகரணன், பலவிகரணன், பலப்பிரமதன், சர்வபூததமனன் என்பவர்களாவர். சிவாலயத்தின் ஸ்ரீ விமானத்தில் இந்த எட்டு உருத்திரர்களும் வாசம்புரிகின்றனர். இவர்கள் சிவபெருமானின் அஷ்டமூர்த்தங்களில் வீற்றிருந்து அவை மாசுபடாமல் காவல் புரிகின்றனர்.

அஷ்டபத பீடம்

சிவபெருமான் வீற்றிருக்கும் ஆசனங்கள் பல வகையாகத் திகழ்கின்றன. சிவாகமங்கள். சிவன் வீற்றிருக்கும் பஞ்சாசனத்தைப் பற்றி விளக்கமாகக் கூறுவதுடன் அதைப் பூசிக்க வேண்டிய விதிமுறைகளையும் விவரிக்கின்றன. சித்த நூல்களில் சிவபெருமான் வீற்றிருக்கும் சித்தயோகேசுவரி பீடத்தைப் பற்றிய செய்திகளுள்ளன. புராணங்கள். சிவபெருமான் வீற்றிருக்கும் ஆசனங்களில் ஒன்றான அஷ்டபத பீடம் என்னும் ஆசனத்தைப் பற்றி விளக்கமாகக் கூறுகின்றன. இந்த ஆசனம் எட்டு பதங்களைக் கொண்டதாகும். வெளியில் அமையும் எட்டாவது பதம் அஸ்திரபதம் என்றும் உள்ளுக்குள் உள்ளாக அமையும் பதங்கள் முறையே.



எட்டு பதங்களையுடைய அஷ்டபதம் எனும் ஸ்ரீ கயிலாசப் பிரஸ்தார யந்திரம்

7) திக்பாலகபதம். 6) பிரம்மபதம். 5) விஷ்ணுபதம். 4) சதாசிவபதம். 3) ஈஸ்வரபதம். 2) கணபதம். 1) வித்யேசுவரபதம் என்று பெயர் பெறுகின்றன. இவற்றின் மையத்திலுள்ள பிந்துவில் பரமேசுவரன் பராசக்தியான கௌரிதேவியுடன் வீற்றிருக்கின்றார். இந்த எட்டு பதங்களில் வீற்றிருக்கும் மூர்த்திகளுடன் சிவபெருமானை ஆராதிப்பவர்கள் சகல செல்வங்களையும் அடைவரென்று நந்தியம் பெருமான் உபதேசித்துள்ளார்.

பிந்துவில் சிவசக்தியர் வீற்றிருக்கும் மகாஸ்தானத்தை அடுத்துள்ள வித்யேசுவரபதத்தில், கிழக்கில் அனந்தனும், தென்கிழக்கில் திரிமூர்த்தியும், தெற்கில் சூட்சுமனும் தென்மேற்கில் ஸ்ரீகண்டியும், மேற்கில் சிவோத்தமனும், வடமேற்கில் சிகண்டீசனும், வடக்கில் ஏகநேத்திரனும், வடகிழக்கில் ஏகருத்திரனும் எழுந்தருளியுள்ளனர். இவர்கள் பெருமானை நீங்காது இருக்கும் அஷ்ட வித்யேசுவரர்களாவர். இவர்களின் பெயரால் இது வித்யேசுவர பதம் என்றழைக்கப்படுகிறது.

அடுத்து இரண்டாவதாக உள்ள கணபதத்தில் கிழக்கில் விரசாஷேசனும், தென்கிழக்கில் மகாகாளனும், தெற்கில் பிருங்கியும், நிருதியில் விநாயகரும், மேற்கில் ரிஷபனும், வடமேற்கில் முருகனும், வடக்கில் அஷ்டமூர்த்திகளான பவன், சர்வன், ஈசானன், உருத்திரன், பசுபதி, உக்ரமன், பீமன், மஹாதேவன் ஆகிய எண்மரும் வடகிழக்கில் சண்டியும் தேவதைகளாக உள்ளனர். இவர்கள் அஷ்ட கணநாயகர்களாதலின் இந்தப் பதம் கணபதம் எனப்பட்டது.

மூன்றாவதான ஈசுவர பதத்தில் கிழக்கில் ஈசுவரனும் (அவருக்கு இடப்புறம் விஸ்வேசனும்), தெற்கில் உருத்திரனும், மேற்கில் சர்வேசனும், வடக்கில் பரமேசுவரனும் வீற்றிருக்கின்றனர்.

நான்காவதான சிவ பதத்தில் கிழக்கில் சிவபெருமானும், தெற்கில் ஹரனும், மேற்கில் பவனும், வடக்கில் மிருடனும் வீற்றிருக்கின்றனர்.

ஐந்தாவதான விஷ்ணுபதத்தில் மகாவிஷ்ணுவின் சதுர்த்த வடிவங்களான வாசுதேவன், அநிருத்தன், பிரத்யும்னன், சங்கர்ஷணன் ஆகிய நால்வரும் முறையே கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு இதழ்களில் அமர்ந்துள்ளனர்.

ஆறாவதான பிரம்மபதத்தில் பிரம்மாவின் சதுர்த்த வடிவங்களான ஹிரண்யகர்பன் கிழக்கிலும், விராஜன் தெற்கிலும், காலன் மேற்கிலும், புருஷன் வடக்கிலும் அமர்ந்துள்ளனர்.

ஏழாவதான திக்பாலக பதத்தில் எட்டு திக்குகளிலும், திக்பாலகர்கள் வீற்றிருக்கின்றனர். இவர்கள் கிழக்கிலிருந்து முறையே இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்களாவர். இவர்களுடன் பாதாள திக்கின் காவலனான விஷ்ணுவும் ஊர்த்துவதிக்கின் காவலனான பிரம்மனும் உள்ளனர்.

எட்டாவதாக விளங்குவது அஸ்திரபதமாகும். இதில் எண்திக்கிலும் சிவனுடைய ஆயுதங்கள் நிலைப்படுத்தப்படுகின்றன. கிழக்கில் வச்சிரமும் தென்கிழக்கில் பரசு(மழு)வும் தெற்கில் அம்புகளும் (பாணங்கள்) தென்மேற்கில் கத்தியும் மேற்கில் பாசமும் வடமேற்கில் அங்குசமும் வடக்கில் பினாகம் எனும் வில்லும், வடகிழக்கில் சூலமும் அஷ்டாயுதங்களாக விளங்குகின்றன.

இத்தகைய ஒப்பற்ற அஷ்டாபத திவ்ய ஆசனத்தில் வீற்றிருக்கும் பெருமானுக்கு அஷ்டோபசாரம், அஷ்டநாம அர்ச்சனை ஆகியன விரிவாகச் செய்யப்படுகின்றன.

அஷ்டோபசாரம்



அஷ்டபத பீடத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு எட்டுவிதமான உபசாரங்கள் செய்யப்படுகின்றன. இவை 1) பாதங்களை விளக்க நீர் அளித்தல் (பாத்தியம்), 2) சுத்தம் செய்து கொள்ள நீர் அளித்தல் (ஆசமனம்), 3) பூணூல் அளித்தல் (யக்ஞோபவீதம்),4) பூசிக்கொள்ள வாசனைத் திரவியம் அளித்தல்(கந்தம்), 5)அட்சதை அளித்தல் 6) சூடுவதற்குப் பூக்களை அளித்தல், 7) தூபம் காட்டுதல், 8) தீபாராதனை செய்தல் என்பதாகும்.

இவைகளை வாமதேவாய நம: ஜேஷ்டாய நம: ருத்ராய நம: காலாய நம: கலவிகரணாய நம: பலவிகரணாய் நம: பலாய நம: பலப்பிரமதனாய நம: என்னும் அஷ்ட ருத்திர நாமத்தால் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (சிவ மகாபுராணத்தில் பவன் எனும் நாமத்தையும் சேர்த்து ஒன்பது வித உபசாரங்கள் சொல்லப்பட்டுள்ளதையும் காண்கிறோம்)

அஷ்ட புஷ்பங்கள்

எட்டு மலர்களைச் சூட்டிச் சிவபெருமானை ஆராதனை செய்து போற்றும் மரபு நெடுங்காலமாக உள்ளது. இதனை அஷ்டபுஷ்பம் சாத்துதல் என்று அழைக்கின்றனர். சிவபூஜா நூல்கள், எண்மலர்களைப் பலவிதமான பட்டியலிட்டுக் காட்டுகின்றன. சில நூல்கள் காலை, நண்பகல், மாலை, முன்னிரவு ஆகிய நான்கு வேளைகளிலும் சிவமூர்த்திக்கு அணிவிக்க வேண்டிய எண்மலர்களின் பெயர்களைப் பட்டிய லிட்டுக் கூறுகின்றன. (இந்தப் பட்டியலைக் கீழே காண்க)

தேவாரத்துள் அனேக இடங்களில் எண்மலரிட்டுச் சிவவழிபாடு செய்வது சிறப்புடன் குறிக்கப்பட்டுள்ளது. எண்மலர்களை நாண்மலர் என்றும் அழைக்கின்றனர்.

திருநாவுக்கரசர் அஷ்டபுஷ்பமிட்டுச் சிவனை வழிபடுவதால் அவன் நமது பண்டை வினைகளை மாற்றி நல்வினையை அருள்கிறான் என்பதை,

"தடமலர் எட்டினால் பாரித்தேத்தவல்லார்
வினைமாற்றுவார்"

என்றும்,

"எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்டலர் இடுவார் வினைமாயும்",

என்றும்,

"மலர் ஓர்இருநான்கு கொண்டு உள்குவார் அவர்
வல்வினை யோட்டுவார்".

என்றும், பல இடங்களில் குறித்துள்ளார்.

அவர் திருவதிகை வீரட்டானத்தில் அருளிய தேவாரப் பதிகத்திலுள்ள ஒவ்வொரு பாடலிலும் எட்டு மலர்களைக் கொண்டு வழிபடுவதால் உண்டாகும் பலனை விவரித்துக் கூறியுள்ளார். இதன்படி நவ கோள்களால் உண்டாகும் துன்பம் தீரும், வல்வினைகள் நீங்கும். இன்பம் பிறக்கும். பழவினைகள் நீங்கும்.



பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், ஆகிய மூவரும் கூடி சிவலிங்க அர்ச்சனை புரிதல்.

இறுதிப் பாடலில் அஷ்ட புஷ்பங்களை ஏந்தி அஷ்ட மூர்த்தியாக நிற்கும் சிவபெருமானின் திருவடிகளில் இட்டுப் பூசிப்பவர் சிவனடி சேர்ந்து இன்பம் பெறுவர் என்று உறுதிபடக் கூறுகின்றார்.

சிவபெருமான் எண்மலர்களைச் சூடி மகிழ்கின் றான் என்பதனை **"எட்டுக்கொலாம் அவர் சூடும் இனமலர்"** என்றும் குறிக்கின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கழுக்குன்றத்தில் திருமாலும் பிரம்மனும் கூடி எண்மலர் கொண்டு போற்றியதை

"அரியவன் அட்டபுட்பம் அவை கொண்டடி போற்றிட
கரியவன் நான்முகனும் அடியும் முடிகாண்பரியவன்"

என்றும், அடியவர்கள் எட்டு நாண்மலர்கள் கொண்டு போற்றுவதை

"எண்ணார் நாண் மலர் கொண்டங்கு
இசைந்தேத்தும் அடியவர்கள்"

என்றும் பல இடங்களில் பாடிப்பரவுகிறார்.

நான்கு காலப்பூசைக்குரிய எண்மலர்கள்

எல்லாக் காலத்திற்கும் உரியவை : புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை ஆகியனவாகும்.

காலைக்குரியவை : அலரி, நாயுருவி, மல்லிகை, எருக்கு, வில்வம், நந்தியாவர்த்தம், தாமரை, பவழமல்லி.

உச்சிக்குரியவை : பொன்னூமத்தை, புலிநகக்கொன்றை, பாதிரி, வன்னி, கத்தரி, மந்தாரை, சரக்கொன்றை, தும்பை.

மாலைக்குரியவை : மல்லிகை, காட்டு மல்லிகை, மரமல்லிகை, மகிழ், கொன்றை, சண்பகம், சிறுசண்பகம், மருக்கொழுந்து.

இதுபோன்றே பூசைக்குரிய எண்வகைத் தளிர்களையும் (பல்லவங்களையும்) இலைகளையும் (பத்திரங்களையும்), பூஜாபத்ததி நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன.

ஞான நூல்களில் அஷ்டபுஷ்பங்கள்

யோகிகளும், ஞானிகளும், இறைவனுக்குச் சார்த்தி மகிழும் எண்மலர்கள் முற்றிலும் தனிச் சிறப்புக்களைக் கொண்டதாகும். இதன்படி மனம் என்னும் செடியில் எட்டு மலர்கள் பூக்கின்றன. அவை 1) அஹிம்சை, 2) இந்திரியஅடக்கம், 3) சாந்தி, 4) தயை, 5) ஞானம், 6) தவம், 7) சத்தியம், 8) பாவனை ஆகும்.

இவற்றைத் தமிழில் 1) கொல்லாமை, 2) ஐம்பொறிகளை அடக்குதல், 3) அமைதித்தன்மை, 4) அருள் உடைமை, 5) அறிவுடைமை, 6) தவம், 7) வாய்மை, 8) நன்னடத்தை என்று கூறுவர்.

ஞானிகளும் யோகிகளும் உலகிலுள்ள அனைத்துப் பொருட்களிலும் உயிர்களிலும் இறைவன் நிறைந்திருக்கின்றான் என்பதை உணர்ந்தவர்கள். அவர்கள் உயிர்களில் நிறைந்திருக்கும் பெருமானுக்கு மேலே சொன்ன எட்டு மலர்களைச் சூட்டும் வகையில் அவற்றின்மீது அன்பு கொண்டு அவற்றைத் துன்பப் படுத்தாமலும், தயைகூர்ந்து, தன்னைப்போலவே பாவித்து அன்பு செலுத்தியும், அன்பு பாராட்டியும் மகிழ்கின்றனர். இதனால் உலகில் அன்பும் சமாதானமும் நிலை பெறுகிறது.

சிவாகமங்களிலும், ஞானமொழி நூல்களிலும் மனதில் பூக்கும் (மேலே சொன்ன) எட்டுமலர்களைப் பற்றிய விளக்கமும், அவற்றைச் சிவபெருமானுக்குச் சூட்டுவதால் உண்டாகும் சிறப்புக்களும் பலனும் சொல்லப்பட்டுள்ளன. மிகுந்த நலம்சேர் செம்மையுடையவர்கள் மனத்திலே பூக்கும் இந்த ஞானமலர்களைத் திருநாவுக்கரசர், "நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்கள் எட்டும்" என்று கூறுகின்றார்.

எண்குணத்தான்

ஆதிமூலபரம்பொருளுக்கு எட்டு குணங்கள் சிறப்பாக அமைகின்றன. இதனால் அவன் எண்குணத்தான் என்று அழைக்கப்படுகின்றான். தமிழ் மறையான திருக்குறளில் திருவள்ளுவர்

கோளில் பொறியில் குணமிலவே 'எண்குணத்தான்'
தாளை வணங்காத் தலை

என்று குறிக்கின்றார். இந்த எட்டு குணங்களைப் பற்றிய செய்திகள் பலநூல்களில் பலவாறு உள்ளன. என்றாலும் இவற்றின் முடிவு இறைவன் அளவிடுவதற்கு அரிய சக்தியைக் கொண்டவன் என்பதேயாகும்.

சாந்தோக்யம் என்ற உபநிடதத்தில் இறைவனுக்குரிய எண்குணங்களாக

1) பாவமின்மை	5) பசியின்மை
2) ஜரையின்மை	6) தாகமின்மை
3) மரணமின்மை	7) சத்யாகாரம்
4) சோகமின்மை	8) சத்யசங்கற்பம்

ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. இவை மூலபரம்பொருள் சத்தியத்தின் வடிவமாகவும், எப்போதும் சத்தியமானவற்றையே செய்துகொண்டிருப்பதாகவும் உள்ளதை உணர்த்துகின்றன. இந்தச் செயல்களால் அதற்குப் பசி, தூக்கம், தாகம், மரணம், சோகம் முதலியன உண்டாவதில்லை.

இறைவனின் எண்குணங்களாக சர்வஞானோத்திர ஆகமம்,

1) முற்றறிவு (**சர்வஞ்ஞத்துவம்**) உடைமை
2) வரம்பில் இன்பம் (**திருப்தி, பூர்த்தி**) உடைமை
3) இயற்கை உணர்வு (**அநாதிபோதம் நிராமயான்மா**) கொண்டிருத்தல்
4) தன்வயத்தன் (**சுதந்திரம், சுவதந்திரதை**) ஆதல்
5) குறைவில் ஆற்றல் (**அலுப்தசக்தி**) உடைமை
6) வரம்பில் ஆற்றல் (**அனந்தசக்தி**) உடைமை
7) தூய உடம்பு (**விசுத்ததேகம்**) கொண்டிருத்தல்
8) இயல்பாகவேபாசங்கள்இல்லாமை (**அநாதி முக்தத்தன்மை**)

ஆகிய எட்டைக் குறிக்கின்றது.

தமிழ்மறையான தேவாரத்துள் அனேக இடங்களில் சிவபெருமானின் எண்குணம் பேசப்படுகின்றன. திருநாவுக்கரசர் விடம் தீர்த்த பதிகத்தில் "**எட்டுக் கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்**" என்றும் வன்னியூர்ப் பதிகத்தில் "**குணங்கள்தோள் எட்டு மூர்த்தி**" என்றும் தென்குரங்காடுதுறைப்பதிகத்தில் "**கலை ஞானிகள் காதல் எண்குணவன்காண்**" என்றும் இடைமருது பதிகத்தில் "**எட்டுவான் குணத்தீசன் எம்மான்**" என்றும் பாடியருள்கின்றார்.

சுந்தரர் கானாட்டுமுள்ளூர்ப் பதிகத்தில் "**இறையவனை மறையவனை எண்குணத்தினானை**" என்று போற்றுகின்றார்.

அஷ்ட நாமங்கள்

எண்ணிலாத குணங்களையும் பெயர்களையும் உடைய சிவபெருமானை எட்டுப் பெயர்களைச் சொல்லிப் போற்றும் வழக்கம் இருந்தது. காலப்போக்கில் நூறு பெயர்களால் போற்றியபோதும், ஆயிரம் பெயர்களால் போற்றிய போதும் அவற்றைத் தொடர்ந்து மேலும் எட்டு நாமங்களைக் கூறிப் போற்றும் வழக்கம் தொடர்ந்து வருகிறது. இப்பகுதியில் சிவபெருமான் அஷ்டநாமங்கள் இரண்டைக் கண்டு மகிழலாம்.

1

சிவபெருமானைப் போற்றும் எண்பெயர்கள் (அஷ்டநாமங்கள்) பலவற்றைப் புராணங்களும் ஆகமங்களும் குறிக்கின்றன. இவற்றுள் சிறப்புமிக்கது. சர்வன், பவன், ருத்திரன், உக்ரன், பீமன், பசுபதி, மகாதேவன், ஈசானன் என்பனவாகும். இவர்கள் சிவ பெருமானின் அட்ட மூர்த்தங்களாகவும் உள்ளனர்.

சோமாஸ்கந்த மூர்த்தியை இந்த எட்டு பெயர்க ளால் அர்ச்சிக்கின்றனர். முதலில் சிவபெருமானை மேலே குறித்த எட்டு பெயர்களாலும், பின்னர் இந்த எட்டு பெயர்களைக்கூறி அவருடைய பத்தினிக்கு நமஸ்காரம் என்று பார்வதியையும் தொடர்ந்து எட்டு பெயர்களைக்கூறி அவருடைய புத்திரனுக்கு நமஸ் காரம் என்று முருகனையும் போற்றி அர்ச்சிப்பதைக் காண்கிறோம். சிவபெருமானை

ஓம் சர்வாய தேவாய நம:
ஓம் பவாய தேவாய நம:
ஓம் ருத்ராய தேவாய நம:
ஓம் உக்ராய தேவாய நம:
ஓம் பீமாய தேவாய நம:
ஓம் பசுபதேர் தேவாய நம:
ஓம் ஈசானஸ்ய தேவாய நம:
ஓம் மஹதேர் தேவாய நம:

என்றும், இதைத் தொடர்ந்து தேவியைப் போற்றும் வகையில்

ஓம் சர்வஸ்ய தேவஸ்ய பத்ன்யை நம:
ஓம் பவஸ்ய தேவஸ்ய பத்ன்யை நம:
ஓம் ருத்ரஸ்ய தேவஸ்ய பத்ன்யை நம:
ஓம் உக்ரஸ்ய தேவஸ்ய பத்ன்யை நம:
ஓம் பீமஸ்ய தேவஸ்ய பத்ன்யை நம:
ஓம் பசுபதேர் தேவஸ்ய பத்ன்யை நம:
ஓம் ஈசானஸ்ய தேவஸ்ய பத்ன்யை நம:
ஓம் மஹதேர் தேவஸ்ய பத்ன்யை நம:

என்றும், இதனைத் தொடர்ந்து குமரனைப் போற்றும் வகையில்,



ஓம் சர்வஸ்ய தேவஸ்ய சுதாய நம:
ஓம் பவஸ்ய தேவஸ்ய சுதாய நம:
ஓம் ருத்ரஸ்ய தேவஸ்ய சுதாய நம:
ஓம் உக்ரஸ்ய தேவஸ்ய சுதாய நம:
ஓம் பீமஸ்ய தேவஸ்ய சுதாய நம:
ஓம் பசுபதேர் தேவஸ்ய சுதாய நம:
ஓம் ஈசானஸ்ய தேவஸ்ய சுதாய நம:
ஓம் மஹதேர் தேவஸ்ய சுதாய நம:

என்றும் கூறி அர்ச்சிக்கின்றனர்.

இந்தப் பெயர்களின் விளக்கம் வருமாறு **1. பவன்:** எங்கும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பவன். **2. சர்வன்:** எல்லாவற்றையும் தம்முள்கொண்டுநிற்பவன். சம்ஹார காலத்தில் அவற்றைத் தம்முள் அடக்கிக் கொள்பவன். **3. உருத்திரன் :** உயிர்களின் பிறவி நோயை நீக்குபவன். **4. பீமன் :** அச்சம் தருபவன். அச்சம் கொண்டிருப்பதால்தான் உயிர்களும் பொருள்க ளும் நியதிக்குள் நிற்கின்றன. இவரிடம் கொண்டுள்ள அச்சத்தால்தான் காற்று கலிக்கிறது என்று பிருக்தாரண உபநிடதம் கூறுகிறது. **5.உக்கிரன் :** எவற்றுக்குள்ளும் அடங்கி விடாது. அவற்றின் அப்பாலுக்கு அப்பாலாய் இருப்பவன். **6. ஈசானன் :** எல்லாவற்றையும் அடக்கி ஆள்பவன். **7. மகாதேவன்:** எல்லா இறைவர்களுக்கும்

மேலான இறைவன். 8. **பசுபதி** : பாசங்களால் கட்டுப் படாதவன். உயிர்களுக்குப் பதியாக இருப்பவன் என்பதாகும்.

இறைவனின் அஷ்ட மூர்த்தங்களின் பெயர் களைச் சொல்லி அவருடைய திருமேனிகளில் அஷ்ட புஷ்பங்களை வைத்து வழிபடுவதால் இறைவனின் திருவடியை எளிதில் அடையலாம் என்பதைத் திருநாவுக்கரசர் அதிகைப் பதிகத்தில்

அட்டபுட்பம் அவை கொளுமாறு கொண்டு
அட்டமூர்த்தி அனாதிதன் பால் அணைக்க
அட்டுமாறு செய்பவர் அதிகை
வீரட்டானர் அடி சேரும் அவர்களே

என்று பாடிப் பரவுகின்றார்.

2

சிவ விரதங்களில் மிக உயர்ந்தது பாசுபதயோக விரதமாகும். இதில் சிவபெருமானுடைய எட்டு நாமங் களைக் கொண்டு தன்னைத் துதித்தால் எளிதில் பாசுபத யோகம் சித்தியாகும் என்று கூறியுள்ளார். இந்த அஷ்ட நாமங்கள் **1.சிவன், 2.மஹேஸ்வரன், 3.உருத்திரன், 4. விஷ்ணு, 5. பிதாமகன், 6. சம்சார வைத்யன், 7. சர்வக்ஞன், 8. பரமாத்மா** என்பனவாகும். உபமன்யு முனிவர் கிருஷ்ணபிரானுக்குச் சிவதீட்சை செய்வித்து இவற்றை உபதேசித்தார். இவை அளவற்ற பயன்களைத் தருவதாகும். இதன் பொருள்:-

"**சிவம்**" என்பதற்கு மங்களத்தைத் தருபவர். ஆத்யந்த சூன்யராய் எப்போதும் பரிசுத்த ஆத்மா வோடு இணைந்திருப்பவர் என்பது பொருளாகும்.

பிரகிருதிக்குப் பரமாயும், புருஷராயும் இருப்பவர் சிவபெருமான். அவர் இதனுள் நிறைந்து நின்று இதனைச் செயல்படுத்துகின்றார். இந்த ஆற்றலுக்கு "**மஹேஸ்வரன்**" என்பது பெயராகும். இவரிடமிருந்தே உலகம் யாவும் தோன்றி ஒடுங்குகின்றன.

ருத் என்றால் துக்கம். துக்கத்தை நாசம் செய்வதால் சிவபெருமான் "**ருத்திரன்**" என்று அழைக்கப்படுகின் றான். மேலும் ருத் என்றால் சப்தம் என்பது பொருள். சப்தத்தால் அவர் நமது அஞ்ஞானத்தை அழித்துப் பிரம்மத்தை உணர வைப்பதால் ருத்திரன் எனப்ப டுகிறார்.

"**விஷ்ணு**" என்றால் எங்கும் வியாபித்து (நீக்கமற நிறைந்து) நிற்பது என்பது பொருள். உலக உயிர்கள் யாவற்றிலும்; சிவதத்துவம் முதல் பிருத்வி தத்துவம் வரையிலும் வியாபித்து நிற்பதால் சிவபெருமான் விஷ்ணு என்று அழைக்கப்படுகின்றார்.

ஜகத்தைப் படைத்தவனுக்குத் தந்தையாக இருப்பதால் சிவபெருமான் "**பிதாமகன்**" என்று அழைக் கப்படுகின்றார்.


"**வைத்தியன்**" எவ்வாறு உடலில் பற்றியுள்ள நோய்களை அழித்துச் சுகம் தருகிறானோ, அப்படியே பரமேசுவரன் உயிர்களைப் பற்றியுள்ள சம்சாரப் பிணியை விலக்கிச் சுகம் தருகின்றான். இதனால் "**சம்சார வைத்தியன்**" என்று அழைக்கப்படுகிறார்.

அணுவுக்குள் அணுவாகவும் பெரியவற்றுள் மிகப் பெரியதாகவும், இயல்பாகவே அனைத்தையும் அறியும் சக்தி உள்ளவராகவும் இருப்பதால் சிவபெரு மான் "**சர்வக்ஞர்**" எனப்படுகின்றார்.

உன்னத குணங்கள் பெற்றவர்களால் கூட முழுவ துமாக அறிய முடியாதவரும், எவரிடமிருந்து எல்லாவித ஆத்மாக்களும் தோன்றினதோ அவரே "**பரமாத்மா**" என்று அழைக்கப்படுகின்றார்.

இந்த எட்டு நாமங்களின் பொருளில் தோய்ந்து எட்டு மலர்களைக் கொண்டு அர்ச்சிப்பவர்கள் சிவசந் நிதியில் சகல ஐஸ்வர்யங்களுடன் நிலை பெற்றிருப்பர் என்று சிவமகாபுராணம் கூறுகின்றது.

எட்டுக் கழுகுகள் வழிபட்ட வேதகிரி



❀ கழுகுகள் வழிபடுதல் - திருக்கழுக்குன்றம்

மகா கோடி உருத்திரத் திருத்தலமான திருக்கழுக்குன்றத்தில் யுகத்துக்கு இரண்டு பேர்களாக நான்கு யுகங்களிலும் எண்மர் கழுகு வடிவத்துடன் பூசித்துப் பேறுபெற்றனர். இதனைத் திருக்கழுக்குன்ற புராணம் விரிவாகக் கூறுகிறது. இதன்படி, கிருதயுகத்தில் **சண்டன் - பிரசண்டன்** என்பவர்களும் ; திரேதாயுகத்தில் **சம்பாதி-சடாயு** என்பவர் களும் ; துவாபர யுகத்தில் **சம்புகுத்தன்-மாகுத்தன்** என்பவர்களும் பூசித்துப் பேறுபெற்றனர். கலியுகத்தில் **பூஷா-விதாதா** என்பவர்கள் வழிபட்டு வருகின்றனர்.

அஷ்ட மங்கலம்

சிவபெருமான் உமாதேவியுடனும் கணங்களுடனும் கொலு வீற்றிருக்கும் மகா கயிலாயத்தின் திருமாளிகை வாயில்களில் அஷ்ட மங்கலங்களை ஏந்திய தேவப்பெண்கள் நிற்கின்றனர். இவர்கள் அஷ்ட ரம்பையர் என்று அழைக்கப்படுகின்றனர்.

அஷ்ட மங்கலங்கள் என்பன எட்டு திசைகளில் இருந்தும் சிவபெருமானுடைய மேன்மையைப் போற்றி அளிக்கப்பட்ட மிக உயர்ந்த மங்கலப் பொருட்களாகும். இவை 1) பூரணகும்பம், 2) அடுக்குதீபம், 3) சுவஸ்திகம், 4) இரட்டை சாமரம், 5) கொடி, 6) சங்கு, 7) ஸ்ரீவத்ஸம், 8) கண்ணாடி என்பனவாகும்.


கிழக்குத் திசையின் காவலனான இந்திரனின் அடையாள மங்கலப் பொருள் **"இந்திரத் துவஜம்"** எனப்படும் கொடியாகும். இவன் வசந்த காலத்தில் சிவாலயத்தின் எட்டு திக்கிலும் யானைகளின் உருவம் பொறித்த கொடிகளை ஏற்றி விழா கொண்டாடுகின்றான். இதுவே அஷ்டகொடி உற்சவம் அல்லது இந்திர விழா என்பதாகும். கிழக்குத் திசைக்காவலனான இந்திரன் ரம்பையிடம் இந்தக் கொடியை அளித்து அவளைக் கயிலாயத் திருமாளிகையின் கிழக்கில் நிறுத்தியுள்ளான்.

தென்கிழக்குத் திசைக் காவலனான **"அக்னி"** சிவபெருமானுக்குத் தன்னுலகின் மங்கலப் பொருளான ஆயிரம் சுடர்களைக் கொண்ட அடுக்கு தீபத்தை அளித்துள்ளான். அதைச் **"சுந்தரி"** என்னும் அப்சர மங்கை தாங்கி அக்னித் திக்கில் நிற்கின்றாள்.

யமனுடைய மங்கலச் சின்னம் **"சுவஸ்திக"**மாகும். உயிர்கள் பிறந்தும் இறந்தும் மீண்டும் மீண்டும் நான்கு கதிகளில் சுழல்வதைக் குறிக்கும் இச்சின்னம் யமதருமனின் சின்னமாயிற்று. **"காமுகி"** என்ற அப்சரஸ் யமன் அளித்த இந்த மங்கலச் சின்னத்தைத் தாங்கியவாறு மாளிகையின் தெற்கு வாயிலில் நிற்கின்றாள்.

தென்மேற்குத் திசைக்காவலனான நிருதி **"கண்ணாடியை"** அடையாளமாகக் கொண்டவன். அவன் அளித்த இந்த மங்கலச் சின்னத்தை ஏந்தியவாறு **''காமவர்த்தினி''** கயிலாயத்தின் தென்மேற்கு முனையில் நிற்கின்றாள்.

மேற்குத் திசையில் உள்ள திசைக் காவலன் கடல் அரசனான வருணன் ஆவன். இவனுடைய மங்கலப் பொருள் கடலில் தோன்றும் **"சங்கு"** ஆகும். இந்த



● நந்தியம் பெருமானும் - அஷ்டமங்கலங்களும்

மங்கலச் சின்னத்தைத் தாங்கியவாறு **"சுமுகி"** மேற்குத் திக்கில் நிற்கின்றாள்.

காற்றின் அதிபனான வாயுதேவனின் திசை வடமேற்கு ஆகும். அவனுடைய மங்கலச் சின்னம் **"இரட்டைச் சாமரங்கள்"** ஆகும். அதை ஏந்தியவாறு **"மேனகை"** வாயுதிக்கில் உள்ளாள்.

குபேரனின் சின்னம் **"ஸ்ரீவத்ஸமாகும்"**. இது அனேக செல்வங்களின் இருப்பிடமாகத் திகழும் மகாலட்சுமியின் குறியீடாகும். மகாலட்சுமியைத் தனது முடியில் தரித்துள்ள குபேரன் சிவசந்நிதிக்குத் தனது உயர்ந்த மங்கலச் சின்னமான **"ஸ்ரீவத்ஸத்தை"** **"திலோத்தமையிடம்"** அளித்து அவளை வடக்குத் திசையில் நிறுத்தியுள்ளான்.

ஈசான திசைக்காவலனான ஈசானன் தண்ணீர்மயமானவன். எங்கும் எதிலும் நிறைந்திருப்பவன். அவனுடைய மங்கலச் சின்னமாகப் **"பூரணகும்பம்"** விளங்குகின்றது. இதை அவன் சிவசந்நிதிக்கு அளித்துள்ளான். இதைத் தாங்கியவாறு **"ஊர்வசி"** ஈசான திசையிலுள்ளாள்.

கயிலாயத்தில் இவர்கள் இவ்வாறு இருப்பதையொட்டி நித்திய பூஜைகளில் அஷ்ட மங்கலங்களை ஏந்திய அஷ்ட ரம்பையர்களைப் போற்றுகின்றோம்.

இந்த மங்கலச் சின்னங்கள் கலையழகுமிக்கதாக இருப்பதுடன் தன்னைக் காண்பவர்களுக்குப் புண்ணியத்தையும் அளிக்கின்றன.

நடைமுறையிலுள்ள பூஜாபத்ததி நூல்களில் அஷ்டமங்கலங்களை ஏந்தும் அஷ்ட ரம்பையர்களைப் பற்றி வேறுவிதமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதன்படி 1. **திலோத்தமை** இரட்டை சாமரங்களையும், 2. **ரம்பை** இடபத்தையும், 3. **மேனகை** பூர்ணகும்பத்தையும், 4. **ஊர்வசி** கண்ணாடியையும், 5. **காமவர்த்தினி** தீபத்தையும், 6. **காமுகி** சங்கையும், 7. **சுந்தரி** சுவஸ்திகத்தையும், 8. **சுமுகி** ஸ்ரீவத்ஸத்தையும் ஏந்தியுள்ளனர்.


இந்த அஷ்ட மங்கலங்களுக்கு அதிதேவதைகளாகத் திகழும் தேவதேவியர் எண்மராவர். சாமரத்திற்கு **வாயு-தாரிகா**வும், ரிஷபத்திற்கு **உருத்திரன்-உமா**வும், பூரண கும்பத்திற்கு **ஜலேசன்-ஜான்ஹவி**யும், கண்ணாடிக்கு **சூரியன்-உஷா**வும், தீபத்திற்கு **ஜ்வாலன்-ஸ்வாகாதேவி**யும் சங்கிற்கு **சந்திரன்-ரோகிணி**யும், சுவஸ்திகத்திற்கு **ருத்திரன்-ரௌத்திரி**யும், ஸ்ரீவத்ஸத்திற்கு **விஷ்ணு-லட்சுமி**யும் அதிதேவதைகளாகத் திகழ்கின்றனர்.

❈ ஆதியில் சிவபெருமானுக்கு மட்டுமே அஷ்ட மங்கலங்கள் கூறும் வழக்கம் இருந்தது. காலப் போக்கில் அனைத்துக் கடவுளருக்கும் தனித்தனியாக அஷ்ட மங்கலங்களைக் கூறும் வழக்கமும் வந்துவிட்டது. இதைப் பல பூஜாபத்ததி நூல்களில் காண்கிறோம்.

❈ சிவாலயத்தில் நடைபெறும் பெருந்திருவிழாவின் போது ஏற்றப்படும் கொடித்துணியில் இடபமும் அதைச்சுற்றி அஷ்ட மங்கலங்களும் வரையப்படுகின்றன.

❈ கும்பாபிஷேகம் முதலிய பெருவிழா வைபவங்களில் வேதிகையைச் சுற்றி அஷ்ட மங்கலங்களை ஏந்திய அஷ்ட ரம்பையர் திருவுருவங்களை நிலைப்படுத்திப் பூசிக்கின்றனர்.

அஷ்டாயுதங்கள்



சிவபெருமான் அனந்தகோடி கரங்களைக் கொண்டவராகவும் அவற்றில் அனந்தகோடி ஆயுதங்களை ஏந்தியவராகவும் போற்றப்படுகின்றார். அவருடைய ஆயுதங்களில் உயர்ந்தது பாசுபத அஸ்திரமாகும். தெய்வங்களை வணங்குவதைப் போலவே தெய்வங்கள் ஏந்தும் ஆயுதங்களையும் வணங்குகின்றோம். தெய்வங்களைச் சுற்றிலும் பரிவாரங்கள் இருப்பதைப் போலவே இந்த ஆயுதங்களைச் சுற்றிலும் ஆயுதங்கள் பரிவாரங்களாக உள்ளன. சிவபெருமானின் திவ்ய அஸ்திரமான பாசுபதாஸ்திரத்தைச் சுற்றிலும் எட்டு ஆயுதங்கள் உள்ளன. இவை அஷ்டாயுதங்கள் என்று போற்றப்படுகின்றன. இவை பரசு (மழு), வஜ்ரம், கத்தி, பினாகம் (வில்), நாராசம் (தாழ்ப்பாள்), மணிபாசம், அங்குசம் எனும் எட்டாகும். இவை அனைத்தும் சேர்ந்ததே பாசுபதமாகும். சிவபெருமானைத் தேவாரம் படையிலங்கு எண்கரத்தான் என்று போற்றுகிறது.

சிவபெருமானுக்குரிய பஞ்சாவரண பூசையில் திக்பாலகர்களின் ஆயுதங்களான 1) வஜ்ரம், 2) சக்தி, 3) தண்டம், 4) கத்தி, 5) பாசம், 6) கொடி, 7) கதை, 8) சூலம் ஆகியவற்றுடன் திருமாலின் சக்கரத்தையும், பிரம்மனின் தாமரையையும் சேர்த்துப் பத்து ஆயுதங்கள் பூசிக்கப்படுகின்றன. சிவபெருமானின் அஷ்டாடத பீடத்தில் எட்டாவதான அஸ்திர பதத்தில் 1) வஜ்ஜிரம், 2) மழு, 3) அம்புகள், 4) கத்தி, 5) பாசம், 6) அங்குசம், 7) பினாகம், 8) சூலம் ஆகிய அஷ்டாயுதங்கள் அமைந்துள்ளன.

எண்தோள் எம்பெருமான்

சிவபெருமான் எட்டு கரங்களையும், அதற்கேற்ப எட்டு தோள்களையும் உடையவர். வலிமையான இந்த தோள்களின் பெருமையால் அவர் "அஷ்டபாகு" என்று அழைக்கப்படுகின்றார். திருமங்கையாழ்வார் திவ்யப் பிரபந்தத்துள், **"இருக்கிலங்கு திருவாய் எண்தோள் ஈசன்"** என்று சிவபெருமானை மங்களாசாசனம் செய்கின்றார்.

சுந்தரர், **"எயிலார் பொக்கம் எரித்த எண்தோள் முக்கண் இறைவன்"** என்றும், அப்பரடிகள், **"எண்தோள் வீசிநின்றாகும் பிரான்"** என்றும் குறிக்கின்றனர். திருவாலங்காட்டில் உள்ள ஊர்த்துவ தாண்டவர், வழுவூர் கஜசம்ஹாரார் முதலிய திருவுருவங்களில் சிவபெருமான் எண்தோள் வீசி நின்றாடும் பிரானாகவே விளங்குகின்றார்.

அஷ்டகொடி உற்சவம்
(இந்திரவிழா)

வசந்த காலத்தின் ஆரம்பத்தில் இந்திரன் தனது பரிவாரங்களாகிய தேவர்களும், தேவப் பெண்களும் சூழப் பூமிக்கு வந்து அனைத்து ஆலயங்களின் உச்சியிலும் கொடிகளை ஏற்றிச் சிறப்பு வழிபாடுகளைச் செய்கின்றான் என்று புராணங்கள் கூறுகின்றன. இதையொட்டி ஆலயக் கலசங்களில் மங்கலச் சின்னங்கள் பொறித்த கொடிகளை ஏற்றுவது வழக்கமாகும். இதற்கு **"இந்திரத்வஜவிழா"** என்பது பெயர். காலப்போக்கில் இந்த முறை கைவிடப்பட்டுவிட்டது. இந்திரனும் அவனுடைய திசையதிபர்களும் சிவாலயத்தின் எட்டு திசைகளிலும் தமது கொடியை ஏற்றி செய்த விழா முறை கடைப்பிடிக்கப்பட்டது. எட்டு திசைகளிலும் கொடியேற்றிச் செய்யப்படும் விழாவாதலின் இது **"அஷ்ட கொடி உற்சவம்"** எனப்பட்டது.


மதுரை, திருவானைக்கா, திருவிடைமருதூர் முதலிய பெரிய சிவாலயங்களில் வைகாசி மாதம் அஷ்ட கொடி உற்சவம் கொண்டாடப்படுகின்றது. இதற்காக ஆலயத்தின் எட்டுதிக்கிலும் சிறுமேடைகளும் அவற்றில் கொடி மரங்களும் அமைக்கப்படுகின்றன. இதில் ஏற்றப்படும் கொடிகளில் எண்திசைக் காவலர்களின் சின்னங்களான யானை, ஆடு, எருமை, வேதாளம், மகரம், மான், குதிரை, இடபம் ஆகியவை இடம்பெறுகின்றன. சில இடங்களில் இந்த எட்டு சின்னங்களுக்குப் பதிலாக எல்லாவற்றிலுமே இடபம் அமைக்கப்படுவதையும் காண்கிறோம்.

அஷ்டகொடி விழாவின்போது எட்டு திசைகளிலும் கொடி ஏற்றப்பட்டு சுவாமி அம்பிகை, விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசுவரர் ஆகிய ஐம்பெரும் மூர்த்திகளும் கொடிகள் அமைந்த பிராகாரத்தில் பவனி வருவர். அவர்கள் ஒவ்வொரு கொடிக்கு முன்பாக வரும் போதும் அந்தத் திசைக்கு உரிய ராகம், தாளம், நிருத்தியம், பேரிகை, மந்திரபுஷ்பம், திருமுறைப் பாடல் முதலிய உபசாரங்கள் செய்யப்படும். இது ஆடலுக்கும், பாடலுக்கும் முதன்மை தரும் விழாவாகும்.

சில தலங்களில் இறைவன் நிருத்தம் ஆடிய படியே பிரகாரத்தை வலம் வரும் போது அதற்கேற்ப இன்னி சைக் கருவிகள் முழக்கப்படும். இந்த விழாவை **"வசந்தம்"** என்றும் அழைக்கின்றனர்.

❀ திருவாரூரில் முன்னாளில் நடைபெற்ற வசந்த விழாவில் எட்டுத் திக்கிலும் எட்டு கொடிகள் ஏற்றி விழா நடத்தப்பட்டது. இப்போது, கிழக்கில் யானைக் கொடியும் அக்னி திக்கில் ஆட்டுக் கொடியும் மட்டுமே நிலையாக ஏற்றப்படுகின்றன.

❀ எட்டு கொடி உற்சவம் இந்திரனும் தேவர்களும் செய்யும் விழாவாதலின் இதில் சகல வாத்தியங்களும் முழக்கப்பட்டு ஆடல், பாடல், நிருத்தம், நாட்டியம் ஆகிய அனைத்தும் நடைபெறுகின்றன.



❀ திருவானைக்காவில் அஷ்டகொடிவிழாவைப் பிரம்மன் நடத்துகின்றான் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்த விழாவில் அம்பிகை ஆணுடை தரித்தும் பெருமான் அம்பிகை வேடம் தரித்தும் உலா வந்ததாகக் கூறப்படுகிறது. அதையொட்டி இப்போதும் விழாவில் சோமாஸ்கந்தருக்குப் பெண் அலங்காரமும் அம்மனுக்கு ஆண் அலங்காரமும் செய்யப்படுகின்றன.

❀ சில பூஜாபத்ததி நூல்களில் எட்டுத்திக்கிலும் ஏற்றப்படும் எட்டுக் கொடிகளில் அஷ்டதிக்கஜங்களின் திருவுருவங்களை அமைக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளன. இதன்படி யானை உருவம் பொறித்த கொடிகள் ஏற்றப்படுகின்றன. இக்கொடிகள் முறையே மஞ்சள், சிவப்பு, நீலம், புகைநிறம், வெள்ளை, கலப்புநிறங்கள், பொன், பளிங்கு ஆகிய வண்ணங்களைக் கொண்டுள்ளன. சில சமயங்களில் வெள்ளைக் கொடியில் மேலே குறித்த வண்ணங்களைக் கொண்ட யானைகளின் திருவுருவங்களை எழுதியும் கொடியேற்றுகின்றனர்.

சிவபதாகை (அஷ்டகொடி)

சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலாயத்தின் எட்டு திசைகளிலும் எண்மர் கொடிபிடித்து அவருடைய அளவற்ற வெற்றியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் **'சிவபதாகை'**த் தேவர்கள் என்று போற்றப்படுகின்றனர். தலையில் சடாமகுடம் புனைந்து கொன்றைமாலையுடன் இளம் பிறையை அணிந்துள்ளனர். சிவந்தநிறம் கொண்ட இவர்கள் சூலம் ஏந்தியிருப்பதுடன் முன்னிருகரங்களைக் குவித்துச் சிவபெருமானை அஞ்சலி செய்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஏந்தியுள்ள கொடிகள் முறையே


1) பிரசாந்த பதாகை 2) பூதசஞ்சீவ பதாகை 3) சிசிர பதாகை 4) அமிர்தசஞ்ஜீவினி பதாகை 5) பர்ஜன்ய பதாகை 6) நாத பதாகை 7) ஜயந்த பதாகை 8) ஸ்ரீப்ரத பதாகை

என்று பெயர் பெறுகின்றன. இவற்றையே சிவாலயத்தின் எட்டு திசைகளிலும் ஏற்றி அஷ்டபதாகை உற்சவம் கொண்டாடவேண்டுமென்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன.

❈ கும்பாபிஷேகத்தின்போது அமைக்கப்படும் யாகசாலையின் நான்கு தோரண வாயில்களிலும் வாயிலுக்கு இருவர் வீதம் இந்த எண்மர் பூசிக்கப்படுகின்றனர். இவர்களைத் தவிர **1. குமுதன், 2. குமுதாட்சன், 3. வாமனன், 4. புண்டரீகாட்சன், 5. சர்ப்பநேத்திரன், 6. சங்குகர்ணன், 7. ஸுப்ரதிஷ்டன், 8. ஸுமுகன்** என்ற எட்டு துவஜத் தேவர்களும் தோரண வாயிலில் பூசிக்கப்படுவதைக் காண்கிறோம்.

குறிப்பு : துவஜம் என்பது பெரிய அளவிலான கொடி. பதாகை என்பது சிறிய அளவுள்ள கொடி.

சிவபூசையில் அஷ்டதிக்கஜங்கள்



❈ **மதுரை ஸ்ரீ விமானத்தைத் தாங்கும் யானைகள்**

உலகத்தைப் பாதாளத்தில் ஆமை வடிவான ஆதாரசக்தியும் அதன் மீது எட்டுத்திசைகளில் இருந்து எட்டு யானைகளும், எட்டு பாம்புகளும் தாங்குவதாகப் புராணங்கள் கூறுகின்றன.

இந்த எட்டு யானைகள் அஷ்டதிக்கஜங்கள் என்று போற்றப்படுகின்றன. சிவபெருமானுக்குரிய அஷ்டவர்க்காசனத்தில் இந்த எட்டு யானைகளும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவை தன் மனைவியரான பெண் யானைகளுடன் சிவபூசையில் ஈடுபட்டுள்ளன. இவற்றின் பெயரால் சிவபெருமான், ஐராவதேசுவரர், புண்டரீகர், வாமனேசுவரர், குமுதேசுவர் என்று பலவாறு அழைக்கப்படுகின்றார்.

இந்திர பூசையான அஷ்டகொடி உற்சவத்தில் எட்டுயானைகளின் உருவங்கள் எழுதிய எட்டு கொடிகளைச் சிவாலயத்தின் எட்டுதிக்கிலும் ஏற்ற வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. (பார்க்க முன்பக்கம்)

மதுரையில் சோமசுந்தரருக்கு இந்திரன் தேவேந்திர உலகத்திலிருந்து யானைகள் தாங்கும் பெரிய விமானத்தைக் கொண்டுவந்து அமைத்தான் என்று புராணங்கள் கூறுகின்றன. இதையொட்டி எட்டு யானைகள் கருவறையைத் தாங்குவதுபோல அமைக்கப்பட்டுள்ளன. அளவில் மிகப் பெரியதாக அமைக்கப்பட்டிருக்கும். இந்த யானைகள் கலையழகு மிக்கதாகும்.

இதைப்போன்றே கோவைமாவட்டம் காரமடை நஞ்சுண்டேசுவரர் ஆலயத்திலும் எட்டு யானைகள் தாங்குவதுபோல் கருவறை அமைக்கப்பட்டுள்ளது. கோவை பேரூர் பட்டீச்சரத்தில் சுவாமியின் விமானத்தின் உச்சித்தளத்தை எட்டுயானைகள் தாங்குவது போல் அமைத்துள்ளனர்.

கீழ்க்காணும் பட்டியலில் திசையானைகள் அவற்றின் மனைவியரான பெண்யானைகள் ஆகியவற்றின் பெயர்களைக் காணலாம்.

1. ஐராவதம்	**- அப்பிரமை**	**5. அஞ்சனம்**	**- தாமிரபரணி**
2. புண்டரீகம்	**- கபிலை**	**6. புஷ்பதந்தம்**	**- சுபதந்தி**
3. வாமனம்	**- பிங்களை**	**7. சார்வபௌமம்**	**- அங்கனை**
4. குமுதம்	**- அனுபமை**	**8. சுப்ரதீபம்**	**- அஞ்சனாவதி**

காஞ்சீபுரத்தில் எட்டுயானைகளும் பூசித்த தலம் ஐராவதேசம் என்று அழைக்கப்படுகின்றது. திருமுறைகளில் பல இடங்களில் ஆண் யானையும் பெண்யானையும் சிவவழிபாடு செய்தது குறிக்கப்பட்டுள்ளது.

அஷ்ட பந்தனம்

ஆலயங்களில் நடைபெறும் பெருஞ்சாந்தி விழாவான கும்பாபிஷேகத்தின் முதன்மைச் சடங்குகளில் ஒன்று அஷ்டபந்தனம் சாத்துதல் ஆகும். கருவறையிலும், பிராகாரங்களிலும் இறையுருவங்களை அமைப்பதற்கான மேடை கருங்கல்லால் அமைக்கப்படுகிறது. இது மகாபீடம் என்று அழைக்கப்படும். இதில் பீட சக்திகள் பூசிக்கப்படுகின்றனர். இதில் இறையுருவத்தைப் பதிக்கப்போதுமான பள்ளம் வெட்டப்பட்டு அதன் நடுவில் யந்திரம், நவரத்தினம், பாதரசம், பஞ்சலோகத் தகடுகள் முதலியவற்றை வைக்கவும் இடம் செய்திருப்பர்.

கும்பாபிஷேகத்திற்கு முதல் நாளில் நல்ல வேளையில் யந்திரம், நவரத்தினம் முதலியவற்றை பீடத்தில் இட்ட பின் இறையுருவத்தை இதன் மீது நிலைப்படுத்தித் திரிபந்தனத்தால் (சிமெண்ட், வாழைப் பழம், வெல்லம் ஆகிய மூன்றும் சேர்ந்த கலவை) கெட்டிப் படுத்துவர். அதன் பிறகு இறையுருவத்தையும் பீடத்தையும் இணைக்கும் இடைவெளியை அடைக்க, மந்திரங்கள் கூறிக் கலக்கப்பட்ட கெட்டியான கலவையைச் சாத்தும் நிகழ்ச்சி நடைபெறும்.

இந்தக் கலவையைத் திருமருந்து என்று கூறுகின்றனர். இதனால் இந்நிகழ்ச்சி மருந்து சாத்துதல் என்று அழைக்கப்படுகிறது. எட்டு மருந்துப் பொருட்களை இடித்து, கலக்கி, வெண்ணையுடன் உருக்கிச் சேர்க்கப் பட்டதாதலின் இந்த மருந்து **"அஷ்டபந்தனம்"** என்று அழைக்கப்படுகின்றது.

இதனைச் சித்தர்கள் **"எண்கட்டு மருந்து"** என அழைக்கின்றனர். இதில் கலந்துள்ள எட்டு பொருட்கள் முறையே 1) சுக்காங்கல், 2) கொம்பரக்கு, 3) சாதிலிங்கம், 4) செம்பஞ்சு, 5) தேன்மெழுகு, 6) எருமைவெண்ணெய், 7) குங்கிலியம், 8) (நல்) காவி என்பனவாகும். இவற்றைப் பொடிசெய்து, சலித்து, கலக்கி இளஞ் சூடாக்கி, வெண்ணெயுடன் இடித்துத் தயாரிக்கின்றனர்.

இது பன்னிரண்டு ஆண்டுகள் வரை இறையாற்றலை இறையுருவத்தில் தேக்கிவைக்கும் என நம்பப் படுகின்றது. இந்த மருந்துப்பொருள் இளகிப் பயனற்றுவிட்டால் மீண்டும் சார்த்திக் குடமுழுக்கு அல்லது சாந்தி செய்விக்க வேண்டும்.

இறையுருவங்களுக்கு (ரஜித) வெள்ளித்தகட்டாலும் (சுவர்ண) தங்கத்தகட்டாலும் பந்தனம் செய்தாலும் அதனடியில் இந்த அஷ்டபந்தனம் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பது விதியாகும்.

❁ மேலே குறிக்கப்பட்ட எட்டுப் பொருளுக்கும் உரிய தேவதைகளாக எட்டு சக்திகள் உள்ளனர். இவர்கள் பந்தனா சக்திகள் என்று அழைக்கப்படுகின்றனர். இதன்படி, சுக்கான் பொடிக்கு - விருக்ஷாக்ஷினியும்; குங்கிலியத்திற்கு - வீரபத்திரியும்; கொம்பரக்கிற்கு - கர்ஷிணியும்; தேன்மெழுகிற்கு - இந்துமதியும்; காவிக்கு - மாலினியும்; செம்பஞ்சுக்கு - மாதவியும்; எருமை வெண்ணைக்கு - ரமணியும்; ஜாதிலிங்கத்திற்கு - வாமனியும் சக்திகளாவர். இவர்களுடன் அஷ்ட பந்தன மருந்தை இடிக்கும் உரலில் பிரம்மாவையும், உலக்கையில் விஷ்ணுவையும் நிலைப் படுத்திப் பூசை செய்து மேற்கண்ட பொருட்களை இடித்துக் கலக்கி அஷ்ட பந்தன மருந்தைத் தயாரிக்கின்றனர்.

அஷ்டகந்தம்

சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தபின் அவர் திருமேனியில் வாசனை வீசும் பொருட்களான கோரோசனை சந்தனம், ஜவ்வாது முதலான பொருட்களைப் பூசுவர். வாசனைப் பொருட்களுக்குக் கந்தம் என்பது பெயர். அனேக வாசனைப் பொருட்கள் இருப்பினும் அவற்றில் எட்டு தனிச்சிறப்பைப் பெறுகின்றன. இவற்றின் கலவைக்கு அஷ்ட கந்தம் என்பது பெயர். இது 1). அகில், 2). செஞ்சந்தனம், 3). பச்சை கற்பூரம், 4). குங்குமப்பூ, 5). கோரோசனை, 6). கஸ்தூரி, 7). ஜவ்வாது, 8). புனுகு என்பனவாகும். (சில நூல்களில் சந்தனம், அகில், கஸ்தூரி, கற்பூரம், பச்சிலை, குங்குமப்பூ, விளாமிச்சை, கோட்டம் ஆகியவற்றை அஷ்ட கந்தம் எனக் குறித்துள்ளனர்.)

❁ திருக்கழுக்குன்றத்திலுள்ள அருள்மிகு திரிபுர சுந்தரியின் திருவுருவம் அஷ்ட கந்தத்தால் ஆனது. இதனால் தினமும் பாதத்திற்கு மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு ஒருமுறை சந்தனக் கல்லில் மேலே சொன்ன எட்டு பொருட்களையும் இட்டு தங்க ஆணிகள் அடித்த சந்தனக் கட்டையால் அவற்றை அரைத்து அம்பிகையின் திருமேனியில் பூசுகின்றனர்.

❁ காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் கருவறையுள் வீற்றிருக்கும் சோமாஸ்கந்த மூர்த்திக்கும் அஷ்டகந்தம் சார்த்தப்படுகிறது.

அட்டமி வழிபாடு

சிவபெருமானுக்கு எல்லா நாட்களுமே உரியவை என்றாலும் அட்டமி திதி தனிச்சிறப்புடன் போற்றப் படுகின்றது.

முன்நாட்களில் அட்டமியைக் கடைநாளாகக் கொண்டு சிவாலயங்களில் பெருந்திருவிழா கொண் டாடப்பட்டு வந்ததைக் கல்வெட்டுக்களும். தமிழ் வேதமான திருமுறைகளும் கூறுகின்றன.

திருநாவுக்கரசர் கொருக்கை தேவாரத்தில்,

"தீர்த்தமாம் அட்டமி முன் சீருடை, ஏழுநாளும்
கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கை வீரட்டனாரே"

என்று அருளுகின்றார்.

பிரதமை தொடங்கி அட்டமி முடிய எட்டு நாட்கள் விழாக் கொண்டாடப்பட்டதைப் பல்வேறு கல்வெட்டுக் களும் குறிக்கின்றன.

❁ திருஞானசம்பந்தர் சித்திரைமாத அட்டமியில் பதினெண்கணங்களும் கூடி ஆடிப்பாடி மகிழ்வதையும். அவர்களுக்கு உணவிடுதலையும் கண்ணாரக் காண வேண்டும் என்கின்றார். இதனை மயிலைப் பதிகத்தில்.

"பண்ணார் பதினெண் கணங்கள் தம் அட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்று அருளிச் செய்துள்ளார்.

❁ **கார்த்திகை** மாதச் சிறப்பாக அட்டமியில் பைரவரைப் பூசிக்கின்றனர்.

❁ **சிவ**மகா புராணத்தில் அஷ்டமி விரத நோன் பைப் பற்றிய விளக்கம் உள்ளது. நாமாஷ்டமி. லட்ச ணாஷ்டமி முதலான பல அஷ்டமி விரதங்கள் கூறப் பட்டுள்ளன. நாமாஷ்டமியில் நெல்லிக் கனிகளைக் கொண்டு சிவனுக்கு அபிஷேகம் செய்து வழிபடுபவர் கள் எல்லையற்ற இன்பத்தை அடைவர் என்று கூறப் பட்டுள்ளது. ஒவ்வொரு மாதத் தேய்பிறை அஷ்டமியும் தனித்தனி பெயர் பெற்றுள்ளதைப் புராணங்கள் கூறுகின்றன. (இதைப் பட்டியலில் காண்க.)

❁ அஷ்டமி விரதத்திற்குரிய சிவமூர்த்தி தட்சிணாமூர்த்தி ஆவார். மாதங்கள்தோறும் வரும் அஷ்டமியின் பெயர்களைக் காணலாம். இவை பன்னி ரண்டும் நாமாஷ்டமிகள் என்று அழைக்கப்படுகிறது.

மாதம்	- அஷ்டமியின்பெயர்	மாதம்	- அஷ்டமியின்பெயர்	மாதம்	- அஷ்டமியின்பெயர்
சித்திரை	- ஸனாதனாஷ்டமி	ஆவணி	- ஸ்தாணாஷ்டமி	மார்கழி	- சங்கராஷ்டமி
வைகாசி	- சதாசிவஅஷ்டமி	புரட்டாசி	- சம்புஅஷ்டமி	தை	- தேவதேவாஷ்டமி
ஆனி	- பகவத்அஷ்டமி	ஐப்பசி	- ஈசுவரஅஷ்டமி	மாசி	- மகேஸ்வராஷ்டமி
ஆடி	- நீலகண்டஅஷ்டமி	கார்த்திகை	- ருத்திரஅஷ்டமி	பங்குனி	- திரியம்பகாஷ்டமி

ஸ்ரீ கிருஷ்ணர் பெற்ற எட்டுவரங்கள்

உபமன்யு முனிவரிடம் **'எட்டு நாட்கள்'** சிவபெருமானின் மகிமைகளைக் கேட்டுத் தெளிந்தபின் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஒன்பதாம் நாள் சிவதீட்சையும் பாசுபதவிரதமும் எடுத்துக் கொண்டார். பதினாறு மாதங்கள் தொடர்ந்து அந்த விரதத்தைக் கடைப்பிடித்த கிருஷ்ணருக்குச் சிவபார்வதியர் காட்சியளித்தனர். அப்போது கண்ணன் அவர்களிடம் எட்டுவரங்களைக் கேட்டார். இவை இக்காலத்தில் கூட எல்லோருக்கும் வேண்டியதேயாகும். அவையாவன :

1. சிவபெருமானிடத்தில் திடமான பக்திவேண்டும்.
2. மனம் எப்போதும் தர்மத்திலேயே நிலைத்திருக்கவேண்டும்.
3. கடவுளின் அருள் எப்போதும் தமக்குத் துணையிருந்து காக்கவேண்டும்.
4. உடல் நலத்துடன் அதிக பலசாலியாக இருக்கவேண்டும்.
5. எல்லோருக்கும் தலைவனாக இருக்கவேண்டும்.
6. எப்போதும் பகைவர்களை வெற்றி கொள்ளவேண்டும்.
7. மிகுந்த புகழை அடையவேண்டும்.
8. நன்னடத்தை. அறிவு. வீரம் செறிந்த புதல்வர்களைப் பெறவேண்டும் என்பதாகும்.

திருமுறைகூறும் எண்வகைக் கோயில்கள்

திருமுறைகளில் எட்டுவிதமான கோயில்களின் அமைப்புக்கள் குறிக்கப்பட்டுள்ளன. திருநாவுக்கரசுப் பெருந்தகையார்,

பெருக்காறு சடைக் கணிந்த பெருமான் சேரும்
1) பெருங்கோயில் 2) எழுபதினோடு எட்டு மற்றும்
3) கரக்கோயில் கடிபொழில் சூழ் 4) ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய 5) கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபாடேத்தும்
6) இளங்கோயில் 7) மணிக்கோயில் 8) ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே.

என்று இவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். இவற்றின் விளக்கம்.

1. **பெருங்கோயில் :** இது பல சுற்றாலைகளையும் சந்நிதிகளையும் கொண்ட திருக்கோயிலாகும். திருவண்ணாமலை, சிதம்பரம், கீழ்வேளூர், திருவாரூர் முதலிய தலங்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும். திருமுறையில் கீழ்வேளூர் ஆலயம் **"பெருந்திருக்கோயில்"** என்றும், குடவாயில், பெண்ணாடகம் முதலிய தலங்களில் உள்ள ஆலயங்கள் **"பெருங்கோயில்"** என்றும் அழைக்கப் படுகின்றன.

2. **மாடக்கோயில் :** இவ்வகை ஆலயங்கள் தரைக்குமேல் கணிசமான அளவு உயரமுள்ள மேடை மீது அமைந்தவையாகும். தேவாரத்துள் குறிக்கப்பட்டுள்ள **"கடந்தைத் தூங்கானை மாடம்", "ஆக்கூர் தான் தோன்றிமாடம்"** முதலிய ஆலயங்கள் இத்தகையவை ஆகும்.

கோட்செங்கட்சோழன் மாடக்கோயில்களை அமைத்து பெருமை பெற்றான். அவன் சிவபெருமானுக்கு எழுபத்தெட்டு மாடக்கோயில்களை அமைத்தான் என்று **"திருமங்கை ஆழ்வார்"** கூறுகின்றார்.

3. **கரக்கோயில் :** தேர்போன்ற அமைப்பைக் கொண்டவை இந்த வகைக் கோயில்களாகும். இவற்றின் பக்கவாட்டில் சக்கரங்களும் முன்னே இழுத்துச்செல்லும் குதிரைகளும் அமைக்கப்பட்டிருக்கும். கடம்பூரிலுள்ள ஆலயம் கரக்கோயில் வடிவினதாகும். குடந்தை நாகேசுவரர் ஆலய நடராஜ சபாமண்டபம், சிதம்பரம் நடராசர் ஆலயத்திலுள்ள பாண்டி நாயகர் கோயில் என அழைக்கப்படும் முருகப்பெருமான் சந்நிதி முதலியன தேர்வடிவில் உள்ளவைகளாகும். (பாண்டில்-தேர்)



கொகுடிக்கோயில் - கருப்பறியலூர் (தலைஞாயிறு)

4. **ஞாழற்கோயில் :** நீண்ட விசாலமான கோயில்களான இவை நீண்ட சதுர வடிவினதாகும். ஆராய்ச்சியாளர்கள் ஞாழல் மரத்தால் அமைக்கப்பட்டதென்பர்.

5. **கொகுடிக்கோயில் :** இவை மலைபோன்று உயரமாக கட்டப்பட்ட மேடையின்மீது அடுக்கடுக்காக அமைந்துள்ள கோயில்களாகும். தேவாரத்துள் கருப்பறியலூர் ஆலயம் பொருப்பனைய கொகுடிக் கோயில் என்று குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம் கொகுடி என்பது ஒரு முல்லைக்கொடி என்றும் அந்தக்கொடிப் பந்தல் போன்று அமைக்கப்பட்ட கோயில் என்றும் பலர் விளக்கம் எழுதியுள்ளனர்.

6. **இளங்கோயில் :** இவை கருவறையும் முக மண்டபமும் மட்டுமே கொண்ட எளிய வகை ஆலயங்களாகும். முன்னாளில் இத்தகைய ஆலயங்களே அதிகம் இருந்தன. கடம்பூர், மீயச்சூர் முதலிய பலதலங்களில் இளங்கோயில் இருந்ததாகத் தேவாரம் கூறுகிறது. இந்நாளில் காஞ்சியிலுள்ள பிறவாதீச்சுரம் மதங்கேச்சுவரம் முதலியன இவ்வகைக் கோயில்களாகும்.

7. **மணிக்கோயில் :** இது கருவறையைச் சுற்றி மணிகள் கோர்த்தது போல் பல சிற்றாலயங்களை வரிசையாகக் கொண்ட கோயில் என்பர். காஞ்சி கயிலாய நாதர் ஆலயம் இந்த அமைப்பில் உள்ளதாகும். இங்கு கருவறையைச் சுற்றிலும் பிராகாரத்தில் பல சிறு துணை

யாலயங்கள் மணிகோர்த்தது போல் அமைந்துள்ளன. இந்தத்துணை ஆலயங்களைச் சிற்பநூலார் அங்க ஆல யங்கள் என்பர். திருவிசைப்பா பாடல்பெற்ற கோட்டூரில் உள்ள ஆலயம் மணியம்பலம் என்று அழைக்கப்பட் டது. மருகல் ஆலயம் திருமுறையில் மணிக்கோயில் என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆழ்வார் தஞ்சைத் திருமால் ஆலயத்தை மணிக்கோயில் என்று கூறுகின்றார். உரை யாசிரியர்கள் இதனை உருத்திராக்க மணிபோல் உருண் டையான விமானம் கொண்ட கோயில் என்பர்.

8. **ஆலக்கோயில் :** ஆலமரத்தின் கீழ் அமைந்த கோயில் என்பர். பல மண்டபங்களை அடுக்கடுக்காகக் கொண்ட பெருங்கோயில் என்பர் சிலர். சிதம்பரம் நடராசர் ஆலயம். மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் முதலியன இவ்வகையினவாகும். ஆலமரம் அனேக விழுதுகளுடன் நிற்பதுபோல் அனேக தூண் களைக் கொண்ட ஆலயம் எனவும் கூறுவர் தேவாரத் துள் கச்சூர் ஆலயம் "**கச்சூர் ஆலக்கோயில்**" என்று குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். "ஆல" என்ப தற்குப் பரந்திருத்தல் என்பது பொருளாகும்.

காலமும் கலையும் வளரவளரக் கோயில்கள் மேலும். மேலும் பல்வேறு அமைப்புகளைப் பெற்றுக் கொண்டேயிருக்கின்றன.

அஷ்டாங்க ஆலயம்

பல்லவர்கள் ஆதியில் அமைத்த புதிய வகைக் கோயில்களில் ஒன்று அஷ்டாங்க ஆலயமாகும். இதில் மையக் கருவறையோடு இணைந்தவாறு (வாயில் நீங்கலான) ஏழு திசைகளிலும். ஏழு அங்க ஆலயங்கள் அமைக்கப்பட்டி ருப்பதைக் காணலாம். சுற்றிலும் ஏழும் நடுவில் உள்ளதும் ஆக எட்டு ஆலயங்களின் தொகுப்பாக இந்தக் கோயில் அமைகிறது. எட்டு அங்கங்களைக் கொண்டிருப்பதால் இதனை அஷ்டாங்க ஆலயம் என்பர்.

திருவதிகை வீரட்டானேசுவரர் ஆலயம் இவ்வாறு எட்டு அங்கங்களால் அமைந்ததாகும். இதன் மையத்தில் வீரட்டகாசர் எழுந்தருளியுள்ளார். தென் கிழக்கில் நந்திதேவரும். தெற்கில் சதாசிவ மூர்த்தியும், தென்மேற்கில் மகா விஷ்ணுவும். மேற்கில் லிங்கோற்பவரும். வடமேற்கில் ஆறுமுகப் பெருமானும் வடக்கில் பிரம்மதேவனும். வடகிழக்கில் உருத்திர மூர்த்தியும் அமைந்துள்ளனர். இந்த ஏழு அங்க ஆலயங்களுக்கு ஸ்ரீ விமானத்தோடு இணைந்த வகையில் தனித்தனி விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் கலை வளர்ச்சியே காஞ்சி கயிலாயநாதர் கோயில், காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோயில் உத்திரமேரூர் சுந்தரவரதராஜர் கோயில் ஆகியவற்றில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அஷ்டமூர்த்தி மண்டபம்

சிவபெருமானின் எட்டு வீரச்செயல்களை விளக்கும் எட்டு திருமூர்த்தங்களைக் கொண்ட மண்டபம் திருச்செங் காட்டாங்குடி கணபதீச்சுவரர் ஆலயத்தில் உள்ளது. இதனை அஷ்டமூர்த்தி மண்டபம் என்று அழைக்கின்றனர். இதில் 1) புஜங்கலளிதர். 2) கஜசம்ஹாரர். 3) ஊர்த்துவதாண்டவர். 4) காலசம்ஹாரர். 5) கங்காளர். 6) பிட்சாடனர். 7)திரிபுராந்தகர். 8) பைரவர் ஆகிய எட்டு சிவ வடிவங்கள் இடம் பெற்றுள்ளன.

அஷ்டகங்கள்

எட்டு என்பது சிவபெருமானுக்கே உரிய எண்ணாகும். அவருடைய சக்திகள், தோள்கள், பரிவாரங்கள் முதலியன யாவும் எட்டாகவே உள்ளன. அதுபோல அவரை எட்டுப் பாடல்கள் கொண்ட துதிகளால் போற்றுகின் றனர். இதைத்தொடர்ந்து அப்பாடல்களைப் படிப்பதால் உண்டாகும் பலன் ஓரிரண்டு பாக்களால் குறிக்கப்பட்டு கின்றன. இந்நூல்களில் எட்டுக்கும் மேற்பட்ட பாடல்கள் இருப்பினும் இவை அஷ்டகங்கள் என்றே அழைக்கப்படு கின்றன. சிவனைக் குறிக்கும் சிவாஷ்டகம், நந்திதேவர் பெயரில் நந்தியஷ்டகம், வில்வத்தின் பேரில் வில்வாஷ்டகம் போன்ற அனேக அஷ்டகங்கள் சிவ வழிபாட்டில் மிகச்சிறப்புடன் ஓதப்பட்டு வருகின்றன.

அஷ்டாபதகிரி

இமயமலையின் ஒரு பகுதியாகத் திகழ்வது அஷ்டாபத கிரியாகும். கயிலை மலை யாத்திரை மேற்கொள்பவர்கள் இந்த இடத்திற்குச் சென்று வேள்வி, தியானம் முதலியவற்றைச் செய்கின்றனர். எட்டு பதங்களை உடையதால் கயிலை மலைக்கே அஷ்டபதகிரி என்பது பெயராயிற்று. ஜைனர்கள் தமது முதல் தீர்த்தங்கரரான பகவான் ரிஷபதேவர் இந்த இடத்தில் 147 முனிவர்களுடன் பிரதிமா யோகத்தில் மூழ்கி மோட்சம் பெற்றார் என்று கூறுகின்றனர்.

தெய்வங்களின் எண்திருக்கோலங்கள்

சிவபெருமான் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஆன்மா, சூரியன், சந்திரன் எனும் எட்டு பொருட்களாக இருக்கின்றான். இவைகளே உலகிலுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் மூலப் பொருளாகும். பெருமான் இவற்றைக் காப்பதற்காகத் தமது அம்சமாக அஷ்டருத்திரர், அஷ்டபூதர், அஷ்ட பைரவர் என்னும் பலரைத் தோற்றுவித்துள்ளான். அவர்கள் சிவபெருமானை வழிபட்டு அருள்பெற்று உலகினைக் காத்து வருகின்றனர்.


சிவபெருமான் எண்வடிவங்களாக விளங்கி அருள்பாலிப்பதைப் போலவே முருகன், விநாயகர், காளிதேவி, துர்க்கை, மகாலட்சுமி ஆகிய தெய்வங்களும் எட்டு உருவங்களைத் தாங்கி உலகைக் காக்கின்றனர். அவ்வடிவங்களுடன் சிவபூசை செய்து தத்தம் சக்தியைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

விநாயகப் பெருமான் எட்டு வடிவங்கள் தாங்கி வரும்போது 1) ஆதிகணபதி, 2) மகாகணபதி, 3) நடன கணபதி, 4) சத்திகணபதி, 5) வாலைகணபதி, 6) உச்சிஷ்ட கணபதி, 7) உக்ரகணபதி, 8) மூலகணபதி எனப்பெயர் பெறுகின்றார். இந்த எட்டுவடிவங்களுடன் அவர் சிவபூசை புரிகின்றார்.

முருகப்பெருமான் தந்தையைப்போலவே அஷ்ட மூர்த்தங்களாக விளங்கி உலகிற்கு அருள்பாலிக்கின்றார். அந்நிலையில் அவர் 1) கார்த்திகேயன் (சூரியன்), 2) விசாகன் (சந்திரன்), 3) குகன் (ஆன்மா), 4) அசுராந்தகன் (நிலம்), 5) சேனானி (நீர்), 6) ஷண்முகன் (தீ), 7) மயூரவாகனன் (காற்று), 8) சக்திபாணி (ஆகாயம்), என்று அழைக்கப்படுகின்றார்.

மகாலட்சுமி எட்டு வடிவங்கள் கொண்டு அருள்பாலிப்பதுடன் சிவபூசையும் செய்கின்றாள். இவள் எட்டு வடிவங்களுடன் கயிலாயத்தின் எட்டு வாயில்களிலும் வீற்றிருக்கின்றாள். கயிலாயத்தின் மகாவாயில்கள் நான்கும் இவள் பெயரால், ஸ்ரீதுவாரம், லட்சுமித்துவாரம், கீர்த்தித்துவாரம், வாருணித்துவாரம் என்று அழைக்கப்படுகின்றன.

இவளுடைய எட்டு வடிவங்கள் 1) தனலட்சுமி, 2) தான்யலட்சுமி, 3) தைர்யலட்சுமி, 4) சௌரியலட்சுமி, 5) வித்யாலட்சுமி, 6) விஜயலட்சுமி, 7) கீர்த்திலட்சுமி, 8) ராஜ்யலட்சுமி என்பனவாகும். எட்டுலட்சுமிகள் சிவனைப் பூசித்த தலங்கள் 1) ஆரூர், 2) ஸ்ரீவாஞ்சியம், 3) வைகல் மாடக்கோயில், 4) திருக்கோழம்பம், 5) திருநின்றியூர், 6) மாயூரம், 7) திருமருகல், 8) திருப்புகலூர் என்பனவாகும்.



தாருகனை அழிப்பதற்காகச் சிவபெருமானால் படைக்கப்பட்ட பராக்கிரம தேவியே மகாகாளியாவாள். அவள் எட்டு வடிவங்கள் கொண்டு சிவபெருமானைப் போற்றினாள். அவள் வழிபட்ட தலங்கள் மாகாளங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அங்குள்ள இறைவன் மாகாளநாதர் என்று அழைக்கப்படுகின்றார்.

இவளுடைய திருவுருவங்கள் 1) உச்சிஷ்டகாளி, 2) ரணவீரகாளி, 3) சம்ஹாரகாளி, 4) ருத்ரகாளி, 5) சிம்மகாளி, 6) அக்னிகாளி, 7) அதர்வணகாளி, 8) விஜயகாளி என்று அழைக்கப்படுகின்றன. இவ்வடிவுடன் இவள் பூசித்த எட்டு மாகாளங்கள் 1) உஜ்ஜைனிமாகாளம், 2) திருவதிகை, 3) சீர்காழி, 4) திருவெண்காடு, 5) ஸ்ரீஹரதீர்த்தம், 6) கீழ்வேளூர், 7) அம்பர்மாகாளம், 8) இரும்பை மாகாளம் ஆகியனவாகும்.

இதுபோலவே அஷ்டபைரவர், அஷ்டருத்திரர் முதலியோரும் எட்டு தலங்களில் சிவனைப் பூசித்து மகிழ்வதைப் புராணங்களில் காணலாம்.

❀ சிவபூஜா நூல்களில் விநாயகரின் எட்டுத் திருமேனிகளாக 1) விசாலாட்சர், 2) அக்ஷயர், 3) மதவிப்ரமர், 4) உன்மத்தர், 5) லளிதர், 6) பீமர், 7) தீக்ஷ்ணதம்ஷ்ட்ரர், 8) விசுவரூபர் எனும் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

❀ சிதம்பரம் திருவண்ணாமலை காஞ்சீபுரம் முதலிய தலங்களில் சிவாலயத்தின் எட்டுதிக்கிலும் விநாயகர் ஆலயங்கள் அமைந்திருக்கக் காண்கிறோம். திருக்கடவூரில் மாடவீதியில் எட்டு சந்திகளிலும் விநாயகர் வீற்றிருக்கின்றார்.

கயிலாயத் திருமாளிகையின் எண்பெரும் வாயில்கள்

திருக்கயிலாய மலையில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருமாளிகைக்கு எட்டு திசையிலும் எட்டு வாயில்கள் உள்ளன. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளை நோக்கியவாயில்கள் மகாவாயில்கள் என்றும் கோணதிசைகளில் அமைந்தவாயில்கள் துணை வாயில்கள் என்றும் போற்றப்படுகின்றன. இவற்றின் சிறப்பைச் சிவமகாபுராணம் விளக்குகிறது.

கயிலாசத்தின் கிழக்குவாயில் **"ஸ்ரீதுவாரம்"** எனப் பெயர் பெற்றிருக்கின்றது. அந்த கோபுரத்தைத் தாமரை மலர்களைச் சூடிய **"மஹாசித்தன்"** எனும் சிவகண நாதன் காத்து நிற்கின்றான்.

தெற்கு திசை வாயிலுக்கு **"ஸ்ரீலட்சுமித் துவாரம்"** என்பது பெயர். இதனைக் கருத்ததேகம் கொண்ட **"மகாகாயன்"** என்பவன் சூலபாணியாய் இருந்து காவல் புரிகிறான். மேற்கு வாயிலுக்கு **"வாருணம்"** என்பது பெயர். **"நந்தீசுவரரும்"** அவருடைய கணங்களும் அதைக் காத்து நிற்பர். வடக்கு வாயிலுக்குக் **"கீர்த்தித் துவாரம்"** என்பது பெயர். இங்கு **"மகேசன்"** எனும் சிவகணம் காவல் புரிகின்றான்.

தென்கிழக்கு வாயிலான **"சிவநாமபுரத்தில்"** **"ஹ்ரஸ்ஜிஹ்வனும்"**, நிருதி திக்கு வாயிலை **"பீமநாதனும்"**, வாயு திக்கிலுள்ள வாயிலை **"கண்டாகர்ணனும்"** வடகிழக்கு வாயிலை **"உருத்திரமூர்த்தியும்"** அவருடைய கணங்களும் காவல்புரிகின்றனர். வடகிழக்கு வாயிலுக்கு **"ஈசானத்துப்பெருவாயில்"** என்பது பெயராகும்.

கயிலாசத்திற்கு எட்டு வாயில்கள் இருப்பினும் **"ஈசானத்துப் பெருவாயிலையே"** சிவபெருமான் பெரிதும் விரும்புகின்றார். அதன் வழியாகவே வெளியே சென்று உள்ளே வருகின்றார்.

திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை, திருவக்கரை முதலிய தலங்களில் ராஜகோபுரத்திற்கு வடக்கில் அதையொட்டியவாறு பெரியவாயில் இருப்பதைக் காணலாம். இதுவே ஈசானத்துப் பெருவாயில் ஆகும். வடகிழக்கு முனையில் வாயில் அமைக்க முடியாது என்பதால் சற்றுதெற்கில் தள்ளி இந்தவாயிலை அமைத்துள்ளனர். இத்தலங்களில் பெருமான் இதன் வழியாகவே வெளியே சென்று வீதியுலா கண்டபின் உள்ளே திரும்புகின்றார்.

❁ **தி**ல்லை சிதம்பரத்தில் நடராசப்பெருமானும், திருவண்ணாமலையில் அண்ணாமலையாரும் திருவாரூரில் தியாகேசரும் ஈசான வாயில் வழியாகவே வெளி

அஷ்டமகா துவாரபாலகர்கள்



பெரிய சிவாலயத்தின் நான்கு திசைகளிலும் நான்கு பெரிய திருவாயில்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் இரண்டுபேர்வீதம் மொத்தம் எட்டு துவாரபாலகர்கள் உள்ளனர். கிழக்கிலுள்ள கோபுரத்தைத் **தாரகன், வித்யுன்மாலி** என்பவர்களும், தெற்குவாயிலை **ஆட்கொண்டார், உய்யக்கொண்டார்** என்பவர்களும், மேற்குவாயிலை **ஜெயன், விஜயன்** என்பவர்களும், வடக்கு கோபுரத்தில் **டிண்டி, முண்டி** என்பவர்களும் காவல்புரிகின்றனர்.

இவர்கள் சகலஅதிகாரம் படைத்தவர்கள். சிவபெருமானைப் போலவே ஜடாமுடிதரித்து மழு, சூலம், நாகம், கதை முதலியவற்றை ஏந்தியவர்கள். திருவையாறு கோயிலில் தெற்கு வாயிலில் வீற்றிருக்கும் **"ஆட்கொண்டார்"** என்னும் துவாரபாலகர் சிவனாணைப்படி கால சம்ஹாரம் செய்ததாகத் தலபுராணம் கூறுகின்றது.

நான்கு பக்கமும் கோபுரங்களைக் கொண்ட திருச்சுற்றைத் தாண்டி உள்ளேசென்றால் வரும் உட்கோபுரம் ரிஷிகோபுரம் எனப்படும். இங்கு மகாரிஷிகளான பிருங்கியும், மகாகாளரும் காவல் புரிகின்றனர். இந்த வாயிலில்தான் ஞானகுருவான அதிகார நந்தியம்பெருமான் தேவியுடன் குடவரையில் எழுந்தருளியுள்ளார்.

❁ **தி**ருக்கோளக்குடி குடைவரை ஆலயத்தில் இரண்டு முனிவர்கள் துவார பாலகர்களாக அமைக்கப்பட்டுள்ளனர். இந்நாளில் இம்முனிவர்கள் அகத்தியர், புலத்தியர் என்று அழைக்கப்படுகின்றனர்.

அஷ்டபூதங்கள்

சிவனுடைய ஆணையை மேற்கொண்டு உலகின் எட்டு திசைகளையும் எட்டு பூதங்கள் காவல் புரிகின்றன. இவை அஷ்டபூதங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை பத்தினிகள், பக்தர்கள், தருமவழியில் செல்பவர்கள் ஆகியோரைக் காப்பவை. தீமை செய்பவரைத் தண்டிப்பவை. இவை உலகின் எட்டு திசைகளில் வீற்றிருப்பதைப் போலவே சிவபெருமானின் அஷ்ட மூர்த்தங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஆன்மா, சூரியன் சந்திரன் எனும் எட்டு பொருட்களிலும் நிறைந்து நின்று அவற்றைக் காக்கின்றன. இப்பூதங்கள் ஜடா மண்டலத்துடன் கம்பீரமாகத் தண்டாயுதம் ஏந்தி அபய முத்திரையுடன் விளங்குகின்றன.

ஆகமநூல்களில், இந்த பூதங்களைப் பற்றிய செய்திகளைக் காண்கிறோம் இதன்படி வெண்மையான **"சம்வர்த்தனன்"** என்ற பூதம் கிழக்கிலும், பொன் வண்ணம் கொண்ட **"உன்மத்தன்"** தென்கிழக்கிலும்; கருப்பு நிறமான **"குண்டோதரன்"** தெற்கிலும்; சிவப்பு நிறம் கொண்ட **"தீர்க்ககாயன்"** தென்மேற்கிலும்; பச்சை வண்ணத்தினனான **"ஹ்ரஸ்வபாதன்"** மேற்கிலும்; புகை நிறத்தினனான **"சிங்கரூபன்"** வடமேற்கிலும்; கருஞ் சிவப்பு நிறமான **"கஜமுகன்"** வடக்கிலும்; நீலநிற வண்ணத்தினனான **"ப்ரியம்முகன்"** வடகிழக்கிலும் காவல்புரிகின்றனர்.

சிவபெருமானின் அஷ்டாஷ்ட வர்க்காசனத்தில் இந்த எட்டு பூதங்கள், எட்டு திசைகளிலும் வீற்றிருக்கின் றனர்.



அஷ்டமூர்த்தித் தலங்களில் அந்நாளில் அஷ்ட பூதங்களுக்கான கோயில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்நாளில் ஆகாயத்தலமான சிதம்பரத்திலும் அக்கினித் தலமான திருவண்ணாமலையிலும் பூதர்களுக்கான திருக் கோயில்களைக் காணலாம். இந்நாளில் இவற்றின் பெயர்கள். மாறியுள்ளன.

திருவண்ணாமலையில் உள்ள ஆலயம் பூதநாராயணர் கோயிலென்றும், சிதம்பரத்தில் உள்ள ஆலயம் நரமுக விநாயகர் ஆலயமென்றும் வழங்குகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

❀ சில சிவாலயங்களில் கொடிமரத்திற்கு முன்பாக **"சம்வர்த்தனன்"** என்னும் பூதர் தலையில் விபூதி மடலுடன் இருப்பதைக் காணலாம்.

❀ திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தின் நெடியமதிலின் வடகிழக்கு முனையின் மேல் அமர்ந்துள்ள பூதன் தனிச்சிறப்புடன் வழிபடப்படுகின்றார்.

எண்பெரும் புகைக்கொடிகள்

பாதாள உலகின் எட்டுபக்கங்களிலும் எட்டு அக்னிகள் நீறுபூத்த நெருப்பாக உள்ளன. இவை உலகை அழிக்க வல்ல பேராற்றல் படைத்தவை என்றாலும் சிவனருளால் ஒடுங்கியுள்ளன. உலகில் தீமைகள் அதிகரிக்கும்போது இதிலிருந்து புகை எழுந்து விண்ணை அடையும். இந்தப் புகை பார்ப்பதற்குக் கொடிபோல எழும்பிச் செல்வதால் இது புகைக்கொடி என்று அழைக்கப்படுகிறது. இதனை வடமொழியில் **"தூமகேது"** என்பர்.

யுகத்தின் இறுதியில் இந்த புகைக் கொடி மெல்லியதாக வெளிவரும். இதிலிருந்து படிப்படியாக அக்கினி எழும். இவை விண்மண்டலத்தில் பரந்து அங்குள்ள அனைத்தையும் எரிக்கும். பிறகு அங்கிருந்து அக்னி மழையாகப் பூமியின்மீது பொழியும். அந்நெருப்பு மழையில் பெருமான் அதிரவீசி நடனமாடுவார். அந்தத் தீ மழையே அவருக்குத் திருமஞ்சனமாகும். சிவபெருமான் இந்தத் தீயினில் உகந்தாடுவதே **"அக்னிதாண்டவம்"** எனப்படும். இதனை ஊழித்தீ உவந்தாடல் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

நீறுபூத்த நெருப்பாக உள்ள எட்டு அக்னிகளின் பெயர்களைத் தக்கயாகப் பரணி மூலம் அறிகிறோம். இப்பெயர்களை எட்டு புகைக் கொடிகளான தூமகேதுவின் பெயர்களாகவும் குறிக்கின்றனர். இவை 1) அவீசி, 2) கூர்மி, 3) அவ்வியக்தி, 4) .... 5) அராளகேசி, 6) மிசிரகேசி, 7) விசுவரூபி, 8) க்ஷாத்ரி என்பனவாகும். (இதில் 4-வது பெயர் சுவடியில் செல்லரித்துவிட்டதால் அறிய முடியவில்லை) ஊழிக்காலத் திருமஞ்சனமாக விளங்கும் இந்த எட்டுப் புகைகளும் தேவாரத்துள் **"புகை எட்டு"** என்று குறிக்கப்பட்டுள்ளன.

அஷ்டாஷ்ட திவ்ய ஆசனம்

சிவபெருமான் வீற்றிருக்கும் ஆசனங்களில் ஒன்று அஷ்டாஷ்டவர்க்க ஆசனமாகும். இதில் எட்டு எட்டாக அமைந்த எட்டு திருவுருவங்கள் சிவபெருமான் வீற்றிருக்கும் மகாபத்மாசனத்தைத் தாங்குகின்றன. இவை முறையே 1. அஷ்டமகாநாகங்கள். 2. அஷ்டதிக்கஜங்கள் 3. அஷ்டகுலபர்வதங்கள் 4. அஷ்டசிங்கங்கள் 5. அஷ்டவிருட்சங்கள் 6. அஷ்ட திக்பாலகர்கள் 7. அஷ்ட அப்சரஸ்கள் 8. அஷ்ட பூதங்கள் என்பனவாகும்.

பெரிய சிவாலயங்களில் கல் திருவுருவமாக இந்த அஷ்ட வர்க்க அலங்கார ஆசனம் அமைந்திருப்பதைக் காண்கிறோம். அலங்கார மண்டபத்தின் மையத்தில் அமையும் இந்த கல் ஆசனம் மிகுந்த கலைச் சிறப்புமிக்கதாக விளங்குகிறது. இந்த ஆசனத்தைப் பெரிய ஆமை தாங்குவது போன்று அமைக்கின்றனர். அதையொட்டி இந்த ஆசனம் இருக்கும் மண்டபங்கள் ஆமைமண்டபம் என்று அழைக்கப்படுகின்றன. திருக்கழுக்குன்றம், திருச்செங்கோடு, காஞ்சீபுரம் (காமாட்சியம்மன் கோயில்) முதலிய தலங்களில் இத்தகைய அலங்கார ஆசனத்தைக் காணலாம். திருக்கழுக்குன்றத்தில் இந்தக் கலையழகு மிக்க ஆசனம் உள்ள மண்டபம் ஆமை மண்டபம் என்றழைக்கப்படுகிறது.

எட்டு வர்க்கங்கள் முழுமையாக இல்லாவிட்டாலும் ஐந்தாறுவர்க்கங்களாவது அலங்காராசனத்தில் அமைந்துள்ளதை அனேக இடங்களில் காண்கிறோம். இவற்றிலுள்ள திருவுருவங்களின் பெயர்கள்.

1. அஷ்ட மாநாகங்கள்	1 அனந்தன் 5 தட்சன்	2 பத்மன் 6 சங்கபாலன்	3. வாசுகி 7 கார்க்கோடகன்	4 மகாபத்மன் 8 குளிகன்
2. அஷ்ட திக்கஜங்கள்	1 ஐராவதம் 5 வாமனம்	2 அஞ்சனம் 6 சார்வபௌமம்	3 புண்டரீகம் 7 குமுதம்	4 புஷ்பதந்தம் 8 சுப்ரதீபம்
3. அஷ்ட குலபர்வதங்கள்	1 இமயம் 5 நிஷதம்	2 மந்திரம் 6 ஹேமகூடம்	3 சுமேரு 7 நீலம்	4 விந்தியம் 8 கந்தமாதனம்
4. அஷ்ட சிங்கங்கள்	1 தர்மம் 5 அதர்மம்	2 ஞானம் 6 அஞ்ஞானம்	3 வைராக்யம் 7 அவைராக்யம்	4 ஐஸ்வர்யம் 8 அனைஸ்வர்யம்
5. அஷ்ட விருட்சங்கள்	1 வில்வம் 5 பலாசம்	2 அரசு 6 மருதம்	3 ஆலம் 7 மாமரம்	4 மாதவி 8 குருந்தம்
6. அஷ்ட திக்பாலகர்கள்	1 இந்திரன் 5 வருணன்	2 அக்னி 6 வாயு	3 யமன் 7 குபேரன்	4 நிருதி 8 ஈசானன்
7. அஷ்ட அப்சரஸ்கள்	1 ரம்பை 5 காமுகி	2 மேனகை 6 காமவர்த்தினி	3 ஊர்வசி 7 சுமுகி	4 திலோத்தமை 8 சுந்தரி
8. அஷ்ட பூதங்கள்	1 சம்வர்த்தனன் 5 ஹ்ரஸ்வபாதன்	2 உன்மத்தன் 6 சிங்கரூபன்	3 குண்டோதரன் 7 கஜமுகன்	4 தீர்க்ககாயன் 8 ப்ரியம்முகன்

❀ சில அலங்கார ஆசனத்தில் எட்டு மலர்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் அஷ்ட லட்சுமிகள் வாசம் புரிகின்றனர் என்று கூறப்படுகிறது. சில அலங்கார ஆசனங்களில் அஷ்டலட்சுமிகளும் இடம் பெற்றுள்ளனர்.

❀ அம்பிகைக்குரிய இத்தகைய ஆசனங்களில் பிராம்மி முதலான அஷ்டமாதர்களும் அமைக்கப்பட்டுள்ளனர்.

❀ தென்மாவட்டங்களில் அமைந்துள்ள கமலாசனம், மகாநாகம் முதலிய உலாவரும் வாகனங்களின் பீடத்தில் இந்த எட்டு திருவுருவங்கள் அமைத்திருப்பதைக் காண்கிறோம்.

❀ சில நூல்களில் அஷ்டகுல பர்வதங்களின் பெயராக 1) மாலியவான் 2) கந்தமாதனம், 3) நிடதம், 4) ஹேமகூடம், 5) இமயம், 6) நீலம், 7) சுவேதம், 8) சக்ரவாளம் ஆகியன குறிக்கப்பட்டுள்ளன.

ஆரூர்ப்பெருமானின் - அஷ்டகணத்தினர்



திருவாரூரில் தியாகராஜர் பவனிவந்தபோது தாம் கண்ட காட்சியை அப்பரடிகள் "அரம்பையரோடு" என்று தொடங்கும் பதிகத்தில் குறித்துள்ளார். இவர்களில் அரம்பையர் வானுலக மங்கையராதலின் அவர்களை விட்டுவிட்டு பிறரை நோக்கினால் அவர்கள் எட்டு கணங்களாகக் காட்சியளிக்கின்றனர். இவர்கள் 1) அருளிப் பாடியார், 2) உரிமையில் தொழுதெழுவார் 3) உருத்திரப் பல்கணத்தார், 4) விரிசடை விரதிகள், 5) அந்தணர், 6) சைவர்கள், 7) பாசுபதர், 8) காபாலிகர் ஆகிய எட்டுகூட்டத்தினராவர். இவர்கள் சிவபெருமான் பவனிவரும் வேளையில் அவருடைய அருளைப் பாடியும், கவரிவீசுதல்; திருச்சின்னம் ஊதுதல், ரிஷபதண்டம் ஏந்துதல் முதலான உரிமைப் பணிகளைச் செய்தும் உடன் வந்தனர். இவர்களுடன் உருத்திரப் பல்கணத்தார்கள் கல்லவடம் இட்டும்; அந்தணர்கள் வேதம் ஓதியும்; சைவர்கள், காபாலிகர், பாசுபதர்கள் பல சேவைகளைச் செய்தும் வீதி உலாவில் வலம் வந்ததை அறிகிறோம்.

சிவபக்தியாளனின் எட்டுச் செயல்கள்

சிறந்த சிவபக்தியாளன் 1) சிவனடியவர்களைச் சிவமாகவே பாவித்து வணங்குதல், 2) தினமும் சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்தல், 3) தினமும் ஆத்மார்த்த சிவபூசை செய்தல், 4) தனது தொண்டுகளைச் சிவார்ப்பணமாகச் செய்தல், 5) சிவசரிதங்களையும் அடியவர் கதைகளையும் காதாரக் கேட்டல், 6) சிவபுராணம் முதலியவற்றைப் பாராயணம் செய்தல், 7) சிவனது திருவடிகளைச் சிந்தையில் இருத்தித் தியானம் செய்தல், 8) சிவாலயங்களுக்கும், சிவனடியார்களுக்கும் உரிய பொருளை கைக்கொள்ளாதிருத்தல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

எட்டு விரதங்கள்

சமயவாழ்வில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளவை விரதங்களாகும். உண்ணாதிருத்தல், உறங்காதிருத்தல், சிவசிந்தனையுடன் பூசை செய்தல், ஆலயவலம் செய்தல், அடியவர்களுக்கு உணவிடல், தானம் செய்தல் முதலியன விரதத்தின் அங்கங்களாகும். சிவபெருமானைக் குறித்து நோற்கப்படும் விரதங்கள் அனேகம் இருந்தாலும் அவற்றுள் எட்டு தனித்த சிறப்பைப் பெறுகின்றன. அஷ்டவிரதங்கள் எனப்படும் இவை 1) சோமவார விரதம் (திங்கட்கிழமை விரதம்), 2) திருவாதிரை விரதம், 3) உமாமகேஸ்வர விரதம், 4) சிவராத்திரி விரதம், 5) கேதாரீஸ்வர விரதம், 6) திருமண விரதம், 7) பாசுபத விரதம், 8) நாமாஷ்டமி விரதம் என்பனவாகும். (நாமாஷ்டமி : பார்க்க பக்கம் - 1528).

அஷ்டாங்க நமஸ்காரம்

நாம் இறைவனை வணங்குவதற்குப் பலவகையான முறைகள் உள்ளன. இவற்றில் ஆண்களுக்கு அஷ்டாங்க நமஸ்காரமும் பெண்களுக்கு பஞ்சாங்க நமஸ்காரமும் கூறப்பட்டுள்ளன. அஷ்டாங்க நமஸ்காரம் என்பது உடலின் எட்டு உறுப்புகளும் நிலத்தில் படுமாறு வீழ்ந்து வணங்குவதாகும். எட்டு உறுப்புக்களாவன தலை, முகவாய், இரண்டு கால்கள், இரண்டு தோள்கள், இரண்டு கைகள் ஆகியனவாகும். அனேக பெரிய ஆலயங்களின் பிராகாரத் தரையில் அடியவர்கள் அஷ்டாங்க நமஸ்காரம் செய்வது போல் சிற்பம் அமைத்திருப்பதுடன் அருகில் அந்த அடியவரின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

❁ கோயிலூர் வேதாந்த மடாலயத்தைத் தோற்றுவித்த குரு முதல்வரான "ஆண்டவர்" சுவாமிகளின் திருவுருவம் கொற்றவாளீசுவரர் ஆலயத்தில் அஷ்டாங்க நமஸ்காரம் செய்யும் கோலத்துடன் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். (இத்தகைய காட்சி வேறெங்கும் இல்லை)

❁ திருநாவுக்கரசர் இறைவனைக் காணும் முயற்சியில் ஒன்றாக அஷ்டாங்க வணக்கம் இருப்பதை குறிப்பிடுகின்றார். அவர் அருளிய லிங்கபுராணக் குறுந்தொகையில் திருமாலும் பிரமனும் எட்டு அங்கமும் நிலத்தில் தோய வீழ்ந்து வணங்காததாலேயே சிவபெருமானுடைய அடியையும் முடியையும் காண முடியாது போயிற்று என்பதை "அட்டமாம் அங்கம் கிடந்தபடி வீழ்ந்திலர்" என்ற தொடரால் குறிக்கின்றார்.

திருமுறைகளில் எட்டும்-சிவபெருமானும்

திருமுறைகளில் சிவபெருமானோடு தொடர்புடைய பல பொருட்கள் எட்டு என்ற எண்ணிக்கையில் கூறப்பட்டிருக்கின்றன. அவருடைய தோள்கள், சூடும்மலர், திருவடிவங்கள், சடைகள் பரந்திருக்கும் திசைகள், மேன்மையான குணங்கள், வீரச் செயல்கள், ஆயுதங்கள் ஆகிய யாவும் எட்டு எட்டாக உள்ளன.

சிவபெருமான் ஆயிரமாயிரம் தோள்களை உடைய பெருஞ்சக்தி கொண்டவன் என்றாலும் அன்பர்கள் அவனை **"எண்தோள்"** பெருமான் என்றே பாடி மகிழ்கின்றனர். திருமுறை ஆசிரியர்கள் **"எண்தோள் முக்கண் எம்மான், "எட்டுக்கொலாம் அவர் தோளிணையாவன", "அட்டமாம் புயம் ஆரூரரே", "எண்தோள் வீசி நின்றாடும் பிரான்"** என்று பலப்படக் குறிக்கின்றனர். சிவபெருமான்; திருவாலங்காட்டு ஊர்த்துவ தாண்டவர்; திருக்கடவூர் காலசம்ஹாரர், திருப்பறியலூர் வீரபத்திரர் முதலிய வீரட்டகாச மூர்த்தங்களில் எண்தோள்களுடன் காட்சியளிக்கின்றார்.

சிவபெருமான் சூடும் மலர்கள் எட்டாகும். இதனை அப்பர் **"எட்டுக்கொலாம் அவர் சூடும் இனமலர்"** என்றும் திருஞானசம்பந்தர் அவனுடைய வீரட்டானங்களின் பெயர்களைக் கூறி அவனுக்கு எட்டு மலர்களைச் சூட்டி வழிபடுவதால் பாவம் தொலையும் என்றும் கூறுகிறனர்.

சிவபெருமான் எட்டுக் கரங்களில் எட்டு ஆயுதங்களை ஏந்துகின்றான். இதனைத் திருமுறை ஆசிரியர்கள், **"படையிலங்கு கரம் எட்டுடையான்"** என்று அருளிச் செய்துள்ளனர். அவன் எண்திசையாய் பரந்து நிற்கின்றான். இதனை **"ஈராய் எட்டுதிசை தானாய்"** என்றும்; **"எட்டுக்கொலாம் திசை ஆக்கின தாமே"** என்றும் குறித்துள்ளனர்.

அவன் நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம், ஆன்மா, சூரியன், சந்திரன் எனும் எட்டு பொருட்களாகி நின்று அருள் பாலிக்கின்றான் என்பது அனேக இடங்களில் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

மேலும், அவன் உயிர்களைத் தேவர், நரகர் முதலான எண் பிறப்புக்களில் செலுத்துகின்றான். அவற்றிற்கு எண் புலங்களைத் தந்து உணர்வைத் தருகின்றான். உயிர்க்கூட்டத்திற்காக எட்டுக் கடல்கள், எட்டு மலைகள், எட்டுத் தீவுகள் ஆகியவற்றை அளித்துள்ளான் என்ற சிவாகமக் கருத்துக்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

மேலும் எட்டுடன் தொடர்புடைய அட்டமி விழா அட்டமாசித்திகள், அட்ட பைரவர், அட்ட கணங்கள், பதினெண்கணங்கள், அஷ்ட வசுக்கள், அஷ்ட பூதங்கள் முதலிய அனேக செய்திகள் தேவாரத்துள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

குறிப்பு : **எண்கடல்களாவன :** 1. உவர்நீர்க்கடல், 2. பாற்கடல், 3. தயிர்க்கடல், 4. நெய்க்கடல், 5. கருப்பஞ்சாற்றுக்கடல், 6. தேன்கடல், 7. நன்னீர்க்கடல், 8. சக்கரவாளகிரியைச் சூழ்ந்துள்ள பெரும்புறக்கடல் ஆகியனவாம். **எண்பிறப்புக்களாவன :** நடைமுறையில் பிறப்புக்கள் ஏழு என்பர். அத்துடன் நரகரைச் சேர்த்து எண்பிறப்பு என்றார். **எண்புலன்களாவன :** 1. தன்மாத்திரை, 2. பூதம், 3. ஞானேந்திரியம், 4. கன்மேந்திரியம், 5. அந்தக்கரணம், 6. குணம், 7. மூலப்பகுதி, 8. புருஷத்தவம் என்பனவாம். இவற்றை எட்டுக்கொத்து என்பர். **எட்டுதீவுகளாவன :** மக்கள் வாழும் தீவுகளான : 1. நாவலந்தீவு, 2. சாவகந்தீவு, 3. குசைத்தீவு, 4. கிரௌஞ்சத்தீவு, 5. சான்மலித்தீவு, 6. கோமேதத்தீவு, 7. புஷ்கரத்தீவு ஆகிய ஏழுடன் தேவர்கள் வாழும் பொன்நிலத்தைச் (சொர்க்கம்) சேர்த்து எட்டு என்பர்.

அஷ்டாவரணம்


ஆவரணம் என்பதற்குச் சுற்றியுள்ள கோட்டை என்பது பொருள். வீரசைவ சமயத்து சைவ நெறியாளருக்கு எட்டு ஆவரணங்கள் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இருக்கும் வரை அவருக்கு எவ்விதத்திலும் கேடு வராது என்று நம்புகின்றனர். இவை 1) திருநீறு (விபூதி), 2) உருத்திராட்சம், 3) ஐந்தெழுத்து, 4) குரு, 5) லிங்கம், 6) சங்கமம், 7) தீர்த்தம், 8) பிரசாதம் என்பனவாகும். வீரசைவர்கள் இவை எட்டையும் ஏற்றுக்கொண்டு கைவிடாதிருக்க வேண்டும்.



இமயவல்லி உடனாய எண்தோள் முக்கண் இறைவன் அருளினால் அன்பர்கள் எல்லா வளங்களும் பெற்று இனிது வாழ்க.



அறவோர்க்கு அளித்தல் அந்தணர் ஓம்பல் துறவெதிர்கோடல்
தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல் ஆகிய நான்கும் இல்லறத்தின் பயன்
- சிலப்பதிகாரம்



விருந்திட்ட ஈசுவரர்

அறங்களில் தலையானது அமுதூட்டுவது ஆகும். உயிர்களின் பசிப்பிணியை நீக்குதலே பெருந்தொண்டு. " அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி " என்பது வள்ளுவர் வாக்கு.

விருந்து என்பதற்கு புதுமை என்பது பொருள். புதுவரவும் ஆகும். இல்லத்திற்கு வருபவர்களை வர வேற்று உபசரித்து உணவிடுவது, விருந்தளித்தல் என்று கூறப்படுகிறது. விருந்தினர்களை உபசரிப்பது தமிழரின் பண்பாடும் நாகரிகமும் ஆகும். திருவள்ளுவர் தமிழ் வேதமான திருக்குறளில் விருந்தளித்தலின் பெருமையை தனி அதிகாரத்தில் கூறியுள்ளார். இல்லறத்தானின் கடமைகளில் ஒன்றாக விருந்தோம் புதல் விதிக்கப்பட்டிருக்கிறது. "செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு" என்பது தமிழ் மறையாகும். "மண்ணினில் பிறந்தார் பெரும்பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்" என்பது அருள் மொழியாகும். சமய வாழ்வில் விருந்தோம்புதலும் அடியவர்களுக்கு அமுதூட்டுதலும் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளன.

சுந்தரர் மீது கொண்ட அன்பால் இறைவன் தாமே மண்மேல் வந்து பல இல்லங்களுக்குச் சென்று இரந்து அவருக்கு விருந்து படைத்தார். அச்சிறப்பால் (இரந்து) விருந்திட்டீசுவரர் என்ற பெயருடன் கச்சூர் ஆலக் கோயிலில் வீற்றிருக்கின்றார். அவர் பெயரால் சிவ மஞ்சரியின் இந்த நாற்பத்தொன்பதாவது மலர் விருந்திட்டீசுவரர் என்ற பெயர் சூடி மலர்ந்து தங்கள் திருக்கரங்களில் தவழ் கிறது.

இதில் விருந்தோம்புதலின் சிறப்பும், இறைவன் அன்பர்களுக்கு விருந்திட்டது, அன்பர்கள் அளித்த விருந்தை இறைவன் அருந்தியது, சிவனடியார்களுக்கு அன்பர்கள் அளித்த விருந்து, சிவாலயங்களில் படைக் கப்படும் திருஅமுதான நிவேதனங்கள், அன்பர்களுக்கு அமுதூட்டும் பணி சிறக்க இறைவன் நெல் மலைகளைத் தந்தது, அறச்சாலைகள், தண்ணீர்ப் பந்தல்கள் ஆகியவற்றின் அரும்பயன் முதலான அனேக செய்திகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன .இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக் கிறோம்.

அன்னபூரணி உடனாய ஞான பூரணேசுவரர் அன்பர்களுக்கு எப்போதும் சுவைமிகுந்த உணவுடன் நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் அருள வேண்டுமென்று அவர்தம் பொற்பாதங்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

-சிவசுந்தரி

விருந்தோம்புதல் - சிந்தனைத் துளிகள்....

ஸ்ரீ துறவிகள் மழைக்காலத்தில் பிட்சைக்கு வருவதில்லை. சாதுர்மாசம் எனப்படும். அந்த (நான்கு மாதவிரதகாலத்தில்) அவர்கள் இருக்குமிடத்திற்கே சென்று உணவளிக்க வேண்டும்.

ஸ்ரீ துறவிகளுக்கும், அன்பர்களுக்கும் அடியவர்களுக்கும் அமுதூட்டும் போது, பழையது, உடலுக்கு ஒவ்வாதது விலக்கப்பட்டது போன்றவற்றை அளிக்கக் கூடாது. அவர்களின் தேவை உடல் நலம் தருவது முதலிய வற்றைக் கருத்திற் கொண்டே அளிக்க வேண்டும்.

ஸ்ரீ எளியவர்களுக்கு அன்னமிடுதல், அன்னம் பாலித்தல் என்றும், அடியவர்களுக்கு உணவிடுதல் அமுதூட்டல் அல்லது அமுது செய்வித்தல் என்றும் துறவியர்க்கு இடுதல் பிக்ஷை என்றும், வைரவ அடியவர்களுக்கு இடுதல் பாவாடம் என்றும், அவரவர் தகுதிக்கேற்ப அன்னமளிப்பது சிறப்புப் பெயரால் குறிக்கப்படுகிறது.

ஸ்ரீ உணவிடும்போது உரக்கப்பேசுதல், ஆரவாரம் செய்தல், கைகளால் பரிமாறுதல், செல்லப் பிராணிகளான பூனை, நாய் முதலியவற்றை அனுமதித்தல், அழுகுரல் கேட்டல் முதலியவை கூடாது.உண்பதற்கு முன்னும் பின்னும் பருக நீர் தர வேண்டும்.

ஸ்ரீ இன்சொல் கூறி உணவிட வேண்டும். முகமலர்ச்சி இன்றியும், பணிவின்றியும் இடப்படும் விருந்து விரும்பத் தகாத உணவாகும். "மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்பார் திருவள்ளுவர்.

ஸ்ரீ விருந்து அளிப்பவனுக்கு வரையறைகள் இருப்பது போலவே விருந்துக்கு வருபவரும் பல நடைமுறைகளைக் கையாள வேண்டும். அகாலத்தில் விருந்துக்குச் செல்லுதல், உணவைக் குறை கூறுதல், இல்லாததைக் கேட்பது முதலியவற்றைச் செய்யக்கூடாது.

அடியவர் பூசையே அரன் பூசை

மாலற நேயம் மலிந்தவர்களான சிவனடியார்களின் வடிவம் சிவபெருமானின் வடிவமேயாகும். அவர்கள் நடமாடும் கோயில் நம்பர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்து பூச்சூட்டி அமுதூட்டி தூபதீபம் காட்டுதல் சிவபூசை எனப்படும். அடியவர்களின் திருவடிகளை விளக்கி பூச்சூட்டி உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தி அமுதூட்டி அர்ச்சிப்பது அடியவர் பூசை எனப்படும். இதுவே மாகேசுவர பூசையாகும்.பெரிய புராணத்தில் அடியவர்களுக்கு அமுதூட்டுவது அடியவர் பூசை என்றே குறிக்கப்பட்டுள்ளது.

இளையான்குடி மாற நாயனார் புராணத்தில், அவர் அடியவர்களை அழைத்து வந்து அவர்களுடைய திருவடிகளை விளக்கிப் பெருத்த அன்பினோடு ஆசனத்தில் அமர்த்தி அர்ச்சித்து நான்கு வகையான உணவினை அறுவகைச் சுவைகளோடு இறைவன் அருளால் உண்க என்று கூறுகிறார். அவர் செய்த அடியார் தொண்டைச் சிறப்பித்து , " சீலமார் பூசை செய்த திருத்தொண்டர்" என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

உணவுப் பறை

தேவர்களுக்கான பூசையின்போதும் நிவேதனத்தின் போதும் மணி ஒலிக்கப்படும். மணி ஒலியைக் கேட்டு அசுரர், பைசாச கணங்கள் அவ்விடத்தை விட்டு அகலுமென்றும் பின்னரே தேவர்கள் வருகை புரிவார்கள் என்றும், பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன. அதுபோன்று அடியவர்களை உணவுண்ண அழைக்கப் பறைகளை முழக்கினர். திருவீழி மிழலையில் திருஞானசம்பந்தர் திருமடத்திலும் திருநாவுக்கரசர் திருமடத்திலும் அடியவர்களை அழைக்கப் பறையொலிக்கப்பட்டதை,,

அல்லார் கண்டத்து அண்டர்பிரான் அருளால் பெற்ற படிக்காசு பல்லார் இயன்ற வளம் பெருகப் பரமனடியார் ஆனார்கள் எல்லாம் எய்தி உண்க வென இரண்டு பொழுதும் பறை நிகழ்த்திச் சொல்லால் சாற்றிச் சோறிட்டார்....எனவரும் தொடர்களால் பெரியபுராணம் கூறுகிறது.

சிறுத்தொண்டர் வைரவருக்கு அமுதூட்டும் ஐதீக விழாவின் போது புராணம் வாசிக்கப்படுவதுடன் ஒற்றைத் தட்டுடன் பறையடிப்பதும் இங்கு எண்ணத் தக்கதாகும்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் பந்திக்கட்டில் அமுதூட்டும் வேளையில் சேகண்டி முழக்கப்பட்டதையும் அதன் நாதம் உணவுண்ண வருக வருக என்று அழைப்பதையும், திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகத்தில், "வாய்திறந்து அழைக்குமே.....திருவாவடுதண் துறை திருமடத்தில் சேகண்டி நாதமே" எனும் அடிகளால் குறித்துள்ளனர்.

அன்ன விநோதனும் - அன்னபூரணியும்


உயிர்கள் வாழ உணவு அவசியம். அன்னம் உயிருக்கு உரமூட்டுவது எனவே அமுது எனப்பட்டது அன்னமயமாகப் பெருமான் விளங்குகிறார். அதனை உண்பதால் கிடைக்கும் முழுமையான மன உணர்வைப் பராசக்திஅளிக்கிறாள்.சிவபெருமானை அன்ன விநோதர் என்றும் அம்பிகை அன்ன பூரணி என்றும் அழைக்கிறோம்.

உயிர்கள் மகிழ்ச்சியுடன் வாழ அன்னம் வழியாக இருப்பதால்,அதை அளிக்கும் பெருமானைச் சோற்றுத் துறையார் என்று அழைக்கின்றனர். திருவையாற்றுக்கு அருகில் திருச்சோற்றுத்துறை என்ற தலம் உள்ளது. இங்குள்ள இறைவர் தொலையாச் செல்வர் அம்பிகை அன்னபூரணி. இங்கு அருளாளன் என்பவனுக்குப் பெருமான் அட்சய பாத்திரம் தந்ததாகத் தல வரலாறு கூறுகிறது.

திருஆப்பனூர் என்ற தலத்தில் எழுந்தருளி யிருக்கும் பெருமானுக்கு அன்னவிநோதர் என்ற பெயர் வழங்குகிறது. இங்கு பெருமான் அன்பருக்காக மணலைச் சோறாக்கி அருள்புரிந்துள்ளார்.

சுந்தரர் பெருமானைப் பாடுவார் பசிதீர்ப்பார் பரவுவார் இடர்களைவார் என்று போற்றுகின்றார். குருகாவூர் பெருமானுக்குப் பசிதீர்த்த நாயனார் என்பது பெயர்.

உயிர்கள் பசித்தழுத பொழுதெல்லாம் பெருமானும் அம்பிகையும் உடன் வந்து உவந்து உணவளித்ததை அநேக புராணங்கள் கூறுகின்றன.



திருஞானசம்பந்தர் அழுதபோது பெருமானின் ஆணையால் அம்பிகை பால் கொடுத்தாள். சுந்தரர் பசியால் சோர்ந்தபோது பெருமான் வீடுதோறும் சென்றிரந்து வந்து சோறிட்டார். திருநாவுக்கரசு நாயனாருக்குக் கட்டமுது அளித்தார்.

பல்வேறு நிலையில் இறைவனும் இறைவியும் அடியவர்களுக்கு அன்னவிநோதனாகவும் அன்ன பூரணியாகவும் இருந்து அருள்பாலித்து வருகின்றனர்

திருப்பெருந்துறையில் அன்ன நிவேதனமும் அன்னபூரணியும்

திருப்பெருந்துறை(ஆவுடையார் கோயில்) ஆலயம் பிரபஞ்ச வடிவமாகும். இது உலகம் தோன்றி ஒடுங்குவதற்கான வெட்டவெளியைக் குறிக்கும் அடையாளமாகும். இங்கு அண்ட வெளியில் வாழும் உயிர்களுக்கு உணவே பிரதானம் என்பதை உணர்த்த மகாமண்டபமான சத்சபையில் பெரிய படைகல் உள்ளது. அதில் அன்னத்தைப் பரப்பி நிவேதிக்கின்றனர். பெருமான் அன்னமயமாக இருப்பதை இது உணர்த்துகிறது. இந்தக் கல் அம்பிகையின் திருமேனியாகும். அவள் அரூப அன்ன பூரணியாக அதில் இருக்கிறாள்.

அம்பிகை சந்நிதியின் முன்புறமுள்ள ஜன்னலுக்கு முன்புறம் அன்னபூரணியின் திருவுருவம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இரண்டாம் பிராகாரத்தில் கன்னிமூலை கணபதியுடன் அன்னபூரணியும் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

அன்னலிங்கம்

அன்னத்தால் லிங்கம் செய்து வழிபடுகின்றனர்.பூசையின் முடிவில் அதை எடுத்து அன்பர்களுக்கு அளிக்கின்றனர். மடாதிபதிகள் மாகேசுவர பூசை செய்யும்போது அவர்களுக்கு அருகில் அன்னலிங்கம் அமைத்து வழிபட்டபிறகு அதில் சிறிது எடுத்து இலையில் இட்டபின் எல்லோருக்கும் பிரசாதமாக அளிக்கப்படும்.

பெரிய புராணம் கூறும் அமுதூட்டிய அடியவர்கள்

பெரியபுராணம் காட்டும் அடியவர்கள் பல்வேறு திறத்தினர். அவர்கள் தத்தம் நிலைக்கேற்பச் சிவத் தொண்டில் ஈடுபட்டிருந்தனர். எளிய நிலையில் துணி துவைத்துக் கொடுத்தது முதல் மகனையே கறி சமைத்து அரிய பெரிய விருந்து வைத்தது வரை அவர்கள் செய்த செயல்கள் யாவும் அருஞ்செயல்களாகும்.

அவர்களை அனைவருமே அடியவர்களுக்கு உணவிட்டு மகிழ்ந்திருப்பார்கள் என்றாலும், ஒரு சிலர் செய்த அமுதூட்டல் மட்டும் தனிச்சிறப்புடன் குறிக்கப் பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

இளையான் குடிமாறனார் வறுமை வந்த காலத் தும் தளராது அமுதூட்டும் பணி செய்தவர். அடை மழை பொழியும் ஒரு நள்ளிரவில் எதுவும் வீட்டில் இல்லாத போது அடியவர் வந்து விருந்து கேட்க, அவருக்கு வயலில் விதைத்த நெல்லை வாரிவந்து அரிசியாக்கி அமுதளித்துப் பேறு பெற்றுள்ளார். அவரைத் தேடிவந்து இறைவன் உணவு கேட்டுப் பெருமைப்படுத்தி அருள் புரிந்தார். சேக்கிழார் அவர் செய்த அமுதூட்டலை ," சீலமார்அன்பர் பூசை " என்று கூறுகிறார்.

அமர்நீதி நாயனார் நல்லூரில் வாழ்ந்த அன்பர். அவர் அந்தி வண்ணர் அடியவர்க்கு அமுது செய்து வந்ததுடன் தக்க அன்பர்கள் அமுது செய்யத் திருமடம் சமைத்தார் என்று அவருடைய புராணம் கூறுகிறது. அம்மடம் அமர்நீதி நாயனார் மடம் என்றழைக்கப்பட்டது.

குங்குலியக் கலயனார் வரலாற்றிலும் அரன ருளால் பெற்ற பெருஞ்செல்வத்தைக் கொண்டு சீருடை அடிசில், செழுங்கறி, தயிர், நெய், பால் ஆகியவற்றை அன்பர்களுக்கு இட்டார்.

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் உடன் வந்த அடியார்களுக்கு அமுது செய்வித்து மகிழ்ந்தனர். அவர்கள் பணிக்கு முட்டு வந்தபோது இறைவன் படிக் காசு நல்கி அந்த அறம் தொடர்ந்து நடைபெறச் செய்த தைக் காண்கிறோம். அவர்கள் ஆங்காங்குத் திருமடம் அமைத்து அன்பர்களுக்கு உணவூட்டி மகிழ்ந்தனர்.

காரைக்காலம்மையார்அடியவர்களுக்கு அமுதூட் டும் பணியை அன்புடன் செய்தவர். ஒரு சமயம் அவர் செய்த அமுதூட்டுதலே அவருடய தெய்வீக சக்தி வெளிப் படக் காரணமாயிற்று. அதுவே அவரது வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்தது.

அப்பூதி அடிகளார் அமுதூட்டும் பணியினை அன்புடன் செய்தவர். அவர் நாவுக்கரசருக்கு அமு தூட்ட ஏற்பாடு செய்தபோது அவர் மகன் பாம்பு கடித்து இறந் தான். அதை மறைத்து அவர்அமுது படைக்க ஏற்பாடு செய்ததையும் உண்மையை அறிந்த அப்பர் அடிகள் மகனை உயிர்ப்பித்ததையும் பெரிய புராணம் கூறுகிறது.

திருநீலநக்கர் மறையவர் குலத்துதித்தவர். அவர் சிவபூசையுடன் அடியவர் பூசையையும் சிறப்புடன் செய்து வந்தவர். அத்தர் அன்பர்க்கு அமுது செய்விப்பது அவர் பணியாயிருந்தது.

மூர்க்க நாயனார் எப்பரிசாயினும் (எவ்வழியாக இருந்தாலும்) அதன்மூலம் பொருள் சேர்த்து அடியவர் களுக்கு அமுதுபடைக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அதனால் சூதாடிய பணத்தில் அவர் சோறூட்டி மகிழ்ந்தார்.

சிறப்புலியார், சோமாசிமாறர் முதலியோர் அடிய வர்களின் பாதம் பணிந்து அன்னம் படைத்ததைக் காண்கிறோம். கலிக்கம்ப நாயனார் போஜனம், விரும்பு கறி , பால், தயிர், நெய் ஆகியவற்றுடன் அமுது செய் வித்து வந்தவர். முனையடுவார் பலவகையாக உணவு படைத்து மகிழ்ந்தவர்.

இவர்கள் யாவரும் செய்ததற்கு மேலாக தமது ஒரே பிள்ளையைக் கறி சமைத்தளித்து அமுதூட்டிப் பெரும் பேறு பெற்றவராகச் சிறுத்தொண்டர் விளங்குகிறார்.

பெரியபுராணத்தில் அடியவர்களுக்கு அமுதூட் டுதல் அரன்பணியாகவே சொல்லப்பட்டுள்ளது. திரு ஞானசம்பந்தர் புராணத்தில்," மண்ணினிற் பிறந்தார் பெரும்பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுதுசெய்வித்தல் உண்மையாமெனில் உலகர்முன் வருக" என்று குடத்தில் எலும்புகளாக இருந்த அங்கம் பூம்பாவையை அழைக்கிறார்.

இதன் மூலம் அடியவர்களை அமுதூட்டுவதால் ஆயுளை நீட்டிக்க முடியும் என்ற கருத்து வலியுறுத் தப்பட்டுள்ளது. திருஞான சம்பந்தர் திருமயிலைப் பதிகத்தில் உருத்திரப் பல்கணத்தார்க்கு அட்டிட்டல், அருந்தவர்கள் துய்ப்பதுவும், நேரிழையார் கொண்டாடும் ஒண் புழுக்கல் என்று சோறு படைக்கும் நிகழ்ச்சிகளை விவரிக்கிறார்.

பெரியபுராணத்தில் ஆண்டவனுக்குஅடியவர்கள் அமுதூட்டியது ஆண்டவன் அன்பர்களுக்கு அமுதூட்டி மகிழ்வது, அடியவர்கள் அடியவர்களைப் போற்றி அமுதூட்டுவது ஆகிய மூன்று நிலைகளையும் சேக்கிழார் விவரித்துள்ளார்.

இரந்து விருந்திட்டீசுவரர்

இறைவன் அடியவர்கள்பால் எல்லையற்ற அன்பு கொண்டிருக்கிறான். அவர்கள் துன்பம் அடையும் போது எதிர்வந்து அவற்றை மாற்றுகின்றான்.

அவன் தம்பிரான் தோழனாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் பசியால் வாடி நின்றபோது தானே தனது உண்கலத்தை எடுத்துவந்து வீடுதோறும் சென்று பிச்சை ஏற்று வந்து அவருக்குச் சோறிட்டான். அந்தக் கருணை மீதூர்ந்த செயலால் இரந்து விருந்திட்டீசுவரர் என்ற பெயரில் கச்சூரில் ஆலக் கோயிலில் வீற்றிருக்கின்றான். அந்த வரலாற்றைக் காணலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கழுக்குன்றத்தில் பெருமானை வணங்கி மகிழ்ந்த பின்னர் திருக்கச்சூர் ஆலக் கோயிலில் வழிபட விரைந்து சென்றார். அது வேனிற் காலமாகும். சுந்தரர் சுவாமியை வழிபட்டு மகிழ்ந்தபின் மதிலின் அருகில் அமர்ந்திருந்தார். அவருடன் வந்தவர்களும் உணவு சமைக்கும் பரிசனங்களும் வந்து சேரவில்லை. சூரியன் உச்சியை அடைந்தான். சுந்தரர் வழிநடைப் பயணத்தாலும் வெயிலாலும் பசியாலும் வருந்தினார்.

அவ்வேளையில்சிவபெருமான் திருவோட்டுடன் அந்தண வடிவுடன் அவர் முன்பு தோன்றினார். பசியால் வாடி வருந்தியிருக்கும் அன்பரே, உமது பசியை மாற்ற இங்குள்ள இல்லங்களில் சோறு பெற்று வந்து அளிக்கிறேன். இந்த இடத்தை விட்டு அகலாமல் இங்கேயே இருங்கள் என்றார்.

தமது கழல் ஒலிக்க, கண்டவர்களின் மனம் உருகிக் கரையும்படியும் வீதிகளில் கால்பதிய நடந்து சென்று இல்லங்கள் தோறும் இரந்து கொண்டுவந்த இனிய சோற்றையும் காய்கறிகளையும் சுந்தரருக்குப் படைத்து உமது துன்பம் தரும் பசி நீங்க அருந்தும் என்று அன்புடன் அளித்தார். அதை வாங்கிய சுந்தரர் அன்பர் களுடன் கூடிஉண்டார். அவ்வேளையில் பெருமான் மறைந்தார்.

சிவபெருமானின் கருணைத் திறத்தை வியந்து முதுவாய் ஒரி என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். பிறகு காஞ்சியைநோக்கிப் பயணமானார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கல்பட்டுக்கு வடக்கே தேசீய நெடுஞ்சாலையில் சிங்கபெருமாள் கோயில் என்னும் ஊர் உள்ளது. அதற்கு மேற்கில் 3 கி.மீ தொலைவில் திருக்கச்சூர் உள்ளது. இங்குள்ள இறைவன் கச்சபேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார்.



அம்பிகை அஞ்சனாட்சி, சுந்தரருக்குச் இத்தலத்தில் இறைவன் சோறிட்டதின் நினைவாக விருந்திட்டீசுவரர் எனும் பெயரில் சிவலிங்கத் திருமேனியாக வடக்குப் பிரகாரத்தில் தனிச்சந்தியில் வீற்றிருக்கின்றார்.

அந்த சந்நிதி முற்றத்தில் விருந்து அருந்திய பின் இறைவன் பெருமைகளை நினைந்து பாடும் நிலையில் சுந்தரர் தனிச் சந்நிதியில் வடக்கு நோக்கியவாறு உள்ளார். சுவாமி அவருக்கு இங்கு தியாகராஜராகக் காட்சியளித்து அருள் புரிந்தார் அவர் சுந்தர விடங்கராக கருவறைக்குத் தெற்கிலுள்ள சபையில் வீற்றிருக் கின்றார். அவர் பெயரால் இக்கோயில் தியாகராஜசுவாமி கோயில் என்று அழைக்கப்படுகிறது.

கோயிலுக்கு மேற்கில் சிறிய மலை உள்ளது. அதில் பெருமான் மருந்தீசுவரர் என்ற பெயரில் வீற்றி ருக்கின்றார். இவரைச் சுந்தரர் மலைமேல் மருந்து என்று போற்றியுள்ளார்.

திருக்கச்சூரில் விருந்தளித்ததைப் போலவே வடமதுரை என்று தலத்திலும் சுந்தரர் பசியால் வருந்திச் சோர்ந்த போது சிவபெருமான் சோறளித்ததாகக் கூறப் படுகிறது. (இது பெரிய புராணத்தில் குறிக்கப் படவில்லை).

இங்குள்ள பெருமானும் விருந்திட்டீசுவரர் என்ற ழைக்கப்படுகிறார். கருவறையில் இரண்டு லிங்கங்கள் உள்ளன. வடமதுரை கொங்கு நாட்டுத் தலமாகும். கோவைக்கும் காரைமடைக்கும் இடையேயுள்ளது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு விருந்தளித்ததைப் போலவே பொதிசோறு அளித்து அருள்பாலித்தது திருக்குருகாவூர் வரலாற்றில் கூறப்படுகிறது.

இறைவனுக்கு விருந்திட்டவர்கள்

பசியால் வாடி வருந்திய மக்களின் பசிப்பிணியைப் போக்க அன்னமிடும் அறப்பணியைச் செய்து எண்ணிலாதவர்கள் மேன்மை பெற்றிருக்கின்றனர். அவர்களில் சிலர் செய்த சிவப்பணியினை உலகிற்கு உணர்த்தச் சிவபெருமானே அவர்களைத் தேடிவந்து உணவு கேட்டதைக் காண்கிறோம்.

பெரியபுராணத்தில் இளையான்குடிமாறன், சிறுத்தொண்டர் ஆகிய அடியவர்களின் இல்லத்திற்கு எழுந்தருளிச் சிவபெருமான் அமுதம் கேட்டதை விரிவாகக் காண்கிறோம். அந்த வரலாறுகளுடன் மேலும் சில வரலாறுகளையும் இங்கே காணலாம்.வறுமையில் வாடிய இளையான்குடி மாற நாயனார், அடியவர்களுக்கு உணவூட்ட மேற்கொண்ட முயற்சிகள் அவருடைய மேன்மையையும் சிறப்பையும் விளக்குவதாக அமைகின்றன.

இளையான் குடிமாறன்

இளையான்குடி என்னும் தலத்தில் உழவுத் தொழில் புரியும் செல்வக் குடியில் தோன்றியவர் மாறனார்.அவர் அடியவர்களுக்கு அமுதூட்டுவதையே அரன் பணியாகச்செய்துவந்தார்.அன்பர்களை இன் சொல் கூறி அழைத்துவந்து பாதங்களை விளக்கி, உயர்ந்த ஆசனத்தில் அமர்த்துவார்.அவர்களுக்கு நாலு வித உணவை ஆறுவகைச் சுவைகளுடன் பரிமாறுவார். இப்படி பலகாலம் செய்து மகிழ்ந்தார்.

ஒரு சமயம் இவருடைய வள்ளன்மையையும் மாறாத உறுதிப்பாட்டையும் உலகினருக்கு உணர்த்த விரும்பிய சிவபெருமான் வறுமையை தந்தார். நாயனாரின் செல்வம் கரைந்தது எனினும், அவர் மனம் கலங்காமல் கூலி வேலை செய்து அதில் வரும் கூலியைக் கொண்டு அன்பர்களுக்கு உணவிட்டு மகிழ்ந் தார். அடியவர்களுக்குப் பணி செய்ய தமக்கு வந்த வறுமையை அவர் தடையாகக் கருதவில்லை.

சிவபெருமான் அவருடைய பெருமைகளை உலகிற்கு அறிவிக்க விரும்பினார். மழை பொழிந்து கொண்டிருக்கும் நள்ளிரவில் அவருடைய இல்லத்திற்கு ஒரு அடியவர்போல் வடிவுகொண்டு சென்றார்.

வழக்கப்படி மாறனார் அவரை வரவேற்றார். நனைந்திருந்த அவர் உடலைத் துடைத்து ஆசனத்தில் அமர்த்தினார். அப்போது அடியவர் பசிக்கிறது என்றார்.

நாயனார் மனைவியிடம் நமக்கு உணவில்லையாயினும், இவருக்கு உணவளிக்க வேண்டும் யாது செய்யலாம் என்றார். அவரது மனைவியார் அன்பரே எனக்கும் புரியவிலை. நமக்குத் தருவார் எவருமில்லை. நேரமும் அகாலமாக உள்ளது என்றார். சற்று நேரம் கழிந்தது.

அம்மையார்,"பொழிந்து கொண்டிருக்கும் மழையில் இன்று பகலில் நீங்கள் விதைத்த செந்நெல் மிதந்து கொண்டிருக்கும் அதை வாரி வந்தால் அமுதாக்கலாம் மற்றபடி வழி தெரியவில்லை" என்றார்.

மழைபொழியும் நள்ளிரவில் மின்னல் மின்னி இடிஇடித்து முழங்கிக் கொண்டிருந்தது. அதைப் பொருட்படுத்தாமல் நாயனார் பெரிய கூடையைக் கவிழ்த்துக் கொண்டு வயலை அடைந்தார். கால்களால் தடவி கைகளால் மிதக்கும் முளைநெல்லை வாரிக்கொண்டு மீண்டார். மனைவி அதை வாங்கி நீரில் அலம்பி அரிசியாக் கினார். விறகில்லை என்றபோது நாயனார் வீட்டுக் கூரையில் இருந்த கட்டைகளை வெட்டித்தந்தார். உணவு தயாராகிக் கொண்டிருந்தது.

அம்மையார் கறிக்கு என்ன செய்யலாம் என்றார். நாயனார் தோட்டத்தில் குழியில் நிரம்பாது முளைத்திருந்த கீரையைப் பறித்து வந்தார். அம்மையார் அதை வெவ்வேறு கறி களாக்கினார்.

இவற்றை விரைந்து செய்து முடித்த இருவரும் அடியவரிடம் சென்று அமுதுசெய்ய எழுந்தருள்க என்றனர்.அவ்வேளையில் அங்கே ஒரு பெரிய சோதி தோன்றியது. நாயனாரும் அவர் மனைவியும் திகைத்தனர்.

சிவபெருமான் உமையுடன் இடப வாகனத்தில் அங்கு தோன்றினார். நாயனாரை நோக்கி, நீ நின் மனைவியுடன் என்றும்என்னுடன் இருப்பாய் என்று சொல்லி அழைத்துச்சென்றார்.

அந்நாள் ஆவணி மாத மக நன்னாளாகும்.

இளையான்குடி சோழ நாட்டில் திருநள்ளாற்றிற்கு மேற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரில் சிவாலயமுள்ளது. நாயனார் முளைகளை வாரிவந்த நாற்றங்கால் இப்போது முளைவாரிக்குட்டை என்ற பெயரில் உள்ளது. சோழ மண்டல சதகம் இவ்வூர்ப் பெருமையைக் கூறுகிறது.

சில நூல்களில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இளையாத்தங்குடியே இளையான்குடி என்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூரில் சிவாலயம் உள்ளது. இறைவர், நித்திய கல்யாணி உடனாய கயிலாயநாதர்

இவ்வூரில் "முளைவாரி அமுதளித்த நாற்றங்கால்" எனும் பெயரால் சர்வமான்யமாக ஒருநிலம் உள்ளதென்று கூறுகின்றனர். சிவாலயத்தில் முறைவாரி அமுதளித்த விழா நடைபெறுவதாகவும் கூறுகின்றனர்.மாறன்

என்பது பாண்டியர்களின் பட்டப் பெயரா தலினாலும், அப் பெயரை அங்குள்ளவர் இட்டுக் கொள் வது பெருவழக்க மாயுள்ளது என்பதாலும், இளையாற் றங்குடி பாண்டி நாட்டுப் பதியே என்பர். இவ்வூர்த் தலபுராணத்தில் நாயனா ரைப் பற்றிச் செய்திகள் ஏதுமில்லை. சேக்கிழார் இளை யாத் தங்குடி எந்த நாட்டைச் சேர்ந்ததென்று குறிக்க வில்லை. எனவே இத்தலத்தின் இருப்பிடம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உள்ளன.

இளையான்குடிமாறன் வயலில் விதைத்த நெல்லை எடுத்துவந்து அடியவர்க்குச் சமைத்து அமுதூட்டினார். சாம்பன் விதைக்க வைத்திருந்த தினையைச் சமைத்து பெருமானுக்கு அமுதூட்டியதைக் காண்கிறோம். பெற்றான் (பெரி யான்)பெருமானுக்குத் தினையளித்துப் பேறுபெற்ற காரணத்தால் அவர் வாழ்ந்த ஊரே திருத்தினை நகர் என்று அழைக்கப்படுகிறது.


திருத்தினை நகர்ப் பெரியான்

கடலூரிருந்து சிதம்பரம் செல்லும் வழியில் 5 கி.மீ. சென்று மேற்கே திரும்பி 3 கி.மீ. சென்றால் திருத்தினைநக ரை அடையலாம்.

ஒரு காலத்தில் இத்தலத்தில் பெரியான் என்ற பள்ளன் இருந்தான். அவன் மிகுந்த ஏழ்மை நிலையிலி ருந்தபோதும் சிவனடியார்களுக்கு அமுதூட்டுவதைப் பெரும் பணியாகச் செய்து கொண்டிருந்தான்.

ஒரு சமயம் நீண்ட நாட்கள் கழித்து மழை பொழிந் தது. பெரியான் தன் நிலத்திற்குச் சென்று உழுது கொண்டி ருந் தான். அவனிடம் விதைப்பதற்காகக் கொஞ்சம் தினை மட்டுமே இருந்தது.

அவ்வேளையில் ஒரு ஜங்கமர் (அடியவர்) வடிவில் சிவபெருமான் அவனிடம் வந்தார். அன்பனே நான் மிகுந்த பசியுடன் இருக்கிறேன். எனக்கு ஏதேனும் உணவு தருக என்றார். பெரியான் அவரிடம் ஐயா, தினை விதைப் பதற்காக இப்போது உழுது கொண்டிருக்கிறேன். எனது வீடு அண்மையில்தான் உள்ளது. நீங்கள் இங்கே சற்று ஓய்வெ டுங்கள். உடனே வருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றான்.



வீட்டிற்குச் சென்ற பெரியான் மனைவியிடம் விதைப் பதற்கு வைத்திருந்த தினையை உணவாகச் சமைக்கும் படிக் கூறினான். அப்பெண்மணி சுவையான அமுதாக அதனைத்தயாரித்தாள்.இருவரும்அடியவருக்கு உணவிட வயலுக்குச் சென்றர். அங்கு தினைவிளைந்து கதிர்கள் முற்றியிருப்பதும் பறவைகள் அவற்றைக் கொத்திக் கொண்டிருக்கும் அதிசயத்தைக் கண்டார்கள்.

அவர்கள் மனம் அந்த அதிசயத்தில் ஒன்றவில்லை அடியவர் பசியுடனிருப்பார் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. ஜங்கமர் மரத்தடியில் படுத்துக் கொண்டி ருந்தார். . அவரை எழுப்பி உணவு பரிமாறினர். சிவபெரு மான் அன்புடன் உண்டார்.

அங்கு ஒரு ஜோதி தோன்றியது. சிவபெருமான் அம்பிகையுடன் விடைமேல் தோன்றி அவர்களை நோக்கி உன்னுடைய பக்தி சிறந்தது. அதிசயங்களில் மனம் ஒன்றாமல் விதைக்க வைத்திருந்த தினை என்றும் கருதாமல் சமைத்துப் பரிமாறியதும் அரிய செயலாகும். நீ எமது உலகம் வருக என்று தன்னுடன் அழைத்துக் கொண்டார்.

இத்தலம் அன்று முதல் திருத்தினை நகர் என்று அழைக்கப்படுகிறது. இறைவர் சிவக்கொழுந்தீசுவரர். இறைவி ஒப்பிலா நாயகி (எ) இளங்கொம்பன்னாள்.

கருவறை தெற்குச் சுவரில் பெற்றான் சாம்பன் (பெரியான்) தினை விதைத்தல். தினை கதிர்விட்டு விளைந்திருத்தல். இறைவன் காட்சியளித்தல் ஆகியன புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இத்தலத்தில் பெருமானுக்குத் தினை நிவேதனம் செய்யப்படுகிறது

சிறுத்தொண்டர்

சோழ நாட்டிலுள்ள திருச்செங்காட்டங்குடியைச் சேர்ந்தவர் பரஞ்சோதியார்.அவர் பல கலைகளைப் பயின்றவர். மன்னவனுக்கு அணுக்கத்தொண்டராக இருப்பவர். ஒரு சமயம் பல்லவ மன்னவன் சார்பாக அவருடைய தளபதியாக வாதாபி மீது படையெடுத்துச் சென்றார். அதை அழித்து எரியூட்டி வெற்றித்தூண் நாட்டிப் பெரும் செல்வத்துடன் மீண்டார்.

அவருடைய வெற்றியால் மகிழ்ந்த அரசன் பெரிதும் போற்றினான். அவரை அறிந்த அமைச்சர்கள் இது சிவபெருமானுடைய அடியவர்களுக்குத் தொண்டு செய்வதால் வந்த பயன். இறையருளால் எதிரிகள் எவரும் இவருக்கில்லை அப்படி இருந்தாலும் வெல்வது எளிதே என்றார்கள்.

அதைக்கேட்ட அரசன் நீர் இறைவன் திருத் தொண்டர் என அறியாது போர்ப் பணிக்கு அனுப்பி னேன். எம்மைப் பொறுக்க வேண்டும் என்றார்.

நாயனார் எனக்கேற்ற திறம் செய்வேன். அதனா லென்ன தீங்கு என்றார். அரசன் அன்பரே உமது நிலைக்கேற்பத் தொண்டு செய்தீர். இனி எமது விருப் பப்படி சிவனடியார்களுக்கான திருத்தொண்டு புரிந்து வாருங்கள்! என்று கூறி பெரும்பொருள் அளித்து விடை கொடுத்தான்.

பரஞ்சோதியார் தமதூரான திருச்செங்காட் டங் குடிக்கு வந்தார். அங்கிருந்த கணபதீச்சரம் என்ற ஆலயத்தை அடைந்து அங்குத் திருத்தொண்டுகள் செய்துவந்தார். அடியவர்களுக்கு கன்னல் அறு சுவைக் கறி,நெய்,தயிர்,பண்ணியம் ஆகியவற்றைக் கொண்டு அமுதூட்டி வந்தார்.

அவருடைய மனைவியார் வெண்காட்டு நங்கை யும் பணிப்பெண் சந்தனநங்கையும் அவருமாக அடியவர்களுக்கு அமுதூட்டி அதன்பின்னரே உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். அவரைச் சிறுத் தொண்டர் என்று அனைவரும் போற்றிக் கொண்டாடினர். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்குச் சீராளதேவன் என்று பெயர் சூட்டி வளர்த்தனர். நாட்கள் நகரப் பிள்ளையும் வளர்ந்தது அவனைப் பள்ளியில் சேர்த்தனர்.

அந்நாளில் அங்கு வந்த திருஞான சம்பந்தர் சிறுத்தொர்ண்டரின் மனைக்கு வந்தார். அவரையும் அவர்பணி செய்யும் கணபதீச்சரம் ஆலயத்தையும் தேவாரத்துள் போற்றிப் பரவினார்.

ஒரு சமயம் இவருடைய பெருமையை உலகிற்கு உணர்த்த விரும்பிய சிவபெருமான், சூலம் உடுக்கை யும் கபாலமும் ஏந்தி' வைரவராய்" திருவேடம் தாங்கி திருச்செங்காட்டங்குடிக்கு வந்தார். சிறுத்தொண்டர் இல்லத்திற்கு வந்து வாயிலில் நின்றார்.

தொண்டர் தமக்கு எந்நாளும் சோறளிக்கும் அடியவர் வீட்டிற்குள் இருக்கிறாரா? என்று கேட்டார். அதைக் கேட்டு விரைந்து வந்த சந்தன நங்கையார், " அன்பரே! இன்றைக்கு அடியவர் எவரும் வராததால் அவர்களைத் தேடிச் சென்றிருக்கிறார். நீங்கள் உள்ளே வந்து அமருங்கள்! என்றாள்.

சிவபெருமான் அம்மா, பெண்கள் இருக்கு மிடத்திற்கு நாம் தனியாகச் செல்வதில்லை என்றார். வெண்காட்டு நங்கையார், அமுது கேட்டுவந்த இவர் சென்றுவிடுவார் போலிக்கிறதே என நினைத்து அடியவர்களைக் காணாததால் தேடிப் போயிருக்கிறார். வராது வந்த மாமணிபோல் வந்து நிற்கும் தங்களைக் கண்டால் மிகவும் மனம் மகிழ்வார். இதோ இப்போது வந்து விடுவார். உள்ளே வந்து அமருங்கள் என்று மிகவும் வேண்டிக் கொண்டார்.

சிவபெருமான் அவளிடம், " பெண்ணே! நான் வட நாட்டிலிருந்து வந்துள்ளேன்.பெண்கள் மட்டும் தனித் திருக்கும் இந்த இடத்தில் நாம் இருக்க மாட்டோம்' கணப தீச்சரம் ஆலயத்தில் வண்ணமலர் ஆத்தியின் கீழ் இருக் கின்றோம் அங்கு வந்து என்னை பார்க்கும்படிஉன் கணவரிடம் சொல்" என்று கூ றி நடந்தார்.

சற்று நேரத்திற்குப் பிறகு இல்லத்திற்கு வந்த சிறுத் தொண்டர் நடந்ததைக் கேட்டு விரைந்து ஆலயத்திற்குச் சென்றார். அங்கு வைரவரைக் கண்டு தொழுது , முன் னைத் தவத்தால் உம்மைக் கண்டேன், எமது இல்லத் திற்கு வந்து அமுது செய்ய வேண்டும் என்றார்.

அன்பனே! உம்மைக் காணவே வந்தேன் எனது விருப்பப்படி எனக்கு அமுதூட்டுதல் உன்னால் இயலாது என நினைக்கிறேன் என்றார்.

சிறுத்தொண்டர், " நீங்கள் உமக்கு வேண்டியதைக் கேளுங்கள். அடியவர்களுக்கு அமுது அளிப்பதென்பது அரியது இல்லை. எதுவாயின் அடியேன் அளிப்பேன் என்றார்.

வயிரவர்" சிறுத்தொண்டரே நான் ஆறு மாதத்திற்கு ஒருமுறை மட்டுமே உணவருந்துபவன். பசுவை உண் பவன். அதுவும் நரப்பசு. அதுவும் ஐந்து வயதிற்குள் உள்ளதாகவும், மாசுமறு அற்றதாயும், ஒரு குடிக்கு ஒரு





மகனாகவும் தாய் பிடிக்க தாதை அரிய இருவரும் மனம் உவந்து சமைத்ததாக இருக்க வேண்டும்" என்றார்.

சிறுத்தொண்டர் அவரை வணங்கி, " நீங்கள் அமுது செய்ய ஒப்புக்கொண்டால் உங்கள் விருப்பப் படியே உணவு ஏற்பாட்டை உடனே செய்வோம். அது எமக்கு அரியதில்லை என்றார்.சிவபெருமான் உம்மால் முடியுமெனில் நாம் வருவோம் என்றார்.

வீட்டிற்கு வந்த நாயனார் நடந்ததை மனைவி யிடம் கூறினார். அவள் பள்ளியிலிருந்து மகனை அழைத்து வரச்செய்தாள்.அவனை நீராட்டினாள் .அவனை இரு வரும் பிடித்தரிந்தனர்.

கறிக்குத் தலை உதவாதென்று ஒதுக்கி உடம்பை மட்டும் அறுத்துச் சமைத்தனர். அத்துடன் பலவித அமுது களும் சமைத்தனர்.

சிறுத்தொண்டர்வைரவரிடம்சென்று உணவுண்ண வருமாறு அழைத்தார். அடியவர் வர அவருடைய பாதங்க ளை விளக்கி உள்ளே அழைத்துச் சென்றனர். ஆசனத் தில் அமர வைத்து தூபதீபம் காட்டி வழிபட்டனர்.

அவருக்குத் தூய துணி மீது இலையிட்ட செஞ் சாலிச் சோறு கறி முதலானவற்றை ஒருங்கே வரிசை யாகப் படைத்தனர். அப்போது, " அன்பரே எல்லாவற் றையும் சமைத்தீரா? தலைக்கறி இடவில்லையே என்றார். நங்கையார் அது உணவுக்காகாது எனப் படைக்க வில்லை என்று கூற,வயிரவர்நாம் அதையும் உண் போம் என்றார்.

அதைக் கேட்ட சிறுத்தொண்டர் கலங்கினார். அவ் வேளையில் வெண்காட்டு நங்கையின் பணிப்பெண், " தொண்டர் விரும்புவாரோ என எண்ணி அந்தத் தலைக் கறியையும் அடியேன் சமைத்து வைத்துள்ளேன்" என்று கூறி அதை அளித்தாள்.

உண்ணப்புகும் வேளையில் நான் தனித்து உண்ப தில்லை. யாராவது அடியார் இருந்தால் உடன் உண்ண அழையும் என்றார். சிறுத்தொண்டர் ஐயனே, "நீறிட்டார் எவரையும் காணேன் யானும் நல்அடியாடி யாரைக் கண்டு நீறிடுவேன்" என்றார்.

வைரவர்," சிறுத்தொண்டரே,நீரே நல்ல அடியவர் எம்முடன் உண்ண அமருங்கள் என்று கூறினார். வெண்காட்டு நங்கையிடம், " இலையிட்டு சூடான இறைச்சிச் சோற்றை அவருக்கு இடுக" என்றார்.

சிறுத்தொண்டர் உண்ணத் தொடங்கும் வேளை யில் ஆறுமாதம் கழித்து உண்ணும் நான் பொறுத்தி ருக்க தினமும் சோறுண்ணும் நீங்கள் ஏன் உண்ணப் பறக்கிறீர்கள்? என்று கூறி உமது மகனையும்,இங்கு உணவு உண்ண அழையுங்கள் என்றார்.

சிறுத்தொண்டர் இப்போது இங்கு அவன் உதவான் என்றார்.வைரவர் அவன் இங்கு வந்தால் தான் நான் உண்பேன். நீங்கள் சென்று நாடி அழைத்து வாருங்கள் என்றார்.

சிறுத்தொண்டர் இவர் அமுது செய்ய வேண்டு மென்பதே நமது நோக்கம்.எனவே, அவர் கூறியபடி செய் வோம் என்று தம் மனைவியுடன் வந்து. சீராளா வருக, சிவனடியார் உடன் அமர்ந்து உண்ண உடனே வருக! என அழைத்தார்.

சீராளன் பள்ளியிலிருந்து வருபவன் போல் ஓடி வந்தான்.தாயார் அவனைத் தழுவிமகிழச் சிறுத் தொண்டர், திருத்தொண்டர் உண்ணப் பெற்றோம் என்று கூறி

மகனை அழைத்துக் கொண்டு உள்ளேசென்றார். உள்ளே வந்து பார்த்தபோது வைரவரைக் காண வில்லை. கலத்திலிருந்த கறிகளும் சோறு முதலியன வும் மறைந்து விட்டன. அவர்கள் அவரைத் தேடி அலைந்தனர்.

அவ்வேளையில் சிவபெருமான் உமையன்னை, முருகப் பெருமானுடன் விடைமேல் அமர்ந்து அவர்கள் முன்னே தோன்றி காட்சியளித்தார் .சிறுத்தொண்டர், சீராளர், சந்தன நங்கை வெண்காட்டு நங்கை ஆகிய நால்வருக்கும் முத்தியளித்தார்.

சோமாஸ்கந்தராகச் சிவபெருமான் காட்சிய ளித்தது சிறுத்தொண்டர் வரலாற்றில் மட்டுமே யாகும்.

வைரவர் முதலான தெய்வங்களுக்கு அளிக்கப் படும் அமுதுபடையல் பாவாடம் என்றழைக்கப்படும். சேக்கிழார் சிறுத்தொண்டர் புராணத்தில் , அமுது இட்ட தைப் பரிகலம் திருத்திய பாவாடையில் ஏற்றி என்று அருளிச்செய்துள்ளது குறிப்பிடத்தக்க தாகும்.திருச்செங் காட்டங் குடியில் ஐப்பசி பரணியன்றும் சித்திரைப் பரணியன்றும்அமுதுபடையல் விழா நடைபெறுகிறது வைரவராக விளங்கும் உத்திராபதியார் திருவீதி உலா வருகின்றார்.

நள்ளிரவில் ஆலயத்திற்குத் தென்மேற்கில் (தெற்கு மாடவீதியும் மேற்கு மாடவீதியும் கூடுமிடத்தில்) உள்ள சிறுத்தொண்டர் திருமடத்திற்கு எழுந்தருள்கின்றார். அங்கு கதவை மூடிவைத்து நிவேதனம் செய்கி ன்ற னர். வெளியிலிருந்தவாறு சிறுத்தொண்டர் புராணம் ஓதப்படுவதுடன் ஒற்றைத் தட்டாகப் பறையடிக்கப்படு கிறது.

அதிகாலையில் உத்திராபதியார் விரைந்து ஆலயத்திற்குத் திரும்புவதும், பெருமான் சோமாஸ் கந்த ராக வெள்ளி இடப வாகனத்தில் காட்சியளித்தலும் நடை பெறுகின்றன. சிறுத்தொண்டர், சீராளதேவர், சந்தன நங்கை வெண்காட்டு நங்கை ஆகியோர் திருவுருவங்கள் தனித்தனியாகசுவாமிக்கு எழுந்தருளுவிக்கப்பட்டு தீபா ராதனை நடைபெறுகிறது.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பல ஊர்களில் அன்னக்கொடி என்ற பெயரில் சிறுத்தொண்டர் அன்னம் படைத்த நிகழ்ச்சி ஐதீக விழாவாகக் கொண்டாடப்படு கிறது. இதற்கென ஊரின் மத்தியில் ஆத்தி மரத்தை யும் வளர்த்து வைத்துள்ளனர்.


சிறுத்தொண்டரிடம் சென்று பெருமான் உணவு கேட்பது, சீராளனைப் பள்ளியிலிருந்து அழைத்து வந்து சமைப்பது, அடியவருக்கு உணவிடு வது, சீராளன் உயிர் த்து வருதல் ஆகியவை நாடக வடிவில் நடித்துக் காட்டப் பெறும். மூட்டை கணக்கில் அரிசியை சமைத்து ஆயிரக் கணக்கான வர்களுக்கு உணவிடுகின்றனர். இதை அன்னப் படையல் விழா எனவும் அழைப்பர்.

வேடன் அளித்த விருந்து

அன்பின்திருவுருவமாகப்போற்றப்பட்டநாயனார்கண்ணப்பர் அவர் இறைவனுக்கு அமுதூட்டியதைச் சேக்கிழார் பிரான் தனிச் சிறப்புடன் கூறுகிறார்.காளத்தி மலையில் கண்ணப்ப நாயனார் இறைவரைக் கண்டபோது இவர்க்கு அமுது செய்விப்போரைக் காணேன். இவருக்கு இறைச்சி இடுவாரில்லை நான் சென்று நல்ல மெல்லிய இறைச்சி யைக் கொண்டு வருவேன் என்றார். பன்றியை அறுத்துச் சுட்டு சுவைத்து இனியவற்றை இலையில் துப்பிச் சேகரித்தார். பெருமான் பசியுடன் இருப்பார் என்று ஏங்கி விரைந்து வந்தார். வந்தவர் பெருமானிடம், ' கொழுமையான தசைகளைக் கோர்த்து, நெருப்பில் வாட்டி, பல்லால் கடித்து அதில் இனிமையானவற்றை மட்டுமே கொண்டு வந்துள் ளேன். இந்த இறைச்சி சுவையானது அழகானது, நாயன் நீரே அமுதுசெய்த ருளும் என்றார். இப்படியே தொடர்ந்து ஊனமுதும் ஊட்டினர். அவருடைய அன்பின் திறம் அதில் வெளிப்பட்டது.

அவர் படைத்த ஊனைச் சிவபெருமான் இது எனக்கு மறையோர்கள் வேள்வியின் மூலம் அளிக்கும் அவியைக் காட்டிலும் உயர்ந்தது என்று கூறிப் பாராட்டுகிறார்.

அன்னக் காவடி



சில துறவிகள் ஜபதபங்களில் ஈடுபட்டு ஆத்ம விசாரணை செய்வதையும் அதைப் போதிப் பதையுமே தங்கள் கடமையாகக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் உணவுக்காக ஊருக்குள் வருவ துமில்லை அன்னமிடுக என்று கேட்பதுமில்லை. ஆற்றங்கரைகளிலும் திருமடங்களிலுமே தங்கியி ருப்பர். அவர்களுக்கு உணவூட்ட அவர் களுடைய சீடர்கள் காவடித் தண்டில் உணவுப் பாத்திரத்தைக் கட்டிக் கொண்டு வீதிகளுக்கு வருவர். மக்கள் அந்தக் காவடித் தண்டின் மணியோசையைக் கேட்டு உணவு எடுத்து வந்து இடுவர். அந்த உணவை எடுத்துச் சென்று குருமார்களுக்கு அமுது படைப்பர். அவர்கள் உண்கலங்களில் இட்டு உண்பதில்லை. கையில் வாங்கி உண்பர். அன்னத்திற்காக எடுக்கப்படும் காவடியாதலின்அன்னக்காவடி எனப்பட்டது. காவடித் தண்டில் இறைவடிவங்களும் மணிகளும் கட்டப்பட்டிருக்கும் . இரண்டு முனைகளிலும் உரிகள் கட்டிஅதில் உணவுப் பாத்திரங்களை வைத்திருப்பர்.

இறைவன் அளித்த பொதி சோறு

பொதிசோறு என்பது கட்டுச் சாதமாகும். புளிசாதம், எலுமிச்சம்பழசாதம், தயிர்சாதம் ஆகியவற்றைப் பாக்கு மட்டை அல்லது வாழை இலைச் சருகில் கட்டாகப் பொதிந்து வைப்பர். வழிநடைப் பயணத்திற்கு கட்டுச் சாதம் உறுதுணையாகும். முன்னாளில் உணவு விற்கப் பட்டதில்லை. சத்திரங்களில் வழங்கப்படும் உணவை விரத ஆசாரசீலர்கள் உண்பதில்லை. எனவே கட்டுச் சாதத்துடன் செல்லும் வழக்கம் பரவலாக இருந்தது. இறைவன் திருநாவுக்கரசருக்கும் பொதி சோறு அளித்த தைப் பெரிய புராணம் கூறுகிறது.

திருநாவுக்கரசர் எறும்பியூர் திருச்சிராப்பள்ளி, ஆனைக்கா, திருப்பராய்த்துறை முதலிய தலங்களை வணங்கிய பின் திருப்பைஞ்ஞீலியை வணங்க விருப்பம் கொண்டு பயணம் மேற்கொண்டார். அப்போது வேனிற் காலமாக இருந்ததால் வெய்யில் தகித்தது. நீர்வேட்கை யாலும், பசியாலும் அவர் சோர்ந்தார்.

அவருடைய துன்பத்தைத் துடைக்க விரும்பிய இறைவன்அவர் வரும்வழியில் குளத்தையும், அதனைச் சுற்றிச் சோலையையும் உண்டாக்கினார். அவர் அங்கு வந்த போது அந்தணர் வடிவுடன் சென்று நீங்கள் வழிநடையால் மிகவும் இளைத்திருக்கிறீர்கள். என்னிடம் பொதிசோறு உள்ளது. அதையுண்டு இந்தத் திருக்குளத் தில் நீர் பருகி பசியாற்றிக் கொள்ளுங்கள் என்றார். பிறகு நானும் திருப்பைஞ்ஞீலிக்குத் தான் போகிறேன். உங்கள் உடன் வருகிறேன் என்றார். அடிகளார் உணவு உண்டு ஓய்வெடுத்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார். உடன் வந்த அந்தணர் கோயிலைக் காட்டி மறைந்தார்.

அடிகளார் பெருமானின் அருள்திறங்களை வியந் தார். திருப்பைஞ்ஞீலி திருச்சியையடுத்த மணச்ச நல்லூரிலிருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளது. அரம்பையர்கள் ஞீலி என்ற வாழையாக வடிவெடுத்து சிவபெருமானுக்கு நிழல் பரப்பிய தலம். இறைவர் நீலகண்டேசுவரர் (ஞீலிவனநாதர்) அம்பிகை விசா லாட்சி, அப்பருக்கு கட்டமுது அளித்த தடாகமும் தோட்டமும் ஆலயத்திற்குத் தெற்கே 1 கி.மீட்டரில் உள்ளன.

இறைவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் பொதி சோறு அளித்துள்ளார்.சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஞான சம்பந்தர் அவதாரம் செய்தருளிய சீர்காழியை போற்றிப் பணிந்து பயணத்தை தொடர்ந்தார்.

திருக்குருகாவூரை அடையும் போது பசியாலும் வெய்யிலாலும் துன்பமடைந்தார். அவருடைய துன்பத்தை நீக்கக் கருதிய சிவபெருமான் அவர் வரும் வழியில் குளிர்ந்த நீர்த்தடம் போல ஒரு பந்தல் அமைத்தார்.அங்குப் பொதி சோறும் தண்ணீரும் வைத்துக் கொண்டு காத்திருந்தார்.

வேதியர் வடிவுடன் நின்று தம்மை வரவேற்ற அவரைக் கண்டு மகிழ்ந்த சுந்தரர், தம் தொண்டருடன் அப்பந்தலுள் சென்று சிவாயநம என்று முகமன் கூறினார். பெருமான் அவரை எதிர்கொண்டழைத்து நீங்கள் மிகவும் பசியுடன் இருக்கின்றீர். நான் உங்களுக்குப் பொதிசோறு அளிக்கிறேன். இவற்றை உண்டு மணம் நிறைந்த குளிர்ந்த நீரைப் பருகி உமது சோர்வைப் போக்கிக் கொள்ளுங்கள் என்றார்.

சுந்தரரும் உடன் வந்தாரும் அந்த அமுதை உண்டு மகிழ்ந்து வழிநடைக்களைப்பால் உறங்கி விட்டனர். பெருமான் பந்தலோடு மறைந்தார்.


விழித்தெழுந்த சுந்தரர் நடந்ததை அறிந்து பெருமானின் கருணையை வியந்து போற்றி னார். அப்போது பெருமான் வேட வடிவில் தோன்றினார். சுந்தரருக்கு வழிகாட்டி அழைத்துவந்து திருக்குருகாவூர் ஆலயத்தில் விடுத்து மறைந்தார். சுந்தரர் திருக்குருகா வூர் இறைவனைப் பணிந்து

இத்தனை ஆமாற்றை அறிந்திலேன் என்னும் பதிகம் பாடிப் பரவினார். அப்பாடலில் பெருமான் பசியறிந்து சோறிடும் கருணையைப், பாடுவார் பசிதீர்ப்பார் என்றும், வேதியனாய் வேடனாய் வந்து வழிகாட்டியதை, **குருகாவூர் வேடனே** வெள்ளடை நீயன்றே என்றும் குறித்துள்ளார். அங்குள்ள ஆலயம் வெள்ளடை என்றும் (பரமாகாசம்) இறைவர் வெள் விடைநாதர் அம்பிகை அஞ்சனாட்சி என்றும் அழைக்கப் படுகின்றனர். ஆலய முகப்பில் இறைவன் சுந்தரருக்கு உணவு படைத்தது சுதைச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளது.

சுந்தரருக்குச் சோறிட்ட இடம் குருகாவூருக்கு அருகில் வரிசைப்பற்று என்னும் பெயரில் உள்ளது. சித்திராப் பௌர்ணமியன்று சுந்தரருக்கு கட்டமுது அளிக்கும் ஐதீக விழா இங்கு கொண்டாடப்பெறுகிறது.

இன்னும் பலருடைய வாழ்விலும் இறைவன் பொதிசோறு அளித்திருப்பதைக் காண்கிறோம். இவை இறைவன் அடியவர்கள் மீது அன்பு கொண்டு அருள் பாலிக்கும் பெருங்கருணைத் திறத்தை விளக்கு வதாகும்.

விருந்துக்கு வந்த ஆயிரத்திலொருவன்



❀ ஆக்கூர் ஆயிரத்தொருவர்

சிவபக்தியும், உயர்ந்த உள்ளமும் கொண்ட ஆயிரம் அன்பர்களை வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி உபசரிப்பது பெரும் புண்ணியமாகும். ஆண்டிற்கு ஒரு முறையாவது இவ்வாறு அடியவர்களைப் போற்ற வேண்டும். தாவரங்களின் வேரில் ஊற்றும் நீர்,கிளை, இலை ஆகிய அனைத் திற்கும் சென்று சேர்வது போல், அடியவர்களுக்கு உணவிடுதல் அகில உலக உயிர்களையும் திருப்தி அடைய வைக்கிறது. இப்படி ஓராயிரம் அன்பர்களுக்கு அரசன் விருந்தளித்ததையும் அவர்களில் ஒருவராக இறைவனே அமர்ந்து உண்ட தையும் ஆக்கூரில் நிகழ்ந்த வரலாற்றால் அறிறோம்.

திருக்கடையூருக்கு வடக்கே, மயிலாடுதுறை செல்லும் சாலையில்ஆக்கூர் அமைந்துள்ளது. இங்குள்ள ஆலயம் தான் தோன்றி மாடம் என்றழைக் கப்படுகிறது.

இந்தத் தலத்தில் நெடுங்காலத்திற்கு முன்பு ஒரு மன்னன் வாழ்ந்து வந்தான். அவன் சிவபக்தியும், உயர்ந்த ஒழுக்கமும் உள்ள ஓராயிரம் சிவனடியார் களுக்கு இத்தலத்தில் விருந்தளிக்க விரும்பினான். அதற்குரிய ஏற்பாடுகளை விரிவாகச் செய்தான். விருந்துக்குரிய நாளும் வந்தது.

வந்திருந்த அடியவர்களை அவர்கள் தகுதிக்கேற்ப ஆசனங்களில் அமர்த்தினான். 999 பேர்களே அங்கு வந்திருந்தனர்.உணவிற்குரியநேரம் கடந்தது. வந்தவர் களைக் காக்க வைக்க. விரும்பாமல் இது சிவனருள் நாளை முழுமைப்படுத்திக் கொள்ளலாம் என்று முடிவெடு த்தான். அடியவர்களை உணவருந்துமாறு வேண்டி னான். அரசன் பந்திக் குச் சென்று பார்த்தபோது ஆயிரம் இலைகளிலும் அன்பர்கள் அமர்ந்து உணவு அருந்திக் கொண்டிருந்தனர். அரசன் விழா பொறுப் பாளரிடம், உள்ளே ஆயிரம் பேர்கள் உணவருந்திக் கொண்டிருக் கின்றனர். நீங்கள் ஒரு ஆள் கிடைக்க வில்லை என்று சொன்னீர்களே, அது எப்படி? என்று கேட்டான்.

அவர்கள் அவனை வணங்கி அரசே நாங்கள் எல்லோரையும் எண்ணியே உள்ளே அனுப்பினோம். 999 பேர்கள் மட்டுமே உள்ளே சென்றனர் என்றனர் அரசன் வேறு சிலரை அமர்த்தி வெளியே செல்லும் போது அடியவர்களை எண்ணிச் சொல்லும்படிப் பணித்தான்.

அரசன் ஆணைப்படியே பணியாளர்கள் தாம்பூலம் கொடுத்து வெளியே செல்பவர்களை எண்ணினர். 999 பேர்கள் தான் கணக்கில் வந்தனர். அரசன் அந்த ஆயிர மாவது ஆள் யார் என்று தெரியாது அதிசயித்தான்,

மறுநாளும் விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அரசனே வாயிலில் நின்று வரவேற்று, உள்ளே செல்லும் அடியவர்களை எண்ணினான். முந்தை தினத்தைப் போலவே 999 பேர்களே வந்திருந்தனர். பகற்பொழுது நேரம் கடக்கவே அரசன் அனைவரையும் உணவருந்து மாறு கூறிவிட்டுப் பந்திகளை வலம் வந்தான்.

ஆயிரம் இலைகளிலும் அன்பர்கள் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருப்பதைக் கண்டான். அவனுக்கு ஆச்சர்யம் உண்டானது.அவர்கள் வெளிவரும்போது தானே தாம்பூலம் கொடுத்து எண்ணிப்பார்த்தான். உட்சென்ற போது இருந்தபடி 999 பேர்களே இருந்தனர். அரசனுக்குப் புரியாத புதிராகி விட்டது.

தொடர்ந்து ஒரு மண்டலம் இவ்வதிசயம் நடந்தது உணவருந்தும் ஆயிரமாவது ஆள் யார் என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. மன்னன் இறைவனை நினைந்தவாறே துயின்றான்.

அன்றிரவு பெருமான் அவனுடைய கனவில் தோன்றி, அன்பனே நாமே அம்மண்டபத்தில் ஆயிரத்தில் ஒருவ னாக அமர்ந்து உணவருந்தி வருகின்றோம். உமது

உதாரகுணம் எமக்கு நிறைவைத் தருகிறது. அன்பர்களின் நடுவில் அமர்ந்து உண்டதால் நாமும் மகிழ்கிறோம் என்று கூறினார்.

அரசன் மிகுந்த மகிழ்வடைந்தான். முன்னிலும் சிறப்பாக விருந்துபசார விழாவைச் செய்து மகிழ்ந்தான். ஒருநாள் விருந்துக்கு எழுந்தருளிய சிவபெருமான் சிலை வடிவமாகி விட்டார். மன்னன் அவருக்கு ஆயிரத்திலொருவர் என்று பெயர் சூட்டி ஆலயத்தில் தனிச்சந்நிதியில் எழுந்தருள வைத்தான்

ஆக்கூர் தான்தோன்றீசுவரர் ஆலயத்தில்" ஆயிரத்தொருவர்" என்னும் சிவபெருமானின் திருவுருவம் உள்ளது.வயோதிக அந்தணராகவே விருந்தில் கலந்து கொண்டார் என்றாலும், அவர் இளமை ததும்பும் சிலை வடிவாக அமைக்கப்பட்டுள்ளார். வயோதிகராக வந்ததன் அடையாளமாக ஊன்றுகோலை வைத்துள்ளார். இரண்டு கிளிகளைத் தலைப்பில் கொண்ட அந்தக் கோல் கலை நயம் மிக்கதாக உள்ளது. மேலிரண்டு கைகளில் மானும் மழுவும் ஏந்தி முன் வலது கரத்தில் அபய முத்திரை தரித்துள்ளார்.

இது சிவபெருமானின் அற்புதத் திருக் கோலமாகும்.இத்தலத்து இறைவன் தான் தோன்றீசுவரர் (எ) சுயம்பு நாதர் அம்பிகை வாள் நெடுங்கண்ணி.

சிறப்புலி நாயனார்

ஆயிரத்திலொருவனாக இறைவன் வீற்றிருக்கும் ஆக்கூருக்கு மேலும் ஒரு சிறப்புள்ளது. அது அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான சிறப்புலி நாயனார் வாழ்ந்த திருத்தலம். நாயனார் அந்தணர் குடியில் தோன்றியவர். சிறந்த கொடையாளி. சிவனடியார்களுக்கு அமுதூட்டி அவர்கள் வேண்டியதெல்லாம்அளித்த அன்பர். நல்ல வேள்விகளைச் செய்தவர். வள்ளலாக விளங்கியவர்.

பெரிய புராணம் வனமுலையாள் சருக்கத்தில் இவருடைய சிறப்புக்கள் ஆறு பாடல்களில் கூறப்பட்டுள்ளன இவர் வீடுபேறு பெற்ற நாள் கார்த்திகை மாதத்து பூராட விண்மீனாகும்

பிட்சாடனர்- உண்பலி தேர் கபாலியான் -

சிவபெருமானின் சிறப்புமிக்க மூர்த்தங்களின் ஒன்று பிட்சாடன கோலமாகும். இது இறைவன் பலி பாத்திரமான பிட்சா பாத்திரத்தை ஏந்தி இரவலனாக இல்லங்கள்தோறும் எழுந்தருளி வருவதைக் குறிப்பதாகும்.

பண்டைநாளில் கல்வியை கற்கச் செல்பவர்களும் துறவு நெறியில் நிற்பவர்களும் தமக்கென உணவு சமைப்பதில்லை. இரந்துண்டு வாழ்வதே அவர்களின் நெறியாக இருந்தது. அவர்களுக்கு உணவளிப்பதன் மூலம் இல்லறத்தானின் கடமைகளில் சிறந்ததான அறவோர்க்களித்தல், துறவெதிர்கோடல் முதலியன நிறைவேற்றப் படுகின்றன. அந்த இரவலர் வாழ்வின் மேன்மையைக் குறிக்கும் வகையில் இறைவன் தானே இரவலனாக வருகின்றான். அவனைக் கல்வெட்டுக்கள் பிச்சைத்தேவர் என்கின்றன.

பெரிய சிவாலயங்கள் அனைத்திலும் அவனுடைய இரவலர் கோலம் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளது. பெருந்திருவிழாவில் எட்டாம் நாளில் அத்திரு மேனியை அலங்கரித்து உலாவரச் செய்கின்றனர். சில தலங்களில் ஸ்ரீ விமான கோட்ட மூர்த்தியாகவும் அவரைக் காணலாம்.

இவ்வடிவில் அவருக்கு முன்னே குண்டோதரன் பெரிய தட்டைத் தலை மீது சுமந்து கொண்டு செல்ல அழகிய மான் அவனைப் பின்தொடந்து வருகிறது. அவர் வலது கரத்திலுள்ள புல்லை அளிக்க மான்அதைத் தாவி உண் கிறது இறைவன் இடது கரத்தில் பலிப் பாத்திரத்தை ஏந்தியுள்ளான்.மேலிருகரங்களில் உடுக்கையும் சூலமும் உள்ளன.

திருமுறைகள் இந்தக் கோலத்தை நூற்றுக்கணக்கான இடங்களில் சிறப்பித்துப் போற்றியுள்ளன. இவ்வடிவம் தாருகாவனத்து ரிஷிகளின் ஆணவத்தை அடக்க மேற்கொண்ட கோலமென்று புராணங்கள் கூறுகின்றன.

இப்பெருமானின் பெருமைகளைப் போற்றும் வகையில் பழமலை பிட்சாடனர் நவமணி மாலை என்ற நூலை துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்

திருச்சிக்கு அருகில் பிட்சாண்டார் கோயில் என்னும் சிவத்தலம் உள்ளது. அதனுள் திருமால் உத்தமர் எனும் பெயரில் எழுந்தருளியுள்ளார். எனவே, உத்தமர் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இத்திருக்கோலத்தில் அமுது கேட்டு வருவதாகக் குறிப்பில்லை. பலி வேண்டுவதாகவே உள்ளது. (பலி- உணவு)

அறம் வளர்த்த நாயகி



"அறம்செய்தல்" உயிருக்கு மேன்மை அளிக்கிறது. இல்லையென்னாது அறம் செய்க என்பார் ஔவையார். மேலும் அறம் மறவற்க, அறமல்லது துணையில்லை என்ற தொடர்கள் சிந்தித்தற்குரியனவாகும். அறத்தின் மேன்மையை உணர்த்துவதுடன் அதன் வழியை விவரிப்பதாகத் திருக்குறளின் முதற் பால் அறத்துப் பால் என்று அழைக்கப்படுகிறது.

உலக முதல்வியான பராசக்தி காஞ்சிமாநகரில் மண்மேல் வந்து ஆகம முறையில் வழிபாடு செய்ததுடன் மனையறம் பெருக்கும் கருணையினால் காமகோட்டத்தில் வீற்றிருந்து அறம் செய்ய விரும்பினாள். அவளுடைய அறத்திற்கு (வித்தாக) முதலாகச் சிவபெருமான் "**இரு நாழிகை**" நெல்லை அளித்தார். அவள் அந் நெல்லைப் பலப்பல மடங்காக்கி முப்பத்திரண்டு அறங்களையும் திறம்படச் செய்தாள்.

அவற்றுள் முதல் அறமாக அமுதூட்டலும் அன்னம் பாலித்தலும் திகழ்ந்தன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெருமானிடம் "கச்சிமூதூர்க் காமகோட்டம் உண்டாக நீர் போய்ஊரிடும் பிச்சை கொள்வதென்னே ஓணகாந்தன்தளியுளீரே" என்று கூறி உவக்கின்றார். இதனால் அங்கு உணவு அளிக்கப்பட்டதை அறியலாம்.

காமகோட்டமாகிய காமாட்சியம்மன் கோயிலில் அம்பிகை அன்னபூரணியாக தனிச் சந்நிதியில் வீற்றிருக்கிறாள். தீபாவளியன்று இந்தச் சந்நிதியில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

அம்பிகை இங்கு அறம் வளர்த்ததால் அவள் 'அறப்பெருஞ்செல்வி' என்று அழைக்கப்படுகிறாள். அவள் அறம் செய்யும் அழகைப் பார்த்து ரசித்திருந்த பெருமான், அறம் வளர்த்தீசுவரர் என்றபெயரில் தனிக் கோயில் கொண்டுள்ளார்.

திருநெல்வேலியிலும் காந்திமதி அம்பிகை சிவபெருமானிடம் இரண்டு நாழிகை நெல்லைப் பெற்று அறம் வளர்த்தாள் என்று அவ்வூர்ப்புராணம் கூறுகிறது. இதையொட்டி அன்னை காந்திமதியை அன்னபூரணி என்றும் அறம் வளர்த்த நாயகி என்றும் அழைக்கின்றனர்.

அம்பிகை காஞ்சியில் அறச்சாலை அமைத்து அறம் வளர்த்ததைப் போலவே திருநெல்வேலியிலும் அறச்சாலை அமைத்து அறம்புரிந்தாள். அதையொட்டி திருநெல்வேலியைத் தென்காஞ்சி என்று அழைக்கின்றனர்.

திருவையாற்றிலும் அம்பிகை அறம் வளர்த்த நாயகியாக விளங்குகிறாள். வடமொழியில் இவளைத் தர்ம சம்வர்த்தனி என்றழைக்கின்றனர்.

சிவபெருமான் அன்பர்களைத் தேடிச் சென்று சோறிட்டு மகிழ்ந்ததைப் போலவே அம்பிகையும் தன்னை அழைத்த அன்பர்களை நாடிச் சென்று உணவூட்டி அருள்பாலித்திருக்கிறாள். அவற்றில் அண்மைக் காலத்தில் நடைபெற்ற இரண்டு நிகழ்ச்சிகளைக் காணலாம்.

திருவண்ணாமலையில் குகை நமச்சிவாயர் என்ற தவசீலர் இருந்தார். அவருடைய சீடர் குரு நமச்சிவாயர். அண்ணாமலையாரின் திருவருளைப் பூரணமாகப் பெற்றிருந்த குருநமச்சிவாயர் தமது குருவின் ஆணைப்படி சிதம்பரத்தை நோக்கிப் பயணமானார். வழியில் விருத்தாசலத்தை அடைந்த போது நள்ளிரவாகிவிட்டது.

அவருக்கு உணவளிப்பவர் யாரும் இல்லை ஆலயத்தின் வாயிலில் படுத்தார். பசியும் களைப்பும் அவரை வாட்டின. அவர் அம்பிகையை நோக்கிச் சோறளிக்குமாறு பாடல் ஒன்றைப் பாடினார். அவரிடம் திருவிளையாடல் நிகழ்த்தி அம்பிகை சோறு தந்தாள் என்று அவருடைய வரலாறு கூறுகிறது.

சென்ற நூற்றாண்டில் ஏழைகளின் பசிப்பிணி நீங்க தருமச்சாலை அமைத்து வாழ்ந்த மகான் அருட்பிரகாச வள்ளலார். அவர் சென்னையில் வசிந்து வந்தபோது ஒருநாள் இரவு கால தாமதமானததால் உணவைக் கருதாது திண்ணையில் படுத்திருந்தார். பசியும் களைப்பும் வாட்டிய அவ்வேளையில் திருஒற்றியூர் வடிவுடை அம்பிகை அவருடைய அண்ணியின்

வடிவில் வெளிப்பட்டு, அவருக்கு உணவு அளித்தாள். சற்று நேரத்தில் அவருடைய அண்ணியார் கதவைத் திறந்துகொண்டு உணவுடன் வர இப்போது தானே நீங்கள் உணவு அளித்தீர்கள் என்றார். இருவரும் நிகழ்ந்தது தெரியாது திகைத்தபோது அம்பிகை காட்சி யளித்தாள். அவரிடம் தாமே உணவு கொண்டு வந்து தந்ததாகக் கூறி மறைந்தாள். இந்நிகழ்ச்சியை அடிக ளார் தமது பாடல்களில் குறித்துள்ளார்.

மீண்டும் ஒருமுறை அடிகளார் ஒற்றியூர் ஆலயத் தில் உறங்கிக் கொண்டிருந்தபோது இறைவன் அர்ச்சகர் வடிவில் வந்து உணவு அளித்ததையும் அவர் வரலாற் றில் குறிப்பிடப்பட்டுள்ளது..

அன்னபூரணி உவந்த அமுது

சிவபெருமான் அடியவர்களின் இல்லங்களுக்குச் சென்று உணவு கேட்டதையும் அவர்கள் மிகப் பெரும் அன்புடன் அமுது படைத்ததையும் காணலாம். அதுபோன்றே அம்பிகையும் அன்பர்களின் இல்லத் திற்குச் சென்று உணவருந்தியதைக் காண்கிறோம்.

காரைக்குடிக்கு அருகில் கழனிவாசல் என்னும் கிராமம் இருக்கிறது. அது ஆதியில் வன்னி மரங்கள் அடர்ந்த காடாக இருந்ததால் சமீ வனம் என்றழைக்கப் பட்டது. பின்னர் அங்கு கோயில் அமைந்து பெரிய ஊரானதால் அது **கோயிலூர்** என வழங்குகிறது.

இவ்வூரில் சிவகுப்தன் என்பவன் தன் மனைவி சுதர்மையுடன் வசித்து வந்தான். அவர்கள் இவ்வூரி லுள்ள கொற்றவாளீசுவரரிடமும் அம்பிகையிடமும் பெரும் பக்தி கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஏராள மான நிலபுலன்கள் இருந்தன. அவர்களுக்கு ஓர் அழகி யமகள் இருந்தாள். அவளுடைய பெயர் ரத்தின வல்லி . அவள் காலையில் தோழியருடன் வயலுக் குச் சென்று அதைப் பார்த்துக் கொள்வாள். நண்பகலில் அவளுடைய அன்னை அவளுக்கு உணவு எடுத்துச் செல்வாள். அன்னை ஊட்ட அப்பெண் உணவு உண்டு மகிழ்வாள்.

ஒரு நாள் அப்பெண் வழக்கமான இடத்தில் இல்லா மல் அருகிலிருந்த தோட்டத்திற்கு விளையாடச் சென் றாள். விளையாட்டில் நேரம் போவதே தெரியாமல் மூழ்கி விட்டாள். உச்சிநேரம் கடந்துவிட்டது.

அவ்வேளையில் கோயிலூர் அம்பிகை அப்பெண் ணின் வடிவு கொண்டு அங்கிருந்தாள். அப்போது உணவு கொண்டு வந்த சுதர்மை அம்பிகையைத் தன் மகள் என்றே எண்ணி உணவு உண்ண அழைத்தாள். அம்பிகையும் தன்னை வெளிப்படுத்தாது அப்பெண் மணியிடம் அமர்ந்து அவள் அளித்த உணவை வாங்கி உண்டு மகிழ்ந்தாள். அது சுவை மிகுந்ததாக இருக்கிற தென்று பாராட்டினாள்.

சற்று நேரத்தில் விளையாடிக் களைத்த மகள் தோழியருடன் அங்கு வந்தாள். அந்த வேளையில்



அம்பிகை மறைந்தாள். அப்பெண் அன்னையிடம் சென்று உணவிடுமாறு கேட்டாள்.

அவளிடம் அன்னை, " இப்போதுதானே உனக்கு உணவூட்டினேன். நீ நன்றாக இருக்கிறதென்று சொல்லி உண்டாயே என்றாள். அப்பெண்நான் இங்கில்லையே. எனது தோழி யருடன் வேறிடதில் விளையாடிக் கொண்டி ருந்தேன். கால தாமதமாகிவிட்டதால் ஓடோடி வந்தேன் என்றாள். தோழியரும் அதுவே உண்மை என்றனர்.

அப்போதுதான்அம்பிகை தன் மகள் வடிவில் வந்து உணவுண்டு தன்னைப் பாராட்டியதை ,சுதர்மை உணர்ந்தாள். அம்பிகை தன் மீது கொண்ட அன்பி னால் எளிவந்து தான் அளித்த உணவை ஏற்றதை எண்ணிப் பெருமகிழ்வடைந்தாள். அந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது.

அன்று முதல் நெல் வயல்களைக் காத்ததால், அம்பிகை நெல்லை நாயகி என்று அழைக்கப் படுகிறாள்.

அமுது படையல் [நிவேதனங்கள்]

ஆலயங்களில் அருள்பாலித்து வரும் தெய்வங் களுக்குப் பலவகையான உணவு வகைகளைப் படைப் பது அமுதுபடையல் எனப்படும். இந்த உணவுகளைச் சமைப்பதற்கு ஆலயங்களில் தென்கிழக்கு முனையான அக்னித் திக்கில் திருமடைப்பள்ளி என்ற பெயரில் சமை யலறை அமைக்கப்பட்டிருக்கும். இதனை வடமொழியில் பசனாலயம் என்று அழைக்கின்றனர்.

இதனுள் கிணறு அமைந்திருக்கும். அதில் அன்ன பூரணி தீர்த்த வடிவில் இருப்பதாக நம்புகின்றனர். இதனுள் பெரிய கற்பலகை இருக்கும். இது சோற்றை ஆறவைப்பதற்கும் புளிசாதம், தயிர் சாதம் முதலியவற் றைத் தயாரிப்பதற்கும் பயன்படுவதாகும்.

முன்னாளில் நித்தியாக்னியிலிருந்து (அணையா நெருப்பு) அக்னி கொண்டு வந்து அடுப்பைப் பற்ற வைக்கும் வழக்கம் இருந்தது.

ஒவ்வொரு காலபூசைக்கும் புதியதாக அமுது சமைக்கப்பட்டு சுவாமிக்கு நிவேதிக்கப்படும். திருமடைப் பள்ளியிலிருந்து இறைவி அமுதுடன் வருவதான பாவ னையுடன் நிவேதனத்தை குடை, மேளதாளம் தீவட்டி யுடன் கொண்டு வரும் வழக்கம் உள்ளது.

சமைப்பதற்கு உரிய பொருட்கள் அனைத்துமே அமுது என்ற சொல்லால் அழைக்கப்படுகின்றன. எடுத் துக்காட்டாக தயிர், மிளகு, தண்ணீர், நெய் முதலியன முறையே தயிரமுது (தயிர்) மிளகமுது, நீரமுது, நெய்ய முது என்று அழைக்கப்பட்டதைப் கல்வெட்டுத் தொடர் களால் அறிகிறோம்.தண்ணீரும் நீரமுது என்ற சொல் லால் குறிக் கப்பட்டது. இறைவனுக்குத் தூய நீரை நிவே திப்பதற்குக் கட்டளைகள் ஏற்பட்டிருந்தன. ஆற்றி லிருந்து தூய நீர் எடுத்து வந்து நிவேதிப்பது ஆற்றுநீர் அமுது செய்தருள்வதுஎன்று குறிக்கப்பட்டுள்ளது. மடைப்பள்ளியில் அடுப்பிலிட்டு எரிக்கும் விறகுகளை எரிகரும்பு மங்கலச் சொல்லால் குறிக்கின்றனர்

உணவு சமைப்பதற்கு உயர்ந்த செந்நெல் பயன்படுத்தப்பட்டது. பழைய அரிசியைப் பயன்படுத்து வது சிறந்ததாகப் போற்றப்பட்டது. இதனை செந்நெல், பழவரிசி எனவரும் கல்வெட்டுச் செய்திகளால் அறி யலாம்.

ஆதியில் மட்பாண்டங்களில் வைத்து நிவேதிப்பதே வழக்கம். நாள்தோறும் புதிய பாண்டங்களில் சமைத்து நிவேதிக்கப்பட்டது. இதற்காக மண்பாண்டங்களைச் செய்து தந்தவர்கள் கலமிடுவோர் என்று அழைக்கப் பட்டனர். அவர்கள் அப்பணியைச் செய்ய நிலமளிக்கப் பட்டிருந்ததுடன் நிவேதனத்தின் ஒரு பகுதியையும் பெற்றனர்.

ஒரு தட்டில் நடுவில் சோற்றை இட்டு அதன்மீது பருப்பை இட்டு நெய்யூற்றிக் கிண்ணங்களில் கூட்டு, பொறியல், குழம்பு, இரசம், தயிர் ஆகியவற்றையும் வடை, முறுக்கு, சுகியன் ஆகிய பலகாரங்களையும் வைத்து படைத்தனர். இதன்பெயர் குமுமத் தளிகையாகும். இந் நாளில் குழித்தளிகை எனப்படுகிறது (குமுமம்- ஒருங்கு இணைந்தது) வைணவ ஆலயங்களில் இதனை அலங் காரத் தளிகை என்பர்.

நிவேதனத்துடன் செவ்விளநீர், வெற்றிலை பாக்கு ஆகியனவும் நிவேதிக்கப்பட்டன வெற்றிலை வெற்றி லை அமுது என்றும், பாக்கு அடைக்காய் அமுது என்றும் அழைக்கப்பட்டன. வாழைப்பழமும் நிவேதிக்கப்படுகிறது.

கஞ்சி வடிக்கப்பட்ட அமுது சோறு எனப்படும். கஞ்சி யை வடிக்காமல் அப்படியே நீரை அரிசியுடன் அளவாக வைத்துப் பொங்கியது போனகம் எனப்படும். கல்வெட்டு களில் அரிசியுடன் பருப்பைச் சேர்த்து குழைவாகப் பொங்கி யது பருப்புப் போனகம் என்றும், கற்கண்டு அல்லது வெல்லத்துடன் சேர்த்துப் பொங்கியது கன்னல் போனகம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டியில் போனகம் செய்து அப்படியே படைப்பது வழக்கம்.நிவேதனங்களைக் குறிக்க கல்வெட் டுக்களில் போனகம் என்ற சொல் பயன்படுத் தப்படு கிறது. இறைவன் சண்டீசருக்குப் பெரும்பதம் நல்கி தனக் கருகில் பொற் கோயிலையும் உண்பனவும் சூடுவனவும் அளித்ததை போனகமும் பொற் கோயிலும் அருளி என்று குறித்துள்ளார். திருநாவுக்க ரசருக்கு அப்பூதி அடிகள் அமுதிட்டதை சேக்கிழார் போனகமும் கறி யமுதும் வேண்டுவன வெவ்வேறு விதங்கள் பெற அமைத்து அமுதுசெய்வித்தார் என்று கூறுகிறார்.

காய்கறிகளை எண்ணெயில் பொறித்து தயாரிக் கப்பட்டது பொறிக்கறி அமுது என்றும், தண்ணீரிலோ, நீராவியிலோ வேக வைத்து தயாரித்தது புழுக்கறி அமுது (புழுகல் நீரில் வெந்தது) என்றும் புளிசேர்த்து சமைக்கப்பட்டது. புளிங்கறி அமுது என்றும் அழைக்கப் பட்டன. வாழைக்காய், அவரைக்காய், கத்திரிக்காய் முதலியன அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன.

சுண்டல்கள் வெச்சபயிர் அமுது என அழைக்கப் பட்டன. பயிறுகளை அவித்துத் தாளித்துச் சுண்டல்கள் தயாரிக்கப்பட்டன.

ஆலயங்களில் உணவு சமைக்கும் பணியாளர் மாணி (பிரம்மச்சாரி), பிராமணப் பிள்ளை, தபசிப் பிள்ளை எனப் பலவாறு அழைக்கப்பட்டனர்.

பெருந்திருவமுது

ஆலயங்களில் பெரிய அளவில் செய்யப்படும் நிவேதனம் பெருந்திருவமுது எனப்பட்டது. இதனைப் பாவாடம் எனவும் அழைப்பர். அரிய விருந்தென்றும் பொருள். மகாமண்டபத்தில் தென்னங்கீற்றைப் பின்னி அதன்மீது துணியை விரித்து அதன்மீது மரக்கால் கணக்கில் அரிசியை வடித்து இட்டு சுற்றி சோறும் கறிகளும் பரிமாறி நீர் நிறைந்த குடங்கள் வைத்து, அனேக கனிவகைகளுடன் நிவேதிப்பதே பெருந்திருவமுது ஆகும். இந்நாளில் இது அன்னப் பாவாடை என்று அழைக்கப்படுகிறது.

சிதம்பரத்தில் அன்பர்களின் வேண்டுதலுக் கேற்ப அன்ன பாவாடம் நடத்தப்படுகிறது. இது சம்பா பாவாடம், கல்கண்டு சாத பாவாடம், சாம்பார் சாத பாவாடம் எனப் பலவகைப்படும். இதில் சம்பா பாவாடம் எனப்படும் மிளகுசாத பாவாடம், சிறப்புமிக்கதாகும். அதனுடன் கத்தரிக்காய் கொஸ்து எனப்படும் கறி நிவேதிக் கப்படுகிறது

திருவெண்காட்டில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட் டில் பெருந்திருவமுது செய்யப்பட்டது குறிக்கப்பட்டுள்ளது.

திருப்பெருந்துறையில் தென்னங்கீற்றின் மீது பாகற் காய் குழம்பு சாதம் கத்தரிக்காய் பொறியல் சர்க்க ரைப் பொங்கல் வடை முறுக்கு முதலியவற்றைப் பரப்பி நிவேதிக்கின்றனர்.

மந்திரபோனகம்



மந்திரம் என்பதற்கு மறைவானது. ரகசியம் என்பது பொருள். சிறப்புமிக்க ஆலயங்களில் ரகசிய பூஜை முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. அந்த ரகசியப் பூஜையின்போது நிவேதிக்கப் பட்டவை மந்திரப் போனகம் எனப் பெயர் பெற்றன. திருவாரூர், சிதம்பரம் முதலிய தலங்களில் ரகசிய பூஜைகள் நடைபெறுகின்றன. திருப்பெருந்துறையில் இரண்டாம் காலபூசை முடிந்ததும் ரகசிய பூஜை நடைபெறும். அப்போது புட்டு, வடை, தோசை, அதிரசம், அப்பம், தேன்குழல் ஆகியவை நிவே திக்கப்படுகின்றன. இது முன்னாளில் பழைய பாரம்பரியப்படி மூங்கில் கூடையில் வைத்து நிவேதிக்கப் படடதால், புட்டுக்கூடை நிவேதனம் என்று அழைக்கப் படுகிறது.ரகசிய பூஜையின்போது திரையிட்டு விடுவர். அர்ச்சகர் மட்டுமே உள்ளே இருந்து நடத்துவார். மணிகூட ஒலிக்கப்படுவதில்லை

பலி

"பலி" என்பதற்கு உரிமையால் பெறப்படும் உணவு என்றும், தானியங்களின் கலப்பு என்றும் பொருள் கூறுகின்றனர். இறைவன் உயிர்களிடம் உரிமையுடன் பெற்று உண்பதால் அது பலி எனப்பட்டது. திருமுறை களில் இறைவன் ஏற்கும் உணவு பலி என்றே பல நூறு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன. 'உண்பலி தேர் அம்பலன் ; உண்மகிழ்ந்து பலி தேரியு வந்து எனதுள் ளம் கவர்கள்வன், பாரிடம் சூழ வாரிடமும் பலிதேர்வார்' எனவரும் தொடர்களால் இதை அறியலாம்.

இறைவன் தாம் படைத்த உயிர்கள் வாழ்வதற்கு அருளும் உணவும் பலி என்றே அழைக்கப்படும். இறை வன் காலையும் மாலையும் உலா வந்து திக்குப் பாலகர் களுக்கும் பிரம்ம சந்தி என்ற பெரும் பலிபீடத்திலும் உணவுருண்டைகளை இட்டுப் பலி அளிக்கிறான். இந்த நித்தியவிழா **ஸ்ரீபலி** எனப்படுகிறது. நடைமுறையில் ஸ்ரீவேலி என்று அழைக்கின்றனர். இதில் சிறிய சந்திர சேகர மூர்த்தியைப் பல்லக்கில் வைத்து உட்பிரகாரத்தில் வலம் வரச் செய்து பத்து திசைகளிலும் பலி அளிக்கப் படும். கல்வெட்டுக்களில் இது பலி கொட்டுதல் என்று குறிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீபலி விழாவை நடத்துவதால் உலக உயிர்கள் நல்ல உணவைப் பெற்று நலமுடன் வாழும் என்று கூறப்படுகிறது.. திருஞான சம்பந்தர் திருமயிலையில் அருளிய பூம்பாவைப் பதிகத்தில் பங்குனி உத்திர விழாவைப் பலி விழா என்று குறித்துள்ளார். இதற்கு உரையாசிரியர்கள் சிவகணங்களான உருத்திரர்க ளுக்கு உணவூட்டும் விழா என்று பொருள் கூறியுள்ள னர்.ஆகமங்களில் பலி எனப்படும் உணவூட்டல் வேதங் க ளில், அவிர் பாகம் என்று குறிக்கப்படுகிறது. தமிழில் அவி என்பர். பலி இடுவதற்கு அமைக்கப்பட்டுள்ள தாமரைமொட்டு போன்ற பீடங்கள் பலி பீடங்கள் என்றே அழைக் கப்படுகின்றன.இவை ஆலயத்தின் எட்டுத் திக்கிலும் கொடி மரத்திற்கு முன்னுமாக அமைக்கப் பட்டுள்ளன.

அமுது படையல்

ஆலயங்களில் தினமும் மூன்று சந்திகளிலும் செந்நெல் அமுதுடன் கறிகள், பண்ணியங்கள் முதலியன படைக்கப்பட்டன. மாலையில் தோசை, வடை முதலியனவும், பள்ளியறைப் பூசையில் சம்பாசாதமும் (மிளகு சாதம்) நிவேதிப்பது பொது வழக்கமாக உள்ளது. இவையன்றிச் சிறப்புத் திருவிழா நாட்களில் அதற்கென தனி வகையான உணவு வகைகள் சமைக்கப்பட்டு நிவேதிக்கப்படுகின்றன. அவற்றில் சிலவற்றைக் காணலாம்

சித்திரை மாதப் பௌர்ணமியில் பலவகையான அன்னங்கள் நிவேதிக்கப்படுகின்றன. எள்ளுசாதம், எலுமிச்சம்பழ சாதம், தேங்காய் சாதம், மாங்காய் சாதம், புளி சாதம், கொள்ளுசாதம் முதலியவற்றை ஒரே தாலத்தில் இட்டு நிவேதிக்கின்றனர். இவற்றை சித்திரான்னங்கள் என்பர்.

சித்திரை மாதஅஷ்டமியில் வைரவமூர்த்திக்கு அமுது படையல் விழா சிறப்பாக நடைபெறுகிறது. இதில் வைரவருக்குச் சீராளன் கறி நிவேதிக்கப்படுகிறது. அரிசி பருப்பு சேர்த்து அரைத்து வேகவைத்து அதை உதிர்த்து தாளித்து சீராளன் கறி சமைக்கப்படுகிறது. மற்றோர் வகையில் தேங்காய் துருவல், சுக்கு, மிளகு, திப்பிலி, லவங்கம் இவற்றை இடித்துப் பொடித்தும் இது சமைக்கப்படும்.

வெயிலின் கொடுமை மிகுந்த வைகாசி மாதத்தில் பானகம், நீர்மோர், வெள்ளரிப் பிஞ்சுகள் முதலியன நிவேதிக்கப்படும்.விழா நடந்த பின் இறைவனுக்கு அயர்ச்சி தீர வடபருப்பு (ஊறவைத்து இஞ்சி மிளகாய் சேர்த்து) நிவேதிக்கப்படும்.

ஆவணி மாதத்தில் பிட்டு உற்சவம் அனைத்து சிவாலயங்களிலும் கொண்டாடப்படுகிறது. இது சிவ பெரு மான் மணிவாசகர் பொருட்டு நரியைப் பரியாக்கிச் செய்த திருவிளையாடலின் தொடர்ச் சியாகும். வந்தி என்னும் வாணியப் பெண் அளித்த உதிர்ந்த பிட்டை உண்டு அவள் பங்கிற்கு வையைக் கரையின் உடைப்பை அடைக்கச் சென்று, அதைச் செய்யாது பாண்டியனிடம் பிரம்படிபட்டு நிகழ்த்திய திருவிளையாடலைக் குறிப்பதாகும். இந்த நிகழ்ச்சியின் பெயரால் மதுரையில் நடைபெறும் ஆவணித் திருவிழா புட்டு உற்சவம் என்று அழைக்கப்படுகிறது. வந்தி வாணிய செட்டியார் இனத்தில் தோன்றிய பக்தை எனவே, இந்தத்திருவிழாஅந்தச் சமூகத்தாரால் சிறப்புடன் நடத்தப் படுகிறது.

அம்பிகை ஆலயங்களில் இது பூப்புத்திருவிழாவாக நடைபெறுகிறது.

ஐப்பசி மாதம் கேதாரீசுவரர் நோன்பின்போது இருபத்தோருவிதமான நிவேதனங்கள் செய்யப்படும். குறிப்பாக அதிரசம் நிவேதிக்கப்படுகிறது.

கார்த்திகை தீப நாளில் அரிசி அவலால் செய்த பாயசம், பொறி உருண்டைகள் நிவேதிக்கப்படும். மார்கழி மாத திருவாதிரை நாளில் களி நிவேதிக்கப்படுகிறது. அரிசியை வறுத்து மாவாக்கி வெல்லத் தண்ணீரில் கலந்து வேகவைத்து களி செய்கின்றனர். களியுடன் (அவரை, மொச்சை வாழைக்காய் முதலிய) காய்கறிகளின் கூட்டு நிவேதிக்கப்படுகிறது.

திருவாதிரைக்கு ஒருவாய் களி என்பது பழமொழி சிதம்பரத்தில் திருவாதிரை நாளில் களி நிவேதனம் சிறப்புடன் நடைபெறுகிறது. இந்நாளில் இல்லங்கள் தோறும் களிசெய்து நிவேதித்து அன்பர்களுக்கு அளிக்கின்றனர்.

நடராசப் பெருமான் களியுண்டு அதைச் சிந்தி திருவிளையாடல் புரிந்ததைச் சேந்தனார் வரலாற்றில் காண்கிறோம். சேந்தனார் பட்டினத்தாரிடம் கணக் காளராக இருந்தவர். அவர் எல்லாவற்றையும் துறந்து துறவியான பின் இவர் சிதம்பரம் வந்து விறகுவெட்டி வாழ்ந்து வந்தார். அந்நிலையிலும் தினமும் அடியவருக்கு அமுதூட்டும் பணியைச் செய்து வந்தார். ஒரு சமயம் சிவ பெரு மானே அடியவர் திருவேடத்துடன் அவர் வீட்டுக்கு வந்தார். சேந்தனார் அளித்த களியை உண்டார். தான் நடந்து சென்ற தடத்தை களியை சிந்திக் காட்டியும், திருமேனியில் களியைக் காட்டியும் சேந்தனாரின் பக்தியை உலகிற்கு உணர்த்தினார்.

தைமாதம் பொங்கலுக்கு உரியது. பெண்கள் நெய்யிட்டு பொங்கிய வெண்பொங்கலைச் சமைத்து ஆண்டவனுக்கு நிவேதித்து அடியவர்களுக்குத் தந்தனர். நெய்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம் என்று திருஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ளார். (நெய்பூசும் ஒண் புழுக்கல் - வெண்பொங்கல்)

மாசி மாதம் சிவராத்திரியில் பயறுகளை அவித்து சுண்டலாக்கி நிவேதித்தனர்.உறங்காது இரவுப் பொழுதைக் கழிக்க பலவித சுண்டல்கள் அளிக்கப்பட்டன.

தேன்குழல், முறுக்கு, தோசை, அப்பம், வடை, மோதகம், குப்பாயம், கொழுக்கட்டை, பணியாரம் முதலிய அனேக வகை உணவுகள் நிவேதிக்கப்படுகின் றன.

நிவேதனப் பொருள் அளித்துச் சிவப்பேறு பெற்ற அரிவாட்டாய நாயனார்

சிவாலயங்களில் நிவேதனம் செய்யப் பொருட் களை அளிப்பது பெரும்புண்ணியமாகும். அத்தகைய புண்ணியச் செயலில் ஈடுபட்டவர் அரிவாட்டாய நாயனார். இவருடைய இயற்பெயர் தாயனார்.

சோழநாட்டிலுள்ள கணமங்கலம் என்ற ஊரில் வேளாண்குடியில் தோன்றியவர். பெருஞ்செல்வராக விளங்கியவர். இவருடைய ஊருக்கு அருகிலுள்ள தலம் தண்டலை. அங்கு நீள்நெறி என்ற சிவாலயம் உள்ளது. அக்கோயிலுக்கு அமுதுபடியாக நாயனார் தினமும் செந்நெல், மாவடு, செங்கீரை ஆகியவற்றை அளித்து வந்தார்.

காலகதியில் இவருடைய செல்வம் முழுவதும் வற்றி வறுமையுற்றார். இருப்பினும் கூலிவேலை செய்து அதன் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு தன் பணியைக் குறைவறச் செய்து வந்தார். கூலிப் பணம் குறைவாகக் கிடைத்தால் அதில் வாங்கிய நெல்லை கோயிலுக்கு அளித்துவிட்டு கீரைகளைச் சமைத்து உண்பார். அதுவும் கிடைக்காதபோது தண்ணீரை மட்டுமே அருந்தினார். இவருடைய மனைவியும் கணவனுக்கேற்ற காரிகையாக மனமொத்து விளங்கினாள். காலங்கள் கடந்தன. இருவருக்கும் தள்ளாமையும் வந்தது.

ஒரு நாள் இருவரும் தமது பணியைச் சிரமேற் கொண்டு தண்டலை நீள்நெறியை நோக்கி நடந்தனர். நாயனார் கூடையில் செந்நெல், செங்கீரை, மாவடு ஆகியவற்றை எடுத்துக் கொண்டார். மனைவி இறைவ னுக் குரிய பஞ்சகவ்யம் முதலானவற்றைத் எடுத்துக் கொண்டார்.

ஒரு திடல் வழியாக அவர்கள் பயணம் செய்த போது நாயனார் கால் இடறி வீழ்ந்தார். அவருடைய மனைவி அவரைத் தாங்கிப் பிடித்தும், அவருடைய கூடை கீழே விழுந்து அதிலிருந்த யாவும் சிதறின. அங்கிருந்த வெடிப்புகளில் நெல்லும், கீரையும் விழுந்தன. நாயனார் நிதானித்தார்.

ஐயனே, நான் இனி கோயிலுக்குப் போய் என்ன பயன்? நீங்கள் இங்கேயே வந்து அமுது செய்ய வேண்டும். அப்படியின்றேல் உயிர்தரியேன் என்று கூறித் தனது கழுத்தை அரிந்து கொள்ளத் தொடங்கினார்.

அவ்வேளையில் பூமிவெடிப்பிலிருந்து ஒரு கை தோன்றி அவருடைய கையைப்பிடித்துக் கொண்டது. விடேல், விடேல் என்ற ஒலி பிறந்தது. (விடேல் விடேல் என்ற ஒலி தாயனார் அளித்த மாவடுவை இறைவன் கடித்துச் சுவைத்ததைக் காட்டும் ஒலிக் குறிப்பாகும். விண்ணில் விடைமீது உமாதேவியுடன் பெருமான் அங்குத் தோன்றினார். அவர்களுக்கு அருள் புரிந்து தம்முடன் அழைத்துக் கொண்டார்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான அரிவாட்டாய நாயனாரின் வரலாறு பெரிய புராணத்துள் இலை மலிந்த சருக்கத்துள் 23 பாடல்களில் கூறப்பட் டுள்ளது.



கணமங்கலம் திருத்துறைப் பூண்டிக்கு அருகில் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கணமங்கலம் முற்றிலும் அழிந்துவிட்டது. அதன் அருகில் இறைவன் நாயனாரை ஆட்கொண்ட கணமங்கலத் திடல் உள்ளது. அங்கு நாயனாருக்கு அருள்வது புடைப்புச் சிற்பமாக உள்ளது.

அரிவாட்டாய நாயனார் குருபூசைவிழா தை மாதப் பெருந்திருவிழாவின் அங்கமாக அறுப்புத் திருவிழா என்ற பெயரில் கொண்டாடப்பெறுகிறது.

தண்டலையிலுள்ள ஆலயம் நீள்நெறி என்று அழைக்கப்படுகிறது. இறைவனுக்கு அடியவர் அமுதூட்டிய காரணத்தால் இவ்வூர் ஊட்டித் தண்டலை என்றும் அழைக்கப்படுகிறது. இறைவர் நீள்நெறி நாதர் இறைவி ஞானாம்பிகை.

தலபுராணக் காட்சியாக அரிவட்டாயர், அவர் மனைவி அரிசியும் மாவடுவும் நிலத்தில் கொட்டுதல். நாயனார் கழுத்தை அரிய முற்படுதல், சுவரிலிருந்து கை வெளிப்படுதல், இறைவன் இடபாரூடராகக் காட்சியளித் தல் ஆகியன புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட் டுள்ளன. நாயனார் தம் மனைவியுடன் வீடு பேறு பெற்ற நாள் தை மாதத்துத் திருவாதிரை நன்னாளாகும்.

அறுபத்து மூவர் வரிசையில் நீண்டு வளைந்த அரிவாளைத் தாங்கியவாறு தலைப்பாகையுடன் நாயனார் கூப்பிய கரங்களுடன் காட்சியளிக்கிறார்.

அமுதுபடிகளைப் பாதுகாத்துப் பகிர்ந்தளித்தவர்கள்

நிவேதனத்திற்கு (அமுதுபடிக்கு) உரிய உணவுப் பொருளைச் சேகரித்து அளிப்பதைப் போலவே அவற்றைப் பாதுகாப்பதும் பகிர்ந்தளிப்பதும் புண்ணியச் செயல்களாகும். அமுதுபடிக்காக சேர்த்து வைத்திருந்த நெல்லை உறவினர்கள் எடுத்து உண்டதால் அவர்களைத் தண்டித்துப் பேறு பெற்ற அடியவரையும் தனது கொட்டாரத்திலிருந்த நெல்லைச் சிவப்பணிக்காகக் களவாடிய அன்பரைக் கண்டு வணங்கி, அவருக்கு வேண்டியவாறு நெல்லும் பொன்னும் அளித்த அடியவரையும் பெரியபுராணத்தில் காண்கிறோம். அவர்கள் வரலாற்றைக் கீழே காணலாம்.

நெல்லைப் பாதுகாத்த நாயன்மார்

நாட்டியத்தான்குடி என்னும் தலத்தில் வாழ்ந்த வீரர் கோட்புலியார். வேளாளர்குலத்துதித்தவர். சோழர்களுக்காகப் போர் புரிந்து பெரும் பொருளீட்டியவர்.

அப்பொருளால் அமுதுபடிக்காக மலை போல நெல் வாங்கி சிவாலயங்களுக்கு வேண்டியவாறு அளித்துவந்தார் ஒரு சமயம் அவர் மன்னரின் படைக்குத் தலைமை தாங்கி நெடுந் தூரம் செல்ல வேண்டியிருந்தது."

உறவினர்களை அழைத்து,, அவர்களிடம் இங்கே குவித்து வைக்கப்பட்டுள்ள நெற்கோட்டைகள் யாவும் சிவப்பணிக்குரியன. நீங்கள் இவற்றை எடுக்க மனதாலும் நினைக்கக் கூடாது. இது " திருவிரையாக்கலி" என்று ஆணை யிட்டுத் தெரிவித்தார்.

அவர் சென்று பலநாட்களாயின. பஞ்சம் தோன்றியது. உறவினர்கள் ஒன்று கூடினர். நாம் பட்டினியால் இறப்பதைவிட நாயனார் சேர்த்து வைத்திருக்கும் நெல்லை எடுத்து உண்டு பிழைக்கலாம். பிறகு வளம் வரும் போது கொடுத்து விடலாம் என்று முடிவெ டுத்தனர். அதன்படி அங்கிருந்த நெல்கூடுகளைப் பிரித்து நெல்லை எடுத்துக் கொண்டனர்.

நாட்கள் கழிந்தன. நாயனார் போர் முனையில் வெற்றிபெற்று பெரும்பொருளுடன் ஊருக்குத் திரும்பினார்.

வந்ததும்" விரையாக்கலி" என்று தாம் ஆணையிட்டதையும் மீறி உறவினர் நெற்கூடுகளை அழித்தைக் கேட்டுக் கோபித்தார். இவர்களைக் கொல்வதே முறை என்று முடிவு செய்தார்.

பணியாளர்களிடம் " நீங்கள் உறவினர் எல்லோரையும் ஓரிடத்தில் சென்று கூடும்படி கூறுங்கள் என்றார். ஏவலர்கள் அனைவரையும் ஓரிடத்தில் கூட்டினர்.

கூடியிருந்தவர்களிடம், நீங்கள் இறைவன் மீது இட்ட ஆணையையும் மீறி நெல்லை எடுத்துண்டீர்கள். உங்களைக் கொல்வதே சரி என்று கூறி விரைந்து வாளால் அனைவரையும் வெட்டிச் சாய்த்தார்.

எஞ்சியிருந்த ஒரு குழந்தையை வெட்ட முனைந்தார். அப்போது சேவகன் இது நெல் சோற்றைத் தின்னாதது. மேலும் குடிக்கொரு குழந்தை என்றான். நாயனார் நெல்லை உண்ணவில்லை என்றாலும், இது இந் நெல்லை உண்டாளின் முலைப்பாலை உண்டது என்று கூறி வானில் எறிந்து வாளால் ஏந்த அது வெட்டுண்டு மடிந்தது.

அந்நிலையில் சிவபெருமான் வெளிப்பட்டார். அன்பனே!" உன் வாளால் இவர்கள் எல் லோரும் பாசம் அற்றனர். இவர்களை முக்தி உலகம் அனுப்புகிறேன். நீ என்னுடன் வருக என்று அழைத்துக் கொண்டு மறைந் தார்.

கோட்புலி நாயனார் அறுபத்துமூவரில் ஐம்பத்து ஏழாவது நாயன்மாராகப் போற்றபடுகிறார். இவர் வீடு பேறு பெற்ற நாள் ஆடி மாதத்து கேட்டை விண் மீனாகும்.

இனி சிவப்பணிக்காக களவாடிய அன்பருக்கு நெல்கோட்டை அளித்த நாயனார் வரலாற்றை அறிந்து மகிழலாம்

அடியவர் அளித்த நெற்கோட்டை

கொடும்பாளூர் என்ற தலத்தில் இடங்கழியார் என்ற அரசர் வாழ்ந்து வந்தார். அவர் கோயில்களில் சிறப்பான வழிபாடுகள் நன்கு நடைபெற வகை செய்து மகிழ்ந்திருந்தார்.

அந்நாளில் ஓரன்பர் சிவனடியார்களுக்கு அமுதூட்டும் பணியை இடைவிடாது செம்மையாகச் செய்து வந்தார். ஒருநாள் அவருடைய பணிக்கு தடை வந்தது,. அவர் அரசனுடைய கொட்டாரத்தில் நெற் கோட்டைகள் இருப்பதை அறிந்தார். வேறு செயல் அறியாது இரவில் அங்குச் சென்று நெல்லை எடுத்தார். காவலர்கள் அவரைப் பிடித்துச் சென்று இடங்கழியார் முன்னே நிறுத்தினர்.

சிவவேடப் பொலிவுடன் விளங்கும் அவரைக் கண்ட இடங்கழியார் ஏன் இப்படிச் செய்தீர் என்று வினவினார். அரசே நான் அடியவர்களுக்கு அமுதூட்டும் பணியைச் செய்து வருகிறேன். அப்பணிக்குத் தடை ஏற்பட்டதால், இவ்வாறு செய்தேன் என்றார்.

இடங்கழியார்" உண்மையான பண்டாரம் (பொக்கிஷம்) இவரே" என்று அவரைப் போற்றினார். பின்னர் ஈசன் அடியார்களை எல்லாம் நோக்கி, நெற்கோட்டைகள் மட்டுமல்ல வேண்டிய நிதியங் களையும் எடுத்துக் கொண்டு செல்க " என்று பறை அறிவித்தார். இப்பணியை அவர் மேலும் சிறப்புடன் நடத்தி வீடுபேறு அடைந்தார். இடங்கழியார் வீடுபேறு பெற்ற நாள் ஐப்பசி மாதக் கார்த்திகை நன்னாளாகும்.

நெல்லுக்கு வேலியிட்ட நிமலன்

இனி அந்தணன் ஒருவன் அமுதுபடிக்கு வைத்திருந்த நெல்லுக்குப் பெருமான் வேலியிட்டுக் காத்த வரலாற்றைக் காணலாம்.



வடநாட்டில் வேதசன்மா என்னும் அந்தணன் மிகுந்த சிவபக்தியுடன் விளங்கினான். தென்னாட்டுக்கு வந்த அவனைச் சிவபெருமான் வேணுவனத்தில் குடியிருக்கும்படிச் செய்தார். அவன் மிகுந்த பக்தியுடன் சிவபூசை செய்து வந்தான். ஒரு சமயம் நாட்டில் பஞ்சம் தோன்றியது உணவுப் பொருட்கள் கிடைப்பது அரிதா யிற்று என்றாலும், அவன் பலவீடுகளில் யாசித்துத் தானியங் களைத் திரட்டி வந்து அமுதாக்கி வேணுவன நாதருக்கு அமுது படைத்து வந்தான்.

ஒரு நாள் அப்படிச் சேர்ந்த நெல்லை சந்நிதி முற்றத்தில் உலர்த்திவிட்டு ஆற்றில் நீராடச் சென்றான். அவனுடைய பக்தியை உலகினருக்கு உணர்த்த விரும்பிய சிவபெருமான் அப்போது மழை வரும்படிச் செய்தார். மேகங்கள் திரண்டன. மின்னல் மின்னி இடியோசையுடன் கடும்மழை பொழியத் தொடங்கியது.

அந்தணன் மனம் பதைபதைத்தான். பெருமா னின் அமுதுபடிக்காகச் சேர்த்த நெல்லா யிற்றே. அதை மழை கொண்டு போய் விட்டால் என் செய்வேன் பூசைக்குத் தடை உண்டா குமே என்று வருந் தினான். பின்னர் பெருமானே அந வரத நாயகனே! அந்த நெல் லைக் காத்தருள்க என்று ஓலமிட் டான்.

ஓடோடி ஆலய முற்றத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கே அவன் கண்ட காட்சி திகைக்க வைத்துவிட்டது. நெல்லைச் சுற்றி வெள்ள நீரே இரண்டடி உயரத்திற்கு வேலி போல அமைந்திருந்தது. சுற்றிலும் மழை உக்கிரமாகப் பொழிந்து கொண்டிருக்க நடுவில் நெல்லின் மீது மட்டும் வெயில் காய்ந்து கொண்டிருந்தது. அனைவரும் அதைக் கண்டு அதிசயித்தனர்.

அவன் பெருமானின் கருணையை கண்டு வியந் தான். அமுதுபடிக்கான நெல்லை வேலியிட்டுக் காத்த தால், வேணுவனப் பெருமான் அன்று முதல் நெல்லை யப்பரானார். அத்தலமும் திருநெல்வேலி என்று அழைக் கப் படுவதாயிற்று (இவ்வரலாறு திருநெல்வேலி புராணத்தில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.)

ஆனி மாதம் நடைபெறும் பெருந்திருவிழாவின் போது நான்காம் நாள் நெல்லுக்கு வேலியிட்ட திருவிளையாடல் ஐதீக விழாவாக நடத்தப்படுகிறது.

சிவபெருமானுக்கு நெல்லையப்பர் என்ற பெயர் இருப்பது போலவே அம்பிகைக்கு நெல்லைநாயகி என்ற பெயர்வழங்குகிறது. கோயிலூர்எனும் தலத்தில் நெல்லை நாயகியைக் காண்கிறோம். வடமொழியில் அவளைச் சாலிவாடீஸ்வரி என்றழைக்கின்றனர்.

உலவாக் கோட்டை அருளியது


அன்னம் படைத்தல் என்பது உரிய நேரத்தில் பசிப்பிணியைப்போக்கி உடலுக்கும் அதன் மூலம் மனதிற்கும் இதமளிப்பதாகும். அன்னம் படைத்தற்கு அடிப்படைத் தேவை நெல்லும் தானிய மணிகளுமாகும். உணவு படைக்கும் பணி என்றும் குறைவற நடக்கத் தானியங்களைச்சேமித்து வைக்க வேண்டும். தானியங்கள் பருவகாலங்களில் மட்டுமே கிடைப்பதால் அவற்றைப் பதப்படுத்திக் கெட்டுப் போகாமலும், எலி, பறவைகள் முதலியவற்றால் சேதம் அடையாமலும் கவனித்துச் சேமித்து வைக்கவேண்டும் நன்மனம் படைத்த கனதனவான்களே தானியங்களை விளைவித்துக்காத்து அன்பர்களுக்கு அளிக்கின்றனர். அதனால் அவர்கள் பெருமைக்குரியவர்களாகப் போற்றப்படுகின்றனர்.

நீண்ட நாட்கள் நெல்லைப் பாதுகாக்க அதைக் குவித்து அதன்மீது நெல்தாள்(வைக்கோல்)களைப் பரப்பி மண்ணால் முழுவதும் மூடிமெழுகுவர். அவை நெற்கோட்டை (அ) நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும்.

இப்படிச் சேமித்து வைக்கப்பட்டுள்ள நெற்கூடுகளுக்கு உலவாக்கோட்டை என்பது பெயர். "உலவா" என்ற சொல்லுக்கு என்றும் குறையாதது என்பது பொருள். உலவாக் கோட்டை என்பது எடுக்க எடுக்கக் குறையாத நெல் களஞ் சியங்களாகும். இலக்கியங்களில் இது உலவாக்கோட்டை என்று குறிக்கப்பட்டுள்ளது. இறைவன் அன்பர்களின் சிவப்பணி தொடர உலவாக் கோட்டை (நெல்மலைகளை) அருளியதைப் பல வரலாறுகள் குறிக்கின்றன. அவற்றுள் இரண்டை இங்கே காணலாம். முதலாவது நிகழ்ச்சி திருவிளையாடற் புராணத்திலும் இரண்டாவது நிகழ்வு பெரிய புராணத்திலும் இடம் பெற்றுள்ளன.

மதுரையில் பெருமான் அளித்த உலவாக்கோட்டை.

மதுரையில் நல்லான் என்ற அன்பர் வாழ்ந்து வந்தார். அவர் அடியவர்களிடம் அன்பு பாராட்டி உதவி வந்ததால் அடியார்க்குநல்லான் என்ற பெயர் பெற்றார் அவரும் அவருடைய மனைவியும் சிவனடியார்களுக்கு உணவிட்டு உபசரிப்பதைப் பெரும்பேறாகப் போற்றி வந்தனர். காலப்போக்கில் அவர்கள் வறுமை அடைந்தனர். அவர்களுக்கே உணவு தட்டுப்பாடாகி விட்டது. எனினும் கடன் வாங்கியும் தமது பணியைத் தொடர்ந்து நடத் தினர்.அதற்கும் தடை வந்தது.




அடியவர்களுக்கு உணவிட முடியாது வாழ்வதை விட சாவதே மேல் என்று அவர்கள் முடிவு செய்தனர். தங்கள் முடிவைச் சோமசுந்தரப் பெருமானிடம் விண்ணப்பித்தனர்.

அடியவர்களது அரும்பசி போக்கும் அவர்களின் அளவற்ற தொண்டால் மகிழ்ந்த இறைவன்,' வான் ஒலி யாக அன்பர்களே வருந்தற்க! உமது பெருமையை உலகிற்கு உணர்த்தவே உங்களுக்கு வறுமையைத் தந்தேன்.வறுமையிலும் செம்மையாக வாழ்ந்து அடிய வர்களைப் போற்றும் உமது திறம் கண்டு உலகமே வியக்கிறது.நீங்கள் செய்துவந்த அறங்களைத் தொடர்ந்து நடத்தி வர உமது வீட்டில் எடுக்க எடுக்கக் குறைவுபடாத அரிசிக்கோட்டையை வைத்துள்ளோம். உங்கள் தொண்டைத் தொடர்ந்து செய்யுங்கள் என்றார்.

சோமசுந்தரப் பெருமானை வணங்கி, வீட்டிற்குத் திரும்பிய அவர்கள் இறைவன் அருளால் வீட்டில் தோன்றிய உலவாக்கோட்டையைக் கண்டு மகிழ்ந் தனர். அதையே இறைவனாகக் கருதி சந்தனம் விபூதியிட்டுத் தூபதீபம் காட்டி வழிபட்டனர். மீண்டும் அமுதூட்டும் அறப்பணிகளைத் தொடர்ந்து காலம் காலமாகச் செய்து இறைவன் அடிசேர்ந்தனர்.

திருவிளையாடற்புராணத்தில் இவ்வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

சுந்தரருக்கு அருளிய நெல்மலை



சமய குரவர்கள் நால்வரில் ஒருவரான சுந்தர மூர்த்தி சுவாமிகளின் அடித்தொண்டராக விளங்கியவர் குண்டையூர்க் கிழார் திருவாரூருக்கு அருகிலுள்ள குண்டையூர் என்ற தலத்தில் வாழ்ந்து வந்த பெரும் செல்வர். அவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவியான பரவையார் திருமாளிகையில் அமுது படிக்குத் தேவை யான செந்நெல், பருப்பு, முதலிய பொருட்கள் அனைத் தையும் அனுப்பி வைப்பது வழக்கம். ஒரு சமயம் வானம் பொய்த்ததால் அவரால் அமுதுபடிக்கான வற்றை அனுப்ப முடியவில்லை. அவர் மிகவும் வருந்திச் சோர்ந்து இறைவனிடம் முறையிட்டு அப்படியே உறங்கி விட்டார்.

கனவில் திருவாரூர்ப் பெருமான் தோன்றினார். அன்பனே! ஆரூரனுக்காக உனக்கு நெல் அளித் துள்ளோம் அவற்றை அனுப்புக என்று கூறி மறைந்தார். விழித் தெழுந்து பார்க்க, அவ்வூர் எல்லை யெங்கும்நெல்மலைகளாகக் குவிந்திருந்தன.

அதைக் கண்டு அதிசயித்த கிழார், திருவாரூர் வந்தார். பரவையார் மனைக்குச் சென்று நடந்ததைக் கூறினார். அவரிடம் இறைவன் அளித்த நெல்லை யாரால் எடுக்க இயலும் என்றார்.

அதைக் கேட்ட சுந்தரர் அவருடன் குண்டை யூருக்கு வந்து அந்த நெல்மலைகளைக் கண்டு அதிச யம் அடைந்தார். அருகிலிருந்த திருக்கோளிலி தலத்திற் குச் சென்று , பெருமானை வழிபட்டார். பெருமானே இந்த நெல்லை இங்கிருந்து பரவையார் மனையில் சேர்க்க ஆள் வேண்டுமென்றார். அப்போது அவர் அருளிய பதிகம் " நீளநினைந் தடியேன்" எனத் தொடங்கும் பதிகம் ஆகும். அதைக் கேட்ட சிவபெரு மான் இன்றைய பகல் கழியட்டும். இன்றிரவு நமது பூதங்கள் இந்நெல்மலைகளை இங்கிருந்து திருவாரூ ரில் சேர்த்துவிடும் என்று விண்ணொலியாகக் கூறினார். சுந்தரர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு பல பதிகளை வணங்கித் திருவாரூருக்குத் திரும்பினார்.

அன்றிரவில் பூதங்கள் திருவாரூர் பரவை யார் மனையில் நெல்லை நிறைத்து விட்டன. எஞ்சியதை ஊர் முழுக்க நிறைத்திருந்தன.விடிந்ததும் வெளி வந்த பரவையார் அதிகமாக இருக்கிறது. அவரவர் வீட்டின் முன் உள்ள நெல்லை அவரவர் எடுத்துக் கொள்ளலாம் என்று பறையறையும்படிச் செய்தார். நகர மக்கள் மகிழ்ச்சியுடன் அவற்றை வேண்டிய மட்டும் எடுத்துக் கொண்டனர். அதைக் கண்டு பரவையார் மிகவும் மகிழ்ந்தார்.

திருக்குவளை ஆலயத்தில் இந்த வரலாற்றை விளக்கும் ஐதீக விழா நெல்லட்டும் திருவிழா என்ற பெயரில் சித்திரை மாதம் கொண்டாடப்படுகிறது.

செந்நெல் பழவரிசியும் கூழாண்டார் கோத்திரமும்

பவழம் போல் சிவந்த அரிசி செந்நெல்லரிசியாகும். இது சூரிய ஒளி மிகுந்திருக்கும் காலத்தில் விளைவது (கார் அரிசி சூரியனின் ஒளி குறைந்த கார் காலத்தில் விளைவது) அதனால் கடவுளர்க்கும், பெரியோர்களுக்கும் செந்நெல்லரிசியால் அமுது படைத்தல் உயர்ந்ததாகப் போற்றப்படுகிறது.

நாயன்மார்கள் செந்நெல்லரிசியை அமுதுபடிக்கு அளித்துவிட்டு தாங்கள் கார் அரிசியை உண்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. இதற்கும் ஒருபடி மேலே சென்று விளைவிக்கின்ற செந்நெல்லை எல்லாம் ஆண்டவனுக்கும் அடியார்களுக்கும் அளித்துவிட்டுக் கூழை மட்டுமே குடித்து வாழ்ந்தவர்கள் திருவாலங்காட்டில் இருந்தனர். இவர்களைக் கூழாண்டார் கோத்திரத்தார் என்று இலக்கியங்கள் சிறப்பித்துப் போற்றுகின்றன.

ஆலயங்களுக்குச் செந்நெல் பழவரிசி அளிக்கப்பட்டதை ஏராளமான கல்வெட்டுகள் கூறுகின்றன. பழவரிசி சோறு அதிகமாகக் காணும் (பழவரிசி = பழைய அரிசி - ஓராண்டு கடந்தது) என்பர்.

நெற்களஞ்சியங்கள்



திருப் பாலைத்துறை பாலை வன நாதர் ஆலயத்திலுள்ள நெற்களஞ்சியம்

பண்டைக் காலத்தில் ஆலயங்களின் பெருமளவு வருமானம் நெல்லாகவே இருந்தது. நெல்லைக் கொண்டு பண்டமாற்று முறை மூலம் பூசைக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களையும் பெற்றுக் கொண்டனர். பணியாளர்களுக்கும் நெல்லே ஊதிய மாக அளிக்கப்பட்டது.

பூசைக்கும் விழாக்களுக்கும் நிபந்தம் ஏற்படுத்தி யவர்கள் அரிசி, பருப்பு, உப்பு, வெல்லம், சர்க்கரை, நெய் முதலியவற்றின் தேவைக்கேற்ப நெல் அளந்த தைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

எடுத்துக்காட்டாகக் கண்டியூரில் பொறிக்கப்பட் டுள்ள கல்வெட்டைக் கொள்ளலாம். இதில் வீரட்டா னத்துப் பெருமானுக்கும் உமாதேவிக்கும் மூன்று சந்திக்குப் பருப்பமுது, தயிரமுது, கறியமுது அடைக் காயமுது, இலையமுது இவைகட்கும் இரவு பகல் எரியும் நுந்தா விளக்கிரண்டு சிறுகாலை எரியும் சந்தி விளக்கு இரண்டு உச்சியம்போது எரியும் சந்தி விளக்கிரண்டு, இராவெ ரியும் சந்தி விளக்கு நான்கு ஆகியவற்றின் எண்ணைக் கும் செந்நெடை ஒரு நாளைக்கும் நெய், தயிர், கறி, விறகு இவைகட்கும் இரண்டு அயனம் இரண்டு விஷு ஆக சங்கராந்திகள் நான்கிற்கும் திருமெய்ப் பூச்சு சந்தனம், திருப்புகை குங்கிலியம் இவற்றிற் கும் ஓராண்டிற் கான பரிசட்டம் மூன்றிற்கும், திருமேற் கட்டி ஒன்றிற்கும், நமனி இரண்டிற்கும், உத்தரீயப் புடவை நான்கிற்கும், கிரகணம் உள்ளிட்ட சிறப்புகளுக்கும் கார்த்திகை விளக்கினுக்கும் ஆராதனை செய்வான். பரிசாரகம் செய்யும் மாணி, கரணத்தான் திருவலகு (கூட்டுபவன்) மெழுகிடுவாளுக்கும் ஆசாரிய போகத் திற்கும் ஆக 595 கலம் பதக்கு நானாழி நெல்லும் அளிக்கப்பட்டதைக் கூறுகி றது. இதுபோன்று படித்தரம் முழுவதற்கும் நெல்லாகவே அளக்கப்பட்ட செய்தியைக் கூறும் அனேக கல்வெட்டுகள் ஆலயங் களில் பொறிக்கப்பட்டுள்ளன.

கோயில்களிலும் மடங்களிலும் நெல்லைச் சேமித் துவைக்கவும், காய வைத்துப் பதப் படுத்தவும், குத்தி அரிசியாக் கவும் இருந்த தனியிடங்கள் கொட்டா ரங்கள் என்று அழைக்கப்பட்டன. தானியக் கிடங்குகள் என்றும் அழைக்கப்படும்.

திருவாவடுதுறை மடாலயம், ஆதீனத்திற்குச் சொந் தமான திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயம் முதலியவற்றில் பெரிய நெற்கொட்டாரங் களைக் காண லாம். இவை அன்னபூரணியின் இருப்பிடங்களாகப் போற்றப்படுகின்றன. இவற்றைத் தானியக் களஞ்சியம் என்றும் கூறுவர். நெல்லைத் தரவாரியாகச் சேமிக்க மூங்கிலால் முடைந்து சாணம் பூசி மெழுகிய பெரிய குதிர்கள் வரிசையாகஇருக்கும்.

பசுமடம், மடைப்பள்ளி போலவே நெற்களஞ்சி யங்களும் ஆலயத்தின் அங்கமாகவும் செல்வத்தின் குறியீடாகவும் விளங்குகின்றன. பெரிய புராணத்தில் நெல் கூடுகள் நிரம்பிய இருக்கைகளும் விருந்தெதிர் கொள்ளும் மாட்சிமை மிக்க குடிகளும் நிறைந்திருந்த ஊர்களைக் கொண்டதாகத் தொண்டைநாடு குறிக்கப் பட்டுள்ளது இங்கு எண்ணத்தக்கதாகும்.

குடந்தைக்கு மேற்கில் தஞ்சை சாலையில் திருப் பாற்றுத்துறை என்னும் தலமுள்ளது. இங்குள்ள பாலை வன நாதர் ஆலயத்தில் தென்கிழக்கு முனையில் பெரிய நெற்களஞ்சியம்உள்ளது. இதன்கொள்ளளவு 3000 கலம் ஆகும். கால வெள்ளத்தால் கரைந்து போகாமல் நிலை பெற்றிருக்கும் களஞ்சியத்தில் இது சிறந்ததாகும்.

உரல்

நெல்லைக் குத்திப் புடைத்து அரிசியாக்குகின் றனர். கையால் உலக்கை கொண்டு குத்தி பெறப்படும் அரிசி கைக்குத்தல் அரிசியாகும். கோயில்களில் நெல்லைக் குத்த பெரிய கல் உரல்களும் உலக்கை களும் இருந்தன. இப்பணியில் பெண்களும் ஆண களும் ஈடுபட்டிருந்தனர். மின் அரவை வழக்கத்தில் வந்துவிட்டதால், கைக்குத்தல் அரிசி மறைந்து விட்டது. உலக்கை உரல்களும் பராமரிப்பின்றி அரிதாகி விட்டன.

தண்ணீர்ப் பந்தல்

பார்த தேசத்தில் கோடைகாலத்தில் வெப்பம் மிகவும் அதிகமாகஇருக்கும். குளம் குட்டைகள் யாவும் வறண்டு விடும். வெப்ப மிகுதியால் அதிகமாக தாகம் எடுக்கும். அந்த வேளையில் பருக நீர் அளிப்பது பெரும் புண்ணியமாகும். வழிநடைப் பயணத்தால் வருந்திக் களைத்தவர்களுக்கு நீர் அளிப்பதற்காக தண்ணீர்ப் பந்தல் அமைத்து நடத்துவது வழக்கம். இங்கு தங்கி இளைப்பாறி நீர் பருகிப் பயணத்தைத் தொடங்குவர். தண்ணீர்ப்பந்தல் வைப்பது முப்பத்திரண்டு அறங்களில் ஒன்றாகக் கூறப்டுகிறது .சமயவரலாற்றில் இறைவனே தண்ணீர்ப் பந்தல் வைத்ததையும் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான அப்பூதி அடிகள் தண்ணீர்ப்பந்தல் வைத்து அன்பர்களுக்கு நீரளித்ததைப் பெரியபுராணம் விரிவாகக் கூறுகிறது.

இறைவன் வைத்த தண்ணீர்ப் பந்தல்

முன்னொரு காலத்தில் மதுரையை குலபூஷண பாண்டியன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் மதுரை சோம சுந்தரப் பெருமான் மீது அளவற்ற பக்தி கொண்டிருந்தான்.

அதே வேளையில் காஞ்சீபுரத்தைக் காடு வெட்டிச் சோழன் என்பவன் ஆண்டு வந்தான். அவனும் மதுரை சோமசுந்தரப் பெருமான்மீது எல்லையற்ற பக்தி கொண்டிருந்தான். அரசியல் காணங்களால் அவனால் மதுரைக்குச் சென்று ஆலயத்தை வலம் வந்து பெருமானை வழிபட முடியவில்லை. அதனால் மிகவும் வருந்தினான்.

சிவபெருமான் அவனுடைய அன்புக்கு இரங்கி, கனவில் சித்தராகத் தோன்றி, சோழனே, நீ தனியாகப் புறப்பட்டு மதுரைக்கு வந்து வடக்கு வாசலில் காத்திருப்பாய் என்றார். அதன்படி அவன் விரைந்து வந்து காத்திருந்தான். இரவாகிவிட்டது காவலர்கள் கோயிலை மூடி பூட்டி துணியால் சுற்றி பாண்டிய நாட்டு முத்திரையான கயல் முத்திரை வைத்து விட்டுச் சென்றனர்.

சிவபெருமான் சித்தர்வடிவில் சோழன் முன்னே தோன்றினார். கட்டுக் காவல்களைத் தாண்டி அவனை ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றார் அவன் இந்திர விமானத்தில் பெருமானைக் கண்டு மகிழ்ந்தான். பலவாறு தொழுது பரவசம் அடைந்தான்.அவன் ஆலயத்தைவிட்டு வெளியே வந்ததும், சித்தராக வந்த சிவபெருமான் ஆலயக் கதவை மூடி தனது முத்திரையான இடப முத்திரையைப் பதித்தார். பின்பு அவனுடன் மதுரைக்கு வெளியே வந்து அவனுக்கு விடையளித்தார்.

மறுநாள் காலையில் கோயிலைத் திறக்க வந்தவர்கள் வடக்கு வாயிலின் கதவின் மேல் இடபமுத்திரை இருக்கக் கண்டனர். அதைப் பாண்டியனுக்குத் தெரிவித்தனர். அவன் ஏதும் புரியாது திகைத்தான்.

அன்றிரவு பெருமான் அவன் கனவில் தோன்றி மன்னனே! எனது அன்பன் காடுவெட்டிச் சோழனை அழைத்து வந்து ஆலயத்தைக் காண்பித்தேன். செல்லும் போது எனது முத்திரைகளைக் கதவில் பொறித்து வைத்தேன்என்று கூறி மறைந்தார். பாண்டியன் சோழனின் பக்தியையும் இறைவனின் எளிவந்த கருணையையும் எண்ணி வியந்தான்.

காலங்கள் சென்றன. குலபூஷண பாண்டியன் தன்மகன் இராஜேந்திர பாண்டியனுக்கு முடி சூட்டி விட்டு இறைவன் அடி சேர்ந்தான்.

காடு வெட்டிச் சோழனுக்கு மதுரைக்குச் சென்று வந்த காட்சி மீண்டும் மீண்டும் நினைவில் நிழலாடியது. அவன் பாண்டியனுக்கு நண்பனாகி அதன் மூலம் மதுரைக்கு வந்து சோம சுந்தரப் பெருமானை வழிபட விரும்பினான்

பாண்டியனுக்குப் பரிசுகள் பலவற்றை அனுப்பி அவனது நட்பை வேண்டினான். சோழனின் பக்தியைப் பற்றி தன் தகப்பன் மூலம் முன்னமே அறிந்திருந்ததால் பாண்டியன் அவனது நட்பை ஏற்றுக் கொண்டான். அந்த நட்புரிமையால் சோழன் மதுரைக்கு வந்து சோமசுந்தரரை அடிக்கடி தரிசித்து மகிழ்ந்தான்.

பாண்டியனின் நல்ல பண்புகளைக் கண்ட சோழன் தன் மகளை அவனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினான். அதற்கான உறுதியைச் செய்தான்.

பாண்டியனுக்கு ஒரு தம்பி இருந்தான். அரசுசிம்மன் என்ற அவன் பழியஞ்சாப்பாதகன்.சோழன்தன் மகளைப் பாண்டியனுக்குத் தர விரும்புவதை அறிந்து சூழ்ச்சி செய்து அந்தப் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொண்டான்.

சில நாட்கள் சென்றன. அவன் சோழனிடம், மாமனே! நீங்கள் உதவி செய்தால் நான் பாண்டியனை வென்று மதுரையின் மன்னனாவேன் நீங்கள் சோமசுந்தரரைத் தடையின்றித் தரிசிக்கலாம் என்றான். அவன் விரும்பியவாறு சோழன் அவனுக்குப் பெரும்படையை அளித்தான்.

அவர்கள் படைகளைத் திரட்டிக் கொண்டு மதுரை எல்லைக்கு வந்து விட்டனர். அதை அறிந்த பாண்டியன் கலங்கினான். சோமசுந்தரப் பெருமானிடம் சென்று முறை யிட்டான். பெருமான் ' பாண்டியனே கலங்காதே நாளைக்குப் போருக்குப் புறப்படு வெற்றி உனதே' என்றார். மன்னன் மகிழ்ந்து போருக்கான ஏற்பாடு களைச் செய்தான்.

மறுநாள் உதயவேளையில் பாண்டியனின் சேனை சோழனின் சேனைகளை எதிர்கொண்டது. பெரும் போர் மூண்டது. யானைகளின் பிளிறல்களும், குதிரைகளின் கனைப்பும் போர் வீரர்களின் ஆரவாரமும் அச்சத்தை ஊட்டுவதாக இருந்தன.

வேனிற்காலமானதால் சூரியன் சுட்டெரித்தான். எனவே, சற்று நேரத்தில் எல்லோரும் களைத்து விட்ட னர்அனைவரும் தாகத்தால் தவித்தனர். போர்வெறி குறைந் தது.அவர் கள் வலிமை குறைந்தது.

அவ்வேளையில் சிவபெருமான் தவம் நிறைந்த முனிவனைப் போல் உருத்தாங்கினார். பாண்டியனின் படைகளுக்கு நடுவே தண்ணீர்ப்பந்தலை உண்டாக்கி னார். தாகத்தால் தவித்தவர்களுக்கு வேண்டிய அளவு குளிர்ந்த நீரைத் தந்தார்.அதைக் குடித்த பாண்டியனின் படையினர் அமுதம் குடித்தது போல் புத்துணர்ச்சி பெற்று வேகத்துடன் பாய்ந்தனர்.

சோர்ந்து களைத்திருந்த சோழவீரர்களை பாண்டியன் படையினர் எளிதில் சுற்றி வளைத்துப் பிடித்தனர். சோழ மன்னனை அரசன் முன்பு கொண்டு சென்று நிறுத்தினர். அவன் சிவபெருமானே உமது திருவுள்ளம் யாது. என்று சிந்தித்தான் பெருமான் அசரீரியாக, இவர்கள் தீ நெறிச் சென்றவர்கள் உனது மனதிற்கேற்றபடி தண்டித்துக் கொள் என்றார்.

பண்பிலும் அன்பிலும் சிறந்த பாண்டியன் சோழனை மன்னித்து அவனது நாட்டிற்குத் திரும்பி அனுப்பினான். சகோதரனுக்குப் பெரிய தண்டனை தராமல் அவனுடைய உரிமைகள் சிலவற்றை மட்டும் பறித்து விட்டான். நெடுங்காலம் சைவம் சிறக்க சிறப்புடன் நாடாண்டு வந்தான்.

சிவபெருமான் பாண்டியர் படைக்கு நடுவே தண்ணீர்ப் பந்தல் வைத்தது, திருவிளையாடற் புராணத் துள் தண்ணீர்ப்பந்தல் வைத்த படலத்துள் விரிவாகக் கூறப் பட்டுள்ளது. மாணிக்க வாசகர் இதனை,

' தண்ணீர்ப்பந்தர் சயம் பெற வைத்தும்'

என்றுதிருவாசகத்துள் கீர்த்தித் திருவகவலில் குறித் துள்ளார்.

கல்வெட்டுக்களில் தண்ணீர்ப் பந்தல்

திருக்கோயில்களில் பொறிக்கப்பட்டுள் கல்வெட்டு கள் சிலவற்றில் தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்பட்டிருந்த செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தொண்டை நாட்டுத் தலமாக புறவார் பனங் காட்டூர் இந்நாளில் பனையபுரம் என்று அழைக்கப் படுகிறது. இவ்வூரில் இராஜேந்திர சோழ விண்ணகரம் எனப்படும் பெருமாள் கோயிலுக்கும் பரவை ஈச்சரமான சிவன் கோயிலுக்கும் ராஜேந்திர சோழன் மண்டபத் திற்கு எதிரிலுமாக மூன்று இடங்களில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்ததை இக் கோயில் கல்வெட்டால் அறிகிறோம்.

இதில் பணிபுரிபவர்களை மேற்பார்வை யிட ஒருவர் இருந்ததையும் இவற்றைப் பராமரிப்பதற்கென நிலக் கொடைகள் அளிக்கப்பட்டிருந்ததையும் அக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

திருநள்ளாற்றை அடுத்த சாத்தமங்கையில் உள்ள ஒரு கல்வெட்டு திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜ சோழனின் 13ஆம் ஆட்சியாண்டில் ஏகம்பமுடையான் என்பவன் ஒரு தண்ணீர்ப் பந்தலை ஏற்படுத்தி அது நன்கு நடைபெற நிலக்கொடை அளித்திருந்தான்.

காலப்போக்கில் அந்த தர்மம் நன்றாக நடை பெறாததால் சாத்தமங்கை சபையார் அந்நிலத்தை மேற்படியான் திருசெங்காட்டங்குடியில் ஏற்படுத்தியிருந்த சிறுத்தொண்டர் மடத்திற்குக் கொடுத்துவிட்டனர். இது போன்று அனேக இடங்களில் தண்ணீர் பந்தல்கள் இருந்த செய்திகளைக் கல்வெட்டுகள் மூலம் அறி கிறோம்.

குளம் கண்ட மகாதேவனும் நீரளித்த மென் முலையாளும்

திருக்கொள்ளம் பூதூர் எனும் தலத்தில் அன்பர்களின் தாகத்தைத் தீர்த்து வைக்கப் பெருமான் குளம் வெட்டியதையும், அதிலிருந்து அம்பிகை நீர் கொடுத்து அன்பர்களின் தாகத்தைத் தணித்தார். இதையொட்டி இறைவன் குளம் கண்ட மகாதேவர் என்றும், அம்பிகை மென்முலை நாச்சியார் என்றும் அழைக்கப் படுகின்றனர்.

இறைவன் வைத்த தண்ணீர்ப் பந்தலைக் கண்ட நாம் அடியவர் அமைத்த தண்ணீர்ப் பந்தலைக் காணலாம்

அப்பூதி அடிகள்வைத்த தண்ணீர்ப் பந்தல்

சோழ நாட்டில் திருவையாற்றுக்கு அருகில் திங்களூர் என்னும் சிவத்தலம் உள்ளது. இங்கு மறைய வர் குலத்தில் தோன்றியவர் அப்பூதி அடிகள்.

அப்பர் அடிகளின் பெருமைகளைக் கேட்டு அவர் பால் கொண்ட அளவு கடந்த அன்பினால் வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களுக்கும், பசு எருமை முதலியன வற்றிற்கும் குமாரர்களுக்கும் அவருடைய பெயரையே சூட்டினார்.

பலவிதமான அறங்களைச் செய்து வந்த அவர் திருநாவுக்கரசு நாயனார் பெயரால் ஒரு பெரிய தண்ணீர்ப் பந்தல் அமைத்து தாகம் தீர்க்கும் பணியைச் செய்து வந்தார்.

அந்நாளில் திருப்பழனம் வந்து பாடிப்பரவிய பின் திருநாவுக்கரசர் திங்களூர் வழியாகத் தனது பயணத் தைத் தொடர்ந்தார்.வழியில் தம் பெயரால் வேனில் கொடுமையை அகற்றும் குளிர்ந்த தண்ணீர்ப் பந்த லைக் கண்டார். அங்கிருந்த பொருள்களுக் கெல்லாம் திருநாவுக்கரசு என்று பெயர் சூட்டப் பட்டிருப்பதையும் கண்டார்.

அப்பூதி அடிகளுடைய இல்லத்திற்குச் சென்று அவரைக் கண்டு மகிழ்ந்தார். நாயனாரின் வரவால் மகிழ்ந்த அப்பூதி அடிகள் அவரை வணங்கி வரவேற்று உணவுண்ண அழைத்தார். அப்பூதி அடிகளாரின் மகன் வாழை இலை பறிக்கச் சென்றான். அங்கே அவனைப் பாம்பு கடித்து இறந்துபோனான். அவன் மாண்டதை மறைத்து விட்டு அப்பூதி அடிகள் அப்பருக்கு உணவு படைத்தார்.

திருநாவுக்கரசர் உணவருந்தும் முன் அவர் மகன் எங்கே என்று கேட்க அப்பூதியார் அவன் இங்கு உதவான் என்றார். உண்மையை வினவி அறிந்த திருநாவுக்கரசர் அவன் உடலை இறைவன் முன் கிடத்தி ஒன்று கொலாம் என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். சிறுவன் உறக்கம் நீங்கியவனைப் போல் எழுந்தான்) அப்பூதி அடிகள் அறுபத்து மூவரில் ஒருவராகப் போற்றப்படு கிறார்.

அன்பர்கள் பெருந்திருவிழாவின்போது வைக்கும் தண்ணீர் பந்தல்களுக்கு " அப்பூதி அடிகள் தண்ணீர்ப் பந்தல்" என்று பெயர் சூட்டுகின்றனர்.

குமாரதேவருக்குத் தண்ணீர்ப் பந்தல் அளித்தது

வேதாந்த நூலாசிரியர்களில் ஒருவர் குமாரதேவர். கன்னட தேசத்தில் சிற்றரசராக விளங்கியவர். துறவு பூண்டு பேரூருக்கு வந்து சாந்தலிங்க சுவாமிகளிடம் சீடரானவர். அவராணைப்படி இவர் திருமுதுகுன்றத்தை நோக்கி வந்தார். வழியில் வெயிலின் கொடுமையால் தாகத்தால் தவித்தார். அவ்வேளையில் அவர் வரும் வழியில் பழமலை நாதர் தண்ணீர்ப் பந்தல் அமைத்தார். அதில் குமாரதேவர் தண்ணீர் அருந்தி களைப்பு நீங்கினார். திருமுதுகுன்றத்திற்கு வந்த பிறகே இறைவன் தண்ணீர்ப் பந்தல் வைத்துத் தமக்குத் தண்ணீர் அளித்ததை அறிந்தார்.

பின்னொரு சமயம் குமாரதேவருக்கு அன்னை அம்பிகை பால் தந்தும், சோறிட்டும் அருள் பாலித்ததைஅவருடைய வரலாறு கூறுகிறது. அம்பிகை அவருக்குப் பாலூட்டியதுடன் குமாரதேவர் என்ற நாமமும் சூட்டினாள் என்பர்.

திருமயிலை விழாவும்- தண்ணீர்ப்பந்தல்களும்

சிவாலயங்களில் நடைபெறும் திருவிழாக்களின் போது தண்ணீர்ப்பந்தல் வைக்கும் வழக்கம் இன்றும் இருக்கிறது. விழாக்களில் பெருமளவில் மக்கள் கூடுவர். புழுக்க மிகுதியால் தாகத்தால் அவதியுற்றவர்களுடைய தாகத்தைப் போக்குவது அறம் என்ற வகையில் தண்ணீர்ப்பந்தல்களை வைக்கின்றனர்.

மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்தில் பங்குனி உத்திரத்தைக் கடை நாளாகக் கொண்டு பெருந்திருவிழா கொண்டாடப்படுகிறது. இதில் எட்டாம் நாள் நடைபெறும் அறுபத்து மூவர் விழாவின்போது நூற்றுக்கணக்கான தண்ணீர்ப்பந்தல்கள் பக்தர்களால் வைக்கப்படுகின்றன. இவற்றில் நீர்மோர், பானகம், சுக்குக் காப்பி ஆகியன அளிக்கப்படுகின்றன.

மேலும் பலவகையான உண்பொருள்களும் வழங்கப்படுகின்றன. லட்சக்கணக்கான பக்தர்களுக்கு ஏராளமான தண்ணீர் ப்ந்தல்களை நிறுவி அன்பர்கள் உதவி அளிப்பது காண்பதற்கும் கருத்திற்கும் மன நிறைவை அளிக்கிறது.

உண்கலம்

உணவினை இட்டு உண்பதற்கு.ரிய பாத்திரம் உண்கலன் எனப்படும். ஆதியிலிருந்து மக்கள் தேக்கி லை, வாழையிலை போன்ற அகன்ற இலைகளை உண் கலமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

அப்பர் சுவாமிகள் தமது இல்லத்திற்கு வந்த போது அப்பூதி அடிகள் அவருக்கு வாழை இலையில் உணவு படைத்து உபசரித்தார்.

விருந்தினர்களுக்கு வாழை இலை போட்டு விருந் தளிப்பதுதான் இன்றுவரை சிறப்பாகப் போற்றப்பட்டு வருகிறது. பசுமையான இலைகளைத் தைத்து உண்கலமாக்கிய போது அதை "கல்லை" என்றழைத்தனர். பெரியபுராணத் தில் கண்ணப்பர் கல்லையில் ஊனையும் தேனையும் எடுத்து வந்து பெருமானுக்கு அமுதுசெய்வித்தார் என்று கூறுப்பட்டுள்ளது.

உண்கலத்தைப் பரிகலம் என்பர். பெரிய புராணத் தில் இச்சொல்லே அதிகம் ஆளப்பட்டுள்ளது.துறவி களும் பயணிகளும் நித்தமும் இலைகள் கிடைக்காது என்பதாலும், எடுத்துச் செல்வதற்கு எளியது என்ப தாலும், உறுதியான உட்குழிவான பெரிய காய்களின் ஓடுகளை உண்கலமாகப் பயன்படுத்தினர்.தேங்காய் சிரட்டைகள், வில்வப்பழ ஓடுகள், சுரைக்காய் ஓடுகள் முதலியன அதிகஅளவில் பயன்படுத்தப்பட்டன. குறிப் பாக யாழ்ப்பாணத்தில் விளையும் பெரிய தேங்காயின் ஓடுகளே அதிக அளவில் உண்கலமாகவும், பிட்சா பாத்திரமாகவும் பயன்படுத்தப்பட்டது .இதை ஒட்டியே பிட்சை எடுத்துண்ணும் பிட்சா பாத்திரங்களுக்கு திருஓடுகள் என்ற பெயர் வந்தது. காலப்போக்கில் துறவிகளுக்கு இந்தப் பாத்திரம் ஒரு அடையாளமாகி விட்டது.

சிவபெருமான் பிட்சாடனனாக வரும் போது பிரம்ம தேவனிடமிருந்து பறித்த ஐந்தாவது தலையின் ஓட்டினைக் கலனாக ஏந்தி வருகின்றான். ஈரமான கபாலத்தை ஓடாக ஏந்தியிருப்பதால் ஆர்த்ர கபாலி என்றும், கபாலி என்றும் அழைக்கப்படுகிறான்.அவன் கையிலுள்ள பிரம்ம கபாலத்தை ஓடு, கலன் என்ற சொற்களால் திருமுறைகள் பல இடங்களில் குறிக்கின்றன.

சில இடங்களில் இது பலி பாத்திரம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. பெரியபுராணத்தில் திருநீலகண்டர் புராணத்தில் இது பலி பாத்திரம் என்று குறிக்கப்படு வதுடன், தன்னை ஒப்பரியது, தன்னிடத்தில் இடுவதை யெல்லாம் தூய்மைப்படுத்துவது. செல்வங்கள் யாவற் றிலும் மேன்மையானது என்று அதன் சிறப்புகளும் கூறப்பட்டுள்ளன.

பல்லவர் காலத்தைய சோமாஸ்கந்தர் உருவங் களில் சிலவற்றில் பெருமான் வலக்கையில் சூலமும் இடது கையில் பிட்சா பாத்திரமும் ஏந்தியவராகக் காட்சி யளிக்கிறார்.

திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டரின் இல்லத்திற்குச் சிவபெருமான் வைரவர் கோலம் கொண்டு வந்தபோது சூலத்தையும் பிரம்ம கபாலத் தையும் தாங்கியிருந்தான் என்பதை,

"அயன் கபாலந் தரித்த இடத் திருக்கையால் அணைந்த மூவிலைச் சூலம் மணித் திருத்தோள் மிசை பொலிய" என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

இறைவன் வைரவனாக வரும்போதும் பிட்சாடன ராக வரும்போதும் பிரம்ம கபாலத்தை ஏந்தி வருகிறான்.

காலப்போக்கில் இயற்கையாகக் கிடைத்த ஓடு களுக்குப் பதிலாக மண்ணால் செய்த கலன்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். அவையும் ஓடுகள் என்று அழைக்கப்பட்டன. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்டர் மட்பாண்டம் செய்யும் குலத்தில் தோன்றியவர். அவர் அடியவர்களுக்கு திருவோடுகள் செய்து தருவதைச் சிவப்பணியாகச் செய்து வந்தார்.

இதனை மட்கலம் அமுதுக்காக்கி ..... அடியார் கென்றும் உளமகிழ் சிறப்பின் மிக்க ஓடளித்து ஒழுகும் நாளில் என்று சேக்கிழார் பெருமான் பாடியுள்ளார்.

திருவோடுகள் நீள் வட்டமானவை. அவற்றில் எளிய உணவைக் குறைந்த அளவே இட்டு உண்ண முடியும். எனவே அகன்ற பாத்திரமாகச் செய்யத் தொடங் கினர். அவை சட்டிகள் எனப்பட்டன. சட்டிகளில் சோறிட்டு அதன்மீது சிறுசிறு கிண்ணங்களில் குழம்பு, ரசம், கூட்டு, கறி முதலியவற்றை வைத்து அளிப்பது சட்டிச்சோறு எனப்பட்டது.

ஆலயங்களில் சட்டிச்சோறு நிவேதிக்கப் பட்டதுடன் தபசிகளுக்கும், பணி செய்வார்க்கும் அதுஅளிக்கப் பட்ட தைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.தினமும் புதிய கலன்களையே பயன்படுத்தினர். இதற்காகப் பாத்திரம் செய்தளிப்போர் கலமிடுவோர் என்றழைக்கப்பட்டனர்.

பின்னாளில் பித்தளை,வெள்ளி,ஈயப்பாத்திரங் கள் வழக்கத்திற்கு வந்துவிட்டன. திருவையாறு ஆலயத் திலுள்ள தென்கயிலாயம் ஆலயத்தில் பொறிக்கப்பட்

சரஸ்வதி அளித்த அமுதசுரபி

உயிர்கள் வாழ்வதற்கு அடிப்படைத் தேவையாக இருப்பது உணவு. உயிர் களுக்கு வேண்டிய உணவை அளித்தருளும் பராசக்தியை அன்னபூரணி என்ற ழைக்கிறோம். காசியில் அவள் மகாமங்கள கௌரி எனும் பெயரில் அன்னபூரணேச்சுவரியாகக் கோயில் கொண்டுள்ளாள்.

உணவின் வடிவமாகவும் அதனை அருள்பவளாகவும், விளங்கும் மகாலட்சுமியை அன்னலட்சுமி என்கிறோம் . இருதேவியரும் வைத்துள்ள பாத்திரம் அட்சயப் பாத்திரம் என்றழைக்கப்படுகிறது. இப்படி முப்பெரும் தேவியரில் இருவரை உணவின் கடவுளாகப் போற்றும் நாம் மூன்றாவது தேவியான சரஸ்வதியை உணவு தரும் தெய்வமாகப் போற்றுவதில்லை என்றாலும்,



மதுரையில் கலை நியமம் என்ற கோயிலில் சிந்தாதேவி எனும் பெயரில் வீற்றிருக்கும் சரஸ்வதி, ஆபுத்திரன் என்னும் அன்பனுக்கு அமுத சுரபி எனும்அட்சய பாத்திரத்தை அளித்ததாக மணிமேகலை என்ற காப்பியம் கூறுகிறது. அமுதசுரபி. எடுக்க எடுக்கக் குறையாமல் உணவுப் பொருட்களை வழங்குவதாகும். இதைக் கொண்டு ஆபுத்திரன் அன்ன தானம் செய்தான். இந்த அமுத சுரபி ஆபுத்திரனுக்குப் பிறகு மணி மேகலையிடம் வந்தது. அவள் அதைக் கொண்டு அறம் வளர்த்தாள். அதனால் அறப் பெருஞ்செல்வி என்று போற்றப்பட்டாள்.

❀ சூரியன் திரௌபதிக்கு அட்சய பாத்திரம் அளித்தான். அதைக் கொண்டு அவள் வனவாசத்தின் போது அனைவருக்கும் சோறிட்டு மகிழ்ந்தாள் என்று மகாபாரதம் கூறுகிறது ❀

டுள்ள கல்வெட்டில், இந்த ஆலயத்தைக் கட்டிய இராஜராஜ சோழனின் மனைவி உலோகவிடங்கியார் இறைவனுக்கு அமுதூட்ட வெள்ளித் தளிகை(பெரிய பாத்திரம்), வெள்ளிக் கரண்டி, பொன் தளிகை (பெரிய தட்டு) பொன் மண்டை(நீர், பாயசம் முதலிய வற்றை அருந்தும் பாத்திரம்) ஆகியவற்றை அளித்ததைக் குறிக்கிறது. திருஆவடு துறையில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டில் இராஜேந்திர சோழ னின் மாமியார் இராமன் அபிமான தொங்கியார் என்பவர் திருவாவடுதுறைப் பெருமான் அமுது செய்தருள வெள்ளித் தளிகை அளித்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இந்நாளில் எவர்சில்வர் பாத்திரங்களையும் பயன் படுத்துகின்றனர்.

வீர சைவர்கள் உண்கலத்தைக் கங்காளம் என்ற ழைப்பர். பிரம்மனின் சிர ஓடே கங்காளம் ஆகும். (கங்கா ளம் எலும்பு) எலும்புகளைச் சுமந்திருப்பதால் உருத்திர மூர்த்தி கங்காளர் எனப்படுகிறார். அவருடைய பாத்திரம் கங்காளமாகும்.

திருச்செங்காட்டங்குடியில் பெருமான் வைரவ மூர்த்தியாகத் திருஓடுடன் காட்சியளிக்கிறார். அவருக்கு விழா கொண்டாட அளிக்கப்பட்ட நிலம் திருஓடுக் கட்டளை என்று திருவோட்டின் பெயரால் அழைக்கப் பட்டதைக் கல்வெட்டு குறிக்கிறது.

திருவிடைமருதூரில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு திருவிடைமருதூர் உடையார் சாலையில் உண்ணும் பிராமணர்க்கு தாலம் பதினெட்டு சட்டுவம் ஆகியவற்றை வெண்கலத்தால் செய்தளித்ததைக் கூறுகிறது.. தாலம் என்ப வை தட்டுக்களாகும். அந்நாளிலும் இலையிட்டுப் பரிமா றாமல் தட்டுகளில் பரிமாறியதையும் இதன்மூலம் அறிய முடிகிறது.

நிறையாததும் குறையாததும்

இறைவனின் கரத்திலிருக்கும் பாத்திரம் உணவை ஏற்று உண்பதற்கு. அம்பிகையின் கரத்திலிருப்பது உணவை அளிப்பதற்கு.இறைவனின் திருவோட்டில் எவ்வளவு இட்டாலும் அது நிறையாது. அம்பிகையின் பாத்திரமோ எடுக்க எடுக்கக் குறையாதது. எனவே அது அட்சய பாத்திரம் எனப்படுகிறது. இவை ஒன்றுக்கொன்று நேர் எதிரான குணங்களைக் கொண்டுள்ளன.

அடியவர்களின் திருவடித் தீர்த்தம்

அடியவர்களின் பூசையாக விளங்கும் அமுதூட்டலின் போது அடியவர்களின் பாதத்தை நீரால் விளக்க வேண்டும். அடியார்களின் திருவடியை விளக்கிய நீர் மிகவும் புனிதமானது.அதைத் தலையில் தெளித்துக் கொள்வதுடன் வீடு முழுக்க தெளித்தனர்.பெரிய புராணத்தில் திருவடி தீர்த்தத்தின் சிறப்பு பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

இதனை, தூய மணிப் பொன் ஆசனத்தில் வீற்றிருக்கும் தூய அடியவர்களின் மலர்ச் சேவடிகளை விளக்கிய நீரைத் தலையின் மீது தெளித்துக் கொண்டதுடன் மாளிகை எங்கும் விளங்க வீசி உளம் களித்தார் என்னும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தாலும்,

" தூய நீரால் சிறுத்தொண்டர் சோதியார்
தங்கழல் விளக்கி
ஆய புனிதப் புனல் தங்கள்தலைமேல்
ஆரத் தெளித்தின்பம்
மேய இல்லம் எம்மருங்கும் வீசி "

என வரும் சிறுத்தொண்டர் புராணத்தாலும் அறிய லாம்

ஒருமுறை அடியார்களின் திருவடிகளை விளக்க முனைந்தபோது தாமதித்ததால் தன் மனைவியின் கரங்களை வெட்டியகலிக்கம்ப நாயனாரின் வரலாற்றைப் பெரியபுராணம் கூறுகிறது.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள திருத்தலம் பெண்ணாடகம். அங்கு வாழ்ந்தவர் கலிக்கம்ப நாயனார்.அவர் ஆண்டவன் பணியுடன் அடியவர் பூசையையும் சிறப்பாகச் செய்து வந்தார்.

ஒரு சமயம் அவரிடம் பணிபுரிந்து வந்த பணியாளர் ஒருவர் கருத்து மாறுபாட்டால் பிரிந்து சென்றார். பின்னர் அடியவராகி விட்டார்.அவர் ஒரு சமயம் அடியவர் கூட்டத்துடன் நாயனாரின் வீட்டிற்கு அமுதுண்ண வந்தார். நாயனார் வழக்கம் போல் அவருடைய கால்களை விளக்குவதற்குப் பிடித்தார். நீர் வார்த்து வந்த அவரு டைய மனைவி வந்தவரை அடையாளம் கண்டு கொண்டாள். அந்த எண்ணத்தால் நீர் வார்க்கக் கால தாமதம் ஆனது.

நாயனார் இவள் அடியவர் என்று கருதாது முன்னைப் பணியாளன் என்று கருதியதால், நீர்வார்க்கவில்லை என்று எண்ணி அவளுடைய முகத்தையும் பார்க்காமல், வாளை எடுத்து அவளுடைய கைகளை வெட்டிவிட்டு தாமே நீர் முகந்து பாதங்களை விளக்கியதுடன் உணவு ஏற்பாடுகளையும் செய்தார். அச்செயலால் அடியவருடன் கலந்து சிவனடி சேர்ந்தார்

வீர சைவர்கள் அடியவர்களின் (சுங்கமர்) திருவடி விளக்கிய நீரைப் பாதோதகம் என்பர். (பாத + உதகம் : பாதம் விளக்கிய நீர்) பாதோதகம் கலக்காத உணவுப் பொருட்களை வீர சைவர்கள் உண்பதில்லை. பாதோதகத்தை வீரசைவர்கள் தனிச் சிறப்புடன் போற்று கின்றனர்.

பரிகலக் கிணறு

அடியவர்களும் மகேசுவரர்களும் உண்டு கழித்த பரிகலங்களும் (இலைகள்) அதில் மிஞ்சியிருக்கும் உணவுப் பொருட்களும் கூடச் சிறப்புப் பெற்றவைகளாகும். அவற்றை உண்பது புண்ணியமென்று கருதுகின்றனர். ஞானிகளின் பரிசேடத்தை இன்றும் புனிதம் நிறைந்ததாகக் கருதி அன்பர்கள் உண்ணுகின்றனர்.பரிகலங்களின் சிறப்பை விளக்கும் நிகழ்ச்சியொன்றை இங்கு காணலாம்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் எட்டாவது குரு மகாசந்நிதானமாக வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் அவர்கள் அடிக்கடி திருவெண்காட்டிற்கு வந்து தங்கியிருந்து சிவதரிசனம் செய்வது வழக்கம். ஒரு சமயம் எழுந்தருளியிருந்த போது தஞ்சை மன்னரும் அங்கு வந்து தங்கியிருந்தார். இருவரும் உரையாடிக் கொண்டபோது பிரமண போஜனம் செய்விப்பதே உயர்ந்தது என்று அங்கிருந்த சிலர் கூறினர். அவர்கள் உண்டு எறிந்த பரிகலங்களும் அதிக மகிமை படைத்தவை என்றனர். அதைக் கேட்ட குருமகா சந்நிதானம் அவர்கள் அடியவர்களின் பரிசேடமும் உயர்ந்தது என்று கூறினார்.

மன்னர் அந்தக் கருத்தைச் சோதிக்க விரும்பினார். தகுதியுள்ள பிராமணர்களக்கு தினமும் உணவிட்டு அவர்கள் உண்டபின் பரிகல இலைகளைத் திரட்டி எடுத்து ஒரு பாழுங் கிணற்றில் இட்டுவரச்செய்தார். ஒரு மண்டல காலம் இவ்வாறு செய்தபின் அந்தக் கிணற்றைத் தூர் எடுத்துச் சுத்தம் செய்யும்படிக் கூறினார். கிணறு துர்நாற்றம் நிரம்பியதாகவும் புழுக்கள் நெளிவதுமாகவே இருந்தது. சுத்தம் செய்த பின்னும் மாற்றம் நிகழவில்லை.

குருமகாசந்நிதானம் தினமும் மாகேசுவர பூசை செய்வித்து அதன் பரிகலங்களை(சாப்பிட்ட இலைகள்) மடத்தின் பின்புறம் இருந்த பாழடைந்த கிணற்றில் இடும்படிச் செய்தார். சில நாட்கள் கழிந்தன. மன்னரும் மற்றவர்களும் கூடி நிற்க சந்நிதானம் அந்தக் கிணற்றைச் சுத்தம் செய்யும்படிக் கூறினார்கள். அதன்படியே சுத்திகரித்தனர்.

அதன் தண்ணீர் படிகம் போல் தூய்மையானதாகவும் சுவை மிகுந்ததாகவும் மாறி இருந்தது. மன்னனும் மக்களும் மாகேசுவர பூஜையின் பெருமையை உணர்ந்தனர். அந்தக் கிணறு இன்றும் பரிகலக் கிணறு என்றழைக்கப்பட்டு வருகிறது. அது திருவெண்காட்டுக் கிளை மடத்தில் உள்ளது.

திருமடங்கள்

சமய வாழ்வில் திருமடங்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. சமய வல்லுநர்களும், சமயாசாரத்தில் நிலைபெற்றிருப்பவர்களும் உண்டு ஓய்வெடுக்கும் இடங்களாகத் திருமடங்கள் விளங்குகின்றன. திருத்தலங்கள்தோறும் திருமடங்கள் அமைக்கப்பட்டுப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன.

திருமடங்கள் யாவும் தகுந்தவர்களுக்குப் ஞானத்தை நல்கியும் பசிப்பிணி போக்கும்அமுது நிலையங்களாகவும் உள்ளன. அன்பர்களுக்குச் சிவமணம் கமழும் தெய்வத் தமிழுடன் அமுதும் படைப்பதற்காகவே திருமடங்கள் தோன்றின என்பர். சோறு மணக்கும் மடங்களெல்லாம் நெய்யே மணக்கும் கறிகளெல்லாம் என்று மகாவித்து வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சேக்கிழார் பிள்ளைத் தமிழில் சிறப்பிக்கின்றார்.

பெரியபுராணத்தில் அமர்நீதி நாயனார் தக்க அன்பர்கள் அமுது செய் திருமடம் சமைத்தார் என்று சேக்கிழார் கூறுகிறார். அங்கு அடியவர்க்கு அமுது செய்வித்து மகிழ்ந்தனர் என்றும் நான்கு மறைகளையும் கற்ற வல்லர்கள் நன்கு அமுது செய்தருள வேதியர்களால் சமைக்கப்பட்ட உணவு படைக்கப்பட்டன என்பதையும் குறித்துள்ளார்தக்கவர்கள் உண்டபின் எல்லோருக்கும் உணவு படைக்கப்பட்டது.

கல்வெட்டுகளில் சோழர் காலத்தில் திருத் தலங்கள் தோறும் திருமடங்கள் அமைந்திருந்த செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன.திருவாவடுதுறையில் திருநீலவிடங்கன் மடம், திருவீதிமடம், நாற்பத்தெண்ணாயிரவர் மடம், சர்வ தேவன் மடம் முதலியன இருந்த தாக இவ்வூர் கோயில் கல்வெட்டுக்கள் கூறுகின் றன.

சமயாச்சாரியார்கள் பெயரால் பல மடங்கள் நிறுவப்பட்டிருந்தன. திருஞான சம்பந்தர் பெயரால் கோயிலூரர் (திருஉசாத்தானம்) திருவீழி மிழலை,நல்லூரர் பெருமணம் (ஆச்சாள் புரம்) முதலிய ஊர்களில் திருமடம் இருந்தன.ஆச்சாள் புரத்தி லிருந்த மடத்தில் பெருமணமுடையார் கோயில் மாகேசுவரர்களுக்கும், கும்பிடவந்த ஆண்டார்களுக்கும் அமுது செய்ய மடப்புறமாக இடம் விடப்பட்டிருந்த செய்தியை அறிகிறோம்.

அரசர்கள் பெயரால் குலோத்துங்கச் சோழன் மடம் இராஜேந்திர சோழன் மடம் முதலான மடங்கள் இருந்திருக்கின்றன.

திருஒற்றியூரில் லகுளீச பாசுபதர்களின் திருமயான மடம் இருந்துள்ளது.திருக்கடவூரில் மார்கண்டேய மடம் எனும்ஒரு மடம் இருந்தது. அதில் தினமும் சிவ யோகிகள் பதின்மருக்கு அமுதளிக்கப்பட்டது

கோயில்களின் அன்றாடச் செலவை ஈடு கட்ட நிலங்கள் அளிக்கப்பட்டதைப் போலவே திருமடங்கள்நன்குநடைபெறவும்நிலக் கொடைகள் அளிக்கப் பட்டிருந்தன. அவை மடப்புறம் என்றழைக்கப்பட்டன.

திருத்தலங்களில் பல்வேறு இனத்தவர்கள் தங்கள் திருமடங்களை அமைத்திருந்த னர்.திருத்தணிகை, திருப் போரூர் திருவண்ணா மலை, மதுரை, திருப்பரங் குன்றம் முதலிய தலங்களில் இத்தகு மடங்கள் உள்ளன. இவை சேணியர் மடம்,வாணியர் மடம்,பிராம ணர்மடம், வன்னி யர் மடம் எனப் பல இனத்தின் பெயரால் அழைக்கப்படுகின்றன. இவற் றில் சிலவற் றில் இப்போதும் விழாக்காலங்களில் அடியவர்களுக்கு விருந்து அளிக்கப்படுகிறது.

திருவண்ணாமலையில் ஓயாமடம் என்ற பெயரில் திருமடம் ஒன்று உள்ளது. இங்கு இரவும் பகலும் ஓயாது உணவளிக்கப் பட்டதால் இப்பெயர் பெற்றது. இப்போதும் நண் பகலில் துறவியர்க்கு உணவளிக்கப்படுகிறது.

சில இனத்தவர் தாம் அமைத்த மடங் களுக்குத் தமது இனப்பெயரைச் சூட்டாமல், தம் இனத்தில் தோன்றிய அடியவர்களின் பெயரைச் சூட்டினர்.

காஞ்சீபுரத்தில் மண்ணுடையார் எனப் படும் குலாலர்கள் அமைத்துள்ள திருநீலகண் டர் திருமடம், காஞ்சியில் மண்ணார் எனப்படும் சலவையாளர்கள் அமைத்த திருக் குறிப் புத் தொண்டர் மடம் முதலியன இதற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

தென்னகமெங்கும்அன்பர் கூடி அமைத்த ஆயிரக் கணக்கான மடங்கள் உள்ளன. கால மாற்றத்தால் அவற்றில்உணவிடுவது குறைந்து விட்டது. பெரும்பாலானவற்றை நிர்வகிக்கவும், வருவாயைப் பெருக்கவும் திருமணக் கூடங்களாக மாற்றப்பட்டு வருவது வருந்தத் தக்கது.

தமிழ்மணத்துடன் சைவப் பயிர் வளர்க் கும் மடங்களாகத் திருவாடுதுறை ஆதீன மடாலயம், திருத் தருமபுர மடாலயம், காசி மடம் ஆகியன சில நூற்றாண்டுகளாக நன்கு செயல்பட்டுவரும் ஆலயங்களைப் பரிபாலிப்பதுடன் அன்பர்களை போற்றியும் வருகின்றன. இவற் றில் சைவ சித்தா ந்தம் போதிக்கப்படுகிறது. வேதாந்தத் தைப் போதிக்கவும் பல மடங்கள் தோன்றின. இவற்றில் முதன்மை பெற்றது கோயிலூர் மடமாகும்.

மடங்கள் யாவும் பாரத தேசத்தின் கலாச்சார பிரதிபலிப்பாகவும், தமிழ் மக்களின் விருந்தோம்பல் பண்பிற்கு அடையாளமாகவும் திகழ்கின்றன.

பந்திக் கட்டு

திருமடங்களில் அடியவர்களுக்கு அமுதுபடைக்க பெரிய விசாலமான மண்டபம் உள்ளது. இதையொட்டி அடுக்களை எனப்படும் திருமடைப்பள்ளி இருக்கும். அன்பர்கள் அமர்ந்துண்ணும் மண்டபம் பந்திக்கட்டு என்று அழைக்கப்படுகிறது. இது அன்னபூரணியின் வடிவமாகும். குருபூசை மற்றும் சிறப்பு நாட்களில் ஆதீனகர்த்தர் இதில் அடியவர்களுடன் அமர்ந்து அமுது செய்வார். திருவாவடுதுறை ஆதீன மடாலயத்தில் பெரிய பந்திக்கட்டு உள்ளது. தூண்களில் சங்கநிதி, பத்மநிதி, காமதேனு, கற்பக விருட்சம் முதலிய உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன.

கேரள ஆலயங்களில் ஆலயத்தையொட்டி ஊட்டுப் புறை எனும் மண்டபம்உள்ளது. இதில் வேதம் வல்ல பிராமணர்களுக்கும், அடியவர்களுக்கும் உணவிடப்படுகிறது.

விறகிடவும் - நீரிடவும்

திருமடங்களைப் பராமரிக்கவும் செயல்படுத் தவும் மக்கள் தனிக்கவனம் செலுத்தியதைக் கல்வெட் டுகள் மூலம் அறிகிறோம். எடுத்துக்காட்டாக மதுராந் தகத்திலி ருந்து 37 கிலோ மீட்டர் தொலைவில் வெடால் என்னும் கிராமத்தில் வடவாண்டார் கோயில் என்னும் சிவாலயம் உள்ளது. இங்குள்ள கல்வெட்டொன்றின் மூலம் இத் தலத்தில் திருமடம் இருந்ததையும், அதில் துறவிகளுக்கும் தவசிகளுக்கும் உணவு வழங்கப்பட் டதையும் அறிகிறோம். இக்கல்வெட்டில் கார்த்திகை முதல் நான்கு மாதங்கள் விறகிடவும்; பங்குனி மாதம் முதல் நான்கு மாதங்களுக்கு தண்ணீர் இடவும் செய்தி ருந்த ஒரு ஏற்பாட்டைக் கூறுகிறது.கார்த்திகை முதல் நான்கு மாதங்கள் மழை, பனி, குளிர் கூடிய மாதங்கள் இவற்றில் அடுப்பெரிக்க காய்ந்த விறகுகள் கிடைப் பது கடினம்.

அதுபோன்றே பங்குனி முதல் நான்கு மாதங்கள் கோடை காலமாகும். வெப்பம் மிகுந்து குளம் குட்டைகளும் வறண்டு நீர் கிடைப்பது அரிதா கிவிடும். எனவே, இந்த இரண்டு தொல்லைகளிலிருந்தும் விடுபட அம்மடத்திற்குத் தனிக் கொடை அளிக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் திருமடங்கள் நன்கு நடைபெற மக்களும் அன்பர் களும் மேற் கொண்ட முயற்சிகளை அறிய முடிகிறது.

அறச்சாலைகள்


திருமடங்கள் சமயவாழ்வில் மேன்மை பெற்ற வர் களுக்கு உணவூட்டி மகிழ்ந்தன. அறச் சாலைகள் பசி யால் வருந்திய எல்லோருக்கும் சாதி, மத, இன பேதமற்ற வை வகையில் அமுதூட்டின.

பெரிய திருத்தலங்களில் பல்வேறு அறச் சாலைகள் அமைந்திருந்ததைக் கல்வெட்டுக்களும் இலக்கியங்களும் கூறுகின்றன.


திருவாவடுதுறை கோமுத்தீசுவரர் ஆலயத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளின் மூலம் பெருந்திருவாட்டி அறச்சாலை, முன்னூற்று அறு பத்து நால்வன் அறச்சாலை சங்கரதேவன் அறச் சாலை முதலியவை இருந்ததை அறிகிறோம். இவற் றில் அடியார்களுக்கும் பிராமணர்களுக்கும், தபசிகளுக்கும்அநாதைகளுக்கும் உணவளிக்கப் பட்டன.

அறச் சாலைகளில் உணவிடுவது தொடர்ந்து நடைபெற அளிக்கப்பட்ட நிலங்களுக்குச் " சால போகம்" என்பது பெயர்.திருக்கடவூரில் இராஜாதி ராஜன் அறச்சாலை இருந்தது. இதில் தினமும் 17 பேர்களுக்கு உணவளிக்க " சாலபோகமாக" நிலம ளிக்கப்பட்டிருந்தது.

சிதம்பரத்தில் இராஜேந்திர சோழனின் அணுக்கி நக்கன் பரவையார் சிங்களாந்தகன் என்ற பெயரால் அறச்சாலை ஏற்படுத்தி நாள் தோறும் 25 பிராமணர்களுக்கு உணவிட ஏற்பாடு செய்திருந்தாள் இச்சாலை களில் சமையல் செய்து வந்தவனுக்கு " சாலைமடையன்" என்றும் பெயர் வழங்கியது. சாலைகளை மேற்பார்வை செய்த வன் " அறதேயன்' என்றும் அழைக்கப் பட்டான்.




அருள்மிகு அன்னபூரணி அம்பிகை உடனாய
அன்னவிநோதப் பெருமான் அருளினால்
எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சிவாலயத் திருவிழாக்கள்



★ திருக்கல்யாண கோலத்தில் அருள்மிகு பாரத்வாஜேஸ்வரர் – புலியூர் – கோடம்பாக்கம் – சென்னை

வாழ்வில் மகிழ்ச்சியுடன் இன்பம் தருவன திரு விழாக்களாகும். ஆலயங்களில் பலவகை விழாக்கள் நடைபெறுகின்றன. இவற்றில் கலந்துகொண்டு அன்பர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். திருவிழாக்களைக் காண்பது புண்ணியம் என்று புராணங்கள் கூறுகின்றன.

திருவிழாக்களில் சிவபெருமான் பரிவாரங்களுடன் பலவிதவாகனங்களில் பவனிவந்து காட்சியளிக்கிறார். அவருக்குக் கண்ணைக் கவரும் விதத்தில் மலர் மாலை களையும் ஆபரணங்களையும் அணிவித்து உலாவரச் செய்கின்றனர். தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்த வாகனங்கள், தேர்கள், பல்லக்குகள் ஆகியவற்றில் பவனிவரச் செய்கின்றனர்.

வேத மந்திரங்களும், ஆகம வசனங்களும் ஓதி விரிவானமுறையில் பூசைகளுடன் தீபாராதனைகள் செய்யப்படுகின்றன. திருமுறைகளும் புராணங்களும் இசைக்கப்பட்டும் ஓதப்பட்டும் வருகின்றன.

திருவிழாக்களை ஒட்டி கோயில் புதுப்பிக்கப்பட்டு பொலிவுடன் விளங்குகிறது பந்தல்கள் இடப்பட்டு வாழை, கமுகு, தென்னம்பாளை முதலியன கட்டப்பட்டு, பலவண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு பிரகாசமாகக் காட்சியளிக்கின்றன. இவை கண்ணுக்கும் நெஞ்சுக்கும் இதமான இனிய மகிழ்ச்சியை தருகின்றன.


ஆலயங்களில் சிவபெருமானின் வீரத்தை விளக்கவும், அருள் பொழியும் திறத்தை உணர்த்தவும், ஆன்ம லாபங்களைப் பெருக்கும் வகையிலும் பலவகை யான விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

இத்தகைய விழாக்களின் பெருமைகளை முழுவதும் விளக்கிக் கூறுதல் இயலாத செயலாகும். ஒரு சில செய்திகளைச் சிவமஞ்சரியின் ஐம்பதாவது மலரில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் தின, வார, மாதவிழாக்கள், ஆண்டுதோரும் கொண்டாடும் விழாக்கள், பெருந்திருவிழாக்கள், ஐதீக விழாக்கள், அடியவர் விழாக்கள் என பல்வேறு செய்திகள் இடம் பெற்றுள்ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வேளையில் விழாமலி மூதூர் மயிலாபுரியில் கொலுவீற்றிருக்கும் கற்பகவல்லி உடன்உறை கபாலீசு வரப் பெருமான் அடியவர்களுக்கு சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர் தம் பொற் பாதங்களை மனத்தில் இருத்திப் பணிந்து போற்றுகின்றோம்.

–சிவசுந்தரி

திருமுறைகள் கூறும் திருவிழாக்கள்



★ கபாலீஸ்வரர் திருமயிலை ★
படம் உதவி : திருமயிலை ரமேஷ்

தமிழக மக்கள் விழாக்களை நடத்துவதிலும் அவற்றில் பங்குகொள்வதிலும் பெருமகிழ்ச்சி அடைகின்றனர். சங்க இலங்கியங்கள் பூம்புகாரில் நடைபெற்ற இந்திரவிழா, கரூரில் நடைபெற்ற உள்ளி விழா, மதுரையில் நடைபெற்ற பங்குனி விழா முதலிய வற்றைப் சிறப்பித்துக் கூறுகின்றன.

சிவாலயங்களில் அதிக அளவில் விழாக்கள் நடை பெற்று வந்துள்ளன. தமிழ்வேதமான திருமுறைகளில் அனேக இடங்களில் திருக்கோயில்களில் நடைபெற்ற திருவிழாக்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

கொருக்கை வீரட்டானத்தில் அட்டமிமுன் ஏழு நாட்கள் நடைபெற்ற விழா, திருவிடைமருதூரில் நடைபெற்ற தைப்பூச விழா, திருவாரூரில் நடைபெற்ற திருவாதிரை விழா, பங்குனி உத்திர விழா முதலியவற்றைப் பற்றிய செய்திகளை காணலாம். ஆரூர் பதிகத்தில் ஆதிரை விழா நடைபெறும் போது நடந்த நிகழ்ச்சிகள் சொல்லோவியமாகத் தீட்டப்பட்டு உள்ளன. இதன்படி...

இறைவன் திருவாரூர் வீதிகளில் பவனி வருகின்றான் அவனுக்கு முத்துவிதானங்களைப் பிடித்து நிழல் பரப்புகின்றனர். மணிகள் இழைத்த கவரிகள் வீசப்படுகின்றன. பெண்கள், வெண்தலை மாலைகளை அணிந்த மகா விரதிகள், பாசுபதர்கள் ஆகிய பக்தர்கள் பெருமானைச் சூழ்ந்து வருகின்றனர். அரம்பையர் ஆடிப்பாடி வருகின்றனர். அருகிலும் நெடுந் தொலைவிலும் உள்ள ஊர்களிலிருந்து பக்தர்கள் வந்து குழுமுகின்றனர். அவர்கள் பெருமானின் பெருமைகளைப் பேசி, பாடி, ஆடுகின்றனர். வீதிகளில் வெண்கொடிகள் பறக்கின்றன. ஆங்காங்கு மணிப் பந்தல்கள் இடப்பட்டு உள்ளன. பக்தர்களோடு வானவர்களும் வந்து வணங்கு கின்றனர். சங்கு, பறை, கல்லவடம் ஆகியவற்றின் பேரொலி கேட்கிறது. பக்தர்கள் பாடலொலி விண்ணை அளாவுகிறது.

திருமயிலையின் ஞானசம்பந்தர் அருளிய பூம்பாவைப் பதிகமே ஆலயங்களில் ஆண்டு முழுவதும் அந்தந்த மாதங்களில் நடைபெற்ற விழாக்களைப் பட்டியலிட்டுக் கூறும் பெரும் பதிகமாகும்.

இதன் முதற்பாடலில் புரட்டாசிப் பூரட்டாதி நாளில் உருத்திரப் பல்கணத்தார்க்கு சோறிடுதல் குறிக்கப்பட்டு உள்ளது. இரண்டாம் பாடலில் ஐப்பசி ஓணவிழாவில் அரிய தவசியர்க்கு உணவிட்டு மகிழ்தல் தொடர்ந்து கார்த்திகை தீபத்திருநாளில் பெண்கள் விளக்கேற்றி மகிழ்வது, மார்கழியில் திருவாதிரை விழா நடைபெறு வது, தைப் பூசநாளில் பெண்கள் பொங்கலிட்டு விழா கொண்டாடுதல், மாசி மாதம் கடலாட பெருமான் இடப வாகனமேறிச் செல்லுதல்; பங்குனி உத்திரப் பெருந்திரு விழாவில் பெண்கள் ஆடிப்பாடி மகிழ்வது, சித்திரை மாதத்து அட்டமி நாளில் பதினெண் கணங்கள் துதி செய்யப் பெருமான் வருதல், வைகாசி மாதத்தில் பொன் னூசல் ஆடி வசந்தம் கொண்டாடுதல்; ஆனியில் பெருஞ் சாந்தி எனப்படும் பவுத்திரோற்சவம் கொண்டருள்வது ஆகிய பலவகை விழாக்கள் குறிப்பிடப்பட்டு உள்ளன.

இவ்விழாக்களில் பெண்கள் பெரும் பங்கு கொண்டி ருந்தை இப்பதிகத்தின் வாயிலாக அறிகிறோம்.

குறிப்பு : இந்நூலில் விழாக்களைப் பற்றிய ஒரளவு செய்திகளே இடம்பெற்றுள்ளன. மேலும் சில செய்திகள் சிவமஞ்சரியில் ஆங்காங்கு காணப்படுகின்றன. பின்வரும் பட்டியலில் விழாவின் பெயரும் பக்க எண்ணும்

அடைப்புக்குறிகள் தொகுதி, எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளன அவற்றைப்படித்துப் பயன் பெறவேண்டுகிறோம் –ஆசிரியர்–

பக்த உற்சவம் 405 (3), ஊஞ்சல் விழா 411 (3), தேர்திருவிழா 473 (3) வசந்தவிழா 480 (3), தீபத்திருவிழா 1149 (8), தலமரசேவை 1167 (8), பஞ்சப்பிராகாரவிழா 1211 (8), சப்தப்பிராகாரவிழா 1211 (8), தீர்த்தவாரி விழா 1275 (8),

பல்வகைத் திருவிழாக்கள்

சிவாலயங்களில் தினவிழா, வாரவிழா, பட்ச விழா, மாதவிழா, ஆண்டுவிழா என்று பலவிதமான திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இவற்றைப் பற்றிய சிறுகுறிப்புகள்.

1. நித்தியோத்சவம்

இது தினமும் "பலி" அளித்தருள சந்திரசேகர மூர்த்தம் பல்லக்கில் பவனிவருவதைக் குறிப்பதாகும். நண்பகலிலும், மாலையிலும் நித்ய ஹோமத்திற்குப் பிறகு நவசந்திகளில் பலியிடப்படுகிறது. பள்ளியறைக்கு சுவாமி எழுந்தருள்வதையும் நித்யோத்சவம் என்று அழைக்கின்றனர்.

2. வாரஉத்சவம்

கிழமைகளை அடிப்படையாகக் கொண்டு நடப்பது வார உற்சவமாகும். சோமவாரங்களில் சுவாமி வலம் வந்து அருள்பாலிப்பது சோமவார உற்சவம் என்று அழைக்கப்படுகிறது. அனேக ஆலயங்களில் அம்பிகை வெள்ளிக்கிழமைகளில் ஆலயத்தை வலம் வருகிறாள். இதனைச் சுக்கிரவார விழா என்பர். இதற்கான பராசக்தி அம்மனை சுக்கிரவார அம்மன் என்று அழைக்கின்றனர். வாசுதேவ நல்லூரில் அர்த்தநாரீஸ்வர சுவாமி வெள்ளி, திங்கள் ஆகிய இரு நாட்களில் உலாவந்து ஊஞ்சல் ஆடி மகிழ்விக்கிறார்

3. பட்சவிழா

வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரண்டு பட்சங்களை அடிப்படையாகக் கொண்டு நடப்பது பட்சவிழாவாகும். பிரதோஷம் பட்சவிழாவாகும். இதில் பிரதோஷ நாயகர் இடப வாகனத்தில் பவனி வருகிறார்.

4. மாதஉத்சவம்

மாதப்பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி ஆகியவற்றில் நடத்தப்படும் விழாக்கள் மாத உத்சவம் என்றழைக்கப்படுகின்றன. மாதப் பிறப்பன்று சந்திரசேகரரை உள்வலம் வரச்செய்து தீர்த்தம் கொடுப்பது வழக்கம். அமாவாசை (அ) பௌர்ணமி நாட்களில் சோமாஸ்கந்தருக்கு அபிஷேகங்கள் செய்யப்படுகின்றன.

மாதந்தோறும் அமாவாசையன்று திருஒற்றியூர் தியாகராஜருக்கு அபிஷேகமும், திருவான்மியூர் தியாகராஜருக்குப் பௌர்ணமியில் அபிஷேகமும் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

சிதம்பரத்தில் இந்த மூன்று நாட்களிலும் சந்திரசேகரர் இடபவாகனத்தில் எழுந்தருளி சிவகங்கையில் தீர்த்தம் அளிக்கிறார். அமாவாசை விழாக்களை நண்பகலுக்குள்ளாகவும் பௌர்ணமி விழாக்களை மாலையிலும் நடத்தவேண்டுமென்பது பொதுவிதியாகும்.

5. அயனஉற்சவங்கள்

சூரியன் மகரரேகையிலிருந்து கடகரேகையை நோக்கிச் செல்லும் காலம் உத்தராயன புண்யகாலமென்றும் கடகரேகையிலிருந்து மகரரேகையை நோக்கிப் பயணிக்கும் காலம் தட்சிணாயன புண்ணிய காலமென்றும் அழைக்கப்படும். உத்தராயனம் தைமாதம் தொடங்கி ஆனிமாதம் முடிய உள்ள காலமாகும். ஆடி முதல்தேதி முதல் மார்கழி மாதம் வரையுள்ள காலம் தட்சிணாயனம் எனப்படும். இந்த இரண்டு அயனங்களிலும் முறையே பத்துநாட்கள் விழாகொண் டாடுவது வழக்கம். இவை அயன உற்சவங்கள் என்றழைக்கப்படுகின்றன.

திருவண்ணாமலையில் இப்போதும் இந்த இரண்டு அயனஉற்சவங்கள் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. தட்சிணாயன புண்ணியகால உற்சவம் ஆனி இறுதி நாளில் தொடங்கி 10 நாட்கள் நடைபெறும். உத்தராயண புண்ணியகால உற்சவம் மார்கழி 21ம் நாள் தொடங்கி தை மாதம் 3ம் தேதி முடியும்.

★ திருவாவடுதுறை கோமுத்தீசுவரர் ஆலயத்தில் இரண்டு அயன நாட்களிலும் 108 கலசம் வைத்து பூஜைசெய்து இறைவனுக்கு நீராட்டப்பட்டதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

6. சம்வஸ்த்திரோத்சவம்

பொதுவாக குடமுழுக்கு நடந்தநாளை அடிப்படையாகக் கொண்டு ஆண்டுதோறும் கொண்டாடப்படும் விழா ஆண்டுவிழாவாகும். திருவாதிரை, கார்த்திகை தீபம் முதலியன ஆண்டுக்கு ஒருமுறை கொண்டாடப்படுவதால் அவையும் சம்வஸ்திர உற்சவங்கள் என்றழைக்கப்படுகின்றன.

விஷுபுண்ணியகாலங்கள்

சித்திரை, ஆடி, ஐப்பசி, தை ஆகிய நான்கு மாதங்களின் பிறப்பு விஷுபுண்ணிய காலம் என்று அழைக்கப்படுகின்றது. இந்த நாட்களில் அனைத்து மூர்த்திகளுக்கும் சிறப்பு அபிஷேக அலங்காரம் செய்து வழிபடுகிறார்கள். தியாகராசருக்கு விஷுபுண்ணிய காலங்களில் சிறப்பு அபிஷேகம் நடைபெறுகிறது.

மாத வாரி விழாக்கள்

ஆலயத்தில் ஆண்டு முழுவதும் மாதந்தோறும் நட்சத்திரம் திதிகளை அடிப்படையாகக் கொண்டு விழாக்கள் நடைபெறுகின்றன. அவற்றில் சிலவற்றைப் பற்றிய சிறுகுறிப்பை இப்பகுதியில் காணலாம்.

சித்திரை மாத விழாக்கள்

சித்திரை விஷு புண்ணியகாலம்

சித்திரை முதல்தேதி புனித நாளாகப் போற்றப்படுகிறது அன்று அனைத்து மூர்த்தங்களுக்கும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். இதைக் களிகாணல் என்பர்.

சித்திரைப் பரணி விழா

இது சித்திரை மாதத்துப் பரணி நட்சத்திரத்தில் கொண்டாடப்படும் வைரவர் விழாவாகும். சிறுத் தொண்டர் தனது ஒரே மகனான சீராளனைச் சமைத்து இறைவனுக்கு உணவாகப் படைத்ததை நினைவூட்டும் ஐதீக விழாவாகும். திருச்செங்காட்டங்குடியில் பெரியவிழாவாக நடைபெறுகிறது. தென்னாற்காடு மாவட்டங்களில் பல ஊர்களில் அன்னக் கொடி உற்சவம் என்ற பெயரில் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

அட்சய திருதியை

வளர்பிறை திருதியை நாளான இது உணவூட்டு விழாவாகும். இந்நாளில் உருத்திரப் பல்கணத்தவர் களுக்கு உணவிடப்படுகிறது.

சித்திராபௌர்ணமி

சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரமும் பௌர்ணமியும் சேர்ந்தே வரும் இதை சித்ரா பௌர்ணமி என்றழைக்கப்படுகிறது.

அனேக ஆலயங்களில் சித்திராபௌர்ணமியைக் கடை நாளாகக்கொண்டு பெருந்திருவிழாக்கள் கொண்டாடப் படுகின்றன. சித்திரா பௌர்ணமியன்று சுவாமிக்கும் அம்பிகைக்கும் திருமணவிழா கொண்டாடு கின்றனர்.

வைகாசி மாத விழாக்கள்

வைகாசி விசாகவிழா

வைகாசி விசாகத்தைக் கடைநாளாகக் கொண்டு திருமயிலை வெள்ளீச்சரம் முதலிய சில சிவாலயங் களில் பெருந்திருவிழாக்கள் கொண்டாப்படுகின்றன. திருவிடைமருதூரில் வசந்தவிழா, திருக்கல்யாணவிழா, அஷ்டக் கொடி விழா ஆகிய மூன்றும் வைகாசி விசாகத் தினையொட்டி நடைபெறுகின்றன. சிவாலயங்களில் வீற்றிருக்கும் ஷண்முகர் இந்நாளில் வீதிவலம் வருகின்றார்.

ஆனி மாத விழாக்கள்

ஆனித்திருமஞ்சனம்

அனைத்து சிவாலயங்களிலும் ஆனிமாத உத்தர நக்ஷத்திரத்தில் இரவில் நடராசருக்குச் சிறப்பு அபிஷேகம் நடத்தப்படுகிறது. திருப்பெருந்துறையிலும், சிதம்பரத்திலும் ஆனித் திருமஞ்சனத்தைக் கடை நாளாகக் கொண்டு பெருந்திருவிழாக்கள் இந்த நட்சத்திரத் தை ஒட்டிக் கொண்டாடப்படுகின்றது.

தட்சிணாயன அயன உற்சவம்

ஆனி மாதத்தின் பின்பகுதியில் தொடங்கி நடை பெறுவதாகும். திருவண்ணாமலையில் ஆனி 30ம் தேதி முதல் கொடியேற்றி 10 நாட்கள் நடைபெறுகின்றது.

ஆடி மாத விழாக்கள்

ஆலயங்களில் ஆடிமாதத்தில் பூர நக்ஷத்திரத்தில் வளைகாப்பு உற்சவம் நடைபெறுகிறது. ஆடி மாதம் தவத் திற்கு உரியதாகும் இம்மாதத்தில் அம்பிகை தவமிருக் கும் தபசு உற்சவம் கொண்டாடப்படுகிறது. சங்கரன் கோயிலில் ஆடித்தபசு சிறப்புடன் கொண்டாடப்படு கிறது. ஆடிக்கிருத்திகையன்று முருகனுக்குச் சிறப்பு விழா நடைபெறுகிறது.

ஆவணி மாத விழாக்கள்

ஆவணி மூல விழா

இது பிட்டு உற்சவம் என்ற பெயரில் பெரும்பாலான ஆலயங்களில் கொண்டாடப்படுகிறது. மணிவாசகருக் காகச் சிவபெருமான் வந்தி என்பவள் தந்த பிட்டை உண்டு அவளுடைய கூலி ஆளாக வந்து வைகைக் கரை வெள்ளப் பெருக்கை அடைக்காது நின்று, பாண்டியனிடம் பிரம்படிபட்ட திருவிளையாடலை நினைவூட்டும் விழாவாகும். மதுரையில் இது பெருந்திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

இது அம்பிகை ஆலயங்களில் பூப்புத் திருவிழா வாகவும் கொண்டாடப்படுகிறது.

புரட்டாசி மாத விழாக்கள்

இந்திர விழா (நிறைமணிக் காட்சி)

புரட்டாசி மாத பௌர்ணமியன்று நிறைமணிக்காட்சி நடைபெறுகிறது. இந்திரன் தேவர்களுடன் பூமிக்குவந்து இதனை நடந்துகிறான் என்று கூறுகின்றனர்.

காய்கறிகள், பழங்கள், பருப்பு வகைகள் முதலியவற்றைத் தோரணமாகக் கட்டி ஆலயத்தை அலங்கரிக்கின்றனர். பெருமானுக்குப் பெரிய அளவில் புஷ்ப அலங்காரம் செய்யப்படுகிறது.

விஜயதசமி விழா

புரட்டாசி மாத மஹாளய அமாவாசையை அடுத்து வரும் வளர்பிறை தசமியை விஜயதசமி என்று கொண்டாடுகின்றனர். மாலையில் சந்திரசேகரரை குதிரை வாகனத்தில் எழுந்தருளவைத்து ஊருக்கு வெளியேயுள்ள வன்னி மரத்தடிக்கு எடுத்துசெல்வர். அங்கு பூஜைகள் செய்து அருச்சகர் வில்லை வளைத்து அம்பு எய்வார். இது மானம்பு உற்சவம் என்றும் அழைக்கப்படுகிறது. சில தலங்களில் முயலை விட்டு வேட்டை நிகழ்ச்சியாக நடத்துகின்றனர். இது பரிவேட்டை உற்சவம் என்று சிறப்புமிக்க விழாவாகக் கொண்டாடப்படுகிறது. சில தலங்களில் பாரிவேட் டைக்கு எழுந்தருள தனி மண்டபம் உள்ளது.

விஜய தசமிக்கு முன்னுள்ள ஒன்பது நாட்கள் நவராத்திரி என்றழைக்கப்படுகிறது. இந்நாட்களில் அம்பிகைக்கு பலவிதமான அலங்காரங்களைச் செய்து கொலுக்காட்சியுடன் சிறப்புப் பூசை நடைபெறுகிறது.

ஐப்பசி மாத விழாக்கள்

ஐப்பசி அன்னாபிஷேகம்

ஐப்பசி மாதத்தில் அசுவனி நட்சத்திரமும் பௌர்ணமியும் கூடிவரும் நாளில் ஆலயங்களில் அன்னாபிஷேகம் நடத்தப்படுகிறது.

ஐப்பசி ஓணவிழா

ஐப்பசி மாதத்துத் திருவோணம் நட்சத்திர நாள் மிக உயர்ந்ததாகப் போற்றப்படுகிறது. இந்நாளில் தபசிகளுக்கு உணவிடுதல் சிறந்த புண்ணியமாகக் கருதப்படுகிறது. திருமயிலையில் ஐப்பசி ஓணவிழா நடைபெற்றதைப் பூம்பாவைப் பதிகம் குறிப்பிடுகிறது.

நடைமுறையில் ஆவணித் திருவோணமே ஓணம் பண்டிகையாகக் கேராளவில் சிறப்புடன் நடைபெறுகிறது. ஆலயங்களிலும் வீடுகளிலும் புஷ்பங்களால் கோலங் களை இட்டு நடுவில் விளக்கேற்றி வைக்கின்றனர்.

ஐப்பசிப் பூர விழா

ஐப்பசி மாதப் பூரநாளில் சுவாமி—அம்பிகை திருக்கல்யாணவிழாவை நடத்துகின்றனர். சிதம்பரத்தில் தனிச்சிறப்புடன் சிவகாமி திருமணவிழா கொண்டாடப் படுகிறது.



திருநெல்வேலியில் ஐப்பசி பூரத்தைக் கடைநாளாகக் கொண்டு அம்பிகைக்கு 10 நாட்கள் திருவிழா நடத்தப்பட்டு திருக்கல்யாணத்துடன் நிறைவடைகிறது.

தீபாவளித் திருநாள்

சிவாலயங்களில் தீபாவளி தனித் திருவிழா வாகக் கொண்டாடப்படுவதில்லை அபிஷேக, ஆராதனைகள் மட்டுமே நடைபெறுகின்றன. அனைத்து மூர்த்தங் களுக்கும் எண்ணெய்க் காப்பிட்டு புத்தாடைகள் அணிவிக்கப்படுகின்றன.

கார்த்திகை மாத விழாக்கள்

கார்த்திகை தீபம்

கார்த்திகை மாதத்தில் பௌர்ணமியை ஒட்டி கிருத்திகை நட்சத்திரம் வரும். இது சிவபெருமான், பிரமனுக்கும், திருமாலுக்கும் நடுவே நெடிய நெருப்பு தூணாக நின்றதையும், அவர்கள் அதன் அடிமுடி காணமுடியாது தோற்றதையும் நினைவூட்டும் ஐதீக விழா வாகும். ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட. மிகத் தொன்மையான காலத்திலிருந்தே கொண்டாடப் பட்டுவருகிறது.

இந்நாளில் வீடுகளிலும் ஆலயங்களிலும் ஏராளமான விளக்குகளை ஏற்றுகின்றனர். முதல் நாளான பரணி யன்று பரணிதீபம் ஏற்றப்படுகிறது. தீபத் திருநாளன்று மாலையில் பஞ்சமூர்த்திகள் வலம் வருகின்றனர். அவர் களுக்கு முன்பாக சொக்கப்பனை கொளுத்தப்படுகிறது. திருமயிலைப் பூம்பாவைப் பதிகத்தில் "தளத்தேந்தி இளமுலைத் தையலர்கள் கொண்டாடும் தொல் கார்த்திகை" என்று போற்றப்பட்டுள்ளது.

திருவண்ணாமலையில் கார்த்திகைத் தீப நாளை கடைநாளாகக் கொண்டு பெருந்திருவிழா கொண்டாடப் பட்டுவருகிறது.

மார்கழிமாத விழாக்கள்

மார்கழி மாதம் பீடு (பெருமை) உடைய மாதமாகும். தேவர்கள் அனைவரும் பூமிக்குவந்து அனைத்து ஆலயங்களிலும் சிவ பூசை செய்வர். குலதெய்வங்கள், மாண்ட வீரர்கள், முனிவர்கள் யாவரும் பூமிக்கு அதி காலையில் வந்து பூசை ஏற்கக் காத்திருப்பர். அனைத்து ஆலயங்களிலும் தினமும் அதிகாலை 4 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். பொங்கல் படைக்கப்பட்டு எல்லோருக்கும் அளிக்கப்படும். அன்பர்கள் ஒன்றுகூடி தினமும் அதிகாலையில் பஜனைப் பாடல்களைப் பாடுகின்றனர்.

(திருவெம்பாவைவிழா பார்க்க பக்கம்...1598)

(திருவாதிரை விழா பார்க்க பக்கம்...1598)

மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் நீர்நிலைகளுக்குச் சென்று குளித்த பிறகு கரையில் மண்ணால் அம்பிகை வடிவத்தைச் செய்து வழிபடுவர். இதனைப் பாவை நோன்பு என்று இலக்கியங்கள் கூறுகின்றன. காளஹஸ்தியில் கொப்பி என்னும் அம்பிகை மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையில் வீதி வலம் வருகின்றாள்.

தை மாத விழாக்கள்

மகர சங்கராந்தி விழா

தைமாதத்தின் முதல்நாள் பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. அன்று ஆலயங்களிலுள்ள அனைத்து மூர்த்திகளுக்கும் எண்ணைசார்த்தி அபிஷேகம் செய்து புத்தாடை அணிவிப்பர். சந்திர சேகரர் பவனி வந்து அருள்பாலிப்பார்.

தைமாதம் 2ம் நாள் மாட்டுப்பொங்கல் திருநாளாகும். அனேக ஆலயங்களில் திருநந்தி தேவருக்கு முழுக்காப்பும் மகாநிவேதனமும் செய்யப்படுகின்றன. திருவண்ணாமலையில் இது அயன உற்சவத்தோடு தொடர்புடைய ஊடல் திருவிழாவாகக் கொண்டாடப் படுகிறது. சில தலங்களில் இறைவன் கிரி(மலை)வலம் வந்து அருள்பாலிக்கின்றார்.

தைமாதம் மூன்றாம் நாளான காணும் பொங்கல் அன்று, பல தலங்களில் பரிவேட்டை திருவிழாவாக நடைபெறுகிறது. பெருமான் குதிரை வாகனத்தில் உலா வந்து அருள்பாலிக்கின்றார்.

தைப்பூசம்

நிறைமதி நாளையொட்டி வரும் தைமாதப் பூசம் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. ஆற்றோரத் தலங்களில் உள்ள திருக்கோயில்களில் சுவாமியை ஆற்றுக்கு எழுந்தருளிவைத்து விழாகொண்டாடு கின்றனர்.

திருவிடைமருதூரில் தைப்பூசத்தைக் கடைநாளாகக் கொண்டு பெருந்திருவிழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் சிவபெருமான் காவிரியில் நீராடி அழகுடன் விளங்குவதை, “பூசம் புகுந்தாடிப் பொலிந்தழகாய ஈசன்” என்றும், பூசநீர் ஆடுவதை பூசப் புனல் ஆடவே என்றும் திருநாவுக்கரசர் பாடிப் பரவியுள்ளார்.

திருமயிலை முதலிய தலங்களில் தைப்பூசத்தில் தெப்பத் திருவிழா கொண்டாடப்படுகிறது. திருமயிலைப் பூம்பாவைப் பதிகத்தில் “மைப்பூசும் ஒண்கண் மடவார்கள் மா மயிலை கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான் தைப்பூசம்” என்று இது குறிக்கப்பட்டுள்ளது.

மாசி மாதவிழாக்கள்

மாசி மகம்

மாசி மாதத்தில் பௌர்ணமியோடு மகநட்சத்திரம் இணைந்து வரும். இதனை மாசி மகம் என அழைப்பர் திருஒற்றியூர் முதலிய தலங்களில் மாசிமகத்தைக் கடைநாளாகக் கொண்டு பெருந்திருவிழா கொண்டாடப் படுகிறது.

கடலோரத்தலங்களில் உள்ள ஆலயங்களில் சிவ பெருமான் கடற்கரைக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுக்கின்றார். சென்னை மயிலாப்பூரில் கபாலீசுவரர், வெள்ளீசுவரர், காரணீசுவரர் முதலிய மூர்த்திகள் கடற்கரைக்கு எழுந்தருளி தீர்த்தமளித்து விழா காண்கின்றனர்.

மகா சிவராத்திரி

மாசி மாதம் தேய்பிறை சதுர்தசி நாள் மகா சிவராத்திரி. காளஹஸ்தியில் மகா சிவாராத்திரியை ஒட்டி பெருந்திருவிழா கொண்டாப்படுகிறது (பார்க்க சிவமஞ்சரி மலர் 14)

பங்குனி மாத விழாக்கள்

பங்குனி மாதத்து பௌர்ணமியில் வரும் உத்திர நட்சத்திரம் பங்குனி உத்திரம் என்றழைக்கப்படுகிறது. இது திருமணத்திற்குரிய நாளாகும். தெய்வத் திருமணங்களை இந்நாளில் நடத்துகின்றனர். சென்னை கபாலீசுவரர்–கற்பகவல்லி; காஞ்சி ஏகாம்பரரேசுவரர் ஏலவார்குழலி ஆகியவர்க்குத் திருமணவிழாக்கள் நடைபெறுகின்றன. காஞ்சீபுரம், மயிலை முதலிய தலங் களில் பங்குனி உத்திரத்தைக் கடைநாளாகக் கொண்டு பங்குனி உத்திரப் பெருந்திருவிழா (ப்ரும்மோத்ஸவம்) கொண்டாடப்படுகிறது.

நாட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வரும் விழாக்கள்

ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்கள் அவற்றின் சிறப்புகருதி தொடர்ந்து பல நாட்கள் நடைபெறுகின்றன. பூஜாபத்ததி நூல்களில் காணப்படும் மகோற்சவ விதிப்படலங்களில் விழாக்கள் நடைபெறும் நாட்களின் எண்ணிக்கையைக் கொண்டு அவற்றிற்கு பெயரிடப்பட்டுள்ளன.

ஒரு நாள் மட்டுமே நடைபெறுவது ஏக தின உற்சவம் எனப்படும். இது சைவம் என்றும்; மூன்று நாட்கள் கொண்டாப்படுவது சாத்விகம் என்றும் ஐந்து நாள் நடைபெறுவது பார்த்திவம் என்றும்; ஏழுநாட்கள் கொண்டாடப்படுவது ஸ்ரீகரம் என்றும் ஒன்பதுநாள் நிகழ்வது செளக்யம் என்றும் பன்னிரண்டு நாட்கள் நடைபெறுவது பைதிருகம் என்றும் அழைக்கப்படுகின்றன. நடைமுறையில் பல்வேறு எண்ணிக்கை கொண்ட நாட்களில் நடைபெறும் விழாக்களை இப்பகுதியில் அறிந்து மகிழலாம்.

ஏகதின உற்சவம்

காலையில் ஹோமம், நண்பகலில் மகா அபிஷேகம் இரவு பஞ்சமூர்த்தி உலா என்று விழா நடைபெறும். சில இடங்களில் நண்பகலில் பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளித் தீர்த்தம் அளிப்பர்.

குடமுழுக்கு விழாவன்று காலையில் கொடியேற்றி, மாலையில் திருக்கல்யாணம் நடத்தி, வீதி உலா செய்து இரவில் கொடியிறக்குவர். இது ஏகராத்திர உற்சவம் எனப்படுகிறது.

மூன்று நாள் விழா

அனேக தலங்களில் மூன்று நாள் விழா கொண்டாப்படுகிறது. இராமேஸ்வரத்தில் நடைபெறும் வீபிஷணன் பட்டாபிஷேக விழா மூன்று நாட்கள் நடைபெறுவதாகும்.

ஏழுநாட்கள்


திருவாவடுதுறை கோமுத்தீசுவரர் ஆலயத்தில் புரட்டாசி மூலம் தொடங்கி பூரட்டாதி வரை ஏழு நாட்கள் விழா நடைபெற்றதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

எட்டுநாள்கள்

தேவாரத்தில் எட்டுநாட்கள் விழா நடைபெற்றதைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. தீர்த்தமாம் அட்டமிமுன் ஏழு நாளும் கூத்தராய் வீதிபோந்தார் கொறுக்கை வீரட்டனாரே என்று திருநாவுக்கரசர் அருளிச்செய்து உள்ளார். பிரதமை தொடங்கி அட்டமிவரை எட்டு நாட்கள் அட்டவீரட்டத் தலமான கொறுக்கையில் விழா நடைபெற்றதை இதன் மூலம் அறிகிறோம். இதுபற்றி பூஜாபத்ததி நூல்களில் குறிப்பு இல்லை.

ஒன்பது நாட்கள்

இப்போது அனேக ஆலயங்களில் 10 நாட்கள் பெருந்திருவிழா நடைபெறுகிறது. இதில் ஒன்பது நாட்கள் காலையிலும், மாலையிலும் வேள்வி நடைபெறுகிறது. எனவே இது நவதின மகோற்சவம் என்றே அழைக்கப் படுகிறது. தீபாராதனையின் போது சொல்லப்படும். ஆசீர்வாதத்திலும் நவதினமகோற்சவம் என்றே கூறப்படுகிறது.



பன்னிரண்டு நாட்கள்

பன்னிரண்டு சூரியர்களும் சேர்ந்து நடத்தும் விழா 12 நாட்கள் நடைபெறும். இதில் பத்தாம் நாள் இரவு கொடியிறக்கப்படும். அதற்கடுத்த இரண்டு நாட்கள் பல்லக்கு, ஊஞ்சல் ஆகியன நிகழும். மதுரையில் நடைபெறும் சித்திரை விழா பன்னிரு நாள் விழாவாகும்.

பதினெட்டு நாட்கள் விழா

பதினெட்டு வெற்றியைக் குறிக்கும் எண்ணாகும். சிலதலங்களில் 18 நாட்கள் விழாகொண்டாடப்படுகிறது. மதுரையில் நடைபெறும் ஆவணி மூல பிட்டுத்திருவிழா பதினெட்டு நாட்கள் நடைபெறுவதாகும். பெருமானின் திருவிளையாடல்களைக் குறிக்கும் வகையில் வளையல் விற்றது, நாரைக்கு முக்தி அளித்தது முதலான பன்னிரண்டு ஐதீக விழாக்கள் இதில் சேர்ந்து நடத்தப் படுகின்றன.

27 நாட்கள் விழா

திருவாரூர் தியாகேசப்பெருமானுக்கு மாசிமாத அஸ்த நட்சத்திரத்தில் கொடியேற்றி பங்குனி

உத்திரத்தில் தீர்த்தவாரியும் கொடியிறக்கமும் நடைபெறும். இவ்வாறு இருபத்தேழு நாட்கள் நடைபெறும் வகையில் விழாவை அமைத்தவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான நமிநந்தி அடிகள்.

வசந்தன் (எ) அஷ்டகொடி உற்சவம், தேர், பக்தகாட்சி ஆகிய மூன்றில் மட்டுமே தியாகராஜர் பவனி வருவார். மற்றைய விழாக்கள் யாவும் சந்திரசேகரமூர்த்திக்கு நடைபெறும். இது 27 நட்சத்திரங்களில் பிறந்தவர்களும் கண்டு தரிசித்துப் பேறுபெறும் வகையில் அமைக்கப்பட்ட விழா என்பர். இந்நாளில் இதன் அமைப்பு முழுவதும் இப்போது மாறியுள்ளது.

40 நாட்கள் விழா

திருவானைக்காவல் ஜம்புகேசுவரர் ஆலயத்தில் சகலாகம சங்கிரகம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளபடி 40 நாட்கள் விழா மாசி மாத மிருகசீரிடத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கி பங்குனி சித்ரா நட்சத்திரத்தில் பஞ்சப் பிராகார விழாவுடன் முடிவடைகிறது. விநாயகர் சுப்பிரமணியர்க்கு (5) நால்வர்க்கு (3) கல்யாண சுந்தரருக்கு (3) சந்திரசேகரருக்கு (6) சோமாஸ்கந்தருக்கு (10) பல்லக்கு சொக்கருக்கு (3) மௌனவிழா (3) சண்டீசருக்கு (3) பஞ்சப்பிராகாரம் (1) விடையாற்றி (1) மண்டலாபிஷேகம் (1) ஆக 40 விழா நாட்கள். ★


★ இந்நூலில் சிவபெருமானுக்குக் கொண்டாடப் படும் விழாக்களே குறிக்கப்பட்டுள்ளன. சிவாலயங் களில் அம்பிகை, முருகன், விநாயகர் சந்நிதிகளிலும் தனித்தனியே விழாக்கள் கொண்டாடப்படுகின்றன

அம்பிகை சந்நிதியில் ஆடிப்பூரத்தையாவது, ஐப்பசி பூரத்தையாவது கடைநாளாகக் கொண்டு கொடியேற்றி பத்து நாட்கள் விழா கொண்டாடுகின்றனர். நவராத்திரியில் அம்பிகையை மண்டபத்தில் அமர்த்தி பலவிதமான தேவி அலங்காரங்களைச் செய்து சிறப்பு உபசாரங்களுடன் வழிபடுகின்றனர். வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை உள்வலம் வந்து விழா காண்கிறாள். பெருந்திருவிழாவின் முடிவில் கௌரிபூஜை என்று அம்பிகைக்குத் தனிவிழா நடைபெறுகிறது.

முருகன் சந்நிதிகளில் மகாகந்தர் சஷ்டி (அ) பங்குனி உத்திரம் ஆகியவற்றைக் கடைநாளாகக் கொண்டு கொடியேற்றி விழா நடத்துகின்றனர். கிருத்திகை தோறும் முருகன் வெளிப்பிராகாரத்தில் பவனி வருகிறார்.

ஆடிக் கிருத்திகை, தைக் கிருத்திகை, பங்குனிக் கிருத்திகை பங்குனி உத்திரம் முதலியன சிறப்புடன் கொண்டாடப் படுவதுடன் பெருமான் வீதிகளில் வலம் வந்து அருள் பாலிக்கின்றனர்.

பிள்ளையார்பட்டி, திருவலஞ்சுழி முதலிய சிவத்தலங்களில் உள்ள விநாயகருக்கு ஆவணி மாதத்தில் பெருவிழா நடைபெறுகிறது.



புஷ்பப் பல்லக்கு – புலியூர், கோடம்பாக்கம், சென்னை
படம் உதவி : திரு. பாலச்சந்திரசிவாச்சாரியார் (சதீஸ்)

ஐதீக விழாக்கள்



★ மீனாட்சி சுந்தரேஸ்வரர் பிட்டுக்கு மண்சுமத்தல் ★

நடந்த வரலாற்றை மக்களுக்கு நினைவூட்ட அன்று நடந்ததுபோல் மீண்டும் இன்று நடத்திக் காட்டுவதே ஐதீகவிழா எனப்படும்.

தலபுராணங்களில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் மிகத் தொன்மையான காலத்தில் என்றோ நடந்தவை. அவற்றை மக்கள் மனதில் நிலை நிறுத்தவும். அவற்றில் அவர்கள் ஒன்றி மனம் மகிழவும் அவை மீண்டும் நாடகவடிவில் ஐதீக விழாவாக நடத்திக் காட்டப்படுகின்றன.

முதல்வகை விழாக்கள் தேவர்களும், கணங்களும் புடைசூழ எழுந்தருளி சிவபெருமான், நிகழ்த்திய வீரத் திருவிளையாடல்களை நினைவூட்டுபவை. இவற்றில் முக்கியமானவை திருக்கடவூரில் எமனை உதைக்கும் காலசம்ஹார விழா, வழுவூர் கஜசம்ஹார விழா; திருவதிகை திரிபுரசம்ஹார விழா முதலியவையாகும்.

இரண்டாவது வகையில் சிவபெருமான் அன்பர்களுக்காக வணிகன், சித்தன், கூலியாள் முதலிய கோலங்களில் எழுந்தருளி நிகழ்த்திய அற்புதங்களைக் குறிப்பதாகும். இவற்றில் முக்கியமானவை மதுரையில் வளையல் விற்றது. பிட்டுக்கு மண்சுமந்தது. கல்யானைக்கு கரும்பு அருத்தியது முதலியனவாகும்

எடுத்துக்காட்டாக, மதுரையில் எல்லாம் வல்ல சித்த மூர்த்தியாக விளங்கும் பெருமான் கல்யானைக்கு கரும்பை அளிப்பது தைப் பொங்கல் நாளில் விழாவாகத் கொண்டாடப்படுகிறது. பிட்டுக்கு மண் சுமந்தது ஆவணிமூல விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

மூன்றாவது வகை ஐதீக விழாக்கள் அடியவர்களோடு தொடர்புடையவை. சிவபெருமான் அடியவர்களின் பக்தித் திறம் கண்டு அவரிடத்தில் நேரில் எழுந்தருளி அருள்பாலிப்பதைக் குறிப்பவை காரைக்கால் மாங்கனித்திரு விழா, திருச்செங்காட்டங்குடி பிள்ளைக் கறிவிழா (அன்னப் படையல்) சிதம்பரம் புலீச்சரம், திருவோட்டு விழா ஆகியவை இத்தகையனவாகும். இவை முறையே காரைக்காலம்மையார், சிறுத்தொண்டர், திருநீலகண்டர் ஆகியோர் தொடர்புடையன.


நான்காவது வகை ஐதீகவிழாக்கள் புராணக் கதைகளையும் தலவரலாறுகளையும் நினைவூட்டுபவை. திருவீழிமிழலையில் திருமால் சக்கரம் வேண்டி பூசித்துப் பெற்றது. திருமழிசையில் சோழமன்னன் ஊணான் கொடியை விலக்கி லிங்கத்தைக் காண்பது முதலியவை இவ்வகையினதாகும்.

எடுத்துக்காட்டாக, மதுரையில் நடைபெறும் ஆவணி மூலவிழாவில் இத்தலத்தில் பெருமான் ஆடிய 64 திருவிளையாடல்களில் வளையல் விற்றது, நாரைக்கு உபதேசித்தது, நரியைப் பரியாக்கியது முதலிய பனிரெண்டு விளையாடல்களை நினைவூட்டும் விழாக்கள் நடத்தப்படுகின்றன.

திருவீழிமிழலையில் நடைபெறும் சித்திரைப் பெருந்திருவிழாவில் தலபுராணம் கூறும், யமசம்கார விழா, திருமால் சிவனை பூசித்துச் சக்ராயுதம் பெறுதல் நடத்தப்படுகின்றன. யமசங்காரம் பல ஊர்களில் நடந்து உள்ளது. திருவையாறு, திருவீழிமிழலை முதலிய தலங்களிலும் யமசங்காரம் நடந்துள்ளதால் அங்கும் சங்காரவிழா கொண்டாடப்படுகிறது. திருவீழிமிழலையில் காலசம்ஹார மூர்த்தியின் பெரிய திருவுருவம் உலாத் திருமேனியாக உள்ளது. மரத்தால் செய்த யமதருமன் வடிவமும் உள்ளது. சித்திரைப் பெருந்திரு விழாவின் ஆறாம்நாள் மாலையில் யமசம்ஹார விழா நடைபெறுகிறது.

இவ்விழாக்களின் மூலம் மக்கள் புராணவரலாறுகளில் ஒன்றி அவற்றின் மேன்மையை உணர்கின்றனர். இவை வழிவழியாக சமய வாழ்வை மேம்படுத்தி நிலைபெறச் செய்கின்றன.

சிவபெருமானின் வீரத்திருவிளையாடல்களை விளக்கும் ஐதீகவிழாக்கள்



★ திரிபுரதகனம் திருத் தேர்காட்சி ★

சிவபெருமான் உலக உயிர்களின் நன்மைக்காக பல அசுரர்களைப் போரில் வென்று வீரட்டகாச மூர்த்தியாகப் பல திருத்தலங்களில் எழுந்தருளியுள்ளார். அவற்றில் எட்டு முக்கியமாகக் கொள்ளப்பட்டு அட்ட வீரட்டங்கள் என்று போற்றப்படுகின்றன. இந்த நிகழ்ச்சி அந்தந்தத் தலங்களில் ஐதீக விழாவாகக் கொண்டாடப் பட்டுவருகின்றன.

திருக்கடவூரில் யம சம்ஹாரமும்; வழுவூரில் கஜசம்ஹாரமும்; திருவதிகையில் திரிபுரசம்ஹாரமும்; சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

காலசங்காரத்தலமான திருக்கடவூர் அமிர்த கடேசுவரர் ஆலயத்தில் சித்திரை மாதப் பெருந்திருவிழா ஆறாம் நாளில் சிவபெருமான் வீராபிஷேகம், விஜயாபிஷேகம் செய்துகொண்டு மார்க்கண்டேயருக் காக யமனை சம்ஹாரம் செய்யும் விழா நடத்தப் படுகிறது. அவருடன் அம்பிகை, விநாயகர், வள்ளி தெய்வ யானை உடனாய சுப்பிரமணியர், சோமாஸ்கந்தர், தனியாக அம்பிகை (அபிராமி), சண்டேசுவரர், மார்க் கண்டேயர், அனுக்கிரகம் பெற்ற யமன் ஆகிய பதினோரு மூர்த்திகள் பவனிவருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

வீரட்டத்தலமான திருவதிகையில் திரிபுரசம்ஹார விழா சித்திரை மாதம் நடைபெறுகிறது. இங்குள்ள சபையில் திரிபுராந்தகராக எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருத்தேரில் பவனி வருகிறார்.

மாலையில் திரிபுரதகனக் காட்சி ஆற்றங்கரையில் நடைபெறுகிறது. மூன்று பெரிய உருவங்களாகத் திரிபுராதிகள் செய்யப்பட்டு சிவபெருமான் அம்புவிடும் போது தீயிட்டுக் கொளுத்தப்படுகின்றனர்.

இந்நிகழ்ச்சியின் போது தேரின் அச்சு முறிந்ததையும் திருமால் இடப வடிவங் கொண்டு சிவபெருமானைத் தாங்கியதையும் நினைவூட்டும் வகையில் இவ்வூர் சரநாராயணப் பெருமாள் அப்போது எழுந்தருளி தேரின் பக்கத்தில் நிற்கின்றார்.

அட்டவீரட்டத்தலமான வழுவூரில் கஜசம்ஹாரத் திருவிழா நடைபெறுகிறது. விழாவின் போது பிட்சாடண மூர்த்தியை அருகிலுள்ள பெருஞ்சேரிக்கு எடுத்துச் செல் கின்றனர். தாருகாவனம் அங்கு இருந்ததென்று தல புராணம் கூறுகிறது. அவருடன் மோகினி வடிவுகொண்ட திருமாலும் உடன் செல்கின்றார். இருவரும் முன்னிரவில் ஆலயத்திற்குத் திரும்புகின்றனர்.

நள்ளிரவில் முனிவர்கள் யாகம்செய்து அதில் தோன்றும் பாம்பு, முயலகன், மண்டையோடு, முதலியவற்றைப் பெருமான்மீது ஏவி அவரை அழிக்க முயல்வது ஐதீகவிழாவாக நடத்தப்படுகிறது. இறுதியாக யானையை அனுப்புவது நடைபெறும்.

யானை பெருமானை விழுங்கியதைக் குறிக்கும் வகையில் அதிகாலையில் பெரிய யானையின் (உருவத்தில்) வயிற்றில் கஜசம்ஹார மூர்த்தியை வைத்து மூடிவிடுவர். எங்கும் இருள்சூழ்ந்ததைக் குறிக்க விளக்குகள் யாவும் அனைக்கப்படுகின்றன. வலியால் துடிக்கும் யானையின் வயிற்றைப் பிளந்து கொண்டு பெருமான் வெளிப்படுவர். உடன் விளக்குகள் யாவும் ஏற்றப்படுகின்றன. சிறிது நேரத்தில் சூரிய உதயம் ஆக பெருமான் கோயிலின் உள் பிராகாரத்திற்குள் வலம் வருவர்.

இவ்வாறு பெருமான் வீரம் விளைத்து நிகழ்த்திய அந்தகாசுர சம்ஹாரம், பிரம்ம சிரச்சேதம், ஜலந்தரவதம் முதலிய விழாக்களும் சிறப்புடன் கொண்டாடப் படுகின்றன.

அடியவர்களின் வரலாற்றை நினைவூட்டும் ஐதீக விழாக்கள்

அடியவர்களின் வாழ்வில் நடந்த அற்புதங்களை நினைவூட்டும் வகையில் அனேக ஐதீக விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

சீர்காழியில் திருஞான சம்பந்தர் பிரம்ம தீர்த்தத்தின் கரையில் உமையம்மையின் திருமுலைப் பாலை அருந்தி, தேவாரத்தைப் பாடத் தொடங்கியதை நினைவூட்டும் வகையில் திருமுலைப்பால் உற்சவம் சித்திரைமாதம் கொண்டாடப்படுகிறது. திருமயிலை, அச்சிறுபாக்கம் முதலிய தலங்களில் அதிகார நந்தி சேவையின்போது திருமுலைப்பால் விழாவும் சேர்த்து கொண்டாடப்பட்டு வருகிறது.

திருமயிலையில் திருஞானசம்பந்தர் அங்கம் பூம் பாவையை எரித்த சாம்பலில் இருந்து உயிர்ப்பித்து எழுப் பும் ஐதீகவிழா கொண்டாடப்படுகிறது. பங்குனி உத்திரப் பெருந்திருவிழாவின் எட்டாம் நாள் காலையில் அங்கம் பூம்பாவையும், திருஞானசம்பந்தரும் தனித்தனி பல்லக்கில் திருக்குளத்தின் மேற்குக் கரையில் உள்ள மண்டபத்திற்கு எழுந்தருளுகின்றனர். அங்கம்பூம்பாவை திரையிட்டு மறைக்கப்பட்டிருப்பாள். பெரிய புராணத் திலுள்ள வரலாற்று நிகழ்ச்சிப் பகுதியும் தொடர்ந்து "மட்டிட்டபுன்னை" என்ற தேவாரமும் ஓதப் படுகின்றன. பின்னர் திரைவிலக்கப்பட்டு உயிர் பெற்ற அங்கம் பூம்பாவைக்குத் தீபாராதனை செய்யப்படும்.

திருவாவடுதுறை கோமுத்தீசுவரர் ஆலயத்தில் தை மாதப் பெருந்திருவிழாவில் திருஞானசம்பந்தருக்கு பொற்கிழி அருளும் ஐதீகவிழா நடைபெறுகிறது. திருஞானசம்பந்தர் அலங்கரிக்கப்பட்டு பல்லக்கில் வீதி யுலாக் கண்டு ஆலயத்திற்கு வருகிறார். அவரை மலர் தூவி வரவேற்று பலிபீடத்தின் அருகில் நிறுத்துவர். அவ் வேளையில் இத்தலத்தில் ஞானசம்பந்தர் இறைவனிடம் பொருள் வேண்டிப்பாடும் "இடரினும் தளரினும்" என்றபதிகம் ஓதுவாரால் ஓதப்படுகிறது. உடன் மூலஸ் தானத்திலிருந்து பொற்கிழி தாங்கிய சிறுபூதத்தின் உருவம் கொண்டுவரப்படுகிறது. அப்பூதத்திடமிருந்த பொற் கிழியை பலிபீடத்தின் மீது வைத்து தீபாராதனை செய்வர். அதைத் திருஞானசம்பந்தர் திருக்கரத்தில் வைத்த பின்னர் மீண்டும் தீபாராதனை செய்கின்றனர்.

இந்தப் பொற்கிழியில் ஆயிரம் புதிய ஒரு ரூபாய் நாணயங்கள் வைக்கப்படுகின்றன. குருமகா சந்நிதானம் அன்பர்களுக்குத் திருக்கைவழக்கத்துடன் இதில் ஒன்றைப் பிரசாதமாகத் சேர்த்துத் தருவது வழக்கம்.

திருநாவலூர் பக்த ஜனேசுவரர் ஆலயத்தில் சுந்தரர் வரலாற்று ஐதீக விழாக்கள் நடத்தப்படுகின்றன. பெருமான் சுந்தரரின் திருமணத்தை தடுத்து நிறுத்துதல், முதலைவாய் பிள்ளையை மீட்டல். ஐராவதம் ஏறி விண் ணாடு செல்லுதல் ஆகியன புராணவிளக்கங்களுடன் நடத்தப்படுகின்றன.

திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டரிடம் சிவ பெருமான் பிள்ளைக் கறிகேட்டு அருள்புரிந்த வரலாறு சித்திரைப் பரணிவிழா அன்னப் படையல் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

கருவறைக்கு இணையான தனிச் சந்நிதியில் வீற்றி ருக்கும் வைரவமூர்த்தி உள்வலம் வந்து ஆத்திமரத் தடியில் உள்ள மேடையில் எழுந்தருள் கின்றார். நண் பகலில் புறப்பட்டு வீதிகளில் வலம் வந்தபின் சிறுத் தொண்டர் திருமாளிகைக்கு எழுந்தருளி பிட்சை கேட்ப தும். பின்னர் ஆத்திமரத்தடியில் மீண்டும் எழுந்தருளி அபிஷேகம் கொள்வதும் நடத்தப்படுகின்றன. நள்ளிர வில் வைரவமூர்த்தி அமுது செய்ய எழுந்தருள்கின்றார். அங்குள்ள அமுதுமண்டபத்தில் வைரவரை எழுந்தருள வைத்து கதவை மூடிவிடுகின்றனர்.

அவருடன் சீராளன், சிறுத்தொண்டர், வெண்காட்டு நங்கை, சந்தனநங்கை ஆகியோர் உலாத் திருமேனி களாக இருக்கின்றனர். வைரவருக்கு மாவால் செய்யப் பட்ட (சீராளதேவர்) உணவு பறிமாறும் போது கதவுக்கு வெளியே இருந்து திருத்தொண்டர் புராணத்திலுள்ள சிறுத்தொண்டர் புராணம் பாராயணம் செய்யப்படுவதுடன் ஒற்றைத்தட்டு அடிக்கப்படுகிறது. பின்னர் வைரவர் விரைந்து தனது இடம் சென்று விடுகிறார். மீண்டும் உயிர் பெற்ற சீராளர், சிறுத் தொண்டர், சந்தன நங்கை, வெண்காட்டு நங்கை ஆகியோருக்கு அருள்புரியச் சோமாஸ்கந்தர் எழுந்தருள்கிறார்.

சிறுத்தொண்டர் தமது பிள்ளையைச் சமைத்து வைரவராக வந்த சிவபெருமானுக்கு அமுதூட்டிய நிகழ்ச் சியை அடிப்படையாகக் கொண்டு பரவலாக நடைபெறும் விழா அன்னப்படையல் அல்லது அன்னக் கொடி விழா வாகும்.

தென்னாற்காடு மாவட்டத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் தனிச் சிறப்புடன் கொண்டாடப்படும் பெரிய விழாவாகும். இதில் அளிக்கும் பிள்ளைக்கறி பிரசாதத்தை உண்பவர்களுக்கு புத்திரதோஷம் விலகி நல்ல குழந்தைகள் பிறக்கும் என்பதுடன் வம்சம் விருத்தியாகும் என்பது என்று நம்புகின்றனர்.

இதில் வைரவமூர்த்தி எழுந்தருளுதல் சிறுத் தொண்டர் நாடகம் நடித்தல் முதலிய ஐதீக நிகழ்ச்சி களும் அடியவர்களுக்கு அமுதூட்டுதலும் சிறப்புடன் நடத்தப்படுகின்றன. இவ்விழாவுக்கென காவிக் கொடி யேற்றுகின்றனர். இதையொட்டி அன்னக்கொடி உற்சவம் என்றழைக்கப்படுகிறது. ஏராளமான அன்பர்களுக்கு இவ்விழாவில் விருந்து படைக்கப்படுகிறது. சிவாலயங் களில் மட்டுமின்றி தனியே அமைந்துள்ள வைரவர் கோயில்களிலும் பொதுமன்றங்களிலும் ஊர் பொதுவிலும் நடத்தப்படுகிறது. அச்சிறுபாக்கம் முதலிய சில தலங் களில் சிறுத்தொண்டர் "ஓம்" என்று எழுதிய கொடியு டன் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நாகப்பட்டினத்தில், அத்தலத்தில் தோன்றி வீடுபெற்ற அதிபத்த நாயனார் விழா ஐதீகவிழாவாகக் கொண்டாடப் படுகிறது. இவர் வரலாற்றை சிவமஞ்சரியில் காண்க.

அதிபத்தரின் திருவுருவம் கட்டுமரத்தில் வைக்கப் பட்டு கடலுக்குள் எடுத்துச் செல்லப்படுகிறது. வலைவீசி அடியவர் பொன்மீனைப் பிடிக்கும் வரலாறு படிக்கப் படுகிறது. அதேசமயம் பொன்னால் செய்த மீன் வலைக்குள் வைக்கப்பட்டு, அது அதனுள் சிக்குவது போன்று காண்பிக்கப் படுகிறது. அதை பெருமானுக்கென கடலில் விடும் நிகழ்ச்சி படிக்கப்படும். கடற்கரைக்கு பஞ்ச மூர்த்திகள் எழுந்தருள்கின்றனர். நாயனாருக்கும் மூர்த்திகளுக்கும் ஏக காலத்தில் தீபாராதனை செய்யப் படுகிறது. நாயனார் கடற்கரைக்கு கொண்டுவரப்பட்டு இறைவனுக்கு மீனை அளிக்கின்றார். இறைவன்மீது பொன்மீனை வைத்து வலம்வரச்செய்கின்றனர். பின்னர் திருவீதி உலா கொண் டாடப்படுகிறது. இவ்வட்டாரத் தில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு மகிழும் பெருந்திருவிழா இதுவாகும்.

மதுரையில் ஆவணி மூல விழா சிறப்புடன் கொண் டாடப்படுகிறது. மாணிக்கவாசகருக்காகச் சிவபெரு மான் வந்தி அம்மை தந்த உதிர்ந்த பிட்டை அமுது செய்து, வைகைக் கரையில் மண்சுமந்து, வைகைக் கரையை அடைக்காமல் பாண்டியனிடம் பிரம்படிபட்ட திருவிளையாடலைக் குறிப்பதாகும். பிட்டு நிவேதனம் முக்கியமாக இருப்பதால் இது புட்டுத் திருவிழா என்றும் அழைக்கப்படுகிறது.

மதுரையில் இவ்விழாவைக் கொண்டாடும் வீதி ஆவணி மூலவீதி என்று அழைக்கப்படுகிறது. இவ் விழாவுக்காக திருவாதவூரிலிருந்து மாணிக்கவாசகர் மதுரைக்கு எழுந்தருள்கிறார். வந்தி வாணியர்குலப் பெண்மணி என்பதால் அம்மரபினர் தென்னக மெங்கும் இவ்விழாவைச் சிவாலயங்களில் கொண்டாடி மகிழ்கின் றனர். காரைக்காலில் காரைக்காலம்மையார் கோயில் உள்ளது. இங்கு சிவனடியாருக்கு மாம்பழம் அளித் ததுடன் அவர் ஞான வாழ்வு தொடங்குவது ஐதீக விழா வாகக் கொண்டாடப்படுகிறது. இது மாங்கனித் திரு விழாவாக இவ்வட்டாரத்தில் தனிச்சிறப்புடன் மூன்று நாட்கள் கொண்டாடப்படுகிறது.

இதுபோன்று ஒவ்வொரு அடியவருக்கும் அவருக்கு உரிய தலங்களில் சிறப்பு விழாக்கள் நடைபெறும் போது பெரிய புராணத்திலுள்ள அந்தந்த நாயனாரின் புராணம் ஓதப்படுகிறது.

அன்பர்கள் அடியவர்களின் மீது கொண்டுள்ள அன்பால் தங்கள் ஊர்களிலேயே அவர்களுக்குரிய ஐதீக விழாக்களை நடத்தி மகிழ்கின்றனர்.

அடியவர்கள் முத்தி பெற்ற நாட்களில் அவர்களுக்கு ஆராதனைகளும் ஐக்கிய விழாக்களும் கொண்டாடப் படுகின்றன. சித்திரை சதயத்தில் அப்பரும், வைகாசி மூலத்தில் திருஞானசம்பந்தரும், ஆனி மாதத்தில் மணி வாசகப் பெருமானும், ஆடி சுவாதி நாளில் சுந்தரரும் முத்திபெற்றனர். அதையொட்டி அவர்களுக்கு அந்தந்த நாட்களில் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

அன்னாபிஷேக விழா

ஐப்பசி மாதப் பௌர்ணமி நாளில் கொண்டாடப்படும். இந்த விழா மூலமூர்த் திக்கு உரியதாகும். இந்நாளின் பிற்பகலில் ஒரு கலத்திற்குக் குறையாமல் அரிசியைச் சோறாக்கி ஆறவைப்பர். மாலையில் லிங்கத்தை முழுமையாக மூடும்படி அந்தச்சோற்றை கொண்டுக் காப்பிடுகிறார்கள். அதன்மீது வடை, அதிரசம், முறுக்கு, அப்பம், ஆகியவற்றை அழகாக அடுக்கி வைக்கிறார்கள். பாகற்காய்களை அவித்துக் கோர்த்து மாலையாகவும், புடலங்காயை முழுவதுமாக அவித்து நாகாபரணம் போலவும் அணிவிக்கின்றனர்.

சுவாமிக்கு முன்புறம் வாழையிலையை இட்டு புழுங்கல் அரிசிச் சோற்றைப் பரப்பி பாயசம், பருப்பு, வாழைக்காய் கறி, அரைக்கீரை கூட்டு, குழம்பு ஆகியவற்றை வைத்து நிவேதனம் செய்கின்றனர் பின்பு தீபாராதனை நடைபெறும். தொடர்ந்து சுற்றுக் கோயில்களிலும் தீபாராதனை நடைபெறும். பிறகு சோறு களையப்பட்டு அதில் ஒரு சிறுபகுதியை ஊர்வலமாக எடுத்துச் சென்று அருகிலுள்ள ஆறு, குளம், முதலிய நீர்நிலையில் இட்டு விடுவர். பிறகு ஆலயத்தில் புனர்பூஜை செய்யப்படும். இறைவனுக்குக் காப்பிட்ட சோற்றை அன்பர்களுக்குப் பிரசாதமாக வழங்குவர். இவ்விழாவை நடத்துவதால் உணவுப் பயிர்கள் நன்கு செழித்து உணவு பற்றாக்குறை வராது என்று உறுதியாக நம்புகின்றனர்.


திருமுறை விழாக்கள்

தமிழ்வேத நூல்களான பன்னிரு திருமுறைகளைப் போற்றும் வகையில் பெருந்திருவிழாவின் ஓர் அங்கமாகத் திருமுறைவிழா கொண்டாடப் படுகிறது. சிவாலயங்களில் நடராசர் சந்நிதியில் திருமுறைப்பேழை எனும் பெயரில் பன்னிரண்டு திருமுறை நூல்கள் அடங்கிய பெட்டி இருப்பதைக் காணலாம். வைக்கப்பட்டிருக்கும் ஒரு கேடயத்தில் நூல்களை எழுந்தருள வைத்து ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து அதை யானை வாகனத்தில் வைத்து உலாவரச் செய்கின்றனர். தொடர்ந்து திருமுறை இசைவாணர்கள். ஓதுவார்கள் அவற்றை பக்தியுடன் இசைப்பார்கள்.

சில தலங்களில் ஓதுவாரை யானைமீது அமர்த்தி அவருக்குப் பரிவட்டம் கட்டி திருமுறைகளை அவரிடம் அளித்து உலாவரச் செய்கின்றனர்.

★ சென்னைத் திருமயிலையில் ஆவணி மாத முதல் ஞாயிற்றுக் கிழமையை கடைநாளாகக் கொண்டு பன்னிரண்டு நாட்கள் திருமுறைவிழா கொண்டாப்படுகிறது. இதில் அனேக ஓதுவார்கள் பங்கேற்கின்றனர். திருமுறைகளை யானை வாகனத்தில் வைத்து உலாவரச் செய்கின்றனர்.

★ திருஅச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் ஆலயத்தில் நடராசர் சந்நிதியில் திருமுறைகள் இருக்க எதிரே திருஞானசம்பந்தர் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், நம்பியாண்டார் நம்பி ஆகியோர் எழுந்தருளி வைக்கப்படுகின்றனர். அங்கு திருமுறைகண்ட புராணம் ஓதப்பட்டு தீபாராதனை நடைபெறுகிறது.



★ திருமுறை நூல்கள் அலங்காரத்துடன் ★

புராணங்கள் வாசித்தலும் - கேட்டலும்

★ திருவிழா நாட்களில் சிவபெருமானின் திருவிளையாடல்களையும், அடியவர்களின் புராணங்களையும் படிக்கச் சொல்லி கேட்பது வழக்கம். திருச்செங்காட்டங்குடியில் வைரவமூர்த்திக்கு உணவு படைக்கும் சமயத்தில் பெரிய புராணத்திலுள்ள சிறுத்தொண்டர் புராணம் படிக்கப்படுகிறது, திருப்புகலூர் வேளாக்குறிச்சி ஆதீன மடாதிபதி அவர்கள் அச்சமயம் எழுந்தருளுகின்றார்.

★ தென்மாவட்டங்களில் சிவராத்திரியில் மார்கண்டேயன் கதையைப் பாடலாகவும், வில்லுப்பாட்டாகவும் பாடுகின்றனர்.

★ முன்னாளில், திருஒற்றியூரில் நடைபெறும் பங்குனி உத்திரநாளில் மகிழ மரத்தடியில் சிவபெருமான் எழுந்தருளியிருக்க ஸ்ரீ ஆளுடைய நம்பிகள் புராணம் வாசிக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. சோழமன்னனும், மயானமும் மடமும் உடைய பண்டிதரான சதுரானன பண்டிதரும், அரசியல் அதிகாரிகளும், அன்பர்களும் கூடியிருந்து அதைக்கேட்டனர் என்று கல்வெட்டு கூறுகிறது.

★ திருவண்ணாமலை மாவட்டம் தாமரைப்பாக்கத்தில் பூபிஅஷ்டக்யானம் என்ற ஒலைச்சுவடி உள்ளது. பூபி என்னும் இசுலாமியப் பெண்ணைப் பற்றிய பாடல் அக்னீசுவரர் ஆலயவிழாவின் போது படிக்கப்பட்டு மக்களால் கேட்கப்பட்டது என்ற செய்தியை அறிகிறோம்.


திருவிழாக்களில் நடனம் - கூத்து - நாடகம்

★ திருவிழாக்களில் இறைவனுக்கு முன்பாக நடனம், நாடகம், கூத்து, ஆரியக் கூத்து முதலியவற்றை நடத்தினர். நடனத்தை கோயிற் பெண்களான உருத்திர கணிகையர் ஆடினர். கூத்து சாக்கையர்களால் ஆடப்பட்டது. திருவாவடு துறையில் புரட்டாசி மாத பூரட்டாதி நாளில் திருமூல நாயனார் நாடகம் நடத்தப்பட்டது. இதை ஆடும் கூத்தர்களுக்கு நிபந்தங்கள் அளிக்கபட்டிருந்ததை இக்கோயிலிலுள்ள கல்வெட்டால் அறியமுடிகிறது.

★ இப்போது சிதம்பரம் நடராசர், குடந்தை கும்பேசுவரர், திருமயிலை கபாலீஸ்வரர் முதலிய ஆலயங்களில் மகா சிவராத்திரி நாளில் நாட்டியாஞ்சலி சிறப்புடன் நடைபெறுகிறது. இதில் பரதம் பயின்ற பெண்கள் பெருமானுக்கு நாட்டியத்தால் அஞ்சலி நடத்துகின்றனர்.

★ திருப்பெருந்துறையின் பெருந்திருவிழாவின் போது மணிவாசகர் வரலாறு புராணத் தொகுப்பாகச் சொல்லப்படுகிறது.

திருவிழாக்களில் பவனி வரும் மூர்த்திகள்



★ அணைத் தெழுந்த பிரான் திருவாவடுதுறை ★

பெருந்திருவிழா என்பது சிவ பெருமான் தனது பரிவாரங்களுடன் வீதிகளில் பவனிவந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதே ஆகும். இவ்விழாநாட்களில் சிவபெருமான் பல கோலங்களில் எழுந்தருள்கின்றார். பெருந்திருவிழாவிற்கு உரிய மூர்த்தம் சோமாஸ்கந்த மூர்த்தமேயாகும். இம்மூர்த்திக்கு மட்டுமே கொடியேற்றி விழாக் கொள்ளும் சிறப்பு உள்ளது. மற்றைய மூர்த்தங்கள் யாவும் விழாவின் அங்கங்களாக பவனிவரும் மூர்த்தங்களேயாகும்.

சோமாஸ்கந்தர், அம்பிகை, விநாயகர், வள்ளி, தெய்வயானை உடனாய சுப்பிரமணியர், சண்டீசர் ஆகிய ஐந்து மூர்த்திகளே விழா நாயகர்கள் இவர்களைப் பஞ்சமூர்த்திகள் என்று அழைக்கிறோம்.

தில்லைச் சிற்றம்பலத்தில் நடராசப்பெருமான் பெரிய உலாமூர்த்தியாகவும் அவருக்கு முன்பாகப் பெரிய கொடிமரம் இருந்த போதிலும் சோமாஸ்கந்த மூர்த்தியின் முன்னிலையிலேயே கொடியேற்றமும் இறக்கமும் நடைபெறுகின்றன.

அதுபோன்று நாகப்பட்டினம் சட்டநாதர் ஆலயத்தில் வைரவர் முதன்மை உலா மூர்த்தியாக இருந்த போதிலும் சோமாஸ்கந்தர் முன்நிலையில் கொடியேற்றமும் இறக்கமும் நடைபெறுகின்றன. சோமாஸ்கந்தரைத் தவிர பிட்சாடனர், கங்காளர், நடராசர், கல்யாணசுந்தரர் காட்சி கொடுத்த நாயகர் முதலிய சிவவடிவங்களும் திருவீதியுலா காண்கின்றன. திருவாரூர் முதலிய தலங்களில் விழாவின் முதற்பகுதியில் காட்சி கொடுத்தநாயகர் எனப்படும் சிவபெருமான் திருவுருவம் பவனிவரச் செய்யப்படுகிறது.

அனைத்து ஆலயங்களிலும் எட்டாம் நாளில் பிட்சாடன மூர்த்தி மாலையில் பவனிவருகிறார். இவருடன் மோஹினி திருக்கோலத்துடன் விளங்கும் திருமாலும் பவனி வருகின்றார்.

பெரிய ஆலயங்களில், காலைவிழாக்களில் சந்திர சேகரரும், இரவு விழாக்களில் சோமாஸ்கந்த மூர்த்தியும் பவனிவருகின்றனர்.


பத்தாம் நாள் காலையில் நடராசர் பவனிவந்து அருள் பாலிக்கின்றார். இவர் தீர்த்தம் அளிப்பதை சபா நாயகர் தீர்த்தம் என்றழைக்கின்றனர்.

திருவாவடுதுறை கோமுத்தீசுவரர் ஆலயத்தில் நடைபெறும் ரதசப்தமிப் பெருவிழாவில் ஆலிங்கன சந்திரசேகரர் எழுந்தருளி தீர்த்தம் அளிப்பதுடன் இரவில் அவர் முன்னிலையில் கொடியிறக்கமும் நடைபெறுகின்றது.

திருவாரூரில் பெருந்திருவிழாவுக்குப் பிறகு தெப்பத்திருவிழா நடைபெறுகிறது. கல்யாணசுந்தரர் தெப்பத்தில் வலம் வந்து காட்சியளிக்கின்றார்.

சபாமூர்த்திகள்

சில ஆலயங்களில் சபாமூர்த்திகள் எனப்படும் சிவபெருமானின் சிறப்புத் திருக்கோலத் திருமேனிகள் எழுந்தருளிவைக்கப்பட்டுள்ளன. இவை ஆண்டிற்கு ஒரிருமுறையே வீதிவலம் வரும். சிறப்புத் திருமஞ்சனங்கள் எனப்படும் அபிஷேகங்களும் ஆறு அல்லது பத்து முறை நடைபெறும். திருவாரூர் தியாகராஜர், திருவாவடுதுறை புத்திரத்தியாகர், கொறுக்கை, காமதகனர், வழுவூர் கஜசம் ஹாரர், திருக்கடவூர் காலசம்ஹாரர், முதலிய மூர்த்திகள் சபாமூர்த்திகளாவர்.



★ பஞ்சமூர்த்திகள் – வினாயகர், முருகன், சிவபெருமான், அம்பிகை, சண்டேஸ்வரர் ★

பெருந்திருவிழாக்கள் (பிரம்மோத்ஸவம்)

பெருந்திரளான மக்கள் விழாவில் கலந்து கொண்டு மகிழ்கின்றனர். எனவே ஆலயங்களுக்குப் பெருமை சேர்ப்பவை பெருந்திருவிழாக்களாகும்.

திருவிழாக்களை மூன்று தினங்களுக்குக் குறை யாமல் நடத்தப்படவேண்டும் என்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன. நடைமுறையில் பத்து நாட்கள் கொண்டாப் படுவதே அதிக அளவில் உள்ளது. இதனை நவதின மகோற்சவம் என அழைப்பர். மதுரை, திருவானைக் காவல் முதலிய தலங்களில் நாற்பது நாட்கள் விழா கொண்டாடுவதும் நடைமுறையில் உள்ளது. பெருந் திருவிழாவின் தொடக்கத்தில் கொடியேற்றப்பட்டு விழா முடிந்ததும் கொடி இறக்கப்படுகிறது. விழாவின் இறுதி நாள் தீர்த்தவாரியாகும்.


பெருந்திருவிழா 18 அங்கங்களைக் கொண்டதென்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன அவை **1.** வ்ருஷப யாகம், **2.** துவஜாரோகணம், **3.** ப்ருஹத்தானம், **4.** அங்கு ராப்பணம், **5.** மஹாயாகம், **6.** அஸ்திரயாகம், **7.** பலி தானம், **8.** யானக்கிரமம், **9.** பரிவேஷம், **10.** விராஜனம், **11.** கௌதுகம், **12.** தீர்த்தசங்கிரமணம், **13.** சூர்ணோத் ஸவம், **14.** தீர்த்தவாரி, **15.** ஸ்நபனம், **16.** விவாஹம் **17.** அவரோஹணம், **18.** பக்தோத்சவம் என்பனவாகும். மேலும் கிராமதேவதை உற்சவம், விக்னேசுவர உற்சவம், தெப்போற்சவம், ரதோத்சவம் முதலியவற்றையும் இதன் அங்கங்களாகக் கொள்வர்.

நடைமுறையில் **1.** அனுக்ஞை, **2.** மிருத்சாங் கிரகணம், **3.** அங்குரார்ப்பணம், **4.** வ்ருஷபத்துவஜயாகம், **5.** துவஜாரோகணம், (கொடியேற்றம்) **6.** பேரீதாடனம், **7.** ரக்ஷாபந்தனம், **8.** கோபுரத் துவார தரிசனம், **9.** திக் தேவதா பலி, **10.** கிராம பிரதக்ஷிணம், **11.** வாஹன உற்சவம், **12.** ஹோமகர்மா, **13.** யாகபலி, **14.** லாஜபுஷ்பம், **15.** ம்ருகயாத்திரை (பரிவேட்டை), **16.** ரதாரோகணம், **17.** சாந்து அணிவித்தல், **18.**சூர்ணோத்சவம், **19.** அங்குர விசர்ச்சனம், **20.** தீர்த்தவாரி, **21.** கும்பாபிஷேகம், **22.** திருக்கல்யாணம், **23.** துவஜஅவரோஹணம், **24.** மௌன உற்சவம், **25.** ரக்ஷாபந்தனவிசர்ச்சனம், **26.** சண்டியாகம், **27.** திருவூடல், **28.** ஆச்சார்ய உற்சவம் முதலிய சடங் குகளுடன் திருவிழா நடைபெறுகிறது.

பிரமன், இந்திரன், சந்திரன், முசுகுந்தன் முதலியோர் ஆலயங்களை அமைத்து பெருந்திருவிழாக்களை நடத்தினர் என்று புராணங்கள் கூறுகின்றன. திருவா னைக்காவலில் பிரமனும், திருவாரூரில் இந்திரனும், நாகூரில் சந்திரனும், பெருவிழாநடத்தி மகிழ்ந்தது அந்தந்தத் தலபுராணங்களில் கூறப்பட்டு உள்ளன.

பெருந்திருவிழாவின் அங்கங்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுவோம்.

பெருந்திருவிழாவின் அங்கங்கள்



கிராமதேவதை உற்சவம்

பெருந்திருவிழா தொடங்குவதற்கு முன்பாக ஊர்ப் பிடாரி எனப்படும் கிராமதேவதைக்கு விழா கொண்டாடப்படும். பொதுவாக கிராமதேவதையின் உலாத்திருமேனியை சிவாலயத்திலேயே வைத்திருப்பார். அன்று அந்தத் திருமேனி அலங்கரிக்கப்பட்டு அதன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு சிறப்பு வழிபாடுகளும், ஊர்வலமும் நடத்தப்படும். பிடாரி ஆலயத்தில் சிறப்புப் படையல்கள் இடப்படும்.

1. அனுமதி (அனுக்ஞை) வேண்டுதல்

பெருந்திருவிழாவை நடத்துவதற்கு விநாயகரிடமும். சிவபெருமானிடமும், அனுமதி பெறப்படும். இதனை தேவ அனுக்ஞை என்பர். பின்னர் அரசன், ஊர்ப்பெரியவர்கள் ஆகியோரிடம் விழா நடத்த அனுமதி வேண்டப்படும். இது யஜமான அனுக்ஞை எனப்படும்.

2. வாஸ்து சாந்தி

விழா தடையின்றி நடைபெறுவதற்காக வாஸ்து பூஜை செய்யப்படும். அரிசியைப் பரப்பி அதன்மீது வாஸ்து மண்டலம் வரைந்து வாஸ்துப் பிரமன் தொடங்கி விசுவ தேவர்களுக்கான பூஜைகள் செய்யப்படும்.

3. ம்ருத்சங்கிரகணம்

இது திருவிழாவின் அங்கமாகப் பாலிகை விடுவதற்குத் தேவையான தூய மண்ணை (புற்று மண், யானைத் தந்தத்தில் ஒட்டியமண்) கொண்டு வருதலாகும். சண்டீசுவரர் உடன் எழுந்தருள மண் எடுத்து வருவர். இவ்வழி பாட்டில் பூமிதேவியைப் போற்றித்துதிப்பர். தலமரத்தின் அடியில் மண்ணெடுக்கும் வழக்கமே அதிகம் உள்ளது.

3. அங்குரார்ப்பணம்

"பாரவன் காண் பாரதனிற் பயிரானான் காண்" என்று திருநாவுக்கரசுப் பெருமான் கூறுகின்றார். முளைப் பாலிகைக் கிண்ணங்களில் மண்ணைப் பரப்பி அதில் வித்துக்களை இட்டு நடுவில் கும்பம் வைத்து அதில் சோமனை வழிபடுகின்றனர். இது தேவர்களின் வருகையைத் தெரிவிப்பதாகும். மூலவர் சந்நிதி, யாகசாலை, அம்பாள்சந்நிதி ஆகியவற்றில் அங்குரார்ப்பணம் என்னும் முளைவிடும் சடங்கு கொடியேற்றத்தன்று மாலையில் நடைபெறும். பிறகு அனைத்து மூர்த்திகளுக்கும் ரக்ஷா பந்தனம் என்ற காப்பு அணிவிக்கப்படும். இது உலாத்திருமேனிகளை தீயசக்தியிடமிருந்து காக்கும் சடங்காகும்.

4. வ்ருஷயாகம்:

தருமதேவதையான இடபத்தைக் கொடியில் வரைந்து அக்கொடியை பீடத்தில் வைப்பர். நெய்யும் தேனும் கலந்து இடபத்தின் கண்களில் தீட்டி கண் திறக்கப் படும். பிறகு வ்ருஷபதேவரைக்குறித்து யாகம் செய்யப் படும். இது கொடியேற்றத்திற்கு முன்னாள் நிகழ்ச்சி யாகும்.

5 கொடியேற்றம்

ஆலயத்தில் கொடியேற்ற நிரந்தரமான கொடிமரம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்குச் செப்புத்தகடு போர்த்தி, தங்கப் பூச்சு செய்து வைப்பது உண்டு. விழாவின்போது கொடிமரத்தின் பீடத்தில் தர்ப்பையை கட்டி தர்ப்பைக் கயிற்றைக் கொண்டு மேலிருந்து கீழ்வரை அலங்காரம் செய்யப்படும். பின்னர் இடபம் வரைந்த கொடிச் சீலையை மந்திரங்கள் ஓதி கொடி

கொடியேற்றி விழா நிகழ்த்துவது பெரிய நிகழ்ச்சி, இதற்கென அதிகமான சடங்குகளும் மந்திரங்களும் உள்ளன. பொருட்செலவும் மிகுதி. அதனால் ஆண்டிற்கு ஒரு முறை கொடியேற்றி விழா கொண்டாவதே சற்று சிரமமாகும். என்றாலும் சிதம்பரம், திருப்பெருந்துறை முதலிய தலங்களில் ஆண்டுக்கு இரண்டு முறை கொடியேற்றப்படுகிறது. அண்ணாமலையாருக்கு இரண்டு அயன உற்சவங்களின் போதும் கார்த்திகை தீபத்தின் போதும் ஆக மூன்று முறை கொடியேற்றி விழா நடத்துகின்றனர். மதுரை மீனாட்சி ஆலயத்தில் நடைபெறும் சித்திரை கல்யாணத் திருவிழா; ஆவணி பிட்டுத்திருவிழா, கார்த்திகை தீபத்திருவிழா, தைப் பூசத்திருவிழா, மாசி மண்டலத்திருவிழா ஆகிய ஐந்து திருவிழாக்களிலும் கொடியேற்றி விழா கொண்டாடுகின்றனர். ★

மரத்தின் மீது ஏற்றுவர். அதன்பின்னர் கொடிமரத்தின் அடியிலுள்ள மூன்று மேகலைகளிலும் வித்யேசுவரர்கள், அஷ்டதிக்குப்பாலகர்கள், சப்தமாத்ருகைகள், மகாலட்சுமி, சரஸ்வதி, தசாயுதங்கள் முதலியோர்கள் நிலைப்படுத்தப்படுவர்.

பிறகு பிரம்மசந்தியான பலிபீடத்தில் பலிதேவனுக்கும் பரிவாரங்களுக்கும் பூஜைசெய்யப்படும். கொடியேற்றுவது ஆன்மா பாச பந்தங்களிலிருந்து நீங்கி திருவருட் சக்தியின் மூலம் இறைவன் திருவடியைப் பற்றி நிற்பதைக் குறிக்கும்.


★ பூத வாகனத்தில் பெருமான் பவனி ★

6. பேரிதாடனம்

முரசினைப் பூஜைசெய்து அதில் தேவர்களை நிலைப்படுத்தியபின் அதை அடித்து திருவிழாபற்றிய செய்திகளைக் கூறும் அழைப்பு வாசிக்கப்படும். மணிமேகலையில் முரசறைந்து விழாவை அறிவிக்கும் காட்சி விரிவாக இடம்பெற்றுள்ளது. இப்போது முரசிற்குப் பதில் மேளத்தை வைத்து பூசிக்கின்றனர்.

6. அஸ்திரதேவதா ஆவாகனம்

கொடிமரத்தடியில் அஸ்திர தேவரை வைத்து அதில் உருத்திரன் பிரம்மா, விஷ்ணு, லட்சுமி, சரஸ்வதி சப்தமாதர்கள் விநாயகர் ஸ்கந்தர் முதலான தேவர்களை நிலைபெறச் செய்தலும் தொடர்ந்து அஸ்திர வேள்வியும் செய்யப்படும்.

7. ரக்ஷாபந்தனம்

பெருந்திருவிழாவில் பங்குகொள்ளும் ஆசாரியன், எஜமானன் ஆகியவர்களுக்கு விழா நடுவில் தீட்டு ஏற்பட்டு விழா தடைபடாமல் இருக்க மஞ்சட்கயிற்றில் காப்பு மந்திரங்கள் ஓதியபின் (காப்பாக) யஜமானன், ஆச்சார்யன், உற்சவ, மூலமூர்த்திகள், ஆகியோருக்கு அணிவிக்கப்படும்.

8. கோபுரத் துவார தரிசனம்

சிவபெருமான் பரிவாரங்களுடன் கோபுரத்துள் பிரவேசித்து வெளிவரும்போது கிளை ஆரத்தி காட்டப்படும். இது கோபுரத் துவார தரிசனம் எனப்படும். ஒவ்வொரு வாகனத்தில் ஏறி வரும்போதும் கோபுரவாயலில் அவரை தரிசிப்பதால் கிடைக்கும் பயனை பூஜாபத்ததி நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

9. திக்தேவதா பலி

முதல் நாள் உற்வசமூர்த்தியுடன் அஸ்திரதேவரை எழுந்தருள வைத்து ஒன்பது சந்திகளிலும் திக்பாலர், முதலானவர்களை மந்திரபூர்வமாக அவர்களுக்கான வேதமந்திரம், தேவாரம், நாட்டியம், வாத்தியம், தாளம் இசைத்து நிலைப்படுத்தி சோற்று உருண்டை களால் பலியிடப்படும் மற்றைய நாட்களில் சுவாமிக்கு புறப்பாட்டிற்குச் சற்று முன்பாக சூலதேவர் நவசந்திகளுக்கும் சென்று பலி அளிப்பார்.

10. கிராமப் பிரதக்ஷிணம்

விழா நாட்களில் இது நான்கு மாடவீதிகளிலும் மடவிளாகத்திலும் சுவாமி பலவிதமான வாகனங்களில் எழுந்தருளி உலாவந்து அருள் பாலிப்பதாகும்.

11. வாகன உற்சவம்

தினமும் இருவேளைகளிலும் சுவாமி அன்னம், இடபம், யாளி, சிங்கம் முதலிய பல்வேறு வாகனங்களில் பவனி வந்து அருள்பாலிப்பதை யானக்கிரமமென்பர். யானம் என்பதற்கு ஊர்தி என்பது பொருள். பல்வேறு விதமான வாகனங்களில் சுவாமி, அம்பிகை, முருகன், விநாயகர், சண்டேசுவரர் ஆகியோரை எழுந்தருள வைத்து உலாவருதலே யானக்கிரமம் எனப்பட்டது. (இது ஒவ்வொரு வட்டாரத்திற்கேற்ப மாறும். எடுத்துக்காட்டாக, சோழநாட்டுத் தலங்களில் 9ஆம் நாள் தேர்த்திருவிழா நடைபெறும் தொண்டைநாட்டுத்தலங்களில் ஏழாம் நாள் தேரோட்டம் நிகழ்கிறது. சோழநாட்டில் அம்பிகைக்கு அன்னவாகனத் தை அமைக்கின்றனர். தொண்டைநாட்டில் அவ்வழக்கமில்லை. இப்படி அனேக மாறுதல்கள் உள்ளன.)

12. ஹோம கர்மா (மகாயாகம்)

கொடியேற்றிய தினத்தின் முதல்நாள் மாலை யாகசாலையில் மகாகலசத்துடன் நவகலசங்கள், சப்தவிம்சதி கலசங்கள் வைக் கப்படும். அவற்றை அலங்கரித்து உரிய தேவ தைகளை ஆவாகனம் செய்வர். பிறகு யாகே ஸ்வரன் யாகேஸ்வரியைப் பூஜித்து அக்கினி யை உண்டாக்கி யாகம் நடைபெறும். விழா தொடங்குமுன் நடைபெறுவதால் மகாயாகம்

எனப்படும். வேள்வித் தீயில் உரிய மந்திரங் களைக் கூறி ஆகுதி செய்வர். ரக்ஷை எடுத்து உற்சவமூர்த்திகளுக்கும் மூல மூர்த்திகளுக்கும். அணிவிப்பர். இதுமுதல் ஒன்பது நாட்களும் யாகாக்கினியைப் போற்றி அணையாமல் காப்பர்.

காலையிலும் மாலையிலும் வேள்வி நடைபெறும். ஒவ்வொருவேளையிலும் ரக்ஷை எடுத்து மூர்த்தி களுக்கு அணிவிக்கப்படும்.

13. யாகபலி (இதுமேலே கொடுக்கப்பட்டுள்ளது)

14. லாஜ புஷ்பம் அணிவித்தல்

சுவாமி வீதிக்குப் புறப்படுவதற்கு முன்பாக பரிவாரங் களுடன் யாகசாலைக்கு எழுந்தருள்வார். அச்சமயம் வேள்வித்தீயை கொழுந்துவிட்டுப் பெரியதாக எரியச் செய்து பூர்ணாகுதி செய்வர். வேள்வித்தீக்கும் கும்பத்திற்கும் மூர்த்திகளுக்கும் ஏககாலத்தில் தீபாராதனை நடைபெறும். ஆசார்யன் சுவாமியை வலம் வந்து மந்திரபுஷ்பம் சொல்லி நெற்பொறிகளைத் (லாஜபுஷ்பம்) தூவி வணங்குவார்.

15. ம்ருகயாத்திரை

இது பரிவேட்டை உற்சவம் எனப்படும் எட்டாம் நாள் இரவில் பெருமான் குதிரையேறி அருகிலுள்ள வனப்பகுதிக்குச் சென்று உற்சவம் காண்பார்.

16. ரதாரோகணம்

இது தேர்த் திருவிழாவாகும் (பார்க்க தேர்த்திருவிழா பக் 1593)

17. திருச்சாந்து அணிவித்தல்

பெருமான் தேரிலிருந்து இறக்கியதும் கருஞ்சாந்து இட்டு விழா எடுப்பர். இது தனி விழாவாகவும் நடைபெறும்.

18. சூர்ணோத்சவம் (சுந்தப்பொடி உற்சவம்)

விரலிமஞ்சள், வெட்டிவேர், முதலிய வாசனைத் திரவியங்களைச் சுத்திசெய்து உரலில் இட்டு இடித்துப் பொடியாக்குவர். இது பொற்சுண்ணம் எனப்படும். இதனைச் சுவாமி மீது தூவுவர். அன்பர்கள் ஒருவர் மீது ஒருவர் தூவிக்கொள்வர். இதற்கென தனியே மந்திரங்கள் உள்ளன.

இதனைக் கரைத்து மஞ்சள் நீராக்கி ஒருவர் மீது மற்றவர் ஊற்றி மகிழ்வர். இதனை மஞ்சள்நீராட்டல் என அழைப்பர்.

19. அங்குரவிசர்சனம்

கொடியேற்றத்திற்கு முதல் நாளில் இட்ட முளைப் பாலிகை எடுத்துச் சென்று நீர் நிலையில் கரைத்து விடுவர் இதுவே பாலிகை விடுதல் இதற்கு எனப்படும் பஞ்சமூர்த்திகளும் எழுந்தருள்வர்.

20. தீர்த்தவாரி

விழாவின் இறுதிநாளில் தீர்த்தவாரி நடைபெறும். இறைவன் பரிவாரங்களுடன் தீர்த்தக்கரையை அடைவார். அவருடைய பிரதிநிதியாக சூலதேவரை நீர்க்கரையில் வைத்து திருமஞ்சனமாட்டுவர். பின்னர் அவரை எடுத்துக் கொண்டு ஆச்சார்யன் நீரில் மூழ்குவார். பிறகு அன்பர்களும் மூழ்குவர்.

21. ஸ்நபனாபிஷேகம்

தீர்த்தவாரி நடைபெற்று மீண்டும் சுவாமி மண்டபத் திற்கு எழுந்தருளியதும், யாகசாலையில் பூசிக்கப்பட்ட குடங்களை வலமாக உற்சவர் மண்டபத்திற்கு எடுத்துச் சென்று இறைவனை முழுக்காட்டுவது ஸ்நபனாபிஷேகம் எனப்படும். (இது நண்பகல் நிகழ்ச்சியாகும்.)

22. விவாகம் (திருக்கல்யாண உற்சவம்)

விழாவின் அங்கமாக உமாதேவிக்கும், பரமேசுவரருக்கும் திருமணம் நடைபெறும். உமைக்கு மங்கலநீராட்டல் நிகழும். பின்னர் அவள் தவம்புரிய பெருமான் அவளுக்குக் காட்சி அளித்த பின் திருமண விழா நடைபெறும்.

திருமணத்தின்போது வேள்விவேட்டல், புத்தாடை அளித்தல் மாங்கல்யதாரணம் ஆகியன நிகழும். அன்பர்களுக்கு சர்க்கரை, இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படும். பெண்களுக்கு மஞ்சள் தாலிச்சரடு குங்குமம் வெற்றிலை, பாக்கு, பழம், கண்மை ஆகிய மங்கலத் திரவியங்களை அளிப்பர்.

23. அவரோகணம்

விழாவின் இறுதிநாளில் மாலை அல்லது முன்னிரவில் பஞ்சமூர்த்திகளைக் கொடிமரத்திற்கு முன்பாக வடக்கு நோக்கி எழுந்தருளச் செய்வர். பின் உரிய மந்திரங்கள் கூறப்பட்டு கொடி இறக்கப்படும். கொடிமரத்தில் நிலைப்படுத்தப்பட்ட தேவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பப்படும்.

24. மௌன உற்சவம்

கொடியிறக்கியபின் சுவாமி புறப்பட்டு கோபுர வாயிலை அடைந்து தீபாராதனை முடிந்ததும் சகல வாத்தியங்களும் நிறுத்தப்படும். சுவாமி மௌனமாக உலா வருதல் மௌன உற்சவம் ஆகும். இதில் கோயிற் பெண்களான தாசிகள் முகவீணை வாசிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

25. ரக்ஷா விசர்சனம்

பத்தாம் நாள் இரவு மந்திரபூர்வமாக பந்திக்கப்பட்ட தேவதைகள் விடுவிக்கப்படுவர். கையில் கட்டி கொண்ட மஞ்சள் கயிற்றை அவிழ்த்துவிடுவர்.

26. சண்டயாகம் மற்றும் சண்டோத்ஸவம், பக்தோத்ஸவம்

பொதுவாக அறுபத்துமூவர், தலத்து அடியவர்கள் எல்லோருமே பக்தர்கள் ஆவர். என்றாலும் சண்டீசரே பக்தர்களின் பிரதிநிதியாக எடுத்துக்கொள்ளப்படுகிறார். விழா முடிந்ததும் அவருக்குப் பத்தோத்ஸவம் கொண்டாடப்படுகிறது. அவருக்கு அலங்காரம் செய்து இடப வாகனத்தில் ஏற்றி உள்வலம் வருகின்றனர். சிலதலங்களில் மட்டும் அவர் வெளியே வீதிகளில் உலாவந்து அருள்பாலிக்கிறார். சிலர் பக்தோத் சவம் என்பதை அறுபத்து மூவர் விழா என்றும் கூறுவர். இது விழாவின் நிறைவில் சண்டேசுவரரைக் குறித்து செய்யப்படும் வேள்வியாகும்.



★ சண்டிகேஸ்வரர் ★

27. திருவூடல்

விழாவின் ஒரு அங்கமாக திருவூடல் விழா நடைபெறும். அம்பிகை பெருமான் மீது கோபம் கொண்டு கதவைத் தாளிட்டுக் கொள்வதும் சுந்தரர் தூது சென்று இருவரையும் சேர்த்து வைப்பதுமாக விழா நடைபெறும். (பார்க்க தனிக்கட்டுரை)

28. ஆசார்ய உற்சவம்

பெருந்திருவிழாவில் முக்கிய பங்கு வகிப்பவர் ஆசார்யர். அவரை சிவபெருமானாகவே வணங்க வேண்டும். அவரிடம் விபூதி பெற்று அணிந்து கொள்ள வேண்டும். விழாவின் முடிவில் அவரை தண்டிகையில் ஏற்றி ஊர்வலமாக வரச் செய்து இல்லத்தில் விடுத்து சிறப்புக்கள் செய்ய வேண்டும்.

யாகசாலை

பெருந்திருவிழாவில் தினமும் கும்பவடிவிலும், வேள்வித்தீ வடிவிலும், பிராமண வடிவிலும் இறைவனை வழிபடுகின்றனர். தினமும் காலையிலும் மாலையிலும் வேள்வி வேட்கப்படுகிறது. இதற்கான வேள்விச் சாலை ஆலயத்தில் வடகிழக்கு மூலையில் மேற்கு நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது. இதில் நடுவில் சதுரமான வேதிகை (பீடம்) அமைக்கப்பட்டு அதன்மீது பூரணகும்பம், சக்தி மண்டல கும்பங்கள் வைக்கப்படும். சுற்றிலும் சப்த விம்சதி தேவதைகள் எனப்படும் விநாயகர், சூரியன், மண்டல ரூபலட்சுமி, பஞ்ச கலைகள், ஆகியோர் நிலைப்படுகின்றனர். காலையிலும் மாலையிலும் வேள்வி நடைபெறும். பின் யாகாக்கினியிலிருந்து ரட்சை சேகரிக்கப்பட்டு அனைத்து மூர்த்திகளுக்கும் நெற்றியில் இடப்படும்.

திருவீதி எழுந்தருள்வதற்கு முன்பாக இறைவன் உள்வலமாக பவனி வந்து யாகசாலைக்கு முன்னே நிற்பார். வேள்வித் தீயில் பூர்ணாகுதி செய்யப்பட்டு சுவாமிக்கும் கும்பத்திற்கும் ஏககாலத்தில் தீபாராதனை நடைபெறும். பிறகு வேள்விச் சாலையிலிருந்து ஆசாரியார் வெளிவந்து பொரியையும் மலரையும் மந்திர புஷ்பம் ஓதி இறைவன் மீது தூவி தீபாராதனை செய்து. வலம் வந்து வணங்குவார். பின்னரே இறைவன் திருவீதிக்கு எழுந்தருள்வார்.

தல புராணங்களும் விழாக்களும்

தலபுராணங்களில் தேவர்களும், முனிவர்களும், அரசர்களும் பெருந்திரு விழாக்கள் நடத்தியது பற்றிய விரிவான விளக்கங்கள் உள்ளன. திருவாரூர் புராணத்தில் இந்திரன் விழா செய்ததும், திருவானைக்காபுராணத்தில் பிரமன் விழா செய்ததும், நாகூர்புராணத்தில் சந்திரன் பெருந்திருவிழா செய்ததும் விரிவாக கூறப்பட்டுள்ளன. நாகூர்புராணத்தில் சிவபெருமான் உமாதேவியார், சுப்பிரமணியார், விநாயகர், சண்டீசர் ஆகிய ஐவரும் நாள்தோறும் இருவேளைகளிலும் ஏறிவந்த வாகனங்கள், தேவர்கள் சிறப்பு ஆசார்யனாக இருந்து விழா செய்தது பற்றிய செய்திகள் மிகவிரிவாகக் கூறப்பட்டுள்ளன. இதில் கொடியேற்றம் ஸ்ரீபலி, திக்பந்தனம், சூர்னோத்சவம், கொடியிறக்கம் முதலிய செய்திகளும் விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

பத்தி உலாவுதல்!

ஆலயப் பிராகாரத்தில் தென்மேற்கு முனையில் கிழக்குநோக்கியவாறு அம்பிகை நிற்க அவர்முன்பாக இறைவன் அசைந்து ஆடி ஏழுமுறை முன்னும் பின்னுமாக வருவது பத்தி உலாவுதல் எனப்படும். இறைவன் அசைந்தாடி உலவும்போது பலவிதமான வாத்தியங்கள் இசைக்கப்படும். வசந்த விழாவில் பத்தி உலாத்துதல் சிறப்புடன் நடைபெறுகிறது.

பெருந்திருவிழா சிந்தனைத் துளிகள்

★ "பிரம்மோற்சவம்" என்பதை "மகோத்ஸவம்" எனவும் கூறுவர் – பிரம்ம, மஹத் என்பதற்குப் பெரியது என்று பொருள். தமிழில் பெருந்திருவிழா என்றழைக்கின்றனர்.

★ உத்சவம் என்பதற்கு மேலான இயக்கம் என்பது பொருள் (உத்–மேலான; ஸவம் – இயங்குதல்) இறைவன் வீதிகளுக்கு வந்து உலாவுதல் உத்சவம் எனப்படுகிறது. மேலும் படைப்பின்வழியே இன்பத்தை உண்டு பண்ணுவது. நல் வழியில் செலுத்துவது முதலான பொருளையும் குறிக்கிறது.

★ மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இந்திரன் திருவிழா நடத்தினான். இப்போதும் சித்திரைப் பெருந் திருவிழாவின் இறுதிநாளில் அவனுடைய உருவம் பல்லக்கில் எடுத்துச் செல்லப்படுகிறது. திருச்சியை அடுத்த ஆனைக்காவில் பிரமன் அஷ்டக் கொடியேற்றி வசந்தவிழாவுடன் பெருந்திருவிழாவைச் செய்ததாகத் தலபுராணம் கூறுகிறது. பெரும்பாலும் பிரம்மதேவனே பெரிய உற்சவங்களை நடத்தி வைத்ததால் அவை பிரம்மோற்சவம் என்று அழைக்கப்பட்டது.

★ பெருந்திருவிழாவின் போது பல்வேறு நாடுகளின் வியாபாரிகள் அரசனின் நன்மைக்காக பட்டு, பழம், காசுகள் ஆகியவற்றை இறைவனுக்குச் சமர்ப்பித்தனர். இதனால் ஆசீர்வாதத்தின் போது. ஐம்பத்தாறு தேசத்தின் பெயர்களும் கூறப்பட்டு அந்நாட்டு அரசனுக்கும் மக்களுக்கும் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

★ தினசரி பூசைகளில் சிலசமயங்களில் மகாதீபாராதனையை முறைப்படி செய்ய இயலாது போய்விடலாம். அதற்கு மாற்றாகப் பெருந்திருவிழாவில் சோடச உபசாரங்கள், ஆசீர்வாதம், மந்திரபுஷ்பம், மகா நிவேதனம் என்பன சிறப்புடன் நடத்தப்படுகின்றன.

★ நித்திய பூஜையில் பலவிதமான வாத்தியங்கள் இசைக்கப்பட்டாலும் கலைஞர்கள் அதில் ஓரளவு திறமையையே காட்டமுடியும், பெருவிழாவில் கொலுமேளம், ஓடம், லாலி, கப்பல்பாட்டு, ராகவரிசை என்று விரிவாகத் தங்கள் திறமையை காட்டுவர். அவற்றை ஏராளமான மக்கள் கேட்டு ரசிப்பர்.

வீணை, புல்லாங்குழல், முகவீணை எனப் பலவிதமான இசைக்கருவிகள் விழாக்களில் இசைக்கப் படுகின்றன.

★ பெருந்திருவிழா அனைத்து இனத்து மக்களுக்கும் உரிமை இருக்கும் வகையில் வரையறுக்கப் பட்டுள்ளது. குடைபிடித்தல், தீவட்டிபிடித்தல், பந்தலிடுதல், பாதந்தாங்குதல், திருச்சின்னமூதுதல் முதலிய அனேக பணிகள் பலவேறு இனத்து மக்களால் மேற்கொள்ளப் படுகின்றன. இதனால் மக்களிடையே ஒற்றுமை வளர்கிறது.

ஆகமம் கூறும் விழாக்களின் பயன்

பெருந்திருவிழாக்கள் யாவும் இறைவன் நடத்தும் ஐந்தொழிலின் (பஞ்சகிருத்திய) பிரதிபலிப்பு என்று கூறப்படுகிறது. திருக்கல்யாணம். துவஜாரோகணம் (கொடியேற்றம்), காப்பணிவித்தல் (ரக்ஷாபந்தனம்) முதலியவை படைத்தல் (சிருஷ்டி) தொழிலையும்; வாகனத்தில் உலாவருதல், பலியளித்தல், வேள்விநடத்துதல் முதலியவை காத்தல் (ஸ்திதி) தொழிலையும்; பொற்சுண்ணம் (சூர்ணோத்ஸவம்) ரதா ரூடம் (தேரூர்தல்) முதலியன அழித்தல் (சம்ஹார) தொழிலையும்; மௌனஉற்சவம் மறைத்தல் (திரோபாவம்) தொழிலையும்; ஊடல் தீர்த்தவாரி முதலியவை அருளல் (அனுக்கிரக) தொழிலையும் குறிக்கின்றன என்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன. இவ்வைந்து தொழில்களும் உலகம் என்றும் நடைபெற மூலகாரணமாக இருத்தலால் பெருந்திருவிழா உலகம் செயல்படுவதைக் குறிக்கும் வகையில் அமைகிறது என்பர். இதைத் தரிசிப்பதால் இறைவன் அருளை எளிதாகப் பெறமுடியும் என்று கூறுகின்றனர்.

பெருந்திருவிழாவை சாம்பவிதீக்ஷை என்றும் கூறுவர். சாம்பவி என்றால் பார்வதி. அவள் உலக உயிர்களின் தாயாக இருப்பதாலும். அவற்றிற்கு இறையருளைப் பெற்று அளிப்பதாலும் அவற்றின் பிரதிநிதியாகப் போற்றப்படுகிறாள். பெருவிழாவில் அவளுக்கு இறைவன் நயனதீட்சை அளிக்கிறான். அதுசமயம் வேள்வித்தீயாக முருகன் நடுவே இருக்கின்றான். உலக உயிர்கள் பெருந்திருவிழாவைக் காண்பதால் சாம்பவி தீக்ஷையை இயல்பாகவே பெற்றுக் கொள்கின்றன. ஞானச் சுடராம் சிவசக்தியரின் பார்வையால் பக்குவம் பெற்ற ஆன்மாக்கள் எளிதில் தீக்ஷைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். (இக்கருத்து ஆய்வுக்குரியது)

அதையொட்டி சோமாஸ்கந்தமூர்த்தியைத் தீக்ஷை அளிக்கும் குருமூர்த்தியாகப் போற்றுகின்றனர். கொடியேற்றிச் செய்யப்படும் விழாக்களில் இவரே முதன்மை மூர்த்தியாக விளங்குகின்றார்.

இராஜரீக உத்சவங்கள்

ஆகமங்களிலும் வட்டாரவழக்களிலும் இல்லாமல் அரசர்களின் விருப்பத்திற்கேற்ப அவர்களுடைய பிறந்த நாட்கள் ராசிநாட்கள், வெற்றிநாட்கள் ஆகியவற்றில் கொண்டாடப்படும் விழாக்கள் ராஜரீக உத்சவங்கள் எனப்படும். தென் நாட்டில் இவ்வகை விழாக்கள் அனேகம் நடைபெறுகின்றன.

வாகனங்களும் - விழாக்களும்

ஆலயங்களில் உலாத் திருமேனிகளாக விளங்கும் தெய்வத்திருவுருவங்களை விழாவின்போது ஆடை ஆபரணங்களால் தனிச்சிறப்புடன் அலங்கரிப்பர். பலவிதமான வாகனங்களில் அமர்த்தி உலா வரச்செய்கின்றனர். இதற்கென அளவில் பெரிய யானை, சிங்கம், இடபம், மயில் முதலானவை வாகனங்களாக அமைந்துள்ளன.

மரத்தால் செய்து வண்ணம் தீட்டப்பட்டு பொலிவுடன் விளங்கும் இவை கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. இப்பகுதியில் வாகனங்களையும் அவை பற்றிய சிறு குறிப்புக்களைக் காணலாம். வாகனங்கள் தென்னாட்டு மரவேலைக் கலைஞர்களின் உன்னதப் படைப்புகளாகும்.

சிங்கவாகனம்

விரிந்த பிடரி, விழித்த கண்கள், கூரிய நகங்கள், தூக்கிய வாலுடன் பொன் மஞ்சள் வண்ணத்துடன் சிங்க வாகனம் விளங்குகிறது. முதல்நாள் இரவு சிங்கவாகனத்தில் பெருமானை அமர்த்தி உலா வரச் செய்கின்றனர். (இக்காட்சியைக் காண்பவர் ராஜபோகசுகங்களை அடைவர் என்று கூறுவர்).

க்ஷேத்திரவிருட்ச வாகனம்

தலவிருட்சத்தைப் போல் செய்யப்பட்டுள்ள மரத்தின் கீழ் பெருமானை அமர்த்தி உலாவரச் செய்வர். பெரும்பாலும் முதல்நாள் இரவில் தலவிருட்ச வாகன சேவை நடைபெறும். சிலதலங்களில் 5ஆம் நாள் காலையிலும், சில இடங்களில் 11 அல்லது 12ம் நாள் இரவிலும் இது நடத்தப்படுகிறது. (இதனைக் கண்டு களிப்பவர்களின் வம்சம் பல்கிப்பெருகும்)

குறிப்பு: சிலதலங்களில் தலமரத்திற்குப்பதிலாக கற்பகவிருட்சவாகனம் அமைக்கப்பட்டுள்ளது.

சூர்யப்பிறை (சூர்யப் பிரபை)

இரண்டாம் நாள் காலையில் வட்டமான சூர்ய வாகனத்தில் சோமாஸ்கந்தமூர்த்தியை அமர்த்தி உலாவரச் செய்கின்றர். இக்காட்சியைக் காண்பதால் பூர்வீக சொத்துக்கள் குடும்பத்தை விட்டு போகாமல் இருக்கும். பெற்றோர்கள் சுகமாக இருப்பர். சில தலங்களில் உள்ள சூர்ய வட்டத்தின் முன்புறம் ஏழு குதிரைகளும் அதை ஓட்டும் அருணனையும் அமைத்து உள்ளனர்.

சந்திரப்பிறை (சந்திரப் பிரபை)

சந்திரப்பிறை வடிவமாக செய்யப்பட்ட வாகனத்தில் இரண்டாம் நாள் இரவில் பெருமானை அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். இதைக் காண்பதால் மன அமைதி உண்டாகும். நோய் நொடிகள் நீங்கும்.

அதிகார நந்தி

காளைமுகத்துடன் நாற்கரங்கள் கொண்டவராக மானுட தேகத்துடன் அதிகாரநந்திதேவர் விளங்குகிறார். மேற்கரங்களில் மான்மழு ஏந்தி மண்டியிட்டு அமர்ந்துள்ள, இவருடைய தோள்மீது அமைந்துள்ள பீடத்தில் பெருமானை அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். இது அதிகார நந்தி சேவை என்றழைக்கப்படுகின்றது. மூன்றாம் நாள் அதிகாலையில் இதைத்தரிசிக்க லட்சக்கணக்கான மக்கள் கூடுகின்றனர். இந்த விழாவை தரிசிப்பதால் ஞானம் உண்டாகும். திருக்கழுக்குன்றத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் சூழ



★ கபாலீஸ்வரர் அதிகார நந்தி சேவை திருமயிலை ★
படம் உதவி : திருமயிலை ரமேஷ்

அதிகார நந்தி வாகனத்தில் பெருமான் மலையை வலம் வருகின்றார்.

கலைச் சிறப்பு மிக்க அதிகாரநந்தி வாகனம் சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஆதிபுரீசுவரர் ஆலயத்தில் உள்ளது. திருமயிலையில் வெள்ளியால் செய்யப்பட்ட அற்புதக் கலைப்படைப்பான அதிகார நந்தி உள்ளது.

பூதவாகனம்

விரித்தசடையும் பெரிய உடலும் கொண்ட பூதத்தின் வடிவம் வாகனமாக உள்ளது. சிவந்த வண்ணத்துடன் விளங்கும் இந்த பூதத்திற்கு மகாகாயன் என்பது பெயராகும். சிவபெருமான் பூதப்படையை உடையவன், என்பதால் பூதவாகனம் அமைக்கப்பட்டு உள்ளது. பூத வாகனத்தில் வரும் இறைவனைக் கண்டு மகிழ்வதால் வாழ்வில் நிலைத்த மகிழ்ச்சி உண்டாகும். இவ்வேளையில் அம்பிகை பூதகி வாகனத்திலும் முருகன் தாரகாசுர வாகனத்திலும் உடன் வருகின்றனர்.

யாளிவாகனம்

யாளி, (சிங்க முகத்தில் துதிக்கை பொருந்திய முகமும் சிங்க உடலும் இறக்கைகளும் கொண்டது. யானையை விடப் பல மடங்கு வலியது. கடுங்காட்டில் வாழ்வது. இதன்மீது பவனிவரும் இறைவனைக் காண்பதால் வலிமை மிக்க உடல் உண்டாகும்.

புருஷாமிருகம்

இடுப்புக்குமேல் ரிஷியின் வடிவமும் இடுப்புக்குக் கீழ் புலியின் வடிவமும் கொண்டது புருஷாமிருகமாகும். சிவபக்தி மிகுந்த இந்த நரவிலங்கு. கையில் மணியும் தீபத்தட்டும் ஏந்தி ஓயாது சிவபூசை செய்து கொண்டே இருக்கும். இதன் தோள்மீது அமைத்த பீடத்தில் பெருமானை அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். மயிலை கபாலீசுவரர் ஆலயத்திலும், வெள்ளீசுவரர் ஆலயத்திலும் கலைச்சிறப்பு மிக்க புருஷாமிருக வாகனங்கள் உள்ளன.

திருமங்கலக்குடியில் இடுப்புக்கு கீழே நான்கு கால்கள் கொண்ட சிங்க உடலும் அசுர முகமும் அகன்ற மார்பும் இரண்டு கைகளும் கொண்ட புருஷாமிருக வாகனம் உள்ளது. இது வேறெங்கும் இல்லாதாகும்.

காமதேனு வாகனம்

பெண்முகமும் பருத்த ஸ்தனங்களும் பசுவின் உடலும் கொண்ட தெய்வப்பசு காமதேனு. தலையில் கொம்புகளும் நீண்ட சடையும் நீண்ட சிறகும் மயிலுக்கு உள்ளதுபோல் அழகிய சிறு தோகையும் கொண்டிருக்கிறது. பாற்கடலில் பிறந்த இப்பசு இறை விக்கு வாகனமாக இருக்கும் பேறுபெற்றுள்ளது. ஐந்து முகங்கள் கொண்ட காமதேனு வாகனங்களும் உள்ளன.

கற்பக விருட்சம்

அழகிய பீடத்தில் இம்மரம் அமைக்கப்பட்டுள்ளது. கிளைகள், இலைகள், மலர்கள் யாவும் நிஜத்தில் இருப்பதுபோல் மரத்தில் செய்யப்பட்டுள்ளன. கிளைகளில் குரங்குகள், பெரியபாம்பு, மயில், குயில், நாரை முதலிய உருவங்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ளன. விழாவின் போது கிளைகளில் பலவகையான பழங்களைக் கட்டித்தொங்க விடுகின்றனர். மரத்தின் அடியிலுள்ள பீடத்தில் பெருமானை அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். கற்பக விருட்சத்தின் கீழ் பவனி வரும் பெருமானைக் கண்டு களிப்பவர்கள் சகல செல்வங்களையும் அடைவர்.

யானை

யானை பிரணவ வடிவமாகும். செல்வத்தின் அடையாளமாகத் திகழ்வது. சிவபெருமானுக்கு வெள்ளுடை அணிவித்து தலையில் பாகை அணிவித்து யானைமீது உள்ள அம்பாரியில் அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். இந்த யானையை ஐராவதம் என்று அழைப்பர் இது 4 தந்தங்களுடன் வெண்மைநிறம் கொண்டது.

இறைவன் யானைமீது பவனி வரும்போது அம்பிகை முருகன், விநாயகர், சண்டீசர் ஆகிய நால்வரும் தனித்தனி யானைகளில் உடன் பவனிவருகின்றனர். முருகனின் யானைக்குப் பிணிமுகம் என்றும்; விநாயகர் யானைக்கு தாரக ரூபம் என்றும் பெயராகும்.

குதிரை

தாவிவரும் கோலத்தில் சிவந்த நிறத்துடன் விளங்கும் குதிரை வாகனத்தில் எட்டாம் நாள் இரவில் பெருமான் பவனி வருகிறார். தலையில் கிரீடம், இடையில் உடைவாள், கேடயம்தரித்த மகாராஜாவாகப் பெருமானை அலங்கரிக்கின்றனர். வலதுவகையில் சாட்டை ஏந்தி இடதுகரத்தில் குதிரையின் கடிவாளத்தைப் பற்றி இருப்பார். (சிலதலங்களில் வெள்ளை நிறக் குதிரை வாகனமும் இருக்கிறது)

கயிலாச வாகனம்

மகா சிவபக்தனான இராவணேசுவரனை கயிலாய மலையுடன் சேர்த்து ஒரு வாகனமாக அமைந்துள்ளனர். இவன் ஒருசமயம் கயிலை மலையைத் தூக்கி அப்புறப்படுத்த எண்ணினான். மலை யைத் தூக்கியதும் பெருமான் கட்டைவிரலை ஊன்றி அழுத்தினார். அந்த அழுத்தத்தின் வலியைப் பொறுக்க முடியாமல் அழுதுடன் சாமகானம்பாடி இறைவனின் அருளைப்பெற்றான். கயிலை மலையை வாகனமாக அமைக்கும்போது வீணையேந்தி சாமகானத்தை வாசித்துக் கொண்டிருக்கும் இராவணன் வடிவையும் சேர்த்து அமைக்கின்றனர்.

குடந்தையிலுள்ள கயிலாச வாகனம் வெள்ளித்தேர் அமைப்பில் உள்ளது.

மயில் வாகனம்

விரிந்த தோகையுடன் நெடிது வளைந்த கழுத்தைக் கொண்ட மயில் வாகனம் சிவாலயங்களில் அமைந்துள்ளது. இறைவன் இடப வாகனத்தில் வரும்போது முருகன் மயில் வாகனத்தில் உடன்வருவார்.

பெருச்சாளி வாகனம்

வலிய பெருச்சாளி வடிவம் வாகனமாக அமைந்துள்ளது. இதில் விநாயகர் பவனி வருகின்றார். பஞ்சமூர்த்திகள் வரிசையில் விநாயகர் பெருச்சாளியில் பவனிவருகிறார். இதை மூஞ்சூறு என்றும் அழைப்பர்.

அன்ன வாகனம்


ஞானப் பறவை என்று போற்றப்படும் அன்னத்தை வாகனமாக அமைத்துள்ளனர். ஆறாம் நாள் காலையில் பெருமான் அன்னவாகனத்தில் பவனி வருகின்றார். அன்னம் தன் அலகில் கொடியொன்றைப்பற்றிக் கொண்டு விரிந்த தோகையுடன் விளங்குவது எழிற்காட்சியாகும்.

நாக வாகனம்

ஏழு (அ) ஒன்பது (அ) பதினோரு தலைகளுடன் அகன்ற படங்களைக் குடைபோல் விரித்து உடலைச் சுருட்டி சிம்மாசனம் போல் வைத்துக் கொண்டுள்ள பாம்பு வடிவமே நாகவாகனமாகும். இதன்கீழ் பெரிய ஆமை இதைத் தாங்குவதுபோல் அமைந்துள்ளனர். இதனை யோக வித்தையின் வடிவம் என்பர். நாக வாகனத்தில் பெருமானை யோகீசுவரராகவோ, அனந்த சயனத்திலோ அமைந்து வலம்வரச் செய்கின்றனர். சில தலங்களில் சுவாமியைப் போலவே அம்பிகையையும் நாகவாகனத்தில் அமர்த்தி வலம் வரச் செய்கின்றனர்.

கமலவாகனம்

இது தாமரைப் பூவின் வடிவில் செய்யப்பட்ட ஆசனமாகும். அடியில் ஆமை வடிவில் ஆதாரசக்தியும் அதன்மேல் அமைந்த பீடத்தில் சுற்றிலும், அஷ்டமா நாகங்கள், அஷ்ட குலபர்வதங்கள், அஷ்டதிக் கஜங்கள், அஷ்டவிருட்சங்கள் ஆகியனவும் இடம்பெற்று ள்ளன. பீடத்தின்மேல் யந்திரம் வரையப்பட்டு அதன் நடுவிலிருந்து தோன்றும் காம்பில் அகன்ற தாமரை அமைக்கப்பட்டுள்ளது. அதன் நான்கு புறமும் கிளிகளை அமைப்பதும் உண்டு. இது சிவபூசைக்குரிய பஞ்சாசனமாக இருந்தபோதிலும் அம்பிகைக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.



கிளி வாகனம்

அழகிய கிளி மலர்கொத்தைத் தன் அலகில் பற்றிக் கொண்டிருப்பது போல் இந்தவாகனம் அமைந்துள்ளது. கபாலீசுவரர் ஆலயத்தில் கிளிவாகனம் உள்ளது. சுகம் எனில் கிளி, கிளிவாகனத்தில் பவனிவரும் அம்பிகையைக் காண்பதால் வாழ்வில் நிலையான சுகம் உண்டாகும் என்று நம்புகின்றனர். மதுரை, திருநெல்வேலி ஆகிய தலங்களில் தங்கக் கிளி வாகனங்கள் உள்ளன.

யமவாகனம், முத்தலைசிங்கம், கந்தர்வன், சிம்மாசனம், ராஜநாற்காலி, உருத்திராட்ச விமானம், தங்க விமானங்கள், முதலிய பலவகையான வாகனங்களும் வழக்கத்தில் உள்ளன.

வாகனக்கவி

வாகனங்களின் மீது பெருமான் பவனிவரும் அழகையும், வாகனங்களின் சிறப்பையும், அவற்றைச் செய்து வைத்தவர் பெயரையும் விழா கொண்டாடுபவர்களின் சிறப்பையும் போற்றிப் பாடுவது வாகனக் கவியாகும். திருக்குற்றாலம் குற்றாலநாதர் ஆலயத்தில் புலவர்களால் வாகனக் கவி பாடப்பட்டு வந்ததாக அறிகிறோம்.

அறுபத்துமூவர் விழா

சிவபெருமானின் அருள் பெற்றவர்கள் எண்ணிலாதவர்கள். அவர்கள் அனைவரையும் நினைத்து போற்றி வழிபடுதல் இயலாத காரியம். எனவே சிவபெருமானின் பிரதிபிம்பமாகத் தோன்றிய சுந்தரமூர்த்திசுவாமிகளால் துதிக்கப்பட்ட அடியவர்களை மட்டும் போற்றி வணங்குகிறோம்.


அவரால் குறிக்கப்பட்டுள்ள தொகையடியார்களில் கடந்தகாலத்தில் வாழ்ந்த அடியவர்களும், நிகழ் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் அடியவர்களும், எதிர்காலத்தில் தோன்றப்போகும் அடியார்களும், பல நாடுகளில் தோன்றியும், வாழ்ந்தும், இனிவரப் போகும் அடியவர்களும் அடங்குவர். எனவே இந்த பக்தஉற்சவம் தனிச்சிறப்பிடம் பெறுகிறது.

பெரிய சிவாலயங்களில் அறுபத்துமூவரை மூலவராகவும் உற்சவராகவும் எழுந்தருளவைத்து வணங்குகின்றனர். பெரிய விழாவின் ஓர் அங்கமாக அறுபத்துமூவர் விழா நடைபெறுகிறது. மூன்றாம் நாள் காலை, ஆறாம்நாள் இரவு, எட்டாம்நாள் காலை, அல்லது மாலை, ஆகிய ஏதாவது ஒரு நாளில் பஞ்சமூர்த்திகளுடன் அறுபத்துமூவரும் உலா வருகின்றனர்.

திருவண்ணாமலையில் ஆறாம் நாள் காலையில் அண்ணாமலையார் (சந்திரசேகரர்) வெள்ளி யானையில் எழுந்தருள அறுபத்துமூவரும் தனித்தனி சப்பரங்களில் அவருடன் எழுந்தருளி திருவீதிவலம் வருகின்றனர்.

திரு ஒற்றியூரில் எட்டாம் நாள் பிற்பகலில் மகிழடிசேவை நடைபெற்றபின் சுவாமி சுந்தரர் சங்கிலி நாச்சியாருடன் திருவீதிக்கு எழுந்தருள்கின்றார். அவர்களுடன் அறுபத்துமூன்று நாயன்மார் களும் தனித்தனி சப்பரங்களில் எழுந்தருளி உலாக் காண்கின் றனர்.

திருமயிலையில் நடைபெறும் அறுபத்துமூவர் விழா உலகப்புகழ் பெற்றதாகும். வெள்ளி இந்திரவிமானத்தில் கபாலீசுவரர் பவனிவர அவருடன் நர்த்தனவிநாயகர் கற்பகவல்லி, சிங்காரவேலர், சண்டீசர் ஆகியோர் தனித்தனி விமானங்களில் வலம் வருகின்றனர்.



அவர்களுக்கு முன்பாக அறுபத்து மூவர்களும் தொகையடியார்களும் விமானங்களில் பவனி வர அங்கம் பூம்பாவை, சிவநேசஞ் செட்டியார் ஆகியோரும் உலா வருகின்றனர். மேலும் வாசுகி அம்மை உடனாய திருவள்ளுவர், திரௌபதி அர்ச்சுனன், சிந்தாதிரிப்பேட்டை முருகன், முண்டகக்கண்ணியம்மன் ஆகி யோரும் உடன் வலம் வருகின்றர்.

மாணிக்கவாசகர் விழா

அனைத்து நாயன்மார்களுக்கும் அடியவர்களுக்கும் அவர்களின் திருநட்சத்திரத்தினை கடை நாளாகக் கொண்டு பத்து நாட்கள் விழா எடுக்கப்படும். விழாக்களில் அவர்களை விமானம் அல்லது பல்லக்கில் மட்டுமே எழுந்தருளச் செய்து விழா காண்பது வழக்கம். சண்டேசுவரர் மட்டும் இடபவாகனத்தில் வருவர்.

இதற்கு முற்றிலும் மாறாக மாணிக்கவாசகரைச் சிவமாகவே பாவித்து விழா கொண்டாடுகின்றனர். சூர்யபிறை, சந்திரபிறை, இடபம், கயிலாச வாகனம் முதலியவற்றில் அவரை உலாவரச்செய்கின்றனர். அவர் தேரிலும் பவனி வருகின்றார். சிதம்பரத்தில் (ஆனி உத்திரத்தைக் கடைநாளாகக் கொண்டும். மார்கழித் திருவாதிரையைக் கடைநாளாகக் கொண்டும்) விழா எடுக்கும் அதே சமயத்தில் ஆவுடையார் கோயிலில் பத்து நாட்கள் திருவிழா கொண்டாடப்படுகிறது. இதில் ஒன்பதாம் நாளில் மணிவாசகர் தேரில் பவனி வருகிறார். மற்றைய தினங்களில் பலகையான வாகனங்களில் பவனிவருகிறார். அவர் வெள்ளி இடபவாகனத்தில் பவனி வருவது தனிச்சிறப்பு ஆகும்.

தேர்த் திருவிழா



திருவிழாவின் ஒரு முக்கியமான அங்கம் தேர் பவனியாகும். பெருந்திருவிழாவின் ஏழு அல்லது ஒன்பதாம் நாள் காலையில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. தேரில் சுவாமியை ஏற்றுவதற்கு முன்பாக யாத்ரா தானம் முதலிய சடங்குகள் நடைபெறுகின்றன. தேர்க்காலுக்குச் சிறப்புப் பூசைகள் செய்யப்படுகின்றன. நல்ல வேளையில் தேருக்குப் பெருமான் எழுந்தருளுகிறார். நல்ல நேரம் பார்த்து வடம் பிடித்து தேரினை இழுக்கின்றனர். தேரினை மகாரதம் என்றும் அழைக்கின்றனர்.

தேர் மரத்தால் செய்யப்பட்டிருக்கிறது. 6 பெரிய சக்கரங்களைக் கொண்டது. மேல்பகுதியை தேர்ச்சீலைகள், தொம்பைகள், வாழை மரங்கள், ஈச்சங்குலை, இளநீர்க்குலை, பனங்குலை முதலியவற்றால் அலங்கரிக்கின்றனர். தேரில் பெருமான் பவனிவருவது கரு வறையோடு பவனி வருவதைக் குறிக்குமென்பர்.

திருவண்ணாமலை, திருக்களர், குடந்தை முதலிய தலங்களில் பஞ்சமூர்த்திகளுக்கும் ஐந்து தேர்கள் உள்ளன.

திருவாரூர்த் தேரழகு என்பது பழமொழியாகும். 132 அடி உயரம் கொண்ட இதில் தியாகராஜப் பெருமான் பவனி வருகின்றார். பங்குனி உத்திர வசந்த விழாவில் தேர் பவனி நடைபெறுகிறது. திருவாரூர் தேருக்கு ஆழித்தேர் என்பது பெயராகும். தேவாரத்துள் "**ஆழித்தேர்**" வித்தகனை யான் கண்டது ஆரூரே என்று குறிக்கப்பட்டுள்ளது.

திருவாரூருக்கு அடுத்தபடி பெரிய தேரைக் கொண்ட தலம் திருவிடைமருதூர் ஆகும். இத்தேரில் ஏராளமான மரச்சிற்பங்கள் உள்ளன.

சிதம்பரம் சபாநாயகர் ஆலயத்தில் நடைபெறும் ஆனித்திருமஞ்சனம், திருவாதிரைப் பெருந்திருவிழா ஆகிய இரண்டிலும் 9ஆம் நாள் விழாவில் பெரிய தேரில் நடராசர் பவனி வருகின்றார்.

மணித்தேர், வைரத் தேர், சட்டத்தேர், பத்மத் தேர் என்று பலவகைத் தேர்கள் உள்ளன. திருவாலங்காட்டில் வைரத்தேர் உள்ளது.

தேர்பவனி முடிந்ததும் உடனே சுவாமி தேரிலிருந்து இறங்காமல் மாலைவரை அங்கே இருப்பார். உச்சிக் காலபூஜையும் சாயரட்சை பூஜையும் தேரிலேயே நடைபெறும். மாலையில் சுவாமியைக் கீழே இறக்கித் தீபாராதனை செய்த பிறகு. ஆலயத்திற்குள் வந்ததும் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும்.

வெள்ளித் தேரும் - தங்கத்தேரும்

வெள்ளித்தகடு பதித்து கலையழகுடன் செய்யப்பட்ட தேரில் சிவபெருமானை பவனி வரச்செய்கின்றனர். இது வெள்ளித்தேர் விழா என்று அழைக்கப்படுகிறது. திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயம், காஞ்சி ஏகாம்பர நாதர் ஆலயம் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி ஆலயம் முதலியவற்றில் வெள்ளித்தேர்கள் உள்ளன. ஆறாம் நாள் இரவில் மின் விளக்கு அலங்காரத்துடன் ஒளிரும் தேரில் பெருமான் உலா வருகின்றனார்.

தங்கத்தேர்கள் சில சிவாலயங்களில் மட்டும் உள்ளன. திருமயிலை கபாலீசுவரர் ஆலயத்தில் கற்பகவல்லியும், திருவான்மியூர் ஆலயத்தில் திரிபுரசுந்தரியும் தங்கத்தேரில் பவனி வருகின்றனர். தங்கத்தேர் பெருந்திருவிழாவில் பவனிவருவதில்லை அது ஆலயத்திற்குள் மட்டுமே வலம் வரச் செய்யப்படுகிறது.

கோரதம்

பசுக்களால் இழுக்கப்படும் இரதம் கோரதம் எனப்படும். நான்கு சக்கரங்களைக் கொண்ட வண்டிமீது தாமரை போன்ற அடிப்பகுதியையும் நெடிய தூண்களையும் கவிழ்ந்த அரைவட்டமான மேல்பகுதியையும் அதன் உச்சியில் கலசங்களையும் கொண்டது கோரதம். முன்புறம் தேரோட்டும் பிரமனும் தாவிவரும் நான்கு குதிரைகளும் நான்கு புறங்களிலும் சாமரை ஏந்திய பெண்களும் அமைக்கப்பட்டுள்ளனர். சோழநாட்டில் மட்டுமே கோரதங்கள் உள்ளன. திருவிடைமருதூர், சீர்காழி, தருமபுரம், திருமயிலாடுதுறை முதலிய தலங்களில் வெள்ளியாலான கோரதங்கள் உள்ளன.

பல்லக்கு விழா

பல்லக்கு ராஜ கம்பீரத்தின் சின்னமாகும். அறிவிற் சிறந்தவர்களையும் ஞானிகளையும் பல்லக்கில் அமர்த்தி வீதியுலா செய்து கௌரவப்படுத்துவது வழக்கம். சிவபெருமான் திருஞானசம்பந்தருக்கு முத்துப்பல்லக்கு அளித்தது இங்கு எண்ணத்தக்கதாகும். பெருந்திருவிழாவின் இறுதியில் சுவாமியை பல்லக்கில் வைத்து பவனி வரச்செய்கின்றனர். இதில் சுவாமியும் அம்பிகையும் எதிர்எதிராக அமர்த்தப்படுகின்றனர்.

புஷ்பப் பல்லக்கு, வெட்டிவேர் பல்லக்கு, முத்துப் பல்லக்கு, வெள்ளிப் பல்லக்கு, ஆளோடிப் பல்லக்கு, என்று பலவகையான பல்லக்குகள் உள்ளன.

தஞ்சாவூருக்கே உரியது கண்ணாடிப் பல்லக்கு. துண்டுக் கண்ணாடிகளை வண்ணச் சரிகைத் தாள்களுடன் மரப்பல்லக்கின் மீது வஜ்ரப்பசையால் ஒட்டி கண்ணாடிப் பல்லக்குகளை வனப்புடன் உருவாக்குகின்றனர். இதில் கட்டப்படும் தொங்கல்கள் கலையழகு மிக்கதாகும். திருவையாற்றில் மிகச் சிறந்த கண்ணாடிப் பல்லக்கு உள்ளது.

சென்னை நகரில் சிவாலயங்களில் நடைபெறும் திருவிழாவின் இறுதிநாளில் புஷ்பப் பல்லக்கில் பெருமானை அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். இதனைப் பல்லக்கு உற்சவம் என்பர். மயிலாப்பூரில் மாசி மகத்தன்று பெருமான் பல்லக்கில் பவனி வருகிறார். மேலும் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் ஆகியோரும் பல்லக்கில் பவனி வருகின்றனர்.

தென்மாவட்டத்தில் சில ஆலயங்களில் அம்பிகை தனியாகப் பல்லக்கில் பவனிவருகிறாள். நெல்லையில் ஐப்பசி மாத திருக்கல்யாண விழாவில் சுவாமி யானை வாகனத்திலும் அம்பிகை பல்லக்கிலும் பவனிவருகின்றனர்.

திருக்குற்றாலம் குற்றாலநாதர் ஆலயத்தில் யானைத் தந்தத்தாலான பல்லக்கு உள்ளது. இதில் அனேக சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. பஞ்சமூர்த்திகள், காளி, வேணுகோபாலர், அனந்த சயனமூர்த்தி சதாசிவமூர்த்தி துவாரபாலகர்கள் முதலியன புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளனர். ஏடுகளில் கீறி அமைக்கும் முறையில் குறும்பலாநாதர், தட்சிணாமூர்த்தி, பிட்சாடனர், வீரபத்திரர் முதலிய தெய்வ வடிவங்களும் அமைக்கப்பட்டு வண்ணங்களால் பொலிவூட்டப்பட்டுள்ளன. இடையிடையே குரங்கு, பறவைகள், யாளி, குயில், கிளி, முதலிய வடிவங்களும் கொடிகளும் பூக்களும் இடம்பெற்றுள்ளன. இது கலையுலக பொக்கிஷமாகத் திகழ்கிறது.

ஏழூர் விழா : சப்தஸ்தான பல்லக்கு விழா

திருவையாற்றில் நடைபெறும் சப்தஸ்தான விழா எனப்படும் ஏழூர் பல்லக்கு விழா தனிச் சிறப்புகொண்டதாகும்.

"ஏழு" என்ற எண் எண்ணற்றதைக் குறிக்கும் குறியீடு என்பர். ஏழு ஊர்களுக்கு சுவாமியை உலாவரச் செய்வது என்பது எண்ணற்ற ஊர்களுக்கு உலாவரச் செய்வதற்கு ஒப்பாகும் என்பர். திருவையாற்றில் ஏழூர்த் திருவிழா அதிகச் சிறப்புடன் கொண்டாடப்பட்டுவருகிறது. இதில் ஐயாறப்பர் பல்லக்கில் புறப்பட்டு திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, கண்டியூர், பூந்துருத்தி, நெய்த்தானம், முதலிய ஆலயங்களுக்கு எழுந்தருளுகின்றார். அவருடன் அங்குள்ள மூர்த்திகளும் சேர்ந்து பயணித்து அருள்புரிகின்றனர். சித்திராபௌர்ணமியில் நிகழும் இது நந்திதேவரின் திருக்கல்யாணத்துடன் தொடர்புடையதாக உள்ளது. சுவாமி ஐயாறப்பர் கண்ணாடிப் பல்லக்கில் வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

திருநீலக்குடியிலும் ஏழூர் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. நீலக்குடி இறைவர் பல்லக்கில் ஏறி இலந்துறை, ஏனாதிமங்கலம், திருநாகேசுவரம், திருபுவனம், திருவிடைமருதூர், ஆடுதுறை முதலிய ஆறு ஊர்களுக்குப் பயணித்து ஏழாவதாகத் தன் இருப்பிடத்தை அடைகிறார். இவருடைய பல்லக்கிற்கு முன்பாக இவரைத் தொழுது கொண்டு மார்க்கண்டேயர் சிறு சிவிகையில் பவனிவருகிறார்.

சக்ரப்பள்ளியிலும் ஏழூர் விழா கொண்டாடப்படுகிறது. சக்ரப்பள்ளி, அரீச்சரம், சூலமங்கை (சூலமங்கலம்) தாழை மங்கை, திருப்புள்ளமங்கை ஆகிய ஏழுஊர்களும் சப்தஸ்தானங்களாகும். சக்கரப்பள்ளி இறைவர் மேலேகுறித்த ஆறு ஊர்களுக்கும் பங்குனி மாத விழாவின் போது செல்கின்றார். இது புராணங்களில் சிறப்பித்துப் பேசப்படும், நாதசன்மா அனவித்தை ஆகியோருடன் தொடர்புடையதாகும்.

கருந்திட்டைக்குடி, திருக்குடந்தை, கஞ்சனூர், திருநல்லூர் முதலிய தலங்களிலும் ஏழூர் விழா கொண்டாடப்படுகிறது. ஏழூர் விழாக்களில் சோமாஸ்கந்தப் பெருமானைப் பல்லக்கில் ஏற்றி பவனி வரச்செய்வதே மரபாக உள்ளது.

இடபவாகனக் காட்சி

சிவாலயங்களில் முதன்மை பெற்றவாகனம் இடப வாகனமாகும். வலிய கால்களும், படர்ந்து உயர்ந்த திமிலும் திரும்பிய முகமும் கொண்டது. உறுதிக்கும் வலிமைக்கும் அடையாளமாகக் இடப வாகனம் உள்ளது, ஐந்தாம் நாள், பத்தாம்நாள் விழாக்களில் இரவு வேளையில் இடப வாகனத்தில் இறைவனை அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். இது வெள்விடைக்காட்சி, ரிஷப 'வாகனக்காட்சி, எனப் பலவாறு போற்றப்படுகிறது. சிவாலயங்களில் முகப்பில் இக்காட்சியே இடம்பெறுகிறது. புராணங்களும் இதையே சிறப்பித்துப் பேசு கின்றன.

திருமுறைகளில் அலங்கல் விடைமேல் வருவார், கடியதோரர் "விடையேறி காபாலியார்", வெள்விடை மேவிய விகிர்தன் என்று பல இடங்களில் பெருமான் உமையோடு வெள்ளை விடைமீதேறி வருவது சிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெரியபுராணத்தில் அடியவர்களுக்குக்கு அருள் புரியப் பெருமான் விடையேறி உமையோடு வருகிறான் என்பதை ஏலவார் குழலாள் தன்னொடும் இடப வாகனனாய் தோன்றி (இளையான் குடிமாறர் புராணம்); பொருவிடையின் மேல் துணைவி யொடும் வெளிநின்றார் (திருக்குறிப்புத் தொண்டர்) செறிந்த சடைநீள் முடியார் தேவியொடு விடையேறி (சண்டேசுவர நாயனார்) நெடுவிசும் பில் துணைவியொடும் மழவிடைமேல் (சாக்கியர்) என்ற தொடர் களால் பெருமைப்படுத்தப்பட்டுள்ளன.


சிவத்தொண்டர்கள் பெருமான் உமையோடு விடை மேலிருந்து அருள்பாலிக்கும் கோலத்தையே பெரிதும் விரும்பிப் போற்றி மகிழ்கின்றனர்.

மதுரையில் ஆண்டிற்குப் பதினேழுமுறை இடப வாகனக் காட்சி நடைபெறுகிறது. இக்கோயிலில் கோபுரங்களில் மிகப் பெரியதாகவும் கண்ணைக் கவர்வதாகவும் 70 இடங்களில் இக்காட்சி சுதைச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

★ அனைத்து சிவாலங்களிலும் பெருந்திருவிழாவின் ஒரு அங்கமாக "பஞ்சமூர்த்தி தரிசனம்" நடத்தப்படுகிறது. கபாலீசுவரர் ஆலயத்தில் வெள்ளி இடபத்தில் கபாலீசுவரரும்; தங்கமுலாமிட்ட இடபத்தில் கற்பகவல்லியும் வெள்ளி மயிலில் சிங்காரவேலரும் வெள்ளி இடபத்தில் சண்டீசரும்; வெள்ளி பெருச்சாளிவாகனத்தில் விநாயகரும் ஐந்தாம் நாள் இரவில் பவனிவருவர்.

இவ்வைவரும் சேர்ந்து வரும் காட்சியைப் **"பஞ்சமூர்த்தி தரிசனம்"** என்று கூறுவர்.

★ **சோ**ழநாட்டில் பஞ்சமூர்த்திகள் வரிசையில் சுவாமிக்கு இடபமும் அம்பிகைக்கு அன்னத்தையும் வாகனமாக அமைத்துள்ளனர். இதே அமைப்பில் ஆலயத்தில் முகப்பிலும் பஞ்சமூர்த்திகள் இடம் பெற்றுள்ளனர்.



மலைவலம் வரும் விழாக்கள்

மலைகளை வழிபடுவதும் மலைகளைச் வலமாகச் சுற்றி வருவதும் நெடுநாளைய வழக்க மாகும். பாகவதத்தில் மக்கள் கோவர்த்தன கிரியை வழிபட்டது குறிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலும் மலைவலம் செய்கின்றனர். பலதலங்களில் இறைவனே மலையை வலம்வந்து விழா காண்கிறார். திருக்கழுக்குன்றத்தில் பெருவிழாவின் மூன்றாம் நாள் பெருமான் அதிகாரநந்தி மேல் அமர்ந்து அறுபத்துமூவர் சூழ மலை வலம் வருகிறார். அச்சிறுப்பாக்கம் ஆட்சீசுவரர், சித்திரையிலும் காணும் பொங்கல் அன்றும்; அண்ணாமலையார் கார்த்திகை பெருந்திருவிழாவின் போதும், தை, சித்திரை மாதங்களிலும் மலைவலம் வருகின்றனர்.


திருக்குடந்தையில் ஐந்தாம்நாள் சுவாமியும் அம்பிகையும் வெள்ளி இடபங்களில் தென்னங்குருத்தோலைச் சப்பரத்தில் ஒருசேர எழுந்தருள்வார். இது சகோபுரக் காட்சி எனப்படுகிறது.

தெப்போற்சவம்

வாழ்க்கையைப் பெருங்கடலாகக் கூறுவர். அதை இறைஅருள் இன்றிக் கடப்பது கடினம். அதில் துன்பத்தை நீக்கி சுகமாகப் பயணம் செய்ய உதவுவது இறைவனின் அருள் மட்டுமே. அதனால் இறைவனை தெப்பமாகக் கருதுகின்றனர். தெய்வப் புலவர் திருவள்ளுவர் இதனை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

என்று உறுதிபடக் கூறுகின்றார். வாழ்க்கைக் கடலைக் கடக்க உதவும் தோணியாக விளங்கும் இறைவனை தோணியில் அமர்த்தி விழா நடத்திக் கண்டுகளிப்பதே தெப் போற்சவம் ஆகும். குளங்களில் தெப்பம் எடுத்தலே பெரும் பான்மையாக உள்ளது. மிதவைகளைச் சேர்த்துக் கட்டி அதன்மீது சுற்றுமண்டபத்துடன் கூடிய பெரிய விமானத் தை அமைப்பர். அதன் நடுவில் சுவாமியை அமர்த்தி தண்ணீரில் மிதக்க வைத்து வலம் வருவர். தெப்பம் வண்ண விளக்குகளால் ஜொலிக்கும். அதன் நிழல் தண்ணீரில்



வனப்புடன் காட்சியளிக்கும். அசைந்து ஆடி மிதந்து வரும் தெப்பம் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். மூன்று ஐந்து, (அ) ஏழு முறை சுற்றி வருவர். ஒவ்வொரு சுற்றுக்கும் வேதமந்திரம், தேவாரப் பண்ணிசை, மேளக்கச்சேரி முகவீணை முதலிய சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

முந்நாளில் தெப்போற்சவத்தை தைப்பூச நாளில் நடத்துவதே வழக்கம். பின்னாளில் பெருந்திருவிழாவின் தொடர்ச்சியாகத் தெப்பத்திருவிழாவை நடத்தும் வழக் கம் வந்துவிட்டது. திருவண்ணாமலையில் கார்த் திகை தீபத்திருவிழா பத்து நாட்கள் முடிந்ததும் 11வது நாள் அண்ணாமலையார் ஐயங்குளத்தில் தெப்போற்சவம் கண்டருளுகின்றார். 12ம் நாளில் பராசக்தியும் 13ம் நாளில் சுப்பிரமணியரும் தெப்பத்தில் பவனி வருகின்ற னர் திருவாரூரில் வசந்தவிழா முடிந்து பக்தகாட்சி நடை பெற்றபின் மூன்று நாட்கள் தெப்போற்சவம் நடைபெறு கிறது. தெப்பத்தில் கல்யாணசுந்தரர் உலா வருகிறார்.

★ புரசைவாக்கம் கங்காதரேசுவரர் ஆலயத்தில் 80 ஆண்டுகளுக்கு முன்பு பெரிய அளவில் தெப்போற்சவம் நடைபெற்றதை வரலாற்று ஏடுகள் குறிக்கின்றன. அன்னத்தின் வடிவில் தெப்பம் கட்டப்பட்டது. இது துள்ளித்துள்ளி மிதந்து வருவதைக் கண்டு ஆங்கிலேயர் வியந்து அதைக் கட்டியவருக்குப் பரிசளித்துப் பாராட்டி யுள்ளனர்.

★ மதுரையில் வண்டியூர் மாரியம்மன்குளத்தில் மீனாட்சி சோமசுந்தரேசுவரர் தெப்போற்சவம் காண்கிறார். இதையொட்டி கொடியேற்றி விழா கொண்டாடப்படுகிறது.

★ வடிவாலும் வனப்பாலும், கலையழகாலும். சிறப்புப் பெற்ற பெரியதெப்பம் கோவிலூர் மடம் கொற்ற வாளீசுவரர் ஆலயத்தில் உள்ளது. ★

கடலாடு விழா

கடலோரத் தலங்களில் இறைவனை கடற்கரைக்கு எடுத்துச் சென்று நீராட்டி விழா கொண்டாடுவது வழக்கம். இதனைக் கடலாடு விழா என்று அழைக்கின்றனர். மாசி மகம் கடலாடுவதற்குரிய தினமாகக் கொள்ளப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் மயிலைப் பதிகத்தில் இவ்விழாவைச் சிறப்பித்துள்ளார். சிதம்பரம் சபாநாயகர் ஆலயத்தில் சந்திரசேகர மூர்த்தி கடற்கரைக்கு எழுந்தருளி விழாக் காண்கின்றார். இவ்விழாவிற்குச் செல்ல அமைக்கப்பட்ட தெங்கின் வீதியைப் பற்றிய செய்திகளை இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

சென்னையிலுள்ள திருஒற்றியூர், திருமயிலை, திருவான்மியூர் முதலிய தலங்களில் மாசிக்கடலாட்டு விழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. திருவான்மியூரில் நடைபெறும் பங்குனி உத்திரவிழாவின் இறுதிநாளில் கடற்கரைக்குச் சென்று தீர்த்தம் அளிக்கும் விழா நடைபெறுகிறது. சந்திர கிரகணம், சூரிய கிரகணம், முதலிய நாட்களிலும் இறைவனை கடலுக்கு எடுத்துச் சென்று நீராட்டும் வழக்கம் இருந்துள்ளது.

சம்ஹார விழாக்கள்

தீயவற்றை அழித்து நல்லக்வற்றை வளரச் செய்வதை இறைவன் தன் கடமையாக கொண்டுள்ளான். தீமை களை அழிப்பது சம்ஹாரம் எனப்படும். திரிபுராரிகள், ஜலந்தரன், அந்தகன் முதலிய அசுரர்களைப் பெருமான் அழித்தார். அவற்றைக் கொண்டாடும் வகையில் சம்ஹார விழாக்கள் நடத்தப்படுகின்றன.

சிவபெருமானின் வீரத்திருவிளையாடல்களில் திரிபுரசங்காரமே பெரியதும்; நெடுநாட்களுக்கு முன்பாக நடைபெற்றதும் ஆகும். அதையொட்டியே ஆலயங்களில் திருத்தேர்விழா நடைபெறுகிறது. தொண்டை மண்டலத்தில் தேரில் பவனிவரும் பெருமானை வில் லம்பு ஏந்தி மண்டியிட்டுப் போர்புரியும் திரிபுராந்தகராக அலங்கரிக் கின்றனர்.

இராமர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபடும் ஐதீகத்துடன் இராமேசுவரத்தில் இராவணசம்ஹார விழா நடைபெறுகிறது. இளையனார் வேலூரில் மலையன் மாகறன் என்னும் அசுரர்களை முருகன் சங்கரித்துப் பின்னர் கடம்பர் கோயிலில் சிவபூசை செய்வது விழாவாகக் கொண்டாப்படுகிறது.

வைரவர் ஆலயங்களில் (முக்கியமாக வயிரவன் பட்டியில் போது (கார்த்திகைமாத சஷ்டியான) செண்பக சஷ்டியின் சூலம் வாங்குதல் அசுரனை சங்கரித்தல் ஆகியன விழாவாகக் கொண்டாடப்படுகின்றன.

முருகன் ஆலயங்களில் ஐப்பசி மாத அமாவாசைக் குப் பிறகு வரும் வளர்பிறை சஷ்டியில் சூரசம்ஹாரப் பெருவிழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. திருச்செந்தூரில் நடைபெறும் சூரசம்ஹாரம் உலகப்புகழ் பெற்றதாகும். திருப்பரங்குன்றத்தில் ஐப்பசி, தை, பங்குனி ஆகிய மூன்று மாதங்களிலும் சூரசம்ஹாரம் நடைபெறு கின்றது.

விநாயகர் ஆலயத்தில் மூஷிகனை வென்று அருளும் விழா நடைபெறுகிறது. யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசப் பிள்ளையார் ஆலயத்தில் மூஷிகனை சம்ஹரிக்கும் விழா கார்த்திகை மாதத்தில் கொண்டாடப்படுகிறது.

பட்டாபிஷேக வைபவ விழா

பட்டம் கட்டுதல் என்பதற்கு உரிமையை அளித்தல் என்பது பொருள். மாமன்னர் என்ற பெயரும் நாடாளும் உரிமையும் பட்டாபிஷேகத்திற்குப் பிறகே வருகிறது. ஒருசில ஆலயங்களில் மட்டுமே அம்பிகைக்கும், பெருமானுக்கும் பட்டாபிஷேக விழா நடத்தப்படுகிறது. மதுரையில் மலையத்துவஜ பாண்டிய னுக்கு மகளாகத் திருஅவதாரம் செய்த மீனாட்சி தந்தையின் மறைவிற்குப் பின் பாண்டிய நாட்டின் மாகராணியாக முடி சூடினாள். அதை நினை வூட்டும் வகையில் சித்திரை மாதப் பெருந்திருவிழாவின் எட்டாம் நாளில் பட்டா பிஷேக விழா நடத்தப்படுகிறது.

திருமணத்திற்குப் பின்னர் மீனாட்சி தனக்குரிய பாண்டிய அரசைத் தன் கணவனான சோமசுந்தரேசப் பெருமானுக்கு அளித்து பட்டாபிஷேகம் செய்து வைத்தாள். அதையொட்டி ஆவணி மாதவிழாவில் ஏழாம் நாளன்று சுந்தரேசு வரருக்குப் பட்டாபிஷேகம் நடைபெறுகிறது.

இதையொட்டி மதுரையில் மீனாட்சி ஆட்சி நான்கு மாதமும் சோமசுந்தரர் மீனாட்சி ஆட்சி எட்டு மாதமும் நடப்பதாகக் கூறுவர்.

ராமேசுவரத்தில் இராவணசங்காரமும் தொடர்ந்து ராமர் விபீஷணனுக்குப் பட்டம் சூட்டும் விழாவும் நடைபெறுகிறது. திருவாரூரில் தியாகராசர் தமக்குரிய திருவிழாக்களைச் சந்திரசேகர மூர்த்தியைக் கொண்டு செய்ய அனுமதியளிப் பதைச் சந்திரசேகர பட்டோத்ஸவம் என்று அழைக்கின்றனர்.

திருநெல்வேலியில் சிவபெருமான் மாமன்னனாக வீற்றிருந்து ஆட்சிபுரிந்தார். இதை நினைவூட்டும் வகையில் சித்திரை விழாவின் போது பட்டாபிஷேக விழாவும் செங்கோல் அளிப்பதும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

இராமர் பட்டாபிஷேக விழா தருமர் பட்டாபிஷேக விழா என்று பல பட்டாபிஷேக விழாக்கள் கொண்டப்படுகின்றன.

முருகன் பாண்டியர்குல மகாராணி மீனாட்சிக்கும் அவளை மணந்த சோமசுந்தரே சுவரருக்கும் மகனாகத் தோன்றினார். அவருக்கு உக்ரபாண்டியர் என்று பெயர் சூட்டி வளர்த்தனர். உரிய பருவத்தில் அவருக்கு பாண்டிய மன்னனாக பட்டம் சூட்டினார். அதை நினைவு கூறும் வகையில் பட்டாபிஷேக விழா நடைபெறுகிறது. திருப்பரங் குன்றத்தில் கார்த்திகை யிலும், பங்குனியிலும் ஆக இரண்டுமுறை முருகனுக்குப் பட்டாபிஷேக விழா கொண் டாடப்படுகிறது.



★ திரு முடிசூடி செங்கோலுடன் விளங்கும் மதுரை மீனாட்சி ★

திருவெம்பாவை விழா



மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவெம்பாவையை திருப்பள்ளி எழுச்சியுடன் பாடிப்பரவும் வகையில் அமைவது திருவெம்பாவை விழாவாகும். மார்கழி மாதத் திருவாதிரையைக் கடைநாளாகக் கொண்டு பத்து நாட்கள் இது கொண்டாடப்படுகிறது. இந்நாட்களில் மாணிக்கவாசகர் காலையில் கொடி விதானங்களுடன் வீதிகளில் பவனி வருவார். ஒன்பது சந்நிதிகளிலும் இரண்டிரண்டு பாடல்கள் திருவெம்பாவையிலிருந்து பாடல்கள் ஓதப்பட்டு தீபாராதனை செய்யப்படுகிறது. மாலையில் மாணிக்க வாசகரை நடராசர் சந்நிதிக்கு எதிரே நிறுத்தி திருவெம்பாவைப் பாடல்களைப் பாடும் போது ஒவ்வொரு பாடலுக்கும் தீபாராதனை செய்யப்படும். இவ்விழாநாட்களில் பன்னிரண்டு திருமுறைப் பாடல்களுக்கு ஒய்வுகொடுத்துச் சுவடிகளைக் கட்டிவைப்பர். திருவாதிரையன்று அவற்றின் கட்டுநீக்கப்பட்டு மீண்டும் ஓதத் தொடங்குவர். இது அனைத்து சிவாலயங்களிலும் கொண்டாடப்படுகிறது.

திருவாதிரைப் பெருவிழா

திருவாதிரை சிவபெருமானுக்குரிய திருநட்சத்திர மாகும். உலகம் திருவாதிரை நட்சத்திரத்தில் புதியதாகப் படைக்கப்பட்டதாகவும் கூறுவர். மார்கழி மாதத் திரு வாதிரை சிறப்புடன் தென்னகமெங்கும் கொண்டாடப் படுகிறது. இதற்கு முன்பாக ஒன்பது நாட்கள் மணிவாசக ருக்கு விழா நடைபெறும்.

திருவாதிரையன்று அதிகாலையில் நடராசர் சிவகாம சுந்தரி, காரைக்காலம்மையார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோருக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறும். பிறகு நடராஜர் சிவகாமியுடன் வெளியே சென்று வெள்ளை சாத்தி தீபாராதனை ஆனபின் கோயிலுக்குள் அலங்கார மண்டபத்திற்கு எழுந்தருள்வர். அங்கு நகை மற்றும் பூமாலைகளால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை யும் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை விண்ணப்பமும் நிகழ்த்தப்படும்.

பிறகு நடராசரும் சிவகாமியும் சுந்தரர், மாணிக்க வாசகருடன் வீதியுலா காண்பர். ஆலயத்தினை அடையும் போது. சிவகாமி ஊடல் கொண்டு முன்னதாக வந்து கதவை அடைத்துக் கொள்ளுதல், சுந்தரர் சுவாமிக்கும் அம்பிகைக்கும் இடையே தூது சென்று அம்பிகையின் ஊடலைத் தீர்த்துவைத்தல். அம்பிகை கதவைத் திறந்து கொண்டு வெளிவந்து நடராசருடன் சேர்ந்து ஆலயத்துள் வருதல் ஆகியன நடத்தப்படும். இரவு மாணிக்க வாசகர்விழா நடைபெறும்

★ கேரளத்தில் திருவாதிரை சிறப்பு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இதனைத் திருவாதிரைக்களி என்றழைக்கின்றனர். களி என்பதற்கு மகிழ்ந்து (களித்து) கொண்டாடும் விழா என்பது பொருள். இந்நாளில் சிவாலயங்களில் லட்சதீபங்கள் ஏற்றப்படுகின்றன.

★ (சித்தர்காடு) திருமணம், சென்னை சௌந்தர விநாயகர் கோயில் முதலிய தலங்களில் இந்நாளில் நடராசருக்கும் சிவகாமி அம்பிகைக்கும் திருமணவிழா கொண்டாடப்படுகிறது.

★ சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரையைக் கடைநாளாகக் கொண்டு பெருந்திருவிழா கொண்டாடப் படுகிறது. ஒன்பதாம் நாளில் தேர்விழா நடைபெறுகிறது. நடராசரும் சிவகாமியும் தனித்தனியே பெரிய தேர்களில் பவனி வருகின்றனர். பத்தாம் நாளான திருவாதிரை யன்று அதிகாலை மஹா அபிஷேகமும் காலையில் மகாலட்சார்ச்சனையும் முற்பகலில் சிற்சபா பிரவேச மென்னும் (யதாஸ்தானத்திற்கு) கருவறையை அடைதலும் நடைபெறுகின்றன. சிற்சபாபிரவேசமே தரிசனம் எனப்படும்.

மதுரையில் திருவாதிரை நாளில் இங்குள்ள ஐந்து சபைகளிலுமுள்ள ஐந்து நடராசர்கள் வீதியுலா காண் கின்றனர். கால்மாறி ஆடிய கற்பகமான வெள்ளியம்பல நடராசர் வெள்ளியால் செய்யப்பட்ட கஜசம்ஹார வாகனத்தில் பவனிவருகிறார்.

சென்னை கோடம்பாக்கம் ரயில் நிலையத்தை ஒட்டியுள்ள சௌந்தர விநாயகர் ஆலயத்தில் திருவாதிரைப் பெருவிழா தனிச்சிறப்புடன் கொண்டாடப் படுகிறது. இக்கோயிலில் நடராசர் பவனிவர கஹன கனக கந்தர்வ மானஸ விமானமும், சிவகாமசுந்தரி பவனிவர மானஸ மாணிக்க கந்தர்வ விமானமும் உள்ளன. இவை சென்ற நூற்றாண்டின் மரவேலைக் கலைஞர் களின் உன்னத கலைத்திறனை வெளிப்படுத்துகின்றன.

குறிப்பு : திருக் குடந்தையில் திருவாதிரையன்று சுற்று வட்டாரங்களில் உள்ள சிவாலயங்களின் நடராசப்பெருமான்களை ஒருசேர எழுந்தருளிவைக்கின்றனர். கிட்டதட்ட 22 பெருமான்களை ஒருங்கே தரிசிப்பது தனிப்பெரும்பேராகும். செய்தி மூலம் டி.எம்.எஸ்

திரு ஊடல்விழா

இல்லற வாழ்வில் ஊடலும் கூடலும் அன்பின் மிகுதியைத் தோற்றுவிக்கும் என்பர். "ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்" என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

ஊடுதல் என்பது கணவனோ மனைவியோ ஒருவர் மீது ஒருவர் கோபம் கொண்டு பேசாதிருத்தலாகும். அப்போது யாரேனும் தோழியோ தோழனோ, உறவினரோ இருவரிடையேயும் பேசி அவர்களின் கோபத்தைத் தீர்த்து அவர்களைச் சேர்த்து வைப்பர். இதற்கு ஊடல் தீர்த்தல் என்பது பெயர். ஊடல் தீர்ந்தபின் கணவனும் மனை வியும் சேர்ந்து முன்பைவிட அன்பைப்பொழிந்து கொள் கின்றனர். அதனால் வாழ்வில் ஊடலும் அவசியமாகிறது என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

ஆலயங்களில் ஊடல் விழா நடைபெறுகிறது. பார்வதி தேவி சிவபெருமான் நிர்வாணமாகத் தாருகாவனத்துப் பெண்கள் முன் பிச்சை எடுத்து அவர்களை மன மயக்கம் அடையச் செய்தற்காகவும், கங்கையை தரித்ததற் காகவும் இன்னும் பலகாரணங்களுக்காகவும் அவர் மீது கோபம் கொண்டு கோயிலின் வாயிலை மூடி அவரை உள்ளே விடாமல் செய்தாள். சிவகணங்களை பலமுறை அனுப்பியும், அவள் அவர்களை மதிக்காமல் விரட்டி விட்டாள்.

இறுதியில் அவளுடைய ஊடலைத் தீர்க்க சுவாமி சுந்தரமூர்த்திகளை தூதனுப்பினார். இரண்டு மூன்று முறை சென்றும் அவள் கோபம் தணியாது நின்றாள். சுந்தரரும் விடாது தூது நடந்து அவள் மனதை மாற்றி இறைவனோடு சேர்த்து வைத்தார். இதைக் குறிக்கும் விழாவில் சுந்தரர் தூது செல்லும்போது ஓதுவாருக்கு பரிவட்டம் கட்டி தூதுவராக அனுப்புகின்றனர்.

திருவண்ணாமலையில் அண்ணாமலையார் மீது உண்ணாமுலை அம்பிகை ஊடல் கொள்வது பெருமான் அவளை நடனமாடி மகிழ்வித்து ஊடல் தீர்க்க முனைவது, அது இயலாமற் போகவே சுந்தரமூர்த்தி சுவாமிகளை தூதாக அனுப்பி ஊடல் தீர்ப்பது ஆகியவை மாட்டுப் பொங்கலன்று பெரிய விழாவாக நடத்தப்படு கின்றது. முற்பகலில் அண்ணாமலையார். உண்ணா முலையம்பிகை, சுந்தரர் மூவரும் தனித்தனி பீடங்களில் பெரிய அலங்காரத்துடன் பவனி வருகின்றனர். மாலையில் பெருமான் நடனமாடி அம்பிகையின் ஊடலைத் தீர்க்க முயலும் விழா நடைபெறுகிறது. இது கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்விழா நடைபெறும் தெற்குமாடவீதி விழாவின் பெயரால் திருஊடல் தெரு என்றழைக்கப்படுகிறது.

★ திருஊடற்புராணம் எனும் நூல் இவ்விழாவில் படிக்கப்படுகிறது. பலவேறு ஆசிரியர்களால் இயற்றப்பட்ட ஊடல் புராணங்களும் வழக்கில் உள்ளன.

★ இவ்விழா தனியாக நடத்தப்படுவதில்லை. பெருந்திரு விழாவின் அங்கமாகவும் திருவாதிரை விழா விலும் பொங்கல் வேட்டைத் திருவிழாவின் போதும் நடத்தப்படுகின்றன. திருவண்ணாமலையில் நடைபெறும் ஊடல்விழா உத்தராயன உற்சவத்தின் ஓர் அங்கமாகும். திருமயிலாப்பூரில் பெருந்திருவிழாவின் பதினோராம் நாள் ஊடல் விழா கொண்டாடப்படுகிறது.

★ பிடிபாடு ★

ஊடல் கொண்டுள்ள அம்பிகையை மகிழ்விக்கப் பல பொருட்களை பரிசளித்து அவளுக்கு உரிமைப் படுத்தி எழுதிக்கொடுப்பதே பிடிபாடு எனப்படும். செட்டி நாட்டுக் கோயில்களான இளையான்குடியிலும், பிள்ளை யார்பட்டியிலும் படிக்கப்படும் பிடிபாடு தனிச்சிறப் புடையது. இதில் கோயில் நிலங்களின் விவரம் படிக்கப் படுகிறது.

கூடல் விழாக்கள்

★ பல ஊர்களிலிருந்து சுவாமிகள் புறப்பட்டு ஓரிடத்தில் குழுமி நிற்பது கூடல் விழா எனப்படும் பெருநகர் என்னும் ஊரில் தைமாதப் பூசநாளில் செய்யாற்றில் 14 ஊர்களிலிருந்து சுவாமிகள் வந்து ஒருங்கு கூடி நிற்பர். பதினான்கு இடபவாகனங்களில் பெருமான் ஒருசேரக் காட்சி தருவது சிறப்பாக இருக்கும். இது ஆற்றுத் திருவிழா என்று அழைக்கப்படுகிது. ★ பெண்ணையாற்றங்கரையில் தைமாதம் ஐந்தாம் நாள் பல இடங்களில் உள்ள ஆலயங் களிலிருந்து சுவாமிகள் வந்து கூடுகின்றனர். ★ சென்னை கிருஷ்ணாம்பேட்டையில் திருவாதிரை யன்று மாலை ஐந்து ஆலயங்களிலுள்ள நடராசர்கள் சிறப்பு அலங்காரத்துடன் ஒருசேர எழுந்தருள்கின்றனர். ★ திருவையாறு சப்தஸ்தான விழாவும் ஏழூர் சுவாமிகள் கூடிநின்று காட்சியளிக்கின்றனர் ★ மகாமகத்தின் போது குடந்தை அனைத்து ஆலயங்களிலுள்ள சிவபெருமான் இடப வாகனங்களில் எழுந்தருளி மகாமக குளத்தைச் சுற்றி நின்று காட்சி தருகின் றனர். இவ்வகையில் இருபதுக்கும் மேற்பட்ட இடபவாகன மூர்த்திகளை இங்கு காணலாம்.

உலாத்திருமேனிகளும் ஆடை அணிகலங்களும்

திருவிழாவின் சிறப்பு இறைவன் திருமேனியை அலங்கரித்துப் பல்வேறு வாகனங்களில் அமர்த்தி உலா வரச் செய்தலேயாகும். இதற்கென ஆலயங்களில் பல விதமான கோலங்களில் உலாத் திருமேனிகள் உள்ளன.

முன்னாளில் பாலுள்ள மரங்களாலான அத்தி, இத்தி முதலியவற்றால் செய்யப்பட்ட திருவுருவங்களே திரு விழாக்களின் போது உலா எடுத்துச் செல்லப்பட்டன. அம்மரபு இன்றுவரை திரௌபதி, மாரியம்மன் முதலிய ஆலயங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. உலோகக் கலை வளர்ச்சியால் பஞ்சலோகம் எனப்படும் ஐந்து உலோகங்களின் கலவையால் சிலைகள் செய்யப் படுகின்றன. திருவாலங்காட்டு நடராசர், திருப்பூவணம் பொன்அனையான், திருச்செங்காட்டங்குடி வைரவ மூர்த்தி முதலான உலோகச் சிலைகளைச் செய்ய முடியாது ஸ்தபதிகள் திகைத்தபோது இறைவனே எல்லாம் வல்ல சித்தனாக உடனிருந்து அவற்றை உருவாக்கித் தந்தான் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. மாமன்னர்களும், தனவான்களும் ஆலயங்களுக்கு உலாத்திரு மேனிகள் செய்தளித்ததை ஏராளமான கல் வெட்டுச் செய்திகள் குறிப்பிடுகின்றன. தஞ்சைப் பெரிய கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் அக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட உலாத் திருமேனிகளின் நிறை, உயரம் எடுக்கப்பட்ட விழாக்கள் முதலிய செய்தி களை விவரமாகக் கூறுகின்றன.

மூலவருக்குச் செய்வது போலவே உலாத்திரு மேனிகளுக்கும் யந்திர நியாசம், இரத்தின நியாசம் முதலியன செய்யப்படுகின்றன. விழாவில் பவனி வரும் முதன்மை மூர்த்தியான சோமாஸ்கந்தர், நடராசர் முதலிய மூர்த்திகளுக்கு விமானங்களுடன் கூடிய தனிச்சந்நிதிகள் அமைத்திருப்பது அவற்றின் மேன்மையை உணர்த்துவதற்கேயாகும்.

சிவபெருமான் பரிவாரங்களுடன் உலாவரும் போது பட்டாடைகளும் அணிமணிகளும் வெள்ளியாலும் தங்கத்தாலும் செய்யப்பட்ட கவசங்களும் அணிவிக்கப் படுகின்றன. உயர்ந்த ஜாதிக் கற்களான மரகதம், வைரம், வைடூரியம், முதலியவற்றாலும் முத்து பவழம் முதலிய கடற்படு பொருட்களாலும் இழைத்த பொன்னாபரணங் கள் அணிவிக்கப்படுகின்றன. இவை நகை வேலைக்காரர்களின் திறன்மிக்க கலைப் படைப்புக் களாகும். கண்ட சரம் அண்டபேரண்டப்பக்ஷிமாலை காசுமாலை, கிளிமாலை, மாங்காய்மலை, வில்வமாலை எனப் பல வகையான சரங்களும், முத்துமாலை, உருத்தி ராட்சமாலை நவரத்தினமாலை முதலிய மாலைகளும் தலையில் வைரமுடி, பாண்டியன்முடி, மகுடம், கிரீடம் முதலிய அணிகலங்களும் அணிவிக்கப்படுகின்றன. செவி மடல், கை கால்கள் ஆகியவற்றில் வைர வைடூர்ய, புஷ்பராக, கெம்புக்கற்கள் பதித்த கவசங்கள் அணிவிக்கப் படுகின்றன.

விழாக்களின் போது மட்டுமே இவற்றை அணிவிக் கிறார்கள். பாதுகாப்பு கருதியும், அபிஷேக ஆராதனை களைக் கருத்திற் கொண்டும் இவற்றை தினசரி அணிவிப்பதில்லை. இந்த நகை அலங்காரத்தைப் பார்ப்பதே தனி மகிழ்ச்சியைத் தருகிறது. அனேக மன்னர்கள் ஜமீன்தாரர்கள், பாளையக்காரர்கள் அன்பர்கள் யாவரும் விலையுயர்ந்த அணிமணிகளை ஆலயத்திற்கு அளித்துள்ளனர். மதுரை மீனாட்சி யம்மன், திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி. திருவா ரூர் தியாகராசர் முதலிய ஆயலங்களிலுள்ள அணிகலங் கள் கலைச்சிறப்பு கொண்டவை; விலைமதிப்பற்றவை.

நமது நாட்டை ஆண்ட அந்நிய மதத்தினரும் வெள்ளைய அதிகாரிகளும் கூட அன்புகொண்டு ஆலயங்களுக்கு அணிமணிகளைக் காணிக்கையாக தந்துள்ளனர். மதுரை மீனாட்சி அம்மன் குதிரை வாகனத்தில் பவனிவரும்போது கால்வைத்துக் கொள்ளும் வகையில் கல்லிழைத்த அங்கவடிகளை ஆங்கிலேயே அதிகாரி அளித்துள்ளார். பவானியில் அம்பிகைக்கு கேரா என்ற வெள்ளைய அதிகாரி தந்தக்கட்டிலை அளித்துள்ளார்.

அடியார்கள் அன்புகொண்டு பெருமான் பவனிவரும் வாகனங்களுக்கு வெள்ளி, தங்கத் தகடுகளைப் பொருத்தினர். அவை வெள்ளி, தங்கவாகனங்கள் என்றழைக்கப்படுகின்றன. இதை அடியொற்றி வெள்ளி தங்கத் தேர்களும் செய்யப்பட்டுள்ளன.

இறைவடிவங்கள்யாவும் சிற்ப நூல்களில் சொல்லப் பட்டுள்ளபடி செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றை விழாவின் ஐதீக நிகழ்ச்சிகளுக்கேற்ப உபதேசித்தல், நடமாடல், பள்ளிகொண்டிருத்தல் முதலிய கோலங்களில் அலங்கரிப்பர். இதற்கென சாற்றுக்கை, கால்களும், சூலம், தண்டம், ஈட்டி, முதலிய ஆயுதங்களும் கிளி, குயில், சேவல் முதலிய பறவைகளும் தங்கத்தாலும், வெள்ளியாலும் செய்து வைத்துள்ளனர். இவற்றில் உயர்ந்த ஜாதிக் கல்லிழைத்தவைகளும் உண்டு. இறைவன் வீதிகளில் பவனி வரும்போது பட்டுசாத்துதல் வழக்கமாகும். ❖

திருவிழாவினில் பொலிந்து தோன்றும் கமலாம்பிகை உடனாய ஆரூர்மேய அழகன் அருளினால் எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!

சிவமஞ்சரி

சிவபெருமானுக்குச் சொல்லால்
கட்டப்பட்ட திருக்கோயில்

